LIBRARY
C.R.I.S.

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ்,
2102. சக்கநாயக்கன் தெரு
தஞ்சாவூர்.

846
THANJAVUR

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால்
வெளியீடு நெ. 103.

# அகஸ்தியர் - இரண்டாயிரம்.

(மூன்றாம் பாகம்)

(உரையுடன்)

LIBRARY
C.R.I.S.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி ஸரஸ்வதி மஹால்
தஞ்சை.
1963.

A siddhadreams ebook

LIBRARY
LITERARY RESEARCH AND DOCUMENTATION DEPARTMENT, CRI (SIDDHA)
(Central Council for Research in Ayurveda & Siddha)
MADRAS

1. Books may be retained for a period not exceeding one month.
2. Books may be renewed on request at the discretion of the Librarian or on special permission from the Incharge of the Institute.
3. Books marking or writing therein with ink or pencil, tearing or taking out its pages or otherwise damaging it will constitute an injury to a book and the borrower shall be required to replace the book or pay its price.

**Help to keep this book fresh and clean**

846

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி
ஸரஸ்வதீ மஹால் நூல் நிலைய வெளியீடு நெ. 103.

# அகஸ்தியர் இரண்டாயிரம்

— (மூன்றாம் பாகம்) —

(உரையுடன்)

★

பதிப்பாசிரியர் :
**Dr. S. வெங்கடராஜன் L. I. M., (Regd).**
ஸரஸ்வதி மஹால், தஞ்சை.

LITERARY RESEARCH AND DOCUMENTATION DEPARTMENT
LIBRARY
C. R. I. S.
MADRAS

★

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால்
நிர்வாகக் குழுவினருக்காக,
கௌரவக் காரியதரிசி
ஸ்ரீ O. A. நாராயணஸ்வாமி B. A., B. L.,
அவர்களால் வெளியிடப்பட்டது.

— ★ —

கி. பி. 1963. ச. க. 1885.

A siddhadreams ebook

காப்பிகள் : 500.

விலை ரூபாய் 10—50

மத்திய சர்க்காரின் பொருளுதவி பெற்று அச்சிடப்பட்டுள்ளது

330

அச்சகம் :

உக்கடை ஸ்ரீ அம்பாள் அச்சகம், தஞ்சை.

846

# முகவுரை.

தமிழ் மக்களிடையே பண்டைய காலம் முதல் புகழ்பெற்று விளங்கிவரும் **"அகஸ்தியர் 2000"** என்னும் வைத்தியத் தொகுப்பின் மூன்றாம் பகுதியை இன்று வெளியிட்டுள்ளோம்.

அநுபவபூர்வமாக அறிந்த சிகிச்சை முறைகள், சிரமமின்றி சேகரிக்கக் கூடிய சரக்குகளைக் கொண்டே தயாரிக்கக் கூடியவை, இவற்றைப் பரிபாஷை இலக்குகளின்றி, எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது, இச் சுவடி நூல்.

இந்திய யூனியன் அரசினருடையவும், சென்னை ராஜாங்க மான்ய உதவி கொண்டும் யாவருக்கும் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் குறைந்த விலையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதையும், முன் இருபகுதிகளைப் போன்று, நமது நூல் நிலையத்திலுள்ள சுவடிகளின்றும் தொகுத்து பிழையின்றி, தயாரித்துத் தந்து உதவியுள்ள டாக்டர் **S. வெங்கட்டராஜன்** அவர்கட்கு நமது நன்றி உரியதாகும்.

T. M. S. S. M. Library,
10—6—1963.

P. S. நாராயணஸ்வாமி,
B. A., B. L.,
கௌரவக் காரியதரிசி.

A siddhadreams ebook

# பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | தாகம் நீரிழிவிற்குச் சிகிச்சை | ... | 1—21 |
| 2. | பிரமிய ரோக நிதானம் | ... | 22—31 |
| 3. | பவுத்திர ரோக நிதானம் | ... | 32—36 |
| 4. | பீனிச நிதானம் | ... | 37—49 |
| 5. | புண், கரப்பான் இவைகளின் நிதானம் | ... | 50—74 |
| 6. | காமாலை நிதானம் | ... | 75—96 |
| 7. | விஷப்பாகக் குறிகள் | ... | 97—133 |
| 8. | பித்தவாயு விக்கு | ... | 134—183 |
| 9. | வடக முறைகள் | ... | 184—208 |
| 10. | பிளவை குணமும், தைல முறைகளும் | ... | 209—272 |
| 11. | கிருத வகைகள் | ... | 273—328 |
| 12. | நயனவிதி | ... | 329—360 |
| 13. | நிவௌஷத முறைகள் | ... | 361—384 |
| 14. | பத்தியவிதி விரேசனம் | ... | 385—437 |
| 15. | வாகடத்திரட்டு | ... | 438—464 |
| 16. | வாகட வெண்பா | ... | 465—511 |
| 17. | பதார்த்தகுண விளக்கம் | ... | 512—554 |
| 18. | கண்ணோய் பாதுகா நெறிகள் | ... | 555—576 |
| 19. | அட்டை விதி | ... | 577—580 |
| 20. | சஸ்திர விதி | ... | 581—586 |
| 21. | ஜ்வர கண்டிகை | ... | 587—601 |
| 22. | ஔஷதம் பண்ணுகிற லட்சணம் | ... | 602—610 |
| 23. | சந்நிரோக சிகிச்சை | ... | 611— |


A siddhadreams ebook

# முன்னுரை.

அகஸ்தியர் 2000 என்ற புத்தகத்தின் மூன்றாவது பாகமான இப்பதிப்பு தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலுள்ள வைத்தியக் கேட்லாக்கின் 14-வது நெம்பர் சுவடியாகும். இது பல வைத்திய நூல்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட நூலாகும்.

இதில் காணப்படும் வைத்திய முறைகள் அனைத்தும் வெகு எளிதில் கிடைக்கக் கூடிய மருந்துச் சரக்குகளைக் கொண்டே தயார் செய்யக் கூடியவை. இந்த நூலைத் தொகுத்தவர் ஒவ்வொரு வியாதிகளின் குறிகள், பதார்த்த குணங்கள் முதலானவைகளைத் தனித்தனியாக அனுபவத்தைக் கொண்டு வைத்திய நூலில் தான் படித்துணர்ந்தவைகளையும் சேர்த்துச் செய்யுட்களாகச் செய்து சிற்சில இடங்களில் சேர்த்திருக்கிறார். ஒரே விஷயம் பல இடங்களில் பல மாதிரியாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இதனைத் தொகுத்தவர் தமிழ் வைத்தியத்திற்கு ஆதிகுருவான அகஸ்தியர் பெயரை யிட்டு இந்நூலை எழுதியிருக்கிறார் என்றே அறிந்து கொள்ள வேண்டும்.

இந்நூலிலுள்ள மருந்துகள் பரிபாஷைச் சொற்களால் சொல்லப்படாமல், எல்லோருக்கும் விளங்கும் வகையில் செய்யுட்களாகச் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். சிற்சில வியாதிகளுக்குச் சில மருந்துகளே கூறப்பட்டுள்ளன. அதனை நோக்கும் போது அவை நிச்சயம் அவ்வியாதிகளுக்குப் பூரண குணம் அளிக்கக் கூடியவைகளாக உள்ளன.

A siddhadreams ebook

இந்த வெளியீட்டில் கபாலரோக நிதானம், நேத்ர ரோக நிதானம், தைலவர்க்கம், கிருதவர்க்கம், அட்டை விதி, சஸ்திர விதி, பதார்த்தங்களின் குணம், நயனவிதி முதலானவைகள் சேர்ந்திருக்கின்றன. மற்றும் பல இடங்களில் நோயின் குறிகளும் காணப்படுவது வைத்தியர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

இந்த நூலைப் பதிப்பிப்பதற்குப் பொருளுதவி செய்த மத்ய, மாகாண சர்க்காருக்கும், இந்நூலை உயர்ந்த முறையில் பதிப்பிக்க வாய்ப்பளித்த முன்னாள் கௌரவ காரியதரிசி ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களுக்கும், தற்போதுள்ள ஸ்ரீ O. A. நாராயண ஸ்வாமி அய்யர் B. A., B. L., அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

தஞ்சை,
10—6—1968.

DR. S. வெங்கட்டராஜன்.

LITERARY RESEARCH UNIT
CENTRAL AYURVEDIC COUNCIL
T.M.S.S.M. LIBRARY,
THANJAVUR.

உ

# அகஸ்தியர் இரண்டாயிரம்

## மூன்றாம் பாகம்.

### தாகத்திற்கு "ஆவாரைச் சீதகஷாயம்".

ஆவாரை கடலிரஞ்சி யதிர்ப்பட்டை காடுக்காய்தான்றி
மேவிய நெல்லிமுள்ளி விளாவுடன் தகர்த்துக்கூட்டித்
தாவிடு புனல்குறுணி தன்னுடன் வெய்யில் வைத்து
பூவைகே ளிறுத்துக்கொள்ள பொறுதுநீர் தாகந்தானே (1)

(இதன் பொருள்)

ஆவாரம்பட்டை கடலிரஞ்சிப்பட்டை
கடுக்காய்த்தோல் தான்றித்தோல்
நெல்லிமுள்ளி விளாம்பட்டை

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 1 மரக்கால் விட்டு அப்படியே வெயிலில் வைக்கவும். இதனை இறுத்துப் பருகிவரத் தண்ணீர் தாகங்கள் தீரும்.

A siddhadreams ebook

## தண்ணீர்த் தாகத்திற்குத் " நான்றியாதிக் கஷாயம்

தானொரு தானிக்காய் நெல்லி (முள்ளி) தரித்திடும்
தேற்றும்வித்து
ஆனதோர் கடலிராஞ்சி அடிமரப் பட்டை கூட்டி
வானொடு மிளநீர் வார்த்து வற்றியே யுரியதாக்கிப்
பானமாய்க் குடிப்பீராகில் பதைத்தநீர்த் தாகம்போமே (2)

(இ - ள்)

தான்றித்தோல்
நெல்லிமுள்ளி
சீவியதேற்றாங்கொட்டை
கடலிரஞ்சியின் அடிமரப்பட்டை

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, இளநீர் ஒருமரக்கால் விட்டு அடுப்பின்மேலேற்றி, எரித்துச் சின்னப்படி ¼ ஆக வற்ற வைக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவரத் தண்ணீர்த் தாகம்தீரும்.

## தண்ணீர்த் தாகத்திற்கு "வாழைக் கிழங்கு நீர்".

வாழைக்கிழங்கு நீர் குறுணி வடித்துப் புதியபானைதனில்
மிளவுழக்குச் சீரகத்தை மிகவே வறுத்துப் பொடிசெய்து
தாழப்பானை தனைவைத்துத் தண்ணீரதனிற் பொடிதூவிக்
கூழ்த்தாகங் கெடவின்னீர் குடிப்பீர் மறுநீராகாதே (3)

(இ - ள்)

வாழைக்கிழங்குச்சாறு — 1 மரக்கால் எடுத்து ஒரு புதிய பானையில் விட்டு, அதனுடன் சீரகம் ஒரு உழக்கு வறுத்துப் பொடி செய்து போட்டு வெயிலில் வைத்துத் தண்ணீர் தாகம் எடுக்கும் போதெல்லாம் இதனைப்பருகி வரவும். சுத்த ஜலம் உதவாது.



## தாகந்தீர " செங்கல் கஷாயம் "

ஆகுஞ்செங்க லுரைத்தபொடி யதனில் புனல்விட்டுறிய பின்
வாகிற் தெளிவுதானிறுத்து மயிற்கம் பளிச்சாம் பல்வைத்து
வேகத்துடனே வெருகடிமேற் பொடிதூவி யிறுத்தருந்த
தாகந்தணிக்கும் சலமறிக்குந் தானோவாறு நாட்கொள்ளே (4)

(இ - ள்)

புதிய செங்கல் தூள் சுமார் 2 பலமெடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு 1 நாள் முழுதும் ஊறவைக்கவும். பின்னர் இதனையிறுத்து, இதனுடன் கம்பளிச் சுட்ட சாம்பல் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் கூட்டிப் பருகவும். தாகந்தீரும். நீரிழிவுகளும் 6 நாட்களுள் தீரும்.

## தாகம், நீரிழிவுகள் தீர மருதம் பட்டைக் கஷாயம்.

மருது டனுவாரைநாவல் வருமத்திக் கருவேற் பட்டை
தருமது பலங்கள் பத்து தன்னுடன் கலந்து கூட்டி
வருமது கடலிராஞ்சி வருபல மிருபதாக
பருவிரைதேற்றுக் களிப்பாக்கு திரிபலைபதக்கு
நீருழக்காய்க் கொள்ளே. (5)

(இ - ள்)

மருதம்பட்டை ஆவாரைத்தோல்
நாகப்பட்டை கருவேலம்பட்டை
அத்திப்பட்டை

இவைகள் வகைக்கு 10 பலம்

கடலிரஞ்சிப் பட்டை 20 பலம்
தேற்றாங்கொட்டை களிப்பாக்கு
கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
தான்றித்தோல்

A siddhadreams ebook

இவைகளும் வகைக்கு 1 பலம்

இவைகள் எல்லாவற்றையும் இடித்து வைத்துக் கொள்ளவும். இதனுடன் சுத்தஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைக் கவும். இதனையுட்கொள்ள தாகங்கள் தீரும். நீரிழிவு களும் தீரும்.

### நீரிழிவிற்கு "அத்திப்பட்டையாதிக் கஷாயம்"

அத்திமரப் பட்டைநன்னாரி ஆவாரை கடலிரஞ்சி
வித்துடன் மருதிலுப்பை இசைந்தநீர்ப் பூலாக்கொன்றை
உத்தநோர் புளியம்பட்டை சிறுகீரை சீந்தில்முத்த
நத்தைச்சூரி வேர்கற்றாழை நாரத்தை வேருங்கூட்டே (6)

கொள்ளாய் தாளிசபத்திரி திரிகடுகு குலவுபலங்க
ளிரண்டாக
விள்ளாய் சாதிப்பத்திரி காயம் மிகுத்த கிராம்பு
வராகனெடை
மெள்ளாய் சூரண மாய்ப்பண்ணி வெருகடிநாழி
நீருழக்காய்
கொள்ளாய் கஷாய மிருபதுநாள் கூட்டாயெருமை
மோர் தயிரே (7)

(இ - ள்)

| | |
|---|---|
| அத்திமரப்பட்டை | நன்னாரிவேர் |
| ஆவாரம்பட்டை | கடலிரஞ்சிப்பட்டை |
| மருதம்பட்டை | இலுப்பைப்பட்டை |
| நீர்ப்பூலாவேர் | கொன்றைப்பட்டை |
| புளியம்பட்டை | சிறுகீரைவேர் |
| சீந்தில்கொடி | கோரைக்கிழங்கு |
| நத்தைச்சூரிவேர் | கற்றாழை |
| நாரத்தைவேர் | |

இவைகள் வகைக்கு 2 பலம்



| | |
|---|---|
| தாளிசபத்திரி | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | பெருங்காயம் |
| கிராம்பு | |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

இவைகள் எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு நன் றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக் கொள் ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து ஒரு பாத் திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப் பின்மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை எரித்து உட் கொள்ளவும்.

20 நாட்களுள் நீரிழிவுகள் தீரும்.

**பத்தியம்**

எருமை மோர், தயிர் இவைகளைக் கூட்டிக்கொள் ளவும்.

### பிரமேகம், நீரிழிவிற்குப் "புரசம்பூ மாத்திரை"

புரசம்பூச் சாறுநாழி பொடிமருந்து நாயுருவி நீர்முள்ளி
வித்து
விரசமுடன் வகைக்குரியாவாரை விரையும் வறுத்திதனை
வஸ்திரகாயமாய்
சரசமாய்க்காய்கின்ற குழம்பின்மேல்தூவி தோணவே
தேற்றும் விரையுளவுருண்டை
கரையும்நீ ரிளவெந்நீரோ டுண்டைதோங்கட்டு
மேகசலம்வாதை மட்டமாம் மாதே! (8)

(இ - ள்)

புரசம்பூவை இடித்துப் பிழிந்தசாறு — 1 நாழி

A siddhadreams ebook

யெடுத்து அடுப்பின்மேல் வைத்துக் கொதிக்கவைத்து, அதனுடன்

நீர்முள்ளிவிதை  காயுருவிவிதை

இவ்விரண்டையும் சட்டியிலிட்டு அடுப்பின்மே லேற்றிப் பொன்வறுவலாக வறுத்து இடித்து வஸ்திர காயஞ்செய்த சூரணத்தையிட்டு நன்றாகக் குழம்பாகி யிறுகியபின் தேத்தாங்கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையி லொன்றையெடுத்து வெதுவெதுப் பான வெந்நீருடன் உட்கொள்ளவும்.

பிரமேகம், சலப்பிரமியம் முதலானவை தீரும்.

## சந்தனாதியுருண்டை

கோட்டம் நற்சந்தனம் அதிமதுர மேலங்
    கோரோசனை கற்பூர மிலவங்கப்பட்டைக்
காட்டகத்தில் முசுறுமுட்டை வாழைப்பூவும்
    தேன்கடிகி யரைத்தேயுண்டை யிளநீரிற்கொள்ள
வாட்டமுடன் கிஷாயத்தை கொள்ளவதி நீரை
    மருக்கிவரு தாகசோ பத்தைப்போக்கி
நாட்டமுடன் கொள்ள யெரி வுமதுவிட்டு
    நலமாகுஞ் சலசந்த னாதியுண்டைக்கே (9)

(இ - ள்)

| | |
|---|---|
| கோஷ்டம் | சந்தனத்தூள் |
| அதிமதுரம் | ஏலக்காய் |
| கோரோசனை | பச்சைக்கற்பூரம் |
| இலவங்கப்பட்டை | முசுறுமுட்டை |
| வாழைப்பூ | |



இவைகளைக் கல்வத்திலிட்டுத் தேன்விட்டு நன்றாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இந்த உருண்டையை இளநீரிலோ, மற்ற கஷாயத் திலோ உட்கொள்ளத் தாகம், விக்கம், உடம்பு எரிச்சல் முதலானவை நீங்கும்.

## மிருத்வாதி உருண்டை.

அரிதார மனோசிலை சந்தனம்
துரிதாகிய கஸ்தூரி கற்பூரம்
பரிவாயி டுயேலமிலவங்க மும்
சரியாயரை பன்னீரதி லுண்டையே (10)

(இ - ள்)

| | |
|---|---|
| சுத்தி செய்த தாளகம் | 1 விராகனெடை |
| ,, மனோசிலை | ,, |
| ,, சந்தனத்தூள் | ,, |
| கஸ்தூரி | ,, |
| பச்சைக்கற்பூரம் | ,, |
| ஏலக்காய் | ,, |
| கிராம்பு | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பன்னீர்விட்டு நன்றாக அரைத்து, மாத்திரை செய்து, உட்கொண்டாலும் முன் சொல்லிய நோய்கள் தீரும்.

## நாகபற்பம்.

மூக்கரட்டை யிலைபுதுச் சட்டியுள்ளாய்த் தேய்த்து
    முன்னாகங் கழஞ்சுட னுருகுவாறே
வாக்கவதிற் கழஞ்சுரஸ மனோசிலை கழஞ்சு
    வறுத்தபற்பம் ஒருமாவா ழைக்கனியிட்டுப்

A siddhadreams ebook

பாக்கவது நீராகு முடனே கொள்ளப்
பருகிவரும் நீரிழிவு அருகுமதுவென்ன
ஆக்கமுள்ள அறிவுடையீர்! உடனே நிற்கும்
அனுபோக மானசல மடைக்குங்காணே (11)

(இ - ம்)

மூக்கரட்டை இலையை நன்றாக வரைத்து ஒரு புதுச் சட்டியில் தடவவும். அதில் சுத்திசெய்த நாகத்தையிட்டு அடுப்பின் மேல் வைத்து நன்றாக உருகவைக்கவும். அப்போது சுத்திசெய்த ரஸம் 1 கழஞ்சு, சுத்திசெய்த மனோசிலை 1 கழஞ்சு இவைகளையிட்டு நன்றாக வறுக்கவும்.

இந்த பற்பத்தில் 1/16 வராகனெடையளவு (1½ குன்றியளவு) எடுத்து வாழைப்பழத்தில் சேர்த்துப் புடம் போடப் பற்பமாகும்.

இப்பற்பத்தையுட்கொள்ள நீரிழிவு நீங்கும். அதிமூத்திர ரோகமும் தீரும்.

## அமுதவல்லித்தைலம்.

அம்ருதவல்லித் தண்டுடன் வெட்டிலாம் பிச்சம்
அமுக்கிரா நன்னாரி வேர்வெருகன் கிழங்கு
தமிதுடனே கொடுப்பைவேர் வில்வம் பாதிரி
தருநிலத்தில் குறுகுபனை ஓரிலைத்தா மரையும்
சமிதவகை யோரொன்று பல்லாத்துதரித்து தன்
புனல்மிரு தூணிகஷாய மாய்க் குறுணி
அமிர்தமிடு முலைப்பா லாட்டுப்பால் பசுப்பால்
ஆமிளநீ ரொன்றுநா நாழியாமே (12)

ஆகின்ற கத்தாழை செம்முள்ளி துளசி
அரியநீர் முள்ளிகோவை முசுமுசுக்கை



வாகுண்டு மணிகொடுப்பை பசறிநரிப் பயறு
வரிக்கரும்பு பழம்பாசி நாயுருவி யிண்டு
போகின்ற பூளையிலை யோரொன்று நாழி
புதியநீர் சாறுய்த் துவைத்து வடிக்கொண்டு
எழிதனோ டெண்ணெய் குறுணி கலந்திட்டு
யினி யிதனில் வருகற்க வகையரைப் பதுவே (13)

பதுமவேர் பலமஞ்சு மதுரமஞ்சு
பாரதியும்நற் சந்தனம் பலமுமஞ்சு
இதுவுடனே தேவதார மிலவங்கம்மே
லமகில்செண்ப கஞ்சீர கமரத்தை
புதியமஞ் சள்கற்க டகசிங்கி புகழு
திரிபலை தேத்தாம் விரைசுக்கு மிளகு
அதுவுட னேரொன் றரைப்பல மரைத்து
ஆக்கியே வடித்தெண்ணெய் மூழ்கிநீ ரதற்கே (14)

(இ - ம்)

| | |
|---|---|
| வெட்டியச்சிக்தில் கொடி | இலாமிச்சம்வேர் |
| அமுக்கிராக்கிழங்கு | நன்னாரிவேர் |
| வெருகன்கிழங்கு | கையாந்தகரைவேர் |
| வில்வவேர் | பாதிரிவேர் |
| கிலப்பனைக்கிழங்கு | ஓரிலைத்தாமரைவேர் |

இவைகளையும் (வகைக்கு 2 பலம்) சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து, ஒருபாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்தஜலம் விட்டு 1 மரக்காலாகும் வரை வற்ற வைத்து இறுத்துக் கொள்ளவும்.

இதனுடன்

| | |
|---|---|
| முலைப்பால் | 1½ சேர் |
| ஆட்டுப்பால் | „ |
| பசுவின் பால் | „ |
| இளநீர் | „ |

A siddhadreams ebook

| | |
|---|---|
| கந்தாழைச்சாறு | ¼ சேர் |
| செம்முள்ளிச்சாறு | ,, |
| துளசி | ,, |
| நீர்முள்ளிச்சாறு | ,, |
| கோவை | ,, |
| முசுமுசுக்கைச்சாறு | ,, |
| குண்டுமணி இலைச்சாறு | ,, |
| கையாந்தகரைச்சாறு | ,, |
| பசலைச்சாறு | ,, |
| நரிப்பயறு | ,, |
| கருப்பஞ்சாறு | ,, |
| பழம்பாசிச்சாறு | ,, |
| காயுருவிச்சாறு | ,, |
| இண்டஞ்சாறு | ,, |
| பீளையிலைச்சாறு | ,, |

இவைகளை யொன்று கலந்து,

சுத்தமான நல்லெண்ணெய் 10 சேர் விட்டு ஒன்று சேர்த்துக் கொண்டு

| | |
|---|---|
| தாமரைக்கிழங்கு | 5 பலம் |
| அதிமதுரம் | ,, |
| சந்தனத்தூள் | ,, |
| | |
| தேவதாரு | ½ பலம் |
| கிராம்பு | ,, |
| ஏலக்காய் | ,, |
| அகிற்கட்டை | ,, |
| செண்பகப்பூ | ,, |
| சீரகம் | ,, |
| சிற்றரத்தை | ,, |
| மஞ்சள் | ,, |
| கற்கடசிருங்கி | ,, |
| கடுக்காய்த்தோல் | ,, |



| | |
|---|---|
| நெல்லிவற்றல் | பலம் |
| தான்றித்தோல் | |
| தேத்தாங்கொட்டை | |
| சுக்கு | ,, |
| மிளகு | ,, |

இவைகளை அம்மியின் மேல் வைத்து மேற்படி சாறுகளில் ஏதேனுமொன்று விட்டு நன்றாக அரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடனே கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இதனால் தலை முழுகிவரவும்.

---

### நீரழிவிற்கு "ஆவாரை யெண்ணெய்"

ஆவரை முருங்கைப்பட்டை
ஆலின் விழுது வேம்பாடல்
மேவக் கருவேர்ப் பிராயடம்பு
வேங்கை செங்கருங் காலிமுத்தம்
தேவதார மரமஞ்சள் பேய்த்
திமிட்டிவேர் சந்தனம் திரிபலையும்
பூவரசு குமிழ் விந்தப் பாதிரித்தோல்
பொருந்து மதுவகைக் கோர்பல மஞ்சே (15)

அஞ்சாதே தரித்திடித்து எண்குறுணி புனலா
லதுகாய்ச்சி யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
மிஞ்சாதே கருங்காலி விரையும் வேங்கை விரையும்
விளங்க நீர்முள்ளி விரையாவாரை சமூலம்
துஞ்சாதே திருநாமப் பாலைவேர் விரையுஞ்
சொல்லரியப் பருத்தி விரை கிட்டணவப்புரகம்
தஞ்சாறக் காந்தமெவட் சாரம்பொரித்
தொன்றேடு கற்கடக சிங்கி சரியாமே (16)

A siddhadreams ebook

சரியாக வோரொன் திருகழஞ் சரைத்துச்
சருக்கேன்னெ யிருநாழி நெல்லிக்காய்ச்சாறு

பரிவாக யிருநாழி சரிகொண்டு யெரித்துப்
பதங்கொண்டு வடித்துமேற் தேனுழக்கிட்டு

உரிதாக நீர்க்கு முடனிரு கழஞ்சு
உகந்தபே ராவாரை விரைப்பொடி கலந்து

யருகாய நீயகுலாதி தைலத்தில் கொள்ள
அணுகாது நீரழிவுடல் மேலுமிட்டே (17)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆவாரைப்பட்டை | முருங்கைப்பட்டை |
| ஆலம்விழுது | வேம்பாடம்பட்டை |
| கருவேலம்பட்டை | பிராய் |
| அடம்பு | வேங்கை |
| கருங்காலி | கோரைக்கிழங்கு |
| தேவதாரம் | மரமஞ்சள் |
| சந்தனத்தூள் | பேய்சும்மட்டிவேர் |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| பூவரசம்பட்டை | தான்றித்தோல் |
| பாதிரிப்பட்டை | குமிழ்வேர் |

இவைகள் வகைக்கும் 5 பலம் இவைகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, இடித்து ஒருபாத்திரலிட்டு, 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின்மேலேற்றி 1 மரக்கால் கஷாயமாக வற்றவைக்கவும்.

பின்னர்

கருங்காலிவிதை
வேங்கைவிதை
நீர்முள்ளிவிரை
ஆவாரைச்சமூலம்
திருகாமப்பாலை வேர்
திருகாம்ப்பாலை விரை



பருத்திக்கொட்டை
கிருஷ்ண அப்பிரகம் (சுத்திசெய்தது)
காந்தம் ”
பொரித்த எவச்சாரம்
கற்கடசிருங்கி

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (2½ வராகனெடை) வீதம் எடுத்துச் சாறுவிட்டரைத்துக் கொள்ளவும்.

இதனுடன்

நெல்லிக்காய்ச்சாறு சின்னபடி ½ விட்டு ஒன்றாகக் கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். இதனுடன் தேன் ஒரு உழக்கு விட்டுக்கலந்து உட்கொள்ளவும்.

நீரிழிவிற்கு இந்த மருந்துடன் 2 கழஞ்சு பேராவாரைப் பொடிபோட்டுக் கொண்டு நீயகுலாதி தைலத்துடன் உட்கொள்ள, நீரிழிவுகள் தீரும்.

## சந்தனாதி எண்ணெய்.

முத்தக்காக சீந்தில் வில்வ
முதிரிலாமிச்சம் நன்னாரி

சுத்த நெய்தல் பெருவாகை
தூதளைகொட்டிதா மரைவளையம்

பத்தியுட னமுக்கிரா சித்தமட்டி
பாதிரிவேருடன் பேர்மட்டி

கத்தைக்குழலீர் ! முந்திரிகைக்
காரகில் சந்தன முன்னையுமே (18)

முன்னேரிலேத்தா மரைபொன்
முசுட்டை கோஷ்டம் நெருஞ்சில்வேர்

A siddhadreams ebook

பொன்னாங்காணிச் சிறுக்கீரை
　　பொதுநீர் வள்ளிக் கிழங்குடனே
தன்னோரொன்று பலங்கழஞ்சு
　　தரித்துத் தகத்திது நீர்தூணி
மின்னெரிடையாய்! வெட்டொன்றாய்
　　மிகவே காய்ச்சி வடிப்பீரே (19)

வடித்தே வீழி கத்தாழை
　　வல்லாரை நொச்சி சீதேவி
பிடித்தகையாத் தகரைமுசு
　　முசுக்கையின் னோர்முறுக்கு நரிப்பயறு
இடித்தே விளைவிற் சாறாக
　　விளைவயோரென்று நாழியதாய்
முடித்தார் குழாய்! சேர்த்துக்கொள்
　　முன்னோ கிஷாயத் துடனாமே (20)

ஆமேகற்கஞ் சாதிக்காய்
　　யதிமதுரங் கோஷ்டமிலவங்கத்
தாமேபச்சிலை கச்சோலம்
　　சாத்திர வேதி யிருவேலி
தேமே வியதார் மஞ்சட்டி
　　செஞ்சந்தனம் காமப்பூ
பூமேவிய செண்பகப்பூ வசுவாசி
　　பொருந்த மல்லி மாஞ்சிலுமே (21)

மல்லி செவ்வல்லி நிலப்பனை
　　வங்கத்திலை வெள்ளி லோத்திரம்
சொல்லிய விமாலம் வெட்பாலை
　　துவர்ச்சிகை யேலஞ் சித்தரத்தை
நெல்லிகடுக்காய் தான்றிக்காய்
　　நேர்திரி கடுகுமமுத
வல்லிகுங்குமப் பூ கஸ்தூரி
　　வளர்கற்பூர மருவாயே (22)



மருவாய் வகைக்கோர் கழஞ்சாக
　　வார்க்கு மெண்ணெய் நாழிக்கு
மெருகா யரைத்து சந்தனமும்
　　மீதோர்பலநிறை தான்கூட்டி
தருவா மிளநீர் பாலெண்ணெய்
　　சரியாய்க் கலந்து ஊறியது
கருகா தெரித்து கெத்திப் பூக்
　　கமழ் நாவிச்சட்டமிட்டு வடிப்பீரே (23)

சட்டமுடன் முழுகுசல சந்தனாதிச்
　　சலமிழிவு நீரைடைப்புத் தடித்தமாங் கிஷமுமே
துட்டனொன்றாங் கல்லடைப்பும் நீர்கடுப்பும் மேகத்
　　துவலைதுளி பெரும்பாடு எலுப்புருக்கி நினை
முருக்கி
வெட்டையுடன் வறட்சியெரிவு மூக்கு நீர்ப்பாய்ச்சல்
　　மீறுசயம் பீனிசமன் டைவலிக் கிரிச்சம்
மட்டலர் சேர் குழலாளே! நேத்திர காசம்
　　படலம் வளர் குந்தந்தொண் ணூத்தாறும்
வருத்தாதே (24)

(இ - ள்)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | சேந்தில்கொடி |
| வில்வம் | இலாமிச்சம்வேர் |
| நன்னாரி வேர் | செய்தல்கிழங்கு |
| பெருவாகை | ஆதுவேலிவேர் |
| கொட்டிக் கிழங்கு | தாமரைவளையம் |
| அமுக்கிராக் கிழங்கு | சித்தாமுட்டி |
| பாதிரிவேர் | பேராமுட்டி |
| முந்திரிகைப்பழம் | அகில்கட்டை |
| சந்தனத் தூள் | மூன்லைவேர் |
| ஓரிலைத்தாமரை | பொன்முசுட்டை |
| கோஷ்டம் | நெருஞ்சில்வேர் |
| பொன்னாங்காணிவேர் | சிறுகீரைவேர் |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | |

A siddhadreams ebook

முதலானவை வகைக்கு 1¼ பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைக்கவும். இக்கஷாயத்தை யிறுத்து, அதனுடன்

| | |
|---|---|
| விழிச்சாறு | கத்தாழைச்சாறு |
| வல்லாரைச்சாறு | கொச்சிச்சாறு |
| சிதேவிச்செங்கழுநீர்ச்சாறு | |
| கையாந்தகரைச்சாறு | முசுமுசுக்கைச்சாறு |
| முள்முறுக்குச்சாறு | கரிப்பயறுச்சாறு |

இவைகள் வகைக்கு 1 நாழிச்சாறு வீதம் எடுத்து ஒன்றுகலந்து கொள்ளவும். இதனுடன்

| | |
|---|---|
| சாதிக்காய் | அதிமதுரம் |
| கோஷ்டம் | கிராம்பு |
| பச்சிலை | கிச்சிலிக்கிழங்கு |
| சாத்திரவேதி | வெட்டிவேர் |
| மஞ்சிஷ்டி | செஞ்சந்தனம் |
| மதனகாமப்பூ | செண்பகப்பூ |
| லவங்கப்பத்திரி | கொத்துமல்லிவிதை |
| சடாமாஞ்சில் | செவ்வல்லிக்கிழங்கு |
| கிலப்பனங்கிழங்கு | வெள்ளிலோத்திரப் பட்டை |
| வெப்பாலைவிதை | பிஞ்சுக்கடுக்காய் |
| ஏலக்காய் | சிற்றரத்தை |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| சீந்தில்கொடி | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, இடித்து ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாகவரைத்துச் சந்தனம் 1 பலம் எடுத்து, அரைத்து, எல்லாவற்றையும் ஒன்று கலந்து



| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் 10 சேர் | |
| இளநீர் | ,, |
| பசுவின்பால் | ,, |

இவைகளையும் ஒன்று சேர்த்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கி, வடிக்கட்டிக் கொள்ளவும். சிறிது சூடாக இருக்கையில்

கஸ்தூரி
குங்குமப்பூ
பச்சைக்கற்பூரம்

இவைகளையும் வகைக்கு 1¼ வராகனடை வீதம் எடுத்து ஒரு வெள்ளைத் துணியில் முடிச்சாகக் கட்டிக் கசக்கவும்.

பின்னர் இத்தைலத்தை ஒரு பழகியபாண்டத்தி லிட்டு வேடுகட்டித் தாழம்பூவைப் பிரித்து அதில் புனுகு சட்டமும் சேர்த்து, 1 மாதம் வைக்கவும்.

இத்தைலத்தினால் தலைமுழுகிவர, நீரிழிவு, நீரடைப்பு, மாம்சஅடைப்பு, கல்லடைப்பு, நீர்கடுப்பு, மேகம், பெரும்பாடு, எலும்புருக்கி, கிணமுறுக்கி, வெட்டை, வறட்சி, எரிச்சல், மூக்கு நீர்பாய்ச்சல், க்ஷயம், பீனசம், மண்டைவலி, நீர்ச்சுருக்கு, நேத்திரகாசம், குந்தம் முதலான தொண்ணூற்றாறு ரோகங்களும் தீரும்.

## கபாலசூலப் புகை

கெந்தக மிரதத்தோடுகேள் மனோசிலையுங்கூட்டி
தந்திடுங் குப்பைமேனி தன்னுட னரைத்துப்பின்னை
வந்தநற் றிரியதாக்கி வரும்புகை மூக்கிலேத்த
தொந்தமாங் கபாலசூலை தோற்றிடு முண்மைதானே (25)



A siddhadreams ebook

(இ - ள்)

சுத்திசெய்த ரஸம்
,, கெந்தகம்
,, மனோசிலே,

இம்மூன்றையும் கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச் சாறுவிட்டு நன்றாக வரைந்து நீண்டமாத்திரைகளாகத் திரட்டிவைத்துக் கொள்ளவும். நன்றாகக்காய்ந்தபின் ஒரு மாத்திரையைக் கொளுத்தி அணைக்கப் புகையுண்டாகும். அந்தப்புகையை மூக்கினால் சுவாசிக்கக் கபாலச் சூலைகள் தீரும்.

---

## அரிதாரச்சூரணம்

தாரமோடு மனோசிலை கெந்தகம்
பாரலிங்கம் பகர்சமன் சுத்திசெய்
காரவோமம் கருதிச் சருக்கரை
கூர்சூலைப்புண் கோவெனப்போகுமே (26)

(இ - ள்)

சுத்திசெய்த அரிதாரம்
,, மனோசிலை
,, கெந்தகம்
,, லிங்கம்
ஓமம்

இவைகளைச் சமமெடுத்துத் தனித்தனியே பொடி செய்து சர்க்கரையும் கூடச்சேர்த்து, வேண்டும்போது மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும். சூலைகள், புண் முதலானவை தீரும்.

---



## புண் சூலைகளுக்கு "ரஸபற்பம்"

கொட்டைப்பாசி யிலையுடனே கூடவிரத நாற்கழஞ்சு
முட்டைவெள்ளைக் கருவதனால் முதிரவரைத்து விருசாமம்
திட்டத்துடனும் முட்டையது திறந்தேவூற்றி மருந்
தடைத்துக்
கட்டிச்சீலை மண்செய்து கடைப்புடஞ்செய் பற்பமதே (27)

பரணியிலிட்டுப் பற்பமதைப் பர்ங்காய் நானோர்
பணவெடையாய்
திரமாயேழு நாளளவுந் தேனிற்கொள்ளப் புண்சூலை
உரமாங்குன்மம் திரிகடுகில் உரத்தசுரத்தில் நரிப்பயறு
வரதேருடையீர்! பசும்பயற்றில் வைத்தசாரந்
தனிலருந்தே (28)

(இ - ள்)

கொட்டைப்பாசி இலையுடன் சுத்தி செய்த பாத ரஸம் 5 வராகனெடை (½ பலம்) விட்டு, கோழிமுட்டையின் வெள்ளைக்கருவினால் நன்றாக 2 ஜாமங்கள் வரை அரைக்கவும். பின்னர், அத்திறந்த முட்டையினுள், இம்மருந்தைச் செலுத்தி அடைத்துச் சீலைமண் செய்து நன்றாக உலர்ந்தபின் காடைப்புடம் இடவும், பற்பமாகும், இதனைப் பத்திரப்படுத்தி, காலைக்கு 3½ குன்றி நிறை வீதம் 7 நாட்களுக்கு தேனுடன் கொடுக்கவும். புண்கள், சூலைகள் முதலானவை தீரும்.

திரிகடுச் சூரணத்தில் இதனைக் கொடுக்கக் குன்ம ரோகமும், நரிப்பயறு அல்லது பச்சைப்பயறுக் கஷாயத்தில் கொடுத்தால் ஜ்வரமும் நீங்கும்.

---

## பறங்கிப்பட்டையுப்பு

மூவஞ்சு பலம்பறங்கிப் பட்டைசீவி
முசுமுசுக் கைச்சாறு மூன்றுநாழி

A siddhadreams ebook

தாவவெயில் காய்ந்தபின்பு உப்பைசெய்விக்கத்
தான்மருந்து கொடுப்பைவேர் முசுமுசுக்கைவேரும்
பூவுலகில் நாயுருவி சிறுகீரை வேரும்
பொருந்துகள்ளிச் சருருங்கடு தான்றிநெல்லி
மேவுசுக்கு திப்பிலி மிளகு சமனுகமேவ
வள்ளங்குங் கிலியம்சாம்பி ராணியிருபலமே (29)

என்னும் பேரரத்தை மஞ்சிட்ட செவ்வல்லி
யியல்கோஷ்ட மசமோதகம் வகைக்கொருபலமாய்
மன்னும் மனோசிலை துரிசுதுத்தம்
மருவுநெல்லி கெந்தகமும் மூன்றுகழஞ்சு
சொன்னபடி மருந்தெல்லாம் தூளாகவிடித்து
சேராம லிருபத்தொன் றுளபங்காய்
தன்னோரமொருபங்கு புதுபாண்டம் நடுவைத்து
நாரங்காய்சிப்பி பத்துசுட்டதனில் போட்டே (30)

போட்டுமொரு புதுச்சட்டி தனில்பட்டைச் சீவல்
பொருந்தவே மேல்சட்டிச் சீலைமண் செய்து
மூடுபுகை வகைக்குமச் சட்டித்தூ
ரதனில்மூ வஞ்சுகதில்லி புகையேற்றதுறு
வீறிடுபுகை போகாமல் பானைமேல் வைத்து
நிதமூன்று புகையாக நிறைதப்பா திதனைத்
தேடுவாராய்ந்து பண்ணியுப்பைப் பட்டை
தின்னுவா யிருநேரம் இருவதுநாளாயே (31)

நேரமொரு பிடிதின்னப் பக்கசூலை
நெஞ்சுவலி வறச்சூலை கிரந்திமேகம்
பாரமுள்ள புண்குஷ்டம் படர்தாமரை
பவுத்திரம் முதலான விரணங்களாறும்
காரவெண்ணெய் கத்தரிக்காய்புன் ணுக்குப்புக்கச்சை
கருவாடு மிச்சைப்பத் தியங்களென்ன
சீரென்னும் படியாக தீருமதுவியாதி
திறமான வுடல் மெலிவுந் தீருந்தானே (32)



(செ - ம்)

பறங்கிப்பட்டை 15 பலம் எடுத்து பட்டையைச்சீவி முசுமுசுக்கைச் சாறுவிட்டு 3 நாட்களுக்கு ஊறவைக்கவும். பின்னர் நன்றாக வெயிலில் உலரவைக்கவும்.

| | |
|---|---|
| கரிசாலைவேர் | முசுமுசுக்கைவேர் |
| நாயுருவிவேர் | சிறுகீரைவேர் |
| கள்ளிச்சாரு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | குங்கிலியம் |
| சாம்பிராணி | |

இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| மஞ்சிஷ்டி | பேரரத்தை |
| கோஷ்டம் | செவ்வல்லிக்கிழங்கு |
| ஓமம் | |

இவைகள் வகைக்கு 1 பலம்

சுத்திசெய்த மனோசிலை
" துரிசு
" துத்தம்
" நெல்லிக்காய்கந்தகம்

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு வீதம் எடுத்துத் தனித் தனியே தூள்செய்து வைக்கவும்.

முன் சொன்ன மருந்துகள் எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்யவும். பின்பு இச் சூரணத்தை 21 பங்குகளாக்கி வைத்துக்கொள்ளவும். ஒரு புதுச்சட்டியில் இத்தூள் 1 பங்கைவிட்டு நாரத்தங் காய் தோலை வெதுப்பி 10 துண்டுகளைப் போடவும். பின்னர், முன் சொல்லிய தூள் மற்றொரு பாகத்தையும் இட்டு அச்சட்டிக்குத் தக்கபடி மேல் சட்டி போட்டுமூடிச்

A siddhadreams ebook

சீலைமண் செய்து அடுப்பின்மேலேற்றி புகைபோகாமல் எரிக்கவும், இவ்வாறு எரித்த உப்பை தினம் இருவேளை உட்கொள்ளவும். இவ்வாறு 20 நாட்கள் உட்கொள்ளவும்.

இம்மாதிரி 20 நாட்கள் தினம் ஒரு பிடி வீதம் உட்கொண்டுவரப்

| | |
|---|---|
| பக்கசூலை | நெஞ்சுவலி |
| வறட்சூலை | கிரந்தி |
| மேகம் | புண்கள் |
| குஷ்டம் | படர்தாமரை |
| பவுத்திரம் | |

முதலான ரோகங்கள் தீரும்.

**பத்தியம்**

நல்லெண்ணெய், கத்தரிக்காய், புண்ணாக்கு, உப்பு, கச்சைக்கருவாடு முதலானவைகளை நீக்கி இச்சாபத்திய மாயிருக்கவும்.

குறிப்பு: டை செய்யுட்களில் சீர் சரியாகவில்லை, ஆகவே, பொருள் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### பிரமிய ரோக நிதானம்

மாதருட மாமையலில் மாமிகுதி தெண்டிப்பாய்ச்
சேதமுற வேவருநோய் — தேடியே
ஆதாவில் வந்துநொந்து மெள்ளவரும் பிரமியங்கள்
சிந்தைதனிற் கண்டோர் தெளிந்து. (1)

(இ - ள்)

ஸ்திரீகளிடத்தில் அதிகமான பிரீதியால் உண்டாகின்றது இந்நோய் என்பதைப் பெரியோர்கள் அறிவர்.



### பிரமியத்தை யொட்டிய மற்ற ரோகங்கள்

வந்துமிருந்து வளரும் பிரமியத்தில்
முந்தவிரு வாதமுளைக்குமே — பிந்தவே
அண்டமெனுஞ்சூலை யதுவுங் பவுத்திரங்க
ளுண்டதுவே யென்னவுரை. (2)

(இ - ள்)

பிரமியத்துடன் வாதம், அண்டசூலை, பவுத்திரம் முதலான பற்பல ரோகங்களும் உண்டாகும்.

### பிரமேகத்தின் குறிகள்

நிறையொருக்கு நிறுத்துமடைப் படுத்தும்
பாரமிகுந் தோஷந்தைப் பத்திக்கும் — சேரவே
கூடும் புணர்ச்சி மிகக் கூடாது தாதுகெடும்
வாடும் பிரமியந்தான் வந்து (3)

(இ - ள்)

தேகத்தை இளைக்கச் செய்யும், தோஷங்களை கோபிக்கச் செய்யும் ஸ்திரீ சேர்க்கை செய்ய இயலாமல் தாதுக்கள் க்ஷீணமாகும்.

### பிரமேகக் குறிகள்

காயும் குளிருங் களைத்துத் தலைவலித்து
நோயமிகு உள்ளெரித்துத் தோணுமே — காயும்
வறளச் செயல் விழுமே மாங்கிஷமும் வற்றி
பிறளப் பிரமியமுமே (4)

A siddhadreams ebook

(கு-ள்)

ஜ்வரமடிக்கும், குளிர் மிகும், தலைகனம், தேகஎரிச்சல் முதலியன ஏற்படும். வேலைகளைச் செய்யவியலாது. தேகத்தில் மாம்ஸதாது வற்றிப்போம்.

## சலப்பிரமியக் குறிகள்

மாத மொருநாள் வருமோடிக் கல்லடைக்கும்
சேதமற மிகுதி செய்விக்கும் — வாதமே
வருமே பவுத்திரமும் வன் பக்கசூலை
தருமே சலப் பிரமியம் (5)

(கு-ள்)

இது மாதம் ஒரு நாளைக்கு ஏற்படும். கல்லடைக்கும். இந்நோய் வாதரோகம், பவுத்திரரோகம், பக்கசூலைமுதலான ரோகங்களையும் காளாவட்டத்தில் உண்டாக்கும்.

## சலப்பிரமியத்தில் ஸாத்யா ஸாத்யம்

நீருங் கடுத்துச் சலமடைத்து நின்றுத்திதித்துச் சலம் விழுந்து
சேருமிரத்தந் தானுண்டாய் தினம்சம் வறளில் விழுந்துநிற்கும்
பாருங்காயம் நாளொன்றில் பாழாய்வற்று முடம்பெங்கும்
வாரஞ்சென்றால் மரணந்தான் மயக்குஞ் சலப்பிரமியமே (6)

(கு-ள்)

சிறு நீர் விடுகையில் கடுப்பு உண்டாகும். சலமும் குறைவடையும். சிறுநீரில் தித்திப்பு ஏற்படும். இரத்தமும் விழும். உடல்வறட்சி உண்டாகும். ஏதேனும் காயம் ஏற்பட்டால் அது உடல் முழுதும் வியாபித்து 1 வாரத்திற்குள் மரணத்தை யுண்டாக்கும்.



## பக்கசூலைக்குத் தேங்காய்ப்பால் மருந்து

தேங்கின் பாலி லத்தியதில் சிறியபிஞ்சு துவைத்துவடித்
தங்குந் திருக்கம் பொடிசெய்து அதுவும் ஒக்கப்போட்டளவி
லங்கதன்னிலப் பிரமியத்தி லதனால் பக்கசூலையெனில்
பங்கப்படாதே யிம்மருந்து பரிந்து குடிக்கிற் பத்தறுமே (7)

(கு-ள்)

தேங்காய் பாலுடன் அத்திபிஞ்சின் சாற்றைச் சேர்த்துக் குன்திருக்கம் பொடிசெய்து, அதனையும் சம அளவில் இட்டுக்கொடுக்கவும். பிரமியத்தில் ஏற்பட்ட பக்கசூலைகள் தீரும்.

## பிரமேகங்களுக்குப் பொன்னுங்காணி நெய்

பொன்னுங்காணிச் சீதேவி புதுநிலவேம்பு சிறுகீரை
மன்னேரிதழ்க்கீழ்க் காய்நெல்லி வருதேக் காளதோலியுடன்
முன்னோர் செப்பு நெருஞ்சில் நெய்தல் முழுநீர்ப்பூலா முசு
முசுக்கை
தின்னூர் வராகிநீர்பதும மியல் சித்த மட்டி மல்லியுமே (8)

பெரியமல்லி நிலக்குமிழ் முல்லையும் பின்னுரிவிலாமிச்சு
முத்தமும்
புரியவேலி தரிப்பயறு பிராமுட்டி தண்ணீர் மிட்டான் சாறது
முரியுவாவின் பால்நாழி விளநீரு மோநாழிதயிர் தண்ணீர் [வும்
நாழியே
லெரிய சந்தனங் கோஷ்டமிலவங்க மதுரஞ்சீரகம் நெல்லி
தக்கோலமே (9)

கோலஞ் சாத்திர வேதிகிளியூரல் கொடிமாஞ்சில் சதருப்பைச்
சிலை
ஏலமிக்கக் கச்சோலம்நற் சாதிக்கா யிதுகிராம்பு இருவேலி
சந்தனம்



A siddhadreams ebook

காலமான வகவாசி தன்னுடன் வகையிலேரொன்
நிருகழுஞ் சென்னவே
ஏலங்கூட்டி நெய் நாழியுங் கூட்டியே மிதைவடித்து நெய்யது
நல்லதே (10)

நல்ல சீனியுஞ் நெய்யுஞ் சரிதக்க நன்றதாகப் பிரமிய முள்ளது
மல்லதாகச் சலஞ்சிக்கு மெய்யது வுடன்வங்க செந்தூ
ரங்கூட்டிக்கொள்
மெல்லவேயரை மண்டலமிப்படி வியன்கொள் வெக்கைக்
கடுப்பதும்
நல்ல காலப் பின்பயித் தியமாங்கிஷ நினைவினுங் கொள்ள
வொண்ணுது காணுமே (11)

(இ - ள்)

| | |
|---|---|
| பொன்னுங்காணி | சிதேவிசெங்கழுநீர்க் |
| நிலவேம்பு | சிறுக்கீரை [கிழங்கு |
| ஓரிதழ்த்தாமரை | கீழாநெல்லி |
| ஆவில்பட்டை | செப்புநெரிஞ்சில் |
| நெய்தல் | நீர்ப்பூலாவேர் |
| முசுமுசுக்கை | நிலப்பனங்கிழங்கு |
| தாமரைக்கிழங்கு | சித்தமுட்டி |
| சித்தமல்லி | பேராமல்லி |
| நிலக்குமிழ் | முல்லை |
| பீனரி | இலாமிச்சம் வேர் |
| கோரைக்கிழங்கு | வெட்டிவேர் |
| கரிப்பயறு | பிராய் |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | |

இவைகளின் சாறு வகைகள் வகைக்கு 1 நாழி

பசுவின் பால் 1 நாழி
இளநீர் ,,
தயிர்த்தண்ணீர் ,,

இவைகளுடன்,

| | |
|---|---|
| கோஷ்டம் | அதிமதுரம் |



| | |
|---|---|
| லவங்கப்பட்டை | சீரகம் |
| நெல்லிவற்றல் | தக்கோலம் |
| சாஸ்திரவேதி (கொடுக்காப்புளி) | |
| கிளியூரம்பட்டை | சடாமாஞ்சில் |
| சதகுப்பை | ஏலம் |
| கச்சோலம் | சாதிக்காய் |
| இருவேலி | சந்தனம் |
| லவங்கப்பத்திரி | |

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை விதமெடுத்து இடித்து ஏதேனும் ஒரு சாறு விட்டு, நன்றாகவரைத்துப், பசுவின் நெய் 5 சேருடன் சேர்த்து, அடுப்பின்மே லேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்த நெய்யைச் சரியளவு சீனியுடன் சேர்த்து உட்கொள்ளப் பிரமியங்கள் தீரும். நீர் சுருக்கு ஏற்பட்டால் இந்த நெய்யுடன் வங்கச்செந்தூரம் கூட்டிக்கொண்டு $\frac{1}{2}$ மண்டலம் உட்கொள்ளவும். வெக்கை கடுப்பு முதலானவை தீரும்.

## மேகத்திற்கு மருந்து

சங்கு நீற்று தன்னுடனிம்மு
மிங்கு நல்லெண்ணெ யின்றுகுடிப்பிராய்
பொங்குமேகம் பொருந்திடு மெய்யரி
யிங்கில்நின் றில் தாமிது தின்னமே (12)

(இ - ள்)

சங்கபஸ்பத்துடன், எலுமிச்சம்பழச்சாறும், நல்லெண்ணெயும் சேர்த்து உட்கொள்ள மேகரோகம் தீரும்.

A siddhadreams ebook

## உளமாந்தை, மேகத்திற்கு "இலாமிச்சைச் சூரணம்"

கூறிலா மிச்சத்தோடு கூறமுக் கிரவும்வேலி
வீறிய நெருஞ்சில் முத்த மிருசெப்பு நெருஞ்சிநாரி
வீறுதா மரைப்பூவித்து விலங்கிய வளையங்கூட்டி
நாறுமா வரைதானஞ்சு நலம்பெறல் விழுதுஞ்சேரே (13)

சேரிடு முசுட்டைவித்துத் திகழத்தி வித்துகோஷ்டம்
பாரிடுசாதிபத்திரி பகரிரு சீரகந்தான்
கூர்திரி கடுகு மிக்கத் திரிபலைகொடிய வோமம்
காரரே ஞுகமுமேலங் கதிக்குமுந் திரிகைகூட்டே (14)

கூட்டுபேரீச்ச நாகங் குங்குமஞ் சாதிக்காயு
நீட்டுசந் தனங்கற்பூரம் திகழ்ந்திடு மதுரசிங்கி
நாட்டுசர்க் கரையும்பாதி நலத்திடுஞ் சீந்தில்பாதி
யூட்டுதே னெய்யிற் கொள்ளயுளமாந்தை மேகம்போமே (15)

(கி - ள்)

| | |
|---|---|
| விளாமிச்சம் வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| கொடிவேலி வேர் | நெருஞ்சில் |
| கோரைக்கிழங்கு | செப்புநெருஞ்சில் |
| நன்னாரி வேர் | தாமரைப்பூ |
| தாமரைக்கொட்டை | தாமரைவளையம் |
| ஆவாரைப்பஞ்சாங்கம் | ஆலவிழுது |
| முசுட்டை விதை | அத்திவித்து |
| கோஷ்டம் | சாதிப்பத்திரி |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| ஓமம் | காட்டுமிளகு |
| ஏலக்காய் | திராக்ஷைப்பழம் |
| பேரீச்சங்காய் | சிறுநாகப்பூ |
| குங்குமப்பூ | சாதிக்காய் |
| சந்தனத்தூள் | பச்சைக்கற்பூரம் |



| | |
|---|---|
| அதிமதுரம் | கற்கடசிங்கி |

இவைகளை வகைக்கு 1 தோலா வீதமெடுத்து இடித்து, வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். மொத்த சூரணத்தில் பாதியளவு காட்டுசர்க்கரையும், பாதியளவு சீந்தில் சர்க்கரையும் சேர்த்துத் தேனிலோ அல்லது நெய்யிலோ உட்கொள்ளவும். உளமாந்தை, மேகநோய் முதலானவை தீரும்.

## பிரமியத்தில் ஏற்படும் நோய்கள்

திருவைப்போல மேனியர்க்கும் நீது பெண்ணனையார்க்கும்
வருமொத்த வாதபித்த கபத்தையும் விரோசிப் பாக்கு
மிருமிக்க குஷ்டம்விக்க லுற்றிடும் சத்திமந்தம்
பொருமித்து வெளிநீர் செய்யும் மிருதியாங் குணங்கள் தாமே (16)

(கி - ள்)

வாத, பித்த, கபமும், பேதமடையும். குஷ்டம், விக்கல், வாந்தி, அக்கினி மந்தம் முதலான நோய்களும் பிரமேகத்திலிருந்து ஜனிக்கும்.

## லிங்கசூலைக் குறிகள்

பிரமிய மெடுத்து வனேகநாள் சென்று பெருகவே புதாந்தில்
திறமுடன் வாயு வந்தடைத்து சலமதுசிறுத்தநாள் சென்றிடுகில்
மறிபடுநீரும் வட்டுவைச் சுருக்கி வாயது தித்திக்கு மாம்போல்
பறிபடும் பின்னை பறித்துபின்னடைக்கு பாரினிலிங்க மாஞ்சூலை (1)

(கி - ள்)

பிரமேகம் காட்பட்டு விட்டால், வாயு வயிற்றில் சேரும். சிறுநீர் குறைவடையும், வாயில் தித்திப்புச் சுவை உண்டாகும். இவை லிங்கசூலைக் குறிகள்.

A siddhadreams ebook

## லிங்கசூலைக் குறிகள்

சூலையேயிருந்து த்தானென்னேரமும் மலதோன்றிடும்
லிங்கத்தின் கடுப்புச்
சலவே முள்ளு தைத்தப்புண்போலச் சற்றுள்ளே சுறுக்
கெனக்குத்த
மேலெல்லாம் பாய்ந்து கடுத்திடும்பின்னை பிறவியே நோக்கிடு
போலவே சுக்கில மலத்துடன் சலமும் பொதுபொதனவது
வீழும் (2)

வீழுமதனேகம் வேதனைகேட்டு மிகுபடில் முன்புபோலிருக்கு
மெழும் பிடுபின்னை யேட்டினில்பற்றி யேறவு மனேகநாட்
சென்று
பழம்படி போல வேதனைசெய்யும் பற்றிடும் பின்னையு
மெடுக்கும்
விளம்பிட வின்னும் பலகுணஞ்செய்யும் மிகுத்ததோர்
லிங்கத்தின் சூலை (3)

(இ - ள்)

அடிவயிற்றில் குத்துவலி யேற்பட்டு, மலம் இறங்கும் ஆண்குறியில் கடுப்பு உண்டாகும். முள்ளுத்தைப்ப தைப்போல் "சுறுக்" என்று உடல் முழுவதிலும் குத்துவலி ஏற்படும். பிரஸவவேதனைப் போன்ற வலியையும் உண்டாக்கும். இந்திரியமும் மூத்திரத்துடன் "பொது" "பொது" என்று வெளியாகும்.

இம்மாதிரி குணமுள்ள ரோகம் அடிக்கடி ஏற்பட்டு வேதனை தரும்.

## நீர்சுறுக்குக்கு மருந்து

மானேகேள் நீரடைக்கில் வாளும் பசரியுடன்
தானேநற் கத்திரியின் தன்னிலையும் — பானைதன்னில்
ஒக்கக்கஷாயமிட்டு ஓதும் வெண்காரமிடில்
கக்கிக்கடனுடைக்குங் காண் (4)



(இ - ள்)

பசரியிலை கத்திரியிலை

இவ்விரண்டையும் இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி அரைக்கால் பங்காகும் வரைச் சுண்டவைத்து, இறுத்து வெண்காரப் பொடி போட்டுப் பருகவும். நீர்ச்சுறுக் குகள் தீரும்.

## சிறுநீர், கல்லடைப்புக்கு மாவலிங்கக் கஷாயம்

மாவிலங்கு வர்நிலத்தில் வடக்கெழுந்த வேரும்
வருமினியப் பெருவழியில் முட்படா நெருஞ்சிவேரும்
பேயிலகு சுடுகாட்டுப் பிராமுட்டி வேரும்
பீளையிலை நிற்கக் சிறுபூளைவேரும்
காயிலங்கு மொழிமடவார் யெட்டொன்றுய்க் காய்ச்சி
கல்லெரிப்ப னென்பதற்குச் சொல்லும்வகை கேளீர்
வாயிலங்கு வைத்திடிலோ வந்துவிழுங்கல்லு
அடுத்தகுந்தில் சாற்றிட்டுப் படுத்தகல்லும் விழுமே
(5)

(இ - ள்)

உவர் நிலத்தில் விளையும் மாவலிங்கம் மரத்தின் வடக்கு போகும் வேர், நெருஞ்சில் வேர், சுடுகாட்டில் விளையும் பிராமுட்டி வேர், பீளை வேர், சிறு பூளைவேர் இவைகளைச் சமனெடையெடுத்து இடித்து,ஒருபாத்திரத் திலிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன் றாக்கி இறக்கவும். இதனையுட் கொள்ளச் சிறுநீரில் உண்டாகும் கற்கள் விழும்.

A siddhadreams ebook

## சிறுநீர் கல்லுக்குக் குடிநீர்

முத்தானுளடித்த காற்று முதுநரிக்கொம்பு வேரு
மித்திரன் குதிரைவாலு மிலாமிச்சு சந்தனமும்
அந்தமிலானை யேத்தி அடைவுடன் குடித்தபோது
மந்தமுமற்றுக் கல்லு மாசறவிட்டுப்போமே (6)

(இ - ள்)

| | |
|---|---|
| வெங்காரம் | சுக்கு |
| முதியார் கூந்தல் | இலாமிச்சவேர் |
| சந்தனத்தூள் | |

இவைகளைச் சரியெடையெடுத்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும். சிறுநீருண்டாகும் கற்கள் நீங்கும்.

## பவுத்திர ரோக நிதானம்

உட்டின ரோகத்தாலும் ஒண்டொடி வருத்தத்தாலும்
வட்டமா முதாரத்துள்ளே வளர்மலக் கிருமியாலு
முட்டநீர் சிறுத்து விம்மி முனைத்தமாங் கிஷத்தினாலும்
துட்டமா வெழுப் பவுத்திர தோஷமுண் டாகுந்தானே (1)

(இ - ள்)

உஷ்ணம் அதிகரிப்பதாலும், ஸ்திரீசேர்க்கையினாலும், தேகத்தில் கிருமிகள் சேருவதனாலும் சிறுநீர் குறைந்து, ஆஸனத்துவாரத்தருகில் மாம்ஸம் வெளியாகிப்பின்னர் உடைந்து பவுத்திரரோகம் உண்டாகும்.



## மூலபவுத்திரக் குறிகள்

குதத்தினில் சுத்திநொந்து குமிழ்முனைபோல் திரண்டு
அதத்தினில் வெடித்துநீரும் சலம்வலம் தனில் வீழும்
விதப்பட வலியுமுண்டாய் மீன்சினை மூலம்போலச்
சதைத்திடுமின் னேமூல பவுத்திர மென்னலாமே (2)

(இ - ள்)

குதத்தைச் சுற்றிலும் வலியுண்டாகி, முளையைப் போல் கட்டியேற்பட்டு உடையும். அதிலிருந்து, நீர் வெளியாகும், வலியேற்பட்டு, மீன்செதிளைப் போலச் சதை அருத்தும். இது மூலபவுத்திரத்தின் குறிகளாகும்.

## பக்கபவுத்திரக் குறிகள்

மிக்கதோர் கொடியைவிட்டு வலமிடம் வெடித்ததாகில்
ஒக்கநீர் வலமும்வீழும் ஒடுவிழும் சீழிரத்தம்
தக்கதோர் சதைமூலந்தான் மட்டும் புரையதாகும்
பக்கமாம் பவுத்திர மென்று பகரலாம் பகரலாமே (3)

(இ - ள்)

ஆஸனத்வாரத்தை விட்டு, கட்டிகள் வலத்திலோ அல்லது இடப்பக்கமோ யேற்பட்டு உடைந்து, சீழும் ரத்தமும் வெளியாகும். பின்னர் சதை புரண்டு அங்குத்வாரமாகும். இவை பக்கபவுத்திரத்தின் குறிகளாகும்.

## பவுத்திரத்தின் அஸாத்திய நிலமை

அண்டத்தில் வெடித்தாலு மதன்கீழே வெடித்ததாலும்
முண்டித்த பீசத்திற்கு முன்பாக வெடித்ததாலும்



A siddhadreams ebook

தெண்டித்த மருந்தினாலும் கருவியினாலும் தீரா
தண்டித்த முனிவோர் சொன்ன சாஸ்திரப் படியதாமே (4)

(இ - ள்)

கட்டி உண்டாகி அண்டத்தில் உடைந்தாலோ அல்லது அதன் கீழே பழுத்து உடைந்தாலும், பீஜத்திற்கு முன் உடைந்தாலும் அவை மருந்துகளினாலோ அல்லது சாஸ்திரங்களினாலோ தீராது.

## சாத்தியமான பவுத்திரத்தின் நிலைமை

பாரிசமாண்டில் தோன்றும் பவுத்திரமதுவும் பின்னைக்
கூறிய மூலச்சுத்து கொதித்தெழு பவுத்திரந் தானும்
ஆரணத் தடிசேர்கின்ற ஆசனப் பவுத்திரந்தானும்
நேரிழையாரே! தீரும் நிச்சய மாருந்தானே (5)

(இ-ள்)

ஒரு வருஷத்திற்குள் உண்டாகும் பவுத்திர ரோகம், ஆஸனப்பவுத்திரம் முதலானவை தீரும்.

## அண்டபவுத்திரக் குறிகள்

மூலமுங் கொடியும்பீச முத்திடை வாங்கி நோகும்
சாலவே பிரமேகம் வீழும் சலம்வல மடைத்துக்கொள்ளும்
மேலேழப் பொற்றிதன்னில் வேதனை மிகவுமுண்டா
யாலவேல் விழியாய்! கேளாயண்ட பவுத்திரமென்
றறியலாமே (6)

(இ - ள்)

மூலத்தில் கொடிகளைப்போல சதைவளர்ச்சிகள் ஏற்பட்டுக் குத்துவலியைத் தரும் மலம் சலம் கட்டிப்போம்.



846

உடலில் வேதனையைத்தரும். இது அண்ட பவுத்திரத்தின் குறிகளாகும்.

## பவுத்திர விரணக்குறிகளும் காரணங்களும்

மேகத்தால் மூலந்தன்னால் மிகுத்திடுங் கரப்பான் தன்னால்
ரோகத்தால் கொடியில்பக்கம் நின்றிடு மாசனத்தில்
வேகத்தால் புடைத்துப் பொங்கி வேதனைபண்ணிக்கண்விட்
டாகத்தால் கிருமிசேர்ந்து பவுத்திர விரணமாமே (7)

(இ - ள்)

பிரமேகரோக, மூலரோகம், கரப்பான் இவைகளால் ஆஸனத்வாரத்தின் பக்கம் புடைத்து, வீங்கி, வேதனையுடன் உடைந்துக்கண்கள் உண்டாகும். கிருமிகளும் சேரும். இவை பவுத்திர ரணத்தின் குணங்களாகும்,

## நிக்நக கிருதம்

தசமூலம் சீந்திவேம்பு சிறுகாஞ்சோறி வில்வமூலமே
தசைபெரு வாகைகொன்றை தருகுமிழ் கண்டங்காலி
வசையில் பாதிரிசங்கு வழுதலைபுங்கோண்ட
மிசையவே சித்ரமூலம் புளியாரை யினியபேய்
முகட்டை சேரே (8)

சேருபேய்ப்புடல் மரமஞ்சள் சிறியபற்படகம் கற்கடசிங்கி
தேருங்கடுக ரோகணியும் நிகரொரு பலங்கள்கொண்டு
வாருநீர் பதக்குநோரய் வற்றியே நாலிலொன்றாய்
நீர்திருநாழி நெய்யும் நிலைபெருஞ் சரக்குங் கொள்ளே (9)

நிலைபெரும் புங்கு முத்தம் நிலவேம்பு அம்மான் பச்சை
விலைபெருசந்தத் திப்பிலி மேவியே யரைத்துக்கூட்டி
அலைநுரை பொங்கெரித்து ஆத்தியே வடித்துக் கொள்வீர்
சிலைபெறு பவுத்திரங் கிரந்திசேர் குட்டதாகமேகம்போம் (10)

A siddhadreams ebook

(இ-ள்.)

| | |
|---|---|
| தசமூலம் | சிந்தில்கொடி |
| வேம்பு | சிறுகாஞ்சோறிவேர் |
| வில்வம் | முல்லை |
| பெருவாகை | கொன்றை |
| குமிழ்வேர் | கண்டங்கத்தரிவேர் |
| பாதிரிவேர் | சங்கம்வேர் |
| சிறுகத்தரி | புங்கம்வேர் |
| ஆமணக்கம் வேர் | சித்ரமூலம் |
| புளியாரை | பேய்முசுட்டை |
| பேய்புடல் | மரமஞ்சள் |
| பற்பாடகம் | கற்கடசிங்கி |
| கடுகரோகிணி | |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் 2 மரக்கால் விட்டு நாலிலொன்றாகும் வரை வற்றவைத்து வடிக்கட்டி அதனுடன்

பசுவின் நெய் 2 நாழி (10 சேர்) கலந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| புங்கங்கொட்டை | கோரைக்கிழங்கு |
| நிலவேம்பு | அம்மான்பச்சரிசி |
| சந்தனத்தூள் | திப்பிலி |

இவைகளை வகைக்கு ½ பலம் விதமெடுத்து இடித்து கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்த நெய்யைத் தினமும் ¼ தோலா அளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும்.

பவுத்திரம், கிரந்தி, குஷ்டம், எரிச்சல், மேக ரோகங்கள் முதலானவை தீரும்.



## பிளவை நிதானம்

ஆயுர்வேதந் தன்னுே டடைவுடன் பேசிவைத்த
நோய்மிகு பிளவை தன்னை நோயதாய்த் தீர்க்கவேண்டி
வாய்மையாய் மருந்துகார மற்றுள பரிகாரங்கள்
தூயமாய் நீர் தெளிந்துச் சுகப்பட மருந்து செய்யே (1)

(இ-ள்)

ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி பிளவை நோயைத் தீர்க்க மருந்துகள் காரம் முதலியவைகளைக் கொண்டு பரிகாரம் செய்யவும்.

## பெரிய பிளவைக் குறிகள்

பெரியபிளவை முள்ளெலும்பில் பெருக்கப்பிளக்கும் நடுமுதுகி
லருமையதுவு மாறுலடங்கா வுழலையது வெடுக்கு
மரியப் பொன்னி னுவாரை அல்லியதுவும் புன்னைக்காயளவு
உரிய பழமோர் தனிற்குடிக்க வுழலைதவண மோடிடுமே (2)

(இ-ள்)

பெரும்பிளவை முள்ளெலும்பின் மேல் நடுமுதுகில் உண்டாகும். தாங்கமுடியாத எரிச்சலைக் கொடுக்கும்.

இதற்குப்

பொன்னுவாரம்பூ
அல்லிப்பூ

இவ்விரண்டையும் புன்னைக்காயளவெடுத்து அரைத்து புளித்த மோருடன் குடிக்க, எரிச்சல் அடங்கும்.

A siddhadreams ebook

## பிளவையின் ஸாத்யா ஸாத்யம்

முதுகிடுமையத் தன்னில் முள்ளந்தண் டதனைப்பற்றி
பதுமமாங் காய்கள்போல பிளவையும் பலகண்ணுகில்
மதியுறு மருந்தினலும் மற்றுள்ள கருவியாலும்
விதியதின் படியேதென்ன வேதமாமுனிவர் சொன்னர் (3)

(இ - ள்)

முதுகின் கடுமத்தியில் முள்ளந்தண்டின் மேல் மாங்காய்ப்பிரமாணமுள்ள பிளவையுண்டாகிப் பற்பலகண்களுடன் ஏற்படும். மருந்துகளினலும் சஸ்திரங்களினலும் கீறி ஆற்றிவிடவும்.

## பிளவையில் ஏற்படும் மற்ற நோய்கள்

செப்பிட குத்தமுத்தும் சேர்ந்திட வுழலைசோபத்
தப்பிடா நாவறட்சி தருகிடா சலத்தின்வாதை
முப்புரக் கண்ணே போன்று முறைமையில் வ்யாதிக்
கெல்லா
மிப்படிக் குணங்களெல்லா மிருவகைப் பிளவையாமே (4)

(இ - ள்)

பிளவையில் அதிகமான எரிச்சல், வீக்கம் இவைகளேற்படுவதுடன் காவறட்சி, நீர்ச்சுறுக்கு முதலான குறிகளும் காணும்.

## பிளவையின் அஸாத்யக்குறிகள்

உழலைதவனம் பசித்தாப முள்மூச் சுரங்கள் நாவறட்சி
குளிருவெறுவல் குறைக்கண்ணய்! சொல்லாந் தனந்த
நலமிகுத



வழலு மியல்சேர் வதையென வதுதான் மீழவரிதென்று
பழகுங் கயல்சேர் விழியாரே! பாரும் பெரியோர் பகர்ந்
தாரே (5)

(இ - ள்)

உள் அழற்சி, பசி, தாபம், உள்மூச்சு, காவறட்சி இவைகளுடன் கூடிய பிளவை குணமாவது துர்லபமாகும்.

## பக்கப்பிளவையின் சிகித்ஸைமுறை

மார்பினிலீரல் தன்னில் மறுப்படாத் தண்டுக்கோல்போல்
நேர்படச் செம்மையாக்கி நிற்பதே வாவுதன்னில்
கார்செறி குழலினளே! கருவியால் கீறிக்காரம்
போர்படக் கட்டப்பக்க பிளவையும் விட்டுப்போமே (6)

(இ - ள்)

மார்பு, ஈரல் முதலான பிரதேசங்களில் உண்டாவது பக்கப்பிளவையாகும். இதனைச் சஸ்திரத்தால் கீறிக்காரம் வைத்துக்கட்டவும். பக்கப்பிளவை குணமாகும்.

## பிளவையின் ஸாத்யாஸாத்யம்

முதுகிற் புறத்திலுறை போல முள்ளந்தண்டி தனைத்தப்பி
யிதுவேவந்தால் மரணமில்லை யெனவே கண்களடைபடுமென்
றதிலேமேனி குளிர்சுழும தனேடுழலை கழிச்சலுட
னிதுதான் பக்கப்பிளவை யதற்கினிதாங் காரங்கீறியிடே (7)

(இ - ள்)

முதுகுப்பக்கத்தின் நடுவில் முள்ளந்தண்டை நீங்கி வரும் பிளவை குணமாகும். கண்களும் அடைபடும்.

A siddhadreams ebook

உடலில் குளிர் ஜ்வரம், உழலை, கழிச்சல் முதலான பொதுக்குறிகளும் காணும். இப்பேற்பட்ட பிளவை யைக் கீறிக் காரமிட்டுக் கட்டவும்.

## காரம்

காரந்துரிசு பாஷாணம் கரியதன விலிரையாமல்
சேரப் பொடிசெய் வெண்ணெயுடன் திரும்பவரைத்
துச்சீலையுட
னாத்தடவி யுட்சீலை யங்குத்தன்விப் புண்ணிவிடப்
பாரப்பிளவை கரைந்துருகிப் பத்திப்பகலும் பறந்திடுமே (8)

(இ - ள்)

துரிசு பாஷாணம்
அடுப்புக்கரி

இம்மூன்றையும் நன்றாகப் பொடிசெய்து வெண் ணெயுடன் குழப்பி நன்றாக வரைத்துக்கொண்டு ஒரு துல்லியமான சீலையில் தடவி புண்ணிலிட்டு மேலே மற் றொரு சீலையிட்டுக் கட்டவும். பிளவை கரைந்து போம்

## நோயாளிக்குப் பத்தியம்

பறந்திடு புண்ணிற்காரம் பகைத்துண்ணில் தயிருஞ்சோறு
பிறந்திடு பிசைந்து கையால் பேணிவை மூன்றுநாளி
லிறிந்திவைத் தம்மக்கட்டி அவிழ்த்துபாத்துப் பின்னும்
சிறந்திட வெண்ணெய் பண்ணித் தெளிவுடன் மருந்து
செய்யே (9)

(இ - ள்)

புண்ணில் காரம் அதிகமாகி, எரிச்சல் அதிகமாக உண்டானால் தயிர் சோற்றை அரைத்துப் பிசைந்து



வைத்துக் கட்டவும். மூன்றும் நாள் கட்டை அவிழ்த்து விடவும். பின்னர், எண்ணெய் உபயோகிக்கவும்.

## புண்ணுக்கு " ஆவாரை யெண்ணெய் "

செப்பிய வெண்ணெய் வைக்கச் சிறந்தாவா ரைவேர் நாழி
ஒப்புடன் துடரிபூலா வேரொன் றொன்றதனிற்பாதி
எப்பெருஞ் சரக்குநிற்க விடையிரண் டிருபதாகிக்
கைப்பு வெட்பாலை கூட்டிக் கஷாயமாய் யெண்ணெய் வையே
(10)

எண்ணெயும் சீலைதானு மிடைவிடாப் பக்ஷணசாற்க
நன்னுமா வாரையிலைய நயக்கவே வதக்கிக்கொண்டு
புண்ணுமேல் வைத்துக்கட்டப் பொருந்துமாம் பிளவைப்
புண்ணொன்
றுண்மையா யுரைக்கமுன்னோ ருறுதியாய்க் கண்டதாமே (11)

கண்டதோர் கறிகாய்பால்நெய் கருத்திலே யுத்தநெல்லாங்
கொண்டிடில் குத்தமென்று கூறினர் முனிகள்முன்னோர்
விண்டுண்ணும் தூதளங்காய் முருங்கைக்கா யிலையுமுத்தி
பண்டுமுன் பழையமோரும் பத்தியந் தயிருமாமே (12)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| ஆவாரை வேர்த் துண்டுகள் | 1 | வீசை |
| துடரிவேர் | $\frac{1}{2}$ | ,, |
| பூலாவேர் | $\frac{1}{2}$ | ,, |
| வெட்பாலைப்பட்டை | 2 | ,, |

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன் றாக வற்றவைத்து, சரியளவு எண்ணெய் சேர்த்து, மறு படியும் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். இந்த எண் ணெயில் ஒரு வெள்ளைத் துணியை நனைத்துப் பிளவை புண்மேல் போட்டுவரவும். புண்கள் ஆறும்.

A siddhadreams ebook

2. ஆவாரை யிலையை வதக்கிப் புண்ணின்மேல் வைத்தும் கட்டலாம். புண்கள் ஆறும்.

**பத்தியம் :**

கறிகாய்கள், பால், நெய் முதலானவைகளை அளவு மீறி உபயோகப்படுத்தினல் குற்றமாகும்.

தூதுவிளங்காய், முருங்கைக்காய், முருங்கையிலை, புளித்தமோர், தயிர் இவைகளைக் கூட்டவும்.

## பிளவையில் அபத்யக் குறிகள்

வற்றிய மலசலங்கள் மற்றுள்ள விழிகள் நாசி
யுற்றமச்செவிகள் நாக்கு உறுதியின் பரிசில் பார்க்க
இத்தனை குணமுங்கெட்டு, பிருந்ததே மிகவும் கண்டால்
வித்தகர் தன்முன்சென்று மீளுவதன்மை யாமே (13)

(இ - ள்)

மல ஜலங்கள் வற்றி, விழி, மூக்கு, செவி. நாக்கு முதலான இந்திரியங்கள் சரியாக வேலை செய்யாமலிருந் தால் பிழைப்பதறிதாகும்.

## பிளவை விக்கத்திற்கு "நெல்லிப் பூச்சு"

நெல்லியுட னிலைப்பனையின் கிழங்குதானும்
நெற்பொரியு மாவாரை தின்றவேரும்
சொல்லரிய வற்றுவின் வெண்ணெய்சேர்த்து
விதமாக விக்கத்தின் மேலேபூசச்
சொல்லியதோர் பிளவைதனிற் காசக்காய்ச்சல்
குணமெழுந்து வருகண்ணுல் வருநீர்ப்பாய்ச்சல்
மெல்லியதாய் முலைப்பாலுங் கூட்டில்விக்கம்
இதமுடனே வலிதானும் விளைவிப் போமே (14)



(இ - ள்)

நெல்லிமுள்ளி நிலப்பனைக்கிழங்கு
நெற்பொரி ஆவாரை வேர்

இவைகளைத் தூள் செய்து, பசுவின் வெண்ணெயு டனே குழைத்துப் பிளவை விக்கத்தின் மேல் பூசவும்.

கண்ணீர்ப் பாய்ச்சல், காசம் முதலானவைகளுக்கு முலைப்பால் கூட்டிப் பூசவும். வலி தீரும்.

## விக்கம், எரிச்சலுக்குப் பூச்சு

ஆவாரை யல்லிநெல்லி யதுவுடன் பூலாவேரும்
கோவினில் வெண்ணெய்தன்னேர்குழைத்து விக்கத்திற்பூச
மேவிய வனல்போய் விக்கம் வேதனையது கடியத்
தாளித்துக் குழைத்துப்பூசத் தயிரது கூட்டிக்கொள்வாம் (15)

(இ - ள்)

ஆவாரை வேர் அல்லிக்கிழங்கு
நெல்லிவேர் பூலா வேர்

இவைகளை நன்றாக அரைத்துப் பசுவெண்ணெயு டன் குழைத்துப் பிளவை விக்கத்தின் மேல் பூசவும்.

எரிச்சல், விக்கம், வேதனைகள் அதிகமிருந்தால் இதையே லேசாக இளக்கிப் பூசவும். தயிர்சாதம் சாப் பிடவும்.

## பிளவை விக்கத்திற்கு "நிலப்பனைப் பூச்சு"

வஞ்சிக் கொடியார் முலைப்பாலின்
வராகிக்கிழங்கோ டாவின்வெண்ணெய்

A siddhadreams ebook

செஞ்சொற்படியே அரைதோன்றித்
திரும்பவழித்து யதுவைத்து
வஞ்சிப்பிளவை முகமதனில்
மானே வருந்தியதுதப்பக்
கெஞ்சிச் சுரமோடழல் வீக்கம்
கெட்டேபட்டுப் போமென்றே (16)

(இ - ள்)

கிலப்பனங்கிழங்கை யெடுத்து, முலைப்பால் விட்டு நன்றாக வரைத்துப் பசுவின் வெண்ணெய் சேர்த்துக் குழப்பிப் பிளவையின் முகத்தில் பூசவும். ஜ்வரம், அனத்தல், வீக்கம் முதலானவை தீரும்.

---

## நீரிழிவிற்குப் பிட்டு

மலைசிமைந்த மென்கொடியும் வன்குறுவை நெல்லு
மலர்சிவந்த ஆவாரைப் பூத்தாளுந் — தலைவிலா
நீரேபெருத்துவரில் நில்லென்னும் பிட்டதனை
பூரேயெனக் கொள்ளும் போது (17)

(இ - ள்)

கட்டுக்கொடி குறுவை நெல்லரிசி
ஆவாரம்பூ

இவைகளை இடித்துப் பிட்டாக்கி உட்கொள்ள நீரிழிவுகள் நிற்கும்.

---

## பிளவையிலிருந்து நீர் கசிந்தால் அதற்கு மருந்து

செவிரைய ன்பதொக்கத் தீயவே வறுத்துத் தூள்செய்
தாவிரை வேர்தன்னை யரைத்துமென் பொடியதாக்கி



எவிநிரப்பிள வைப்புண்ணி விளங்கநெய் பூசித்தூளைத்
தூவிடதீரும் வத்திச் சுருதியாய் யுலருந்தானே (18)

(இ - ள்)

செவியரையனைக் கொண்டுவந்து நன்றாகவறுத்துத் தூள் செய்து கொண்டு, அதே போல் ஆவாரை வேரையும் வறுத்துத் தூள் செய்து, பிளவைப் புண்ணின் மேல் நெய்யைப் பூசி அதில் மேற்படி தூளைத் தூவவும். நீர் வத்திப்போம். புண்களும் ஆறும்.

---

## பிளவைக் குறிகள்

பிளவை பிறக்கும் வகைகேளீர் பிடரிகனத்துத் தலைமுதுகு
வளமதிடுப்பு மார்தனிலே வருனேய்பந்து கமலம்போல்
துளையதாகிக் கண்வெடித்துச் சுத்தித்தோன்று மென்றுயர்த்தேர்
ஏனகபாரமுலையாளே! அறிந்தே புவியிலுரையீரே (19)

(இ - ள்)

பிடரியில் பாரம் ஏற்பட்டுத் தலையும் கனக்கும். தலை, முதுகு, மார்பு முதலான விடங்களில் தாமரை மொட்டைப்போலும், பந்தைப்போலும் வீக்கம் ஏற்பட்டுப் பழுத்துப் பல கண்களுடன் உடைந்துபோம்.

இவை பிளவையின் குறிகளாகும்.

---

## தசமூலாதி நெய்

உரைத்தானக திர்நெய்க்கு உயர்ந்த வில்வம் பெருவாகை
திரைசேர் பாதிரிமுன்னை சிறுகாஞ்சொறி குங்கிலியம்
சிற்றமல்லி

A siddhadreams ebook

வரையாம் நெருஞ்சில் வழுதலைபேராமல்லி நாகந்தி
கரைசேர் சாறடை மூக்கிரட்டை க்கள்ளிப்பட்டை வேர்
தாமே (20)

தாமாவிலங்கைப் பட்டைப்புங்கம் தழைத்த நிலத்துக்
கடம்புவேர்
நாமாங்கோஷ்டஞ் செங்கொட்டை நலத்த எருக்கம் வேர்ப்
பட்டை
ஆமாங் கடுக்காய் திப்பிலியும் வையோரொன்று பலம்பத்தாய்
தாமாயிடித்து நீர்கலமுத் தானேகாய்ந்து குறுணிகொள்ளே
(21)

கொள்ளே திப்பிலி கசதிப்பிலி கூடச்செவ்வியஞ் சிவதை
வேர்
பள்ளத்தெழுந்த வசம்பரிக்கு பகருமப்பைக் கிழங்குடனே
குள்ளச்சிறுதேக்கு விழலரிசி கொண்டே வகைக்கு யிரண்டு
பலம்
மெள்ளவரைத்துக் கஷாயமதில் மிகுத்த யாவினெய் குறுணி
யுமே (22)

குறுகவெரித்து வடித்துபின்னுங் கொள்ளக் கொடிய
நீர்பிளவை
மறுகுபாண்டு விப்புருதி வயத்தில் குன்மம் மருத்தீடு
முறுகுகல்லு பெருவயறு முதிர்ந்த குஷ்டமுயலகனு
மறுமே காசம் விஷப்பாகம் பீலியானந்தவாதந் தீருமதே (23)

(கு - ம்)

| | |
|---|---|
| வில்வவேர் | பெருவாகைவேர் |
| பாதிரிவேர் | முன்னை வேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | குங்கிலியம் |
| சிற்றாமல்லி | நெருஞ்சில் |
| வழுதலை வேர் | பேராமல்லி |
| நாககந்தி | சாறடைவேர் |
| மூக்கிரட்டைவேர் | கள்ளிப்பட்டைவேர் |
| மாவலிங்கைப்பட்டை | புங்கம்பட்டை |
| நிலக்கடம்புவேர் | கோஷ்டம் |
| சேங்கொட்டை | எருக்கம்வேர்ப்பட்டை |
| கடுக்காய்த்தோல் | திப்பிலி |



இவைகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து ஒன்றி ரண்டாக இடித்து 12 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி, 1 மரக்கலாகும் வரை வற்ற வைக்கவும். பின்னர்

| | |
|---|---|
| திப்பிலி | யானைத்திப்பிலி |
| செவ்வியம் | சிவதைவேர் |
| வசம்பு | அப்பைக்கோவைக் |
| சிறுதேக்கு | விழாலரிசி [கிழங்கு |

இவைகளை வகைக்கு 2 பலம் எடுத்துக் கஷாயத்துடன் அரைத்துக் குழப்பிப் பசுவின் நெய் 1 குறுணி சேர்த்து, அடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யில் ஒரு கரண்டியளவெடுத்துத் தினம் 2 வேளை (பாலுடனே) உட்கொள்ள நீர் பிளவை, பாண்டு, விப்புருதி, குன்மம், மருந்தீடு, நீரில் கல், பெருவயிறு, குஷ்டம், முயலக சக்தி, காசம், விஷப்பாசம், பீலிகை, ஆனந்த வாயு முதலானவை தீரும்.

## எழுநாயிறு, படுநாயிறு லக்ஷணம்

எழுநாயராகி லெழும் வலதுபக்கம்
பழுகாதடி நெஞ்சில் பார்க்குத்தில் — வழுவாமல்
தொந்துசீழ்க் கொள்ளு மனுகாரிடமானால்
தொந்தப் படுநாய ரென்று சொல் (1)

(கு - ம்)

கழுத்தின் வலதுபக்கத்தில் அல்லது நெஞ்சக்குடியில் வீக்கம் உண்டாகிச் சீழ் பிடித்துக்கொள்ளும். அது வே இடப்பக்கத்தில் உண்டானால் "படுநாயறு" என்றும், வலப்பக்கத்திலேற்பட்டால் "எழுநாயிறு" என்றும் பெயர் வழங்கும்.

A siddhadreams ebook

## கன்னமூலக் குறிகள்

கன்னமூல மது வலிகாதிலு
மன்னியாணி யடித்துற வாங்கிலும்
சென்னிநெற்றி பிடரியம் சேரதேய்
சொன்ன நீரொடு சோறுங் குமட்டுமே (2)

(நி - ள்)

கன்ன மூலரோகத்தில் காதுகளில் வலியேற்படும். தலை, நெற்றி, பிடரி முதலான இடங்களில் ஆணி அடித்தாற்போல குத்துவலியுண்டாகும். ஆகாரம், ஜலம் இவைகள் குமட்டும்.

## எலுமிச்சம்பழ வேது

வெட்டுப்பட்ட புண்ணிற்கு விதித்து முன்னேருரைத்தபடி
வட்டப்படவே தேசிக்கா யரைத்துப் பாதியிரண்டாக்கிச்
சட்டிதனிலே யெண்ணெய்விட்டுத் தழலிலறவே மிகக்காய்ச்சி
யட்ட மருந்து வொத்திடுவ நிதற்குப் பின்னே யெண்ணெய்
விடே (3)

இடவேயெண்ணெய்து நளக்கு யிலந்தைக் கதுக்காய் துடரி
முட்பூலா
படரும் நிலத்துக் குமிழ்வட்டு பசுத்த வாவரை யவேரும்
கடலாதொக்கச் சிறுகடுக்காய் காமன்பசரி நாயுருவி
யடவே விலையின் வேர்கொண்டு யதில்மேல் வைசேர் கடைச்
சாக்கே (4)

கோஷ்டம் மதுரம் வேம்பாடம் கொடியின் சிவந்த செவ்வல்லி
மீட்டுங்கிய குந்துரிக்க மியசோகப்பூ சதகுப்பை
மேட்டில்வளரும் மேலமுள்ள மிகாமலித்த விலவங்கம்
கூட்டித் தூளியுடன் செய்து கொள்வீரெண்ணெய்
புண்ணிற்கே (5)



(நி - ள்)

வெட்டுப்பட்ட புண்களுக்கு எலுமிச்சம்பழத்தை இரண்டாகப் பிளந்து, ஒரு சட்டியில் நல்லெண்ணெய் விட்டு அடுப்பின்மேலேற்றிச் சூடாக இருக்கையில் சுருங்கிய எலுமிச்சம்பழத்தைத் தோய்த்துப் புண்ணில் ஒத்தடமிடவும்.

பின்னர்

| | |
|---|---|
| இலந்தை | துடரி |
| முட்பூலா | நிலக்குமிழ் |
| ஆவாரைவேர் | சிறுகடுக்காய்த்தோல் |
| திப்பிலி | பசரி இலை |
| நாயுருவி வேர் | |

இவைகளுடன்

| | |
|---|---|
| அதிமதுரம் | வேம்பாடம்பட்டை |
| செவ்வல்லிக்கொடி. | குந்துருக்கம் |
| சிறுநாகப்பூ | சதகுப்பை |
| ஏலக்காய் | கிராம்பு |

இவைகளையும் சேர்த்து (வகைக்கு 1 தோலா) இடித்துத் தூளாக்கி எண்ணெய் 5 சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயைப் புண்களிலிடவும்.

## குத்துப்பட்டத்திற்கு

குத்துக்குடனே புடைசீலை குடைத்தே யிரத்தக் கள்ளிதன்னை
முத்துப்போலே விழுநீரை முறித்துச் சும்மா வகைசெய்து
சுத்தப்படவே யித்தளவாய் துடைத்து வாதற் சதைதள்ளிச்



A siddhadreams ebook

சித்தந்துளங்காஃதேசிக்காய் சிறந்தவெண்ணெய் ஓட
வொற்றே (6)

ஒற்றேயிட்ட மூணுநாள் ஓடுவிலாமூலம் புள்ளடியு
மற்றேர்சிறியா தம்பலவே ராமணக்கு முற்றிதன்னுரி
சித்தத்தேல யிலவங்கந் தின்னுங் கைப்புவேம்பாட
லுற்றேர்மருதந் தான்கொண்டு வுடனிலெண்ணெயுடன்
தள்ளே (7)

(இ - ள்)

குத்துப்பட்ட இரணத்தில் இரத்தக் கள்ளியைக் குடைந்து அதிலிருந்து சொட்டும் நீரைப் (அதாவது பால்) போட்டுக் கொண்டுவந்தால் இரணம் (சதை வளர்ந்து) தூர்ந்துபோம். எலிமிச்சம்பழ ஒத்தடமும் விடாமல் கொடுத்துவரவும்.

3 வது நாள் முதல்

| | |
|---|---|
| ஓடுவிர் வேர் | சிறுபுள்ளடி |
| சிறுதம்பல வேர் | ஆமணக்கு வித்து |
| நன்னாரி வேர் | சிறிய ஏலக்காய் |
| இராம்பு | வேம்பாரம்பட்டை |
| மருது | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவப்படுத்திக் கொண்டு போட்டுவரவும்.

## புண்ணிற்கு மருந்துகள்

நிம்பநிலத்தைச் சொல்லுவது நிலத்தில்குமிழுந் துடரொடு
பங்காச்சலத்த மிழந்தோலு மிக்கதேவி தம்பலியுங் [வின்
கம்பிப்பிசினி லரைத்தேகொள் கைப்புமதுரம் வேம்பாட



லம்புமுதலாய் வெடியுண்டை யாறுமிவையோ ரெண்ணெய்
செய்யே (8)

வல்லாயுதங்கள் பட்டவரை மலங்காய முடம்புலர்ந்தால்
சொல்லும் நிம்ப மதின்றேலைச் சுடவே தண்ணீரதிலூறி
மெல்ல வித்திவெச்சென்ன விடவேயிடித்துக் குளிப்பாட்ட
நல்லதாகுமென்று சொன்னார் நயந்தேயுரைத்த படியாமே (9)

(இ - ள்)

| | |
|---|---|
| நிலக்குமிழ் வேர் | துடரி (இண்டு வேர்) |
| ஓடுவித்தோல் | தம்பலம்ப் பூச்சி |
| கம்பிப்பிசின் | அதிமதுரம் |
| வேம்பாடம் பட்டை | |

இவைகளை இடித்து எண்ணெயில் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்து

2. ஆயுதங்கள் பட்டகாயம் ஏற்பட்டு அதனால் உடம்பு மெலிந்தால், வேப்பம்பட்டையை நசுக்கி வெந்நீர் ஊற்றி ஊறவைத்துக் குளிப்பாட்டவும்.

## புண்களின் லக்ஷணங்கள்

புண்ணும்வெளுத்து நீர்மிருந்து போதக்குத்துவலி யிருந்தால்
உண்மைப்படவே செங்கலங்கள் கொள்ளாதிருக்கி லூன்
செய்யும்
திண்மைப்படவே செங்கலங்கல் மிரத்தமாகிற் றீராது
நன்னிக்கீழாய்ச் சீழ்விழுந்து பின்னை நனைக்குஞ் செம்புண்ணே
(10)

(இ - ள்)

புண் வாய் வெளுத்து அதிலிருந்து நீர்கசிந்து, குத்து வலி இருந்து சிவப்பு சதை வளராமலிருந்தால் புண்கள் தூர்ந்து ஆறிப்போம். சிவப்புச்சதை அதிகமாக வளர்ந்தால் புண்கள் ஆறாமல் சீழ் பொசியும்.

A siddhadreams ebook

## வாதகரப்பான் லக்ஷணங்கள்

வீங்குங்குத்தி மிகவுழையும் விடாமல் திமிர்த்து வீங்கிநிற்கும்
மாங்கப் புண்ணிற் சலம்விழுந்தா லதுவுந் தினவுஞ் சென்றி
செய்யில்
நீங்கிச் செவ்வே தீராது நெடுநாட்படவே மசகிநிற்கும்
தேங்கச்சுட்டுப் புகைத்துவிடத் தீரும் வாதக்கரப்பனதே (11)

(இ - ள்)

உடலில் வீக்கம் உண்டாகும். வலியேற்படும். உடலில் மதமதப்பும் உண்டாகும். அரிப்பு ஏற்படும். காட்பட்டுக் குணமுண்டாகும்.

புகைபிடித்தால்தான் தீரும்.

## வாதக்கரப்பான் லக்ஷணங்கள்

தொந்துதான் களத்துமிக்க நோவுடைப் புண்கள் தன்னில்
வந்துவல் லாயுதங்கள் வடுவற தைத்திடத்தில்
சந்துதாழ் மொழிபெருத்தவ சைவுதானங்களாகிற்
வந்துதான் தொடுக்குஞ்சேதி வாதமாங் கரப்பனுமே (12)

(இ - ள்)

அதிகவலியுடன் கூடிய புண்களிலும், ஆயுதங்களினுல் தாக்கப்பட்டுத் தையல் போட்டவிடங்களிலும், மூட்டு முதலான அசையும் இடங்களிலும், விரணங்கள் உண்டானுல் அது வாதக்கரப்பான் குறிகளாகும்.

## வாதக்கரப்பானுக்குத் தைலம்

ஆவிரை கொன்றை தூதுளை நிலவேம்
பூாயிடும் குமிழின்வே



ராகிய மதுரம் சிவனர்வேம்புடன்
குரைகருஞ் சூரை
மேவிரை நாயுரு வினன்னரி
யிலவெள்வேர் வெள்ளுள்ளி வேம்பாடல்
மிளகுடன் மஞ்சள் சென்னகரைத்தோல்
மேவிடு கோஷ்டமுடன்
பாவிரைசாதிக் காய்க்கடுதானி
நெல்லிபரவிடு சமனகப்
பாகமு நேகரை நீரதுகொண்டு
பதமெண் ணெயதில்
நீவிரை காயிடு மெழுகே கைகொள்
பூதம்நேரிடு புண்ணிவிட
நீளியமேலு மூறிடவுட்கொள்
நேகிட வாதக் கரப்பனதே (13)

(இ - ள்)

| | |
|---|---|
| ஆவாரை | கொன்றைவேர் |
| தூதுவேளை | நிலவேம்பு |
| குமிழம் வேர் | அதிமதுரம் |
| சிவனர் வேம்பு | சூரைவேர் |
| கருஞ்சூரை | நாயுருவி |
| நன்னரி வேர் | வெள்வேலம் வேர் |
| வெள்ளுள்ளி | வேம்பாரம்பட்டை |
| மிளகு | மஞ்சள் |
| சன்னலவங்கப்பட்டை | கோஷ்டம் |
| சாதிக்காய் | கடுக்காய் |
| தான்றிக்காய் | நெல்லிவற்றல் |

இவைகளை வகைக்கு 1 விராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் விட்டு ஊற வைத்து நன்றுகவரைத்துக் கொண்டுச் சுத்தமான நல்லெண்ணெய் 8 சேர் விட்டு அதனுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

A siddhadreams ebook

இத்தைலத்தைப் புண்களில்விடவும். உடம்பிற்கும் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும்.

## வாதகரப்பானுக்கு வேது

புங்கிலை கழற்சிலை குதிரைவாலி புளியிலையும் பொடுதலையும்
குறிஞ்சிகூட
தெங்கிலையும் பருத்தி பாவட்டைதான்றி திரையுமுள்ள கட
விராஞ்சி பூனைக்காலி
பங்கடவே பாண்டமிட்டு வேதுகாய்ச்சு பருத்தவுடல் தனில்
விட நோவுந்தீரும்
பொங்குமுடல் வடிவாகும் கரப்பான்வாதம் போக்கிவிடுங்
கண் காணப் புவியோர்செய்து
இங்குநல மாகவே பண்ணுவோர்க்கு மிதமாகும் வாதகரப்
பனுமே (14)

(இ - ள்)

| | |
|---|---|
| புங்கம் இலை | கழற்சியிலை |
| மூதியார் கூந்தல் | புளியிலை |
| பொடுதலை | குறிஞ்சாவிலை |
| தென்னம்ஓலை | பருத்தியிலை |
| பாவட்டை | தான்றியிலை |
| கடலிராஞ்சிப்பட்டை | பூனைக்காலிவித்து |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வைத்துக் கொண்டு 8 மடங்கு தண்ணீர் விட்டுக் கஷாயமாகச் செய்து, உடலில் விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்யவும். வீங்கிய உடலும் வற்றும். கரப்பான் நீர், வாதம் முதலானவை தீரும்.

## செங்கதாரி எண்ணெய்

இதமான செங்கதா ரிவேர்கள்ளி
யிடுகுநன் னாரிவேர் துராயின்வேர் கொண்டு



நிதமாக முருங்கைப்பட்டை வெள்ளுள்ளி
நேராய்வசம்பு சமன் கொண்டரைத்துப்
பதமாக வெண்ணெய் தன்னோடெரித்துப்
பரித்துமே விட்டருந்து நீவென்ன
விதமாய் வருகின்ற வாதகரப்பான்
விஷமற்று மாறும் நிசமுத்ததாமே (15)

(இ - ள்)

| | |
|---|---|
| செங்கதாரிவேர் | கள்ளிவேர் |
| நன்னாரிவேர் | துராவேர் |
| முருங்கைப்பட்டை | பூண்டு |
| வசம்பு | |

இவைகளை சமனெடுத்து (வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து)த் தண்ணீர் விட்டு நன்றாகவரைத்துச் சுத்தமான நல்லெண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் 1 காசெடை வீதமெடுத்து உட்கொள்ளவும். வாதகரப்பான், விஷங்கள் முதலானவை தீரும்.

## சொறிகரப்பான் குறிகள்

போதச்சிரமே வறண்டுமிகப் பொருந்துமிளைக்க விடுவதெனில்
மோதப்பத்திச் சொரிந்திருக்கும் மூக்கால்நீருஞ் விழவேண்டுஞ்
சேதப்படவே பித்தமிகச் செய்யுங் குணங்கள் சீரெட்டுங்
காதத்துடத்தின் வாய்மிடறு சொறியிற்கண்ட கரப்பனிதே (16)

(இ - ள்)

தலை வறண்டு, உடல் இளைக்கும். உடலில் அரிப்பு ஏற்படும். மூக்கிலிருந்து நீர் கழியும். பித்தம் அதிகரிக்கும்.

இவைகள் சொறிகரப்பானின் குணங்களாகும்.

A siddhadreams ebook

## வறட்சிக் கரப்பான் குறிகள்

கால்தலை யுடம்பதெங்கும் கனக்கவே சிறுசிறங்காய்
சேலது கடிதுவத்தித் தினவுடன் சொறிவதாகிச்
சாலவே காதுநாசி மிடறுதான் தாதாதாகில்
மால்தரும் மடந்தை மாதே! வறட்சிசேர் கரப்பானுமே (17)

(இ - ள்)

கால், தலை, உடல் முதலான உறுப்புக்களில் பாரமுண்டாகிச் சிறு சிறு சிறங்குகள் தோன்றும். அது மிகுந்த வேதனையைத் தந்து அரிப்பையுண்டாக்கும். காது, நாசி, மிடறு முதலான இடங்களிலும் பரவும்.

இது வறட்சிக் கரப்பானின் இலட்சணங்களாகும்.

## கரப்பானுக்குப் புங்கெண்ணெய்

புங்கங்கொட்டை பசுமஞ்சள் புதியவெள்ளைப் பாஷாணம்
மங்குச்சொன்னேம் வேம்பாடலவுரிச்சாறு நல்லெண்
ணெய்
பங்கப்படவே சொறியாமல் பதத்தில் வடித்து மேல்பூசத்
தங்கிப் பின்னேர் தான்வெய்யத் தண்ணீர்தனைக்குளி
தறுகாதே (18)

(இ - ள்)

புங்கங்கொட்டை பசுமஞ்சள்
வெள்ளைப்பாஷாணம் வேம்பாடம்பட்டை

இவைகளைச் சமனெடுத்து (1 பலம்) அவுரிச்சாறு விட்டு நன்றாக அரைத்து அவுரிச்சாறு, நல்லெண்ணெய் இவ்விரண்டும் வகைக்கு 5 சேர் எடுத்து ஒன்றாகக் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயை உடம்பில் பூசிக் கொண்டு உஷ்ண ஜலத்தில் ஸ்னானஞ் செய்யவும்.



## சிலேத்ம கரப்பான் குறிகள்

அய்யிற்கண்ட கரப்பானழிந்த புண்ணுந் தினவாகி
மெய்யும்மேனி வெப்பங்கு குரலுங் கம்முங் குற்றிருமும்
நைய்யும் புண்ணுறிவிடு (தருவல்) தலமா முடலே நடு
நடுங்கும்
தொய்யு முடலைத்துவைத்ததுபோல் சொல்லீர் சேத்துமக்
கரப்பனிதே (19)

(இ - ள்)

கபக்கரப்பானில் உடலில் புண்கள் ஏற்பட்டு, அரிப்பெடுக்கும். தேகத்தில் சூடு அதிகரிக்கும். குரல் கம்மும் குத்திருமல் ஏற்படும். நாற்றமெடுக்கும். உடல் நடுங்கும்.

## கபக்கரப்பானுக்கு வெருகன் கிழங்கெண்ணெய்

வெருகங்கிழங்கு பிரண்டைவேர் மிக்கப்பருத்தித் தன்சாறு
வருவேம்பாடல் வெள்ளுள்ளி வசம்பு பூதக்கரப்பானுடன்
பெருமாவலிங்கைப் பட்டைச்சத்து பின்கருஞ்சீரத்தெண்ணெ
யுந்தான்
மருவாய் கெத்தந்துரிசத்து வளமாமய்யின் கரப்பனிதே (20)

(இ - ள்)

வெருகன் கிழங்குச் சாறு
பிரண்டை வேர் சாறு
பருத்தியிலைச்சாறு

இவைகளை யொன்று கலந்து.

வேம்பாடம் பட்டை பூண்டு
வசம்பு பூதக்கரப்பான்
மாவலிங்கைப்பட்டை கருஞ்சீரகம் [பட்டை



A siddhadreams ebook

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து நன்றாக அரைத்து, நல்லெண்ணெயும் 5 சேர் விட்டு ஒன்றாகக் குழப்பியடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கிவைத்துக் கொண்டு, சுத்திசெய்த கெந்தகத்தையும், துரிசையும் அதில் பொடித்துப் போட்டுத் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும். கபக்கரப்பான்கள் தீரும்.

## சூலை, புண்ணிற்குக் "குறுவை மாவு"

கருங்குறுவை பொரிமாவில் சூதங்கா
    சிடைகொள்க முற்சியிலை துளசியிலைகூட
வருஞ்சீர கங்கருஞ் சீரகஞ்சூரைப்பட்
    டை மருவு வெற்றிலை நாலு
வருத்தியி டித்துப்பின் வெருகடியவ்வளவு வெந்நீர்
    கொள்வீர் புளிதவிர வேறுமதுகண்டீர்
கருங்குமது சூலைப்புண் வாதபித்தக் கரப்பான்
    தொக்கு மெய்யின் கரப்பானேகிடுமே. (21)

(செ - ம்)

கருங்குறுவை யரிசியை வறுத்து மாவாக்கி அதில் சுத்திசெய்த பாதரஸம் 1 காசெடை எடுத்து நன்றாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| கழற்சிலை | துளசியிலை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சூரைப்பட்டை | வெற்றிலை |

இவைகளை வகைக்கு காசெடை யெடுத்து இடித்து மாவுடன் குழப்பி ஒரு வெருகடியளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

**பத்தியம் :**

புளியை நீக்கவும்.



சூலைப்புண், வாதபித்தக் கரப்பான், கபக்கரப்பான் முதலானவை நீங்கும்.

## விரணங்களுக்கு "வேலம்பட்டை யெண்ணெய்"

வெள்வேலம் பட்டைகருங் காலிவைர
    மிக்கபலம் பத்தாகவே
தள்ளாத வேர்க்கொம்பு மவ்வளவும் கூட
    நகத்துநீர் தூணிவிட்டுச்
சாரமது நானாழி இளநீர்மட்டைச்
    சாறு நானாழிகூட்டிக்
கொள்ளாத எண்ணெய் நா னாழியதுகூட்டிக்
    கூடவேதுவர்ச்சிகைச்சிறு தேக்குத்
தாரம்குளிர் மதியினுப்பு மஞ்சள்
    துள்ளாத ஏலம் வசம்புபெருங்காயமிவை
காய்ச்சித் தோணவே கொப்பளிக்கப்பல
    விரணம் துடராது பின்னகலுமே (22)

(செ - ம்)

வெள்வேலம் பட்டை    கருங்காலிவைரம்

இவ்விரண்டும் வகைக்கு 10 பலம்

சுக்கு 10 பலம்

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால்சுத்த ஜலம் விட்டு, 4 நாழியாகும் வரை வற்றவைக்கவும். இதனுடன் இளநீரின் மட்டையை யிடித்துப் பிழிந்த சாறு

4 படியும் சேர்த்து நல்லெண்ணெயும் 4 படி விட்டு ஒன்று கலந்து

A siddhadreams ebook

| | |
|---|---|
| பிஞ்சுக் கடுக்காய் | சிறுதேக்கு |
| இந்துப்பு | மஞ்சள் |
| ஏலக்காய் | வசம்பு |
| பெருங்காயம் | |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து இடித்து, சாறுகலந்த எண்ணெயுடன் கலக்கி அடுப்பின் மீதேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டி மேலேபூசிக் கொண்டு ஸ்நானம் செய்யவும். இதனையே, வாயிலிட்டுக் கொப்பளிக்கலாம்.

பற்பல விரணங்களுந் தீரும்.

## விரணங்களுக்கு இலவங்கப்பட்டை யெண்ணெய்

இலவங்கப்பட்டை முருங்கைவேர் புங்கம்வேர்
இவை வகைபலங்கள் பத்து
இருதூணி நீர்விட்டு நாலிலொன்றாக
இசையவே காய்ச்சி வாங்கி
நல்கின்ற பங்கம்பாளை வேர்விழலரிசி
நல்லேலங் கச்சோலமும்
நாரிலவங்கந் திரிபலை திரிகடுகு
நற்காய மிந்துப்புமே
பலமான சிறுதேக்கு யவட்சாரவிழலரிசி
பேர்முத்தமஞ்சள் மதுரம்
பேரான சீரகமோமமொடு தாரம்
பெருகதாற் கழஞ்சு கூட்டி
விலகான இளநீர் மட்டைச் சாறுநாழி
வெள்ளாட்டுப் பாலுமளவு
மிக்கப்படி காய்ச்சி வாயில்விடுகொப்புளி
விரணங்க டுப்பாறுமே (23)



(இ - ள்)

| | |
|---|---|
| இலவங்கப்பட்டை | முருங்கைவேர் |
| புங்கம் வேர் | |

இவைகள் வகைக்கு 10 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, அடுப்பின்மேலேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சவும்.

இதனுடன்

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளை வேர் | |
| ஏலக்காய் | விழலரிசி |
| கிராம்பு | பூலாங்கிழங்கு |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| சுக்கு | கடுக்காய்த்தோல் |
| மிளகு | திப்பிலி |
| இந்துப்பு | பெருங்காயம் |
| யவச்சாரம் | சிறுதேக்கு |
| மஞ்சள் | அதிமதுரம் |
| சீரகம் | பெருங்கோரைக்கிழங்கு |
| தேவதாரம் | ஓமம் |

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு (½ பலம்) வீதமெடுத்து இளநீரின் மட்டைச்சாற்றினால் அரைத்து,

| | |
|---|---|
| இளநீர்மட்டைச்சாறு | 16 படி |
| வெள்ளாட்டுப் பால் | ,, |

சுத்தமான நல்லெண்ணெய் 16 படியும் விட்டு ஒன்று கலந்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவத்தி லிறக்கி வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை வாயில் விட்டுக் கொப்பளித்தால் வாய் விரணங்களாறும். உடலில் தேய்த்து ஸ்நானம் செய்தால் உடல் புண்கள், கடுப்பு முதலானவை தீரும்.

A siddhadreams ebook

## பல் அசைவிற்கு மருந்து

மருக்காரை வேர்மருதந் தோல்கிட்டங்
கடுக்காய் கருங் காவிகைப்பூ — நறுக்கி
நாவிலொன்றுய்க் காய்ச்சி நாலுநாள் கொப்பளிக்கப்
பாலன் பல்லாம் விருத்தன் பல் (24)

(இ - ள்)

| | |
|---|---|
| மருக்காரை வேர் | மருதந்தோல் |
| கிட்டம் | கடுக்காய்த்தோல் |
| கருங்காலிச் சத்து | |

இவைகளை சரிஎடை இடித்து, அடுப்பின் மேலேற்றி காவிலொன்றாக வற்ற வைத்து நான்கு நாட்கள் வாய்க் கொப்பளிக்கவும். பற்களின் அசைவு நீங்கும்.

## கரப்பானுக்குக் "கார்போகு எண்ணெய்"

கார்போகம் நீரெட்டி கஸ்தூரி மஞ்சள்
கடியரஸ கெந்தக கருஞ்சீரகமும்
நீர்மேவு தேங்காயின் பால்கூட்டி யரைத்து
நேராக நல்லெண்ணெய் பாகமுடனெரித்து
ஏரான இவ்வெண்ணெய் உடல் மீதிலிட்டு
இறங்கப் பொழுதொடு அரப்பொடு குளித்தால்
வாராது சொறிகளது சீராகுமானே
வண்பான புளிகசப்பாகாது தானே (25)

(இ - ள்)

| | |
|---|---|
| கார்போகவரிசி | நீரெட்டி (சீரடிமுத்து) |
| கஸ்தூரி மஞ்சள் | சுத்திசெய்த பாதரஸம் |
| சுத்திசெய்த கந்தகம் (½ பலம்) | |
| கருஞ்சீரகம் | |



இவைகளைச் சரி எடையெடுத்துத் தேங்காய்ப்பால் விட்டரைத்து, நல்லெண்ணெயுடன் (5 சேர்) குழப்பிப் பதத்தில் காய்ச்சி வடிக்கவும். இந்த எண்ணெயை உடம்பில் தேய்த்துக் கொண்டு ஒரு நாள் முழுவதும் ஊறிச் சாயங்காலம் அரப்புத் தேய்த்துக் குளித்தால் சொறி, சிரங்குகள், தீரும். புளி, கசப்புப் பதார்த்தங் களை நீக்கவும்.

## கரப்பானுக்கு "வில்வப்பத்திரி எண்ணெய்"

வில்லையிலை வெத்திலைசின் னியிலைபுங்கு
விதமான குப்பைமேனி யிலையின்னுஞ்
சொல்லரிய நாவல்பட் டையாதன்டை
துவரான ஓதியம்பட் டையுட்சாறு
நல்லமுட் கழக்கொடிலை யுடனுட்சாறு
குழிவகை நேராக யெண்ணெயொரு நாழி
வெல்லவே ஏலமிலவங்க மிதனோடு
மீறுசத குப்பையுடன் ரோகணியுமாமே (26)
ஆசியதோ ரமிஞ்சில்வேர் பூதகரப்பன்
தோலாக வெடைசரிகொண்டு பாகமிதனோடு
வேகவிடு எண்ணெய்வடி மெழுகுபதமாக
வீறுதலைதான் முழுக வேகிவிடும்நோவு
வாகினிய கபாலவினை தீருமது கரப்பான்
வாதமொடு பித்தகரப் பானும்போக
பாகினிய வெண்ணெய்க்கு நேர்புளியு மாகா
பத்தியங் கசப்புவிடு சுத்தமிதுதானே (27)

(இ - ள்)

| | |
|---|---|
| வில்வ இலைச் சாறு | சின்னியிலைச் சாறு |
| புங்கன் இலைச் ,, | குப்பைமேனியிலைச் [சாறு |
| நாகப்பட்டைச் சாறு | |

A siddhadreams ebook

ஆதண்டைச்சாறு ஒதியம்பட்டைச் சாறு
கழற்சிக்கொடியிலைச்சாறு

இவைகள் வகைக்கு 1 படி.

சுத்தமான நல்லெண்ணெய் 1 படி.

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| சதகுப்பை | கடுகரோகிணி |
| அழிஞ்சில் வேர் | பூதகரப்பான் பட்டை |

இவைகளைச் சரியெடை யெடுத்து இடித்துத் தூள் செய்து போட்டு ஒன்றாக்க் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்த எண்ணெயினுல் தலைமுழுகிவர, கபாலநோய், கரப்பான் புண், வாதக்கரப்பான், பித்தக்கரப்பான் முதலானவை நீங்கும்.

புளி, கைப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

## மண்டைக் கரப்பான் குறிகள்

சிரஸில் வலிக்கு மயிற்காலிற் சிறங்கா யழிஞ்ச புண்ணாகும்
பரவிச்செவியில் சீழ்பாயும் பக்கக்கழுத்தடி கண்டுகட்டும்
விரசங்கொண்டு வேதனையும் மிகவும் பிடரித்தலைநோகும்
வர சேயரிந்த குழல் மடவீர்! மண்டைக்கரப்பான்
குணந்தானே (28)

(கு - ம்)

தலைவலி ஏற்படும். மயிர்கால்கள் தோறும் சிறங்குகளாகிப் புண்ணாகும். காதிலிருந்து சீழ்வடியும். பக்கங்கள், கழுத்தின் அடிபாகம் முதலான பாகங்களில் கண்டுகண்டான வீக்கம் உண்டாகும். வேதனை யதிகரிக்கும். பிடரி, தலை முதலான இடங்களில் வலிஏற்படும். இவை மண்டைக்கரப்பானின் குறிகளாகும்.



## சிறங்கிற்குச் "சங்கங்குப்பி எண்ணெய்"

குணஞ்சேர் சங்கங்குப்பியிலை குப்பைமேனி பேய்ப்பீர்க்கு
மணஞ்சேர் நொச்சிச் சித்திரப்பா லவரை மருவுந்துளசியிலை
பிணஞ்சேர் கள்ளியவுரியிலை இசையாப்பேயின் திமிட்டியுடன்
திணஞ்சேர் சாறுவகையுழக்கு நேராமெண்ணெய் யாமணக்கே
(29)

ஆமாமணக்கும் வெட்டிவே ரதிய கிராம்பு விழலரிசி
தாமாங் கோட்டம் துரிசுதுத்தம் சாரும் வளாகில் காரமுடன்
மாமங்காக மரிவித்து அரைத்துக் கரைத்து எரித்திறக்கில்
வேமாம் வெத்திலை யரிந்திட்டு விதமாய் சிவந்தல்
சிருங்குவிடுமே (30)

(கு - ம்)

| | |
|---|---|
| சங்கங்குப்பியிலை | குப்பைமேனி |
| பேய்ப்பீர்க்கு | நொச்சியிலை |
| அம்மான் பச்சரிசி | துளசியிலை |
| கள்ளியிலை | அவுரியிலை |
| பேய்த்துமிட்டியிலை | |

இவைகளின் சாறுகள் வகைக்கு 1 உழக்கு

ஆமணக்கெண்ணெய் 10 உழக்கும் சேர்த்து ஒன்று கலந்து

| | |
|---|---|
| ஆமணக்கம்விதை | வெட்டிவேர் |
| கிராம்பு | விழலரிசி |
| கோஷ்டம் | துரிசு |
| துத்தம் | அகில்கட்டை |
| காக்கைக்கொல்லிவிதை | |
| வெங்காரம் | |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து இடித்து அந்த எண்ணெயுடனே போட்டுத்துழாவி எரித்துப்



A siddhadreams ebook

பதத்தில் இறக்கவும். எண்ணெய் சூடாக இருக்கும் போது இரண்டு அல்லது 3 வெற்றிலையை அரிந்து போட்டுச் சிவந்தவுடன் எடுத்துவிடவும். இந்த எண்ணெயை உள்ளுக்கும் கொடுத்து மேலும் பூசச்சிரங்குகள் நீங்கும்.

## கரப்பானுக்கு நொச்சியெண்ணெய்

மேவிடுகரு நொச்சி நாயுருவி வெள்ளருகுங் கோழியவரையிலை
பாவிடு செருப்படி பொடுதலையும் பாருங்கோடக சாலையுடன்
காவில் காட்டு மல்லிகையும் காதிமணத்தக்காளியிலை
தாவிடு வகைக்கோ ருழக்காகச் சாறுகளுடனே கொள்வாயே
(31)

சாறுகளுடனு மவுரிப்பிராய் சங்கம்வேருங் கரிசாலை
தேறுள வெருகின் கிழங்கப்பை செம்முள் ளிகருஞ்சூரை
கூறுள காக்கணங்குறுகும்......கீரை முடக்கொத்தான்
மாறுள கீழா நெல்லியுடன் வகைக்கோர் சமனும்வேர்
கொண்டே (32)

கொண்ட கருஞ்சீரகம் வசம்பு குலவுமேலமி லவங்கம்
கண்டபூதக் கரப்பனுடன் கடியமிளகு சதகுப்பை
பண்டங் கோட்டந் திப்பிலியும் பாளமல்லிவேம்பாடல்
துண்டக்கிராம்பு வெள்ளுள்ளி சுகமாய்ச் சரி கொண்ட
ரைப்பாயே (33)

அரைத்துக் கரைத்துச் சித்தாமணக்கி னெண்ணெய் தனைப்
புகட்டி
விரைத்துக் காய்ச்சி வடித்தெண்ணெய் மேலும்பூசி யுட்கொள்ள
சிரத்தில் கரப்பான் மேனிதனிற் செங்கரப்பான ரிகரப்பான்
நிரைத்து வீங்கும் கரப்பான் விதம் நீங்கு தென்றும்
முனிதாமே (34)

(இ - ள்)

| | |
|---|---|
| கருநொச்சிச்சாறு | நாயுருவிச்சாறு |
| வெள்ளருகு | கோழியவரையிலை |



| | |
|---|---|
| செருப்படி | பொடுதலை |
| மணித்தக்காளி | கோடகசாலை |

இவைகளின் சாறுவகைகள் 1 உழக்கு

| | |
|---|---|
| அவுரி | பிராய் |
| சங்கம் வேர் | கரிசாலை |
| வெருகங்கிழங்கு | அப்பக்கிழங்கு |
| செம்முள்ளி | கருஞ்சூரை |
| காக்கணம் வேர் | குறுகு |
| முடக்கொத்தான் | கீழாநெல்லி வேர் |

இவைகளின் வேர் சமனெடை (வகைக்கு 1 பலம்)

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | வசம்பு |
| ஏலக்காய் | இலவங்கம் |
| பூதகரப்பான் பட்டை | மிளகு |
| சதகுப்பை | கோஷ்டம் |
| திப்பிலி | பேராமல்லி |
| வேம்பாடம் பட்டை | கிராம்பு |
| வெள்ளைப்பூண்டு | |

இவைகளும் வகைக்கு 1 பலம் எடுத்து எல்லாவற்றையும் இடித்துச் சூரணஞ்செய்து, சாறுகளுடன் சேர்த்து, சிற்றாமணக்கெண்ணெய் 10 உழக்கு சேர்த்துக் காய்ச்சிப் பக்குவத்திலிறக்கவும். இந்த எண்ணெயை உடலில் பூசிக்கொண்டு, உள்ளுக்கும் சாப்பிடவும். கரப்பான், செங்கரப்பான், அரிகரப்பான், வீங்குகரப்பான் முதலானவை தீரும்.

## கரப்பானுக்குத் "தண்ணீர் விட்டான் எண்ணெய்"

நீர்வள்ளி வேப்பிலைபசு மஞ்சள் நீண்ட புங்கின் பாலுடனே
வாசீர் வகைக்குச் சாறுழக்கு மறுகும் மஞ்சள் மரமஞ்சள்

A siddhadreams ebook

பாரீர் நாரி மஞ்சிட்டிப் பகரும் கடுக்காயு மரோகணியுந்
தாரீர் கம்பிப்பிசின் துத்தம் நாளேசித் தெண்ணெ தனைப்
பூசே (35)

(இ - ள்)

| | |
|---|---|
| நீர்வள்ளிக்கிழங்கு (தண்ணீர் விட்டான்) | வேப்பிலை |
| பசுமஞ்சள் | புங்கம்பால் |

இவைகளின் சாறு வகைக்கு 1 உழக்கு

| | |
|---|---|
| மஞ்சள் | மரமஞ்சள் |
| நன்னாரிவேர் | மஞ்சிஷ்டிக்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | கடுகரோகிணி |
| கம்பிப்பிசின் | துத்தம் |

இவைகள் வகைக்கு 1 வராகன் எடை வீதமெடுத்து இடித்து முன்சொல்லிய சாற்றுடன் குழப்பிச் சித்தாமணக்கெண்ணெய் 4 உழக்கு விட்டு ஒன்றாக்கிக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். இத்தைலத்தை மேலே பூசச் சிரங்குகள் நீங்கும்.

## மண்டைக் கரப்பானுக்கு உள்ளியாமணக்கெண்ணெய்

வெங்காயுள்ளி வசம்புடனே வெளுத்தைப்பிசினி கல்நண்டு
நங்காரெள்ளி னெண்ணெயுடன் நறுக்கியெருக்கம்
பழுப்புடனே
பொங்காதெரித்துக் காதிலிடப் பொறுக்குந்திளவு
நீர்ப்பாய்ச்சல்
மங்காதிதனைப் பிறப்பூச மண்டைக் கரப்பான் மான்றிடுமே
(36)



(இ - ள்)

| | |
|---|---|
| வெங்காயம் | வசம்பு |
| வெளுச்சைப்பசின் | நண்டுக்கல் |

இவைகளை இடித்து, (1 பலம்) நல்லெண்ணெய் 1 சேருடன் குழப்பி, அதில் எருக்கம்பழுப்பு ஒன்றை யிட்டுப் பொங்காமல் எரித்து வைத்துக் கொள்ளவும். இதனைக்காதுகளில் இட்டுவரவும். அரிப்பு, நீர்வடிதல், மண்டைக்கரப்பான் முதலியவை தீரும்.

## சீமூதாதி எண்ணெய்

சீமூதாதி யெண்ணெயது தேவைப்பேய்பீர்க்கி லையெருக்குந்
தீமூளுத்தா மணிவேப்பில் சிறந்த இலைக்கள்ளி புளிமடலி
தாமூர்சேரும் பசுமஞ்சள் தக்காளிகரி சாலங் கருநொச்சி
ஆமூதாரு ரவில்துவைத்த சாறுவை யொடுழக்கா மதிவாமே.
(37)

அரிதா ரமனேசிலை கார்போக மரிசிசேவகன் பூடுநெய்தல்
முரிதாமுத்தக் காசுதுத்த மிளகுதிப்பிலி கெந்தகமும்
பெரிதாளுகப் பூமாஞ்சில் பிதிமாப் பச்சிலை கச்சோல
முரிதாளு சூடன் நல்லெண்ணெ யுடனெரிப் பூசிக் குளிப்
பதுவே (38)

(இ - ள்)

| | |
|---|---|
| பேய்ப்பீர்க்கன் இலை | எருக்கிலை |
| உத்தாமணியிலை | வேப்பிலை |
| இலைக்கள்ளி | புளிமடலி (புளியாரை) |
| பசுமஞ்சள் | தக்காளி |
| கரிசாரங்கண்ணி | கருநொச்சி |

இவைகளின் சாறு வகைகள் வகைக்கு 1 உழக்கு எடுத்து ஒன்று கலந்து

A siddhadreams ebook

| | |
|---|---|
| அரிதாரம் | மனோசிலை |
| கார்போகவரிசி | சேவகனார்பூண்டு |
| நெய்தல் | கோரைக்கிழங்கு |
| துத்தம் | மிளகு |
| திப்பிலி | கெந்தகம் |
| சிறுநாகப்பூ | சடாமாஞ்சில் |
| பச்சிலை | கச்சோலம் |
| கூடம் | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து ஒன்று செய்து பொடி செய்து மூன்சாற்றுடன் சேர்த்து நல்லெண்ணெய் 10 உழக்கும் கூடவிட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு, உடம்பில் தேய்த்துக் குளிக்கவும். சொறி சிரங்குகள் நீங்கும்.

## வறட்சிக் கரப்பான் குறிகள்

வார் சொல்லரிந்து வசங்காதே வரட்சிக்கரப்பான் வகைகேளீர்
ஊறுஞ் சொறிதான் பரபரத்து யுடம்புமிகவே பதைப்புண்டாய்
தீரு மிருந்து பரந்தேறுந்திதமாய் சாம்பல் மொருக்கேரு
மாறு மொருவற் குண்டெண்ணில் சடாய்ப் புலால்மேல்
நாறுவதே (39)

(கு - ள்)

உடம்பில் சொறி ஏற்பட்டு உடம்பில் பீறி உண்டாகும். உடம்பில் சாம்பல் நிறமுள்ள பொருக்குகள் ஏற்படும். தேகத்தில் புலால் நாற்றமும் நாறும்.



## சிரங்கிற்குத் "தண்ணீர்விட்டான் எண்ணெய்"

தண்ணீர்விட்டான் கிழங்கின்சாறு தழைத்தப் பருத்தியிலைச்
சாறு
வண்மைக் கரிசாலஞ்சாறுவரிக் குமரிமடல்சோறு நாழியதாய்
உண்மைக்குரிய தூதலையுற் றேனுலுப லமென்று
நன்னியபடியே கஷாயத்தில் நன்றாயூறப்போடுவதே (40)

ஊறிப்பிழிந்து வடித்தெடுத் தோஞ்சு ரெண்டாய்க் காய்ந்த
பின்னை
யாறிப்போ முன்னைவதிலெண்ணே யடுக்காய் நாழியுரிவிட்டுக்
கூறிப் பெரிய சிவந்ததொரு கொடிவேலி கருஞ்சீரகம்
வேம்பாடல்
வேறக் கூட்டவேண்டாமே எட்டே கழஞ்சுமிது கொள்ளே
(41)

(கு - ள்)

| | |
|---|---|
| தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| பருத்தியிலைச்சாறு | 1 படி |
| கரிசாலங்கண்ணிச்சாறு | 1 படி |
| சோற்றுக்கற்றாழைச்சாறு | 1 படி |
| 4 பலம் வேரைக்காய்ச்சி எடுத்த ஆதுவேளைவேர்க் கஷாயம் | 1 படி |

இவைகளை யொன்று சேர்த்து, அடுப்பின் மேலேற்றி ஐந்தில் 2 மடங்காகும்வரை வற்றக்காய்ச்சி அதனுடன் சுத்தமான எள்ளெண்ணெய் $1\frac{1}{2}$ படி விட்டு ஒன்று கலந்து சிவப்புக் கொடிவேலிவேர், கருஞ்சீரகம், வேம்பாடம்பட்டை இவைகளை வகைக்கு 8 கழஞ்சு வீதமெடுத்துத் தூள் செய்து போட்டுப்பதத்தில் எரித்து இறக்கி வைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

## சிறங்குகளுக்கெண்ணெய்

மஞ்சள் மிளகு கெந்தகத்தை மதிக்கப் பொடிசெய் தெடுத்து
வந்து
ஊமத்தங்காய்க் குள்வைத்து உதிராமற்கட்டியு மிக்காந்தல்
வெந்தே மிஞ்சுமுழக்கெண் ணெயில் வெந்து விடியக்காலமேபூசி
அஞ்சவேண் டாஞ் சிறங்குக்கு ஆருச்சிரங்கு மாறிடுமே (42)

(தி - ள்)

மஞ்சள் மிளகு
நெல்லிக்காய்க்கந்தகம்

இவைகளை யொரு கல்வத்திலிட்டு நன்றாகவரைத்து ஊமத்தங்காய்களைக் கொண்டுவந்து பிளந்து விதைகளை நீக்கி, அதற்குள் முன் மருந்தைத் தானே இட்டு, மருந்து வெளியே சிந்திவிடாமல் கட்டி உமிக்காந்தலில் வேக வைக்கவும். நன்றாக வெந்தபின் எடுத்து நன்றாக அரைத்து ஒரு உழக்கு நல்லெண்ணெயுடன் குழப்பி உடம்பின் மேல் பூசிக்கொண்டு ஸ்நானம் செய்யவும். ஆறாதசிரங்குகளும் ஆறும்.

## சிறங்கிற்கு மருந்து

எருக்கம் பாலோ டெரிமிளகு இவைதான் புளித்த மோருடனே
கருக்கியரைத்து மேல்பூசிக் கடிகாஞ்சொறியுந் தழுதாழையும்
கருக்கி யுலர்ந்து பொருக்கெழுந்து கடுகத்தீருங் கண்டறிது
நெருக்கி நின்ற தேசத்தீர் நில்லாதாகிற் சொல்லேனே (43)

(தி - ள்)

எருக்கம்பாலுடன் மிளகு கூட்டிப் புளித்தமோர் விட்டு நன்றாகவரைத்து உடம்பின்மேல் பூசிக்கொண்டு



நன்றாக ஊறி ஸ்நானஞ்செய்யவும். சிறங்குகள் நீங்கும்.

2. காஞ்சொறி வேரையும் தழுதாழை யிலையையும் முன்மாதிரியே மோர் விட்டரைத்து ஸ்நானஞ்செய்தா லும் சிறங்குகள் பொருக்குத்தட்டிக் குணம் உண்டா கும்.

## கரப்பானுக்கு மருந்து

காந்திடு பெருமரத்திற் கண்டங்கத் திரியுஞ்சுக்குஞ்
சுரந்திடு செங்கத்தாரி தோன்றுசீ ரகமிரண்டு
பரந்திடு கடுகுரோகிணி பகர்சங்கு மரத்தை கூட்டி
நிரந்தர மிதனைக் கொள்ள நீங்கிடுங் கரப்பன்றானே (44)

(தி - ள்)

| | |
|---|---|
| பெருமரப்பட்டை | கண்டங்கத்திரிவேர் |
| சுக்கு | செங்கதாரிப்பட்டை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கடுகரோகிணி | சங்கம்வேர் |
| சிற்றரத்தை | |

இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு மூவிரல் கொள்ளுமளவு சூரண மெடுத்துச் சுத்த ஜலத்துடன் உட்கொள்ளவும். கரப் பான்கள் நீங்கும்.

## குஷ்டத்திற்கு எண்ணெய்

கள்ளிப்பா லெருக்கம்பாலுங்கரி சாலைநிம்பம்
மெள்ளப் பாசாவின்மூத்திரம் விடுநல்லெண்ணெய் நாழி



A siddhadreams ebook

வள்ளக்காஞ் சிரத்தின்பூவும் வாகைப்பூச் சட்டிவேரி
தள்ளக்கெந் தகமஞ் சுப்புநாபிதானது குஷ்டம்போமே (45)

(இ - ள்)

கள்ளிப்பால் எருக்கம்பால்
கரிசாலைச்சாறு வேப்பிலைச்சாறு
பசுவின் மூத்திரம்

இவைகள் வகைக்கு 1 படி

நல்லெண்ணெய் 1 படி

இவைகளை யொன்று கலந்து எட்டிப்பூ, வாகைப்பூ, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெல்லிக்காய் கெந்தகம், இந்துப்பு, கடலுப்பு, வளையலுப்பு, உழமண், கரியுப்பு, சுத்தியான காபி இவைகளையும் சமனெடுத்து அரைத்து விழுதாக்கிச் சாறுகூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு.

உள்ளுக்கு 1 காசெடை கொடுத்து. மேலுக்கும் பூசக் குஷ்ட ரோகங்கள் தீரும்.

## குஷ்டங்களுக்கு "நீரடிமுத்து வடகம்"

நீரெட்டிப் பலந்தானுநு நெய்யைவார்த்தரைத்துப் பின்னைப்
பொருத்தயிரதத் தோரெட்டுப் பொருந்துகெந் தகமுங் கூட்டிப்
பாருத்த பலமோரொன்று பகரில்மண் டலந்தான் கொள்ளச்
சீருத்த குஷ்டரோகஞ் சிறந்திடு புண்கள் போமே (46)

(இ - ள்)

நீரடிமுத்து பலம் 4 எடுத்து நெய்விட்டரைத்து இடித்து வைத்துக் கொள்ளவும். பாதரஸம் 8 பலம்



சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் 1 பலம் இவ்விரண்டையும் ஒரு கல்வத்திலிட்டு நன்றாகவரைத்துக் கஜ்ஜலி செய்து முன்சொன்ன தூளையும் போட்டு நன்றாக அரைத்து வைத்துக் கொண்டு தினம் 1 பலம் விதம் எடுத்து உட்கொண்டுவரப் பலவகையான குஷ்டங்களும் தீரும். புண்களும் ஆறும்.

## புண்களுக்குப் பிளாஸ்திரி

துரிசு வெள்ளைப் பாஷாணம் துய்யக்கல்லுச் சுட்டபொடி
பெரியமெத் தியதோர் முட்பூலா விலைச்சாறுதனைப் பறணி செய்து
சரியொத் தளவிலே யொவ்வொன்று தப்பா தொக்கப் பொடியிட்டு
விரிபோல் முத்து புண்களவை வெருவச்சீலை தனிற்போடே (47)

(இ - ள்)

சுத்தி செய்த துருசு
வெள்ளைப் பாஷாணம்
மாவுக்கல் சுட்டப்பொடி

இவைகளைச் சரியெடை யெடுத்து முட்பூலா விலைச் சாறுவிட்டு நன்றாவரைத்துக் குழம்பாக்கி ஒரு துணியில் தடவி புண்களில் இடவும். புண்கள் ஆறும்.

## காமாலை நிதானம்

வாத காமாலை குணங் கேளும் வயிறதை பொருமு மலமிறுகும்
போதவீங்கு முடம்பெல்லாம் புறங்கால் முகமுந் தானதைக்குஞ்
மேதுஞ் செய்ய வொட்டாது மினைக்குங் கடுக்கு முடம்பெல்லாம்
காதும் வீங்குங் கண்சிவக்கும் கனக்கப் பசிக்க வொட்டாதே (1)

A siddhadreams ebook

(இ - ள்)

வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல், உடம்பு வீக்கம், புறங்கால், முகம் முதலான விடங்களில் அதைப்பு, முதலான குறிகள் காணும். வேலைகளைச் செய்ய முடியாது. உடம்பு இளைத்துப்போம். கடுப்பு வலி உண்டாகும். காதில் வீக்கமேற்படும். கண் சிவக்கும். பசி இராது. இவைகள் வாதகாமாலைக் குறிகளாகும்.

## பித்த காமாலைக் குணம்

ஒட்டாது பயித்திய காமாலை உடம்பை யுலர்த்தி முறக்கமில்லை
யிட்டப் படுக்கைதனைவிட்டு ஏதுஞ்செய்ய வொட்டாது
திட்டமுடனே வயுறாதும் செரியாக் குணம்போல் வயிறிழியும்
நட்டமான விழிவெளுக்கும் நடக்கவிருக்க விளைப்பாமே (2)

(இ - ள்)

உடம்பு வற்றிப்போதும். படுக்கையை விட்டு எழுந்திருக்க வியலாது. தூக்கமும் வாராது. வயிறு ஊதிப்போம். சாப்பிட்ட ஆகாரம் சீரணமாகாது. வயிற்றுப் போக்கு உண்டாகும். விழி வெளுத்துப் போம். நடக்கக்கூட சக்தியில்லாதபடி தேகம் இளைத்துப்போம்.

## சேத்தும காமாலை லக்ஷணம்

ஆமேசேத்தும காமாலை அழற்றுமுடம்பை அறிவழிக்கும்
தாமேயிருமல் தலைநடுக்கும் தலையுமுகமும் வேர்வுவரும்
தீமை செய்யும் நடக்குவொட்டாச் செருக்கும் பாக்குத்
தின்னக்கால்
நாமத் தளரும் விழிபசிக்குந் நடுங்கு நெஞ்சுத் தன்னோமே (3)



(இ - ள்)

உடலில் அழற்சி ஏற்படும். அறிவு தடுமாறும். இருமல் உண்டாகும். தலை நடுக்கல், தலை, முகம் முதலான அங்கங்களில் வியர்வை முதலான குறிகள் ஏற்படும். நடக்க வியலாது. பாக்கைத் தின்பான். விழிகள் பசுமை நிறமாகும். நெஞ்சுவலியும் உண்டாகும். இவைகள் சேத்தும காமாலைக் குறிகளாகும்.

## பித்த வாத காமாலைக் குறிகள்

மேலேபித்த வாதகாமாலை வீங்கும் வயற்றில் பசியில்லைக்
காலுமுகமுந் தான் வீங்குங் கடுகிநடந்தால் மேலிளைப்பாம்
பாலைக்கூட்டில் வயிறாதும் பருத்த விழியும் (வெளுத்துப்)
மஞ்சணிக்கும்
ஓலமிடவே கடுப்பெடுக்கும் வாந்திபண்ணும்புளித் தேக்கிடுமே
(4)

(இ - ள்)

வயிறு வீங்கும். பசியிராது. கால், முகம் இவைகள் வீங்கும். உடல் இளைத்துப்போம். பாலை உட்கொண்டால் வயிற்றுப் பொருமலுண்டாகும். விழிகள் பெருத்து மஞ்சள் நிறமடையும். கத்தும்படியாக உடல் வலியுண்டாகும். வாந்தி பண்ணும். புளித்த ஏப்பமும் அடிக்கடி ஏற்படும். இவை பித்தவாத காமாலைக் குறிகள்.

## வாதசிலேத்தம காமாலைக் குறிகள்

தேக்கிடு வாதசிலேத்ம காமாலை சீரணமாக வொட்டாது
மூக்குமுகமும் வியர்வெடுக்கு முடுகிவயிறுதான் பொருமும்

A siddhadreams ebook

நாக்குங் கண்ணும் வெளுத்திருக்கும் நடக்கில் மேலே
மூச்செரியும்
வீக்கமெடுக்கு முழியதனில் வீங்கு மிருமலுண்டாமே (5)

(இ - ள்)

சாப்பிட்டவாகாரம் ஜீரணமாகாது. மூக்கு, முகம் முதலான அங்கங்களில் வியர்வை சதா அரும்பும். வயிற்றுப் பொருமல் ஏற்படும். நாக்கு, கண்கள் இவ்விடங்கள் வெளுப்பாகும். நடக்கும்போது மேல் மூச்சு உண்டாகும். உடல் வீங்கும். இருமல் உண்டாகும். இவை "வாத கப காமாலை" இலக்ஷணங்களாம்.

## பித்தச் சிலேத்ம காமாலைக் குறிகள்

உண்டாம் பித்தசிலேத்ம காமாலை வாந்தியாகிச் செருமல்வரும்
வண்டார் குழல்மேல் மனசில்லை வயிறுகழியுந் தானமரும்
வுண்டாம் பாண்டுருவொண்ணுக்கும் உண்ட சோறுஞ்
சீரணியாக்
கண்டாலுடம்பு வெளுத்து வற்றும் கையுங் காலு மனலாமே
(6)

(இ - ள்)

வாந்தி எடுக்கும். நெஞ்செரிப்பு உண்டாகும். ஸ்திரீகளிடம் இச்சையிராது. வயிறு கழிச்சலேற்படும். சிறிது காலத்தில் தானே கிவர்த்தியாகும். இரத்தம் குறைந்து சோகை யுண்டாகும். சாப்பிட்ட ஆகாரம் ஜீரணியாது. உடம்பு வெளுத்து, இளைக்கும். கை கால்களில் சூடு அதிகமிருக்கும். இவை பித்தச் சிலேத்ம காமாலைக்குறிகளாகும்.



## சந்நிபாதக் காமாலை லக்ஷணங்கள்

ஆமேதானு மூவகையு மடுத்த காமாலை யழன்றெரித்த சந்து
தாமேயுலையு மிருமலுமாய் தண்ணீர் தவிக்குங் கடுப்பெய்தும்
போமே வருமே வீக்கமுந்தான் புளிக்கும் நெஞ்சில் நான்
பசிக்கும்
வேமே குளிருஞ் சோபைவரும் வியர்க்கும் வயிறு வீங்கிடுமே
(7)

(இ - ள்)

உடலில் வெப்பம் அதிகரிக்கும். மூட்டுகளில் குத்து வலியுண்டாகும். இருமல் உண்டாகும். தண்ணீர்த் தாகம் ஏற்படும். உடலில் கடுப்புவலி எடுக்கும். உடலில் வீக்கம். சிற்சில சமயங்களில் அதிகரிக்கும், சிற்சில சமயங்களில் வடியும். வாயில் புளிப்புச்சுவையுண்டாகும். நன்றாக பசியெடுக்கும். குளிர், வியர்வை, வயிறு வீக்கம் முதலான குறிகளும் காணும்.

## சோகைக் காமாலைக் குறிகள்

வீங்குஞ் சோகைக் காமாலை வியர்க்கும் வயிறு பசியாது
தாங்கும் வெய்யிற் காய்விக்கும் சுவரில் மண்ணுஞ் சாம்ப
லுண்ணும்
வாங்கி டுமிளைப் பாகிவரும் வழியும் நடக்கவொட்டாது
ஏங்கு கிளைக்கு மலஞ்சிறுக்கு மிரத்த நிறமாய் நீர்விடுமே (8)

(இ - ள்)

உடல் வீங்கும். வியர்வை அரும்பும். வயிற்றில் பசியிராது. வெய்யிலில் உட்கார இதமாக இருக்கும். சுவரிலுள்ள மண், சாம்பல் இவைகளை யுண்பான். உடல் இளைக்கும். நீண்டதூரம் நடக்க முடியாது. உடல் வாட்டமுறும். மலச்சிக்கலேற்படும். சிறுநீர்

A siddhadreams ebook

கருப்பஞ்சாறு நாலுபடி களத்தயின்சி முத்திரிகை
பெருத்தயின்சி யிலாமிச்க மிருவேலி பெரிய தாமரையின்
முல்லை
முருத்த முத்தம் நன்னாரி முதிர் சிதேவி கடைச்சரக்கு
மிருத்து மேல மிலவங்க மினிய மதுரங் கோஷ்டமுடன் (14)

கற்கட சிங்கி யிந்துப்பு மசமோதகமும் வேர்க்கொம்புடனே
அத்திச் திப்பிலி கருஞ்சீரக மானசீரகம் கிராம்பு சாதிக்காய்
தற்பர வசுவாசி நாகப்பூ சாத்தப் பெரிய திரிகடுகு நெல்லி
வற்கிடு தானி சென்பகப்பூ மரியதக்கோல மாஞ்சிலுமே (15)

மஞ்சிட்டிப் பச்சிலை கச்சோல மருவியோரொன் திருகழஞ்சு
மிஞ்சிட்டப் பசுவின்பால் விட்டு விரையவரைத்துக் கலக்கி
யதில்
கொஞ்சி வடித்து மேல்பூசிக் கொள்ளீருள்ளுங் கொடியபித்த
மிஞ்சிட்ட பாண்டு காமாலை மிகையாம்ரோகம் போய்விடுமே
(16)

(3 - ம்)

| | |
|---|---|
| விலப்பனைக் கிழங்குச்சாறு | |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | |
| நெருஞ்சில் வேர் | நாணல் |
| தாதுனைப்பூ | முருங்கை வேர் |
| வெள்ளெரிக்காய்ச்சாறு | |
| விலக்குமிழ் | சித்தாமுட்டி |
| கீழாநெல்லி | சிறுகீரைச்சாறு |
| பாலைவேர்ச்சாறு | பூனைக்காலி வேர் |
| காட்டுமல்லிகைச்சாறு | |

இதனுள் சாறு வகைகளைத் தனித்தனியே ஒருசேர் வீதம் எடுத்து வைத்துக்கொள்ளவும். பாக்கிக் கடைச் சரக்குகளைத் தனித்தனியே 4 பலங்கள் வீதம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 மரக்கால் சுத்தஜலமும், சிறிது பாலும் விட்டு அடுப்பின்மேலேற்றி, எரித்து எட்டிலொன்றாக வற்ற வைத்துக் கொள்ளவும்.



இதனுடன்

மொந்தன் வாழைக் கிழங்குச் சாறு 2 படியும்
கருப்பஞ்சாறு 4 படியும்

சேர்த்து,

| | |
|---|---|
| இஞ்சி | திராக்ஷைப்பழம் |
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| தாமரை மொட்டு | கோரைக் கிழங்கு |
| நன்னாரிவேர் | சிதேவிச் செங்கழுநீர் |
| ஏலக்காய் | லவங்கப்பத்திரி |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| கற்கடசிங்கி | இந்துப்பு |
| ஓமம் | சுக்கு |
| யானைத் திப்பிலி | கருஞ்சீரகம் |
| சீரகம் | கிராம்பு |
| சாதிக்காய் | வேங்கை வேர் |
| சிறுநாகப்பூ | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| நெல்லி வற்றல் | தான்றிக்காய் |
| செண்பகப்பூ | தக்கோலம் |
| சடாமாஞ்சில் | மஞ்சிஷ்டி |
| பச்சிலை | கச்சோரம் |

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (2½ வராகனெடை) வீதம் எடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து, முன் சாறுடன் விட்டுச் சுத்தமான நல்லெண்ணெய் 15 சேரும் விட்டு, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து உட்கொள்ளவும். இத்தைலத்தை உள்ளுக்குஞ் சாப்பிட்டு, மேலேயும் பூசிக்கொள்ளப் பல வகைப் பித்தங்களும், பாண்டு, காமாலை, முதலான ரோகங்களும் தீரும்.

A siddhadreams ebook

இரத்தம்போல் சிவந்து இறங்கும். இவை சோகைக் காமாலைக் குறிகளாகும்.

## இதுவுமது

விழுமே நீருமஞ்சளுமாய் வீங்கு முகமுங் காலுடனே
யழுமே கண்ணு மஞ்சணிக்கு மசனமிறங்க வொட்டாது
முழுமேனி காயு மஞ்சணிக்கு முகமுங் வேர்க்குங்
காலேயுந்
தொழுமே சிவனைப் பலகாலுஞ் சொன்னேமிதனைச்
சொன்னேமே (9)

(இ - ள்)

சிறுநீர் மஞ்சளாக இறங்கும். முகம் வீங்கும். கால்களும் வீங்கும். கண்ணீர் வெளிவரும். கண்கள் மஞ்சள் நிறமாகும். சாப்பாடு இறங்காது. ஜ்வரமடிக்கும். முகம் மஞ்சள் நிறமாவதுடன், வியர்வையும் அரும்பும். கை கால்கள் ஓய்ந்துபோம்.

## காமாலையின் பொது லட்சணம்

முகமும் வீங்கிக் கண்வெளுத்து மூச்சு நடக்கில் முட்டதுவாய்
அகமுந் தடித்து நாவறண்டு அனுகுந்தாது கெட்டிருக்கும்
மிகவுமசனஞ் செல்லாது மேனி வறண்டு வெளுப்பேறுஞ்
செகமே சொன்னேங் காமாலை செய்யுங் குணங்க ளிவை
கண்டாய் (10)

(இ - ள்)

முகம் வீங்கும். கண்கள் வெளுத்துப் போம். மூச்சுத்திணறும். நாக்கு தடிப்பாகி, நாவறட்சியும் உண்டாகும். தாது க்ஷீணமுண்டாகும். சாப்பாடு உட்செல்லாது. உடல் வற்றும். வெளுப்பாகும். இவை காமாலையின் பொதுக் குறிகளாகும்.



## பித்த பாண்டுவின் லக்ஷணம்

இருமலே யிளைப்பு நெஞ்சி லிடிப்பது மிகவேயுண்டாய்
பெருகவே நடக்கும்போது பேச்சுமூச் செறிவதாகும்
வெருவுற கிறிகிறென்னும் மேனியும் வெளுத்துசந்தால்
பெருகிரு பித்தபாண்டு வெனப்பலப் பேசலாமே (11)

(இ - ள்)

இருமல், மேல்மூச்சு, நெஞ்சில் குத்துவலி, நடக்கும்போது பெருமூச்சு, தலைச்சுற்றல், உடல் வெளுத்துவிடுதல், அசதி, முதலான குறிகள் காணப்பட்டால் அவை "பித்த பாண்டு" ரோக லக்ஷணங்களாம்.

## பாண்டு, காமாலைகளுக்கு "நிலப்பனைக் கிழங்கு எண்ணெய்"

நிலப்பனைக் கிழங்கு நல்ல நீர்வள்ளிக் கிழங்கின் சாறும்
நலக்கனும் நெருஞ்சில் வேரும் நாணல்தூ தனைப்பூவும்
விலக்கிய முருங்கை வேரும் நல்லவெள்ளிரிக்காப் நீரும்
நிலக்குமிழ் சித்தமட்டி (கீழ்காய்நெல்லி) சிறுக்கீரை பாலை
வேர் சாறே (12)

காட்டுமல்லிகைப் பூனைக்காலியின் வேர் ஒருசேர்
நாட்டமாயொவ்வொன்று நாற்பல மிடித்துப் பாலுங்
கூட்டுபின் பதக்குத் தண்ணீர் மருபாதி யாகக்கொள்ள
வீட்டிய மொந்தன்வாழைக் கிழங்கிரு நாழித் தண்ணீர் (13)



A siddhadreams ebook

## அழல் காமாலைக்குக் கிருதம்

விடுமழலின் காமாலைக்கே மேவியெருமைப் பால்நாழி
கடுநெல்லி தானிமஞ்சள் கானகத்தின் வேம்பின் தோல்
நடுநிற்குஞ் சேவகன்பூடு நறுக்கி வேரொன் றிருகழஞ்
சரைத்து
கடுகாவி நெய்யிலது காய்ச்சி நக்கீரழல் போமே (17)

(இ - ள்)

எருமைப்பால் நாழி (5 சேர்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| மஞ்சள் | வேப்பம்பட்டை |
| நெல்லி வற்றல் | சேவகன் பூண்டு |

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (2¼ வராகனெடை) எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்துப் பசுவின் நெய் (5 சேருடன்) குழப்பி, அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சி வடிக்கட்டி வைத்துக் கொண்டு தினம் 1 ஸ்பூனளவெடுத்து 2 வேளை உட்கொள்ளவும். அழல் காமாலை நீங்கும்.

## சோகைக்குக் கீழாநெல்லி நெய்

கீழ்காய்நெல்லி மணித்தக்காளி கிளரும் பொன்னாங்கணிவேரும்
வேழ்நேர் சிறுக்கீரை நீர்ப்பூலா வேர்கள் சீந்தில் வட்டுடனே
நீழ்காவசம்பு வெள்ளுள்ளி நேரொத்தரைத்து நெய்கலந்து
தாழாதெரித்து நெய்கொள்ளத் தழலாஞ் சோகை யகன்றிடுமே
(18)

(இ - ள்)

| | |
|---|---|
| கீழாநெல்லி வேர் | மணித்தக்காளி வேர் |
| பொன்னாங்காணி வேர் | சிறுகீரை வேர் |



| | |
|---|---|
| நீர்ப்பூலா வேர் | சீந்தில்கொடி |
| வசம்பு | பூண்டு |

இவைகளைச் சமனெடுத்து (1 வராகன்) நன்றாக வரைத்து. பசுவின் நெய் 2½ சேருடன் கலந்து அடுப் பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி உட்கொள் ளவும். சோகைகள் தீரும்.

## காமாலைக்குப் புளியிலை நெய்

அகஞ்சேர் புளியிளிலைச்சா றுனகரிசாலங் கரும்புஞ் சாறுடனே
மிகவே நாழியுரிவகைக்கு வேப்பந் தோல் சீந்தில் வட்டிலா
மிச்சல்
தகத்தே திரிபலை மரமஞ்சள் தக்கோர் சிறுக்கீரை வேரோன்று
இகலாயரைத்து யெருமைநெய் நாழி யுரிதனில் வடித்துக்
கொள் காமாலையேகிடவே (19)

(இ - ள்)

| | |
|---|---|
| புளியிலைச்சாறு | கரிசாலங்கண்ணிச் [சாறு |
| கரும்பஞ்சாறு | |

இவைகள் வகைக்கு ½ படி

| | |
|---|---|
| வேப்பம்பட்டை | சீந்தில்கொடி |
| இலாமிச்சவேர் | கடுக்காய்த் தோல் |
| நெல்லி வற்றல் | தான்றித்தோல் |
| சிறுகீரை | |

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு (1¼ வராகனெடை) விதமெடுத்து டி ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக வரைத்து, எருமை நெய் ½ படியுடன் குழப்பி, அடுப்

A siddhadreams ebook

பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து வடிக்கட்டி உட்கொள்ளக் காமாலை நீங்கும்.

---

### ஊதுகாமாலைக்கு மருந்து

ஏகிடுமரப்பொடி கையாந்தகரை யிதனுடன்காட்டு மல்லிகை
யிலை
தேவிட வகை வகை நிம்மக்கா யளவே நேர்மை யுடனரைத்
தே
வாகுட நெய்யில் கூட்டிக்காய்ச்சி வருத்திடு கடுகு நெய்யும்
போசிடுமூது காமாலைதான் பொருந்தியே மருந் திதுவாமே
(20)

(இ - ள்)

இரும்புத் தூள் (சுத்திசெய்தது)
கையாந்தகரை காட்டுமல்லிகையிலை

இவைகளை வகைக்கு எலுமிச்சைப் பிரமாணம் எடுத்துப் பசுவின் நெய் 5 சேரில் குழப்பி யடுப்பின் மேலேற்றி எரித்துக் கடுகுடனே உட்கொள்ளவும். ஊதுகாமாலைகள் நீங்கும்.

---

### ஊதுகாமாலைக்கு "அயக்காந்தாதி குளிகை"

முருவிலி புளியிலை சங்கம்வேரிண்டு தண்டுடன் முத்தக்காசு
சடைச்சிவேர்
மருவிய சங்கங் குப்பியின்வேரு மாவிலங்கைவேர் தானும்
பொருந்திய கிட்டமிரும் புங்கூட்டிபுதுநீர் தூணியுடன்
தருமரைப்பொடி வெள்ளுள்ளி மிளகு கடுக்காய்சுக்கு
சமநிறைசெய்திடவே (21)

செய்திடு காந்தமிருகழஞ்சே ரொக்கச்சீலையிலுள் முடிந்தே
செலத்து டன்போட்டுக் காய்ச்சிக் குறுணிநீயனல் மீதூற



மெய்திய பொட்டண மருந்திதடுத் தரைத்துவிழு
தாமெனவரைத்
தேவிதமுளபாக் களவுண்டை செய்து வெய்யில் தனில்
காய்ந்தே
வெய்திய கஷாய நோத்துக்குரி வெச்சென வேயண்டையுடன்
மேவியரைத்துக் கரைத்துக் குடித்திடவிருதே ரந்தானெ
எய்திய வாதமூதுகா மாலையிதனுட பாண்டுருவு
இரைக்குமூச்சும் விக்கமு மாறுமென முனியருளியதே (22)

(இ - ள்)

முருவிலி புளியிலை
சங்கம் வேர் இண்டங்கொடி
கோரைக் கிழங்கு சடைச்சிவேர்
சங்கங்குப்பி வேர் மாவலிங்கை வேர்
கிட்டத்தூள் இரும்புத் தூள்

இவைகளை வகைக்கு பலம் 1 வீதமெடுத்து, ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின்மேல் வைத்து எட்டிலொன்றாக வற்ற வைத்துக் கொள்ளவும்.

சுத்திசெய்த அரப் பொடி
மிளகு பூண்டு
சுக்கு கடுக்காய்த்தோல்
சுத்திசெய்த கெந்தகம்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து நசுக்கி, ஒரு வெள்ளைச் சீலையில் முடிந்து, 1 மரக்கால் தண்ணீரில் போட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து, மருந்துகளை யெடுத்துக் கல்வத்திலிட்டு முன் சொன்ன கஷாயம் விட்டு நன்றாக வரைத்துப் பாக்களவுள்ள உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். இதனை வெய்யிலில் நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இந்த மாத்திரையிலொன்றை யெடுத்து முதலில் கூறப்பட்ட கஷாயத்துடன் தினமிருவேளை

A siddhadreams ebook

உட்கொள்ளவும். ஊதுகாமாலை, பாண்டு, மேல்மூச்சு, வீக்கம் முதலானவை நீங்கும்.

---

## காமாலைக்குப் "பச்சிலைக் கஷாயம்"

---

அருளிய புளியிலை பிரமிநீர்முள்ளி அரியநரிப்பயறு மதனுடன்
கீழ்கா நெல்லிவிட்டுணுக் கிராந்தி யளவாகக் கொண்டே
வருகரிசாலஞ் செம்மணலையும் மாமலைபுள் ளடியும்
வாகிடை நெருஞ்சில் நூதனைதகரை வகைவகை தழை
களுடன்
பருகிடுநீர்தான் தூணியும்விட்டுப் பார்சே ரெழும்கிச்சங்காய்
கடுநெல்லிபண்பாய்த் தகத்திடு
அருகிடு சீலையதனிற் சீரகமரைப் பலமதுகட்டியாகி
(ஊறியதில் ஆழாக்கு) [வெட்டொன்றுக்கி
கூட்டியன்னோரஞ் சீரகமரைத் துடனே கொடு மஞ்சள்
காமாலை யகன்றிடவே (23)

(கு - ம்)

| | |
|---|---|
| புளியிலை | பிரமியிலை |
| நீர்முள்ளி | நரிப்பயறு |
| கீழாநெல்லி | விஷ்ணுக்ராந்தி |
| கரிசாலங்கண்ணி | ஆவாரையிலை |
| சிறுபுள்ளடி | நெருஞ்சில் |
| அருகுவேலைவேர் | தகரை |

இவைகளின் தழைகளையெடுத்து நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டுக் கொள்ளவும். கடுக்காய்த் தோல் நெல்லிவற்றல் இவ்விரண்டும் சேர்த்து ஒரு எலுமிச்சையளவும், சீரகம் 1 பலமும் எடுத்து ஒரு துணியிலிட்டு முடிந்து, முன் பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை



வற்றவைக்கவும். இக்கஷாயம் 1 ஆழாக்கு எடுத்து சீரகத்தை யரைத்து அதனுடன் கலக்கி உட்கொள்ளவும்.

மஞ்சட்காமாலை தீரும்.

---

## காமாலைக்கு மருந்து

---

அன்ரிப்பிரண்டைக் கொழுந்துடன் கிட்டமரைப் பொடியு
மரியசுக்கு வசம்பு மிளகு வெள்ளுள்ளி
துன்ரித்தன்வு மைப்போலப் பாக்களவு கொண்டு
தான் தவிட்டில் புரட்டியிரு நேரமதுகொள்ள
தனித்தாவின் பால்கூட்ட வுப்புப்புளி தவிர
தாழ்த்திவிடுங் கண்பசுத்த காமாலைகண்டீர்
நுனிக்கொழுந்து கொடிக்கழலி விலையுள்ளிவசம்பு
நோயதாக நறுக்கண்ணில் பிழிர்துதப் போமே (24)

(கு - ம்)

பிரண்டைக் கொழுந்து
சுத்திசெய்த அரப் பொடி

| | |
|---|---|
| கிட்டத்தூள் | வசம்பு |
| சுக்கு | மிளகு |
| பூண்டு | |

இவைகளை வகைக்கு 1 பாக்களவெடுத்துக் கல்வத்திலிட்டு மைப்போல வரைத்துத் தவிட்டுடன் புறட்டித் தினம் 2 வேளை உட்கொள்ளவும். பசுவின் பால் வேண்டிய அளவு உட்கொள்ளவும். உப்பு, புளி தவிரவும்.

**கண்களில்விட மருந்து :** கழற்சிக் கொடியிலை, பூண்டு, வசம்பு இவைகளை நசுக்கி ஒரு வெள்ளைத் துணியில் முடிச்சாகக் கட்டிக் கண்களில் பிழியவும்.

காமாலை தீரும்.



A siddhadreams ebook

## புளியிலைக் குழம்பு

தூணிப் பதக்குப்பு ளியிலைத் துவைத்து வைத்துப்பானை
தனிவிட்டு
ஆணிக்கிட்டம் பலம்நூறு அதிலே மோர்விட் டூறியபின்
பேணிக்காய்ச்சி யறுநாழி பிழிந்து வடித்துப் பின்னதிலே
தோணி……………………உழக்கிட்டப் பொடியுழக்காமே (25)

உழத்ததுங் கொடிவே லிப்பிரந்தோலு முத்தாமணிவேர்
தூதனைவேர்
கழத்திற் சங்கின்வேர் புறந்தோல் கடுக்காய் முப்பது
மிளகுழக்கு
அழத்துஞ் சுக்குந் திப்பிலியிந்துப்பும் வகைகளதற்கு
நாற்கழஞ்சு
தழைத்தகரிப்பான் தன்சாற்றால் தானே தேகவரைப்பாயே
(26)

தேகவரைத்து தெய்யுரிய மெண்ணெ யுரியும் பால்நாழி
பாகமான தேங் காய்பா லும் நாழி கூடவிட்டு
வேகப்பண்ணிக் காந்தாமல் மிக்கப்பாகாய்த் தான்யுடம்
ஆகக்கழஞ்சு கொள்வீரா யகலும் பாண்டு சோகையுமே (27)

(இ - ள்)

புளியிலை 6 மரக்கால் கொண்டு வ ந் து இடித்துப் பானையிலிட்டு அதனுடன் கிட்டம் 100 பலத்தைப் பொடி செய்துச் சேர்த்து, மோ ர் 6 மரக்கால் விட்டு நன்றாக ஊறவைக்கவும்.

பின்னர்

இதனை அடுப்பின் மேலேற்றி எரித்து $1\frac{1}{2}$ மரக்கால் ஆகும்வரை வற்ற வைக்கவும். இக்கஷாயம் ஆறியபின் சக்கையைப் பிழிந்து எரிந்து விடவும்.

இதனுடன்



கிட்டப் பொடி 1 உழக்கு
கொடிவேலி வேர் பட்டை
உத்தாமணி வேர்　　ஆதுவேளை வேர்
சங்கம் வேர்ப் பட்டை

இவைகள் வகைக்கு 5 வராகனெடை

கடுக்காய்த் தோல் 30 (எண்ணிக்கையில்)
மிளகு　　1 உழக்கு
சுக்கு　　திப்பிலி
இந்துப்பு

இவைகள் வகைக்கு

5 வராகனெடையும் எடுத்துக் கரிசாலங்கண்ணிச் சாறு விட்டு நன்றாகவரைத்துக் கொள்ளவும். இதனை முன் சொல்லிய கஷாயத்தில் கலந்து கொண்டு,

சுத்தமான நெய் $\frac{1}{2}$ படி
,, நல்லெண்ணெய் $\frac{1}{2}$ ,,
,, பால் 1 ,,
தேங்காய்ப் பால் 1 ,,

இவைகளையுஞ் சே ர் த் து அடுப்பின் மேலேற்றிக் கந்தாமல் பாகுபோல் கிண்டி இறக்கி வைத்துக் கொள்ளவும்.

பின்னர்

இம்மருந்தை நெற்குவியலில் 40 நா ட் க ளு க் குப் புதைத்துவைத்து எடுத்துக் கொண்டு வேளைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை வீதம் உட்கொள்ளப்

பாண்டு ரோகம், சோகை முதலான நோய்கள் தீரும்.

A siddhadreams ebook

## காந்த பற்பம்

சோகைக்காம் காந்த மறுகழஞ்சம் சூதமாறு கழஞ்சுடனே
வாகை யரைப்பொடி யொருபலமும் வளமாமதுவே கூட்டியபின்
வேகைக் கரிப்பான் சாறதனில் மிகவும் மூன்றுநாளரைத்துப்
பாகத்துடனே கலப்புறத்தில் பத்திப் பகலவன் முன்வையே (28)

வைத்தே காய்த்து பின்னெடுத்து வாகையனேகப் பொடிசெய்து
உற்றே தேனிற் காசெடைகொள் ஊதுஞ்சோகைக் காமாலை
பித்த பாண்டு பீலிகையும் பெருத்த வயிறும் நீராமை
சத்தே வரட்கா மாலையுடன் தானேபோகு மானனேயே (29)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த காந்தம் | 9 வராகனெடை | |
| ,, சூதம் | 9 | ,, |
| ,, அரப் பொடி | 1 பலம் | |

இம்மூன்றையும் ஒரு கல்வத்திலிட்டுக் கரிசாலங் கண்ணிச்சாறு விட்டு, 3 நாட்கள் அரைத்து அந்த கல்வத்தில் ஒரு பக்கத்தில் அடையாகத் தட்டிவைத்து வெயிலில் வைக்கவும்.

நன்றாகக் காய்ந்த பின்னர் இதனைப் பொடிசெய்து வைத்துக் கொண்டு 1 வராகனெடை வீதம் (சூரணத்தை) யெடுத்துத் தேனில் உட்கொள்ளவும்.

ஊது காமாலை, சோகை, பித்த பாண்டு, பீலிகை, பெருவயிறு, நீராம்பல், வரட்காமாலை முதலான நோய்கள் தீரும்.



## பாண்டு, காமாலைக்குக் "கடுகு"

மாளேசீரக மிளகுசுக்கு வருகருஞ்சீரக மசமோதகந்
தானே வெள்ளுள்ளி அரப்பொடியுஞ் சாருங்கிட்டங் காந்தமுடன்
ஆளகடுக்கா யதுபத்து அளவாய் வகைக்கோர் பல மெடுத்துக்
கானக் கரிப்பான் சாற்றரைத்துக் கரைத்து குலாவுங் கண்மயிலே (30)

கரைத்தே காட்டு மல்லிகைச் சாறிரு நாழியும் காரெள் ளெண்ணெய் நாழியுடன்
நிரைத்தே கலந்து நீகாய்ச்சிரு நோந்தான் கொள் பாக்களவு
உரைத்தோம் பத்து நாள் கொண்டு உப்பு புளிப்புத் தவிர்த் திடவே
தீரத்தால் வந்த காமாலை தீரும் பாண்டு ஊதலுமே (31)

(இ - ள்)

| | |
|---|---|
| சீரகம் | மிளகு |
| சுக்கு | கருஞ்சீரகம் |
| ஓமம் | பூண்டு |
| அரப்பொடி | சுத்திசெய்த கிட்டம் |
| சுத்திசெய்த காந்தம் | கடுக்காய் [எண்ணிக்கையில் 10 |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக் கரிசாலங்கண்ணிச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் கொள்ளவும். பின்னர் காட்டுமல்லிகைச் சாறு 2 படி, சுத்தமான நல்லெண்ணெய் 1 படி இவைகளுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி, மெழுகுபதமாகக் காய்ச்சி இதனைக் கசண்டுடனே 1 பாக்களவு எடுத்துத் தினம் 2 வேளைகள் வீதம் 10 நாட்கள் வைத்துக் கொள்ளவும். உட்கொள்ளவும்.

A siddhadreams ebook

**பத்தியம் :**

உப்பு, புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

பாண்டு, காமாலை, வீக்கம் முதலானவை நீங்கும்.

---

## காமாலைக்குக் கிட்டாதி மருந்து

கிட்டமுங் காந்தம் பின்னைக் கௌரப் பொடி வெள்ளுள்ளி
சட்டமாங் காயம்ரோணி தருதிரி கடுகு மூலம்
திட்டமாந் திரிபலை கூட்டிச் சீரக மிரண்டு மல்லி
மட்டமாங் குப்பைமோமம் வளரித் தோரத்தை சேரே (32)

அறுபது பழச்சாறு நிம்பமதிலா பிரமிச்சாறுஞ்
சிறுபத மிஞ்சிச்சாறு சேர்த்துநீ யரைத்துக் கொண்டு
குறுபதங் காயவைத்துக் கொண்டிடத் தேனிற் போர்த்து
நறுபத பாண்டுரோகம் நயந்தகா மாலைபோமே (33)

**(இ - ள்)**

சுத்திசெய்த கிட்டம் சுத்திசெய்த காந்தம்
" அரப் பொடி

| | |
|---|---|
| பூண்டு | பெருங்காயம் |
| கடுகரோகிணி | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| திப்பிலி மூலம் | கடுக்காய்த் தோல் |
| நெல்லி வற்றல் | தான்றித் தோல் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கொத்துமல்லி விதை | சதகுப்பை |
| ஓமம் | இந்துப்பு |
| சித்தரத்தை | |



இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

பின்னர்

60 எலுமிச்சம் பழங்களின் சாறு, அதற்குச் சமன் பிரமிச் சாறு, இஞ்சிச் சாறு இவைகளையும் கூட்டி முன் மருந்தை யரைத்து வைத்துக் கொண்டு அடுப்பின் மேலேற்றி லேகியபதமாகும்வரை வற்ற வைத்து, ஆறிய பின் அதனுடன் தேன் சேர்த்துக் குழப்பி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளப் பாண்டுரோகம், காமாலை முதலான நோய்கள் தீரும்.

---

## வயறூதலுக்குக் " கீழாநெல்லி மருந்து "

கீழாநெல்லி வேர்கழஞ்சு கிளர்போற் கடுக்கா யிருகழஞ்சு
ஊனா மிளகு முக்கழஞ்சு கடுகப்புளித்த மோருடனே
தானாதுன்ன மனங்கழலுந் தழைத்தவயிறுந் தழைவாகும்
ஆழ்வாருண்ட திதுவென்று அரனாருளிச் செய்ததுவே (34)

**(இ - ள்)**

| | | |
|---|---|---|
| கீழாநெல்லி வேர் | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| கடுக்காய்த்தோல் | $2\frac{1}{2}$ | " |
| மிளகு | $3\frac{3}{4}$ | " |

இம்மூன்றையும் நன்றாகப் புளித்த மோருடன் அரைத்து உட்கொள்ள வயிறுப் பொருமல், உஷ்ணம் முதலானவை சாந்தமடையும்.

A siddhadreams ebook

## விக்கத்திற்கு முருவிலி மருந்து

முருவிலிமா மலைமுள்ளி தூதளே
வரிவரி மணலி நன்னரி கோவையோ
டுரியுரி யுரிய காடி கூட்டினர்
சுருசுரு மென்னச் சோபம் வாங்குமே (35)

(இ - ள்)

| | |
|---|---|
| முருங்கிலி வேர் | மலைப் பூண்டு |
| தூதுவேளை வேர் | மணலிக் கீரை |
| நன்னரி வேர் | கோவை |

இவைகளின் சாறுகள் வகைக்கு ½ படி

காடி ½ படி விட்டு

ஒன்று கலந்து உட்கொள்ள உடல் விக்கம் உடனே வற்றும்.

## விக்கத்திற்கு மருந்து

திணை தானிச்சங்கு கரை சிறுநெருஞ்சி விஞ்சி
மனத்தாளீர் முள்ளி மாமலையும் – கனத்துவரு
வெண்கார மென்பொடியாய் மேவுகுடிநீருந்த
கண்காண விக்கம் போம் காண் (36)

(இ - ள்)

| | |
|---|---|
| தான்றித் தோல் | இண்டு |
| சுக்கு | சிறுநெருஞ்சில் |
| இஞ்சி | நீர்முள்ளி |



இவைகளைச் சமமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ¼ ஆக வற்றக் காய்ச்சி வெங்காரத்தைப் பொடித்துப் போட்டு உட்கொள்ளவும்.

விக்கங்கள் தீரும்.

## விஷப்பாகத்தின் குறிகள்

வீங்கும் வற்றுமொருபக்கம் மேனிவறண்டு வெளுப்பிடுங்கண்
தூங்குந் தலையுங் கனத்துநிற்கும் துயரமிருந்து தாகிக்கும்
வாங்கிப் புசிக்கமாட்டாது வாய்வு உடலில் விஷம்போல
ஏங்கிச் சொல்லும் விஷப்பாக மிதுவே செய்யுங் குணமாமே (1)

(இ - ள்)

உடல் வீங்கும். பின்னர் தானுகக் குறையும். உடல் வரட்சியேற்படும். கண்கள் வெளுக்கும். தூக்கமுண்டாகும். தலை கனத்துப் போம். வருத்த மேற்படும். உணவை வாங்கி உட்கொள்ள மாட்டான். வாயு உடலில், விஷம்போல் ஏறும்.

இவை விஷப்பாகத்தின் குறிகளாகும்.

## உழலை எரிச்சலுக்குக் "கிருதம்"

குணமுடன் கழுதைப்பால் நாழி கோதைப்பால் நாழிமிக்க
மணமுள்ள செண்பகத் தாழைச்சாறு மருவிட நாழிகணச்
சுணையுள்ள வெள்ளரிக்காய் துலங்கிய சாறு நாழி
திணமுள அளநீர்நாழி நீளிய கரும்புச்சாறே (2)



A siddhadreams ebook

சாறதுநாழி தாமரைவேர் நன்னுடசாறு நாழி
சீறிடு சின்னிச்சாறு திருத்தவே நாழிசேற
வீறது பேய்ப்பாச் சோத்தி மிருந்ததோர் நாழிச்சாறு
கூறிடு ஆவின் நெய்யுங் கூட்டிடு நாழிதானே (3)

நாழிக்குக் கற்கமேலம் நல்லதிமதுரங் கொண்டு
மாழிக்கை தேகரைத்து வடித்துநெய் நிதமருந்த
நீழிக்க வந்தரோகம் முழுலேயும்மெரிவு மூச்சு
மாழிக்குக் கரைத்தகாய மதுவென விஷப்பாகமத்தே (4)

(இ - ம்)

கழுதைப்பால் நாழி முலைப்பால் நாழி
தாழைச்சாறு நாழி வெள்ளெரிக்காய்ச்
இளநீர் நாழி [சாறு நாழி
கருப்பஞ்சாறு நாழி சின்னிச்சாறு நாழி
பேய்ப்பாச்சோற்றிச் சாறு நாழி
பசுவின் நெய் நாழி தாமரைக்கிழங்குச்
சாறு நாழி

இவைகளை யொன்று கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு

ஏலக்காய் 1 பலம், அதிமதுரம் 1 பலம் எடுத்துத் தூளாக்கி ஏதேனும் ஒரு சாற்றை விட்டு நன்றாக வரைத்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொண்டு, தினம் 2 வேளை ஒவ்வொரு ஸ்பூனளவு வீதம் எடுத்து உட்கொள்ளத் தேக எரிச்சல், மேல் மூச்சு முதலானவை நீங்கும்.

## விஷபாகத்திற்குக் "கிருதம்"

மற்றதோர் சின்னியிலை கற்பூரவல்லி வட்டக்கிலுகிலுப்பை
கிரந்தி நாயகமுஞ்
சுற்றத்துடனடுக்குத் தும்பையிலை கொன்றுதும்பசங்கின்
குப்பியிலை யோடுமானே



சற்றத்திடு கோழியவரை சிற்றவரை சாறுதனியோரோன்றுரி
யானபோது
பற்றத்த சிற்றுமணக் கெண்ணெய் கொண்டு பாங்குடன்
கற்க மதுவுரைப்போமே (5)

உரைப்பா யழிஞ்சிவேர் சாறணையப்ப
உளர் வெருகு சித்திர மூலிவேருடன்
தரைப்பான நன்னாரி யீசுரமூலி
நற்சிறு குறிஞ்சிவே ரிருகழஞ் சென்ன
நிரைப்பாய் வருகருஞ் சீரகங் கிராம்பு
நீழ்தேவ தாரம் சதகுப்பைபூதக்
கரப்பா னுடன்வகு வாசிகஸ்தூரி
மஞ்சள்கடிய திப்பிலி யரத்தை கைக்கொள்ளே
(6)

கைக்கொண்டு கழுதைலத்திப்பால் பிழிந்து
கலந்தெண் ணெயுடனம்ம குந்தரைத்திட்டு
பிக்கொன்று மில்லாமல் காய்ச்சிப்பின் வடித்துப்
பலமான மனிதற்கு முக்கழஞ்சென்ன
மைக்கொண்டு கொள்ளு மேலெலெங்கும்
பூசுவிஷப் பாகமுற்ற கரப்பான் கிரந்தி
பக்கென்று போமேநீர் முள்ளிச்சாம்பல்
பற்று சிறுநீருட னெற்றுமுடல் பூச (7(

பூசவிடுகோவைத்தண்டுநீர்முள்ளி புகழ்சங்கு சாறணைநெருஞ்சி
தேசமுள்ள சின்னிபாடவரை பிரமிநீலியகரைக் கொடிதன்
னரிமாமலையுத்
தேசமுள்ள செங்கத்தாரி பொன்முசுட்டை சிறுகுறிஞ்சாவுடன்
வேம்பீர்க்கு முருங்கிலியு
மோசையுள்ள கிட்டமஞ்சள் திரிபலையுடன் காய்ந்துநீர்
கொள்ள விஷபாகம் விடவே (8)

A siddhadreams ebook

(இ-ம்)

(a). சின்னியிலை — கற்பூரவல்லி

| | |
|---|---|
| சின்னியிலை | கற்பூரவல்லி |
| வட்டக்கிலுகிலுப்பை | கிரந்தி நாயகன் |
| அடுக்குத்தும்பையிலை | சங்கங்குப்பி |
| கோழியாவரை | சிற்றவரை |

இவைகளின் சாறு வகைக்கு ½ படி

சிற்றாமணக் கெண்ணெய் 4 படி

இதனுடன்

| | |
|---|---|
| அழிஞ்சில் வேர் | சாறணை வேர் |
| வெருகங்கிழங்கு | சித்திரமூலம் |
| நன்னாரி வேர் | ஈச்வரமூலி |
| சிறுகுறிஞ்சா வேர் | |

முதலானவைகள் வகைக்கு 2½ வராகனெடை

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | கிராம்பு |
| தேவதாரம் | சதகுப்பை |
| பூதக்கரப்பான் பட்டை | லவங்கப்பத்திரி |
| கஸ்தூரி மஞ்சள் | திப்பிலி |
| சிற்றரத்தை | |

இவைகளும் வகைக்கு 2½ வராகனெடையள வெடுத்துக் கழுதை லெத்திச் சாறு பிழிந்து நன்றாக வரைத்துச் சாறு கலந்த எண்ணெயுடன் குழப்பி அடுப் பின்மேலேற்றி, நன்றாகக் காய்ச்சிப் பதத்தில் எரித்து வடித்துக் கொள்ளவும்.

நல்ல தேகக் கட்டுடைய மனிதர்களுக்கு இந்த எண் ணெய் 3½ வராகனெடை யெடுத்து, உள்ளுக்குக் கொடுத்து, மேலேயும் பூசவும்.



விஷபாகங்கள், கரப்பான், கிரந்தி முதலானவை தீரும்.

(b) நீர்முள்ளிச் செடியை எரித்துச் சாம்பலாக்கி உலகமறியாப் பிள்ளையின் சிறுநீர் விட்டுக் கரைத்து உடம்பில் பூசிக்கொள்ளவும்.

பின்னர்,

| | |
|---|---|
| கோவைத்தண்டு | நீர்முள்ளி |
| சங்கம் வேர் | சாறணைவேர் |
| நெருஞ்சி | சின்னி |
| அவரை | பிரமி |
| சுரைக்கொடி | நன்னாரி வேர் |
| செங்கத்தாரிப்பட்டை | பொன்முசட்டை |
| சிறுகுறிஞ்சா வேர் | கிட்டம் |
| முருங்கி | கடுக்காய்த்தோல் |
| மஞ்சள் | தான்றித்தோல் |
| நெல்லிவற்றல் | |

இவைகளைச் சமனெடை யெடுத்து ஒன்றிரண்டாக இடித்து வைத்துக் கொள்ளவும். இதில் 3 விரல்கொள் ளுமளவு சூரணம் எடுத்து, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்ற வைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும்.

விஷபாகங்கள் நீங்கும்.

A siddhadreams ebook

## சாறணைச் சூரணம்

சாறணைவேர் பால்தனிலே வேகவைத்துத்
தனிக்காய்ந்து வச்சிர காயம்பண்ணி
வேறுநல்ல மித்துப்பு வெல்லங் கூட்டி
மிகநெய்யில் குழப்பியது கூடக்கொள்ள
தேறுதலாம் அக்கினி மாந்தம் பாண்டுசேத்ம
மும்மகோ தரந்தீரும் பித்தரோகம்
மீறுதலா யிரத்தபித் தமுந்தீரும்
வியனுயத் திரிதோஷ சுரமுமாமே (1)

(கு - ள்)

சாறணை வேரைக் கொண்டு வந்து வெட்டிச் சுத்தமான பால் விட்டு நன்றாக ஊறவைத்து அடுப்பின் மேலேற்றி வேக வைக்கவும்.

பின்னர்

இதனைக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதற்குச் சரியளவு இந்துப்பும், வெல்லமும் கூட்டி, நெய் விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

அக்னிமாந்தம், பாண்டு, சிலேத்ம ரோகங்கள், மகோதரம், இன்னும் பித்த ரோகம், இரத்த பித்தம், சங்கிகள் முதலானவைகளும் தீரும்.

## மேகச்சுரத்திற்குத் திராட்சாதிச் சூரணம்

முந்திரிகைப் பேரீச்சு நெற்பொரி கிரும்பு
முதிரவே தேத்தாம்விரை தாமரை விரையுங்கூட்டி
சந்தனமுஞ் சீரகமுந் திப்பிலியுமேலம்
தருணுக மிலவங்கப் பத்திரிலாமிச்சு



பிந்திவிடு கொத்தமல்லி பற்படாகம் பேரு
சமனுக வச்சிரகாய மிகச்செய்து
சந்திவியசர்க் கரையில் தேனில் நெய்யில்
வருந்திவிடத் தாகமற்றி சுரமேக மாறுமென்றே (2)

என்ற தோரினித் ராட்சாதி லவங்கப்பத்திரி
குருவேர் சீரகம ரேணுகமும்
நின்ற நிலப்பனைக்கிழங்கு தண்ணீர் விட்டான்நெல்லி
யுடன்சாதிக்காய திமதுரமேலம்
கொண்ட நீர்தா மரைவிரைதற் கோலங்கூற
நெருஞ்சில்வேர் சந்தஞ்செஞ் சந்தனம் பற்பாடகம்
கன்றகலாக் குங்குமப்பூ கற்பூரஞ் சீந்தி
சர்க்கரை நற்சர்க்கரைத்தூள் காசிடையிரண்டு
(கொள்காச பித்தசய வறட்சி காணுதன்றே) (3)

(கு - ள்)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சம்பழம் |
| நெற்பொரி | கிராம்பு |
| தேத்தாங்கொட்டை | தாமரை விதை |
| சந்தனத்தூள் | சீரகம் |
| திப்பிலி | ஏலக்காய் |
| லவங்கபத்திரி | சிறுநாகப்பூ |
| இலாமிச்சம் வேர் | கொத்தமல்லி விதை |
| பற்பாடகம் | |

இவைகளைச் சமமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, சர்க்கரை, தேன், நெய் இவைகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்கச் சுரமேகம் தீரும்.

2.

| | |
|---|---|
| திராக்ஷைப் பழம் | லவங்கப்பத்திரி |
| வெட்டிவேர் | சீரகம் |
| அரேணுகம் | நிலப்பனங் கிழங்கு |
| தண்ணீர்விட்டான் கிழங் | |
| நெல்லி வற்றல் | க்காய் |

A siddhadreams ebook

| | |
|---|---|
| அதிமதுரம் | ஏலக்காய் |
| தாமரை விதை | தக்கோலம் |
| நெருஞ்சில் வேர் | சந்தனத்தூள் |
| செஞ்சந்தனத்தூள் | பற்பாடகம் |
| குங்குமப்பூ | பச்சைக்கற்பூரம் |
| சீந்தில் சர்க்கரை | |

இவைகளை சரிபெடை யெடுத்து, இடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இவைகளுக்குச் சமன் சர்க்கரையும் சேர்த்துத் தினம் 2 காசெடை வீதம் உட்கொண்டுவரப் பித்தக்ஷயம், வறட்சி, காசரோகங்கள் முதலானவை தீரும்.

## கர்ப்பூராதிச் சூரணம்

கர்ப்பூரந் தக்கோலஞ் சாதிக்காயில
வங்கயிலை கிராம்பு சுக்குஞ்
சொற்பெரிய மிளகுடன் செவ்வியமுங்கூடச்
சுகமாக வொவ்வொன்று விராகனெடை ஆகும்
மற்படிய தூளாக்கிச் சர்க்கரை தேனிற்கொள்ள
மாறிவிடுங் குன்மசயம் வருத்தாதென்ன
துற்பாவங் கர்ப்பூராதி சூரணத்தின் சேதி
சொன்னபடி செய்யமுனி சொல்லுகின்றாரே (4)

(இ - ள்)

| | |
|---|---|
| கர்ப்பூரம் | தக்கோலம் |
| சாதிக்காய் | இலவங்கப்பத்திரி |
| கிராம்பு | சுக்கு |
| மிளகு | செவ்வியம் |



இவைகளை வகைக்கு 6 வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இத்தூளைச் சர்க்கரையிலோ அல்லது தேனிலோ உட்கொள்ளவும்.

குன்மம், சயம் முதலான ரோய்கள் தீரும்.

## தக்கோலாதிச் சூரணம்

தக்கோலந் நான்கழஞ்சு கிராம்பு மொருகழஞ்சு
தன்னேல மொருகழஞ்சு திப்பிலி யிருகழஞ்சு
நற்கான சிறுதேக்கு நாற்கழஞ்சு சுக்கு
நலமான எண்கழஞ்சு மிளகுபத்துக் கழஞ்சாய்
முற்கானச் சூரணமாய்ச் சர்க்கரையும் கூட்டி
பாக்களவு முதிராதஇளவெந்நீர் முயன்றேகொள்ள
சிறகாது அரோசிகமும் வாயுச் சேற்றும
மிரைப்புச்சத்தி வாதபித்த மறுமே (5)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| தக்கோலம் | 1¼ | வராகன் |
| கிராம்பு | | ,, |
| ஏலக்காய் | | ,, |
| திப்பிலி | 2¼ | வராகனெடை |
| சிறுதேக்கு | 5 | வராகன் |
| சுக்கு | 10 | ,, |
| மிளகு | 12¼ | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து சரியளவு சர்க்கரை சேர்த்து ஒரு பாணையில் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு பாக்களவு எடுத்து வெதுவெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும்.



A siddhadreams ebook

அரோசகம், வாயு, கபம், இரைப்பு, வாந்தி, பித்தம் முதலானவை தீரும்.

## தாளீசாதிச் சூரணம்

தாளீச மொருகழஞ்சு மிளகு மிருகழஞ்சு
    தன்வேர்க்கொம்பு முக்கழஞ்சு திப்பிலிநாற்கழஞ்சு
வால்மிக காட்டெருமைப்பாலு மைங்கழஞ்சு
    வருகிராம் பாறுகழஞ் செடையதாகச்
சாலநீவச் சிரகாய மாய்ப்பண்ணிச் சர்க்க
    ரையுமுப்ப துகழஞ்சு நிறைசேர்த்து
மாலனையா வெருகடிப்பி ரமாணங் கொள்ளவரு
    சத்திவிரை வாதஞ் சுவாசகாசமுட் சுரபாண்டு
                                        மருந்தானே (6)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி | 1¼ | வராகனெடை |
| மிளகு | 2½ | ,, |
| சுக்கு | 3¾ | ,, |
| திப்பிலி | 5 | வராகன் |
| கூகைநீர் | 6¼ | ,, |
| கிராம்பு | 7½ | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து, சர்க்கரை 3¾ பலம் கூட்டி இடித்து வைத்துக் கொண்டு வேண்டும் போது ஒரு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும்.

வாந்தி, விரை வாதம், சுவாச காசம், உட்சுரம், பாண்டு, முதலான ரோகங்கள் தீரும்.



## கார்பாஸாஸ்தியாதிச் சூரணம்

பருத்தியின் விரையுமேலம் பகருந்திப் பிலியினோடு
வருத்திய பொடியோடன்றி வளருஞ்சர்க் கரையுங்கூட்டி
திருத்திய சூரணந்தான் சேர்ந்தகார் பாதியாகும்
பொருந்திய வாந்தி பித்தம் புகழரோ சகமும் போமே (7)

(இ - ள்)

பருத்திவிதை        ஏலக்காய்
திப்பிலி

இவைகளை வறுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து சரியளவு சர்க்கரை கூட்டி யுட்கொள்ள,

வாந்தி, பித்தம், அரோசகம் முதலானவை தீரும்.

## தவஸுரிச் சூரணம்

கற்கடசிங்கி கடுதானி நெல்லி கண்டங் கத்தரி வேர்
விரைதன்னோடு சுக்குடனே மிளகுதிப்பிலி யிந்துகோஷ்டம்
துரிதான சிறுதேக்கு சடாமாஞ்சில் தானுமொக்கவே அக்கிராக்
கிராம்புடனுள்ள தவட்சாரி சரிசூரணம் தினந்தேனில் [காரம்
கருவானி மெல்சயஞ் சுரமும்வாந்தி காணுதுவிட்டகலுங்
                    கிரந்தி யெலிகடியுந்தானே (8)

(இ - ள்)

கற்கடசிங்கி        கடுக்காய்த்தோல்
தான்றிக்தோல்        நெல்லிவற்றல்
கண்டங்கத்திரிவேர்        கண்டங்கத்திரிவிதை
சுக்கு        மிளகு
திப்பிலி        இந்துப்பு
கோஷ்டம்        சிறுதேக்கு

A siddhadreams ebook

| | |
|---|---|
| சடாமாஞ்சில் | அக்கிராக்காரம் |
| கிராம்பு | மூக்கிரட்டை |

இவைகளைச் சரியளவெடுத்து, இடித்து வஸ்திர காயஞ்செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளு மளவு எடுத்துத் தேனில் உட்கொள்ளச்

சயம், சுரம், வாந்தி, கிரந்தி, எலிகடி முதலான நோய்கள் தீரும்.

## "அரோசகம், பித்தத்திற்குக் கர்ப்பூராதிச் சூரணம்"

கற்பூரம் வெட்டிவேர் நற்சீரகந் தக்கோலங்
கற்கடசிங்கி யதிமதுரம் முத்தக்காசு
வற்கான நெல்லிமுள்ளி நவட்சாரி செவ்வியம்
வருமிலவங்கப்பட்டை பத்திரியும்
தற்கான வமுக்கிராச் சந்தனமுஞ் சுக்கு
தாமரை நிலப்பனைக் கிழங்கிலா மிச்சு
முற்கான சீந்திற் சர்க்கரை கற்பூரச் சாலது
மிளகு திப்பிலி சாதிக்காய் முறையாகக் கொள்ளே (9)

முறைதப்பா தொவ்வொன்று சரிகொண்டு சூரணாய்
மூட்டிய சர்க்கரை யவ்வளவு கொண்டு
நிறைகண்டு வெருகடி தேனிலது கொள்ள
நிமிருது வாந்திசய மந்திரதாகம் போம்
உரைகின்ற வரோசி பித்தபாண்டுடனே
ஒளித்து விடுரத்த பித்தமுதலன்ன
நிறைகொண்ட வேதமுனி செய்தவாகடத்தின்
தேர்ந்துவுரை தன்முறைகள் தெருவயிதற்கே (10)



(இ - ள்)

| | |
|---|---|
| கற்பூரம் | வெட்டிவேர் |
| சீரகம் | தக்கோலம் |
| கற்கடகசிங்கி | அதிமதுரம் |
| கோரைக்கிழங்கு | நெல்லிமுள்ளி |
| கூடைகீர் | செவ்வியம் |
| இலவங்கப்பட்டை | லவங்கப்பத்திரி |
| அமுக்கிராக்கிழங்கு | சந்தனத்தூள் |
| சுக்கு | தாமரைக்கிழங்கு |
| நிலப்பனங்கிழங்கு | இலாமிச்சம்வேர் |
| சீந்திற்சர்க்கரை | கர்ப்பூரசிலாசத்து |
| மிளகு | திப்பிலி |
| சாதிக்காய் | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு சரியளவு சர்க்கரையும் கூட்டி வைத் துக் கொள்ளவும். இதில் 3 விரல்கொள்ளுமளவு தூள் எடுத்துத் தேனிலுட்கொள்ளவும்.

வாந்தி, சயம், அந்திகதாகம், அரோசகம், பித்த பாண்டு, ரத்த பித்தம் முதலான ரோகங்கள் தீரும்.

## பித்தம், அக்கினி மாந்தத்திற்கு "ஏலாதிச் சூரணம்"

ஏலமொருகழஞ்சு மிலவங்கமிரண்டுடன் மினிநாகப்பூ
முக்கழஞ் சென்னனே
மாலனைய மிளகுநாற் கழஞ்சாக வருதிப் பிலியஞ்சு
சுக்காறு கழஞ்சாய்
செல்லியாய் கிராம்பேழு வச்சிரகா யமேபன்னி த்தனதில்
கழஞ்செடைகள் கொள்ளு மிருநேரம்
ஆலமெனும் வருகாச பித்தமது தீருமக்கினி
மந்தமோடு வெப்பும் விடுமன்றே (11)

A siddhadreams ebook

(இ - ள்)

| | | |
|---|---|---|
| ஏலக்காய் | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| லவங்கம்பட்டை | $2\frac{1}{2}$ | ,, |
| நாகப்பூ | $3\frac{3}{4}$ | ,, |
| மிளகு | 5 | ,, |
| திப்பிலி | $6\frac{1}{4}$ | வராகன் |
| சுக்கு | $7\frac{1}{2}$ | ,, |
| கிராம்பு | $8\frac{3}{4}$ | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, வேளைக்கு $1\frac{1}{4}$ வராகனளவெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொண்டுவரக் காசரோகம், பித்தரோகம், அக்கினி மாந்த்யம், தேக காங்கை முதலானவை தீரும்.

---

## தாளீசாதிச் சூரணம் I

தாளீசமுந்தஞ் சாதிக்காய் தக்கோலஞ் சிறுநாக மரமஞ்சன்
ஆளியவசம்பு சிறுதேக்கு அதிமதுர மழுக்கிராத் திரிகடுகும்
நீளிய வெள்ளி லோத்திரமும் நிணவாமரத்தை ரோகிணியும்
கேளிவை திரிபலை சடாமாஞ்சில் கிராம்பு கொத்தமல்லி
சிறுதேக்கே (12)

சீரதா மேலாம்வாய் விளங்கம் சேருமஞ்ச ளசமோதகம்
பிரிதகோட்டமி லுப்பைப்பூ பேர்தேவதார மிலாமிச்சங்
குறியாய் நற்சீரக மெவட்சாரங் கூடுஞ்சத்தி யவட்சாரம்
தெறியாய்ந்தூதுவளை ஞாழல் தீண்ட சீந்தில் கீழாநெல்லி
வேரே (13)

வேராஞ் சங்கின் வேராடா தோடை மிருந்து வட்டத்
திருப்பிவேர்
பேராந் தாமரைத் தாதுகொடி வேலிபிரமிகையாந்தைகரயிவை



வீரங் காந்தைக் காங்தெழக் கொடுவேர் மேவுங் கொன்றைப்
பழத்துடனும்
கூறும் சமனாய் நீ கொண்டு கூட்டி வஸ்திரகாயமதே (14)

காய்ந்த தூளின் வெருகடியுங் கலந்தே சர்க்கரைதேனில்கொள்
மாய்ந்த சுவாசகாசமுடன் வருத்துமிருமல் மருந்தீடு
சாய்ந்தழும்ம ரோசிகமும் தாளமந்தாக் கினியீளை
தேய்ந்து போமே தாளீசச் சூரணத்தில் தீருமென்றார்
முனிதாமே (15)

(இ - ள்)

| | |
|---|---|
| தாளீசபத்திரி | கோரைக்கிழங்கு |
| சாதிக்காய் | தக்கோலம் |
| சிறுநாகப்பூ | மரமஞ்சள் |
| வசம்பு | சிறுதேக்கு |
| அதிமதுரம் | அமுக்கிராக்கிழங்கு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வெள்ளிலோத்திரப் |
| சிற்றரத்தை | கடுகரோகிணி [பட்டை |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சடாமாஞ்சில் |
| கிராம்பு | கொத்தமல்லிவிதை |
| சிறுதேக்கு | ஏலக்காய் |
| வாய்விடங்கம் | மஞ்சள் |
| ஓமம் | கோஷ்டம் |
| இலுப்பைப்பூ | தேவதாரம் |
| இலாமிச்சைவேர் | சீரகம் |
| எவச்சாரம் | சத்திச்சாரம் |
| தூதுவளைவேர் | ஞாழல் |
| சீந்தில்கொடி | கீழாநெல்லிவேர் |
| சங்கம்வேர் | ஆடாதோடைவேர் |
| வட்டத்திருப்பிவேர் | தாமரைத்தாது |
| கொடிவேலிவேர் | பிரமி |
| கையாந்தகரை | சிவகரந்தை |
| கொடிவேலிவேர் | கொன்றைப்பழம் |

A siddhadreams ebook

இவைகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்து நன்றாகக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துச் சர்க்கரை யுடனே அல்லது தேனுடனே உட்கொள்ளவும்.

சுவாசகாசம், இருமல், மருந்தீடு, அரோசகம், மந்தாக்கினி, ஈளை முதலான நோய்கள் தீரும்.

## அமுக்கிராச் சூரணம்

அமுக்கிராவே ரொருபங்கு அரத்தை நாக மரமஞ்சள்
கழுத்திரையாந் திரிகடுகுந் துவராந் திரிபலை நற்சீரகமும்
திமுக்குஞ் சித்திரமூல மரோகணி நிறைதாளிவைகளொருபங்கு
தமக்காந்தூளே தேனில் கொள் சயமும ரோசிவாயுமந்தந்
தரியதிருமல் வியாதிகளே (16)

(இ - ள்)

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | சிற்றரத்தை |
| சிறுநாகப்பூ | மரமஞ்சள் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| சீரகம் | சித்ரமூலவேர் |
| கடுகரோகிணி | |

இவைகளைச் சமெனடுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ள.

சயம், அரோசகம், வாயு, மந்தம், இருமல் முதலான வியாதிகள் தீரும்.



## அச்வகந்தி சூரணம்

கனைதீர் கிராம்பு ஒருகழஞ்சு கதித்தநாக மிருகழஞ்சு
வினைவா மேலமுக்கழஞ்சு வேண்டுமிலவங்கம் நாற்கழஞ்சு
உனைதா மிலவங்க மிலையைங்கழஞ்சு மூறுசீரக மறுகழஞ்சு
தனையாமல்லி யெழுகழஞ்சு சாருங்கோட்ட மெண்கழஞ்சே (17)

எண்ணிரண்டு கழஞ்சுதான் திப்பிலியின்கூறு
மிதற்குரெட்டி முப்பதிருகழஞ்சு சுக்கு
வெண்ணிற மமுக்கிரு வறுபத்து நாற்கழஞ்சி
கூடவிரைந்து தூள்பண்ணு சரிசர்க்கரையு மேவத்
தின்னுவா மிருநேரந் தேனில் நெய்யிலாக
தீருமது வரோசி சத்திபித்தக்கிராணி
நன்னாதரம் உள்மாதங் குன்மமருந்தீடு
நாடாது வன்ன தோஷம் வாயுவுமே (18)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| கிராம்பு | 1¼ | வராகனெடை |
| சிறுநாகப்பூ | 2½ | ,, |
| ஏலக்காய் | 3¾ | ,, |
| லவங்கப்பட்டை | 5 | வராகன் |
| லவங்கப்பத்திரி | 6¼ | ,, |
| சீரகம் | 7½ | ,, |
| கொத்தமல்லிவிதை | 8¾ | ,, |
| கோஷ்டம் | 10 | ,, |
| சுக்கு | 40 | ,, |
| திப்பிலி | 20 | ,, |
| அமுக்கிராக்கிழங்கு | 80 | வராகனெடை |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு சரியளவு சீனிகூட்டி வைத்துக் கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு சூரணம் எடுத்



A siddhadreams ebook

துத் தேனிலோ அல்லது நெய்யிலோ குழைத்து உட்கொள்ளவும்.

அரோசகம், வாந்தி, பித்தம், கிராணி, உன்மாதம், குன்மம், மருந்தீடு, அன்னத்வேஷம், வாயு முதலான நோய்கள் தீரும்.

---

## நீரழிவிற்கு "மதுகாதிச் சூரணம்"

அதிமதுரஞ் சீரகமிருவேலி வெட்டிவேர்
அரேணுகமு மிலவங்கப் பத்திரி சாதிப்பத்திரியும்
பதிகொண்ட திலப்பனைக் கிழங்குடன் கோஷ்டம்
பாரேலமிலவங்கம் கற்பூரஞ் சந்தனமும்
குதிகொண்ட தாமரைக் கிழங்ககில் முந்திரிகை
குங்குமம் தேத்தாம்விரை கொத்தமல்லி
நிதியுள்ள பச்சைக் கற்பூரமரமஞ்சள்
சிறுநாக நெல்லிமுள்ளியுடன் வகைக்கொரு கழஞ்சே (19)

வகைகொண்ட தெல்லா மொருபங்கு ஆவாரை வருபிஞ்சு
பூவோ கொழுந்து விரையுமொரு பங்காய்
துகைகொண்டு ஒன்றாய் தூளி நீ பண்ணி
சூரணத்துடன் சீந்தில் சர்க்கரை கலந்து
நகைகொண்ட சர்க்கரை நல்லதாய்ச்சரி கொண்டுத்
தேனில் கொள்வாய் நாளுமிரு போது
மிகைகொண்டு வருமேகம் சலமிழிவு வேகம்
மீறுது வதிசார விகாரங் களென்றே (20)

(இ - ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | சீரகம் |
| வெட்டிவேர் | காட்டுமிளகு |
| லவங்கப்பத்திரி | சாதிபத்திரி |



| | |
|---|---|
| திலப்பனங்கிழங்கு | கோஷ்டம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| கற்பூரம் | சந்தனத்தூள் |
| தாமரைக்கிழங்கு | அகில்கட்டை |
| திராக்ஷைப்பழம் | குங்குமப்பூ |
| தேத்தாங் கொட்டை | கொத்தமல்லிவிதை |
| பச்சைக்கற்பூரம் | மரமஞ்சள் |
| சிறுநாகப்பூ | நெல்லிமுள்ளி |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை

| | |
|---|---|
| ஆவாரம் பிஞ்சு | பூ |
| ஆவாரம் கொழுந்து | விரை |

இவைகளைக் காயவைத்து மேற்கண்ட சூரணம் - முன் சரக்குகளுக்குச் சரிநிறை. இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து சீந்தில் சர்க்கரை (¼ பாகம்) கலந்து, சர்க்கரையுஞ் சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும். இதில் 3 விரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ளவும். தினம் 2 வேளை சாப்பிடவும்.

மேகம், சலரோகம், நீரிழிவு, அதிஸாரம் முதலான நோய்கள் நீங்கும்.

---

## நீரிழிவிற்கு "வெட்டிவேர்ச் சூரணம்"

குருவேர் தாமரைத் தாதுவனையம் வித்து
கோட்டமுடன் திலப்பனைக்கிழங்கு நீர்வள்ளி
நெரிஞ்சிவேர் அமுக்கிராவேர் இலுப்பைப்பூவு
நெற்பொரிவிலவங்கப் பத்திரி ரேணுகமு

A siddhadreams ebook

மருவுசெஞ் சந்தனம் செண்பக மதுரமுடன்
    தூதளை வேர்முள்ளி வேரும்
தருவுநற்சீரகம் சாதிப்பத்திரிதன் காயுந்
    தருநாகப் பூவுடன் குங்குமப்பூவே (21)

பூவையே தக்கோலங் கற்கடக சிங்கி
    பொருந்து நல்லேலங் கிராம்பு பூனைக்கால் விரையு
மேவுதலாய் முந்திரிகை பேரீச்சம்பழமும்
    வியனுண பச்சைக்கற்பூ ரத்துடனே
காவினிய நெல்லியுடன் சரிகூட்டித் தூளாய்
    கண்டபடி தனில்ப்பாதி அமுதசர்க்கரையும்
நாவினிய சர்க்கரை தேனிலதுகொள்ள
    நாடாது மேகமூத்திர மிரத்த பித்தசய மெனிலே (22)

(இ - ள்)

| | |
|---|---|
| வெட்டிவேர் | தாமரைத்தாது |
| தாமரையிலையின் உட்சுருள் | |
| தாமரைவித்து | கோஷ்டம் |
| நிலப்பனங்கிழங்கு | நெரிஞ்சில்வேர் |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | |
| அமுக்கிராக்கிழங்கு | இலுப்பைப்பூ |
| நெற்பொரி | லவங்கப்பத்திரி |
| காட்டுமிளகு | செஞ்சந்தனம் |
| செண்பகப்பூ | அதிமதுரம் |
| தூதுவேளைவேர் | முள்ளிவேர் |
| நற்சீரகம் | சாதிபத்திரி |
| சாதிக்காய் | நாகப்பூ |
| குங்குமப்பூ | தக்கோலம் |
| கற்கடகிங்கி | ஏலக்காய் |
| கிராம்பு | பூனைக்காலிவித்து |
| திராக்ஷைப்பழம் | பேரீச்சம்பழம் |
| பச்சைக்கற்பூரம் | நெல்லிவற்றல் |



இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து மொத்த எடைக்குப் பாதியளவு சீந்தில் சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் 3 விரல் கொள்ளுமளவெடுத்து சர்க்கரையுடனே அல்லது தேனிலே தினம் உட்கொண்டுவர.

மதுமேகம், இரத்த பித்தம், சயம் முதலான ரோகங்கள் தீரும்.

**சீந்திற்சர்க்கரை செய்யும் விதம் :**

முற்றிய சீந்திற் கொடியைக் கொண்டுவந்து அதன் மேலுள்ள புரணியையும், பச்சைத் தோலையும் நீக்கிவிட்டுச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொண்டுக் கல்லுரலிலிட்டு நன்றாகப் பஞ்சு போலிடிக்கவும்.

பின்னர்

இதனை ஒரு பெரும் அண்டாவிலிட்டுச் சுத்தஜலம் விட்டு நன்றாகக் குழப்பி சக்கையைப் பிழிந்துவிடவும். சிறிது நேரம் அப்படியே வைத்தால் சீந்தில் சர்க்கரை அப்பாத்திரத்தின் அடியில் படியும்.

பின்னர்

மேல் தெளிவை இறுத்து விட்டு வண்டலைக் காய வைத்துக் கொண்டு பத்திரப்படுத்தவும்.

A siddhadreams ebook

## மேகங்களுக்கு "ஆவாரைச் சூரணம்"

சீந்திக் கொடிமேல் தோல்போக்கிச் சிறுகநறுக்கித் துவைத்துக்
காயவைத்து
தேர்ந்தே பின்னுமிடித்ததனைச் சீலைவடிநாலு நறும்பன்னிரி
வாய்ந்தலாம்பிச் சிருவேலி வருமேசெப்பு நெருஞ்சில் சிறு
நெருஞ்சில்வேர்
போந்தே முத்தந்தாமரைப் பூவிலையம் பொருந்து மதனில்
விரைதானே (23)

விரையாவாரை தன்விரையும் வேரும் பட்டை பூவுள்ளரும்பு
திரையாலம் விழுது முசுட்டைவிரை சேருமத்தித் திரிபலைதா
ளிரை யாயிருசீ ரகந்திரிகடுகுநேர் சந்தன ரேணுக மேல
முடன்
வரைநேர் சாதிக்காய்தன் பத்திரியுமதூரங் கோட்டஞ்சிங்கு
கொள்ளே (24)

கொள்ளீர் திராக்ஷை கற்சூரை குளிர்ந்த பச்சைக் கற்பூரம்
தெள்ளீர் வகைக்குக் கழஞ்சு நிறை சேர்ந்தே வச்சிரகாயமதாய்
வெள்ளிய சீந்திற் பொடிகூறு மேவுமாவரை யைம்பொடி
கூறொன்று
விள்ளீர் சர்க்கரை முக்கூறு மிகநீ கலந்து சேர்ப்பதுவே (25)

சேர்த்த பொடியில் வெருகடி தேனில் கொள்ளவாத வுடல்
தனக்கு
ஏத்தபடியாய் நெய்யில் கொள் இளைத்தசடலம் தனக்குமது
கோத்த பாண்டு காமாலை குலைத்த சயமும் ரெத்தபித்த
சாய்ந்த மேகங் கைகால்லெரிவு தனிநீர்க்கடுப்பும் தான்விடுமே
(26)

(தி - ள்)

முற்றிய சீந்திற்கொடியைக் கொண்டுவந்து மேல் தோலையும், பச்சை நிறத்தையும் நீக்கி விட்டுச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி இடித்து வைத்துக் கொண்டு நிழலில் காயவைக்கவும்.



பின்னர்

இதனை வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும். இவ்வாறு 4 தடவை செய்யவும்.

இதனுடன்

| | |
|---|---|
| விலாமிச்சம் வேர் | வெட்டிவேர் |
| செப்பு நெருஞ்சில் | சிறுநெருஞ்சில் வேர் |
| கோரைக்கிழங்கு | தாமரைப்பூ |
| தாமரையிலையின் உட்சருள் | |
| தாமரை விதை | ஆவாரை விரை |
| ஆவாரை வேர் | ஆவாரம்பட்டை |
| ஆவாரம் பூ | ஆவாரம் அரும்பு |
| ஆலம் விழுது | முசுட்டை விதை |
| அத்தித் திப்பிலி | கடுக்காய்த் தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சந்தனத்தூள் |
| காட்டுமிளகு | ஏலக்காய் |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| அதிமதூரம் | கோஷ்டம் |
| கற்கடசிங்கி | திராக்ஷை |
| பேரீச்சங்காய் | பச்சைக்கற்பூரம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

முன்னர் சித்தமாகவுள்ள

சீந்தில் கொடித்தூள் 1 பங்கு, ஆவாரை சேர்த்த இச்சூரணம் 1 பங்கு, சர்க்கரை 3 பங்கும் எடுத்து ஒன்று கலந்து வைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

இந்தச் சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனுடன் குழப்பி உட்கொள்ளவும்.

வாதரோகங்கள் தீரும்.

இளைத்த உடல் தேற, நெய்யில் உட்கொள்ளவும்.

பாண்டு, காமாலை, சயம், ரத்த பித்தம், மேக ரோகங்கள், கைகால் எரிச்சல், நீர்கடுப்பு முதலானவை களுக்கும் நெய்யுடனே உட்கொள்ளவும்.

## பித்தத்திற்குச் "செங்கழுநீர்ச் சூரணம்"

கிழங்குமுத்த
செளகெந் திரத்தி னடைவதுதான் செங்கழுநீர்க் கிழங்கு
நீர்வள்ளிக்கிழங்கு
மென்கின்ற லாமிச்ச மிருவேலி கோட்ட மிடுக்கு அதிமதுர
மிலவங்க மிலையுந்
தன்கின்ற கிராம்பினுடன் திப்பிலிமூலம் திப்பிலியுஞ்
சாற்கின்ற சீரகமிரண்டுடன் மிளகு
விலவின்ற ஏலமரேணுகம் சிறுநாகம் வெண்கூகை நீருட
னமுத சர்க்கரையே (27)

எல்லார்க்கு வேண்டுகரு வேப்பிலையு மிதனுடன் முசுமுசுக்கை
யிலையுமிதன்கூட
வல்லாய் நீ யொவ்வென்று சரிகொண்டு தூளாய் மருவுசர்க்
கரை பங்கிரண்டிதனுடனுக்
நல்லாக வெருகடி கொள்ளாயதுவும் நாற் பதுவகையான
பித்த விடுமென்ன
பொல்லாத மையல் தீரும்ரத்த பித்தவாந்திகள் போகும்
பொறுத்திடும் வாயூரல் தாகம் போமென்றே (28)

(இ - ள்)

செங்கழுநீர்க் கிழங்கு கோரைக்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு



| | |
|---|---|
| இலாமிச்சம் வேர் | வெட்டிவேர் |
| கோஷ்டம் | சுக்கு |
| அதிமதூரம் | இலவங்கப்பத்திரி |
| கிராம்பு | திப்பிலிமூலம் |
| திப்பிலி | சீரகம் |
| கருஞ்சீரகம் | மிளகு |
| ஏலக்காய் | காட்டுமிளகு |
| சிறுநாகப்பூ | கூகைநீர் |
| சீந்திற்சர்க்கரை | காய்ந்தகருவேப்பிலை |
| காய்ந்த முசுமுசுக்கையிலை | |

இவைகளைச் சரிஎடை எடுத்து, இடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, இதற்கு 2 மடங்கு சீனி சேர்த்து வைத்துக் கொண்டு வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும்.

40 வகை பித்தரோகங்களும், ரத்தபித்தம், வாந்தி, வாயில் நீரூறல், தாகம் முதலானவைகளும் தீரும்.

## பலவேகங்களுக்கும் "நாரத்தைச் சூரணம்"

சாறணைவேர் பதினறு பல மாட்டுப்பால் நாழி
தனித்தபொடு தயிலச்சாறிராழி வெந்து
வீறுடனெடுத்ததனை வெயிலதில் வைத்து
வேறுகழல் கொடிபல மொன்பது பெருஞ்சட்டி
கூறுடன்மேல் சட்டிமூடி மண்செய்து [வைத்துக்
குறுகவே புடமிட்டு வெடித்த பின்னெடுத்து
தேறணையத் தோல்தள்ளி பருப்பது எடுத்து
திரிகடுகு டனிருசீரக மிந்துப்பே (29)



A siddhadreams ebook

இந்துப்பெருங் காயங்கரு வேப்பின் தண்டு
விதனுடனே மங்கடுக்காய் வகைக்கிரு கழஞ்சு
முந்திய மருந்துகள் கலந்து பொடிகொண்டு
முதிர்வாத வுடல்தேனில் நெய்யிலிடுபித்து
வந்தவுடல் சேந்தும தென்னையனு பானம்
வாங்குவெரு கடியளவு நீங்கிடு நோயெல்லாம்
விந்தமலர் மின்றபூரண வாதிதின்ன
விளங்குமெய் யுடலங்கள் வளங்களிடு மேன்றே (30)

(செ - ம்)

சாறணைவேர் 16 பலமெடுத்து நறுக்கி, ஒரு
மாட்டுப்பால் 1 படியும் [பாத்திரத்திலிட்டு
பொடுதலைச்சாறு 2 படியும்

சேர்த்து அடுப்பின்மேலேற்றிச் சாறுகள் வற்றுமளவு வேகவைத்து வெய்யிலில் உலர்த்தவும்.

கழற்சிக்காய் 9 பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு அதன் வாய்க்குத் தக்கபடி ஒரு மேல்சட்டியைப் பொருத்திச் சீலைமண் செய்யவும். இதனைப் புடமிடவும். சிறிது நேரம் சென்றபின் வெடிக்கும். அச்சமயத்தில் புடத்தைக்கலைத்துக் கழற்சிக் கொட்டையை உடைத்து பருப்பை மட்டிலும் எடுத்துக் கொள்ளவும்.

இதனுடன்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சீரகம் |
| கருஞ்சீரகம் | இந்துப்பு |
| பெருங்காயம் | கருவேப்பிலை ஈர்க்கு |
| ஓமம் | கடுக்காய்த்தோல் |



இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (2½ வராகனெடை) வீதம் எடுத்து முன் மருந்துகளையும் சேர்த்துக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதனை

வாத ரோகமெனில் தேனிலும் பித்த ரோகத்திற்கு நெய்யிலும், கப ரோகத்திற்கு எண்ணெயிலும் கொடுக்கவும். வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவு உட்கொள்ளவும். இந்த சூரணத்தின் பெயர் பூரணாதிச் சூரணமாகும்.

## விசையாதிச் சூரணம்

விசையாதி திரிகடுகு யேலமிலவங்கம் வெட்டிவேர் திரிபலை
கற்கடசிங்கி
வகையில்லா வதிவிடையம் சிறுதேக்குச் செவ்வியம் வளர்
குடசப்பாலை லவணம்
வசுவாதி திப்பிலிவில்வப் பழத்துடனில வேம்பு கேளினிய
அசமதாகம் நேர்நிறையதாக
விரையதூளண்ட வாதந்திற் கென்னெய் விளக்கெண்ணெய்
மூலம்விடு வெள்ளி சயமேகபாண்டு சூலைகண்ட
மாலை யிப்புருதியிடுமே (31)

(செ - ம்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஏலக்காய் |
| கிராம்பு | வெட்டிவேர் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | கற்கடசிங்கி |
| அதிவிடயம் | சிறுதேக்கு |
| செவ்வியம் | குடசப்பாலை |
| இந்துப்பு | இலவங்கப்பத்திரி |

A siddhadreams ebook

திப்பிலி — வில்வப்பழம்
நிலவேம்பு — ஓமம்

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்தை நல்லெண்ணெயிலோ அல்லது விளக்கெண்ணெயிலோ மூவிரல் கொள்ளுமளவு எடுத்து உட்கொள்ளவும்.

அண்டவாதம் போம். மேலும் மூலம், சயம், மேகம், பாண்டு, சூலை, கண்டமாலை, விப்புருதி முதலான வைகளுக்கும் தக்க அநுபானங்களில் உட்கொள்ளவும்.

## ஏலாதிச் சூரணம்

ஏலாதி தாமரைவளைய இலவங்கம் மிக்கநாகஞ் சடாமாஞ்சில்
மாலாச்சந்த இலவங்கப் பத்திரி மற்றோர் தாளிசபத்திரியுஞ்
சாலசெந்த சந்தனமுஞ் சாதிக்காயின் கிராம்பினுடன்
சாலாய் வெட்டி லாமிச்சம் வேர்சேரே நிலப்பனைதன் கிழங்கே (32)

நன்னே ரெத்த நன்னாரி தண்ணீர் விட் டான்தன் கிழங்கு
பின்னே ரனையகடுதான்றி மிக்க நெல்லிமுள்ளியுடன்
சொன்னேனும் நெருஞ்சிக் காயோடு சுக்குதிப்பிலி சதகுப்பை
நன்னே கருத்த சீரகம்நற் சீரகங்கெந்திக் நகாமுமே (33)

தருமே தேவ தாரமகில் சாதிக்காயுஞ் சிறுதேக்கு
இருநெற்கரு வேம்பு நிலவேம்பு ஏற்கும் கூகைநீறதுவும்
வெருதாங் கடுகுரோகணியு மீதற்கோல மரமஞ்சள்
மிருதாம் பச்சைக் கற்பூர மீறுசிங்கி கொத்தமல்லியதே (34)



ஆதெ கற்குரை முந்திரிகை அமுதசர்க்கரை யிதனுடனும்
மாதே! சமனாய் நீ கொண்டு வடித்தே தூள்செய் தேனிற் கொள்
போதே மேகம் பித்தசயம் போகப்பாண்டு அத்திசர
மீதே உள்ளநாகமுடல் வெதிப்பு மெரிவு மிகப்போமே (35)

(தி - ள்)

ஏலக்காய் — தாமரையிலையின் உட்[சுருள்
கிராம்பு — சிறுநாகப்பூ
சடாமாஞ்சில் — சந்தனத்தூள்
லவங்கப்பத்திரி — தாளிசபத்திரி
செஞ்சந்தனம் — சாதிக்காய்
வெட்டிவேர் — இலாமிச்சைவேர்
நிலப்பனைக்கிழங்கு — நன்னாரிவேர்
தண்ணீர்விட்டான்கிழங்கு
கடுக்காய்த்தோல் — நெல்லிவற்றல்
தான்றித்தோல் — நெருஞ்சில்
சுக்கு — திப்பிலி
சதகுப்பை — கருஞ்சீரகம்
சீரகம் — கிரந்திதகரம்
தேவதாரம் — அகில்கட்டை
சாதிக்காய் — சிறுதேக்கு
கருவேப்பிலை — நிலவேம்பு
கூகைநீர் — கடுகுரோகிணி
தக்கோலம் — மரமஞ்சள்
பச்சைக்கற்பூரம் — கற்கடசிங்கி
கொத்தமல்லி — பேரீச்சங்காய்
திராக்ஷைப்பழம் — குடூசிசத்வம்

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இந்த தூளில் ஒரு மூவிரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனில் உட்கொள்ளவும்.

A siddhadreams ebook

மேகம், பித்தசயம், பாண்டு, அஸ்திஜ்வரம், தாகம், உடல் வெடிப்பு, எரிச்சல் முதலான ரோகங்கள் தீரும்.

## இரத்த பித்தத்திற்கு "முருங்கைப்பூச் சூரணம்"

முருங்கைப் பூவுத் தாதுவளம்பூவுமுது தாமரை நிலப்பனை
செங்கழுநீர்
தெருங்கு மாலம் விரை நாவல் விரைநேர் மாவின் துளிர்
அத்தித்துளிர்
பொருந்து மான்கொம்பிதனோடு பொடியாய்த் தேனில்
நெய்யில் கொள்
இருந்த ரத்த வாந்திரத்த பித்தமினியே நுலைந்துவிடுந்தானே
(36)

(இ - ள்)

| | |
|---|---|
| முருங்கைப்பூ | தாதுவளம்பூ |
| தாமரை விரை, | நிலப்பனை விதை |
| செங்கழுநீர் விரை | ஆலம் விரை |
| நாவல்கொட்டை | மாந்துளிர் |
| அத்தித்துளிர் | மான்கொம்பு |

இவைகளை நிழலில் நன்றாக உலரவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இத்தூளில் 3 விரல் கொள்ளுமளவெடுத்துத் தேனிலோ அல்லது நெய்யிலோ உட்கொள்ளவும்.

ரக்த வாந்தி, ரக்த பித்தம் முதலானவை நீங்கும்.

## அட்டாதிச் சூரணம்

அட்டாதி திரிகடுகு பெருங்காயமோம மாளநற் சீரகமுடன்
இட்டப்படி சையந்தி லவணங் கருஞ்சீர மிந்துகமலப் பருப்பிது
னுடன்



சட்டமாய் வெவ்வேறு சரிவறுத்துக்கூட்டு பொடிதானுண்
ணுதேனிலாத்
திட்டமா யன்னத்தில் மேலிட்டி நெய்காய்ச்சி விட்டுண்டைத்
தீருமே யக்கினிமந்த வதிசார சூலைவாயுவதுமே (37)

(இ - ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| ஓமம் | சீரகம் |
| இந்துப்பு | கருஞ்சீரகம் |
| தாமரைமணி | |

இவைகளைச் சரியெடை யெடுத்து தனித்தனியாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இவைகளை யொன்றாகக் கலந்து மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் உட்கொள்ளவும் அல்லது சாப்பாட்டில் போட்டுக் கொண்டு, நெய்யைக் காய்ச்சி விட்டுப் பிசைந்து உட்கொள்ளவும்.

அக்கினிமாந்தம், அதிசாரம், சூலை, வாயு முதலான ரோகங்கள் தீரும்.

## கொம்மட்டி மாதளைச் சூரணம்

நெற்பொரியுஞ் சீரகமுமதிமதுர மூன்றும் நேராகத் திப்பிலி
யொருபலம் வறுத்து
துற்பரவாய்த் தூளிபண்ணி நாரிஞ்சிச் சாந்தில் குழப்பிச்
சொன்னபடி நீ யருந்து
தொகையே கேள்! பின்சந்தி விக்கலுடன் வாந்தி
வாய்நீரூறல்
தரித்த பித்தனோடு நாளுமென்றே நற்கவிதைப் படியுரைத்த
முனிவோர் தங்கள் நலமான கொம்மட்டி மாதளங்காம்
நன்மைதானே (38)

A siddhadreams ebook

(கி - ம்)

| | |
|---|---|
| நெற்பொரி | சீரகம் |
| அதிமதுரம் | திப்பிலி |

இவைகளைச் சரியெடையெடுத்துத் தனித்தனியாகச் சரியெடை யெடுத்துப் பொன்வறுவலாக வறுத்துத் தூள்செய்து ஒன்றாகக் கலந்து நாரிஞ்சிப்பழச் சாறு விட்டுக்குழப்பி யருந்தவும்.

வாந்தி, விக்கல், வாயில் நீர் ஊறுதல், பித்தம் முதலான ரோகங்கள் தீரும்.

## பேதிச் சூரணம்

கடுதானி நெல்லிமுள்ளி வாய்விலங்கமேலம் கஸ்தூரி
மஞ்சளுடன் லவங்கப்பத்திரியும்
நெடிதான லவங்கத்தோல் முத்தகாசு நிதானமுடன் மிளகு
சுக்குத் திப்பிலியு
முடுகவே சரிகொண்டு தூள்செய்பின்னு முதிர்சிவதைப்பால்
சுத்திசெய்து
இடுகவினி இருபங்கு முன்போல் ரண்டுகூட்டு எலுமிச்சங்
காயளவு இளவெந்நீர் கொள்ளவிளிப் பேதியாமே (39)

(கி - ம்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிமுள்ளி | வாய்விடங்கம் |
| ஏலக்காய் | கஸ்தூரிமஞ்சள் |
| லவங்கப்பத்திரி | லவங்கப்பட்டை |
| கோரைக்கிழங்கு | மிளகு |
| சுக்கு | திப்பிலி |

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும், இதற்கு 2 பங்கு பாலில்



சுத்திசெய்த சிவதைவேர்ச் சூரணம் சேர்த்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் ஒரு எலுமிச்சையளவு எடுத்து வெதுவெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும்.

நன்றாகப் பேதியாகும்.

## நாவாக்கிரிச் சூரணம்

ஓமம் பெருங்காயம் விளங்கத்தன் கடுரோகணி கொடிவேலி
திரிகடுகு
மேவு கடுதானியது நெல்லிமுள்ளி சீரகம் வெள்ளுள்ளி
சிறுதேக்கு வெட்பாலையரிசி
காவு வளர்சங்கின் வேர்முள்ளி குளப்பாலை கண்டங்கத்திரி
வேருமுத்தக் காசிதனே
வசம்பு பொன்முசுட்டை வேரு மெவட்சாரு சவுக்காரமிகல்
கோஷ்டந்தானே (40)

கோட்ட மிடுமானைத்திப் பிலிவிந்துப்பு குளிர்ந்த கல்லுப்பி
னோடு வளையலுப்பென்னே
வேட்டையாம் வெடியுப்புக் கறியும்போடஞ்சு வீறுக்குஞ்
சீரகமுஞ் சரிகொள்ளுதூளாய்
மட்டதாய் வெருகடி தேனிலது கொள்ளு வாயுவதி சீரணம்
வலிபொருமல் குன்மம்
விட்டது வுமப்பால்மிகு வாயுத்தீரும் வேதமுனி சொன்னபடி
வாகட நீ கற்றே (41)

(கி - ம்)

| | |
|---|---|
| ஓமம் | பெருங்காயம் |
| வாயுவிடங்கம் | கடுரோகணி |
| கொடிவேலி வேர் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |



A siddhadreams ebook

| | |
|---|---|
| கெல்லிவற்றல் | சீரகம் |
| பூண்டு | சிறுதேக்கு |
| வெட்பாலையரிசி | சங்கம்வேர் |
| முன்னைவேர் | குணப்பாலைவேர் |
| கண்டங்கத்திரி வேர் | கோரைக் கிழங்கு |
| வசம்பு | பொன்முசுட்டை வேர் |
| எவச்சாரம் | சவுக்காரம் |
| கோஷ்டம் | யானைத்திப்பிலி |
| இந்துப்பு | கல்லுப்பு |
| விளையலுப்பு | வெடியுப்பு |
| கரியுப்பு | சீரகம் |

இவைகளைச் சரியெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளு மளவெடுத்துத் தேன்விட்டுக் குழைத்து உட்கொள் ளவும்.

**தீரும் நோய்கள் :**

வாயு, அஜீரணம், வலி, பொருமல், குன்மம், வாயு வலி முதலியன.

## சித்திரமூலச் சூரணம்

சித்திரமூலம் பெருங்காயம் சேரும்பஞ் சலவணமஞ்சும்
மத்துங் கோட்டந் தாமரைத் தாதுவாய் விளங்கஞ் சிறுதேக்கு
நித்தியமாகு மசமோதக தேர்திரிகடுகு யவட்சாரம் வகை
யத்தித்திப்பிலி திப்பிலிமூலம் சரிதூளாய தனிற்பாதி
யரிதகித்தூளே (42)

இரண்டுதூளு மொன்றாக விடுதிவெருகடி தயிரதனில்
மருண்ட கிராணிமூலமாறும் வளமாயின வெந்நீரிற் கொள்மந்த



மறுமந்திரண்ட கக்கலோடியா மிடிவ்தீரு மதிர்வாயு வலியெல்லாம்
பிரண்ட ஊர்த்வவாயுச் சுவாசம் பிரிந்திடு மென்றார்
பெரியோரே (43)

**(கு - ரை)**

| | |
|---|---|
| சித்திரமூலம் | பெருங்காயம் |
| இந்துப்பு | விளையலுப்பு |
| அட்டுப்பு | உவர்உப்பு |
| சோற்றுப்பு | கோஷ்டம் |
| தாமரைத்தாது | வாயுவிடங்கம் |
| சிறுதேக்கு | ஓமம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | யவட்சாரம் |
| யானைத்திப்பிலி | திப்பிலிமூலம் |

இவைகளைச் சரியெடை யெடுத்து இடித்துத் தூள் செய்யவும்.

பின்னர்

இந்த சூரணத்தின் மொத்த எடைக்குப் பாதியளவு கடுக்காய்ச் சூரணம் சேர்த்து நன்றாகக் கலந்து பத்திரப் படுத்தவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தயிருடன் உட் கொள்ளவும்.

மூலம், கிராணி முதலானவை தீரும்.

வெந்நீருடன் உட்கொண்டால் மந்தம் தீரும்.

சுக்குக் கஷாயத்துடன் சாப்பிட அதிர் வாயு, மேல் மூச்சு முதலான நோய்கள் நீங்கும்.

A siddhadreams ebook

## பஞ்சாக்னிச் சூரணம்

பஞ்சலவணஞ் சுக்குத் திப்பிலி செவ்வியஞ்சித் திரமூலமுடன்
பாருதிப்பிலிமூல
மிஞ்சாத வகைதான் வோரொன்று பலமிதனோடு காயமுக்
கழஞ்சு
துஞ்சும் சவுக்காரம் வெங்காரம் சொல்லெவட்சாரம் சத்தி
யெவட்சாரம்
வஞ்சிமிளகு அசமோதக வகைக்குக் கழஞ்சு நாலாமே (44)

நல்கின்ற மிதிபாகல் சாறதில் நலம்பெற வறுத்துச்சேர்த்து
கால்கின்ற சிறுகீரை நாயுருவி எள்ளுச் சட்டைகதலிச்சட்டை
புளியின்தோடு
சேல்தொண்ட பிரண்டைச் சுட்டச்சாம்பல் தேரவே வகையீர்
பலமுங்கொண்டு
மாலனையாய் வெருகடி தேனிற்கொள்ள வாயுகுன்ம நீராமை
மூலங் காச வாதசுரம கன்றுபோமே (45)

(இ - ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | சோத்துப்பு |
| வளையலுப்பு | கறியுப்பு |
| உவர்மண் உப்பு | சுக்கு |
| திப்பிலி | செவ்வியம் |
| சித்திரமூலம் | திப்பிலிமூலம் |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| பெருங்காயம் | 3¾ வராகனெடை |
| சவுக்காரம் | பொரித்தவெங்காரம் |
| எவச்சாரம் | சத்திச்சாரம் |
| மிளகு | ஓமம் |

இவைகள் வகைக்கு 5 வராகனெடை (½ பலம்)

இவைகளை இடித்து ஒரு சட்டியிலிட்டு, மிதிபாகல் சாறுவிட்டு நன்றாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.



| | |
|---|---|
| சிறுகீரை | நாயுருவி |
| எள்ளின் தாள் | வாழைப்பட்டை |
| புளியங்கொட்டைத் தோல் | |
| பிரண்டை சுட்டசாம்பல் | |

இவைகளைச் சுட்ட சாம்பல் வகைக்கு 2 பலம் வீத மெடுத்து இடித்து முன் மருந்துடன் கூட்டி மறுபடியும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

வேலைக்கு மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ள

நீராமை, மூலம், வாதஜ்வரம் முதலான நோய்கள் தீரும்.

## விளங்காதிச் சூரணம்

வாய்விளங்கத் திரிகடுகு கோடிவேலி ஓமம் வருகுராசானி
பெருங்காய மிகலாக்
ஏயகருஞ்சீரகம் கடுகுரோகணி மிளைவசிரிகள் நிம்மதிப்
பழச்சாற்றிலூறி
தேயகரி சாலஞ்சாறு மதிலூறு நீ செய்து சூரணந் தேனிலினி
புண்ண
போயகலும் பித்தமுத லண்டவாயு வலிகுன்மம் பொருந்தாது
விளங்காதிச் சூரணம் சொல்லுவோமே (46)

(இ - ள்)

| | |
|---|---|
| வாய்விடங்கம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கொடிவேலி | ஓமம் |
| குராசானி ஓமம் | பெருங்காயம் |
| கருஞ்சீரகம் | கடுகுரோகிணி |

A siddhadreams ebook

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துச் சூரணம் செய்து, எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக ஊறவைத்துக் காயவைக்கவும்.

இதில் மூவிரல் கொள்ளும் அளவு எடுத்துத் தேனில் குழைத்து உண்ணவும்.

பித்தம், அண்டவாயு, வலி, குன்மம் முதலானவை தீரும்.

## வாயுவலிக்குச் "சூரண ராஜன்"

பஞ்சசாரமுடனே லவண மஞ்சும் பதமான காரமஞ்சு
திரிபலாதி சேர்த்து
அஞ்சலரு திரிகடுகு விளங்கமிரு சீரகமரத்தை பெருநாகப்பூ
சிறுநாகப்பூவும்
வெஞ்சமரில் காயஞ்சாறணைவேர் முருங்கை வேளைவேர்
காவேளைவேர் சத்திச்சாறடையின் வேரும்
மிஞ்சுதலாய் விழலரிசி அசமோதக மூங்கில்வித்து
மிருபிரண்டை சிறுகுறிஞ்சி பெருமருந்து வேரே (47)

மருந்துகளாம் வெண்ணொச்சி வேர்பிரண்டைச்சாம்பல்
வாழைச் சட்டை நாயுருவி சாம்பலிவை கூட
பொருந்து சமனாகவே தூளாய்க் கொண்டு புதுத்தேனில்
வெருகடியினி கொண்டபோது
விருத்த குன்மம் வயத்தில் வலிசூலை குடல்வாயுவு விதனோடு
பெருவயிறு நீராமை போமென்றார் முனிவர்கள்தான் சூரண
ராசன் பொடிக்கு ஆவிதெய்யும் வெந்தீரு மாருந்தானே (48)

(இ - ள்)

| | |
|---|---|
| 5 வித அக்ஷாரங்கள் | 5 வித உப்புக்கள் |
| 5 வித காரங்கள் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |



| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | விளங்கம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சிற்றரத்தை | பெருநாகப்பூ |
| சிறுநாகப்பூ | பெருங்காயம் |
| சாறணைவேர் | முருங்கைவேர் |
| வேளைவேர் | முக்காவேளைவேர் |
| ஓமம் | மூங்கில்விரை |
| பிரண்டை | சிறுகுறிஞ்சாவேர் |
| பெருமருந்துவேர் | வெண்ணொச்சிவேர் |
| பிரண்டைசுட்டச் சாம்பல் | |
| வாழைப்பட்டைச் சாம்பல் | |
| நாயுருவிச் சாம்பல் | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன் விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

**பத்தியம் :**

ஆகாரத்துடன் பசுவின் நெய், வெந்நீர் முதலான

**தீரும் நோய்கள் :**

குன்மம், வயிற்றுவலி, சூலை, குடல்வாயு, பெருவயிறு, நீராமைக்கட்டி முதலானவை

**குறிப்பு :**

5 அக்ஷாரங்களாவன :

சிலாஜது, நவசாரம், அன்னபேதி, வெங்காரம், கர்ப்பூரம்

A siddhadreams ebook

5 உப்புகளாவன :

இந்துப்பு, விளையலுப்பு, சோத்துப்பு, உவர் மண்ணுப்பு, கறியுப்பு.

5 வித காரங்களாவன :

வெடியுப்பு, கல்லுப்பு, விளையலுப்பு, சீனக் காரம், பூனீர்.

---

## வாயுக்குச் "சித்திர மூலாதிச் சூரணம்"

சித்திரமூலஞ் சவுட்டுமண் சேருங்கடுக ரோகிணியு
முத்துடன் திப்பிலி மிளகுசுக்கு ஒளியா நதிப்பிலி மூலமுடன்
நற்றிடு விளங்க மிந்துப்பு நற்பெருங்காயஞ் சமன்றூளாய்
பத்திசெய் தேனில் கொண்டுவரப் பாறிடும் வாயுவு கண்டீரே
(49)

(இ - ள்)

| | |
|---|---|
| சித்திரமூலவேர் | சவுட்டுமண் |
| கடுகரோகிணி | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| திப்பிலிமூலம் | வாயுவிடங்கம் |
| இந்துப்பு | பெருங்காயம் |

இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

வாயுக்கள் தீரும்

---



## "இங்குவாதிச் சூரணம்"

பெருங்காய மசமோதகம் நாய்க்கடுகு நற்கடுகு பேராத்தைச்
சதகுப்பையாய
வருங்கானக் கொடிவேலி சாதிக்கா யதிவிடயம்வாய்
விளங்க வசம்பு
நெருகாத் திரிபாலையுந் திரிகடுகு சிறுநாக நேர்கொத்த
மல்லியுடனே கருஞ்சீரகத்தின்
வருநற்சீரகங் கார்போகவரிசி கோட்டகாத்தம் வெள்ளுள்ளி
சேரே (50)

வெள்ளையா மிந்துப்பு வெங்கார மெவச்சார மிதன்சத்தி
யெவச்சாரமும்
கொள்ளவே கல்லுப்பு விளையலுப்பிதனோடு கூடவெடியுப்பு
நேராம்
உள்ள நவச்சாரமுந் திப்பிலிமூலத்துட னேலங் கடுகு
ரோகிணி சீனக்காரஞ் செவ்வியமென்
தள்ளாதப்படி சமன்கொண்டு சாறனை வழுதலை சங்கின்வேர்
நாம் வருகவே (51)

தானியல்பு கொண்டுவரை செய்துபொடியாக வெருகடிதான்
கொள்ளு வெந்நீரதில்
தேனிலது கொள்ளிஞ்சிச் சாறிலது நீ கொள்ளு சீர்முருங்
கைப் பட்டைக் கஷாயமுட
னனுபானபடி யிங்குவாதி சூரணங்கொள்ள வசீர்ணஞ்
சூலைகுன்மம்
மாறுவது கண்டபனி தீருமதுபோல் வாயுக்கிராணி சூலைவிட்
டகலுமென்றே (52)

(இ - ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | ஓமம் |
| நாய்க்கடுகு | கடுகு |
| பேராத்தை | சதகுப்பை |
| கொடிவேலிவேர் | சாதிக்காய் |
| அதிவிடயம் | வாயுவிடங்கம் |



A siddhadreams ebook

| | |
|---|---|
| வசம்பு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | தான்றித்தோல் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சிறுநாகப்பூ |
| கொத்தமல்லிவிதை | கருஞ்சீரகம் |
| சீரகம் | கார்போகவரிசி |
| கோஷ்டம் | காந்தம் |
| பூண்டு | இந்துப்பு |
| வெங்காரம் | எவச்சாரம் |
| சத்திச்சாரம் | கல்லுப்பு |
| விளையலுப்பு | வெடியுப்பு |
| நவச்சாரம் | திப்பிலிமூலம் |
| கடுகுரோகிணி | சீனக்காரம் |
| செவ்வியம் | சாறணைவேர் |
| வழுதலை (கத்திரி) வேர் | |
| சங்கம் வேர் | |

இவைகளைச் சமனெடுத்து நிழலில் உலர்த்தி

பின்னர்

கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீரிலோ, தேனிலோ, இஞ்சிச் சாற்றிலோ அல்லது முருங்கைப் பட்டைக் கஷாயத்திலோ வியாதிக்குத் தக்க படி கொடுக்கவும்.

அசீரணம், சூலை, குன்மம் முதலானவைகள் சூரியனைக்கண்ட பனிபோல் தீரும்.

இதேபோல் வாயுக்கிராணி, சூலை, முதலான நோய் களும் குணப்படும்.



## கருங்கோழிச் சூரணம்

கருங்கோழிக் காலிறகு தலையும் போக்கி குடிக்கமுது குடு
பிளந்துகுடல் வாங்கிபோட்டுத்
தருங்கார் போகரிசிகருஞ் சீரகம் நற்சீரகஞ் சாதிக்காய்
ச்சாதிப்பத் திரியேலம்
பெருங்காயஞ் சுக்கினுடன் மிளகுதிப்பிலி யோமம் பேரான
லவங்கப்பட்டை வசம்புள்ளி
தருங்காத பேரத்தை புள்முருங்கை வேர்செங்கத் தாரித்
தோல் சங்குமயிலடிவேர் குருந்தன் வேரே (53)

வெவ்வேறு சரிநிறையா யதின்பாதி பறங்கிப்பட்டை
மிகத்தான் பண்ணி
இவ்வாகாயாட்டு நீர்பிசைந்து கொண்டு இதைக்கோழி
தனிலடைத்து யிறுகக்கட்டி
ஒவ்வாத திருகுகள்ளி நறுக்கியொரு பானையிட்டு நீர்விட்டு
மேல்வேடுகட்டி உடன்மேல் வைத்து
திவ்வாவி போகாமல் மேன்மூடி தீயெரித்து வெந்துதிறந்து
வாங்கே (54)

வாங்கினிய கோழியதனெலும்பு போட்டு மருந்துடனே
சதைகாய்ந்து வஸ்த்ரகாயம்பண்ணி
பாங்குடனே வெருகடிப் பிரமாணங் கொள்ளு பத்தியமு
முப்பு புளிபால்மோராகா
தாங்கிவரு சூலைகிரந்தி தீரும்சந்து வலிவிப்புருதி உதிரவாயு
போங்கான வாதமுதல் சூலைநோய்தீரும் பொறுத்த
குக்குடா தியதி புகலுவோமே (55)

(செ - ம்)

கருங்கோழியைக் கொண்டுவந்து அதன் கால், தலை, இறகு முதலானவைகளை நீக்கிவிடவும். அதன் மூத்திரக் கிழிக்குடலையும் நீக்கவும்.

பின்னர்,

கருஞ்சீரகம்        கார்போகவரிசி

A siddhadreams ebook

| | |
|---|---|
| நற்சீரகம் | சாதிக்காய் |
| சாதிபத்திரி | ஏலக்காய் |
| பெருங்காயம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| ஓமம் | லவங்கப்பட்டை |
| வசம்பு | பூண்டு |
| பேராத்தை | புன்முருங்கை வேர் |
| செங்கத்தாரிப்பட்டை | சங்கம்வேர் |
| நாயுருவி வேர் | |

இவைகளைச் சமனெடை (வகைக்கு 1 பலம்) எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதன் மொத்த எடைக்குப் பாதி எடை பறங்கிப்பட்டைச் சூரணம் சேர்த்து ஒன்றாகக் கலந்து, வெள்ளாட்டு மூத்திரம் விட்டுப் பிசைந்து கொள்ளவும். இம்மருந்தை கருங்கோழி வயிற்றுக்குள் அடைத்து நன்றாகக் கட்டவும். திருகுக்கள்ளிச் சமூலம் கொண்டு வந்து இடித்து, ஒரு வாயகன்ற பானையிலிட்டுச் சுத்தஜலம் விட்டு, சுத்தமான வஸ்திரத்தால் வேடு கட்டவும். அதன் மேல் மருந்தடைத்த கோழியை வைத்து, வேறொரு வாணலியில் நன்றாக மூடி அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும், ஆவி வெளியே போகாமல் பக்குவப்படுத்தவும். கோழி நன்றாக வெந்த பின்னர், தீயை அணைத்து மருந்துகளையும் சதையையும் வெயிலில் உலர்த்தவும். நன்றாகக் காய்ந்த பின் அவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவு எடுத்து உட்கொள்ளவும்.

**பத்தியம் :**

உப்பு, புளி, பால், மோர், இவைகள் ஆகாது.



**தீரும் நோய்கள் :**

சூலை, கிரந்திகள், மூட்டுவலி, விப்புருதி, உதிரவாயு வாதநோய்கள் முதலான நோய்கள் நீங்கும்.

## கருங்கோழிச் சூரணம் (வேறு)

புகலுகின்ற முதுசாவல் முதுகது பிளந்துப்போடு
மிளகுழக்கு கடுகுழக்குள்ளி
இகலது பெருங்காயமென் கழஞ்சுடனே இனியாவின்
நீரிலரை கள்ளிப்பால் மத்திசெய்து
துகையான கோழிதனி லடைத்துக் கட்டிதுய்யபசு நீரதனில
வெந்துதூள் செய்து
திகராக வெருகடி கொள் சூலைகுன்மம் நீரமை வெப்புப்
பாவை பீலிகை நோய்போமே (56)

(தெ - ள்)

வியாதியில்லாத வாலிபமான ஒரு கருங்கோழியைக் கொண்டு வந்து அதன் கால், தலை, இறகு முதலானவைகளை நீக்கிப் பின் அதன் முதுகைப் பிளந்து குடலை நீக்கி, வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| மிளகு | 1 உழக்கு |
| கடுகு | 1 ,, |
| பூண்டு | 10 வராகனெடை |
| பெருங்காயம் | 10 ,, |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

பின்னர்

A siddhadreams ebook

பசுவின் மூத்திரம், கள்ளிப்பால் இவைகளை வேண்டிய அளவுவிட்டு கன்றாகப்பிசறிக் கோழியின் குடல்களை நீக்கியபின் அதனுள் வைத்துக்கட்டி, பசு மாட்டு மூத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாக வேகவைக்கவும்.

பின்னர்

வெந்த கோழியை யெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி வெய்யிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவு சூரணம் எடுத்து வெந்நீரில் உட்கொண்டுவரச்

சூலை, குன்மம், கிராணைக் கட்டி, வெப்புப்பாவை' பீலிகை முதலான நோய்கள் தீரும்.

## குக்கிலாதிச் சூரணம்

குக்கிலது பத்துப்பலம் வேப்பம்பட்டை வேதில் குறுக்குழி
கட்டித் தூக்கிவாங்கிப்
பக்குவமாய்த் தான்பார்த்து எடுத்துமிக்கப் பாலாவித
தனில்கட்டிச் சுத்திப் பாக்கித்
துக்கமிலாக் கொடிவேலி முக்காவேளை துலங்கு சங்கு
சாறணைவேர் கொன்னைப் பட்டை
நக்க புங்கு பிரண்டை வேரீசுரைவேர் வெருகு சதிரக்கள்ளி
நிலவேம்பு சிவனதைவேரே (60)



சிலமுத்தக்காசு கரிசால் மருள்கிழங்கு திப்பிலிமூலமுடன்
யானைத்திப்பிலி செவ்வியம்
நலமுற்ற திரிகடுகு திரிபலாதி நற்சீரக மதிவிடையந்
துலகற்கடகசிங்கி சிறுதேக்குத் தோல்வசம்பு வாய்விடங்க
மசமோதகமஞ்சள்
பிலமுத்த கொத்தமல்லி குராசானியோமம் பெருமரத்தோ
லிலங்கப்பட்டை சிறுநாகப் பூவே (61)

பூவான கிராம்புனுட மரமஞ்சள் கோட்டம் பொருந்து
காட்டாத்திப்பூ வேலமரத்தை
நேர்வான வெங்காரம் வளகிலிந்துப்பு நிகரான கல்லுப்பு
யெமச்சாரஞ் சத்திச்சாரம்
தாவான பெருங்காயம் கடுகரோகிணி கற்பூரம் தன்னோடு
கந்தபற்பமப் ரசபற்பம்
மேவாய் நீ வெள்ளீயபற்பம் கெந்தகசுத்தி மேவுசமனீ
கொள் தூளாய்த்தேனிற் சர்வவியாதி விடுமென்றே (62)

(செ - ம்)

சுத்தமான குக்கில் 10 பலம் எடுத்து ஒரு துணியில் மூட்டையாகக் கட்டவும். வேப்பம்பட்டையைச் சிதைத்து ஒரு பாத்திரலிட்டுச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின் மேலேற்றவும். அந்தப் பாத்திரத்தின் வாய்க்குக் குறுக்கே ஒரு குச்சியை இட்டு, அதன் நடுவின் முன் சொன்ன மூட்டையைக் கட்டித் தொங்க விடவும். பாத்திரத்திலிருக்கும் தண்ணீரில் படக் கூடாது.

பின்னர்

அடுப்பை மூட்டிக் கொதிக்க வைத்து அதன் ஆவி குக்கில் மூட்டையின்மேல் படும்படியாகப் பிடிக்கவும். இம்மாதிரியே பாலாவி படும்படியாக மறுபடியும் வேது பிடிக்கவும்.

பின்னர்

A siddhadreams ebook

மூட்டையைப் பிரித்துக் குக்கிலை வெய்யிலில்காய வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| கொடிவேலி வேர் | முக்காவேளை |
| சங்கம் வேர் | சாறணைவேர் |
| கொன்னைப் பட்டை | புங்கு |
| பிரண்டைவேர் | முதியார்கூந்தல் வேர் |
| வெருகங் கிழங்கு | சதுரக்கள்ளி |
| நிலவேம்பு | சுத்திசெய்த சிவதை [வேர் |
| கோரைக்கிழங்கு | கரிசாலங்கண்ணி வேர் |
| மருளங் கிழங்கு | திப்பிலிமூலம் |
| யானைத்திப்பிலி | செவ்வியம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| அதிவிடயம் | கற்கடசிங்கி |
| சிறுதேக்கு | வசம்பு |
| வாய்விடங்கம் | ஓமம் |
| மஞ்சள் | கொத்தமல்லி விதை |
| குரோசாணி ஓமம் | பெருமரத் தோல் |
| லவங்கப்பட்டை | சிறுநாகப்பூ |
| கிராம்பு | மரமஞ்சள் |
| கோஷ்டம் | காட்டாத்திப்பூ |
| கருவேலம் பட்டை | சித்தரத்தை |
| சுத்திசெய்த நேர்வாளம் | |
| ,, இந்துப்பு | |
| வெங்காரம் | கல்லுப்பு |
| எவச்சாரம் | சத்திச்சாரம் |
| பெருங்காயம் | கடுகரோகணி |
| பேரீச்சங்காய் | காந்தபற்பம் |
| அப்ரகபற்பம் | வெள்ளியபற்பம் |
| சுத்திசெய்த கெந்தகம் | |



இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் கொள்ளவும்.

இந்தச் சூரணத்தில் மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

சர்வவியாதிகளும் தீரும்.

## குக்கில் சூரணம்

இடுகின்ற குக்கில் பலம்ரெண்டு சுத்தியா
மிதனுடன் பறங்கிப் பட்டைப்பலம் நாலு
முடுகின்ற கெந்தகஞ் சுத்திசெய் தரைப்பல
மிளகு சுக்குத்திப்பிலி யோமம் குராசாணி
நடுகின்ற சாதிக்காய் சாதிபத்திரி யரத்தைத்
தானிகடு நெல்லியோடு நற்சீரகமதாக
அடுகின்ற பலங்களவை கொண்டு தூளாயாவின்
நெய்தேனிற் கொள்ளுகில கிரந்திப்புண்
மேகமதுபோமே (63)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த குக்கில் | 2 | பலம் |
| ,, பறங்கிப்பட்டை | 2 | ,, |
| ,, கெந்தகம் | ½ | ,, |

| | |
|---|---|
| மிளகு | திப்பிலி |
| குராசாணியோமம் | சாதிப்பத்திரி |
| சாதிக்காய் | தான்றித்தோல் |
| சிற்றரத்தை | சீரகம் |
| நெல்லிமுள்ளி | |

இவைகள் வகைக்கு 1 பலம்

19

A siddhadreams ebook

இவைகளைச் சேர்த்துக் கல்லுரலிலிட்டு, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனிலோ நெய்யிலோ உட்கொள்ளவும்

சூலை, கிரந்திகள், புண், மேகம் முதலான நோய்கள் தீரும்.

---

## குக்கில் சூரணம்

பஞ்சவிங் கிதமாகக் குக்கில் சுத்திசெய்திட்டு
பார்வட்டத் திருப்பிவெர் தேவதாரமும் விளங்க
மஞ்சள் மரமஞ்சள் மஞ்சிட்டி யோமம்
வருகருஞ் சீரகம் வசம்பு பேய்ப்புடலும்
செஞ்சொல் திரிகடுகு கோட்டமித்துப்பு
செவ்விய சித்திர மூலம்வெட்டாலை
மிஞ்சுவில் வப்பிஞ்சு யிவைசரிகள் நிறையா
யிதன்சரி குக்கிலது சூரணமாமே (64)

சூரண மானபின் தேன்கொண்டு பிசறி
தேரணவே தானிக்கா யளவுபண்ணி
வேறினிய சர்க்கரையில் கொள்ளவினிவாத
மிகுவாயு விக்கம் விட்டுவிடுமென்னத்
தேறனைய தேனிற் கொள்ளவது குட்டஞ்
சிரங்குடன் கரப்பான் கடிகள் விடுமென்ன
சூறனைய நெய்யிற் கொள் குடல்வாயு
மேகங் குன்மமுடன் கிரந்தி ரோகமது குளமே (65)



(3 - ம்)

சுத்திசெய்த குக்கிலியம் 10 பலம்

| | |
|---|---|
| வட்டத்திருப்பிவேர் | தேவதாரு |
| வாயுவிடங்கம் | மஞ்சள் |
| மரமஞ்சள் | மஞ்சிஷ்டா |
| ஓமம் | கருஞ்சீரகம் |
| வசம்பு | பேய்ப்புடல் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கோஷ்டம் |
| இந்துப்பு | செவ்வியம் |
| சித்திரமூலம் | வெட்பாலையரிசி |
| வில்வப்பிஞ்சு | |

வகைக்கு ½ பலம்

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக விடித்துத் தேன் விட்டு பிசறி வைத்துக் கொள்ளவும்.

இதனை

தான்றிக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை

சர்க்கரையுடன் உட்கொள்ள

வாயு, விக்கம் முதலானவை தீரும்.

தேனில் உட்கொண்டால்

குஷ்டம், சிரங்குகள், கரப்பான், கடிவிஷங்கள் கரப்பான் முதலான நோய்கள் நீங்கும்.

நெய்யில் சாப்பிட்டால்

A siddhadreams ebook

குடல்வாயு, மேகம், குன்மம், கிரந்தி முதலான நோய்வகைகள் தீரும்.

## வெள்ளறுகுச் சூரணம்

வெள்ளறுகு சிறுகுறிஞ்சா வக்கணைப்பட்டை
    மிளகறணை கொடிவேலி தருவேப்பம்பட்டை
தெள்ளிய செங்கத்தாரி ஆகாசகருடன்
    சிறக்க மிளகிதனோடு சங்குசமன் கொண்டு சூரணமாய்
உள்ளபடி வெருகடி தேனில் நெய்யில் கொள்ள
    உடலில் வருகடி விஷங்கரப்பான் சூலையுடன் கிரந்தி
தள்ளிவிட்டுப் போமெனவே தான்முனிவர்
    சொன்ன சாத்திரத்தின்படியே வெள்ளறுகு தாமே
(66)

(தி - ள்)

| | |
|---|---|
| வெள்ளறுகு | சிறுகுறிஞ்சா வேர் |
| வக்கணைப்பட்டை | மிளகறணை வேர் |
| கொடிவேலி வேர் | வேப்பம்பட்டை |
| செங்கத்தாரிப் பட்டை | ஆகாசகருடன் |
| மிளகு | சங்கம்வேர் |

இவைகளைச் சரியெடை யெடுத்து, நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டு, இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவு சூரணம் எடுத்துத் தேனிலோ அல்லது நெய்யிலோ உட்கொள்ளவும்.

உடலில் உண்டாகும் கடிவிஷங்கள், கரப்பான், சூலை, கிரந்தி, முதலான நோய்கள் தீரும்.



## கரப்பான், விக்கத்திற்கு "ஈச்வரமூலிச் சூரணம்"

ஈச்ரமூலி கண்டங்கத்திரி மிளியசங்குடன் செங்கத்தாரியும்
விசுசீரகஞ் சுக்கொடு அரத்தையும் விளங்கு ரோகிணி
கருஞ்சீரக மிவ்வகை
நேசமாகவே கொண்டு சூரணியாய் நீ யருந்திட அண்ணு
டகமிப்படிப்
பேசுகின்ற கரப்பானும் விக்கமும் பலங்குறைந்து விடுமெனப்
பேசுவோம் (67)

(தி - ள்)

| | |
|---|---|
| ஈசுரமூலி வேர் | கண்டங்கத்திரி வேர் |
| சங்கம் வேர் | செங்கத்தாரி வேர் |
| சீரகம் | சுக்கு |
| சிற்றரத்தை | கடுகரோகிணி |
| கருஞ்சீரகம் | |

இவைகளைச் சமம் எடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

கரப்பான், விக்கம் முதலானவை நீங்கும்.

## பறங்கிப் பட்டைச் சூரணம்

பறங்கிப்பட்டை கெந்தகஞ் சுத்திசெய்திடும்படி
    பருமான சாதிக்காய் கிரும்பு சிறுநாகப்பூ
திறங்கொண்ட கர்ப்பூரசிலாசத்து சாதிப்பத்திரி
    சித்திரமூலம் வேர்சடா மாஞ்சி லமுக்கிரா

A siddhadreams ebook

திறங்கொண்ட நெல்லாத் தூள்கொண்டு சர்க்கரை
　　நேர்கொண்டுக் கூட்டி நெய்யநிலருத்த
பிறங் கொண்டுபோமே பிரமேகஞ்சூலே
　　பெரியோர்கள் சொன்னவுரை கண்டபடியே　　(68)

(இ - ள்)

| | |
|---|---|
| பறங்கிப்பட்டை | சுத்திசெய்த கெந்தகம் |
| சாதிக்காய் | கிராம்பு |
| சிறுநாகப்பூ | சுத்திசெய்த கர்ப்பூர [சிலாசத்து |
| சாதிப்பத்திரி | சித்திரமூலவேர் |
| சடாமாஞ்சில் | அமுக்கிராக்கிழங்கு |

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து வைத்துக் கொள்ளவும். இதற்கு சரி நிறை சர்க்கரை கூட்டிக் கொள்ளவும்.

இதனை

நெய்யில் குழைத்து உட்கொள்ளவும்.

பிரமேகம், சூலை முதலானவை தீரும்.

## வாதசூலைக்குச் "சாதீபலாதிச் சூரணம்"

படிகொண்டு சாதிக்காய்ப் பத்திரி திப்பிலி
　　பாவுசிறுமூல மிளகுசுக் கோமம்
நெடிகொண்ட கருஞ்சீரகம் சமனும் நீ கொண்டு
　　நீ பண்ணு தூளாய் பிரண்டைத்தூள் சரியாய்
முடிகொண்டு தூளாய்ப் பறங்கிப்பட்டைத் தூள்முன்
　　தூளில் ரெட்டிப் பாகவது கொண்டு
வடிகொண்டு தேனில் மூனுவேரு கடிகொள்ள
　　வாதமது சூலை ரோகமது வறுமே　　(69)



(இ - ள்)

| | |
|---|---|
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| திப்பிலி | சிறுமூலம் |
| மிளகு | சுக்கு |
| ஓமம் | கருஞ்சீரகம் |

இவைகளைச் சரிநிறை யெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இச் சூரணத்திற்குச் சரி நிறை பிரண்டைச் சூரணமும், 2 மடங்கு பறங்கிப்பட்டைச் சூரணமும் சேர்த்து ஒன்று கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதனை

மூவிரல் கொண்ட அளவு மும்முறை எடுத்துத் தேனில் குழப்பி உட்கொள்ள

வாதசூலை தீரும்

## கிரந்திக்குக் கெந்தகாதிச் சூரணம்

நெல்லிக்காய் கந்தகம் பலமாறு நாநாழி
　　பால்நீயு மொருசட்டி விட்டு
நேரான சீலை வேடுகட்டி மேலாக
　　நிறைகொண்ட மருந்து வைத்து
சொல்லி யொருசட்டி மேல்மூடி மண்செய்துத்
　　தோனை வொருகுழியின் வைத்து
சுத்திவர மணலிட்டு மேல்சட்டி காண்பிக்க
　　சூழ்வறளித் தீயு மிட்டு
மெல்லியே ஆறியபின்
　　னெடுத்து வேடு விழ்த்து

A siddhadreams ebook

விழுந்ததற் கெந்தகச் சுத்திமா
　மொன்று விரைந்து நீ காயவைத்து
வல்லியே முன்போல இளநீரி
　லொருசுத்தி வாங்கியதன் வேகமாற
மாதனைய கெந்தக வீரியப்படி
　யாக வகைசெய்யும் வாறதாமே (70)

ஆறுபல கெந்தகத் ததனோடு நெல்லி
　முள்ளி கடுதானிவாயு விளங்கம்
அனலான திப்பிலி மிளகுசுக் கிதனோடு
　ஆனதிப் பிலிமூலமும்
வீறுமிலவங்கப் பத்திரிசா திக்காய்
　மிக்க கருஞ்சீரகம் நற்சீரகம்
வேறனைய ஏலமு மியல் கிரும்பிதனோடு
　வெற்கவகை சரிகொண்டிட
கூறுபடி மருந்தெல்லாம் வச்சிரகாயம் பண்ணிக்
　கொண்டுசரி சர்க்கரையுடன்
கூட்டி நெய்யுடன் கொள்ள பித்த
　வுடலுக்காய் கொடுதேனிலது கொள்ளவே
மாறுபடுமேக சூலை வருதாகம் வாயுவது
　உதிரனைவு மாதர்சூலை கிரந்தி
புண்மூல பவுத்திரமுடன் வாதைபல நோவு
　நீருமான படி வீரிய
மீறுமிறு திண்ணமென வானவர்
　விதித்த வுரையே (71)

**(இ-ள்)**

நெல்லிக்காய் கெந்தகம் 6 பலம் எடுத்து வைத்துக் கொள்ளவும். ஒரு வாயகன்ற வாணுவில் 4 படி சுத்தமானப் பசுவின்பால் விட்டு அதன் வாய்க்கு ஒரு வெள்ளைத் துணியினும் வேடுகட்டவும். அதில் கெந்தகத்தைச் சூரணித்துப் பரவலாக வைத்து, அந்த வாணுவின் வாய்க்குத்தக்கபடி வேறொருவாணுவினால் மூடிச்சீலை மண்செய்யவும்.



ஒரு குழியை வெட்டி அதனுள் பாலுள்ள சட்டியைக் கீழே வைத்துச் சுற்றிலும் மணலைக்கொட்டவும். சீலைமண் செய்த மேல்சட்டியைச் சுற்றிலும் வரளியை யடுக்கித் தீயிடவும். ஆறியபின் சீலைமண்ணைப் பிரித்து வேட்டை அவிழ்த்துப் பாலில் முத்து முத்தாக விழுந்திருக்கும் கெந்தகத்தை அலம்பிக் காயவைக்கவும்.

பின்னர்

இதே போல் இளநீரில் ஒரு தடவை சுத்திசெய்து கொள்ளவும்.

இவ்வாறு சுத்திசெய்த கெந்தகம் 6 பலம்

| | |
|---|---|
| நெல்லிவற்றல் | திப்பிலி |
| கடுக்காய்த்தோல் | மிளகு |
| தான்றித்தோல் | சுக்கு |
| வாயுவிடங்கம் | திப்பிலிமூலம் |
| லவங்கப்பத்திரி | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | சீரகம் |
| ஏலக்காய் | கிராம்பு |

இவைகளைச் சரியளவெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதற்குச் சரியளவு சர்க்கரை கூட்டிக் கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து நெய்யுடன் குழப்பி உட்கொள்ளவும்.

பித்தம், காங்கை முதலானவை தீரும்.

தேனில் குழப்பி உட்கொண்டால்



A siddhadreams ebook

மேகம், சூலை, தாகம், வாயு, விரக்தி, புண், மூலம், பவுத்திரம் முதலானவை தீரும்.

தாது புஷ்டியும் உண்டாகும்.

## மகத்வகாதிச் சூரணம்

மகத்வகாதி கேளீர் வாருடன் கோட்டமேலம்
சுகப்படு முத்தக்காசு அமுக்கிராவேர்
துலங்கு நெருஞ்சி பூனைவேர் தேத்தாம்வித்து
சோதகத்திடு மதுரமிலவங்பத்திரி சீரகஞ்
சந்தம் சாதிக்காய் கிராம்பு நிகருடன்
தவட்சாரி நீள வள்ளிக்கிழங்கு
நீர்முள்ளி விரையோடி லவம் பிசினே (72)

இலகவே ஒவ்வொன்று சரியாகக் கொண்டு
இதனொடை பூமிச் சர்க்கரை நிலப் பனைக்கிழங்கு
துலகவே தூள்பண்ணிச் சர்க்கரை கலந்து
சொல்லிரு காசெடை தேனில்
நலதெள்ளச் சாயங் கால பாலில் நீரிலாகுதல்
கொள்ள நாடாது பிரமிய மூத்திரக்கிரிச்சம்
குலவுசேர் யோனிதோஷங் கல்லெரிப்புக்கொண்ட
நீர்கடுப்பொடு விண்டு நோய் போமே (73)

(இ - ள்)

| | |
|---|---|
| உயர்ந்த கோஷ்டம் | ஏலக்காய் |
| முத்தக்காசு | அமுக்கிரா வேர் |
| நெருஞ்சி வேர் | பூனை வேர் |
| தேத்தாம்வித்து | அதிமதுரம் |
| லவங்கப்பத்திரி | சீரகம் |
| சாதிக்காய் | கிராம்பு |



| | |
|---|---|
| மூங்கிலுப்பு | தண்ணீர்விட்டான் |
| நீர்முள்ளி விதை | இலவம்பிசின் [கிழங்கு |
| பூமிச்சர்க்கரைக்கிழங்கு | |
| நிலப்பனைக் கிழங்கு | |

இவைகளைச் சரியளவெடுத்து நிழலில் காயவைத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இதற்குச் சரியளவு சர்க்கரை கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதில்

2 காசளவு எடுத்துத் தேனிலோ, பாலிலோ அல்லது தண்ணீரிலோ சாயங்கால வேளையில் உட்கொள்ளவும்.

பிரமியம், நீர்ச்சுருக்கு, யோனிதோஷங்கள், கல்லெரிப்பு, நீர்கடுப்பு முதலான நோய்கள் தீரும்.

குறிப்பு: 73 ஆம் செய்யுளில் சீர் சரியாக இல்லை.

## மதனகாமேசுர சூரணம்

ஊமத்தைவிரை கச்சோலம் ஏலம்குரோசானி யோமமிவை
நாமதமான அலினியுடன்சாதிக்காய் சாதிப்பத்திரிசடாமாஞ்சில்
ஓமத்துடனுங் குங்குமப்பூ ஒலியாங் கோட்டந் தாளிக்காய்
சேமத்தான திவிடையஞ் செண்பகப்பூ மிலவங்கமே (74)

இலவங்கப்பத்திரி யாத்திப்பூ விதன்கச்சோல தவட்சாரி
பலமுத்தக் கிராம்புக் குங்குமப்பூ பின்சிறுநாகப்பூ சணல்
புலமுத்த கஞ்சாவிரையதுவும் பூனைக்காலி விரை [விரையும்
சலமுற்ற தாளீசபத்திரி கற்பூரஞ் சாருங்கஸ்தூரி காசுக்கட்டி
ஏமே (75)

A siddhadreams ebook

கட்டித் துவரைதானுளுந்து கதிந்த முத்தம் இலாமிச்சவேர்
தெட்டாமாவின் விரையரசம் விரை நிலப்பனைக்கிழங்கு நன்னாரி
எட்டாபேரீச்ச முந்திரிகைப் பழமிவைகள் சரிதூள்செய்து
மட்டாஞ் சீந்தில் சர்க்கரைபடி பாதி வாங்குசலத் தோடித்
திரியதம் பனமாமே (76)

(இ - ள்)

| | |
|---|---|
| ஊமத்தை விதை | கச்சோலம் |
| ஏலக்காய் | குரோசானி ஓமம் |
| அபினி | சாதிக்காய் |
| சாதிப்பத்திரி | சடாமாஞ்சில் |
| ஓமம் | குங்குமப்பூ |
| கோஷ்டம் | நாஸ்திக்காய் |
| அதிவிடயம் | செண்பகப்பூ |
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| ஆத்திப்பூ | மூங்கிலுப்பு |
| கோரைக் கிழங்கு | நன்னாரிவேர் |
| சிறுநாகப்பூ | சணல்விதை |
| கஞ்சாவிரை | பூனைக்காலி விரை |
| தாளிசபத்திரி | பச்சைக்கற்பூரம் |
| கஸ்தூரி | காசுக்கட்டி |
| துவரை | உளுந்து |
| ஆலம்விதை | இலாமிச்சை வேர் |
| நிலப்பனைக்கிழங்கு | அரசம்விதை |
| பேரீச்சங்காய் | திராக்ஷைப் பழம் |

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலி விட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதன் மொத்த நிறைக்குப் பாதியளவு சீந்திற் சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இதில்



மூவிரல் கொள்ளுமளவு எடுத்து வெந்நீருடன் சாப்பிடவும்.

இந்திரிய ஸ்தம்பனமுண்டாகும்.

## மதனகாச் சூரணம்

முந்திரிகைப் பழவின் கோட்டமுது நீர்
வள்ளிவிதை பூனைக்காலிவிரை
யந்தவசோக மரத்துவிரை யமுக்கிரசவேர்
மதன காமப்பூ
பிந்தா பிரெணங்கர்ப்பூரம் பொரிதா
மிலந்தை விரை தானுந்
நந்தா யிலவங்கப்பட்டைதன் பத்திரியும்
நாடுங்கிராம்பு நாகப்பூவாமே (77)

பூலாங்குங்குமம் வெந்தயமும் பொருந்துபச்சைக் கற்பூரங்
காவாய் வெள்ளைச் சாறணைவேர் காணும்நெருஞ்சில் சமூலமு
மாவாய்ச் சமனாய்த் தூளாக்கி வருசர்க்கரையுஞ் சரிகூட்டி [மாய்
நாவிற்கினியாய் நீ கொள்ளு ரோகம்போம்தம் பனைதானுமே
(78)

(இ - ள்)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | கோஷ்டம் |
| நீர்வள்ளிவிதை | பூனைக்காலி விதை |
| அசோகமரத்துவிதை | அமுக்கிரா வேர் |
| மதனகாமப்பூ | இலந்தைக்கொட்டை |
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| கிராம்பு | நாகப்பூ |
| குங்குமப்பூ | வெந்தயம் |
| பச்சைக்கற்பூரம் | வெள்ளைச்சாறணைவேர் |
| நெருஞ்சில் சமூலம் | |

A siddhadreams ebook

இவைகளைச் சரியெடை யெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து இதற்குச் சரிஎடை சர்க்கரை சேர்த்து பத்திரப் படுத்தவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ள

பற்பல நோய்களும் தீரும். சுக்ரஸ்தம்பனமும் ஏற்படும்.

## அதிவிடையச் சூரணம்

அதிவிடையம் சீரகமில வங்கப் பட்டை
ஆயில்தோல் பெருமரத்தோல் சாதிக்காய்சுக்கு
மதியுப்பு யிலவம்பிசின் குடசப்பாலே
வருகிராம்பிதனுடேகடு தானி நெல்லி
யதிகமாங் காசுகட்டி யிவைகூட
ஆனபடிசரியாகத் தானுண்ணு தேனில்
இதுகொள்ளு இஞ்சிச்சாத் தினுடனெய்யும்
மேருமதி சாரம் கிராணி மூலமது போமே (79)

(இ - ள்)

| | |
|---|---|
| அதிவிடையம் | சீரகம் |
| வெங்கப்பட்டை | ஆயில்யத் தோல் |
| பெருமரத்தோல் | சாதிக்காய் |
| சுக்கு | இந்துப்பு |
| இலவம்பிசின் | குடசப்பாலே |
| கிராம்பு | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| காசுக்கட்டி | |



இவைகளைச் சரியெடை யெடுத்துக் கல்லுரலிலிட்டி டித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனிலோ, இஞ்சிச் சாற்றிலோ, அல்லது நெய்யிலோ உட்கொள்ளவும்.

அதிஸாரம், கிராணி, மூல நோய்கள் முதலானவை தீரும்.

## அரிதகிச் சூரணம்

கடுக்காய்ச் சுட்டுச் சாம்பல்வடிக்கட்டிக் காசுக்கட்டி
இலவம்பிசின் பொன்முசுட்டைவேர்
முடுக்கான அதிவிடயம் சமனாகக் கொண்டு
முதுதேனில் வெருகடி கொண்டுவரும்போது
துடுக்காக வருசீதம் அதிஸாரம் வெப்புசூசிகா
கிராணியது துடராது நிற்குந்
நடுத்தானு முனிவர் சொன்ன வரிதகியைத்
தான் கொள்ளு ரோகஞ் சவுங்குங்காணே (80)

(இ - ள்)

கடுக்காயைச் சுட்டுச் சாம்பலாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இதனுடன்

| | |
|---|---|
| காசுக்கட்டி | இலவம்பிசின் |
| பொன்முசுட்டை வேர் | அதிவிடையம் |

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

இதில்

A siddhadreams ebook

மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ளவும்.

சீதம், அதிஸாரம், கரங்கை, சூதிகாக்கிராணி (பிரஸவித்தவர்களுக்கு ஏற்படும் கழிச்சல்) முதலானவை தீரும்.

---

## நாடிமாதிச் சூரணம்

மாதளங்காயோடு பலமெட்டு ஏலம்
    மருவு நாற்கழஞ்சு கிராம்பு மருவாதி
சேதனைய சிறுநாகம் நாற்கழஞ் சென்ன
    சேருதவட் சாசிவிருகழஞ்சுடனே
கோதனைய கொத்தமல்லி சுக்குதிப்பிலி சீரகங்
    கூறு சிறுமூல மிளகு வகைக்கொரு பலமாய்த்
தூள்பண்ணு வெருகடிகொள் தேனில் நவிரில்
    கொள் கிராணி சாரமகத்திடுமே (81)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| மாதள ஓடு | 8 | பலம் |
| ஏலக்காய் | ½ | ,, |
| கிராம்பு | ½ | ,, |
| சிறுநாகப்பூ | ½ | ,, |
| மூங்கிலுப்பு | ¼ | ,, |
| கொத்தமல்லி விதை | 1 | ,, |
| சுக்கு | 1 | ,, |
| திப்பிலி | 1 | ,, |
| சீரகம் | 1 | ,, |
| மிளகு | 1 | ,, |

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.



இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனிலோ அல்லது தயிரிலோ உட்கொள்ளவும்

கிராணிகள், அதிஸாரம் முதலானவை தீரும்

---

## நாடிமாதிச் சூரணம்

சார்கின்ற தாளிம்பக் காயோடு வில்லப்படிச்
    சதைதரு விளாங்களிச் சதையுமாவிரை
நேர்கொண்ட இலவங்க மிலவம்பிசின் நெருஞ்சிக்
    காய் புளியங் கொட்டைத் தோலோடு
சீர்கொண்ட பெருமரத்தோல் வெள்வேலம் பட்டை
    திரிபலையதிவிடயம் வெட்பாலை
பேர்கொண்ட ஆலம்விழுது வெள்ளிலோத்திர
    பெரியாத்திப் பூப்பொன் முசுட்டைவேராம் (82)

வேகமுள இந்துப்புக் கழக்கொடி வித்து
    வேரோமம் சாதிக்காய் சாதிபத்திரி நற்சீரகம்
பாகமுடன்ரோகணி வகைக்கிரு கழஞ்சு
    பாதிசமன் மாதளைவே ரோடுதூளாய்
ஆகமுடன் வெருகடி கொள் தயிரோடு தேனில்
    லதிசாரக் கிராணிசீழ் விழுகடுப்பு
போகவிடு ரெத்தமூலமுங் வழுப்பும்
    பொறுத்திட மருந்தை விரித்துரைத்திடவே (83)

(இ - ள்)

| | |
|---|---|
| மாதுளை ஓடு | வில்வப்பழச்சதை |
| விளாம்பழச்சதை | மாம்பருப்பு |
| இலவங்கப்பட்டை | இலவம்பிசின் |



A siddhadreams ebook

வசையான முள்ளம் பன்றி உதப்பி பலமொன்று
வறுத்துடனே தூள்பண்ணி வெந்நீரில் கொள்ளு
விசையான வெருநாளை யதிஸாரம் தீரும் வேறு
பண்ணி நெய்யிற்கொள் சங்கிரக்கிராணி சீழ்மூல
சேத்துமபித்த வதிஸாரம் போமே (85)

(தி - ள்)

ஓமம் 2 பலம்

| | |
|---|---|
| அதிவிடயம் | வெந்தயம் |
| இலவம்பிசின் | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | வாயுவிளங்கம் |

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | ½ பலம் |
| மாதளங்காயோடு | 1 ,, |
| முள்ளம்பன்றி முள் சுட்டது | 1 ,, |

இவைகளை இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இத்தூளில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீரில் உட்கொள்ளவும்.

வெகு நாட்பட்ட அதிஸாரம் தீரும்.

நெய்யில் சாப்பிட்டால் சங்கிரக்கிராணி (விட்டு விட்டு ஏற்படும் கழிச்சல்), சீழ் மூலம், சேத்தும பித்த வதிஸாரம் போகும்.



## அதிஸாரந்தீர்க்கு "வில்வாதிச் சூரணம்"

வில்வப்பழ மாதளையோ டிந்துப்பு மிளகுசுக்கு
திப்பிலி செங்கழுநீர் கோஷ்டம் நல்ல
விலவங்கத் தோடதிமதுர மேலம் தற்கிராம்
பிதனோடு புளியங்கொட்டை மாவிரையுஞ்
சொல்லவிரு சீரகமும் சாதிக்கா யிலவம் பிசின்
துய்யதான சந்தனம் விடையம் ஊமத்துவிரை
வல்லரிசி சூரணஞ்செய் சர்க்கரை தேனிற்கொள்
வருகிராணி அதிசாரபாண்டு மேகஞ் சந்நிவிக்கல்
வாகாமென்றே (86)

(தி - ள்)

| | |
|---|---|
| வில்வப்பழம் | மாதளையோடு |
| இந்துப்பு | மிளகு |
| சுக்கு | திப்பிலி |
| செங்கழுநீர்க் கிழங்கு | கோஷ்டம் |
| இலவங்கப்பட்டை | அதிமதுரம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| புளியங்கொட்டை | மாவிரை |
| கருஞ்சீரகம் | சீரகம் |
| சாதிக்காய் | இலவம்பிசின் |
| சந்தனத்தூள் | அதிவிடையம் |
| ஊமத்துவிரை | |

இவைகளைச் சரியெடை யெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதற்குச் சரியளவு சர்க்கரை கூட்டி வைத்துக் கொண்டு 3 விரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் உட்கொள்ளவும்.

A siddhadreams ebook

கிராணிகள், அதிஸாரம், பாண்டு, மேகரோகங்கள், வாந்தி, விக்கல் முதலானவை தீரும்.

## லவங்காதிச் சூரணம்

கிராம்பதிவிடையஞ் சுக்கு சீரகங்
கேழிணிக்கழல்வித் தரத்தை
திரங்கொள் திப்பிலி பேரமட்டி வேர்வட்டத்
திருப்பிவேர் நிலவேம்புஞ் சிறுகாஞ்சோறி
திறம்படு முக்காவேளை மாவிரைபுளி
யங்கொட்டைச் சித்திரமூலிவிழுவேரும்
புறம்புடன் சரிகொள் சூரணம் தேனில்
பொருந்து கொள் குழந்தைகள் வாலக்கிரணி
போமே (86)

(செ - ம்)

| | |
|---|---|
| கிராம்பு | அதிவிடயம் |
| சுக்கு | கழல்வித்து |
| சிற்றரத்தை | திப்பிலி |
| பேராமுட்டி | வட்டத்திருப்பிவேர் |
| நிலவேம்பு | சிறுகாஞ்சொறி |
| முக்காவேளை | மாம்பருப்பு |
| புளியங்கொட்டை | சித்திரமூலவேர் |
| விழுதிவேர் | |

இவைகளைச் சரியெடை யெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில்

முவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் கொடுக்கவும்.



குழந்தைகளுக்கு ஏற்படும் பாலக்கிராணிகள் தீரும்.

## சுக்கில் சூரணம்

முப்பலந்தான் சுக்கதை நெய்தனிற் பொரித்து
முனிமஞ்சள் கரைவிரை சிறுமூலம் விடையந்
தப்பாமல் சுக்குடன் திப்பிலியு மிளகுந்
தான்றிக்கா யோடுநெல்லி விழலரிசி யோமம்
ஒப்பாக அரிசித்திப் பிலிசிற்றலை
முடனுரு பேரேலஞ் செவ்வியெவட்சாரம்
செப்பமுள சூரணம் நெய்யிலது கொள்ளச்
சேற்றுமக் குற்றிநமல் கண்டமாலைப் புண்சூலை
வாயுவுந் தீருமது திண்ணமெனவே (87)

(செ - ம்)

சுத்தி செய்த சுக்கில் — 3 பலம் எடுத்து நெய்யில் பொரித்து வைத்துக் கொள்ளவும்.

இதனுடன்

| | |
|---|---|
| மஞ்சள் | கரைவிரை |
| திப்பிலி | அதிவிடயம் |
| சுக்கு | தான்றித்தோல் |
| மிளகு | விழலரிசி |
| நெல்லிவற்றல் | ஓமம் |
| ஏலக்காய் | அரிசித்திப்பிலி |
| பேரேலக்காய் | செவ்வியம் |
| எவச்சாரம் | |

இவைகளைச் சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு, முவிரல் கொள்ளுமளவெடுத்து நெய்யுடன் குழைத்து உட்கொள்ளவும்.

A siddhadreams ebook

இருமல், கபம், இருமல், கண்டமாலை, புண், சூலை, வாயு முதலானவை தீரும்.

## காந்தச் சூரணம்

காந்தமது சுத்தியாக்கு பலமொன்று கடுக
ரோகிணிபல மொன்று கார்போகம் பலமிரண் டுஞ்
சேந்தவெட்பாலை பலம்ரெண்டு சுக்கு
திப்பிலி பெருங்காய மிளகு நற்சீரகம்
போந்தபடி வெங்காரம் பொரிகடு கிந்துப்பு
பொன்னரி தாரம்நேர் வாளமிரதம்
நேந்தஅரப் பொடிகற்க டகசிங்கி சதகுப்பை
நெல்லிக்காய்க் கெந்தகம்நிறை யொரு கழஞ்சாமே (88)

சுத்தமாம் நொச்சிதன் சாற்றிலரைத்து
வரைசெய் துடன்சூரணாக்கியே
பத்தியாய் வெருகடி நெய்யிலது கொள்ளு
பாணநீர்கடுவாயுவுச்
சித்தியாயுள்ளிரச மிஞ்சிரஸ மிந்துப்பு
துலங்குமா மணக் கெண்ணெயில்
நித்தியம் நீ கொள்ளு குன்மமுடன் வாதை
நில்லாது நீ காண்விளியே (89)

**(இ - ள்)**

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த காந்தம் | 1 பலம் | |
| கடுகரோகிணி | 1 ,, | |
| கார்போகரிசி | 2 ,, | |
| வெட்பாலையரிசி | 2 ,, | |
| சுக்கு | மிளகு | |
| திப்பிலி | சீரகம் | |



| | |
|---|---|
| பெருங்காயம் | பொரித்தவெங்காரம் |
| கடுகு | இந்துப்பு |
| சுத்திசெய்த தாளகம் | |
| ,, நேர்வாளம் | |
| ,, பாதரஸம் | |
| ,, அரப்பொடி | |
| ,, கெந்தகம் | |
| கற்கடகசிங்கி | சதகுப்பை |

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை

முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாகவரைத்துக்கஜ்ஜலியாகச் செய்து கொண்டு, பின்பு மற்றசரக்குகளையும் தூளாக்கிச் சேர்த்து நொச்சிச்சாறு விட்டு நன்றாக வரைக்கவும்.

பின்னர்

உலர்த்தி வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இத்தூளில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து நெய்யுடன் உட்கொள்ளவும்.

நீர்க்கடுப்பு, வாயு முதலியவை நீங்கும்.

பூண்டுச்சாறு, இஞ்சிச்சாறு, இந்துப்பு, ஆமணக் கெண்ணெய் முதலானவைகளில் இச்சூரணத்தை யுட்கொண்டால்.

குன்மநோய் நீங்கும்



A siddhadreams ebook

## சூலைக்குப் பறங்கிப்பட்டைப் பிட்டு

கோதுமை பதினாறெடு கூட்டு நீ பறங்கிப்பட்டை
ஏதுவா யெட்டுஞ் சேர்த்து இடித்தும்பின் கலந்து கொண்டு
போதுறு பிராயின் பட்டை போதித்திட்டுப் பானைதன்னில்
வேதுறு தண்ணீர் விட்டு மிகுத்துவாய்ச் சீலைகட்டே (90)

கட்டியச் சீலைதன்னில் கடிய சூரணந்தான் வைத்துப்
பிட்டதாய்ச் சுட்டுத்தின்ன பொருந்த வெள்ளுள்ளி மரீசந்
தட்டியே போட்டுக் கோழிதன் கறிசோறுதின்ன
எட்டுநாட் கொள்ளச்சூலை மிசைந்திடு புண்கள் போமே (91)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| கோதுமை | 16 | பலம் |
| பறங்கிப்பட்டை | 8 | ,, |

இவ்விரண்டையும் நன்றாக இடித்து மாவாக்கி, பிராயின்பட்டை யரைத்து அதனுள் வைத்து அடையாகச் செய்யவும்.

பின்னர்

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அதன் வாயை ஒரு மெல்லிய வஸ்திரத்தினால் கட்டி அதன் மேல் இந்த அடையை வைத்து, மேலேயொரு பாத்திரத்தினால் மூடி ஆவி போகாமல் வேகவைக்கவும்.

இதனுடன்

மிளகு, பூண்டு இவை தாளித்த கோழிக்கறிச் சோறு உட்கொள்ளவும்.

8 நாட்களில் சூலை நோய், புண்கள் முதலானவை தீரும்.



## கூவிளைச் சூரணம்

சுக்கது மூன்றுமத்தச் சொல்லிய மிளகுநான்கு
மிக்கதிப் பிலிதான் ரெண்டு மேவுசெவ் வியமுமொன்றே
தக்கதாளிச மொன்று தருமரை நாகமூல
மொக்கவே ரென்றசித்திர மூலமென் றோதுங்காலே (92)

ஓதிய ஏலங்காலா யுயர்த்திடு லவங்கம் காலாய்
நீதியாய் லவங்கப்பத்திரி நிறைந்திடுங் காலேகூட்டிச்
சோதிசீரகமும் ரெண்டு துலங்கு கூவிளை யையாறும்
மேதிக்கு ள்ளய்யாறு மிகுந்தே னெட்டுங் கூட்டே (93)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | 3 | பலம் |
| மிளகு | 4 | ,, |
| திப்பிலி | 2 | ,, |
| செவ்வியம் | 1 | ,, |
| தாளிசபத்திரி | 1 | ,, |
| நாகமரவேர் | ½ | ,, |
| சித்திரமூலவேர் | ¼ | ,, |
| ஏலக்காய் | ¼ | ,, |
| கிராம்பு | ¼ | ,, |
| லவங்கப்பத்திரி | ¼ | ,, |
| சீரகம் | 2 | ,, |
| வில்வக்காய் | 30 | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

இதனுடன்

8 பலம் தேன்விட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

## அஸ்வகந்தாதிச் சூரணம்

அஸ்வகந்தாதி பலம்பத்து ஆகுஞ்சாறணை பலம்பத்து
பகநீர்வள்ளி பலம்பத்து பாலில்வெந்து வுலரவைத்து
மிகவா மேலமிலவங்க மீதிலவங்கப் பத்திரிவு
துக லாமிச்சக் கண்டில் வெண்ணெய் சுக்கு சந்தனம்
திரிபலையே (94)

திரிபலை கோஷ்ட மதிமதுர சிறுமல்லிகை வேரோம
மறுகிடுசாதிப் பத்திரிக்காய் வளர்சிறுநாகம் பேரீச்சு
அறிவுடன் வெட்டி முந்திரிகை யவையோ ரொன்று பலமூன்று
தறுகிடு தானிதான்பண்ணிச் சர்க்கரை சரிநேர் கொள்வாயே
(95)

கொள்வாய் தேனில் நெய்யில்லை கொட்டைப்பாக்கு மருவாதி
உள்ளாய் வந்த யத்திஜ்வரம் முழுமெரிவு கரவாத
விள்ளா யக்கினி மந்தமுதல் மேகம் பாண்டு காமாலை
கொள்ளாய் சயமுங் கிராணிகளுங் குன்மம் வலியுங்
குணமென்றே (96)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| அமுக்கிராக் கிழங்கு | 10 | பலம் |
| சாறணைவேர் | 10 | ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | 10 | ,, |

இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக்கி யொன்று கலந்து பாலில் வேகவைக்கவும்.

பின்னர்

இவைகளை நிழலில் உலரவைக்கவும்.

இவைகளுடன்



| | |
|---|---|
| இலவங்கப்பத்திரி | ஏலக்காய் |
| கிராம்பு | இலாமிச்சம் வேர் |
| கண்டில்வெண்ணெய் | சுக்கு |
| சந்தனத்தூள் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| கோஷ்டம் | அதிமதுரம் |
| சிறுமல்லி வேர் | ஓமம் |
| சாதிப்பத்திரி | சாதிக்காய் |
| சிறுநாகப்பூ | பேரீச்சங்காய் |
| வெட்டி வேர் | திராக்ஷைப்பழம் |

முதலான சரக்குகளை வகைக்கு 3 பலம் விதமெடுத்து கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இத்தூளுக்குச் சரியளவு சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இத்தூளில்

3 விரல் கொள்ளுமளவெடுத்துத் தேனிலோ அல்லது நெய்யிலோ உட்கொள்ளவும்.

அஸ்திஜ்வரம், தேக எரிச்சல், கைகால் வாதம், அக்கினி மந்தம், மேகம், பாண்டு, காமாலை, க்ஷயம், கிராணி, குன்மம், வலி முதலானவை நீங்கும்.

## திப்பிலியாதிச் சூரணம்

| | |
|---|---|
| திப்பிலி | வராகனெடை 10 |
| மிளகு | ,, |
| கிராம்பு | ,, |
| கடுக்காய்த்தோல் | ,, |
| இந்துப்பு | ,, |
| வெங்காரப்பொரி | ,, |

A siddhadreams ebook

நாகம்
(சிறுநீரில் 1 ஜாமம் ஊறியெடுத்துச் சுத்தியாய்) வராகனெடை 10

பெருங்காயம்
(தாமரையிலைச் சாற்றில் சூரியபுடமாறுதி) வராகனெடை 10

நெல்லிக்காய்க் கெந்தகம்
(உருக்கி கெப்பிறும், இளநீரிலும் சாய்த்தது) வராகனெடை 10

அனல் கெந்தகம்
(கோமூத்திரத்தில், காடி இவைகளில் போவாயத் தேராக
வேகப்பண்ணி காடியில், கோமியத்தில் அரைத்து
3 புடம் இட்டது) வராகனெடை 10

இவை யெல்லாவற்றையும் சூரணமாகப்பண்ணி அன்னமுண்ட பிறகு ஒரு காசெடை கொள்ளவும்.

ச்லேஷ்மம், க்ஷயம், அக்கினி மாந்தம் முதலானவை தீரும்.

## ஏலாதிச் சூரணம்

ஏலமுடன் கிராம்பிரண்டு பச்சிலையு மூன்று
இயல்நாக நாலுடன் திப்பிலியுமஞ்சி
ஆலமெனு மிளகாறு சுக்கேழு கொண்டு
ஆனகண்டு சர்க்கரையும் பதினைந்து கூட்டிக்
காலமுடன் இந்துப் புத்தரன் முக்கழஞ்சு
பாலில் கண்டுகொள்ள ரெத்தபித்த சயம்பாண்டு
மூலமுடனக்கினி மாந்தம் பீலிகை வெப்பு
முதிர்ந்த வறளிருமலுடன் விக்கலற்றிடுமே (98)

(இ - ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | 1 பலம் |
| கிராம்பு | 2 ,, |



| | |
|---|---|
| பச்சிலை | 3 பலம் |
| சிறுநாகப்பூ | 4 ,, |
| திப்பிலி | 5 ,, |
| மிளகு | 6 ,, |
| சுக்கு | 7 ,, |
| கல்கண்டு | 15 ,, |
| இந்துப்பு | 3¾ வராகனெடை |

இவைகளைச் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில்

3¾ வராகனெடை வீதம் பசுவின் பாலில் உட்கொள்ளவும்.

ரத்த பித்தம், க்ஷயம், பாண்டு, மூலம், அக்கினி மாந்தம், பீலிகை, எரிச்சல், வறட்சி, இருமல், விக்கல் முதலானவை தீரும்.

## பித்தத்திற்குப் பஞ்சதாரைச் சூரணம்

பஞ்சதாரை நாற்கழஞ்சு பருத்தமதுர மிருகழஞ்சு
மிஞ்சிதிப்பிலி யிருகழஞ்சு ஏலந்தானு மொருகழஞ்சு
அஞ்சு நீரும்பொடியாக்கி ஆவின்நெய்யி லருந்துவீரால்
அஞ்சி பித்தம் நாற்பதுவும் பேரமெயோடி யடங்கிடுமே
(99)

(இ - ள்)

| | |
|---|---|
| பஞ்சதாரை (சீனி) | 4 கழஞ்சு |
| அதிமதுரம் | 2 ,, |
| திப்பிலி | 2 ,, |
| இஞ்சி | 2 ,, |
| ஏலக்காய் | 1 ,, |

A siddhadreams ebook

இவைகளை யிடித்துப் பசுவின் நெய்யில் குழைத்து உட்கொண்டால்.

பித்தரோகம் 40 தீரும்.

## குக்கிலாதிச் சூரணம்

நிம்பத்தோ லாடாதோடை நிகழ்த்தும்வேலிப் பருத்தியிலை
பின்புங்கண்டங் காரியிலை பெருகவோரோன் றரைத்துலா
மின்பத்துலனே தான் துவைத்து மிகவுந் தண்ணீ
ரரைத்தூணி
முன்பற் புகட்டி பாண்மதி விட்டுமூடிவோடு கட்டுதே (100)

கட்டாய் குக்கில் பலம்நாலு கருதிவேட்டின் மீதில்வைத்து
வட்டாய் மூடிச் சட்டியதால் வத்தக்காய்ச்சி யந்நீரை
விட்டே கழுவி வெள்ளாட்டுப் பால் மீதேவேடாய் தானவித்து
தட்டா திதனை அதில்கழுவிதானே நறுநெய் தெளித்துவறு
(101)

வறுத்துக் குக்கில் தனிவிரட்டி வளரும் பறங்கிப் பட்டைதனை
முறித்துப்பாலி லவித்துலர்த்தி குட்டிக்குக்கி லுடன்சேர்த்து
குறிக்கும் கெந்தக மிரண்டுபலங் குமரிச்சாற்றில் சுத்திசெய்து
வெறிக்குங் குராசாணி சாதிக்காய் மிக்கபத்திரி திரிகடுகே
(102)

பலமாயொவ் வொன்று கால்கூட்டிப் பதமாய் வெதுப்பி மூன்
மருந்து
குலவுங் கெந்தகங் குக்கில்பட்டை கூட்டியிடித்து வடிகொண்டு
நலமாய் பொடிக்கே நாலிலொன்று நற்சர்க்கரையே
நான்கூட்டி
விலகாதுழக்குத் தேன்கலந்து வேற்கப் பிசைந்து கொள்
வாயே (103)



ஏலங்குழலீரிம் மருந்து இத்தப்படி மண்டலங் கொள்ள
மூலந்தோடு பவுத்திரமு முன்னீர் கிறுசை கிரந்தி குட்டஞ்
சாலப் பிரமேகத் நீர்மாமிலைந் தூல்போலெரியும் புண்புரைகள்
சூலத்துடங்கி வெடிநலே சொறியுஞ் சிரங்கு குணமாமே (104)

கொள்ளாய் பத்தியம் உப்புபுளி கற்புக்கூடா திதற்கு
வெள்ளாட்டுப்புக் கண்டமிக்கக் கூட்டுவது துவரைப்
பருப்புடனே
தன்னாயனைய யாவின்பால் ஆட்டுமுருங்கைக் காயிலையும்
தன்னாயிளங்கி ரைத்தண்டு சுருவாமதேந் தோவியே (105)

(3 - 4)

வேப்பம்பட்டை ஆடாதோடையிலை
வேலிப்பருத்தியிலை கண்டங்கத்தரியிலை

இவைகளை வகைக்கு 300 பலம் எடுத்துக் கல்லுரலி விட்டு இடித்து ஒரு சயம்பூசின பாத்திரத்தில் போட்டுச் சுத்தமான தண்ணீர் 4 மரக்கால் விட்டு, பாத்திரத்தின் வாய்க்கு வெள்ளைத் துணியினால் வேடுகட்டவும். அதன் மேல் குக்கில் 4 பலம் வைத்து, வேறொருபாத்திரத்தினால் மூடி ஆவி வெளியேறாமல் அவிக்கவும். பாத்திரத்திலுள்ள நீர் சுண்டியவுடன் அந்தக் கஷாயம் விட்டே குக்கிலைக் கழுவவும். இதேபோல் வெள்ளாட்டுப் பாலை ஒரு பாத்திரத்திலிட்டு வேடுகட்டி

அதில்

முன் சொல்லிய குக்கிலை வைத்து மறுபடியும் அவிக்கவும். திரும்பவும் ஒரு முறை கழுவி உலர வைத்துப் பசுவின் நெய்விட்டு வறுத்து, வைத்துக் கொள்ளவும்.

வறுத்த குக்கிலுக்கு இருமடங்கு, பாலில் வேக வைத்து உலர்த்திய பறங்கிப்பட்டை சேர்த்துக் கொள்



A siddhadreams ebook

கொள்ளவும். சொற்றுக்கத்தாழைச் சாற்றில் சுத்தி செய்த கெந்திக்காய்க் கெந்தகம் 2 பலம்,

| | |
|---|---|
| குரோசாணி ஓமம் | சாதிக்காய் |
| சாதிப்பத்திரி | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

இவைகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்துப் பொன் வறுவலாக வறுத்து எல்லாவற்றையும் இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்திற்கு காலிலொருபங்கு சீனி சேர்த்துச் சுத்தமான தேன் ஒரு உழக்கும் விட்டுப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

இதனை வெருகு பழைய மட்பாண்டத்தில் பத்திரப் படுத்தவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ள,

மூலம், பவுத்திரம், மேச்சருக்கு, விரத்தி, குஷ்டம், பிரமேகம், சுர்மாமிஸம், எரிச்சலுடன் கூடிய புண், புடைப்புண், சூலை, சொறி, சிரங்கு முதலான நோய்கள் தீரும்.

பத்தியம் :

உப்பு, புளி முதலானவைகள் கூடாது. இச்சா பத்தியமாக இருக்கவும். வெள்ளாட்டு உப்புக் கண்டம், துவரம்பருப்பு, பசுவின்பால், நாட்டு முருங்கைக்காய், முருங்கையிலை, இளங்கீரைத்தண்டு முதலானவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

---



## ருக்குளர் சூரணம்

கெந்தகம் பலமிரண்டு ஆவின்னெய் யாழாழக்கு
 கிளர்பசுவின் பால்சாய்ந்துக் கழுவியேயெடுத்து
முந்திப்போல நையுருக்கி நெய்தன்னாலே முறுகாமல்
 குமரிப்பால் மீதில்சாய்ந்து
வந்தபடி சாதிலிங்கம் வராகனெடை யந்த
 மானனையார் முலைப்பாலில் மூன்றுநாளுதி
கொந்தலராய்! மிருதாரசிங்கி யைந்துவராகன்
 குட்டித்தக் காளிசாற்றில் மூன்று சாமமெரிந்திடே
(106)

திட்டமுடன் கண்ணம்பு நீரிலரிதாரந் தீரவைச்சு முச்சாமந்
 நாக்கி எரித்து
மட்டாகக் கூழ்பாண்டம் குடல்சட்டி யிட்டுமறுபடியுந்
 தாளகத்தைமேல தனைமூடி
வட்டான சட்டிகொண்டு சீலைமண் செய்து வத்திவாவக்கினி
 மெதுவாக எரித்து முச்சாமந்
தட்டாதே தாளகத்தில் சுத்தியாம் படியேதான் செய்வாய்
 முதிராதே பத நீ கண்டே (107)

கண்டங்கத் திரிபிரமி யாடாதோடை உத்தாமணி சீந்தில்
 வேம்பில் பட்டை
கொண்டபடி வகைக்கரை யாய்த்தகர்ந்துநீர் நூணிருக்கிலது
 பலமூன்று செந்திரானசய்க்கட்டி
தண்டாதபடி சட்டிமேல்மூடி மண்செய்து சாமமூன்
 றெரித்துப்பின் ஆவின்பால் வேதில்
மீண்டாத படியெரித்து பாலதனுல் கழுவினைக்
 கெண்ணெய்தனில் வறுத்துவித மாக்கிக்கொள்ளே (108)

கொள்ளு நீ பரங்கிப்பட்டை பலமாறு தூளாக்கி தாழ்க்கி
 சந்தூரக்கல் வித்தன்னே
மெள்ளவே திப்பந்து விட்டு வெல்லக்கா டி [illegible]
 சீலைல் வைத்து மூடிக்கெவித்து

A siddhadreams ebook

பின்னர்

பாத்திரத்தின் வாய்க்குத் தக்கபடி ஒரு சட்டியினால் மூடிச் சீலைமண் செய்யவும்,

இதனை யடுப்பின்மேல் வைத்து 3 சாமங்கள் எரிக்கவும். குக்கிலைத்தனியே எடுத்து மருகான் பசுவின் பாலை ஒரு சட்டியிலிட்டு வெள்ளைத் துணியினால் வேடு கட்டி. அதன்மேல் குக்கிலையிட்டு எரிக்கவும். பாலிலேயே கழுவிக் கொள்ளவும்.

பின்னர்

விளக்கெண்ணெய் விட்டு வறுத்துக் கொள்ளவும்,

**குறிப்பு :**

அடுப்பில் குக்கிலை வறுக்க ஆரம்பித்தால் இளகுமேயன்றி வறுபடாது. இருந்தாலும் இதனை விளக்கெண்ணெயுடன் உருக வைத்துக் கொள்ளவும்.

**பறங்கிப்பட்டைச் சுத்தி :**

பறங்கிப்பட்டை 6 பலம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொள்ளவும். சதுரக்கள்ளியைக் கொண்டு வந்து நறுக்கி யொரு பாத்திரத்திலிட்டு 2 மரக்கால் ஜலம் விட்டு, பாத்திரத்தின் வாய்க்கு வேடுகட்டி அதன் மேல் பறங்கிப்பட்டைத் தூளையிட்டு வேக வைக்கவும்.

இவ்வாறு சுத்திசெய்த எல்லா மருந்துகளையும் ஒன்று சேர்த்து,

| | | |
|---|---|---|
| போளம் | 5 வராகனெடை | |
| சுக்கு | $1\frac{1}{4}$ | ,, |
| திப்பிலி | $1\frac{1}{4}$ | ,, |



| | | |
|---|---|---|
| மிளகு | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| கஸ்தூரிமஞ்சள் | 5 | ,, |
| சிறுதேக்கு | 8 | ,, |
| சிற்றரத்தை | 8 | ,, |
| சதகுப்பை | 6 | ,, |
| குராசாணியோமம் | 5 | ,, |
| ஓமம் | 10 | ,, |
| கொத்துமல்லி | 10 | ,, |
| கருஞ்சீரகம் | 6 | ,, |
| கிராம்பு | 5 | ,, |
| கார்போக விதை | 6 | ,, |
| தாளிசபத்திரி | 5 | ,, |
| திப்பிலி | 8 | ,, |
| வெள்ளைக்குங்கிலியம் | 5 | ,, |
| ஏலக்காய் | 8 | ,, |
| வெட்பாலையரிசி | 6 | ,, |
| சீரகம் | 5 | ,, |
| சத்திசாரணை வேர் | 8 | ,, |
| கொடிவேலி வேர் | 8 | ,, |

இவைகளை எடுத்து காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதற்குச் சமன் சர்க்கரை சேர்த்துத் தினம் 2 வேளை வெருகடித் தூள் உட்கொள்ளவும்.

8 வகைக் குஷ்டரோகங்கள், பக்கசூலை, புண், வாயு, மேகம், பார்ச்வ வாயு, விரணங்கள், கரப்பான், சொறி, குன்மம், பவுத்திரம், அரிப்பு, நீர்முட்டல், கடுப்பு, விரைவாதம், கடியும், காசம், ச்வாசம் முதலானவை 20 நாட்களுள் நீங்கும்.

**பத்தியம் :**

கைப்பு, புளிப்புப்பதார்த்தங்களையும், கடுகு முதலானவைகளையும் நீக்கவும்.

A siddhadreams ebook

## அரிதகி வடகம்

கடுக்காய்நா ஞற்பது கோமியத்தில் போட்டுக்
கதிக்கவே மூணுநா ளூறியபின் னெடுத்து
முடுக்காகப் பாலதனில் வெந்து வந்தியெடுத்து
முதிர்ந்தபெருங் காயம்வெங்கார பொரியுமிளகுந்
துடுக்காகத்திப் பிலிசுக்கு மிந்துப்பு
துய்யநற் சீரகம் கருஞ்சீரக மேல
மடுக்காம கிராம்பு யெவட் சாரம் வெடியுப்பு
அவையினச மோதகம் நெல்லிமுள் ளியுமே (1)

முன்னுகு ரோகிணி சதகுப்பை மஞ்சள்
முறையாக ஒரோன்று கழஞ்செடைய தாக
என்னுமது தின்பழச் சாற்றரைத்து
இலந்தைக் காய் மருவாதி நிழல்காயவைத்துத்
தின்னுய் வியாதி மந்திப்பு வாயுச்
செரியாமை புளித்தேக்கு வாயூறல் பித்தந்
தன்னேடு விட்டகலு மலசலந்தைப் போக்கும்
தார்வேந்தரிதகி வடயங் கொள் வோரே (2)

(தி - ள்)

கடுக்காய் 40 (எண்ணிக்கையில்) எடுத்துப் பசுவின் மூத்திரத்தில் 3 நாட்கள் ஊறவைக்கவும்.

பின்னர்

இவைகளை பொருபாத்திரத்திலிட்டுப் போதுமான அளவு பசுவின் பால் விட்டுநிறைத்து அடுப்பின் மேலேற்றி வேகவைத்துப் பால் சுண்டியபின் கடுக்காய் களையெடுத்து வெய்யிலில் உலர்த்தவும்.

இதனுடன்



| | |
|---|---|
| பெருங்காயம் | பொரித்தவெங்காரம் |
| மிளகு | திப்பிலி |
| சுக்கு | இந்துப்பு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| எவச்சாரம் | வெடியுப்பு |
| ஓமம் | நெல்லிமுள்ளி |
| கடுகரோகிணி | சதகுப்பை |
| மஞ்சள் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

பின்னர்

எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்கு கவரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ளவும்.

வயிறு மந்தம், வாயு, செரியாமை, புளித்தேப்பம், வாயில் நீரூறல், பித்தம் முதலானவைகள் தீரும். மல ஜலமும் நன்கு கழியும்.

## ராஜ சேகர வடயம்

முந்திரிகைப் பழமதுராமிலுப்பைப்பூ மானே
முதிர்ந்ததா மரையிதழ் சல்லியதன் ஞரியுடனே
சந்தனம் சேரீச்சம் நீர்வள்ளிக் கிழங்குதான்
முத்தக்காசும் வெட்டிவேர் கோஷ்டம்



A siddhadreams ebook

பத்துபடி பச்சைநாபி சுத்தியாக
வராகனெடை கர்ப்பூரங் குங்குமப்பூவும்
பித்தாதே சாஸ்திர வேதியது கூட்டி
பிரியாத படிவகை சமனாய்க் கொள்ளே (3)

கொள்ளு நீ கரும்புச் சாறுதன்னாலே
கூட்டியரை சாமம் நாலுடனதாக
விள்ளு மின்னிப் பயறுகொடிச் சாற்றி
லப்படியே மேவியரை நேகவராகனெடைவடைய
உள்ள நிழலுலரவை தேனிவிடு விடுசுர
முழுலே பயித்திய மூர்ச்சையுடன் காய்ச்சலதுவுந்
தள்ளிவிழு மேக மூத்திரகிருச்சாதாக
மெரிவது விடும்ராச சேகரமதாமே (4)

(செ - ம்)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | அதிமதுரம் |
| இலுப்பைப்பூ | தாமரைவிதழ் |
| சந்தனத்தூள் | பேரீச்சம்பழம் |
| தண்ணீர் விட்டான் கிழங்கு | |
| வெட்டிவேர் | கோரைக் கிழங்கு |
| சுத்திசெய்த நாபி | கோஷ்டம் |
| குங்குமப்பூ | பச்சைக்கர்ப்பூரம் |
| சாஸ்திரவேதி (கொடுக்காப்புளி) | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து ஒரு கல்வத்திலிட்டுக் கரும்பஞ்சாறு விட்டு நன்றாக 4 சாமங்கள் அரைக்கவும். மறுநாள் பயற்றங்கொடிச் சாறுவிட்டு 4 சாமங்கள் அரைக்கவும்.

பின்னர்

இவைகளை 1 வராகனெடை யளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.



இதனை

நிழலில் காயவைத்து பத்திரப்படுத்தி, வேண்டும் போது தேனில் உரைத்துக் கொடுக்கவும்.

ஜ்வரம், காய்ச்சல், பித்தம், மூர்ச்சை, காய்ச்சல், மேகநோய்கள், மூத்திரக்ருச்சம், எரிச்சல் முதலான நோய்கள் தீரும்.

இதன் பெயர் ராசசேகர வடகமாகும்.

## தாளீசாதி வடகம்

தாளீசபத்திரி மிளகத்தைச் சாரமுள்ள திப்பிலி மூலமதுகூட
வாளியிலவங்க மிலேசிறுநாகப்பூ வருமிலாமிச்ச மிருவேலி
யதுவும்
கேளுநற்சீரகம் பருத்திவிரை விளங்கம் கிளர்கழஞ்சாக
வருகொண்டு
தூளாய் தூளியாய் சர்க்கரை சரிகொள்ளு புட்டவிதோறு
பாக்களவு செய் பித்த வாயுவுக்கே (5)

(செ - ம்)

| | |
|---|---|
| தாளிசபத்திரி | மிளகு |
| சிற்றரத்தை | திப்பிலிமூலம் |
| இலவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| இலாமிச்சை வேர் | வெட்டிவேர் |
| சீரகம் | பருத்திக்கொட்டை |
| வாயுவிடங்கம் | |

இவைகளை வகைக்கு 1½ வராகனெடை வீதமெடுத்து பொன் வறுவலாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து, சரியளவு சீனி சேர்த்துக் கொண்டு, ஆவியில்

A siddhadreams ebook

வேகவைத் தெடுத்து பாக்களவு மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

பித்த வாயுவிற்குத் தினம் 1 மாத்திரை உட்கொள்ளவும்.

## பித்தத்திற்கு "இலவங்கப்பத்திரி வடகம்"

இலவங்கப்பத்திரி முக்கழஞ்சு ஏற்கத்தாளீச முக்கழஞ்சு
வலகுந்த மரீச முக்கழஞ்சு மருவுசுக்கு மிருகழஞ்சு
சிலநற் றிப்பிலி நாற்கழஞ்சு சேருங் கிராம்பு மைங்கழஞ்சு
நலதக் கோல மைங்கழஞ்சு நற்றவட்சார மைங்கழஞ்சே (6)

அயம்பா மதுரமொரு பலமித்திரிகை யாம்பலமொன்று
கற்சூரம் பலம்
பையம்பா மிச்சர்க்கரை பலமிரண்டு பாங்காய்க் கர்ப்பூரங்
கழஞ்செடை
யாய்நின்பாகந் தேனதனால் பிசைந்து நெல்லிக்காயளவு
கொள் வீரியமாம்
நனபாகவிரத்த பித்த வரோசிகமிரைப்பு நாடாது மூர்ச்சைச்
சுரம்வாயுவு தாகமது விடுமே (7)

(தி - ள்)

| | |
|---|---|
| லவங்கப்பத்திரி | $3\frac{3}{4}$ வராகனெடை |
| தாளிசபத்திரி | ,, |
| மிளகு | ,, |
| சுக்கு | $2\frac{1}{2}$ வராகனெடை |
| திப்பிலி | $\frac{1}{2}$ பலம் |
| கிராம்பு | $6\frac{1}{4}$ வராகனெடை |
| தக்கோலம் | ,, |
| எவச்சாரம் | ,, |



| | |
|---|---|
| அதிமதுரம் | 1 பலம் |
| திராக்ஷைப்பழம் | ,, |
| பேரிச்சம்பழம் | ,, |
| பச்சைக்கர்ப்பூரம் | $1\frac{1}{4}$ வராகனெடை |

இவைகள் எல்லாவற்றையும் நன்றாகவிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு வேண்டிய அளவு தேன் விட்டுப் பிசைந்து, நெல்லிக்காயளவு உட்கொள்ளவும்.

தாதுபுஷ்டி யுண்டாகும், இரத்த பித்தம், அரோசகம், இரைப்பு, மூர்ச்சை, சுரம், வாயு, தாகம் முதலான நோய்கள் தீரும்.

## கடுப்பு, சுரத்திற்கு "மானபத்திரி வடயம்"

மானபத்திரி வடயமது கேளாய் மருவு கொடிவேலி
பெருங்காயமோமம்
ஆனசிறு தேக்குச் சிறுமூலமிலவங்க மதிவிடையஞ்
செவ்விய கற்கடசிங்கி
வானதிரி கடுகுதிரிபலை அகத்தி விரைவரு மிலவங்கப்
பத்திரி நாகேசுரமும்
தானவாதந் தேவதாரம் செங்கொட்டை தனிமுத்தம்
நரிவிளாப் பட்டைகண்டங் காலியிதே (8)

காடு தோன்று சீந்திலினுள் சர்க்கரையி னேடுகலந்து
சரிநூள் கொண்டு வதன்மூனு சிவதை
தோடுமது நூளக்கி யதன்மூனுபங்கு வெல்லம் சேர்த்
திடித்துப் புன்னைக்காயளவு கொள்ள
வடுமதுவாயுவு வலியுப்பு சங்கடுப்புமல மிறுகல் சுரங்கள்பல
வாதவிடுமாதே (9)

A siddhadreams ebook

(நி - ம்)

| | |
|---|---|
| கொடிவேலி வேர் | பெருங்காயம் |
| ஓமம் | சிறுதேக்கு |
| திப்பிலி | கிராம்பு |
| அதிவிடயம் | செவ்வியம் |
| கற்கடசிங்கி | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | அசத்திவிரை |
| இலவங்கப்பத்திரி | காசுக்கட்டி / காகசேரம் |
| தேவதாரம் | சுத்தியான சேங்கொட் |
| கோரைக்கிழங்கு | கரிவினரப்பட்டை [டை |
| கண்டங்கத்தரி வேர் | காட்டு என்று |
| சீந்தில் சர்க்கரை | |

இவைகளைச் சரியெடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து வைத்துக் கொண்டு, இதற்கு 3 பங்கு சுத்திசெய்த சிவதை வேர்ச் சூரணம் சேர்த்துக் கொள்ளவும். இவைகளுக்கு 3 மடங்கு வெல்லம் சேர்த்துப் புன்னைக் காயளவுள்ள வடகங்களாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

வாயு, வலி, உப்பிசம், கடுப்பு, மலச்சிக்கல், சுரங்கள் வாதநோய்கள் முதலானவை தீரும்

---

## வல்ராக்கிஷ வடயம்

---

வெருகின் கிழங்கு கொடிவேலி மிருத்தசாரணை யெருக்கம்வேர்
திருக்கள்ளிக் கொழுந்துதிரி கடுகுதிப்பிலி சீரகமோமம்வசை



கருவேப்பிலையு மித்துப்பு கடுகுவெள்ளுள்ளி பலங்களதாய்
பருகும் புன்னைக் கிதனெடையும் பாராய் காயங்
கழஞ்செடையே (10)

இடையெடைக ளெல்லா மொன்றாகக் கூட்டியிதைக் குப்பை
மேனிச்சாறு வார்த்தரைத்து
அடையாகவே பண்ணி நிழலுலர்த்தி யன்னோ மென்னெய்
தன்னுடன் பொரித்து
மிடையான் பெறகிட வாயுவுமுலங்கள் விதமான வலிகுன்மம்
வகையெட்டு மாற
நடையென்று வலராக்கிஷ விடையந் தானென்ன முனிவர்
தமிழ் செய்தவரே (11)

(நி - ம்)

| | |
|---|---|
| வெருகக்கிழங்கு | கொடிவேலி வேர் |
| சாறணைவேர் | எருக்கம் வேர் |
| திருக்கள்ளிக் கொழுந்து | |
| சுக்கு | திப்பிலி |
| கடுக்காய்த்தோல் | மிளகு |
| தான்றித்தோல் | சீரகம் |
| ஓமம் | கருவேப்பிலை |
| இந்துப்பு | கடுகு |
| வெள்ளுள்ளி | நெல்லிவற்றல் |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| புன்னைக்கு | எல்லாவற்றிக்கும் சமம் |
| பெருங்காயம் | $1\frac{1}{4}$ வராகனெடை |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, குப்பை மேனிச்சாறு விட்டு நன்றாக வரைத்து அடையாகத் தட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

இவைகளைக் கல்வத்திலிட்டு இடித்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு நன்றாக அரைத்து இலந்தைக் கொட்டை யளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளவும்.

கபம், இருமல் முதலான நோய்கள் தீரும்.

## சங்க க்ஷார வடகம்

சங்குசுட்ட சாம்பல் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துச்
சாதிலிங் கந்திரிகடுகு திரிபலமுங்கூட்டி
அங்குவாய் விளங்கம் திப்பிலிமூலமது
செவ்விய மசமதகம் கிராம்பு இந்துப்புடன்
இங்குவகை கழஞ்சு கொள்சீரக மிருகழஞ்சு
இஞ்சிரசத் தரைத்தரைத்துக் குன்றியளவுண்டை
பங்குபெற மிஞ்சிதனிற் சாற்றிலீடுக [செய்ய
பஞ்சகுன்மம் தீருமெனப்பார்க்க வகைசெய்யே (14)

(தெ - ள்)

சங்குசுட்ட சாம்பல் எலுமிச்சம்பழச் சாற்றி லரைத்து

அதனுடன்

சுத்திசெய்த சாதிலிங்கம்

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| கடுக்காய்த்தோல் | மிளகு |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| கண்டதிப்பிலி | வாய்விடங்கம் |
| மூலம் | செவ்வியம் |
| இந்துப்பு | கிராம்பு |
| பெருங்காயம் | |



இவைகள் வகைக்கு 1½ வராகனெடை

சீரகம் 2½ ,,

இவைகளை இடித்துச் சேர்த்து. இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச் சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர வைத்துக் கொள்ளவும்.

இந்த மருந்தை இஞ்சிச் சாற்றுடன் கொடுக்கவும்.

5 விதகுன்ம ரோகங்களும் தீரும்.

## பஞ்சகுன்மத்திற்கும் " சிஞ்சா க்ஷார வடகம் "

புளியம்பட்டைச் சாம்பலெட்டுச் சங்குநீறெட்டு
பெருந்தச்சோத்த கள்ளியுட சாம்பல் எட்டு
பளியாத கொடிவேலி பலம்நாலு கடுக்காய்
பலமொன்று பஞ்சலவண மிருபலமாய்
வெளியாகு திரிபலை திரிகடுகு கூட்டி
பிருத்தபழம் நிம்மாதித்தன் சாற்றிலரைத்தே
ஒளியாத இலந்தைக்கொட்டை யளவுண்டை உலர்த்தி
இஞ்சிச்சாற்றிலீடு உதரவலி பஞ்சகுன்மம்
விடுமன்றே (15)

(தெ - ள்)

| | |
|---|---|
| புளியம்பட்டைச் சாம்பல் | 8 பலம் |
| சங்கபற்பம் | 8 ,, |
| கள்ளிச்சுட்ட சாம்பல் | 8 ,, |
| கொடிவேலி வேர் | 4 ,, |
| கடுக்காய்த்தோல் | 1 ,, |
| இந்துப்பு | 2 ,, |
| வளையலுப்பு | 2 ,, |

A siddhadreams ebook

| | |
|---|---|
| சோத்துப்பு | 2 பலம் |
| கறியுப்பு | 2 ,, |
| உழமண்ணுப்பு | 2 ,, |
| கடுக்காய்த்தோல் | 1 ,, |
| நெல்லிவற்றல் | 1 ,, |
| தான்றித்தோல் | 1 ,, |
| சுக்கு | 1 ,, |
| திப்பிலி | 1 ,, |
| மிளகு | 1 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூளாக்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதனை இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

5 வித குன்மங்களும் தீரும்.

## நீராமை, பெருவயிறுக்கு "சங்கக்ஷார வடகம்"

சங்குச் சாரதியென்றும் தன்சாம்பலெட்டு தரு
புளியின் பொருக்கினுட சாம்பல் பலமெட்டு
மங்காத கொடிவேலி பலமுமீரெட்டு
மகிமையுள்ள நாவிசுத்தி செய்துப லமொன்று
இங்குபல மொன்று லவண மஞ்சுவகைக் கொண்டு
இனியானைத் திப்பிலித் திரிகடுகு பலங்கள்
தொங்கு கள்ளிப் பாலெட்டு எருக்கம் பாலெட்ட
துரிதான சரிகள்ளிப் பாலெட்டுஞ் சேரே (16)



சேர்ந்து நீ யூறவைத்து பின்னொடு
தெளிவான எலுமிச்சம் பழச்சாற்றி லரைத்து
ஏந்தபடி மாதுளம் பழச்சாறு மிஞ்சிரச
மிதனோடு தானரைத்து மிலந்தைக்கொட்டையள [வுண்டை
சாந்தினு முலர்த்தி சுக்குக் கஷாயமிடு
மிஞ்சி கடியசாறிடு கண்டவுடனே தான்
மாத்திவிடு குன்மம் வாயுநீராமை
மகோதரம் வெம்பும் பாலைபெரு வயிறே (17)

(இ - ள்)

| | |
|---|---|
| சங்கபற்பம் | 8 பலம் |
| புளியம்புராணி சுட்டசாம்பல் | 8 ,, |
| கொடிவேலி வேர் | 16 ,, |
| சுத்தி செய்த நாபி | 1 ,, |
| பொரித்த பெருங்காயம் | 1 ,, |
| இந்துப்பு | 1 ,, |
| வளையலுப்பு | 1 ,, |
| சோத்துப்பு | 1 ,, |
| கரியுப்பு | 1 ,, |
| உழமண் | 1 ,, |
| யானைத்திப்பிலி | 1 ,, |
| சுக்கு | 1 ,, |
| திப்பிலி | 1 ,, |
| மிளகு | 1 ,, |

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு

| | |
|---|---|
| திருகுக்கள்ளிப் பால் | 8 ,, |
| சதுரக்கள்ளிப் பால் | 8 ,, |
| எருக்கம்பால் | 8 ,, |

விட்டு ஊறவைத்து, எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக அரைக்கவும்.

மறுநாள்

A siddhadreams ebook

மாதுளம்பழச் சாறுவிட்டரைக்கவும்.

மறுபடியும்

இஞ்சிச்சாறு விட்டு நன்றாக அரைத்து சுண்டைக் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இம்மாத்திரையிலொன்றைவெறிந்தச் சுக்கு கஷாயம் அல்லது இஞ்சிச்சாற்றுடன், உட்கொள்ள

குன்மம், வாயு, கிராணி, மகோதரம், வெப்புப் பாவை, வெருவயிறு முதலானவை நீங்கும்.

---

## அதிசாரம், கிராணிக்குந் "நுற்பாதி வடகம்"

நுறபாதி வடகமெனும் மருந்து கேளீர்
சொல்லு வட்டத் திருப்பிவேர் மாம்பட்டையுடனே
தப்பாத வாலின் கொழுந்தத் தித்துளிருந்
தனிவில்வக் கொழுந்துடன் பிஞ்சுமிதனோடு
நற்பான முற்றுக்காக மாதுளம் பிஞ்சு
தன்னிலத்தி லாவாரைவேர்ப் பட்டைக் காஞ்சொறி
ஒப்பான குடசப்பாலை யுடப் பட்டை
ஒவ்வொன்று பத்துப்பலங் கொண்டிடித்தே (18)

இடித்த மருந்ததனில் பதக்குநீர் விட்டு
எட்டொன்றாய்க் கஷாய பாகமாய் வடித்து
நுடித்த திரிகடுகு கிராம்பு திப்பிலி மூலத்
நுலங்கு காட்டாத்திப்பூ மாங்கொட்டையோமம்
வெடித்த வெப்பாலைவிரை கழல்கொடிப் பருப்பு
விடையமில வம்பிசின் பெருமரப்பட்டை
நடித்த சாதிப்பூ சாதிக்காய் சீரகம்
நன்விளாம் பிசினிறு கழஞ்சுகொள் வித்தே (19)



வித்தான புளியங் கொட்டைத் தோலிரு கழஞ்சு
மேவியே சடைக்கஞ்சா வறுத்தபொடி மருந்தில்
சுத்தாகமாகக் கால்பாக மிட்டுச்
சுவறவே காஷாய மதுவுடனரைத்துச்
சத்தாகும் பாக்கின் பிரமாண முன்டை
தான்கண்டு தேனில் தமிரிலிடு வீராய்
சத்தான கழிச்சல் பொருமலதி சாரம்
சங்கிரக்கிராணி முதல் வங்குடை படுமே (20)

(தி-ள்)

| | |
|---|---|
| வட்டத்திருப்பி வேர் | மாம்பட்டை |
| ஆலங்கொழுந்து | அத்தித்துளிர் |
| வில்வக்கொழுந்து | வில்வப்பிஞ்சு |
| கோரைக்கிழங்கு | மாதுளம்பிஞ்சு |
| நிலவாரை வேர் | நிலவாரைப்பட்டை |
| காஞ்சொறி | குடசப்பாலைப்பட்டை |

இவைகளை வகைக்கு 10 பலங்கள் விதமெடுத்து, இடித்து 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ⅛ ஆகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுகு |
| கிராம்பு | திப்பிலிமூலம் |
| காட்டாத்திப்பூ | மாங்கொட்டை |
| ஓமம் | வெட்பாலைவிரை |
| கழற்சிப்பருப்பு | அதிவிடையம் |
| இலவம்பிசின் | பெருமரப்பட்டை |
| சாதிப்பத்திரி | சாதிக்காய் |
| சீரகம் | விளாம்பிசின் |
| புளியங்கொட்டைத் தோல் | |

இவைகளை வகைக்கு ½ வராகனெடை விதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

A siddhadreams ebook

இம்மருந்தின்

மொத்த எடைக்குப்பாதி வறுத்த எடைக்கஞ்சா வின் பொடி சேர்த்து, முன் கூறிய கஷாயத்தை விட்டுறவைத்து நன்றாக வரைத்துக் கொட்டைப் பாக் களவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள் ளவும்.

இம்மாத்திரையைத் தினம் 2 வேளை தேனிலோ அல்லது தயிரிலோ உட்கொள்ளவும்.

கழிச்சல், பொருமல், அதிசாரம், சங்கிரக்கிராணி, வங்கு முதலான ரோகங்கள் தீரும்.

## கட்வாதிக் குளிகை.

அபின் கஞ்சாவேல மிலவங்கங் கிராம்பு
 ஆன் பெருமரத்தோல் ஓமந் திரிகடுகு
புலிகொண்ட அதிவிடயஞ் சாதிக்காய் சாதிப்பூ
 புகழுசிறு நாகமுடன் கோட்டம் நீர்முள்ளிவிரையும்
அலிகொண்ட வெள்ளுள்ளி குராசானி யோமம்
 சொல்லுநற் சீரகமிலவம் பிசினுடன்கடுக்காய்
நலிகொண்ட வெந்தயம் கழல்வித்து மாவித்து
 நன்றாக வொவ்வொன்று கழஞ்செடைகளாமே (21)

இடைதப்பா குடசப்பா லைப்பட்டை விரு கழஞ்சு
 மீதற்கு செட்டி பொன்முசுட்டை வேர்முத்நாக
நடைகொண்டு இளவரையாளாகு புடமிட்டுத்
 தானரை நிம்மாதிச் சாறுதனில் நேக



புரைகொண்ட மாதளங்காய் விரைபோக்கி யடைத்துப்
 பூசிமண் மெதுவாய் புடமிட்டுஇளசாய்
விடைகொண்ட வாதகி ஒதிநாவற் பட்டை
 மிருசாற்றி லரைத்துண்டை பாக்களவு கொள்
 தேனில் மீறுது கிராணிதானே (22)

(இ - ள்)

| | |
|---|---|
| அபின் | சுத்திசெய்த கஞ்சா |
| ஏலக்காய் | கிராம்பு |
| லவங்கப்பத்திரி | பெருமரத்தோல் |
| ஓமம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| அதிவிடையம் | சாதிக்காய் |
| சாதிப்பத்திரி | சிறுநாகப்பூ |
| கோஷ்டம் | நீர்முள்ளிவிரை |
| பூண்டு | குராசானி ஓமம் |
| சீரகம் | இலவம்பிசின் |
| கடுக்காய் | வெந்தயம் |
| கழற்சிப்பருப்பு | மாம்பருப்பு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீத மெடுத்துக் கொள்ளவும்.

வெட்பாலைப்பட்டை $2\frac{1}{2}$ வராகனெடையும்
பொன்முசுட்டை வேர் 5 வராகனெடையும்
கோரைக்கிழங்கு 5 வராகனெடையும்

இச்சரக்குகளைப் பொன் வறுலாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாகவரைத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பெரும் மாதளங்காயைக் கொண்டு வந்து அதன் மேல் தோலை ஒருகாலளவு அளவு பெயர்த் தெடுத்து, உள்ளிருக்கும் விதைகளை நீக்கிவிடவும்.



A siddhadreams ebook

அதற்குள் புள் மருந்தைத் தின்றுத் தோஷ மடைந்துச் சிலையன செய்யாயும்.

இதனை

எருக்குள் வைத்துப் புடமிட்டு ஒரு கல்வத்தில் வைத்துக் கொள்ளவும்.

ஒதியம்பட்டை, நாகப்பட்டை இவைகளின் சாறு களைத் தனித்தனியே விட்டு நன்றாக அரைத்து, பாக்களவுள்ள உருண்டைகளாக உருட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

தேனில் ஒரு உருண்டை வீதம் கொடுக்கக் கிராணி கள் தீரும்.

## நண்டலாதி லேகியம்

சங்கம் வேரிடை யிரண்டு கண்டங்காலி
　　நாளிருபத்தஞ்சுபலம் பெருளாகைவேர்
பொங்குமிழ் பேராமல்லி சித்தமல்லி வில்வம்
　　பொருத்துசிறு காஞ்சொறியு முத்தக்காசு
நங்கையாய் சித்தமட்டி நன்னாரிவேரும்
　　நன்றமசெற் நூகுலனே இம்பூரல் வேரும்
மிங்கிவைக இருபது பலங்களாக
　　மிதனோடு செவ்வியமு மிருபத்தஞ்சே　　(க)

அஞ்சாதே திரிகடுகு பலங்கள் பத்து
　　ஆசினையாய் கற்கடக சிங்கி பத்து
மிஞ்சாத படியிடித்து மிருதாவனி நீரும்
　　வேண்டியளவாய் விட்டே யக் கஷாயமாக



அஞ்சாத பழவெல்லம் பலமும் நூறு
　　சுற்றி நீகரைத்திலே சேர்த்திப்பால்
நெஞ்சார நீயனலில் வைத்துக் காய்ச்ச
　　நிகருகக் கற்கமது நீ கொள்வாயே　　(2)

கொள்ளு நீ திப்பிலி யிருபத்தைந்து
　　கூறாக நீ யதனுடனே திரிபலாதி
உள்ளபடி திரிகடுகு ஏலந்தேக்கு
　　ஒளிவனே யரிலவங்கப் பட்டைக்கூடத்
தெள்ளியதோர் சீரகம் லவங்கப் பத்திரி
　　செவ்வியம் திருந்தியதோர் வகைநாலு பலமதாக
மெள்ளவே யிடித்ததனைத் தூளாய்ப் பண்ணி
　　மிகு பெருங்காய மொன்று சேர்க்கநன்றே　　(3)

மூன்றதோடு பின்மேலக் கஷாயத்தன்னில்
　　முறையாக நீ சிறுகதோ றுந்தூவி
நின்றதோர் கரண்டியதால் அடிப்பற்றாமல்
　　நேராக தேனிரண்டு நாழியிட்டுப்
பாண்டமது தனில்விட்டுத் தான்புடத்தில்
　　வைத்துப் பாக்களவு கொண்டுவரச் சுவாசகாசம்
மீன்றுசய மிருமல் பாண்டு மூலமிறு
　　நன்மம் வாந்தி இவை விலகுந்தானே　　(4)

(இ - ள்)

| | |
|---|---|
| சங்கம்வேர் | 25 பலம் |
| கண்டங்கத்திரி | ,, |
| குமிழ் வேர் | 20 பலம் |
| பேராமல்லி | ,, |
| வில்வவேர் | ,, |
| சிறுகாஞ்சொறி வேர் | ,, |
| கோரைக்கிழங்கு | ,, |
| சித்தாமட்டி | ,, |
| நன்னாரிவேர் | ,, |

A siddhadreams ebook

| | |
|---|---|
| ஆதுவேளை வேர் | 20 பலம் |
| இம்பூரல் வேர் | ,, |
| செவ்வியம் | 25 பலம் |
| சுக்கு | 10 பலம் |
| திப்பிலி | ,, |
| மிளகு | ,, |
| கற்கடசிங்கி | ,, |

இவைகளை யொன்றிரண்டாக இடித்து 8 மரக்கால் சுத்த ஜலம்விட்டு எட்டிலொன்றாக்கி வடிக்கட்டிப் பழைய வெல்லம் 100 பலம் போட்டுக் கரைத்துப் பாகுபதமான பின்,

| | |
|---|---|
| திப்பிலி | 25 பலம் |
| கடுக்காய்த் தோல் | நெல்லிவற்றல் |
| தான்றிக்காய்த்தோல் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| சிறுதேக்கு | ஏலக்காய்த்தோல் |
| சீரகம் | லவங்கப்பட்டை |
| செவ்வியம் | லவங்கப்பத்திரி |

இவைகளை வகைக்கு 4 பலங்கள் விதமெடுத்து. இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

பெருங்காயம் 3 பலம் பொரித்து அதையும் தூள் செய்து வைத்துக் கொண்டு

எல்லாவற்றையும்

பாகில் சிறுகச் சிறுகப் போட்டு, அடிபிடிக்காமல் நன்றாகக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

நன்றாக ஆறிய பின்,

சுத்தமான தேன் 2 படிவிட்டுக் குழப்பி ஒரு பாண்டத்திலிட்டு நெல்லுக்குள் புதைத்து வைக்கவும்.



1 மாதஞ் சென்ற பின்

எடுத்து வைத்துக் கொண்டு, 1 பாக்களவு விதம் உட்கொண்டுவரச்

சுவாசகாசம், சயம், இருமல், பாண்டு, மூலம், குன்மம், வாந்தி முதலானவை தீரும்.

## கண்டங்காலி லேகியம்

காரிய கண்டங்காலி கறிமுள்ளி விஷ்ணுக்ராந்தம்
பாரிய சங்கின்பூறல் பருத்திநா தனோடன் னூரி
சீரிய நிலவாவாரை சிறந்தவழு தனைபின்னை
தாரிய பலந்தானெவ்வொன்று தனிபல மன்பதாமே (5)

அன்பதாய்க் கலநீர் விட்டு ஆறிநீர் ரெண்டொண்ணதாக்கி
முன்புறச் சிங்கி கோஷ்டம் முதிர் திரிகடுகு நாகம்
வன்புறு வரத்தை யேலம் மாசிக்காய் திரிபலைவெங்காரம்
பின்புறு வெட்பாலை விழலரிசிக் கடுகுரோகணியுஞ் சேரே
(6)

சேர்வாய் விளங்க மித்துப்பு தேக்குடன் சித்திரமூலமது
பார்வேகூகை நீர் பருத்த முந்திரிகை மாஞ்சில்
பூர் மோடதுசா திக்காய்புதிய நற்கிராம்பு சேர்த்து
சார்வெல்லம் லேகியந்தேன் சகலகாசங்கள் போமே (7)

(தி - ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | கரிமுள்ளி |
| விஷ்ணுக்ராந்தி | சங்கம்வேர் |
| இம்பூறல் வேர் | பருத்தி |
| ஆதுவேளை வேர் | நன்னாரிவேர் |
| நிலவாவாரை வேர் | கத்திரிவேர் |

A siddhadreams ebook

இவைகளை வகைக்கு 50 பலம் விதமெடுத்து, ஒன்றி ரண்டாகவிடித்து ஒரு பாண்டத்திலிட்டு 12 மரக்கால் சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றிப் பாதியாகு மட்டும் எரித்து வடிக்கட்டி வைத்துக் கொள்ளவும்.

இதற்கு வேண்டிய அளவு வெல்லம் சேர்த்துப் பாகாக்கி,

| | |
|---|---|
| கற்கடசிங்கி | கோஷ்டம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சிறுநாகப்பூ |
| சிற்றரத்தை | ஏலக்காய் |
| மாசிக்காய் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| பொரித்தவெங்காரம் | வெட்பாலை விதை |
| கடுகரோகிணி | வாயுவிடங்கம் |
| இந்துப்பு | சிறுதேக்கு |
| சித்திரமூலவேர் | கூகைநீர் |
| திராக்ஷைப்பழம் | சடாமாஞ்சில் |
| சாதிக்காய் | கிராம்பு |
| கற்பூரம் | |

இவைகளை வகைக்கு 1 பலம் விதம் எடுத்து, வஸ்திர காயஞ் செய்து போட்டு லேகியமாகக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

வேளைக்கு 1 கழஞ்சளவு எடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளச் சகலவித ரோகங்களும் தீரும்.

## சகல சீதங்களுக்கும் " நெரிஞ்சில் லேகியம் "

பொங்கிய நெரியானை நெரிஞ்சியும் பொன்னுங்காணி
தங்கிய தண்ணீர் விட்டான் தளர்செப்பு நெருஞ்சிவில்லை



மங்கிது பலம் பத்தாக வளருநீர் விட்டுக்காய்ச்சி
யங்கித வெல்லம் பாகா யிசைந்தகற் பூரம் சேரே (8)

சேசினி கிராம்பு கோஷ்டம் சீர் சிலாசித்து யிந்துப்பும்
பாசினிச் சீனக்காரம் பகரும் வெங்காரம் மல்லி
நீசினில்பூலா வேரும் நிறைந்த குங்குமப்பூக் கூட்டி
தாரிய நெய்தேன் கூட்டில் சகல சீதங்கள் போமே (9)

(தே - ர்)

| | |
|---|---|
| சிறுநெருஞ்சில் | யானைநெருஞ்சில் |
| பொன்னுங் காணிவேர் | தண்ணீர்விட்டான் |
| செப்புநெருஞ்சிவேர் | [கிழங்கு |

இவைகளை வகைக்கு 10 பலம் விதமெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு எட்டி லொன்றாக வற்றவைக்கவும்.

இதனை வடிக்கட்டி வெல்லம் சேர்த்துப் பாகாக்கிக் கொண்டு,

| | |
|---|---|
| பச்சைக்கர்ப்பூரம் | கிராம்பு |
| கோஷ்டம் | சிலாசத்து |
| இந்துப்பு | சீனக்காரம் |
| வெங்காரம் | கொத்தமல்லிவிதை |
| நீர்ப்பூலாவேர் | குங்குமப்பூ |

இவைகள் வகைக்கு 1 பலம் விதம் எடுத்துச் சூரணித்து முன் பாகில் போட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

வேண்டிய அளவு, தேனும், நெய்யும் சேர்த்துக் கொள்ளவும்.

வேளைக்கு ½ தோலா விதம் உட்கொண்டுவரச் சீதங்கள் பலவும் தீரும்.

A siddhadreams ebook

## திப்பிலியாதிச் சூரணம்

திப்பிலி மிளகு சுக்கு சிறந்திடு பலங்கள் நாலாய்
தப்பிலா வசம்பு ஓமம் சடாமாஞ்சில் விளங்கமல்லி
ஒப்பிடு திப்பிலிமூலங் கோட்டமுளர்ந்திடு மாத்தை தேக்குச்
செப்பிடு சிங்கிலாமிச்சு சீர்வசுவாசி கொண்டே (10)

கொண்ட கொத்தளங்காயும் குலவுநற் சாதிக்காயும்
திண்டிடும் பெருங் குறும்பை நிலவேம்பு முத்தக்காசு
மெண்டிடு கிராம்புவுள்ளி மீறுசந்தன மதுரம்
கண்டனக் கடுக்காய் செவ்வியம் கருஞ்சீரக மாசிக்காயே (11)

காய்ந்திடுங் காசுக்கட்டி கடியதோர் லவணமஞ்சு
போர்ந்திடு பெருங்காயஞ்செங் கழுநீர் பொருந்து தாமரையின்
பூவும்
ஆய்ந்த பூலாத்திக்காய் தேத்தாள் வழிந்தகற் பழத்தின்றோடு
வாய்ந்த வாலுளுவை வித்து வடித்த சூரணஞ் செய்வாயே (12)

**(இ - ள்)**

| | |
|---|---|
| திப்பிலி | மிளகு |
| சுக்கு | |

இவைகள் வகைக்கு 4 பலம்

| | |
|---|---|
| வசம்பு | ஓமம் |
| சடாமாஞ்சில் | வாயுவிடங்கம் |
| கொத்தமல்லி | கண்டத்திப்பிலி |
| கோஷ்டம் | சிற்றரத்தை |
| சிறுதேக்கு | கர்கடசிங்கி |
| இலாமிச்சம் வேர் | இலவங்கப்பத்திரி |
| கொத்தளங்காய் | சாதிக்காய் |
| பெருங்குரும்பை (மருள்) | |
| கோரைக்கிழங்கு | நிலவேம்பு |



| | |
|---|---|
| பூண்டு | கிராம்பு |
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| செவ்வியம் | கடுக்காய்த் தோல் |
| மாசிக்காய் | கருஞ்சீரகம் |
| இந்துப்பு | காசுக்கட்டி |
| வளையலுப்பு | உவர்மண் உப்பு |
| கறியுப்பு | சோத்துப்பு |
| செங்கழுநீர்க் கிழங்கு | பொரித்தபெருங்காயம் |
| பூந்திக்கொட்டை | தேத்தாங்கொட்டை |
| வாலுளுவை விதை | |

இவைகளையும் வகைக்கு 4 பலம் வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

## பீனிச சூரணம்

தலையும் வலித்து ஒருநாசி சளிபோல் விழுந்து ஒரு பட்டு
மலையுநாளே சென்றக்கால் வறண்டேயிறுகித் திரண்டுவிழு
மூலையு மிகவும் நாத்தமதா யூடேதண்ணீர் வீழ்ந்திருக்கும்
பலமுஞ் சென்றால் மூக்கடைக்கும் பீனிசமென்பார்
பெரியோரே (1)

**(இ - ள்)**

தலைவலிக்கும். ஒரு நாசியில் சளியடைத்துக் கொள்ளும், சிறிது காலஞ் சென்றவுடன், சளி வறண்டு இறுகித் திரண்டு விழும். வலியும் உண்டாகும். நாற்றம் நாறும். மூக்கடைக்கும்.

இவைகள் பீனிச லக்ஷணங்களாகும்.



A siddhadreams ebook

ஏலமதிமதுரம் பேராத்தை கோஷ்டம்
    மியலான சிற்றாத்தை நாகப்பூவுஞ்
சீலமுள்ள செவ்வியத்திப் பிலிகிராம்பு
    திகழ்சுக்குச் சாதிக்காய் திப்பிலியின்மூலம்
கோலமுளகுடன் கூகை நீரோடு
    சீரகமுங் கூறரிய சாதிபத்திரி யிலவங்கப்பட்டை
சாலமருந் தொவ்வொன்று சமனாகக் கொண்டு
    சாந்தகமா யாவின்பா லரைத்துக் கூட்டே (4)

கூட்டியதில் வெட்டிவேர் பலமதொன்று
    குளிர்பச்சைச் சந்தனமோர் பலமதொன்று
வாட்டமுள்ள லாமிச்சவேர் பலமதொன்று
    வண்ணமுள்ள யாவின்பால் தனிலரைத்துப்
தேட்டமுடன் பால்நாழி எண்ணெய் நாழி [போட்டுத்
    திருத்தவே கஷாயத்தில் வைத்துக் காய்ச்சி
நாட்டமுள்ள மெழுகுபதம் தனிலோரொன்று
    நன்றாகப் புழுகுசட்டம் நறுக்கிவிட்டு வடியே (7)

வடித்தசத் தனுதி யென்னுந் தைலந் தன்னை
    வான்முறையாய் நாலிரண்டு வகைநாளில் மூழ்கத்
தடித்தபித்த ரத்தமாம்லத்தி கரங்கை கா
    லெரிவு சத்திநேத்திர ரோகம் தலைசுழன்ற பித்த
மிடித்த மண்டை வலியினோடு பீனிச மூக்கடைத்தல்
    விளைவுகளு முழுகு நாளில்கசப்புப் புளியு
மொடுத்தடம் கண்மானேயார் தமைப் புணர்தல்
    ஒண்டொடியாய்! வாகடத் திறுண்மை யிதுதானே
(8)

(3 - ம்)

தண்ணீர்விட்டான் கிழங்கு
சீந்தில்கொடி
பூமிச்சர்க்கரைக் கிழங்கு
பொன்னாங்காணிச் சாறு



கீழாநெல்லிச் சாறு
கண்டங்கத்திரி வேர்
வட்டத்துத்தி வேர்
சிறுகீரை வேர்

இவைகளை வகைக்கு 3 பலம் வீதமெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகுமட்டும் எரித்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| வெட்டிவேர் | 1 பலம் |
| அரைத்த சந்தனவிழுது | ,, |
| இலாமிச்சைவேர் | ,, |

இவைகளைப் பசுவின் பால்விட்டுற வைத்துக் கஷாயத்துடன் கலந்து,

| | |
|---|---|
| பசுவின் பால் | 5 சேரும் |
| சுத்தமான நல்லெண்ணெய் | 5 ,, |

விட்டு அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து மெழுகு பதத்தில் இறக்கவும்.

பின்னர்

வடிகட்டித் தைலம் நன்றாக ஆறியபின் புனுகு சட்டம் நறுக்கி விட்டுவைக்கவும். இத்தைலத்தை இரண்டு நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறையோ தலையில் தேய்த்துக் கொண்டு முழுகவும்.

ரத்த பித்தம், அஸ்தி காங்கை, கை கால் எரிச்சல், வாந்தி, நேத்திர ரோகம், தலைசுற்றல், பித்த இடி, மண்டைவலி, பீனிசம், மூக்கடைப்பு, முதலானவை யகலும்

A siddhadreams ebook

**பத்தியம் :**

தலைமுழுகும் நாளன்று காப்பு புளிப்பு முதலான அவையுள்ள பண்டங்கள், ஸ்திரீ ரோகம் முதலானவை கள் கூடாது.

## பிருங்காமலகத் தைலம்

கையாந்தகரை நெல்லிக்காய் கருதுஞ்சாறு நாநாழி
மையாரெண்ணெ யையுழக்கு மதித்தாவின் பாலீர்நாழி
செய்யார் மதுரமீராறு சேரவெரித்துத் தலைமுழுக
அய்யா காசம்பித்தம்போ மடைத்த செவியும் வெளியாமே (9)

**(இ - ள்)**

| | |
|---|---|
| கையாந்தகரைச் சாறு | 4 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |
| சுத்தமான நல்லெண்ணெய் | 5 உழக்கு |
| பசுவின் பால் | 2 படி |

இவைகளை யொன்று கலந்து, அதிமதூரச் சூரணம் 12 பலம் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துத் தலை முழுகிவரக்

காசம், பித்தம், செவியடைப்பு முதலான நோய்கள் நீங்கும்.

## பொன்னுங்காணித் தைலம்

பொன்னுங்காணிச் சிறுபீளை புகழ்நன்னாரி தன்னுடனே
தின்னுவாரை தினகோவை சிறுசேர்வளைய மாம்பல்கொட்டி



அன்னூர் முசுட்டைத் தாழையுடன் பாகற்கோவை முடக்கொத்தான்
மன்னூர் மெச்சுஞ் செங்கழுநீர் மகிழம் பூவேரலைப்பூவே (10)

இலுப்பைப் பூவுடனே நருங்கோவையும்
பொதலுப்பு நீர்முள்ளி பொங்கிய சாறுமே
கல்லுப்பூ நீ தனித்தனி நாழியாய் பலிப்ப
பல்லிப்ப நல்ல பசும்பால் பதக்குமே (11)

பதக்கோடினநீர் தன்னைச் சரியே பகராச்சித்த மட்டியுடன்
இதற்கோ குமரிச்சாறு சரியேற்கும் நெல்லிக் காய்ச்சாறு
முதற்கான கஷாயமதாய்க் காய்ச்சி மொழிவோ மினிக்கேள் கடைச்சரக்கும்
மதத்தார் மதுமர மேலமுடன் வளர்செண்பகப்பூ வுடனீ கூட்டே (12)

நீதிக்கான சீரகமும் நிகருங் கிராம்புப் பட்டையுடன்
சாதிக்காயு மிளகுடனே நக்குங் காசுதிரிபலமு
மாதுக்கான மஞ்சளிஞ்சி மரமஞ்சள் கஸ்தூரி
பேதித்தருளு மஞ்சளொடு பேருங் சிவதை மாஞ்சலுமே (13)

மானேகேளாய்! லாமிச்சம் வரைசந்தனமுஞ் சிறுதேக்கும்
பூனேற்படாகம் வேர்க்கொம்பு பொருந்து மீருள்ளி ருவேலி
தானே சாதிப்பத்திரியுந் தாரங் கோஷ்டம் புழுகுடனே
வானோர் புழுகுசட்டமுடன் வளராவின் பாலூறியுமே (14)

எல்லா மொக்கவுடன் கொண்டு எரித்த கஷாயமுடன்கலந்து
நல்லாவெண்ணெய் நெய்குறுணி நன்றுயெரித்துத் தலைமுழுகச்
செல்லாய்! நயனரோகமெல்லாந் துடந்த முதலாக
தில்லாதோடி விடுமொன்றே நீதிமுனிவாருன் முறையே (15)

A siddhadreams ebook

(தி - ள்)

| | |
|---|---|
| பொன்னாங்காணி | சிறுகீரை |
| கன்னாரிவேர் | ஆவாரைவேர் |
| கோவையிலை | தாமரையிலைச்சருள் |
| ஆம்பல் கிழங்கு | கொட்டிக்கிழங்கு |
| பொன்முசுட்டைவேர் | தாழைவிழுது |
| கற்கோவை | முடக்கத்தான்வேர் |
| செங்கழுநீர்க்கிழங்கு | மகிழம்பூ |
| இலுப்பைப்பூ | கோவைக்கிழங்கு |
| நீர்முள்ளி | |

இவைகளைத் தண்ணீர் விட்டிடித்துத் தனித்தனிச் சாறு 1 நாழி

| | | |
|---|---|---|
| பசுவின்பால் | 2 | மரக்கால் |
| இளநீர் | 2 | ,, |
| சோத்துக்கத்தாழைச்சாறு | 2 | ,, |
| சித்தாமுட்டிக் கஷாயம் | 2 | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | 2 | ,, |

| | |
|---|---|
| அதிமதுரம் | ஏலக்காய் |
| செண்பகப்பூ | சீரகம் |
| கிராம்பு | லவங்கப்பட்டை |
| சாதிக்காய் | மிளகு |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | மஞ்சள் |
| இஞ்சி | மரமஞ்சள் |
| கஸ்தூரிமஞ்சள் | சிவதைவேர் |
| சடாமாஞ்சில் | இலாமிச்சம்வேர் |
| சந்தனத்தூள் | சிறுதேக்கு |
| பற்பாடகம் | சுக்கு |
| பூண்டு | வெட்டிவேர் |
| சாதிபத்திரி | கோஷ்டம் |
| புழுகுசட்டம் | |



இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துப் பசுவின் பால் விட்டுறவைத்து நன்றாக வரைத்து முன் சொல்லிய சாற்றுடன் சேர்த்து,

நல்லெண்ணெய் 10 சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

பலவித நயன ரோகங்களும் தீரும்.

## பிருங்காமலகத் தைலம்

முத்தார் முலையாய் நீர் கேளீர் முதிரா மதுர மெண்கழஞ்சு
சித்தார் சீந்தில் புடோல நிறையாய் சேராவின்பால் நாலெட்டு
வத்தாக க்கொடுப்பை முசுமுசுக்கை மருவுங்குமரி நெல்லிக்காய்
கொத்தார் நாலுமரக்காலுங் கூடமுலைப்பால் வன்னவே (16)

பச்சை நெல்லிக்காய் குறுணி பகருந் தாழை விழுதுடனே
அச்சமறவே குமரிதேத்தான் ஆனைசித்தாமட்டியுடன்
இச்சையுடனே சீந்திலிவை யீரெட்டான பலங்கூட்டி
வெச்சதண்ணீ ரிருநாலு மரக்காலீரெட் டாய்க்காய்ச்சே (17)

காய்ச்சி வடித்த பின்கற்கங் கருதுங்கோட்ட மிலாமிச்சம்
பாய்ச்சு பத்தாம் நக்கோலம் பகருந்தகர மிருவேலி
வாய்ச்ச விழால மஞ்சிட்டி வளர்செவ்வியமுந் திப்பிலியுங்
கூச்சமான கச்சோலம் கொள்ளாயரத்தை வாசியுமே (18)

வளரும் பச்சிலை மேலமுடன் மதுரஞ் சந்தனஞ் சட்டமுடன்
நளரும் நாகப்பூமல்லி சனநன்னாரி திரிபலையுங்

28

A siddhadreams ebook

கோலமுள்ள மருரமொடு எண்ணெய் நாழி தலைவியபால்
நாழிவிட்டுக் குறுகவெந்து
சாலமெய்யில் பூசிடவே குளுந்துபித்தம் தரியாம லோடி
விடும் நப்பாநென்றே (21)

(தி - க)

| | |
|---|---|
| ஏலக்காய் | இராம்பு |
| தேவதாரம் | இலாமிச்சவேர் |
| வெட்டிவேர் | சண்பகப்பூ |
| கோஷ்டம் | சந்தனத்தூள் |
| சித்தாமுட்டிவேர் | அதிமதுரம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துச் சீதாசெங்கழுநீர்ச் சாறுவிட்டு நன்றாக வரைத்து,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 5 சேரும் |
| பசுவின்பால் | 5 சேரும் |

விட்டு ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனை

உடலில் தேய்த்து ஸ்நானம் செய்துவர

பித்த நோய்கள் தீரும்.

## கண்ணோய், தலைநோய், பித்தத்திற்கு "கையாந்தகரை எண்ணெய்"

கண்ணோவுந் தலைநோவுஞ் செவியால் நோவுங்
காத்திடக்கை யாந்தகரை யொடுகத்தாழை



பன்றாகும் நெல்லிமுள்ளி பாலும் நாலும்
பகரவரும் நன்னாரி வெட்டிவேரும்
மின்றாரு மதிமதுரம் நாலதாக
மேவியசந் தனமிரு பலமுங்கூட்டி
நன்றாக வெண்ணெயிது நாழிவிட்டு
நலம்பெறவே வெந்தவெண்ணெய் முழுகிடாயே (22)

எண்ணெயில் முலைப்பால் வார்த்து சுருருகழித்த பின்னை
நண்ணிய பொன்னாங்காணி நன்னாரி முத்தக்காசு
திண்ணிலா மிச்சம் சீந்தில் திருந்திரு வேலிகூட்டி
பண்ணியே தலையில் வார்க்கப் பயித்தியம்
தீருமென்றே (23)

(தி - க)

கையாந்தகரைச்சாறு கத்தாழைச்சாறு
நெல்லிமுள்ளிக்கஷாயம்

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | 4 சேர் |
| நன்னாரிவேர் | வெட்டிவேர் |
| அதிமதுரம் | |
| இவைகள் வகைக்கு | 4 பலம் |
| சந்தனம் | 2 பலம் |

இவைகளை யரைத்து விழுதாக்கிச் சாறுகளுடன் கலந்து,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 5 சேர் |

விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்துத் தலைமுழுகிவரக்

கண்ணோய்கள், தலைவலி, காது ரோகங்கள் உடலில் காங்கை முதலானவை தீரும்.

A siddhadreams ebook

2. இந்த எண்ணெயுடன் மூலைப்பால் விட்டுக் குலுக்கி 1½ நாட்கள் அப்படியே குலுக்கி வைத்துப்

பொன்னாங்காணி வேர்
வெட்டிவேர் நன்னாரிவேர்
இலாமிச்சம் வேர் கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி.

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து இடித்துத் தூளாக்கிப் போட்டுக் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு தலையில் தேய்த்துவரவும்.

பயித்தியந் தீரும்.

## மகாபிருங்காமலகந் தைலம்

விளம்பிய கையாந்தகரை பொன்னாங்காணி
வேகமில்லாத தின்கோவை கசந்தகோவை
வளம்பெறு பொன்னாவாரை நன்னாரி தாழை
வருவிழுது சிறுகீரை மருதம்பட்டை
இளங்குமரி குறுந்தோட்டி நீர்முள்ளியிலை
யருத்துமுசுட்டை முடக்கொத்தான் கொட்டிக்கிழங்
செங்கழுநீர் வள்ளைக்கோரை கிழங்கிவைப்பத் [காம்பல்
தொன்பதையும் விளர்ந்து சொன்னோம் (24)

சொன்னமருந் திவையனைத்துந் தனித்தனி யேதுவைத்து
துலங்கிய சாறொவ்வொன்று ஒருநாழிகொண்டு
மின்னிடையாய் மகிழம்பூ தாழம்பூவும்
மிக்கவிலுப்பைப் பூவுமிலை மூன்றுமொன்றாய்
தண்ணீரிற் போட்டடுப் பில்வைத்துக் காய்ச்சி
நாலொன்றாய்க் குறுகியபின் வடித்துக் கொண்டு



அன்னமே யெள்ளெண்ணெய் படிநாலு (25)
ஆவின்பா லிளநீரவ் வளவுங் கூட்டே

கூட்டியே நெல்லிக்காய் துவைத்தசாறு
குறையாத படிபதி னாறினோடே
காட்டுமருந் திலைகிழங்கு துவைத்தசாறு
கனவரசம் பூ வேந்தக் கஷாயந்தானு
நாட்டுமெண்ணெய் பாலிளநீர் எல்லாமொன்றாக
நற்பாண்டமதில் வார்த்து நாலுநாளுஞ்
சூட்டுப்பின் மேலூறிக் காயும்போது
சொல்லக்கேள் கடைச்சரக்குத் துகைகள்தானே (26)

துகைசேரும் திரிகடுகு கோட்டமஞ்சள்
சொல்லுமதி மதுரமர மஞ்சளோடுந்
தகைதீரு மேலமிலா மிச்சிரு
வேலிசந் தனம்புழுகுஞ் சாந்துப்பட்டை
வகைசேருங் கடுக்காய் நெல்லி தானி
வருகாயுங் கஸ்தூரி மஞ்சள்மாதர்
சிகைசேரும் செண்பகப் பூவுநல்ல (27)
சீரகமுந் திப்பிலியின் மூலந்தேடே

தேடியதோர் மகரப்பூக் காசுக்கட்டி
சித்தரத்தைப் பற்படகம் சிறுகிராம்பு
கூடியகோ ரோசினைக்கஸ் தூரிநல்ல
குலக்காயும் பத்திரியு மாஞ்சில் கொள்ள
நீடியதோரப் படியேவகைக் கோரொன்று (28)
திருத்தாறு கழஞ்சுநிறை நீதியாமே

நீதியா யிம்மருந்தை யிளநீர் வார்த்து
நேகரைத்து யெண்ணெயுடன் னடுப்பில்வைத்து
சோதியா யனலெரித்து மூன்றுநாளுஞ்
சுடக்காய்ச்சி நாலாளுன் சொல்லக்கேளாய்

A siddhadreams ebook

ஆதியாங் கணபதியைப் பூஜை செய்து
அடுப்பி லெண்ணெய் பொங்காதே அமரக்காய்ச்சி
சாதியாய் மெழுகுபத மாகவெந்து
தைலமது வடித்திடுபின் தையலாளே! (29)

தையலே! பித்தைலம் முழுகும்போது
நீலவலியும் நேத்திரத்தில் சகலதோஷம்
மெய்யமக்கு உடல்வெதுப்பு பித்தபாண்டு
மேல் வெழுத்த நாவறட்சி யுழலைதாகம்
கையிேனாடு காலெரிவு யிவைகளெல்லாம்
கனலிட்ட மெழுகென கரைந்து தீரும்
வையகத்தார் கொண்டாடுந் தைலம் நாமம்
மகாபிருங்க மலகமென வழுத்தலாமே (30)

(செ - ம்)

| | |
|---|---|
| கையாந்தகரை | பொன்னாங்காணி |
| கசப்பில்லாக்கோவை | கசப்புக்கோவை |
| பொன்னுவாரை | கன்னுரி |
| தாழைவிழுது | சிறுகீரை |
| மருதம்பட்டை | சோற்றுக்கற்றாழை |
| குறுக்தோட்டி | நீர்முள்ளியிலை |
| முசுட்டை | முடக்கொத்தான் |
| கொட்டிக்கிழங்கு | ஆம்பல்கிழங்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | வள்ளைக்கீரை |
| கோரைக்கிழங்கு | |

இவைகளின் சாறு தனித்தனியே 1 படி.

| | |
|---|---|
| மகிழம்பூ | தாழம்பூ |
| இலுப்பைப்பூ | |

இம்மூன்றும் வகைக்கு 2 பலம் வீதமெடுத்து இடித்து பாத்திரத்திலிட்டு 8 படிக்கு தண்ணீர் விட்டு



அடுப்பின் மேலேற்றி ½-ஆக காய்ச்சி வடிக்கட்டிய கஷாயத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 4 படி |
| ,, பசுவின் பால் | ,, |
| இளநீர் | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | 16 படி |
| பெருமருந்துச்சாறு | 6 படி |
| அரசம்பூக்கஷாயம் | ,, |

இவைகள் எல்லாவற்றையும் ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு அடுப்பின்மேலேற்றிச் சிறுகச்சிறுக 4 நாட்களுக்கு எரிக்கவும்.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கோஷ்டம் |
| மஞ்சள் | அதிமதுரம் |
| மரமஞ்சள் | சந்தனத்தூள் |
| புழுகு | புஞ்சாந்திப்பட்டை |
| கடுக்காய்த்தோல் | வெல்லிவற்றல் |
| தான்றிக்தோல் | கஸ்தூரிமஞ்சள் |
| செண்பகப்பூ | சீரகம் |
| திப்பிலிமூலம் | மதனகாமப்பூ |
| காசுக்கட்டி | சிற்றரத்தை |
| பற்பாடகம் | கிராம்பு |
| ஜாதிக்காய் | ஜாதிபத்திரி |
| ஜடாமாஞ்சில் | கோரோசனை |
| கஸ்தூரி | |

இவைகள் வகைக்கு 7½ வராகனெடை வீதமெடுத்து இடித்து இளநீர் விட்டு நன்றாகவரைத்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேல் வைத்து 3 நாட்களுக்குச் சிறுகச்சிறுகத் தீயிடவும். 4 வது நாளன்று கணபதி

பூ

A siddhadreams ebook

வைத்தியானித்துப் பக்குவப்படுத்தி இறக்கிவைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தினும் தீருமுறிகளாவன

தலைவலி, நேத்திர தோஷம், உடல் மயக்கம், வெதுப்பு, பித்தபாண்டு, காமாலை, உழலை, தாகம், கைகாலெரிவு முதலான ரோகங்கள் நெருப்பிலிட்ட மெழுகைப்போல் நீங்கும்.

இத்தைலத்தின் பெயர் "மஹா பிருங்காமலகத் தைலம்"

## முலைப்பாலெண்ணெய்

மங்கையர் பால் நாநாழி யிருநாழி யாவின்பால்
வளரிளநீ ரிருநாழி யொருநாழி யெண்ணெய்
வெங்கொடு பிடுங்குவேர் சித்தமட்டி
சீதேவியார் முத்தக்கா சோடிருவேலி லாமிச்சஞ்
சங்குபெறு நன்னாரி யமுக்கிரா வாத்தை
சதகுப்பை நாகப்பூ சந்தனமகில் கோட்டந்
திங்களணி சடைமுடியார் பெருமருந்து நீந்திக்க
வென்றேபச் சிலைமாஞ்சில் கொள்ளே (31)

கொள்ளுமதி மதுரங்கச் சோலம் செவ்வல்லிக்
கொடியேலம் குரோசனிவேர்க் கொம்போடில வங்கம்
விள்ளுமர மஞ்சளுடன் தேவதாரம் வேரோன்
திருகழுந்த வேர்க்கொம் பைங்கழந்த
மென்ன வரைத்துக் கரைத்துப் பதத்தனில் வடித்து
மேரும்பூசித் தலைமீதும் வார்த்திடத்
துள்ளுபபரீத பகரம் விஷமகரம்
பித்தசந்தி வாதகரந் தணிந்துபோமே (32)



(செ - ள்)

| | |
|---|---|
| முலைப்பால் | 1 படி |
| பசுவின் பால் | 2 ,, |
| இளநீர் | 3 ,, |
| நல்லெண்ணெய் | 1 ,, |

இவைகளை யொன்றாகக் கலந்து,

| | |
|---|---|
| பிடங்குநாரி வேர் | சித்தாமுட்டி |
| சகதேவி | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| சங்கம்வேர் | மாகாளிக்கிழங்கு |
| அமுக்கிராக்கிழங்கு | சிற்றரத்தை |
| சதகுப்பை | சிறுநாகப்பூ |
| சந்தனத்தூள் | அகில்கட்டை |
| கோஷ்டம் | பெருமருந்து |
| பச்சிலை | சடாமாஞ்சில் |
| அதிமதுரம் | கச்சோலம் |
| செவ்வல்லிக்கொடி | ஏலக்காய் |
| குரோசாணியோமம் | சுக்கு |
| இராம்பு | மரமஞ்சள் |
| தேவதாரம் | |

இவைகளின் வேர் வகைக்கு 2½ வராகனெடை

சுக்கு 6½ ,,

இவைகளை யரைத்து முன் சொன்ன பால் கூட்டிய எண்ணெயுடன் சேர்த்துக் குழைக்கி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும்.

A siddhadreams ebook

பரிதாப சுரம், விஷமஜ்வரம், பித்த சந்நிவாத ஜ்வரங்கள் தீரும்.

## சந்தனாதித் தைலம்

சந்தனந்தா னேழுபலந் தறிந்துநீர் விடுத்துத்
தக்கதோ ரெண்குறுணி குறுணியாய்க் காய்ச்சி
வந்தாவின் பால்குறுணி எண்ணெய் குறுணிகூட்டி
மதுரமொரு மஞ்சிட்டி தகைமேலங் கோஷ்டம்
முந்தாத நன்னாரிபச் சிலைதக்கோலம்
முந்திரிகை பேரீச்சம்பழ மாஞ்சில் வெட்டி
மந்தமெனுஞ் சாதிக்காய் செஞ்சந்தனந்த
காமாலையில்வரு ரோகணியும் நாககேசரமே (33)

ஏற்றதோ ரிலவங்க மஞ்சனக்கல்
மிதமான கற்பூரங் கஸ்தூரி சட்டம்
செற்றவின் புல்லூரி குங்குமப்பூவுஞ்
சிறந்த எண்ணெய் நாழிக்குகழுஞ் செடையேகூட்டி
மாற்றடவே நானரைத்துக் கரைத்து நீ வடித்து
வன்பாகத் தைலமுழுக உடம்பெரிவு மேகம்
ஆற்றிவிடு உஷ்டணமும் பித்தபாண்டு
உருமத்திச்சுரங்கள் வகை ஆறிவிடுந்தானே (34)

(இ - ள்)

சந்தனக்கட்டை 7 பலம் எடுத்து இடித்து 8 மரக்கால் சுத்த ஜலம்விட்டூற வைத்து 1 மரக்காலாக வற்ற வைக்கவும்.

இக்கஷாயத்தை வடிகட்டிப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 மரக்கால் |
| சுத்தமான எள்ளெண்ணெய் | ,, யும் சேர்த்து |



| | |
|---|---|
| அதிமதுரம் | மஞ்சிட்டி |
| சந்தனத்தூள் | ஏலக்காய் |
| கோஷ்டம் | நன்னாரிவேர் |
| பச்சிலை | தக்கோலம் |
| திராக்ஷைப்பழம் | வெட்டிவேர் |
| சடாமாஞ்சில் | செஞ்சந்தனம் |
| சாதிக்காய் | கடுகரோகிணி |
| நாககேசரப்பூ | கிராம்பு |
| அஞ்சனக்கல் | பச்சைக்கற்பூரம் |
| புனுகுசட்டம் | ஆலமரத்துப்புல்லுருவி |
| குங்குமப்பூ | |

இவைகள் வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டரைத்து, கஷாயம் சேர்த்த எண்ணெயுடனே குழப்பி யடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனைத் தலைமுழுகிவர

உடம்பு எரிச்சல், மேகம், உஷ்ணம், பித்தபாண்டு, அஸ்திகாங்கை முதலான நோய்கள் நீங்கும்.

## செங்கழுநீரெண்ணெய்

செங்கழுநீர் நன்னாரி தாமரைக் கிழங்கு லாமிச்சஞ்
செய்யதொரு வெட்டிவேர் சந்தனமதுரம்
பாங்காக வகைக்கு மோரெண் பலமதாகப்
பாத்து நீ சிறுதூணி யளவாக விடுத்துப்
பொங்காம லெட்டி லொன்றாகவே வடித்துப்
புதியசெவ் விளநீர்நா நாழிசேர்த்து
அங்காவின் பால்நா நாழியெண்ணெய் நாநாழி
ஆகவே யிவ்வகை யறியாவகை கேளே (35)

A siddhadreams ebook

கெந்தமொடு செஞ்சந்தன மதுரமேலம்
    கேதகியின் பூப்பொடிபுன் னாகப்பூவும்
நந்தாவின் புல்லூரி சாதிக்காய் கோட்டம்
    நலமான தக்கோலம் நாகேசரமுங்க
பிந்தாக காரகில் பச்சிலை கற்பூரம்
    பெரியகஸ்தூரி குங்குமப்பூவும்
முந்தாத படிநீயும் கழஞ்சாக் கொண்டு
    முதிராமல் காய்ச்சிசந்த னாதிமுழுகுவதே (36)

(இ - ள்)

| | |
|---|---|
| செங்கழுநீர்க்கிழங்கு | தாமரைக்கிழங்கு |
| கன்னாரிவேர் | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | சந்தனத்தூள் |
| அதிமதுரம் | |

இவைகள் வகைக்கு 8 பலம் விதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 8-ல் ஒன்றாக வற்ற வைத்து, வடிக்கட்டி,

| | |
|---|---|
| செவ்விளநீர் | 4 நாழி |
| பசுவின் பால் | ,, |
| சுத்தமான எள்ளெண்ணெய் | ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| செஞ்சந்தனத்தூள் | அதிமதுரம் |
| ஏலக்காய் | தாழம்பூமகரந்தம் |
| புன்னாகப்பூ | ஆலமரப்புல்லுருவி |
| சாதிக்காய் | கோஷ்டம் |
| தக்கோலம் | நாககேசரம் |
| காரகிற்கட்டை | பச்சிலை |
| பச்சைக்கர்ப்பூரம் | கஸ்தூரி |
| குங்குமப்பூ | |



இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்து இடித்துச் சூரணித்துப் போட்டுப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இதன் பெயரும் சந்தனாதித் தைலம் என்பதாகும்.

---

## கேதகீத் தைலம்

தாழைவிழுதுச் சாறுமீராழி தண்ணீர் விட்டான் சாறொருநாழி
நீளியஇளநீர் நெல்லிக்காய்ச் சாறு நாழி
தோழியாய் மஞ்சள்ச்சாறு சுற்றப் பேய்ப்புடலஞ்சாறு
கேழினிநார்த்தம் பழத்தின் சாறுஞ் சிறுகையாந் தகரைச்
சாறே (37)

சாறுள சிறுகீரை தனியுளப் பொன்னாங்காணி
வீறுள வாவின் பாலு மிக்கதோர் நாழிகை
ஊறுதல் லெண்ணெய் குறுணி உத்திடுமுத்தகாக
கூறுள சித்தமுட்டிக் கோதைதன் னரிதானே (38)

தானொடு சீந்திற்றண்டு தழைத்தவால் விழுதுவெட்டி
மானொனு முதியார் கூந்தல் வந்தசாறே விலாமிச்
சானசெங் கழுநீர்தாமரை யதில்வளையந் தூதளை
கானமா நெருஞ்சி கீழ்வா நெல்லிகடிகியே தூராயமன்றே (39)

கடிகியே முகமுழுக்கை கலந்துடன் பலங்களஞ்சாய்
படிபடி வெவ்வேராகப் பத்தியே நறுக்கிக்கூட்டி
வடிவுறத் தண்ணீரெட்டு மரக்கால ளந்துபோட்டுத்
துடியிடை மானே காய்ந்து வடித்துநீர் பதக்குச்சொல்லே (40)

சொல்லிய ஏலமிலவங்கம் துலக்கும் செண்பகம் லாமிச்சு
வல்லநா கேசரம்கோட்டம் மதுரம்வகைக்கொரு பலங்களாக

A siddhadreams ebook

மெல்லியாய் நிலப்பனைக்கிழங்கு நேயபல மேவியக் கடுகிழங்கு
நல்லதோர் பலங்கள் ரெண்டு நயப்புட னரைத்துக் கொள்ளே
(41)

அரைத்திடு கற்கமெண்ணெய் ஆக்கிய தைலமாக்கித்
திரத்துடன் வடித்துமுழ்கத் திருமுனி அருளி தாமே (42)

அக்கினி மந்தகாசம் அங்கத்தில் சயமிருமல்
பக்குபீனிச மூக்கில் பருகுநீர்ப்பாய்ச்சல் தும்மல்
சிக்கிடு ரத்தபீனிசஞ் சிரசினில் வாதமேகம்
மிக்கருளியப் பெரும்பாடு மூத்திர மீறுமென்புருக்கி
போமே (43)

(இ - ள்)

| | |
|---|---|
| தாழைவிழுதுச்சாறு | 2 படி |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| இளநீர் | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |
| பசுமஞ்சள்சாறு | ,, |
| பேய்ப்புடலஞ்சாறு | ,, |
| நார்த்தம்பழச்சாறு | ,, |
| கையாந்தகரைச்சாறு | ,, |
| சிறுகீரைச்சாறு | ,, |
| பொன்னாங்காணி | ,, |
| பசுவின்பால் | ,, |
| நல்லெண்ணெய் | 2 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | சித்தாமுட்டி |
| நன்னாரிவேர் | சிந்தில்கொடி |
| ஆலவிழுது | வெட்டிவேர் |
| மூங்கியார்கூந்தல் | விலாமிச்சவேர் |
| செங்கழுநீர்க் கிழங்கு | தாமரைவளையம் |



| | |
|---|---|
| நாறுவேளைவேர் | நெருஞ்சிவேர் |
| கீழாநெல்லி | நாராய்வேர் |
| முசுமுசுக்கை | |

முதலான சரக்குகளை வகைக்கு 5 பலங்கள் வீத மெடுத்து, வெவ்வேறாக நறுக்கித் தண்ணீர் 8 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி, காலிலொன்றாகும் வரை வற்றவைத்துக் கஷாயத்தை இறுத்துச் சேர்க்கவும்.

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| செண்பகப்பு | இலாமிச்சம்வேர் |
| நாகேசரம் | கோஷ்டம் |
| அதிமதுரம் | |

இவைகள் வகைக்கு 1 பலம்

நிலப்பனங்கிழங்கு 2 ,,

இவைகளை அம்மிதனில்வைத்து ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக வரைத்துக் கற்கமாக்கிச் சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவர

அக்கினி மந்தகாசம், சயம், இருமல், பீனிசம், மூக்கிலிருந்து ஒழுகும் சளி, தும்மல், ரத்த பீனிசம், சிரோவாதம், மேகம், பெருங்பாடு, அதிமூத்திரம், எலும்புருக்கி முதலான ரோகங்கள் தீரும்.



A siddhadreams ebook

## குமரித்தைலம்

குமரிவேர் தான்துவைத்துக் கொள்ளு நாழிச்சாறு
அமரவே யெண்ணெய்நாழி யாவின்பால் நாழிகூட்டி
தமதுட னிளநீர்நாழிச் சந்தனமதுரங் கோஷ்டம்
உமையிலாம் பிச்சிருவேலி உத்ததகர மாஞ்சிலுமே (43)

மாதே துவர்ச்சிகைச் சொல் மருவுஞ் சாதிக்காய் அதரவஞ்சி
மீதேசெங்கழுநீர் நெய்தல் விளங்குங் கொட்டிச் சிறுகீரை
பேதாய் வகைக்கு நேர்கழஞ்சாய்ப் பேணியரைத்து வடித்து வெண்ணெய்
நீதான் முழுகத்தலை நோயும் கண்ணோயு மெகிரும் பித்தம் கண்டிக்குமே (45)

(இ - ள்)

கந்தாழை வேரையிடித்துப் பிழிந்தசாறு 4 படி.
எண்ணெய் 2 ,,
பசுவின் பால் 2 ,,
இளநீர் 2 ,,

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சந்தனத்தூள் | அதிமதுரம் |
| கோஷ்டம் | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | தகரை விதை |
| சடாமாஞ்சில் | பிஞ்சுக்கடுக்காய் |
| சாதிக்காய் | செங்கழுநீர்க் கிழங்கு |
| நெய்தல்கிழங்கு | கொட்டிக்கிழங்கு |
| சிறுகீரைவேர் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை விதமெடுத்து சாறு விட்டு நன்றாக வரைத்து, எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுகி வரவும்.



கண்ணோய்கள், தலைவலி முதலானவைகளும், பித்த நோயும் தீரும்.

## அஸனவில்வாதித் தைலம்

அஸனமகில் வில்வம முக்கிராச் சித்தாமட்டி
நிசமான நீர்வள்ளி நன்னாரி நேராக
வசமாமிளகு திரிபலையும் மேனிநீர்விட்டு
விசையினி யெட்டொன்று மொன்றும் (46)

என்னுமா மிள நீராவின்பா லெண்ணெயுஞ் சரியாய்க்கூட்டி
முன்னமே சித்தரத்தை மூன்று வெட்பாலை வித்து
சன்னமாம் விழலரிசி சந்தனஞ்சிறிய தேக்கு
இன்னமுந் திரிகடுகு இருவேலி தாரந்தானே (47)

தானாக மாஞ்சில் சிறுமூலந் தக்கலாமிச்சங் கோட்ட
மானார்தம்பச்சை மகரப்பூவளர் மஞ்சிட்டி சிறுநாகம்
காணார் பூலாங் கிழங்கேலம் கச்சோலஞ் செவ்வியம் சமன் காண்
தேனாயரைத்துக் கரைத்துச் சேர்த்து வடித்தெண்ணெய் வடியே (48)

வடித்த வெண்ணெய் தலைமுழுக மண்டைக்குத்தலை நீர்பாய்ச்சல்
நடுத்தமகோதர மீளைமுதல் தலைவலி பீனிசங் காதடைப்பு
கடுத்தவாதங் கண்ணோவு காசம்சுரமுத லுள்ள தெல்லாம்
துடித்தே விட்டு விடுமென்று சொன்னார் முனிவோர் சொன்னாரே (49)

(இ - ள்)

| | |
|---|---|
| அஸனம் (வேங்கை) | வில்வம் |
| சித்தாமுட்டி | தண்ணீர்விட்டான் |
| கடுக்காய்த்தோல் | மிளகு [கிழங்கு |

A siddhadreams ebook

| | |
|---|---|
| அகில் கட்டை | அமுக்கிராக்கிழங்கு |
| தான்றித்தோல் | செல்விவற்றல் |

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து இடித்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ¼ ஆக வற்றவைக்கவும்.

இக்கஷாயத்தை யிறுத்து, அதனுடன்,

இளநீர், பசுவின் பால், நல்லெண்ணெய் முதலானவைகளைச் சம அளவு சேர்த்துக் கலக்கவும்.

| | |
|---|---|
| சித்தரத்தை | வெட்பாலை அரிசி |
| விழலரிசி | சந்தனத்தூள் |
| சிறுதேக்கு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| வெட்டிவேர் | தேவதாரு |
| சடாமாஞ்சில் | கோஷ்டம் |
| இலாமிச்சம் வேர் | மஞ்சிஷ்டா |
| மதனகாமப்பூ | பூலாங்கிழங்கு |
| சிறுநாகப்பூ | கச்சோலம் |
| ஏலக்காய் | செவ்வியம் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டு நன்றாக வரைத்து, கஷாயம் சேர்த்த எண்ணெயுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனை வடிக்கட்டித் தினந்தோரும் தலையில் தேய்த்துக் கொண்டு முழுகிவரவும்.

மண்டைச்சூலை, நீர்ப்பாய்ச்சல், மகோதரம், ஈளை, தலைவலி, பீனிசம், காதடைப்பு, வாதங்கள், காசம், சுரம் முதலான கோய்கள் தீரும்.



## பேய்ப்பீர்க்கன் எண்ணெய்

பேய்ப்பீர்க் கிலைச்சா றேருரியும் பின்னூமத்திலைச் சாறுரியும்
வாய்ப்பாணுழி விளக்கெண்ணெய் மஞ்சள் திரிகடு குங்கிலியம்
ஆய்ப்பாய் காசெடை யாய்க்கூட்டி ஆரங்கம்பிப் பிசின்கூட
சாய்ப்பாய்க் காய்ச்சி உட்கொண்டு தடவீர்வீக்கம் வெப்பும்
வலிபோமே (50)

(தி - ம்)

| | |
|---|---|
| பேய்ப்பீர்க்கிலைச்சாறு | ½ படி. |
| ஊமத்தையிலைச்சாறு | ,, |
| ஆமணக்கெண்ணெய் | ,, |

இவைகளையொன்று கலந்து,

| | |
|---|---|
| மஞ்சள் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| குங்கிலியம் | கம்பிப்பிசின் |

இவைகளை காசெடை வீதமெடுத்துத் தூள் செய்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயை வீக்கத்தில் தடவவும்.

வெப்பு, வலி, முதலானவை தீரும்.

## கொன்னைப்பட்டையெண்ணெய்

கொன்னைப்பட்டை பலமூணு கொள்ளுமுள்ளி பலமிரண்டு
உண்ணுமிளகு பலமிரண்டு ஒக்கவரைத்துப் பால்நாழி

A siddhadreams ebook

எண்ணெய் நாழியோரண்ட மிதனோடொக்க நாழியதாய்ப்
பண்ணிக் குடித்து மேனிடவே பாரும் வயிறு சுரம்
போமே (51)

(இ - ள்)

| | |
|---|---|
| கொன்னைப்பட்டை | 3 பலம் |
| முள்ளி | 2 ,, |
| மிளகு | 2 ,, |

இவைகளை யரைத்துப் பசுவின் பால் 1 படியும், ஆமணக்கெண்ணெய் 1 படியும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொண்டு மேனுக்கும் பூசவும்.

சுரம், வயிறுவலி முதலானவை தீரும்.

## தகரையெண்ணெய்

தகரை விரையரக்கு மஞ்சள் சடாமாஞ்சில் கோஷ்டம்
தண்ணீர்விட்டான் கிழங்கினுடன் வழுதலையின் வேரும்
நிகரான மஞ்சிட்டி மரமஞ்ச ளிதுவும்
நேராக வரத்தையுட னிந்துப்புக்கூட
புகலரிய திரவியஞ் சமனாகக் கொண்டு
பொருந்தவே யிடித்துநீர் தூணியே விடுத்து
இகலாக நாநாழி யாகவே வடித்து
யெண்ணெயது நாழியெரி யிதுசுரம் விடுமே (52)

(இ - ள்)

| | |
|---|---|
| தகரைவிரை | அரக்கு |
| சடாமாஞ்சில் | மஞ்சள் |



| | |
|---|---|
| கோஷ்டம் | தண்ணீர்விட்டான் |
| வழுதலைவேர் | மஞ்சிட்டி [கிழங்கு |
| மரமஞ்சள் | சித்தரத்தை |
| இந்துப்பு | திரவியப்பட்டை |

இவைகளைச் சரியெடை யெடுத்து, 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாக வற்றக் காய்ச்சி ஆமணக்கெணய் 1 படி விட்டு, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெய் 1 ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

சுரம் தீரும்.

## க்ஷீரத் தைலம்

தள்ளியபால் நாழியுட னெண்ணெய் யீர்நாழி
தனில்கலந்து பனிரெண்டுநாள் சாறவெயில்வைத்து
கள்ளியரே நன்னாரி முத்தலாம்பிச்சு
கமழாகும் வெட்டிவேர் சீந்திவேர் நிறையாய்
பொன்னாங் காணிவேர திரோடு கூட்டிப்
பொருந்தவரைத் திடுவடித்துப் பூசுதலைமுழுகு
மின்னாரே பீநிவரு பித்தவிடு கண்ணும்
வெளியாகு முனியோனும் விதித்தபடிநீயே (53)

(இ - ள்)

| | |
|---|---|
| பசுவின்பால் | 1 நாழி |
| எண்ணெய் | 2 ,, |

இவ்விரண்டையும் 12 நாட்கள் வெயிலில் வைக்கவும்.

A siddhadreams ebook

பின்னர்,

| | |
|---|---|
| நன்னாரிவேர் | விளாமிச்சைவேர் |
| வெட்டிவேர் | சீந்தில்கொடி |
| பொன்னாங்காணிவேர் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்து இடித்துச் சூரணம் செய்து, கலந்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டு முழுகவும்.

பித்தரோகங்கள், கண்ணோய்கள் முதலானவைகள் நீங்கும்.

## இலாமிச்சைத் தைலம்

இட்டதோரி லாம்பிச்க வெட்டிவேர் சீந்தி
விவ்வகைகள் பலங்கள்பத்து இடித்து நீர்விடுத்து
அட்டபாக மதாய்கஷா யமாயெரித்து
அதிமதுரஞ் சந்தனஞ் செங்கழுநீ ரேலம்
சட்டமா மாஞ்சில் சிறுநாக மிலவங்கம்
சண்பகம் வகைக்குநேர் கழஞ்சுட னரைத்துத்
திட்டமென வெண்ணெயிரு நாழியிலெரித்துச்
சீரகவே நீர்முழுக பித்தவதி சாந்தீரே (54)

(இ - ள்)

| | |
|---|---|
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| சீந்திற்கொடி | |



இவைகள் வகைக்கு 10 பலம்விதம் எடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேல்வைத்து எட்டி லொன்றாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| செங்கழுநீர்க்கிழங்கு | ஏலக்காய் |
| சடாமாஞ்சில் | சிறுநாகப்பூ |
| கிராம்பு | செண்பகப்பூ |

இவைகளை 1¼ வராகனெடை விதமெடுத்து, இடித்து கஷாயம் விட்டரைத்து, நல்லெண்ணெய் 2 படி விட்டு ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவரப்

பித்த அதிஸாரங்கள் தீரும்.

## இலாமிச்சம்வேர்த் தைலம்

சொல்லரிய லாமிச்சவேர் பலமன்பதாகத்
துவைத்துநீர் தூணிவிட்டு நாழியாக்கி
நல்லதோ ரேலம்பச் சிலைகச் சோலம்
நலமான லவங்கமர மஞ்சள் கோஷ்டம்
அல்லலறு மதுரமொடு சந்தனமகில்
அதிவிடைய முத்தமொடு கடுகுரோகிணியும்
வல்லியாய் செண்பகம் வெட்பாலை யரிசி
மதமான சாதிக்காய் நன்னாரிவேரே (55)



A siddhadreams ebook

நன்னெரியாய் வெட்டிவேர் வெளிச்சையின் பிசினும்
　　நாழிக்கு நீ கழஞ் சசகவரை கூட்டுச்
சொன்னபடி முன்ஞேடு நன்ருக வெரித்து
　　சுத்திபண் ணிருகழஞ்சு சட்டமதுவிட்டு
மன்னர் புகழ்வரசமது பிழுகாடவெரித்து
　　வடித்து நீ முழுகிவர விடுத்துவிடு ரோகம்
கன்னியே கண்ஞேவு நலேஞேவு பித்தம்
　　காலெரிவு மேலரிவு தாகம்விடு மென்றே　　(56)

(செ - ம்)

இலாமிச்சை வேர் 50 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 படியாகும்வரை வற்றவைத்து வடிகட்டிக் கொண்டு,

இதனுடன்

| | |
|---|---|
| ஏலக்காய் | பச்சிலே |
| கச்சோலம் | இராம்பு |
| மரமஞ்சள் | கோஷ்டம் |
| அதிமதூரம் | சந்தனத்தூள் |
| அகில்கட்டை | அதிவிடயம் |
| கோரைக்கிழங்கு | கடுகரோகிணி |
| செண்பகமொட்டு | வெட்பாலேயரிசி |
| சாதிக்காய் | நன்னரிவேர் |
| வெட்டிவேர் | வெளிச்சைப்பிசின் |

இவைகளே வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டரைத்து, நல்லெண்ணெய் 1 படியும் சேர்த்து அடுப்பின் மேல்வைத்தெரித்துப் பதத்தில் இறக்கவும்.



பின்னர்

புனுகுசட்டம் 2¼ வராகனெடை யெடுத்து கறுக்கிப் போடவும்.

கண்ஞேய்கள், தலேநோய்கள், பித்தம், கைகால் எரிச்சல், தாகம் முதலானவை தீரும்.

## சித்தாமுட்டித் தைலம்

சித்தமட்டி யரணிவேர் பலமிருவ தாகச்
　　சிறக்கவே நூணி நீ ரெட்டொன்று மிருத்து
வைத்து நீ நாநாழி யெண்ணெய்பால் சரியாய்
　　வருதேவ தாரமுடன் மாஞ்சில்மது காமுஞ்
சுத்தமுள்ள சந்தனமமுக் கிரகோஷ்டந்
　　தும்புராட் டகமொடு குங்கிலியம் நிறையா
யத்தனே நீ ஞழிக்கு கழஞ்செடையா யரைத்து
　　யாக்கி வெண்ணெய் கொள்முழுகு தொக்குவாதம்
　　　　பித்தம் விடுமே (57)

(செ - ம்)

| | |
|---|---|
| சித்தாமுட்டி வேர் | 20 பலம் |
| அரணிவேர் | „ |

எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகுமட்டும் வற்றவைத்து இறுத்துக் கொண்டு,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 1 படியும் |
| பசுவின் பால் | 4 படியும் சேர்த்து |

A siddhadreams ebook

| | |
|---|---|
| தேவதாரம் | சடாமாஞ்சில் |
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| அமுக்கிராக்கிழங்கு | கோஷ்டம் |
| பேராத்தை | குங்கிலியம் |

முதலானவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீத மெடுத்துக் கஷாயம் விட்டரைத்து, எண்ணெயுடன் கலக்கி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனுல் தலைமுழுக

கொக்கு வாதம், பித்தம் முதலானவை தீரும்

## சித்தாமுட்டித் தைலம் (வேறு)

சித்தமட்டி வேரைந்து சீந்தில் தாமரை வளையம்
செங்கழுநீ ரிருவேலி சதாவரிக்கிழங்கு
முத்தமுட னேரிதழ்த் தாமரையின் வேரும்
முசுமுசுக்கை கொடுப்பைவேர் லாமிச்சவேரும்
புத்தியாய்ச் சீதேவி நெல்லியின் பருப்பு
புதுப்பானை நீர்விட்டு வஞ்சுநாளூறி
வத்தியே குறுணியாய் வாங்கியே யிறுத்து
மற்றுவின் பால் குறுணியிளநீர் குறுணிச்சேரே (58)

சேர்குறுணி யெண்ணெய் விடுகற்கமது கேளு
செவ்வல்லிக் கொடியேலஞ் செங்கழுநீர்க் கிழங்கு
காரகில் தேவதார மதுகெந்தம்
கனிமதுரம் நாகப்பூ செண்பகப் பூவும்



பேர்பெரிய கோட்டமோ டிலவங்கப்பட்டை
பிரியமா யொவ்வொன்று வெவ்வேரரைத்து
சாற்றரிய சாதிக்காய் கிராம்பு வசுவாசி
தாவுகச் சோலமுடன் வெந்தயமி தாமே (59)

தாமாகுஞ் செவ்வியஞ் சிறுமூல மிவைகள்
சரக்குட னரைக்கமுங்க கிஷாய முடனரைத்து
ஆமேயிதற்கு மினி மூன்று நாளூறி
அப்புற மிதற்கு நாள் நாலதிலெரித்து
காமவேள் நாவிப் புழுகு கற்பூரங்
கலந்து நீ காய்ச்சிவடி பனியில் நீ வைத்தே
சோமனே ஆமுடல்கள் பித்தவெரி ரோகஞ்
செல்லாத படியகலும் தில்லாதுமானே (60)

(இ - ள்)

| | |
|---|---|
| சித்தாமுட்டிவேர் | சீந்தில்கொடி |
| தாமரைவளையம் | செங்கழுநீர்கிழங்கு |
| வெட்டிவேர் | ஓரிதழ்த்தாமரை |
| கோரைக்கிழங்கு | தண்ணீர்விட்டான் [கிழங்கு |
| முசுமுசுக்கைவேர் | கையாந்தகரை |
| இலாமிச்சம்வேர் | சீதேவிச்செங்கழுநீர்க் [கிழங்கு |
| நெல்லிப்பருப்பு | |

இவைகளை வகைக்கு 5 பலம் விதம் எடுத்து ஒரு புதுப்பானைதனிலிட்டு 5 நாட்கள் ஊறவைக்கவும். இதனையடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்றவைக்கவும்.

இதனையிறுத்து இதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 மரக்கால் |
| இளநீர் | ,, |
| சுத்தமான நல்லெண்ணெய் | ,, |

A siddhadreams ebook

| | |
|---|---|
| செவ்வல்லிக்கொடி | ஏலக்காய் |
| செங்கழுநீர்க் கிழங்கு | அகில்கட்டை |
| தேவதாரு | அதிமதுரம் |
| சந்தனத்தூள் | சிறுநாகப்பூ |
| செண்பகப்பூ | கோஷ்டம் |
| லவங்கப்பட்டை | சாதிக்காய் |
| இராம்பு | இலவங்கப்பத்திரி |
| கச்சோலம் | வெந்தயம் |
| செவ்வியம் | திப்பிலி |

இவைகளை வகைக்கு ¼ வராகனெடை வீதமெடுத்து முன் சொன்ன கஷாயம் விட்டரைத்து, அப்படியே கஷாயம் கலந்த எண்ணெயுடன் கலந்து 3 நாட்கள் ஊறவைக்கவும். 4 வது நாள் அடுப்பின் மேலேற்றிப் பக்குவத்தில் இறக்கவும்.

வெதுவெதுப்பாக இருக்கையில்

புனுகு, பச்சைக்கற்பூரம் இவைகளை (¼ வராகனெடை) வீதம் சேர்த்துப் பனியில் வைக்கவும்.

பித்த எரிச்சல் குணமாகும்.

## அமிர்தவல்லித் தைலம்

அம்ருதவல்லியு நெல்லிப்பருப்பு லாமிச்சு ஆன
வெட்டிவேர் கொடுப்பைவேர் நன்னாரிவேரும்
சமுதமிருகையாந் தகரையுடன் மானே
சரியாக வொவ்வொன்று நாளநிந்திடவே



தமிநியென நீர்நூனி குறுனிய வெரித்துத்
தரித்த நீர்நாழி யானபின் வடித்து
கமிழகிலம் நன்னாரி கைச்சோலமேலம்
கண்டில் வெண்ணெய் தக்கோல மதுரமது
மதுவே (61)

வதுவையே கோட்ட மிலவங்கப்பட்டை
மாஞ்சில் வருசெவ்வல்லி லாமிச்சம்வேரு
மிதுவினுடன்ரோகிணி சிறுநாகப்பூவு
மிகவு செஞ்சந்தனம் சாதிக்கா யென்ன
முதிராத விழலரிசி வெட்பாலை யரிசி
முறைமையா யரைத்து முறையாக வைகளையே
(62)

கரைத்த நிறைகற்கம் கஷாயமின நீருங்
கன்னுள ஆவின்பா லெண்ணெய்
சரியாக் மாத்திவிடு புழுகுசட்டங் கற்பூரம்
வன்னமுள்ள குங்குமகஸ் தூரிகூடி
வரத்துடன் மிருத்திட வெரித்திடு வடித்து
வன்பித்தம் அத்திகா மூத்திரவிருத்தி
சிரத்திலிடு நீமூழ்கு நேத்திரரோகங்கள்
நீருமிது மேகவித முட்டிணயெரிவு போமே (63)

(இ - ள்)

| | |
|---|---|
| சீந்தில்கொடி | நெல்லிபருப்பு |
| விளாமிச்சம் வேர் | வெட்டிவேர் |
| கையாந்தகரைவேர் | நன்னாரிவேர் |

இவைகளை ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 மரக்கால் ஆகும்வரை யெரித்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

| | |
|---|---|
| அகில்கட்டை | நன்னாரிவேர் |
| கச்சோலம் | ஏலக்காய் |

A siddhadreams ebook

| | |
|---|---|
| கண்டில்வெண்ணெய் | தக்கோலம் |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| இலவங்கப்பட்டை | சடாமாஞ்சில் |
| செவ்வல்லிக்கொடி | இலாமிச்சம் வேர் |
| கடுகுரோகிணி | சிறுநாகப்பூ |
| செஞ்சந்தனம் | சாதிக்காய் |
| விழலரிசி | வெட்பாலையரிசி |

இவைகளைக் கஷாயம் விட்டரைத்து,

| | |
|---|---|
| இளநீர் | 4 படி |
| பசுவின்பால் | ,, |
| நல்லெண்ணெய் | ,, |

இவைகளுடன் கரைத்துப் புனுகு சட்டம், பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கூட்டி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

பித்தம், அஸ்திஜ்வரம், மூத்திரகிருச்சிரம், சிரோரோகங்கள், நேத்திர ரோகங்கள் மேக உஷ்ணம், எரிச்சல் முதலானவை நீங்கும்.

## அம்ருதவல்லி எண்ணெய்

சீந்திலுட பெருங்கொடிகள் பல நூறதாகச்
    சிறுகவே தானறுக்கி யிடித்துச் சேர்த்து
சாந்திடவே பதினாறு மரக்கால் தண்ணீர்
    சாரவே தான்விட்டு அஞ்சுநாளூறி
சேர்ந்தபடி காய்ச்சியே நூணியாகத்
    திறமாக நல்லெண்ணெய் நாநாழி கூட்டிப்
போந்திடவே கற்கமது புடல்வேர் முத்தம்
    பொருந்து பங்கம் பாளைவேர் சிந்தமட்டிவேரே (64)



மட்டான சாறணைவேர் பூமத்துவேரும்
    வல்லியங் காம தன்னாரி யிருவேலி வேருந்
தட்டாதே மானேகேள் சாஸ்திரவேதியுமே
    சந்தனஞ் சதகுப்பை சாஸ்திர வேதியுமா
வெட்டாத சாளதேவ தாரமிலவங்க
    மிலுப்பைப்பூ நாகப்பூ பச்சிலைகச் சோலம்
கட்டான கற்பூரங் குங்குமப்பூவுங்
    கடிய நாவிச் சட்டமுடன் தக்கோல விந்தே (65)

வித்தான நகரைவிரை ஞாழல்பூவரத்தை
    விளங்குசெஞ் சந்தனமேலம் வருகோஷ்டம்
சித்தான கக்குடன் கொத்தமல்லி ரோகிணி
    தெருவைமுந் திரிக்கனி கண்டில்வெண்ணெய்
சந்தாக விதனுலு கழசெஞ்டை யரைத்துச்
    சாரமுள கஷாயமது மீறு நீ கரைத்து
தன்றுக நாலுநாள் வெச்செனவே வைத்து
    தன்மையுடன் மெழுகுபதம் நீர்கண்டு வடியே (66)

(3 - 4)

சீந்தில்கொடி 100 பலம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, 16 மரக்கால் தண்ணீர் விட்டு 5 நாட்கள் ஊறவைக்கவும்.

பின்னர்,

அடுப்பின் மேலேற்றி 4 மரக்காலாக வற்றவைக்கவும்.

இதனுடன்

சுத்தமான நல்லெண்ணெய் 4 படியும் சேர்த்து,

| | |
|---|---|
| பேய்ப்புடல் வேர் | கோரைக்கிழங்கு |
| சித்தாமுட்டிவேர் | சாறணைவேர் |



A siddhadreams ebook

| | |
|---|---|
| நன்னாரிவேர் | ஊமத்தைவேர் |
| கொடுக்காய்ப்புளி | வெட்டிவேர் |
| சதகுப்பை | சந்தனத்தூள் |
| இலவங்கப்பட்டை | சரளதேவதாரம் |
| நாகப்பூ | இலுப்பைப்பூ |
| கச்சோலம் | பச்சிலை |
| குங்குமப்பூ | பச்சைக்கர்ப்பூரம் |
| தக்கோலம் | புழுகுச்சட்டம் |
| ஞாழல்பூ | தகரைவிதை |
| செஞ்சந்தனம் | சிற்றரத்தை |
| கோஷ்டம் | ஏலக்காய் |
| கொத்தமல்லிவிதை | கடுரோகிணி |
| திராக்ஷைப்பழம் | கண்டில்வெண்ணெய் |
| ஆடுதீண்டாப்பாளை வேர் | |

இவைகளை ½ பலம் விதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்து எண்ணெயுடன் குழைப்பி அடுப்பின் மேலேற்றி 4 நாட்கள் சிறுகச்சிறுக எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டி வைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தை ஸ்நானத்திற்கு உபயோகிக்கவும்.

## அம்ருதவல்லித் தைலத்தினால் தீரும் நோய்கள்

கண்டதோ ரமுதவல்லி யெண்ணெய் கேளும்
கண்ணோவு தலைநோவு காசமது தீரும்
மண்டாத நன்னெரிவு வாதசுரோ ணிதமும்
வருபித்தம் நாற்பதுமானவளீர்! மேகம்



ஒண்டாது உடல்காய்ச்சல் மண்டைதனில் வெட்கை
புள்ளபிணி தன்னியே மென்னிவிடு மென்றே
கொண்டாடி நீமுழுகு யுடலெங்கும் குளிர்ந்து
மெய்தானுடல் வளர்ந்திடும் நிறைந்தே (67)

(தீ - ர்)

கண்ணோய்கள், தலைவலி, காசம், எரிச்சல், வாத சோணிதம், 40 வகை பித்தங்கள், மேகம், உடல் காய்ச்சல் மண்டைக் குடைச்சல், வெட்கை, முதலானவை தீரும்.

## செவ்விளநீர்த் தைலம்

செவ்விளநீர் நாழிவெண்ணெய் நாழிசீராவின் பால்நாழி
கற்கமதிமதூரம்
இவ்விலவங்கம் லாமிச்சு மிருவேலி செங்கழுனீரிலங்கு
கோஷ்டம்
மைவிழியாய் நன்னாரி மாஞ்சில் தனியேலம் வருபச்சை
கச்சோலம் மடவிக்கச்சோலம்
செவ்விவனர் தாமரைவேர் நீர்வள்ளிக் கிழங்கு
கேளினியமுடித்தக் காசடனிறைத்தே (68)

நிரைகின்ற சந்தனமகில் தேவதாரம் தேரினிய செண்பக
மாத்தைச்சாதிக்காய்
உறைகின்ற கண்டில்வெண்ணெய் கர்ப்பூர முற்றபடி
தக்கோல விற்றுடன் வகைக்கு
பொறை கொண்டுநாலு கழஞ்செடையரைத்து புழுகுசட்ட
முடனெரித்தினி வடித்தே (69)

வடிவா விளநீர்நல்லெண்ணெதன் வகைகேள் மண்டி
நன்னெரி காசநீர்கருத்து
கொடிதான் செவ்வேர் படலம்வெண் மாசிகொளச்சுடர்
வெண்குத்து நேத்திரச்சிவப்பு

A siddhadreams ebook

விழிவெருகண் செம்மலச்சுத்துடன் பீரிதல் விழியில்நோய்
பித்தநோயுட்காய்ச்சலோடு
நுடியான வடிவுடைய மானே! நீகேள் சொல்லரிய
செம்மையுடனெண்ணெயதுவாமே (70)

(இ - ள்)

| | |
|---|---|
| செவ்விளநீர் | 1 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |
| பசுவின்பால் | 1 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| அதிமதுரம் | கிராம்பு |
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| நன்னாரிவேர் | சடாமாஞ்சில் |
| ஏலக்காய் | பூலாங்கிழங்கு |
| அடவிக்கச்சோலம் | தாமரைக்கிழங்கு |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |
| அகில்கட்டை | தேவதாரு |
| செண்பகமொட்டு | சிற்றரத்தை |
| சாதிக்காய் | கண்டில்வெண்ணெய் |
| பச்சைக்கற்பூரம் | தக்கோலம் |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை (½ பலம்) வீதம் எடுத்து நன்றாக இளநீர் விட்டரைத்து, நன்றாக வரைத்து எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப்பதத்தில் இறக்கவும். புழுகு சட்டம் 1¼ வராகனெடை எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி எண்ணெயுடன் போடவும்.



இதனால் தலைமுழுகிவரக் கண்ணெரிச்சல், காசநீர், செவ்வேர், படலம், வெண்மாசு, வெண்ருத்து, நேத்திரச்சிவப்பு, செம்மல், சுந்துப்பீரிதல், விழிநோய், பித்தநோய், உட்காய்ச்சல் முதலான நோய்கள் தீரும்

## மோரெண்ணெய்

மோர்குறுணி நல்லெண்ணெய் நாழியதுகூட
முற்றியது சித்தமுட்டி வேர்பலம் நாலாக
சேர்மதுரம் வெட்பாலை கோட்டம் விழலரிசி
செங்கழுநீர் மஞ்சிஷ்டி யேல மிலவங்கம்
காரகிலம் செவ்வல்லிப் பெருங் குறும்பை கடுகு
ரோகணிலாம் பிச்சுரு வேலிகந்தம்
சீர்வளரத்தையமுக் கிராவரக்குச்
சேர்முற்றங் கச்சோலம் பச்சிலையுமானே (71)

மானனையீர்! தாமரை வளையம் வகைக்கு
மதுநாழிக்குக் கழஞ்செடையும் வாகாய்
தேனனைய மொழிமதுர சேரவே யரைத்து
நீர்க்கமுடன் காய்ச்சிவடி வார்த்திடுமுழுகு
யெனவே உள்ளளுமுட் காய்ச்சல் வெப்பு
இளைப்பான மெய்யுடல் தழைப்பாக வருகத்தானி
சொன்னபடி நாலுநாள் முறையேதப்பாது [தனைச்
முழுகு மதுகைப்பு விடுபுளியே (72)

(இ - ள்)

| | |
|---|---|
| மோர் | 1 மரக்கால் |
| நல்லெண்ணெய் | 1 படி |
| சிற்றாமுட்டி வேர் | 4 பலம் |

A siddhadreams ebook

| | |
|---|---|
| அதிமதுரம் | வெட்பாலை |
| கோஷ்டம் | விழலரிசி |
| செங்கழுநீர்க்கிழங்கு | மஞ்சிஷ்டி |
| ஏலக்காய் | கிராம்பு |
| அகில்கட்டை | செவ்வல்லிக்கொடி |
| பெருங்குரும்பை | கடுகு |
| கடுகரோகிணி | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | சந்தனத்தூள் |
| சிற்றரத்தை | அமுக்கிராக்கிழங்கு |
| அரக்கு | கோரைக்கிழங்கு |
| கச்சோலம் | பச்சிலை |
| தாமரைவளையம் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்து இடித்து மோர்விட்டரைத்து, நல்லெண்ணெயுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவர

உட்காய்ச்சல், வெப்பு முதலானவை 4 முழுக்குக்குள் தீரும்.

**பத்தியம் :—**

கசப்பு, புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

---

## சித்தாமுட்டித் தைலம்

குறுந்தோட்டித் தண்ணீர் மிட்டான்
　　கூட்டியே யெடைகொண் டங்கே



சிறந்திடத் தூளிநீருந் தெரிந்துநா நாழியாக்கி
　　அறிந்துநா நாழியெண்ணெய் அதனுடன் நெய்தல்
பிறந்தகி லேலங் கோட்டம் 　　　　[கொட்டி
　　பெருங் குறும்பைசுக்கு மாஞ்சில்
நறுந்திகழ் சந்தமிலவங்க
　　மிலைநாடு செவ் வல்லிதானே 　　(73)

நானிலா மிச்சைகச் சோலம்
　　தனியநாற் கழஞ்சரைத்து
ஆனகாடி யாவின் பா
　　லதனின் தவிரும் நாநாழி
கான்வெள்ளாட்டுப் பால் நாநாழி
　　கலந்து கரைத்து காய்ந்தவெண்ணெய்
மானே வடித்து நீ முழுகு வாதபித்த
　　சுரம் சிலேத்மம் வராதென்றோர் முனிவோரே 　(74)

(இ - ள்)

| | |
|---|---|
| சிற்றாமுட்டிவேர் | தண்ணீர்விட்டான் கிழங்கு |

இச்சரக்குகளை 10 பலம் விதமெடுத்து, இடித்து 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு 4 படியாக வற்றவைத்து சுத்தமான நல்லெண்ணெய் 4 படி விட்டு ஒன்று கலந்து

| | |
|---|---|
| நெய்தல் கிழங்கு | கொட்டிக்கிழங்கு |
| அகில்கட்டை | ஏலக்காய் |
| கோஷ்டம் | பெருங்குரும்பை |
| சுக்கு | சடாமாஞ்சில் |
| சந்தனத்தூள் | கிராம்பு |
| செவ்வல்லிக்கிழங்கு | இலாமிச்சைவேர் |
| கச்சோலம் | |

A siddhadreams ebook

இவைகளை 5 வராகனெடை யெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்து,

| | |
|---|---|
| காடி | 4 படி |
| பசுவின் பால் | 4 படி |
| தயிர் | 4 படி |
| வெள்ளாட்டுப்பால் | 4 படி |

இவைகளை அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இதனைத் தலைமுழுக

வாதம், பித்தம், சுரம், சிலேத்மம், இவைகள் தீரும்.

---

## சர்வகுலாந்தகத் தைலம்

நிலவாகைக் காரைப்பட்டை நெருஞ்சில் செருப்படிசீந்தில்
கொத்தான்
நலதான பொன்னுங்காணி நாவலாவாரை வேர்ப்பூலாவு
மிலகு தாமரை முத்தமிரு நொச்சி சிறுக்கீரை குப்பைக்
கோவை
பிலமான அருகன்னப் பேர்மட்டிச் சித்தமட்டி நீர்ப்
பூலாவே (75)

ஆலம்விழு தாலம்பட்டை அமுக்கிரா வொதிமுசுட்டை
யத்திபுங்கு
வேலோடு விழுப்பை முன்னை மிளகரணைச் செங்கத்தாரி
நீர்முள்ளி
சாலவே வசம்பு நெய்தல் சங்குசாறடை குறிஞ்சி வேளை நிலி
பாலுரை வேலிப்பருத்தி வெண்பருத்தி சஞ்சிக்கொடி
முன்னையாமே (76)



மேவுபூவரசு தழுவிலிவேம்பாடம் கண்டங்காலி தூதளை
காவிளி ஓரப்பைத்துவிர் வில்வக் காயுடன்வேகு மாதளை
முருங்கைக் கொண்டு
நாயுருவி யிலந்தைக் கிழுகிலுப்பை நாரத்தைநாரி பொன்
முசுட்டை
நாவுதற்குமை கீழாநெல்லி கரிசாலந்தன் கொடிவேலி
கூறே (77)

கூறிடு முசுமுசுக்கைக் கொட்டைக்கரந்தை காவேளைதோடை
மாறிடு முக்காவேளை மருவிடு மல்லிரெண்டு வருகுவாகை
தேறிய மூக்குரட்டை தண்ணீர்விட்டான் செங்கழுநீர்
நெய்தல் கொட்டி துளசி
வேருடன் வெவ்வேறு பலங்களஞ்சாய் வேர்களும்
பட்டையாமே (78)

ஆயில்பலமும் பத்து அமுக்கிரா வரத்தைபத்து திரிபலை
மூவஞ்சாக
சேயிளிச்சிறுக வெட்டிச்சேர்த்து நீ யிடித்து பதினாறு புளலுஞ்
சேர
காயிற்கஷாய மூன்றுநாள் காய்ந்துவற்றிப் பதக்கதுவே
காணச்
சாயசெவ் விளநீர்குறுணி ஆட்டுப்பா லிருபடியாவின்
பால் படியிரண்டே (79)

இருண்ட நல்லெண்ணெய் பதக்குவிட்டு யிதனோடு கலந்தது
மிளகு பதினறுபலந்
திரண்டிட உடைத்துப் போட்டுச் சேர்த்திட வத்திக்காய்ந்து
மருந்துடன் தைலமூழ்க வருசய மிருமல் வாதகாசம்
போகுமத்திடச் சர்வரோகம் போய்விடு முறுதிதானே (80)

(கு - ள்)

| | |
|---|---|
| நிலவாகைவேர் | காரைப்பட்டை |
| நெருஞ்சில் | செருப்படி |
| சீந்தில்கொடி | கொத்தான் |



A siddhadreams ebook

| | |
|---|---|
| பொன்னாங்காணிவேர் | நாவல்பட்டை |
| ஆவாரைவேர் | பூலாவேர் |
| தாமரைக்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| கருநொச்சி | வெண்ணொச்சி |
| சிறுக்கீரை | குப்பைமேனி |
| கோவை | அருகம்புல் |
| பேராமுட்டி | சித்தாமுட்டி |
| நீர்ப்பூலாவேர் | ஆலம்விழுது |
| ஆலம்பட்டை | அமுக்கிராக்கிழங்கு |
| ஒதியம்பட்டை | முசட்டைவேர் |
| அத்திப்பட்டை | புங்கம்பட்டை |
| வேலம்பட்டை | இலுப்பைப்பட்டை |
| முன்னை | மிளகரணை |
| செங்கத்தாரிவேர் | நீர்முள்ளி |
| வசம்பு | நெய்தல்கிழங்கு |
| சங்கம்வேர் | சாறடைவேர் |
| குறிஞ்சி | வேளைவேர் |
| அவுரிவேர் | வேலிப்பருத்தி |
| வெண்பருத்தி | ஈஞ்சிக்கொடி |
| முன்னைவேர் | பூவரசு |
| கருவிலிவேர் | வேப்பம்பட்டை |
| கண்டங்கத்தரி | ஆதுவேளைவேர் |
| இலுப்பைத்துளிர் | வில்வக்காய் |
| வில்வவேர் | மாதுளை |
| முருங்கைபட்டை | காபுருவி |
| இலந்தை | கிலுகிலுப்பைவேர் |
| காரத்தைவேர் | நன்னாரி |
| பொன்முசட்டை | தண்ணீர்விட்டான் |
| செங்கழுநீர்க்கிழங்கு | நெய்தல் [கிழங்கு |
| கொட்டிக்கிழங்கு | துளசி |



இவைகளை வகைக்கு 5 பலம் வீதமெடுத்துக் கொள்ளவும்.

இதனுடன்,

| | |
|---|---|
| ஆயில்யப்பட்டை | 10 பலம் |
| அமுக்கிராக்கிழங்கு | ,, |
| சிற்றரத்தை | ,, |
| கடுக்காய்த்தோல் | 5 பலம் |
| நெல்லிவற்றல் | ,, |
| தான்றித்தோல் | ,, |

இவைகளைச் சிறுசிறுதுண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்திலிட்டு 16 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி 3 நாட்கள் எரித்து, 2 மரக்காலாகும் வரை வற்றவைக்கவும்.

இதனுடன்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | 2 | மரக்கால் |
| செவ்விளநீர் | 1 | ,, |
| ஆட்டுப்பால் | 1 | ,, |
| பசுவின்பால் | 1 | ,, |

இவைகளை யொன்று கலந்து, மிளகு 16 பலம் உடைத்துப்போட்டு எரித்து பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுக

சயம், இருமல், வாதகாசம், சர்வரோகம் முதலானவை தீரும்.

A siddhadreams ebook

## சேவகனர் எண்ணெய்

சேவகன்பூடு பன்னிரு பலமும்
சித்தமல்லி பேர்மல்லி பெருவாகை குமிழும்
மேவினிய கூவிளை நெருஞ்சில் பாதிரி
வழுதலைகண்ட மிக்கவேர் பலம்பத்து மிகவுடனிடித்து
தாவுபுனல் என்குறுணி குறுணியென வடித்து
சாற்றரிய உளுந்துட கஷாய மதுவிட்டு
ஈவுநல்லெண்ணெய் நாநாழிகொண்டு
இதனுடு கற்கமிடு மருந்ததாமே (81)

மருந்தாகு மரமஞ்சள் சரளதேவ தாரமது கோட்டம்
மதியுப்புச் சதகுப்பை சிங்கிகச்சோலம்
பெருந்தான சந்தன மதனேடுசுக்கு
பேர்த்தமிடு மதுரமழுக்கிரு வாக்கும்
வருந்தாதகுன்றி சாறடை நாய்வேளை வெருகு
வாலுளுவை வசுவாசி சேவகனர் தோடும்
அருந்தியே நாற்கழஞ்சாகவே யரைத்து வடித்
தெண்ணெய்
ஆமுழுகு காசமிருமலது விடுமே (82)

(3 - க்)

| | |
|---|---|
| சேவகனர் பூண்டு | 10 பலம் |

| | |
|---|---|
| சித்தாமல்லி | வில்வம் |
| பேராமல்லி | நெருஞ்சில் |
| பெருவாகை | பாதிரி |
| குமிழ் | வழுதலை |
| கண்டங்கத்தரி | |

இவைகள் வகைக்கு 10 பலம்



இவ்விரண்டையும் சிறுசிறுதுண்டுகளாக வெட்டி இடித்து, 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகும்வரை எடுத்து வடிக்கட்டி,

| | |
|---|---|
| உளுந்துக் கஷாயம் | 1 மரக்காலும் |
| நல்லெண்ணெய் | ,, |

| | |
|---|---|
| மரமஞ்சள் | சரளதேவதாரு |
| கோஷ்டம் | இந்துப்பு |
| சதகுப்பை | கற்கடசிங்கி |
| கச்சோலம் | சந்தனத்தூள் |
| சுக்கு | அதிமதுரம் |
| அமுக்கிராக்கிழங்கு | குன்றிமணி |
| சாறணைவேர் | நாய்வேளை |
| வெருகங்கிழங்கு | வாலுளுவையரிசி |
| இலவங்கப்பத்திரி | சேவகனர் பூண்டு |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து கஷாயம் விட்டரைத்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுக

காசம், இருமல் முதலான நோய்கள் தீரும்.

## துவர்தேசாதித் தைலம்

சொன்னதோர் துவர்தேசிக்குத் தூதுவேளை யாடாதோடை
பொன்னுவரை தழுக்கொடி சங்குபேராமுட்டி பிரமிச்சாறு
முன்னுன் குப்பை காவிவழுதலை கையாந் தகரைச் சாறுமேவி
முன்னுழி யொவ்வொன்று பாலுமீர்நாழி முன்னுழி
யெண்ணெய் ஆடவே (83)

A siddhadreams ebook

அடவான சிறுதேக்குத் திரிகடுகு மதிவிடைய மதிமதுர
மாத்தைசிங்கி
புடமான யிந்துப்புத் திரிபலைகடுகு ரோகிணி பொருந்து
உடனுறு சிறுமூல மிலவங்கம் சந்தம் வொளிதேவதார
மெனவே
திடமாக முக்கழஞ்சது கொண்டு வடியெண்ணெயெலிகடி
மந்தாரப் பயித்தகாச மருந்துவிடுமே (84)

அறுவேளைச்சாறு
ஆடாதோடைச்சாறு
வழுதலைச்சாறு
கையாந்தகரைச்சாறு
பொன்னுவாரைச்சாறு
தெழக்கொடிச்சாறு (கழல்கொடிச்சாறு)
சங்கிலைச்சாறுசாறு
பேராமுட்டிச்சாறு
பிரமிச்சாறு
குப்பைமேனிச்சாறு
கண்டங்கத்திரிச்சாறு

இவைகள் வகைக்கு 3 படி

| | |
|---|---|
| பசுவின் பால் | 2 படி |
| சுத்தமான நல்லெண்ணெய் | 3 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சிறுதேக்கு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| அதிவிடையம் | அதிமதுரம் |
| சிற்றரத்தை | கற்கடசிங்கி |
| இந்துப்பு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | தான்றிக்காய்த்தோல் |



| | |
|---|---|
| கடுகரோகிணி | திப்பிலி (யானை) |
| கிராம்பு | சந்தனத்தூள் |
| தேவதாரம் | |

இவைகளை 3½ வராகனெடை வீதமெடுத்து ஏதேனும் ஒரு சாறுவிட்டு நன்றாகவரைத்துச் சாறுகுழப்பிய எண்ணெயுடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்து பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவர

எலிகடிகள், மந்தாரகாசம், பித்தகாசம் முதலானவை நீங்கும்.

## அஸ்வகந்தி பலாராக்கிஷத் தைலம்

அமுக்கிருவேர் பன்னிரு பலமுமாக மிதனோடொத்தபலம்
சமுக்கமான நீர்வள்ளி தானிருபது பலமென்ன
வமுத்தமுத்தம் நூறுபலமான குறுமட்டி வேர்பத்து
திமுத்த அரத்தை பஞ்சபலம் தின்சிறுதேக்குப் பலமஞ்சே
(85)

பலத்தான் மருளின் கிழங்கொன்று பண்புதன்னுரி பலமொன்று
செலமேயாறு மரக்காலில் சேர்த்தே யிடித்துக் காய்ச்சி
யொன்றும்
நலமா மெண்ணெய் படியிரண்டு நாலுபடி காண்பாலதுவும்
விலங்காத் தயிரின் படிநாலு மிகவே கூட்டிக் கலப்பதுவே
(86)

A siddhadreams ebook

கலங்காத கஸ்தூரி மஞ்சள் செம்புளிச்சைக் காராகில்
சந்தன மிருவேலி வெட்டி
நலங்காத மரமஞ்சள் மதூரமோடு கோட்டம்
நன்றாக ரோகிணி மஞ்சட்டிகூட
மலங்காது வகைக்கு நேரரை பலமரைத்து
வடித்தெண்ணெய்ப் பூசவுடல் வார்த்து நீ முழுகத்
துலங்காது முட்கடாச் சூதிகாவாயுத்
துலைந்துகொண்டு சயரோகம் வழிகொண்டு
போமே (87)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | 12 | பலம் |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | 20 | ,, |
| கோரைக்கிழங்கு | 100 | ,, |
| சிற்றாமுட்டிவேர் | 10 | ,, |
| சிற்றரத்தை | 5 | ,, |
| சிறுதேக்கு | 5 | ,, |
| மருளங்கிழங்கு | 1 | ,, |
| நன்னாரிவேர் | 1 | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாகவிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 6 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக வற்ற வைத்து இறுத்த கஷாயத்துடன்,

| | | |
|---|---|---|
| சுத்தமானநல்லெண்ணெய் | 2 | படியும் |
| ,, பசுவின்பால் | 4 | ,, |
| தயிர் | 4 | ,, |

சேர்த்து ஒன்று கலந்து,

| | |
|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | செம்புளிச்சை |
| அகில்கட்டை | சந்தனத்தூள் |
| வெட்டிவேர் | மரமஞ்சள் |



| | |
|---|---|
| அதிமதுரம் | கோஷ்டம் |
| கடுகரோகிணி | மஞ்சிஷ்டி |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்து, முன் கூட்டிய மருந்துடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவர

காங்கை, சூதிகாவாயு, சயரோகம் முதலான நோய்கள் தீரும்.

## வில்வாதித் தைலம்

வில்வயிலை வெத்திலை மிருத்த நாரத்தை
விரோதியந் தோல்நிம்பம் தனேயோடொக்க
வல்லதொரு காடியாதண்டை புங்கு
வளருசி மல்லிகைவேர் அழிஞ்சிலோடு
நல்லகுப்பை மேனியோர் கடுகரோகணி
நாறுசின்னிக் கழற்சியிலை முதலாய்க்கூட்டி
செல்லவெள்ளி லெண்ணெய் விட்டுக் காய்ச்சிமுழுக
சிரஸிலெழு ரோகமெல்லாந் தீர்ந்து போமே (88)

(இ - ள்)

| | |
|---|---|
| வில்வயிலை | வெத்திலை |
| நாரத்தையிலை | ஒதியந்தோல் |
| நிம்பம் | ஆதண்டை |
| புங்கு | ஊசிமல்லிகைவேர் |
| அழிஞ்சில் | குப்பைமேனி |



A siddhadreams ebook

கடுகரோகிணி சின்னியிலை
கழற்சியிலை

இவைகளை ½ பலம் வீதமெடுத்துக் காடிசேர்த்து நன்றாகவரைத்து நல்லெண்ணெய் 5 சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனைத் தலையில் தேய்த்து முழுகவும்.

சிரோ ரோகங்கள் தீரும்.

---

## மாஷத்தைலம்

உளுந்தொருபதக்கு நீர்தானுடன் பதினறுநாழி
அருந்திடக் காச்செட்டொன்று யந்தநீர் வடித்துக்கொண்டு
குளுந்தறி மதுரஞ்சுக்கு திப்பிலி மிளகித்துப்பு
தழுந்தசீரகங் கருஞ்சீரகங் கிராம்புதற் சாதிக்காயே (89)

சாதிவெட் பாலவித்துத் தன்னுடன் விழலின்வித்து
நீதிகச்சோலம் தேக்கு திகர்சரள தேவதாரம்
பேதிசேர் கடுகரோகணி பெருத்தசென் பகப்பூ வரத்தை
நீதிலா வெள்ளிலோத்திரப் பட்டைசீரி லவங்கத்தோடே
(90)

வங்கத்துப் பூதகரப்பான ரேணுகம் யானைத்திப்பிலி தகரம்
மங்கைகேள்! மரத்தின் மஞ்சள் வகைக்கொரு கழஞ்சுகூட்டி
இங்கிவை அமுக்கிராவே சிதனுடன் பலமே சேர்த்து
அங்கவை கஷாயத்தாலே யரைத்துடன் கலந்து சேர்ப்போம்
(91)

சேர்த்திடு வெள்ளியெண்ணெய் பீராதிவிட்டுக் காய்ந்து
பேர்த்திட வெரித்திருத்துப் புலன்களுஞ் சிரகமிட்டு



சார்திட உள்ளுங் கொண்டால் தந்தவாயுச் செவிநோய்குலை
தேர்ந்து போம்பக்கவாயு செவிட்டுடன் வாதம்போமே (92)

(3 - 8)

உளுந்து 2 மரக்கால் எடுத்து, ஒரு பாத்திரத்தி விட்டுச் சுத்தஜலம் 16 படி சேர்த்து எட்டிலொன்றாக வற்றவைத்து இறுத்து.

| | |
|---|---|
| அதிமதுரம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| இந்துப்பு | சீரகம் |
| கருஞ்சீரகம் | கிராம்பு |
| சாதிக்காய் | வெட்பாலைவித்து |
| விழலரிசி | கச்சோலம் |
| சிறுதேக்கு | சரளதேவதாரம் |
| கடுகுரோகிணி | செண்பகப்பூ |
| சிற்றரத்தை | வெள்ளிலோத்திரப் |
| பூதகரப்பான் கட்டை | கிராம்பு [பட்டை |
| காட்டுமிளகு | யானைத்திப்பிலி |
| கிரந்திதகரம் | மரமஞ்சள் |

இவைகள் வகைக்கு 1½ வராகனெடை

அமுக்கிராக்கிழங்கு 1 பலம்

இவைகளைக் கஷாயம் விட்டரைத்துக் கஷயத்துடன் கலந்து,

சுத்தமான நல்லெண்ணெய் 2 படியும் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டி வைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டு, உள்ளுக்கும் 1 ஸ்பூனளவெடுத்து உட்கொண்டால்.

A siddhadreams ebook

நந்தவாயு, செவிநோய்கள், சூலை, பக்ஷவாதம், செவிடு, வாதரோகங்கள் முதலானவை தீரும்.

---

## நவகண்டத் தைலம்

---

ஆதண்டை வேர்புங்கின்வே ராடாதோடை
யழிஞ்சில் வேராமணக்குப் பாலூடுவை சீந்தில்
மூதண்ட மாமிரு சாரணைவேர் முன்னை
மூக்கிரட்டைப் பாச்சோற்றி பேய்ப்பாச்சோற்றி
மீதண்ட கிலுகிலுப்பை கொடிவேலி யெருக்கு
வேளைகாவேளை மூக்காவேளை நாய்வேளை
வாதுண்ட குழலாதண்டை விருமட்டி மருதாணி
வருகாஞ்சோறி மேலியாவின் வேராவே (93)

பாவட்டை முருக்குச் செருப்படியின் வேரும்
படர்கொம்மட்டி நொச்சி தழுதாழை யூமத்தை
மேவட்டத் திருப்பி முருங்கி இலந்தை வேலிப்
பருத்திவன மல்லிகை வெள்ளறுகு
காவெட்டி சடைச்சி பேய்மருட்டி கரணைக்
கரிசாலம் வெள்ளை காக்கணமும் வாய்செங்கத்தாரி
மேவெட்டுத் தூதளை படோல பிரமிசூரி
மிளகறணை கொறும்பை முருங்கை நிலநெல்லி
வன்னெற்றே (94)

வன்னிலத்தில் விளாவேர் மணித்தக்காளி கள்ளி
மருவுதில்லை மாவலிங்கை அழுக்கிரு மகிழும்
நன்னிலத்திலக் குமிழ்பாதிரி பேய்முன்னை
நற்பூளை நெருஞ்சில் சிவதை கல்லிலுப்பைவேரும்



மின்னிலைமீர் வளக்குறிஞ்சி உய்யகொண்டான்
வேம்பின்வேர் புன்னை குதிரைவாலி வேரனிச்சை
பின்னைவரு நாளகி நறுந்து பிராய்சின்னி
பெருவெருகு அப்பைக்கிழங் கோடெண்ப தாமே
(95)

கிழங்குமுதல் வேர்வகைகள் தனிப்பலங்கள்
பத்துகினர் விடுத்திட்ட தனில் யிருகலநீர்புகட்டி
களங்கமற மூணுதான் காய்ந்துமுக் குறுணி
கஷாயம் வடிகொண்டு கற்கமிடு மருந்து
விளங்குமுடன் சுக்கில்நீர் வெட்டிவேர் கொட்டை
வெளுத்தைப் பிசினோடு சீரகமிரண்டு
வளங் கொள்கடுகுள்ளிவசை பெருங்காயம்
வருகுப்பை மரமஞ்சள் அசமோதகமே (96)

தகவினிய வெங்காரந் திரிகடுகரத்தை
சரளதேவ தாரமகில் சவுக்காரம் மெவட்சாரஞ்
செகமகிழு மதுரம்சென் பகமேலம்
சீனக்கார மிந்துப்பு வளகிலுப்புடனே
புகழ்சேர் கிராம்பு நேர்வாள மதனகாம
பூதகரப்பான் வெம்பாடல் கோட்டம் சித்தரத்தை
மிகநேர் விழால்குடன் கற்பூரவல்லி
வெட்பாலை யிலவங்கப் பட்டைரோசனியே (97)

பட்டைமுதலொன்று நாழிக்க கழஞ்சாம்படி சேர்த்
தரைத்துத் கஷாயத்தில் முட்டித்
துட்டெருமைக்கிடா மாட்டின் காதிர்குறும்பி நாகத்
தின் குளம்பு கழுதைக்குளம்பு யெருமைக்குளம்பு
மட்டலராய் பூர்க்குருவி யீத்தின்னி வௌவால்
மானுகப் பச்சைப் பாம்பினுட கண்டம்

A siddhadreams ebook

நிட்டமால் வெள்ளெலி மிளைகள் சரிகூட்டி
சேர்த்துநீ செண்ணாழி யிருநாழி காய்ச்சி
விட்டதனில் கூடவஞ்சென்னெ யுடனே
வெவ்வேறு சரியாக வியன்றுரைப் பாயே (98)

வியனான தேங்காயி னெண்ணெய் குருந்தெண்ணெய்
மேலான புன்னை வெண்ணெவெள் ளாட்டுநெய்யு
மயராதே நவகண்டத் தைலமுங் கூட்டி
ஆனபடி மூன்றுநாள் அளவ்மீ திலூறிச்
செயலாக நாலாறுவ் மெழுகுபதங்கண்டு
திருந்தவடித் திடவுடல் மீதில்வாதத்
துயரான சூலைகடிரோகங் குட்டம்
சொல்லரிய சந்நித் துயரகன்றிடுமே (99)

(இ - ள்)

| | |
|---|---|
| ஆதண்டைவேர் | புங்கம்வேர் |
| ஆடாதோடைவேர் | அழிஞ்சில்வேர் |
| ஆமணக்கம்வேர் | பாலொடுவிக்கொடி |
| சீந்தில்கொடி | சாறணைவேர் |
| அறுகம்வேர் | முன்னை |
| மூக்கரட்டைவேர் | பாச்சோத்தி |
| பேய்ப்பாச்சோத்தி | இலுப்பை |
| கொடிவேலி | எருக்கு |
| நல்லவேளை | மூக்காவேளை |
| நாய்வேளை | குமலாதண்டை |
| சித்தாமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |
| மருதாணிவேர் | காஞ்சோறிவேர் |
| காட்டாமணக்கம்வேர் | பாவட்டைவேர் |
| முருங்கைவேர் | செருப்படிவேர் |
| கொம்மட்டிவேர் | கொச்சிவேர் |
| ஊமத்தைவேர் | தழுதாழைவேர் |
| முருவிலி | வட்டத்திருப்பிவேர் |
| வேலிப்பருத்தி | இலந்தைவேர் |



| | |
|---|---|
| வெள்ளறுகு | காட்டுமல்லிகை |
| பேய்மருட்டி | சடைச்சிவேர் |
| கரிசாலங்கண்ணி | கறணைக்கிழங்கு |
| செங்கத்தாரி | வெள்ளைக்காக்கணம் |
| பேய்ப்புடல் | ஆதுவேளை |
| நத்தைச்சூரி | பிரமி |
| கௌதும்பைவேர் | மிளகறணைவேர் |
| கீழாநெல்லி | முருங்கைவேர் |
| மணத்தக்காளி | விளாவேர் |
| மாவிலிங்கம்வேர் | கள்ளி |
| மகிழம்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| பாதிரிவேர் | கிலக்குமிழ் |
| பூளைவேர் | பேய்முன்னை |
| சிவனைவேர் | நெருஞ்சில் |
| காட்டுக்குறிஞ்சா | இலுப்பைவேர் |
| வேப்பம்வேர் | உய்யகொண்டான்வேர் |
| முதியார்கூந்தல் | புன்னைவேர் |
| துளசி | காட்டுமல்லிகை |
| பிராய் | சின்னிவேர் |
| வெருகன்கிழங்கு | அப்பைக்கிழங்கு |
| குறுந்து | நத்தைச்சூரி |

இவைகளை வகைக்கு 10 பலம் விதமெடுத்து, இடித்து ஒரு பெரும் முடாவிலிட்டு 24 மரக்கால் சுத்த ஜலம் சேர்த்து, அடுப்பின்மேலேற்றி 3 நாட்கள் விடாமல் எரிக்கவும். 3 மரக்காலான பின், கஷாயத்தை வடிக் கட்டி வைத்துக் கொள்ளவும்.

பின்னர்

| | |
|---|---|
| வாயுவிடங்கம் | குக்கில் |
| சீரடிமுத்து விதை | சேராக்கொட்டை |
| வெரிச்சைப்பிசின் | சீரகம் |
| கருஞ்சீரகம் | கடுகு |
| பூண்டு | பெருங்காயம் |

A siddhadreams ebook

| | |
|---|---|
| சதகுப்பை | மரமஞ்சள் |
| ஓமம் | வெங்காரம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சிற்றரத்தை |
| சரளதேவதாரம் | செண்பகப்பூ |
| ஏலக்காய் | சீனக்காரம் |
| இந்துப்பு | வளையலுப்பு |
| கிராம்பு | சுத்திசெய்தநேர் |
| மதனகாமப்பூ | கோஷ்டம் [வாளம் |
| சித்தரத்தை | பூதகரப்பான்பட்டை |
| குடம் | விழலரிசி |
| வேம்பாரம்பட்டை | பச்சைக்கற்பூரம் |
| கொத்துமல்லிவிதை | வெட்பாலையரிசி |
| லவங்கப்பட்டை | குரோசாணிஓமம் |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து கஷாயம் விட்டு நன்றாக வரைத்து, அதிலேயே குழப்பி,

எருமைக்கிடா மாட்டின் காதுக்குறும்பி

| | |
|---|---|
| குதிரைக்குளம்பு | கழுதைக்குளம்பு |
| எருமைக்கொம்பு | ஊர்க்குருவி |
| ஈத்தின்னிவௌவால் | வெள்ளையெலி |
| பச்சைப்பாம்புகண்டம் | |

இவைகளையும் சரியெடை கூட்டித் தண்ணீர் 8 படி விட்டு, அடுப்பின் மேலேற்றி 2 படியாகுமட்டும் எரித்து,

அதனுடன்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |
| வேப்பெண்ணெய் | புங்கெண்ணெய் |
| இலுப்பெண்ணெய் | தேங்காயெண்ணெய் |
| குரக்கெண்ணெய் | பின்னைக்கொட்டை |
| வெள்ளாட்டுநெய் | [எண்ணெய் |



இவைகளை வகைக்கு 1 நாழி கலந்து அடுப்பின் மேலேற்றிச் சிறுகச்சிறுக 3 நாட்கள் அனல்மீதுவைத்து எரித்து, 4-வது நாளன்று மெழுகுபதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தை உடலில் பூசிவர

வாதநோய்கள், சூலை, கடிவகைகள், குஷ்டம், சந்திகள் முதலான நோய்கள் நீங்கும்.

## கல்யாணக் கிருதம்

கக்கரிச்சாறு நானாழி கரும்புநா நாழிச்சாறும்
மிக்கநீர்வள்ளிச் சாறும் மேவுபூ சினிக்காய்ச் சாறும்
மொக்கவே நெருஞ் சிச்சாறு டன்புளி யாரைச்சாறும்
சிக்கிடு மறுகின்சாறு சீர்தாழம் விழுதின்சாறே (1)

சாறுகள் வகைநா நாழிதனியாவின் நெய்யெண்ணாழி
வீறுளகக் கரிப்பழம் விரைபோக்கிக் கூடச்சேர்த்து
தேறுள நெய்முதலாம் பல்செங் கழுநீர் தாமரை வளையத்தோடு
பேறுள முசுமுசுக்கைவேர் நன்னாரி பேர்மல்லி சித்தமல்லி
வேராமே (2)

ஆமினி வழுதலைவேர் ஆயிழை ஞாழல் வேரும்
தாமது சரியளவாகச் சந்தனம் தேவதாரம்
நேமிய திரிபலதிச் சீரகமிரண்டு கோட்டம்
காமனேர் குருக்கத்திப்பூ கலந்தசெண் பகப்பூவென்றே
(3)

என்றநேர் மரமஞ்சள் மாகாளிக்கிழங்கு
மிகநேரொடு மஞ்சட்டிநாகக் கேசரமும்
வென்றநேர் நாரத் தானிசம் விழலரிசி
வெவ்வேறு நாற்கழஞ் சாகவே யரைத்து



A siddhadreams ebook

வட்டமிடு சீந்தில் நிலப்பனைக் கிழங்கு
வளர்கின்ற தாமரை சதாவரிக் கிழங்கு
விட்டசிறு காஞ்சோறி பேய்ப்பாச் சோற்றி
மிக்கப்பூனைக் காலி வேரோ டுசரியே (6)

சரியாக நீ கொண்டு சமனாகவிடித்துத்
தண்ணீருடன் காய்ச்சி நாநாழி வடித்து
அரியபசு நெய்நாழி அதனுடன் விடுத்து
அதிவிடயம் வாலுளுவை வெட்பாலையரிசி
புரியில்வளர் சித்தேலம் பேரேலம் கிராம்பு
பொருந்து மிலவங்கமுடன் பச்சிலை கச்சோலம்
துரிய கடுதானியுட நெல்லி திரிகடுகு
சொற்கிராம் பிதனோடு செவ்வல்லிக் கொடியே (7)

கொடியிடையீர் சிறுநாக மரமஞ்சள் கோஷ்டம்
குறுகுதேக் கினுடன் மஞ்சிட்டி ரேணுகமும்
கொடியதக் கோலஞ் சந்தனம் கலைக்கொம்பு
கோரோசனை ஓமம் சாதிக்காய் கண்டாய்
வடிவுடையீர் சாத்திரவேதி கருஞ்சீ ரகமும்
மறவாது பேரீச்சு முந்திரி கைப்பழமும்
தேடியதா யொவ்வொன்று கழஞ்சிடை யரைத்து
நெய்கொள்ளு கரபாதவனல் பித்தம்விடுமே (8)

(இ - ள்)

| | |
|---|---|
| வெட்டிவேர் | கன்னுரிவேர் |
| சித்தாமல்லிவேர் | போராமுட்டிவேர் |
| பேயத்திவேர் | சாறணைவேர் |
| ஆடாதோடைவேர் | சீந்தில்கொடி |
| நிலப்பனைக்கிழங்கு | தாமரைவளையம் |
| சதாவரிக்கிழங்கு | சிறுகாஞ்சோறிவேர் |
| பேய்ப்பாச்சோற்றி | பூனைக்காலிவேர் |



இவைகளை வகைக்கு (1 பலம்) விதமெடுத்து இடித்து சுத்த ஜலம் 8 மரக்கால் விட்டு, 1 மரக்காலாக வற்ற வைத்து வடிகட்டி

பசுவின் நெய் 1 படி சேர்த்து,

| | |
|---|---|
| அதிவிடையம் | வாலுளுவையரிசி |
| வெட்பாலையரிசி | சிற்றேலம் |
| பேரேலம் | கிராம்பு |
| பச்சிலை | கச்சோலம் |
| கடுக்காய்த்தோல் | தான்றிக்தோல் |
| நெல்லிவற்றல் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| லவங்கப்பத்திரி | செவ்வல்லிக்கொடி |
| சிறுநாகப்பூ | மரமஞ்சள் |
| கோஷ்டம் | சிறுதேக்கு |
| மஞ்சிஷ்டி | காட்டுமிளகு |
| தக்கோலம் | சந்தனத்தூள் |
| மான்கொம்பு | கோரோசனை |
| ஓமம் | சாதிக்காய் |
| கொடுக்காய்ப்புளி | கருஞ்சீரகம் |
| பேரீச்சங்காய் | திராக்ஷைப்பழம் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமரைத்து நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

இதனையுட்கொள்ள

கைகால்களின் எரிச்சல், பித்தம் முதலானவை தீரும்.

A siddhadreams ebook

## பஞ்சகவ்ய நெய்

பசுவின் தயிரும் கோமியமும் பாலும் சாணிப் பாலுடனே
முசுமுசுக்கை யதன்சாறு முதியபூ சினிக்காய்ச்சாறு
சிசுவாம் வெள்ளரிக் காய்சிறுக்கீரை சேருந்தாழை விழுதோடு
அகவங் கொளப்பொன் னுங்காணி யோரிதழ்த்தாமரையு
மதனோடு பேய்ப்புடலாமினியே (9)

ஆமேநெல்லிக் காய்ச்சாறு அவைகள் தனித்தனி நாநாழி
தாமே கொண்டு நெய்நா நாழிச் சாந்துகாய்ந்து வருகிறபோ
தோமே நெருஞ்சில்வேர் நிலப்பனைவேர் நெய்யப்பூனை
நன்வேரும்
பூமே கலையாய் நீர்வள்ளி பொருந்துப் பாலைவேர் சமனே
(5)

தோராங் கோட்ட மதிமதுரம் நீண்டலாமிச்சம் வெட்டிவேர்
பாராய் முத்தம் நன்னாரி பன்னாகப்பூ செண்பகப்பூ
ஏராமேல மஞ்சட்டி யினியகிராம்பு சீரக
மாசார்சாதிக் காயெள்ள வகைக்குச் சமன்கொள்தூளாயே
(11)

தூளாஞ்சீந்தில் சர்க்கரை பலமிரண்டுந் தூய்யச்சர்க்கரை
யோரிடையுங்
கூழாய்க் காய்ச்சி பதங்கொண்டு குருக வெறுமிச்சங் காயளவு
கொள்ளு
வாழைப்பேயன் பழத்தினுண்ண மயக்கும் உன்மதவெறி தீரும்
தாழா நீலகண்ட நெரிவிஷ நிம்பஞ் சாத்தில் நவிலதேக்
தொண்டிலைகட்டே (12)

(தி - ள்)

| | | |
|---|---|---|
| பசுவின் தயிர் | | 4 படி |
| ,, | மூத்திரம் | ,, |
| ,, | பால் | ,, |
| ,, | சாணிப்பால் | ,, |



| | |
|---|---|
| முசுமுசுக்கைச்சாறு | 4 படி |
| பூஷணிக்காய்ச்சாறு | ,, |
| வெள்ளரிக்காய்ச்சாறு | ,, |
| சிறுக்கீரைச்சாறு | ,, |
| தாழைவிழுதுச்சாறு | ,, |
| பொன்னாங்காணிச்சாறு | ,, |
| ஓரிதழ்த்தாமரைச்சாறு | ,, |
| பேய்ப்புடலஞ்சாறு | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |

இவைகளை யொன்று கலந்து,

இதனுடன்

பசுவின் நெய் 4 படியும் குழப்பி,

| | |
|---|---|
| நெருஞ்சில்வேர் | நிலப்பனைவேர் |
| சிறுபூனைவேர் | தண்ணீர்விட்டான் [கிழங்கு |
| பாலைவேர் | கோஷ்டம் |
| அதிமதுரம் | இலாமிச்சைவேர் |
| வெட்டிவேர் | கோரைக்கிழங்கு |
| நன்னாரிவேர் | சிறுநாகப்பூ |
| செண்பகப்பூ | ஏலக்காய் |
| மஞ்சிட்டி | கிராம்பு |
| சீரகம் | சாதிக்காய் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துத்தூள் செய்து போட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். நன்கு வடிகட்டி, ஆறிய பின் சீந்தில் சர்க்கரையும், சர்க்கரையும் வகைக்கு 2 பலங்கள் வீதம் சேர்த்துக் குழப்பிக் கொள்ளவும்.

இதனைத்தினம் எலுமிச்சையளவு பேயன் பழத்துடன் உட்கொள்ளவும்.

உன்மாதம், வெறி முதலானவை தீரும்

A siddhadreams ebook

## நசமூலாதி நெய்

சித்தமட்டி அரைவிடையுஞ் சிறுவழுதலை
　　கண்டங்காரி நெருஞ்சி கூவிளையுஞ்
சுத்தமுள்ள பாதிரி பெருவாகை யிருமல்லி
　　தொண்டு வெல்வேறு பலத்துடனிடித்துச்
சத்தான வெண்குறுணித் தண்ணீர்விட்டுத்
　　தனிக்குறுணி யாய்க்காய்ச்சித் தான்கொண்டங்கு
நத்தாவின் பாலுரியுந் தயிருரியும் நாறு
　　கோமியமுஞ் சாணிப்பாலு ரியே (13)

உரியதா மாவின்னெய் முந்நாழி கூட
　　உள்ளபனை வெல்லமது ரண்டு பலமென்ன
பெரியதா மரமஞ்சள் தாரமஞ் சிட்டிப்
　　பிடமான வித்துப்புச் சந்தனம் நன்னாரி
துரியதாம் திரிபலை பெருங்காய மல்லி
　　சோருத சதகுப்பை யோமமிலவங்கம்
வரிசையாஞ் சந்தனங் கோட்டமுட னேலம்
　　வருகுக்கில் செவ்வியங் கொள்வகை மூன்றுசெய்தே (14)

செய்நீர் முள்ளி அமுக்கிராக் கோவைத்
　　திடமாக நீ முன் கஷாயமதரைத்து
பய்யவிதனெல்லா மொன்றாக் கரைத்துப்
　　பதமான சதிரக் கள்ளிப்பா லூழக்குவிட்டு
நெய்யானது கண்டுடன வடித்து
　　நித்த மொரு காசெடை யுட்கொள்ளும் போது
பொய்யாகும் பெருவயிறு வெப்புப்பாவை குலைமுட்டிக்
　　குடல்வாத பிறமூல விப்புருதி பீலிகைவீக்கம்
போமே (15)



(3 - ச)

| | |
|---|---|
| சித்தாமுட்டிவேர் | சிறுவழுதலைவேர் |
| கண்டங்காரி | நெருஞ்சிவேர் |
| வில்வவேர் | பாதிரிவேர் |
| பெருவாகைவேர் | சிற்றாமல்லிவேர் |
| பேராமல்லிவேர் | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்றவைக்கவும், இதனை வடிக்கட்டி,

| | |
|---|---|
| பசுவின் பால் | ½ படி. |
| தயிர் | ,, |
| பசுவின் மூத்திரம் | ,, |
| சாணிப்பால் | ,, |
| பசுவின் நெய் | 3 படி. |

விட்டு ஒன்று கலந்து,

பனைவெல்லம் 2 பலம்

| | |
|---|---|
| மரமஞ்சள் | தேவதாரம் |
| மஞ்சிஷ்டி | இந்துப்பு |
| சந்தனத்தூள் | நன்னாரிவேர் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | பெருங்காயம் |
| கொத்தமல்லிவிதை | சதகுப்பை |
| ஓமம் | கிராம்பு |
| ஏலக்காய் | கோஷ்டம் |
| செவ்வியம் | குக்கில் |

இச்சரக்குகள் வகைக்கு 3 பலம்

| | |
|---|---|
| நீர்முள்ளி | அமுக்கிராக் கிழங்கு |
| கோவைத்தண்டு | |



A siddhadreams ebook

வகைக்கு 2 பலம்

இச்சரக்குகளை முன் சொல்லிய கஷாயம் விட்டு கன்றாகவரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். பக்குவப் படுத்து முன் சரக்கள்ளிப்பால் 1 உழக்கு சேர்த்துக் கொள்ளவும்.

இந்த நெய்யில் ஒரு காசெடையெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

பெருவயிறு, வெப்புப்பாவை, குலைக்கட்டி, குடல் வாதம், மூலம், விப்புருதி, பீலிகை, வீக்கம் முதலானவை தீரும்.

---

## ஸுகுமாரக்ருதம்

சாறணைவேர் நூறுபலந் தனிமுன்னே
    கூவிளையுஞ் சாருமல்லி யிரண்டுங்
கூறரிய நாதுவளை வழுதலை நெருஞ்சிற்
    குமிழினொடு சித்தமட்டி பேர்மட்டி யென்ன
வேறதனை வகையொன்றுக் கன்பது பலமும்
    வெட்டியது பாலைவேர் கொறுக்கைவேர் தர்ப்பை
தேறுள்ளதற் கரும்பு அமுக்கிரா வேருஞ்
    சித்தாமணக்கு வேர்நீர்வள்ளி முத்தமே (16)

முத்து நீ யிவ்வகை வகைக்கஞ்சு பலமாய்
    முதிரவே தரித்திடித் திருகல நீர்புகட்டி
வத்தியே நாளியாய்க் காய்ச்சியே வடிந்து
    மாறுதபனை வெல்லம் முப்பது கரைந்துப்
பத்தியதிப் பிலிமூலம் திப்பிலி யிந்துப்பு
    பார்சுக்கு பேரிச்சம்பழ மதூரஞ்சீரகம்



மத்துநீ பலமிரண்டாகவே கரைந்து
    மறுநாழி நெய்கூட விருநாழி யேரண்ட மாக்கியிடு
                                        வதுவே (17)

(தி - ள்)

சாறணைவேர் 100 பலம்

| | |
|---|---|
| வில்வவேர் | சிறுமல்லி |
| பெருமல்லி | நாதுவேளைவேர் |
| சிறுகத்திரிவேர் | நெருஞ்சில் |
| குமிழ்வேர் | சித்தாமுட்டிவேர் |
| பேராமுட்டிவேர் | முன்னைவேர் |

இவைகள் வகைக்கு 50 பலம்

| | |
|---|---|
| பாலைவேர் | கொறுக்கைவேர் |
| தர்ப்பைவேர் | கரும்பின்வேர் |
| அமுக்கிராவேர் | சித்தாமணக்குவேர் |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | |
| கோரைக்கிழங்கு | |

இவைகள் வகைக்கு 5 பலம் விதமும் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி இடித்து ஒரு பெரும் மூடாவி விட்டு, சுத்த ஜலம் 24 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து 4 மரக்காலாக வற்ற வைக்கவும்.

இக்கஷாயத்தை வடிகட்டிப் பனைவெல்லம் 30 பலம் போட்டுக் கரைத்து, 6 படி பசுவின் நெய்யும் விட்டு, ஆமணக்கெண்ணெய் 2 படியும் சேர்த்து,

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | திப்பிலி |
| இந்துப்பு | சுக்கு |
| பேரிச்சம்பழம் | அதிமதுரம் |
| சீரகம் | |

இவைகளை வகைக்கு 2 பலம் விதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றிப்

A siddhadreams ebook

பதத்தில் எரித்து வடிக்கவும். இதனைக் காய்ச்சிய பாலு டன் உட்கொள்ளவும்.

## அசுவகந்தாதி கிருதம்

அசுவாதி அமுக்கிரா பலமொன்று நன்னாரி ஆகின்ற நெரிஞ்சி
சீந்தில்
நிசமாகச்சிறுகீரை வேருடன் திரிகடுகு நீருள நவட்சாரமும்
வசமான சிறுநாகங் கார்போகரிசித்து மதுரம்வெட் பாலையரிசி
விசயவே சந்தனம் கிராம்பேலமிலவங்கம் வெட்டிவேர்
கோட்டமடவே (18)

அடவாக வேரொன்று முக்கழஞ்சாக ஆவின் பாலதனி
லரைத்துத்
திடமாகும் பாலிருநாழி நெய்யுடன் நீரவே கிருதம் வடித்தே
மடமாதே! சீனியென் பலங்கலந்து வாங்கவே கிருநாழி
நெய்யுடன் நீரவே கிருதம் வடித்தே
யுடலூறு மத்திசுரமருந்தீடு வறட்சியுஷ்ணங் காலெரிவு
மோடியே விடுமே (19)

(தி - ள்)

அமுக்கிராக்கிழங்கு 1 பலம்

| | |
|---|---|
| நன்னாரிவேர் | நெருஞ்சில் |
| சீந்தில்கொடி | சிறுகீரைவேர் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | மூங்கிலுப்பு |
| சிறுநாகப்பூ | கார்போகரிசித்து |
| அதிமதுரம் | வெட்பாலையரிசி |
| சந்தனத்தூள் | கிராம்பு |
| ஏலக்காய் | வெட்டிவேர் |
| கோஷ்டம் | |



இவைகளை வகைக்கு 3¼ வராகனெடை வீதமெடுத்து பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்து

| | |
|---|---|
| பசுவின் நெய் | 2 படியும் |
| " பால் | " |

சேர்த்துக் கலக்கு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனுடன்

8 பலம் சீனி சேர்த்து வைத்துக் கொண்டு ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

அத்திசுரம், மருந்தீடு, வறட்சி, உஷ்ணம், கை காலெரிவு முதலானவை தீரும்.

## கூச்மாண்டக் கிருதம்

கூஷ்மாண்டம் பூஷணிக்காய்ச் சாறுபால் நெய்குளிர் கரும்பு
நீர்வள்ளிதாம்
வாழ் கொண்கண்ணுய்த் தனித்தனி நாழியாய் மன்பாலை
தன்னிலிட்டுத்
தாழ்கின்ற சதகுப்பை வெட்பாலைவிழலரிசி சாதிக்காய்
வில்வவேரும்
வேழ்க்கின்ற அதிமதுரம் முந்திரிகைக் கற்கடக சிங்கிஇரு
சீரகமிடவே (20)

இட்டபடி யேலங்கிராம் பிலவங்க முடனிளியதன் கூகைநீறு
நட்டாத படியினி அசமோத கம்புருகந் தனித்தனி கழஞ்சு
நாலு
பட்டாக வாவின் பாலதிலரைத்து வடித்தநெய் சீனிபோட்டு
வருபேயன் பழத்துடன்
திட்டமாய் நீ கொன்னு உளமாந்தை வெப்பிருமல் தீருமுட்க்
காய்ச்சலனலே (21)

A siddhadreams ebook

(செ - ம்)

கல்யாணப்பூசினிக்காய்ச்சாறு 1 நாழி
பசுவின் பால் ,,
,, நெய் ,,
கரும்பஞ்சாறு ,,
தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு ,,

இவைகளை ஒரு மண்பாண்டத்திலூற்றி

| | |
|---|---|
| சதகுப்பை | வெட்பாலரிசி |
| விழலரிசி | சாதிக்காய் |
| வில்வவேர் | அதிமதுரம் |
| திராக்ஷைப்பழம் | கற்கடசிங்கி |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| இலவங்கப்பத்திரி | கூகைநீர் |
| ஓமம் | தாமரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு ½ பலம் விதமெடுத்து அம்மி தனில் வைத்துப் பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனுடன்

சீனி சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துப் பேயம்பழத் துடன் சேர்த்து உட்கொள்ளவும்.

உளமாந்தை, வெப்பு, காங்கை, இருமல் முதலான நோய்கள் தீரும்.

## வெண்பூசினி நெய்

பெரும் பூசணிக்காய் நீ ரெண்ணாழி பேராமளநீர் நாநாழி
வருசீந்திற் கொடிநீர்நாழி வாகாம்நீர் வள்ளிநீர் நாழி



திருவாவின் பாலிருநாழி சேர்த்தே நெய்யின் படியாக
அருவாய் கொடுப்பை வேரோடு மாமே நன்னாரி வேரதியே (22)

அதியநீயுந் திரிபாலையு மான திப்பிலி பச்சிலை கச்சோலம்
பிரியாம மதுரம் விழலரிசி பேராங் கோட்டஞ் சந்தனமும்
குரியாரோகணி மஞ்சிட்ட கூடவேலம் மரமஞ்சள்
தெரியாய் கழஞ்சு தான்சேர்த்து நெய்தான் காய்ச்சிக்
கொள்வீரே (23)

(செ - ம்)

பெரும்பூசணிக்காய்ச்சாறு 8 நாழி
இளநீர் 4 நாழி
சீந்திற்கொடிச்சாறு 1 படி
தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு ,,
பசுவின் பால் 2 படி
,, நெய் 1 படி

இவைகளை யொன்று கலந்து அடுப்பின் மேலேற்றி,

| | |
|---|---|
| கரிசாலங்கண்ணிவேர் | நன்னாரிவேர் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | திப்பிலி |
| பச்சிலை | கச்சோலம் |
| அதிமதுரம் | விழலரிசி |
| கோஷ்டம் | சந்தனம் |
| கடுகரோகிணி | மஞ்சிட்டி |
| ஏலக்காய் | மரமஞ்சள் |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை விதமெடுத்து சாறுகள் விட்டு நன்றாகவரைத்து, நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி உபயோகிக்கவும்.

## சீதேவிச் செங்கழுநீர் நெய்

சீதேவிச்சாறு நாழிசீந்தில் கொடிசாறேர் நாழி
மாதே ஆவின் நெய்நாழி மதுரங்கோட்ட மிலாமிச்சம்

A siddhadreams ebook

போதே தாமரைச் செங்கழுநீர் பொருந்தமுத்தஞ் சண்பகப்பூ
சூதேனுக நன்னாரி தூலங்குமேல மிலவங்கமதே (24)

அது தன்னுடனே ரோகணியு மானகழஞ்செடை யெவ் வென்று
முதுரப்பாலிற் றானரைத்து முழங்கக் காய்ச்சி நெய்வடித்தால்
சதிரத் தன்னிலு ட்சுரமுந் தாகம் விருத்திப் பித்தமிவை
பதுமமுகத் தாயுட்கொள்ள பழயசுரமு மேகிடுமே (25)

(தி - ள்)

| | |
|---|---|
| சீதேவிச்சாறு (ஸஹதேவி) | 1 நாழி |
| சீந்தில்கொடிச்சாறு | ,, |
| பசுவின் நெய் | ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| அதிமதுரம் | கோஷ்டம் |
| இலாமிச்சம்வேர் | தாமரைக்கிழங்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| சென்பகப்பூ | நன்னாரிவேர் |
| சிறுநாகப்பூ | ஏலக்காய் |
| கிராம்பு | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை யெடுத்துப் பசுவின் பாலுடனரைத்துச் சாறுகளுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் 1 ஸ்பூன் எடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

உட்சுரம், தாகம், பித்தாதிக்கம், காட்பட்ட ஜ்வரம் முதலான நோய்கள் தீரும்.



## தூர்வாதி கிருதம்

முறுவாதி அருகம் புல்லுச்சாறுமுன் னாவின்பாலும்நெய்யு மாட்டுப்பாலுங்
குறுதாமல் வகைக்கு நாநாழி கூட்டிக் குளிர்ந்த சதாவரிந் தாமரை செங்கழுநீர் கொட்டிநெய்தல்
தறுகாத பெருங்குறும்பை முத்தமிலாமிச்சம் சந்தனமு முந்திரிகை குங்குமப்பூ மதுரம்
பிறுதான மஞ்சிட்டி வாலுளுவையரிசி பேர்பெறவே யோரோன்று கழஞ்சதாவாமே (26)

களங்கமற நீ யரைத்துக் கரைந்துடனெரித்துக் காலமே யந்தியும் கொள்ளவிலிங்கேகும்
வளம்பெற் றிடாத்தபித்த மதுநீரும் மல்லடையில் நரியாமிட வருத்தம் தீரும்
உளத்தனில் பாணங்கள் பல்வீறு ரோமங்கள் உடலில்வரு ரத்தமதுவத்தலையுந் தீரும்
விளங்கு மெய்யுடல் குளிருங் சுரங்கள் பலதீரும் வேதமுனி வுரைசெய்த முறுவாதி நெய்யாமே (27)

(தி - ள்)

| | |
|---|---|
| அருகம்புல்ச்சாறு | 3 படி |
| ஆவின் பால் | 4 ,, |
| ,, நெய் | 4 ,, |
| ஆட்டுப்பால் | 4 ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| தண்ணீர் விட்டான்கிழங்கு | |
| தாமரைக்கிழங்கு | செங்கழுநீர்க்கிழங்கு |
| கொட்டிக்கிழங்கு | நெய்தல் கிழங்கு |
| பெருங்குறும்பை | கோரைக்கிழங்கு |
| இலாமிச்சம்வேர் | சந்தனத்தூள் |
| திராக்ஷைப்பழம் | அதிமதுரம் |
| குங்குமப்பூ | வாலுளுவையரிசி |
| மஞ்சிஷ்டி | |



A siddhadreams ebook

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து கன்றுகப்பால் விட்டரைத்து முன் சாற்றுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் காய்ச்சி வடிக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே தினம் 2 வேளைகள் உட்கொள்ளவும்

ரத்தபித்தம் தீரும்.

மூக்கில் 2 சொட்டுகளெடுத்து நசியமிட

ரத்தம் நிற்கும். பல்லீறு, மயிர்க்கால்கள் முதலான இடங்களிலிருந்து உண்டாகும் ரத்தக்கசிவும் நீங்கும். உடலில் குளுர்ச்சி உண்டாகும். பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## ஜம்பூகாதி கிருதம்

நாவல்பட்டை விடையொன்று நறுக்கிவிட்டுக் கஷாயமிட்டு
மேவக்குறுணி தான்கொண்டு மிக்காவின் தயிர்முக்குறுணியுந்
தாவந் தீர்க்கும் புளியாரைச் சாறுநாநாழி நெய்நாநாழி விட்டு
காவில் வளர்பங்கம் பாளைமுத்தம் கதித்த கொட்டி
திலப்பனையே (28)

பனைத்தகதலி மொந்தன்கிழங்கு பறவில்வளரும் சுண்டியிலை
இணைத்தமாவின் விரையுடனே மினியநாவல் தன்கொட்டை
மனத் தாமரைப்பூந் தாதுவளையமுடனே மாதளை சிறுபிஞ்சுந்
துணக்கொளவில்லைப் பழச்சதையுந் துய்யவெல்லி
லோத்திரமே (29)



லோகத்தெற்கு மதுரமுட ளசமோதகமானைத் திப்பிலியும்
வேகமான வெட்பாலை விழல்மிக்க முத்திரிகை கச்சூரம்
பாகமான விளாம்பிசினும் கருத்த கருவேல் பிசினோடு
ஆகத்துடனே சர்க்கரை நாற்கழஞ்சு கொண்டரைத்துக்
கரைந்து நெய்வடியே (30)

வடித்த நெய்யிலருந்திவர மானே ரெத்தப் பெரும்பாடு
மெடித்த அதிஸார ரெத்தபித்த மெதும்புறுக்கி வெண்மாகும்
தொடுத்த கிராணிப்பயித்திய வாதம்தோன்று மேகத்து
வறட்சிகளும்
தடித்தாத்த காசமிவை தானேவிடுசம்பு கிருதமே (31)

(தி - ள்)

| | |
|---|---|
| நாகப்பட்டை | 1 வீசை |

எடுத்து நசுக்கி 8 படி சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்ற வைக்கவும்.

இதனுடன்

பசுவின் தயிர் 3 மரக்கால் விட்டு,

| | |
|---|---|
| புளியாரைச்சாறு | 4 படி |
| பசுவின் நெய் | 4 படி |

இவைகளையும் ஒன்று கலந்து,

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளை | கொட்டைக்கிழங்கு |
| திலப்பனைக்கிழங்கு | மொந்தன் வாழைக் |
| வறட்சுண்டியிலை | மாம்பருப்பு [கிழங்கு |
| நாகக்கொட்டை | தாமரைப்பூத்தாது |
| தாமரையிலையின் உட்சுருள் | |
| மாதளைப்பிஞ்சு | வில்வப்பழச்சதை |
| வெள்ளிலோத்திரப்பட்டை | |
| அதிமதுரம் | ஓமம் |
| யானைத்திப்பிலி | வெட்பாலையரிசி |

A siddhadreams ebook

| | |
|---|---|
| ஷ்முலரிசி | திராக்ஷைப்பழம் |
| பேரிச்சங்காய் | விளாம்பிசின் |
| கருவேலம்பிசின் | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து இடித்துப் பால்விட்டரைத்து, முன் மருந்துகளுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இதனுடன்

சர்க்கரை 5 வராகனெடை கூட்டி வேளைக்கு 1 ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே யுட்கொள்ளவும்.

செந்நீர்ப்பித்தம், பெரும்பாடு, அதிஸாரம், ரக்தபித்தம், எலும்புருக்கி, வெண்குஷ்டம், கிராணி, பித்தவாயு, மேகவெட்டை, ரத்த காசம் முதலானவை தீரும்.

## கெர்ப்பம் உண்டாகுந்திரிகடாதிக் கிருதம்

திரிகடுகு மஞ்சிஷ்டி சந்தனங் கோட்டஞ்
சேர்தகரங் கஸ்தூரி மஞ்சளதிமதுரம்
அரிசிவினி நாயுருவி ஆசந்திவேரும்
அமுக்கிராப் பெருங்காயம் கறிப்பாலைவேரும்
இவையுடன் மரமஞ்சள் வகைக்கு நாற்கழஞ்சு
கேளினிய நாநாழி பாலுடனெய் நாழி
முறியாமல் முப்பதுநாள் கொள்ளக் கெர்பமாம்
ரத்திர மெலும்புருக்கி உதிரமேகமது விடுமே (32)

(தே - ய)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | மஞ்சிஷ்டா |



| | |
|---|---|
| சந்தனத்தூள் | கோஷ்டம் |
| கிராந்திதகரம் | கஸ்தூரிமஞ்சள் |
| அதிமதுரம் | நாயுருவிவேர் |
| ஆசந்திவேர் | அமுக்கிராக்கிழங்கு |
| பெருங்காயம் | கறிப்பாலைவேர் |
| மரமஞ்சள் | |

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு (5 வராகனெடை) வீதமெடுத்து இடித்துப் பால் விட்டரைத்து,

| | |
|---|---|
| பசுவின் பால் | 4 படி |
| பசுவின் நெய் | ,, |

இவைகளுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு, தினம் 1 ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும். இவ்வாறு 30 நாட்கள் சாப்பிடக் கர்பம் உண்டாகும். மேலும் எலும்புருக்கி, ரத்த மேகம் முதலானவைகளும் தீரும்.

## சதாவரி கிருதம்

நீர்வள்ளி சீதேவி செங்கழுநீர் வேரும் நிலப்பனைக்
கிழங்குடன் கரிப்பாலைவேருஞ்
சேர்கொண்ட வகைக்குப் பலமொன்றதாகச் சிறக்கின்ற
வதிமதுரம் பலமூன்றதாயே
பேர்கொண்ட செண்பகப்பூவு மொருபலமாம் பின்னேலம்
பலமொன்று லாமிச்சமொன்று
நேர்கொண்டு பொன்னுங் காணிதனிவேரும் நெய்யில்
வடிகொள்ளு கர்ப்பமாய் பூதபிசாசுகளும் விடுமே (33)

(தே - ய)

தண்ணீர்விட்டான் கிழங்கு
சீதேவிச்செங்கழுநீர்

A siddhadreams ebook

(தி - ள்)

சுத்திசெய்த நேர்வாளம்
" பாதரஸம்
" அரிதாரம்
" துத்தம்
" கெந்தகம்
" துருசு

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டுத் துளசிச்சாறு சேர்த்து அரைத்து வேளைக்கு 1 மிளகு அளவு எடுத்துத் தினம் 2 வேளைகள் விதம் 40 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

சாம்பிராணித் தைலத்தை உடம்பில் தேய்த்துக் கொண்டு குளிக்கவும்:

சூலை, புண்கள், பூச்சி கடிகள், பெருவியாதி, குஷ்டம், தேமல், படர்தாமரை, சொறி, சிரங்கு முதலானவை தீரும்.

## சூலைக்குப் "பெருமருந்துச் சூரணம்"

பூசிய கபாலச்சூலை பொருந்த பீனிசம் தீர்த்தும்மல்
நாசிகா பீடம்ரோம நாசமுந் தினவுங் குஷ்டந்
தேசிகங் காதில்சீயும் சேர்த்திடு கபாலவாயு
காசயில் தெந்தரோகங் காத்திட மருந்துகேளே (25)

காத்திடு பெருமருந்துங் கண்டங்கத் தரியுஞ் சுக்கும்
காத்திரு செங்கத்தாரி தோன்றுசீ ரகமிரண்டு
பார்த்திடு கடுகரோகணி பகர்சங்கு மரத்தைகூட்டி
நிரந்தரஞ் சூரணத்தினை நீங்கிடும் ரோகந் தானே (26)



(தி - ள்)

| | |
|---|---|
| பெருமருந்து வேர் | கண்டங்கத்திரி |
| சுக்கு | செங்கத்தாரி வேர் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கடுகரோகிணி | சங்கம்வேர் |
| சிற்றரத்தை | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும். இதனைத்தண்ணீருடன் சேர்த்து உட்கொள்ளவும்.

இதனால் கபாலச்சூலை, பீனிசம், நீரேற்றம், தும்மல் மூக்குமயிர் உதிர்தல், தினவு, குஷ்டம், காதில் சீழ் வடிதல், கபால வாயு, தெந்த ரோகங்கள் முதலானவை தீரும்.

## கலப்பைக் கிழங்கெண்ணெய்

நீங்கு கார்த்திகைக் கிழங்கு நிலக்குமிழ் தசமூலந்தான்
பாங்குறு மஞ்சள் மூன்று பகர்குப்பை கடுகரோணி
தேங்கு சாறடையெருக்கு சேர்கொடி வேலிசீந்தில்
பாங்குநல் லெண்ணெய் சேர்த்துப் பருவமா யெரித்து
மூழ்கே (27)

(தி - ள்)

கார்த்திகைக் கிழங்கு (கலப்பைக் கிழங்கு)

| | |
|---|---|
| வில்வம் | நிலக்குமிழ் |
| பாதிரி | வாகை |
| பெருமுன்னை | சிறுமுன்னை |
| பெருங்குமிழ் | கத்திரி |
| கண்டங்கத்திரி | நெருஞ்சில் |
| மரமஞ்சள் | மஞ்சள் |
| கடுகரோகிணி | கஸ்தூரிமஞ்சள் |

A siddhadreams ebook

| | |
|---|---|
| எருக்கு | சதகுப்பை |
| சிந்தில்கொடி | கொடிவேலி வேர் |
| சாறடை | சிறுகுமிழ் |

இவைகளை $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துத் தூளாக்கி நல்லெண்ணெய் 5 சேர் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து முழுகவாவும். முன் கூறிய ரோகங்கள் தீரும்.

## மகோதரம் முதலான ரோகங்களுக்குப் "பேய்க்கொமட்டி எண்ணெய்"

பருவமாங் கவுசையோடு பக்கவிப் புருதிகோவை
புருவமாம் பீலிகைமிக்க யுதரத்தின் சூலையன்றிக்
கருவதை யழிக்குங் கர்ப்பங் கடியவிப் புருதிசாலப்
பெருவயிருடனே மற்றப் பேரமகோதரமுந் தானே (28)

பெருத்தபேய்க் கொம்மட்டிக்காய் பேகவேர் காக்கிரட்டான்
திருத்தமாய் லவணமஞ்சுஞ் செய்திடு காரமஞ்சு
வருத்தமா விலங்கை கொன்றை வச்சிரத்தின் பாலமூலங்
கருத்துறவ சம்புமஞ்சள் காயம் வெள்ளுளியுங் கூட்டே (29)

காய்ந்த நற்சிவதை போளம் காட்டிலா மணக்கம் வேரும்
வாய்ந்த ரோகிணி முருங்கை வளருமா லவுரிசின்னி
பரய்ந்திடு கழற்சி கொத்தான் பகரும்வேலிப் பருத்தி
தேய்ந்த யோண்ட யெண்ணெய் சேர்த்தெரித் துள்ளுங் கொள்ளே (30)

(தி - ள்)

பேய்க்கொம்மட்டிக் காய்

| | |
|---|---|
| இந்துப்பு | காக்கிரட்டான் வேர் |
| சோத்துப்பு | வளையலுப்பு |



| | |
|---|---|
| கறியுப்பு | சவுட்டுப்பு |
| படிக்காரம் | வெங்காரம் |
| வெடியுப்பு | சீனக்காரம் |
| மாவலிங்கை | கொன்றை |
| மஞ்சள் | வசம்பு |
| பூண்டு | பெருங்காயம் |
| போளம் | முருங்கை வேர் |
| கடுகரோகிணி | சின்னி வேர் |
| அவுரிவேர் | கொத்தான் |
| கழற்சிக்கொட்டை | வேலிப்பருத்தி |
| சுத்திசெய்த சிவதைவேர் | |
| காட்டாமணக்கம்வேர் | |
| பிரண்டைத்துண்டுகள் | |
| சவர்க்காரம் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து, ஆமணக்கெண்ணெய் 10 சேர் விட்டுக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

கவுசை, பக்கவிப்புருதி, பீலிகை ரோகம், உதரச் சூலை, கருச்சிதைவு, விப்புருதி, பெருவயிறு, மகோதரம் முதலானவை தீரும்.

## வாயுவுக்குச் சீரகாதிச் சூரணம்

சேர்ந்திடு மிருத்துரோகஞ் செய்நெடுஞ் சிறுகல்குறைப்
பார்ந்திடு வாய்வுப்பத்திய வாயுமெய்க்குஞ்

A siddhadreams ebook

சார்ந்திடு வாயுமெய்யில் சர்வவாயுவு மூலத்
தேய்ந்திடு வாயுவுக்கெல்லா மிசைந்திடு மருந்து
தேனே (31)

இசைந்தசீ ரகமிரண்டு மியல்திரி கடுகுமூல
மசைந்த நற்சித்திரமூலம் மாந்திரிபலியு மித்தும்
பிசைந்த வாய்விளங் கங்காயம் பெருத்திடு சவுட்டுமண்ணுங்
காசந்த ரோகணியுந் தேனில் கலந்துகொள் ரோகம் போமே
(32)

(இ - ள்)

| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சித்திரமூலம் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | இந்துப்பு |
| வாயுவிடங்கம் | பெருங்காயம் |
| சவுட்டுமண் | கடுகரோகிணி |

இவைகளைச் சரியளவெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன் விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

இருதய வியாதிகள், வாயு, பித்தவாயு, சர்வாங்க வாயு, மூலவாயு முதலானவை தீரும்.



## இரத்த வாந்திக்குத்
## "தண்ணீர்விட்டாங்கிழங்கு நெய்"

கலந்திடு ரெத்தவாந்தி காந்திடு ரெத்தகாசம்
புலந்திடு ரேத்தபித்தம் பேர்ந்திடு சீழ்காசோடு
மலந்திடு பெரும்பாட்டோடு வளரெரும் புருக்கி நெஞ்சில்
நலந்திடு புண்ணும்போக நாரியே! மருந்துகேளே
(33)

நாரியே தண்ணீர் விட்டான் நல்லத்தி அரசால்வித்து
பாரியபனையுஞ் சீந்தில் பகர்முத்தஞ் சாதிக்காயுஞ்
சீரிய கிராம்பு பத்திரி திரவியமஞ்சுங் கூட்டிக்
கூறிய நெய்யில் பண்ணிக் கொடுத்திட ரோகம் போமே
(34)

(இ - ள்)

தண்ணீர்விட்டான் கிழங்கு

| | |
|---|---|
| அரசம்விதை | அத்திவித்து |
| பனங்கிழங்கு | ஆலம்வித்து |
| சாதிக்காய் | சீந்தில் |
| லவங்கப்பத்திரி | கோரைக்கிழங்கு |
| ஏலக்காய் | கிராம்பு |
| ஜாதிப்பத்திரி | லவங்கப்பட்டை |
| சிறுநாகப்பூ | |

இவைகளை வகைக்கு 1½ வராகனெடை வீதமெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்துப் பசுவின் நெய் 5 சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

A siddhadreams ebook

இந்த நெய்யைக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ள, ரெத்த காசம், ரெத்த பித்தம், சீழ்க் காசம், பெரும்பாடு, எலும்புருக்கி, நெஞ்சுப்புண் முதலானவை தீரும்

---

## ஜ்வரத்திற்கு "இலாமிச்சைக் கஷாயம்"

---

கொடுத்திடு சரத்திற் கெல்லாம் கூறிய லாமிச்சம் சீந்தில்
எடுத்துக் காஞ்சோரிமுத்த மிசைந்தபற் படாகமட்டி
யடுத்திடு வேம்பு கோட்டம் வளர் கண்டங்காலி தேக்குத்
தடுத்ததிப் பிலியுஞ்சுக்குந் தன்னுடன் கஷாயங் கொள்ளே
(35)

(இ - ள்)

| | |
|---|---|
| இலாமிச்சைவேர் | சீந்தில்கொடி |
| காஞ்சோறிவேர் | கோரைக்கிழங்கு |
| பற்பாடகம் | சித்தாமுட்டி |
| வேப்பம்பட்டை | கோஷ்டம் |
| கண்டங்கத்திரிவேர் | சிறுதேக்கு |
| திப்பிலி | சுக்கு |

இவைகளை யிடித்துப்பத்திரப்படுத்தி வேண்டுபோது 1 பலம் சூரணம் எடுத்து 1 சேர் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து வடிகட்டி உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

---

## சந்நிக்கு முசுருமுட்டை மருந்து

---

தன்னுடன் சந்நிக்கெல்லாம் தாங்கிய முசுறுமுட்டை
மன்று பூதாகம்ரெண்டு வறுத்துப் பின்னைப் புல்லுரி



சொன்ன திப்பிலி முலைப்பால் சுத்திறக் கிஞ்சிச்சாறு
பண்ணிதிப்பிலிக் கெந்தூரம் பண்ணிநு லெவற்கு மாமே
(36)

(இ - ள்)

முசுருமுட்டை ஒரு பலம்
பூதாகம் 2

இவ்விரண்டையும் சட்டியிலிட்டு இளஞ்சூடு செய்யத் தைலமாகும். பின்னர் பின்னைமரத்துப் புல்லுருவி, திப்பிலி, முலைப்பால், இஞ்சிச்சாறு இவைகளை விட்டுக் குழப்பி உட்கொள்ளவும். திப்பிலியைச் சிவக்க வறுத்துப்பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இதனையும் உட்கொள்ளவும்.

---

## ஜ்வரம், சந்நிக்கு "இருவி மாத்திரை" (சந்நிபாத பைரவன்)

---

பண்ணிய விருவிதாபி பகரசங் கெந்தகந்தாள்
நண்ணிய காரங்காந்தம் நலத்திடு தாரம்வாளம்
குண்ணிய சிலைகிராம்பு கூறியமிளகு சுக்கு
என்னுதிப் பிலியிஞ்சிச்சாறு விதுசாஞ் சந்நிபோமே
(37)

(இ - ள்)

சுத்திசெய்த இருவி
„ கெந்தகம்
„ காந்தம்
„ நேர்வாளம்
„ பாதரஸம்
„ தாளகம்
„ மனோசிலை
பொரித்த வெங்காரம்



A siddhadreams ebook

| | |
|---|---|
| கோரம்பு | மிளகு |
| சுக்கு | திப்பிலி |

இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரையாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்து உட்கொள்ளவும். ஜ்வரம், சந்நி முதலானவை தீரும்.

---

## வலிப்புக்கு "நஸ்யம்"

இதுமுதல் குமரகண்டன் இசைந்திடு முயலகன்றன்
மதுவுடன் குதிரைமேவு வலிப்புடன் பலவலிப்பும்
பதுமமா மவுரிச்சாறு பகர்வசம்புள்ளி கூட்டி
முதுநசி யந்தன் பண்ண மொழிந்திடி லோடிப் போமே (38)

(இ - ள்)

குமரகண்டவலி, முயலகன் வலிப்பு, குதிரைவலிப்பு, முதலான பற்பல வலிப்புகளுக்கும்,

அவுரிச்சாற்றில், பூண்டு, வசம்பு இவ்விரண்டையும் இழைத்து நசியமிடவும். தீரும்.

---

## சந்நிக்கு அஞ்செண்ணெய்த் தைலம்

ஓடிய காயத்தோடு உள்ளியும் வசம்பு தாரம்
நாடிய கௌசிநாபி நயந்திடுங் காயம் போளம்



தேடிய மஞ்சள்மூலந் திரண்டமா விலங்கை வாகை
சூடிய பெருமருந்து சொல்சிறு குறிஞ்சா கூட்டே (39)

சொல்லிய யெருக்குப்புங்குந் துலங்கிய முருங்கைவேரும்
மல்லிகை சதிரக்கள்ளி மரமஞ்சள் தெரியரிசிப்பால்
புல்லியவெண் ணெயஞ்சு புகலுங் குக்குடத்தி லண்டங்
கல்லிய பதமதாக்கிக் கருத்துடன் மேலும் பூசே (40)

(இ - ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | பூண்டு |
| வசம்பு | தேவதாரம் |
| நாபி | மஞ்சள் |
| போளம் | வாகை |
| மாவலிங்கை | சிறுகுறிஞ்சா |
| பெருமருந்து | புங்கு |
| எருக்கு | மல்லிகை |
| முருங்கைவேர் | மரமஞ்சள் |
| சதுரக்கள்ளி | தெரியரிசிப்பால் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துத் தண்ணீர் விட்டரைத்து

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |
| நல்லெண்ணெய் | புங்கெண்ணெய் |
| இலுப்பெண்ணெய் | |

இவைகளையும் வகைக்கு 1 சேர் வீதம் எடுத்து அதனுடன் ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமாகும் போது கோழிமுட்டையை உடைத்துப் போட்டு, இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும். இத் தைலத்தை மேலேபூசவும். பற்பல சந்நிகளும் தீரும்.

---

A siddhadreams ebook

## கரப்பானுக்குச் "செங்கத்தாரி எண்ணெய்"

கறுத்துறப் புடைகரப்பான் கருங்கொள்ளிக் கரைப்பான் வீங்கு
வருத்திடு கரப்பான் பித்த வாதசேத்துமக் கரப்பான்
பெருத்திடு செங்கரப்பான் பலத்ததோர் அரிகரப்பான்
திருத்தமாங் கருங்கரப்பான் தீர்ந்திட மருந்து கொள்ளே (41)

தீர்ந்திட ச்செங்கத்தாரி சேர்கருநொச்சி கொத்தான்
சார்ந்திடு கழற்சிபுங்கு சங்கொடு சங்கங்குப்பி
பேர்ந்திடு கிரந்திநாயன் புகழ்செருப்படி தான்சின்னி
கூந்தல்வே லிப்பருத்திக் கொடிய வேலியுங் கூட்டே (42)

கொடிய வேம்பாடல் பட்டைகூறியச் சிவனார்வேம்பு
தேடியதோர் சிவதைமூலம் தேரிய கண்டங்காலி
பொடியது கடுக்காய் ரோகிணி பூதத்தின் கரப்பான்பட்டை
வேடிய சீரகமிரண்டு விளக்கெண்ணெய் எரித்துக் கொள்ளே (43)

(இ-ள்)

| | |
|---|---|
| செங்கத்தாரி வேர் | கருநொச்சி |
| கொத்தான் | கழற்சி |
| புங்கு | சங்கு |
| சங்கங்குப்பி | கிரந்திநாயகம் |
| செருப்படி | சின்னி |
| முதியார்கூந்தல் | வேலிப்பருத்தி |
| கொடிவேலி வேர் | கடுக்காய்த்தோல் |
| சிவனார்வேம்பு | கருஞ்சீரகம் |
| கடுகரோகிணி | சீரகம் |
| கண்டங்கத்தரி வேர் | |
| வேம்பாடம்பாடம் பட்டை | |
| சுத்திசெய்த சிவதைவேர் | |
| பூதகரப்பான் பட்டை | |



இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீத மெடுத்துத் தண்ணீர் விட்டரைத்து, ஆமணக்கெண்ணெய் 5 சேருடன் கலக்கி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

புடைகரப்பான், கொள்ளிக் கரப்பான், வீங்கு கரப்பான், பித்தவாதச் சிலேத்ம கரப்பான், செங்கரப்பான் அரிகரப்பான், கருங்கரப்பான், முதலானவை தீரும்.

## விஷபாகங்களுக்குக் குடிநீர்

கொள்ளவே விஷபாகங்கள் கூறினல் பலவுமுண்டு
முள்ளி தூதளை நாரத்தை முதுருய்ய கொண்டான்
கள்ளவிழ் பிரமிசின்னி கழற்சிமா மலைநன்னாரி [நொச்சில்
தெள்ளிய கடுக்காய் சுக்கு செய்திடு குடிநீர் தானே (44)

(இ-ள்)

| | |
|---|---|
| முள்ளிவேர் | தூதுவேளை |
| நாரத்தை இலை | உய்யகொண்டான் |
| நொச்சி | பிரமி [வேர் |
| சின்னி | கழற்சி |
| மலைநன்னாரி | கடுக்காய்த்தோல் |
| சுக்கு | |

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்து வைத்துக் கொள்ளவும்.

வேண்டும்போது 1 பலம் தூள் எடுத்து 1 சேர் தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக

A siddhadreams ebook

நிலப்பனங்கிழங்கு
சரிப்பாலேவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| அதிமதுரம் | 3 பலம் |
| செண்பகப்பூ | 1 ,, |
| ஏலம் | 1 ,, |
| இலாமிச்சம்வேர் | 1 ,, |
| பொன்னாங்காணி வேர் | 1 ,, |

இவைகளைச் செடுத்துத் தண்ணீர் விட்டரைத்து நன்றாக வரைத்துப் பசுவின் நெய் 5 சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந் நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் உண்டாகும், பூதபிசாசுகளும் நீரும்.

## சதாவரி கிருதம்

சதாவரிக் கிழங்கினுடச் சாறது பதக்கு
நன் பசுவின்பால் குறுணி நெய்யும் நாநாழி
ஏதாகின்ற கச்சோலஞ் சன்னசாலேக்கடுகு
மிதனோடு சந்தனமகில் மதுரங்கோட்ட
மதாகின்ற செங்கழு லாமிச்சம் நன்னாரி
மகாகொன்னி மேதையது சீரகமிரண்டு
நிதானமிடு பேரிச்சு முந்திரிகை முத்தம்
நீண்ட நல்லிலுப்பைப்பூ வகைநாலு கழஞ்சே (34)



செய்யபடி நீயது வரைத்ததில் வடித்து
சேரவே யொன்றுக்கி கற்கண்டு தேனழிகூட்டி
மெய்யவே நீகொன்று காலெரிவு நீரெரிவு
பயித்தியம் பிரமேகம் மூத்திரகிருச்சும்
வெய்யநீர் சிறுப்புடன் மேகதுர்மாங்கிஷம்
விதமான நீர்கடுப் பிதனோடு முட்காய்ச்சல்
நெய்யதாம் நோயகலும் சதாவரி கிருதம்
நோக்கி னுருடல் மீறுதாக்கு மாய்விடுமே (35)

(தி - ன்)

தண்ணீர்விட்டான்
கிழங்குச்சாறு 2 மரக்காம்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 ,, |
| ,, நெய் | 4 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| கச்சோலம் | சின்னலவங்கப்பட்டை |
| கடுகு | சந்தனத்தூள் |
| அகில் | அதிமதுரம் |
| கோஷ்டம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| இலுப்பைப்பூ | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை விதமெடுத்து பால் விட்டு நன்றாக வரைத்து, நெய்யுடன் குழப்பியடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனுடன்

கற்கண்டு 4 பலமும் தேன் 1 நாழியும் கூட விட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதில் 1 ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

கை காலெரிச்சல், நீரெரிச்சல், பித்தம், பிரமேகம்,

A siddhadreams ebook

வற்ற வைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும்.

விஷபாகங்கள் தீரும்.

## கண்டமாலைக்கு மருந்தும், தைலமும்

செய்யதோர் கண்டமாலை சேர்ந்திடு பவுத்திரங்கள்
வெய்ய விப்புருதி வீக்கம் மேவிய துடையில் வாழை
பய்யவே பனிசைகுலை பரிந்திடு பிளவையல்லால்
துய்யவே யரையாப் போடு துடங்கிய மருந்து கேளே
(45)

துடங்கிய வெருக்குநீவி தோனி கார்த்திகைக் கிழங்கு
மடங்கிய குன்றியெட்டி வளர்பெரு மருந்து கஞ்சார்
முடங்கிய வசம்புகாயம் முதிர்வெள்ளை யுள்ளி கூட்டி
அடங்கவீக் கத்தில்பூச வடங்கிலா துடைந்தால் கேளே
(46)

உடைந்த வேப்பெண்ணெயுள்ளி வோங்கு வேம்பாடல் துத்தம்
கடைந்த கெந்தக முஞ்சூதம் காசுதற் துருசுதாபி
விடைந்த குங்கிலியங் குக்கில் மிருதார சிங்கிதார
மிடைந்தில்ச் சிதலமாக்கி விந்தமா ரோகம் போமே (47)

(இ - ள்)

| | |
|---|---|
| எருக்கம் வேர் | அவுரிவேர் |
| கார்த்திகைக்கிழக்கு | குன்றிவேர் |
| எட்டி | பெருமருந்து |
| கஞ்சா | வசம்பு |
| காயம் | வெள்ளைப்பூண்டு |

இவைகளைச் சேர்த்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து நீண்ட மாத்திரையாக உருட்டி வைத்துக்



கொள்ளவும். வேண்டும்போது தண்ணீர்விட்டு இழைத்து வீக்கத்தில் பூசவும். அது உடையும்.

பின்னர், வேப்பெண்ணெய் 5 சேருடன்,

| | |
|---|---|
| பூண்டு | வேம்பாரம்பட்டை |
| துத்தம் | கெந்தகம் |
| பாதரஸம் | துருசு |
| காசி | குங்கிலியம் |
| குக்கில் | மிருதாரசிங்கி |

இவைகளை நன்றாக அரைத்துக் கலக்கி (வகைக்கு 1¼ வராகனெடை), அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைப் புண்ணிலிடவும்.

புண்கள் ஆறும்.

## நயனரோகங்களுக்கு முத்தாதி மாத்திரையும் தைலமும்

இந்தமா நீலகாச மியல்புரு பித்தகாசம்
மந்தமாம் படலம் பில்லம் மயிர்குத்துப் புழுவெட்டோடு
சந்தியா மாலைக்கண்ணுந் தளாவி கண்ணு நேத்திரம்
வந்தவா யுவுடனே நல்லமருந்து தானுரைக்கக் கேளே (48)

உரைத்திடு முத்துவெள்ளி உயர்ந்த தாமிரஞ் சங்கோடு
கரைத்திடு துருசுதுத்தங் கலந்தலை யோடு பொன்னுந்
திரைத்திடு பீதரோகிணி சேர்புங்கு நிம்பச்சாற்று
லரைத்திடு கண்ணில் தொண்ணூற் றுறுநோய் கண்டுபோமே
(49)

A siddhadreams ebook

மூத்திரகிரிச்சம், துர்மாங்ஷம், நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு தேககாங்கை முதலானரோய்கள் தீரும்.

---

## நாயுருவி நெய்

நாயுருவி வேரது முப்பதுபல மிடித்து
பதக்குநீர்விடுத்து நன்றாகநா நாழிகஷாயம்கொண்டு
தூயவெட்பாலை பெருங் குறும்பை தேக்கு
கொல்லரிய கொடிவேலி பங்கம்பாளை வேரும்
வாயுறை திரிகடுகு செவ்வியமதி விடையம்
வகைக்குமோர் கழஞ்செடை யரைத்துநெய்
காயவிட்டு நீயிறக்கி கொள்ளாய் மானே [நாழிதானே
கடியாதப் பெரும்பாடு சயமதிசாரம் காணுதென்றே
(36)

(தி - ள்)

நாயுருவி வேர் 3 பலம் எடுத்து

2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து 4 படியாகும் வரை வற்ற வைத்து, வடிக்கட்டிக் கொண்டு,

| | |
|---|---|
| வெட்பாலை | பெருங்குறும்பை |
| தேக்கு (சிறு) | கொடிவேலிவேர் |
| சுக்கு | ஆடுதீண்டாப்பாளை |
| திப்பிலி | மிளகு |
| செவ்வியம் | அதிவிடயம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து தண்ணீர் விட்டரைத்து.

இதனுடன்

நெய் 1 படி சேர்த்து அடுப்பின் மேலேற்றி



கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கிவடிக்கட்டிக் கொள்ளவும்.

இதனையுட்கொள்ளப்

பெரும்பாடு, சயம், அதிஸாரம் முதலான தீரும்.

---

## பாளை நெய்

தென்னம்பாளைச் சாறென்னுழி தேவதார மதூரங் கோட்டம்
வன்னமாஞ் சடாமாஞ்சி வருசீரகந் திப்பிலி சதகுப்பை
தன்னே ரிடைகள் நாற்கழஞ்சாம் நறும்பிசின் தானும்
நாற்கழஞ்சு
என்னு மரமஞ்சள் சிறுநாக மிவைகளிருகழஞ்சு மிருநாழியோ
டெரித்திடே (37)

(தி - ள்)

தென்னம்பாளைச்சாறு 8 படியுடன்

| | |
|---|---|
| தேவதாரம் | அதிமதுரம் |
| கோஷ்டம் | சடாமாஞ்சில் |
| சீரகம் | திப்பிலி |
| சதகுப்பை | கறும்பிசின் |

இவைகள் வகைக்கு 5 வராகனெடையும்

| | |
|---|---|
| மரமஞ்சள் | சிறுநாகப்பூ |

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையும் எடுத்துச் சாறுவிட்டு நன்றாக வரைத்து நெய் 1 படி விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

---



A siddhadreams ebook

போமது பொன்னுங்காணி புகழ்சிறு கீரைமுத்தம்
ஓமிது சீந்திநிம்ப முயருளாத்தை கோஷ்ட
மாமிது மதூரமேல மடருஞ்சென் பகப்பூவங்கம்
நாமிது சொன்னேமெண்ணெய் நயந்தெரி முழுகு
பொமே (50)

(கு - ள்)

குளியிடாத ஆணிமுத்து
ராவியதாமிரப்பொடி
வெக்தமண்டையோடு
வெள்ளிப்பொடி — பொர்த்தசங்கு
அருக — துத்தம்
புன்கங்கொட்டை — பீதரோகிணி
மான்கொம்பு — ராவியபொன்

இவைகளைக் கல்வத்திலிட்டுத் துளாக்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டு 3 நாட்கள் விடாமல் அரைக்கவும். பின்னர் இவைகளை நீண்ட மாத்திரையாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும்.

2 வருடங்கள் சென்று உபயோகிக்கவும். இம்மாத் திரையைச் சுத்த ஜலத்திலோ, தாய்ப்பாலிலோ இழைத்துப் பயற்றம் பருப்பளவெடுத்துக் கண்களிலிடவும்.

96 வகை ரோகங்களும் தீரும்.

2. பொன்னுங்காணிவேர்
கோரைக்கிழங்கு — சிறுகீரைவேர்
நாரத்தையிலை — சீந்தில்கொடி
கோஷ்டம் — சிற்றரத்தை
அதிமதுரம் — ஏலக்காய்
கிராம்பு — செண்பகப்பூ

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் 5



சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தினால் தலை முழுகவும்.

---

## வாகட வெண்பா

ஆரியமாம் வாகடத்தி னும்பொருளை யாராய்ந்து
சீரியதாய்ச் செந்தமிழால் செப்புகிறேன் — கூறியதா
யுள்ள நிதானமதை ஓதும் விநாயகனே
வள்ளலே யென்மனத்தில் வர (1)

(கு - ள்)

வடமொழியிலுள்ள வாகடநூல்களின் பொருளைத் தெரிந்து கொண்டு (ஆயுர்வேத சாஸ்திரத்தை) தமிழ்ப் பாட விநாயகர் அருள்புரிவாராக.

---

## ஆக்கிராணம்

வாவெனவே சேற்றுமத்தில் வந்த வியாதிகளும்
போவெனவே நாவிலிடப் போகிவிடும் — பாவனையாய்
வாக்கான பீனிசமு மற்றுஞ் சளிபோக
ஆக்கிராணம் பண்ணுயரத்தை (2)

(கு - ள்)

சேத்தும வியாதிகள் அனைத்தும் சிற்றரத்தையை வாயிலிட்டு அடக்கி வந்தால் தீரும். பீனிசம், சளி இவை



A siddhadreams ebook

## பிரமி நெய்

பிரமிச்சாறு நாநாழி புடோலஞ் சாறுநா நாழியதாய்
உரமெத்தாவின் பால்நாழி யுடனும் நெய்யும் நாழியதாய்
வரமேத்தான்கடுக் காய்பத்தும் வருகடுகு ரோகிணி நாற்கழஞ்சு
சுரமீராத மல்லிபலம் சொல்லாய் சிவதை நாற்கழஞ்சே (38)

செவ்வாலங் கொட்டை முப்பதுடன் சேரவரைத்துத் தான்காய்ச்சி
நல்வாய் மானேயிரு காசெடைநெய் நக்கக் கெர்ப்ப வாயுவிடும்
ஒவ்வா மெலுமிச்ச மாறுமொளிவீர் கசப்பும் புளிப்பதுதான்
இவ்வா நெய்யுந் நீயருந்த இடரே தீருங் கண்டிடே (39)

(செ - ம்)

| | |
|---|---|
| பிரமிச்சாறு | 4 படி |
| பேய்ப்புடல்சாறு | ,, |
| பசுவின் பால் | ,, |
| ,, நெய் | ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | 10 |
| கடுகரோகிணி | 5 வராகனெடை |
| கொத்தமல்லிவிதை | 1 பலம் |
| சிவதைவேர் (சுத்திசெய்தது) | 5 வராகனெடை |
| சேராங்கொட்டை (சுத்திசெய்தது) | 30 |

இவைகளை இடித்து கல்குக வரைத்து முன் சொன்ன நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.



இந்த நெய்யில் 2 வராகனெடை யெடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடனே உட்கொள்ளவும்.

**தீரும் நோய் :**

கெர்ப்பவாயு.

**பத்தியம் :**

கசப்புச் சுவையுள்ள பண்டங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கவும்.

**குறிப்பு :**

**சிவதைவேர் சுத்தி :** பசுவின் பாலில் ஊறவைத்து, வேகவைத்துக் கொள்ளவும்.

**சேராங்கொட்டை சுத்தி :** மூக்கைவெட்டிவிட்டுச் சுண்ணாம்பு நீருடன் ஊறவைத்து பின்னர் உபயோகிக்கவும்.

## வெள்வேலம் எண்ணெய்

வெள்வேலத் தோலிடித்து நூனிநீர் விடுத்து மிக்கபடி நாநாழி காய்ச்சியது வடித்து
தைவேளை வேரதுவுஞ் சாறணையின் வேரும் தக்கவுள்ளி திப்பிலியுங் கழஞ்சரைத்துக்
கள்ளிப்பால் பாக்களவு நல்லெண்ணெய் மூவுழக்குக்கடிய சித்தாமணக் கெண்ணெய் மூவுழக்கு
வெள்ளாட்டுப்பால் நாழிகூடவிதுவிடித்து விரைந்து காசெடை கொள்ள சூலைகுன்மம் குடல்வாத வாயும் விடுமே (40)

(செ - ம்)

வெள்வேலம் பட்டை 1 வீசை யெடுத்து 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாகும் வரை வற்ற வைத்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

A siddhadreams ebook

இதுடன்

| | |
|---|---|
| தைவேளைவேர் | சாறணைவேர் |
| பூண்டு | திப்பிலி |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து அரைத்துக் கள்ளிப்பால் 1 பாக்களவும் கலந்து

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 3 உழக்கு |
| ஆமணக்கெண்ணெய் | " |
| வெள்ளாட்டுப் பால் | 1 படி. |

சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் 1 காசெடை யெடுத்து காய்ச்சிய பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

கெர்ப்பசூலை, குன்மம், குடல்வாயு முதலான ரோகங்கள் தீரும்.

---

## பொன்னுங்காணி நெய்

பொன்னுங்காணி முசுமுசுக்கை பொருந்துந் தாளிப்பழம்பாசிச்
சின்ன நீர்ப்பூலா சித்தாமுட்டி சீதேவிவிழி தாழைச்சாறு
வன்னமாகப் பாலிள நீர் வகைக்குநாழி நெய்நாழி
சொன்ன கோஷ்ட மதிமதுரஞ் சோரா செண்பகஞ் சிறு
நாகமதே (41)

நாளுர்ச்சீரகம் நெல்லிமுள்ளி நல்ல கொத்தமல்லியுடன்
கோரைமுத்தும் தேத்தாம்விரை தோற்றுஞ் சந்தனம் நன்னாரி
வெட்டிக்
கானுலாமிச்சிநவேனுடு கழஞ்சாயரைத்து நெய்வடித்துக்
கோவைச் சீனியுடன் கொள்ள குடிப்போம் பித்தகர
மென்றே (42)



(3 - 4)

| | |
|---|---|
| பொன்னுங்காணிச்சாறு | |
| முசுமுசுக்கைச்சாறு | |
| தாளிச்சாறு | பழம்பாசிச்சாறு |
| நீர்ப்பூலாச்சாறு | சித்தாமுட்டிச்சாறு |
| சீதேவிச்செங்கழுநீர்ச்சாறு | |
| பசுவின் பால் | தாழைச்சாறு |
| இளநீர் | |

இவைகள் வகைக்கு 1 படி.

| | |
|---|---|
| பசுவின் நெய் | 1 படி. |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| கோஷ்டம் | அதிமதுரம் |
| செண்பகப்பூ | சிறுநாகப்பூ |
| சீரகம் | நெல்லிமுள்ளி |
| கொத்தமல்லிவிதை | கோரைக்கிழங்கு |
| தேத்தான்கொட்டை | சந்தனத்தூள் |
| நன்னாரிவேர் | வெட்டிவேர் |
| இலாமிச்சம்வேர் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துச்சாறு விட்டு, அரைத்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும்.

இதனுடன்

சீனி 2 பலம் எடுத்துக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

பித்த ஜ்வரங்கள் தீரும்.

---

A siddhadreams ebook

கன் போகச் சிற்றரத்தையே பொடியாகச் செய்து மூக்கில் விட்டு ஊதவும்.

### சுரத்திற்கு " அரத்தைக் கஷாயம் "

அரத்தை சதகுப்பை சுக்குஆண்டு தொச்சிச்சாற்றில்
உரைத்துயக் காய்ச்சியது வுண்ண — வருத்தத்
தலைவலியும் நீரேற்றந் தன்னுடனே வந்தசுரங்
குலைகுலைந்து போமெனவே கூறு (3)

(இ - ள்)

சிற்றரத்தை சதகுப்பை
சுக்கு

இம்மூன்றையும் இடித்து 1 ஆண்டு சென்ற கரு நொச்சி மரத்தின் இலைச் சாற்றில் பாவனை செய்து வேக வைத்து உட்கொள்ளவும்.

தலைவலி, நீரேற்றம், சுரம் முதலான ரோகங்கள் தீரும்.

### சுரத்திற்குப் பாவட்டையாதிக் கஷாயம்

கூறுமெனும் பாவட்டை கொண்டசிறு வேரண்டம்
வீறுடனே வெளிப்பருத்தி வேரயில் — காறுகின்ற
நன்மிளகுங் கூட்டி நயமாய்க் கஷாயமிடில்
சென்ம மில்லை யாஞ்சுரங்கள் செப்பு (4)

(இ - ள்)

பாவட்டைவேர் சிற்றாமணக்குவேர்



வெளிப்பருத்தி ஆயில்யப்பட்டை
மிளகு

இவைகளை இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக வற்ற வைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

### எரிவாதத்திற்கு " இலந்தைக் கஷாயம் "

செப்பமெனும் பேரிலந்தை சேர்ந்த மிலையாரை
யொப்புடனே கூட்டியுட னரைத்து — மெப்பமுடன்
மத்திட்டுடன் கடைந்து வந்தநுரை பூசிவைக்கச்
சத்தியமே யெரிவாத மில்லைத்தான் (5)

(இ - ள்)

பேரிலந்தை இலை ஆரை இலை

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துத் தண்ணீருடன் குழப்பி மத்தினால் கடையவும். நுரையுண்டாகும். இதனை எரிவாதத்தில் பூசவும்.

### வாயுவிற்கு " வெள்ளுள்ளிக் கஷாயம் "

நாளென்னும் வெள்ளுள்ளி தப்பாமலுப்பு மெத்தி
வேளென்னு மக்கினியில் வேகவைத்துத் — நாளென்று
மிங்கு வுடனரைத்து எத்தநீரிற் குடிக்கில்
வங்கு நாவாயு வில்லைமாள் (6)

A siddhadreams ebook

## ஈரவெங்காய நெய்

ஈரவெங்காயச் சாறீராழி இதனோடு நெய்யும் நாழி
பாரடா பொன்னாங்காணி சிந்திபகர்சிறுக் கீரைவேரும்
சீர்பெறு மதுரங்கோஷ்டம் சேரேலங் கிராம்பு லவங்கஞ்
சாதிக்காயும்
தேருடனரைத்துச் சர்க்கரைகூட நெய்யதில் வெந்து
கொள்ளதிசாரம் நிற்குந்தானே (43)

(இ - ள்)

| | |
|---|---|
| வெங்காயச்சாறு | 2 படி |
| நெய் (பசுவின் நெய்) | 1 படி |

| | |
|---|---|
| பொன்னாங்காணி வேர் | |
| சிறுகீரைவேர் | அதிமதுரம் |
| சீந்தில்கொடி | கோஷ்டம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| லவங்கப்பத்திரி | சாதிக்காய் |
| சர்க்கரை | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்து அரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

அதிசாரம் நிற்கும்

## குறிஞ்சா நெய்

நற்குறிஞ்சாச்சாறு நாநாழி நாடுசித்திரமூலம் பொன்
முசுட்டை



வேரத்தித் திப்பிலி வெட்பாலை மதுரமுமான பெருமரப்பட்டை
அதிவிடய மித்துப்புடன்
நவற்றிசீரக மிரண்டு மரமஞ்சள் வெவ்வேறு கழஞ்செடை
யரைத்து பால்நாழி நெய்நாழிவிட்
டெரிசத்து நீகொள் கிராணியதிசாரந் நாளடங்கியுயிர்
தாங்கியும் நிற்குமே (44)

(இ - ள்)

| | |
|---|---|
| குறிஞ்சாச்சாறு | 4 படி |

| | |
|---|---|
| சித்திரமூலம் | பொன்முசுட்டை |
| யானைத்திப்பிலி | வெட்பாலை |
| அதிமதுரம் | பெருமரப்பட்டை |
| அதிவிடயம் | இந்துப்பு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| மரமஞ்சள் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்துச்சாறு விட்டரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 படி |
| பசுவின் நெய் | 1 படி |

விட்டு ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

கிராணி, அதிஸாரம் முதலானவை தீரும்.

## புளியாரை நெய்

புளியாரைதன் சாறுநாழி நெய்யீராழி பொன்முசுட்டை
வறன்கண்டி தூதுவிளைவேர்
வெளியான வெள்ளிலோத்திரஞ் செங்கழுநீர் வெட்டிவேர்
கொடிவேலி பெருங்குரும்பை வேரும்

A siddhadreams ebook

தெளிதான செவ்வியமாத்திப்பூ வதிவிடயஞ் சீர்கொண்டு
இலவங்கம் வேர்க்கொம்பு மாஞ்சில்
அளியாதமுத்தஞ் சந்தனத் துடனரைத்து நெய்வடி யருந்
ததிசாரக் கிராணியது விடுமே (45)

(இ - ள்)

| | |
|---|---|
| புளியாரைச்சாறு | 4 படி |
| நெய் | 2 படி |

| | |
|---|---|
| பொன்முசட்டை | வரட்சுண்டி |
| ஆதுவேளைவேர் | வெள்ளிலோத்திரப் |
| செங்கழுநீர்க்கிழங்கு | வெட்டிவேர் [பட்டை |
| கொடிவேலிவேர் | பெருங்குரும்பை |
| செவ்வியம் | ஆத்திப்பூ |
| அதிவிடயம் | கிராம்பு |
| சுக்கு | சடாமாஞ்சில் |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத் துச்சாறு விட்டரைத்து நெய்யுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனை யுட்கொள்ள.

அதிஸாரம், கிராணிகள் முதலான நோய்கள் தீரும்.

## நாரத்தம்பழ நெய்

நாரத்தம்பழச்சா றெருகுருணி நன்றுமிலந்தை யிலைக்
கஷாயம் நாழி
வீரொத்த நெய்நாழி இந்துப்புத் திப்பிலி மிளகதிவிடய
முடனிலவம்பிசின்
கூரொத்த வோமம் சிறுமூலஞ் சுக்கு கூட்டியொவ்வொன்று
கழஞ்செடை யரைத்து
நேரொத்த நெய்யெரித்து நீ கொள்ளத் தீருமுதிர் வழும்பு
முறுக்குமதி சாரமே (46)



(இ - ள்)

| | |
|---|---|
| நாரத்தம்பழச்சாறு | 1 மரக்கால் |
| இலந்தையிலைக் கஷாயம் | 1 படி |
| பசுவின் நெய் | 1 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| இந்துப்பு | திப்பிலி |
| மிளகு | அதிவிடயம் |
| இலவம்பிசின் | ஓமம் |
| திப்பிலி | சுக்கு |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை யளவெடுத்து நெய்யுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

அதிசாரம், வழும்பாகக் கழிதல் முதலானவை தீரும்.

## வறட்சுண்டி நெய்

வறட்சுண்டிவேர் வில்வவேர் பெருமரத்தோல் தாமரைத்
தாத்ததி மதுரங் கஷாயமிட்டு வடித்து வாங்கி
சிறப்பான நெய்நாழி பால்நாழியதுடன்சேரவிட் டொன்றுய்
உரைப்பான கிராம்பு வகவாசி அதிவிடய மோமங் கோஷ்டம்
திரைப்பான வாத்திப்பூ வரைத்துடன் காய்ச்சி நெய்வடித்
தேகொள் கிருணியதிசாரம் தீர்குமன்றே (47)

(இ - ள்)

| | |
|---|---|
| வரட்சுண்டி வேர் | வில்வவேர் |
| பெருமரத்தோல் | தாமரைத்தாது |



A siddhadreams ebook

(கி - ள்)

வெள்ளுள்ளியுடன் உப்பையும் சேர்த்து வதக்கிப், பெருங்காயம் சேர்த்து தண்ணீருடன் குழப்பி உட் கொள்ளவும். வாயுக்கள் தீரும்.

## நீரடைப்பிற்கு " பசரியிலைக் கஷாயம் "

மானேகேள் நீரடைக்கில் வாழும் பசரியுடன்
தானே நற்கத்திரி யிலைதானுடனே — பானைதனில்
ஒக்கக் கஷாயமிட்டு உகந்த வெங்காரமிடில்
கக்கிக் கடலுடைக்குங் காண் (8)

(கி - ள்)

பசரியிலை கத்திரியிலை

இவ்விரண்டையும் கசக்கி ஒரு பாண்டத்திலிட்டுத் தண்ணீர் 8 மடங்கு விட்டு எட்டிலொன்றாக வற்ற வைத்து வெங்காரச் சூரணமிட்டுப் பருகவும்.

கடல் புகுந்ததைப் போல் நீர் வெளியாகும்.

## அண்டவாதத்திற்குக் கழற்கோடிக் கஷாயம்

காணும் பூ நீவழுங்காய் கழற்கோடிப் பருப்பும்
பூணுங் கொத்தானுடனே சேர்ந்த சுக்கும்—வேணுமென
பன்னீர் கஷாயம் பருகப் பருகியபின்
விண்ணி லண்ட வாதம் போம் விட்டு (9)



(கி - ள்)

கழற்சிக்கொடிப்பருப்பு
கொத்தான் சுக்கு

இவைகளை இடித்து (1 பலம் எடுத்து) 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து உட்கொள்ளவும்.

அண்டவாதங்கள் தீரும்.

## அசீரணம், கிராணிக்குக் " காளசாகாதிக் கஷாயம் "

விட்ட வொதியீர்க்கும் மேவுகருவேப் பீர்க்கும்
மட்டுசுக்கு சீரகமு மோதகமும் — தட்டிவிட்டு
காய்ந்த கஷாயங் கொள்ளக் காணுமசீரணம்
பாய்ந்த கிராணி போம் பார் (10)

(கி - ள்)

ஒதிய இலை ஈர்க்கு கருவேப்பிலையீர்க்கு
சுக்கு சீரகம்
ஓமம்

இவைகளை கசக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து உட்கொள்ளவும்.

அஜீர்ணம், கிராணி முதலான நோய்கள் தீரும்.

A siddhadreams ebook

அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டூறவைத்து அடுப்பின் மேலேற்றி எரித்து ¼ ஆக வற்ற வைத்துப்

| | |
|---|---|
| பசுவின் நெய் | 1 நாழி |
| ,, பால் | ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சிராம்பு | இலவங்கப்பத்திரி |
| அதிவிடயம் | ஓமம் |
| கோஷ்டம் | ஆத்திப்பூ |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து பால்விட்டரைத்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும்.

இதனையுட் கொண்டு வரக்

கிராணிகள், அதிஸாரம் முதலானவை தீரும்.

## வெட்பாலை நெய்

வெட்பாலைப் பட்டை பலம்நூறு மேவுசலமெட்டு மரக்கால்விட்
டொன்றாக வடித்துத்
தப்பாத வெள்ளாட்டுப் பாலிருநாழி தன்னுட்டி நெய்நாழி
யுரியுங்கூட்ட
செப்புமுட னித்துப்பு மேலமோமஞ் சீரகமும் பெருமரத்தோல்
திப்பிலி முத்தம்
ஒப்பான ஆயில்பட்டை யிலவம்பிசின் நெருஞ்சி வேரொன்று
நலாய்பொன் முசட்டைவேர் முன்னைவேரே (48)



முன்னோடு கொடிவேலி வறட்சுண்டி வேரும்
முதிருவில்வப் பழச்சதையும் கசதிப்பிலியு மொன்றும்
பின்னோடு வெவ்வொன்று கழஞ்சரை யரைத்து
பேணியே நெய்யது காய்ந்தபின் வடித்துச்
சொன்னபடி முப்பதுநாள் நெல்புடமும் வைத்துச்
சுகமாக விருநேரங் காசெடை யருந்த
வன்னவதி சாரமுதிர் வழும்புடன் கிராணி
வாராது தீரும்வெட் பாலைநெய்தானே (49)

(இ - ள்)

வெட்பாலைப்பட்டை 100 பலம் எடுத்து நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு எட்டி லொன்றாக வற்ற வைக்கவும்.

இதனுடன்

| | |
|---|---|
| வெள்ளாட்டுப் பால் | 1 படி |
| ,, நெய் | 1½ படியும் |

சேர்த்து,

| | |
|---|---|
| இந்துப்பு | ஏலக்காய் |
| ஓமம் | சீரகம் |
| பெருமரத்தோல் | திப்பிலி |
| கோரைக்கிழங்கு | ஆயில்பப்பட்டை |
| இலவம்பிசின் | நெருஞ்சில்வேர் |
| பொன்முசட்டைவேர் | முன்னைவேர் |
| கொடிவேலிவேர் | வறட்சுண்டிவேர் |
| வில்வப்பழச்சதை | யானைத்திப்பிலி |

இவைகளை வகையொன்றுக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து அரைத்து, நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

இதனை

A siddhadreams ebook

## பித்தத்திற்கு "நெல்லிமுள்ளிக் கஷாயம்"

பாரிசைந்த நெல்லிமுள்ளி பாரியதோர் கூவிளையும்
சீரிசைந்த சீரகமுஞ் சேர்ந்த சுக்கு — வேரிசைந்த
சித்த மட்டியும் பொரியுஞ் சேர்ந்து கஷாயமிடில்
பித்தம் விட்டுப் போமிதனைப் பேசு (11)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிமுள்ளி | வில்வவேர் |
| சீரகம் | சுக்கு |
| சித்தாமுட்டிவேர் | நெற்பொரி |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைக்கவும்.

இதனைப் பருகிவரப் பித்த ரோகங்கள் தீரும்.

## குன்மவலிக்குப் பிரண்டைக் கஷாயம்

பேசும் பிரண்டையுடன் நேரிசைந்த வேப்பலகு
மூசும் பேராசவித்து மோதகமும் — வாசிபண்ணுங்
கொள்ளீர் கஷாயமதில் குன்மவலியும் கிருமி
விள்ளீர் விழுந்தேகு மீது (12)

(இ-ள்)

| | |
|---|---|
| பிரண்டை | வேப்பம்ஈர்க்கு |
| அரசம்வித்து | ஓமம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து உட்கொண்டால்



குன்மவலி, கிருமி முதலானவை தீரும்.

## பீலிகைக்கு மருந்து

மீதுவென்னுங் கன்னுநடு வேரதன்னிற் கண்ணும்பு மெத்திப்
போதமுடனக் கிளியில் புடமேறிட்டு — ஊதியுண்ணில்
விக்கம் பீலிகை யுடன்வீறியதோர் அக்கினிமந்தம்
பார்க்கும் பரிந்து போம்பண்ணு (13)

(இ-ள்)

பொருள் விளங்கவில்லை. அநேகமாகத் தென்னம் வேராக இருக்கலாமோ என்று அனுமானிக்கப்படுகிறது.

## விக்கல், சந்திக்கு "பருத்திவிதை லேகியம்"

பண்ணு பருத்திவிதை பாரிதுள்ள நெற்பொரியும்
மென்னுஞ் சிறுதிப்பிலியு மேலமுடன் — தன்னும்பொடி
சக்கரையுந் தேனுங் கலவே பண்ணியுண்ண
விக்கல்சந்தி போகும் விரைந்து (14)

(இ-ள்)

| | |
|---|---|
| பருத்திவிதை | நெற்பொரி |
| அரிசித்திப்பிலி | ஏலக்காய் |

இவைகளைச் சரியளவெடுத்துச் சூரணித்துச் சர்க்கரையும் தேனும் சேர்த்துக் குழைத்து உட்கொள்ளவும்.

A siddhadreams ebook

ஒரு பீங்கான் ஜாடியிலிட்டுத் தானிய புடத்தில் 1 மாதம் வைக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினந்தோறும் 2 வேளைகள் உட்கொள்ளவும்.

அதிசாரம், வழும்பு, கிராணி முதலானவை தீரும்.

## இஞ்சி நெய்

இஞ்சியதின் சாறுநாழி யினிய வெள்ளாட்டுத்
தயிர் நாழி யதின்நெய் நாழியுரிபு
மிஞ்சியதோர் மாதுளையின் காய்பூவேரிலையும்
விதமாக முப்பது பலநீர் விட்டெரித்து
வஞ்சியே நாணியது நாநாழி வடித்து
வகைநாலு மொன்றாக வார்த்தது கலந்து
துஞ்சுபெருங் காயமுடன் திரிகடு கித்துப்புச்
சுறுக்கான கொடிவேலி சிறுமூல மேலமென் றியம்பே
(50)

இயம்பவே வருமானைத் திப்பிலி யுமோமம்
மிலவம்பிசின் வெட்பாலை யரிசியுடன் விடையம்
நயம்பெற வில்வப் பழச்சதையுடன் நற்
சீரகத்தினுடன் வறட் கண்டிவேருத்
துயம்பெரு பெருமரத்தோல் பங்கம்பாளை
தோணுமிரு சீரகங் கோட்ட முத்தக்காசு
சுயம்பெற வேரொன்று கழஞ்செடை யரைத்து
நெய்வடி பெருவயறதிசார மசீர்ண சோபமது
விடுமே (51)



(இ - ள்)

| | |
|---|---|
| இஞ்சிச்சாறு | 1 படி |
| வெள்ளாட்டுத் தயிர் | ,, |
| ,, நெய் | $1\frac{1}{8}$ படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| மாதுளையோடு | மாதுளம்பூ |
| மாதுளைவேர் | மாதுளையிலை |

இவைகளை 30 பலம் எடுத்து, 4 மரக்கால் சுத்தஜலம் விட்டு $\frac{1}{8}$ ஆக வற்ற வைக்கவும்.

| | |
|---|---|
| பெருங்காயம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| இந்துப்பு | கொடிவேலிவேர் |
| யானைத்திப்பிலி | ஏலம் |
| ஓமம் | இலவம்பிசின் |
| வெட்பாலையரிசி | விடையம் |
| வில்வப்பழச்சதை | சீரகம் |
| வரட்சுண்டிவேர் | பெருமரத்தோல் |
| ஆநிதண்டாப்பாளை | பெருஞ்சீரகம் |
| கருஞ்சீரகம் | கோஷ்டம் |
| கோரைக்கிழங்கு | |

இவைகளை $1\frac{1}{8}$ வராகனெடை வீதமெடுத்துச் சாறு விட்டு நன்றாக அரைத்து, நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந் நெய்யைத் தினம் இருவேளை உட்கொண்டுவரப்

பெருவயிறு, அதிஸாரம், அஜீர்ணம், வீக்கம் முதலானவை தீரும்.

A siddhadreams ebook

## ஆவில்யப்பட்டை நெய்

ஆவில்யப்பட்டை பனிரெண்டு பலமு
மதனோடு வேர்க்கொம்பு பனிரெண்டு பலமாய்
தூயபடி யிடித்துத் தூணிநீர் விட்டுச்
சுவறவே வடித்திடு கஷாயம் நாநாழி
ஆயபா லிருநாழி நெய்நாழி கூட
ஆத்திப்பூச் சிறுநாக மரத்தையதி விடையம்
நேயதிரி கடுகுடன் தேவதாரம் மதுர
மாஞ்சில்நீ கூட்டி யெரித்தநெய் கிராணி
குன்ம மதிசாரம் விடுமே (52)

(தி - ள்)

| | |
|---|---|
| ஆவில்யப்பட்டை | 12 பலம் |
| சுக்கு | ,, |

இவ்விரண்டையும் இடித்து, ஒரு பாத்திரத்தி லிட்டு 4 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாக வற்ற வைத்து வடிக்கட்டிப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 2 படியும் |
| ,, நெய் | ,, |

சேர்த்து,

| | |
|---|---|
| ஆத்திப்பூ | சிறுநாகப்பூ |
| சித்தரத்தை | அதிவிடயம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | தேவதாரம் |
| அதிமதுரம் | சடாமாஞ்சில் |

இவைகளை 1¼ வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் விட்டு நன்றாக வரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து இறக்கவும்.



இந் நெய்யை உட்கொண்டு வரக்

குன்மம், கிராணி, அதிஸாரம் முதலானவை தீரும்.

## கோரைக்கிழங்கு நெய்

முத்தக்காக வெடையொன்று முதிர விடித்து நீர்பதக்கு
வத்தக் காய்ச்சி நாநாழி வடித்துபுளியங் கொட்டைத்தோல்
நாரத்தங்காயன
வுத்தபடிநெய் நாழிவிட்டு உகந்தசந்தந்திப் பிலிகிராம்போ
டதிவிடையஞ்
சுத்தவில்வப் பழச்சதையுந் தோன்றும் வெள்ளிலோத்திரஞ்
செவ்வியமே (53)

செவ்விய விழியாய்! செங்கழுநீர் சித்திரமூலம் வெட்பாலை
நவ்வாய் தேவதாரமர மஞ்சள்நாடும் பங்கம்பாலை விருவேலி
ஒவ்வாமாத்திப் பூவுடனே ஓரோன்றிடு கழஞ்சாயரைத்து
இவ்வகை நெய்யோ டெரித்துயிளிக் காசெடை கொள்
ளதிசார சுரம்விடுமே (54)

(தி - ள்)

கோரைக்கிழங்கு 1 வீசை கொண்டு வந்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு,

புளியங்கொட்டைத் தோல் ஒரு நாரத்தங்காயன வெடுத்து அரைத்துச் சேர்த்துப்

| | |
|---|---|
| பசுவின் நெய் | 1 படியும் |

சேர்த்து,

| | |
|---|---|
| சந்தனத்தூள் | திப்பிலி |

A siddhadreams ebook

விக்கல், வாந்தி இவைகள் உடனே தீரும்.

### பித்தத்திற்குச் "சீரகாதி மருந்து"

விரும்புகின்ற சீரகமும் மென்மையுள்ள நெல்லிமுள்ளியும்
பொரும் புகின்ற சுக்கும் பொடி சரியாய் — நிரம்பிடவே
சர்க்கரையும் தேனும் தனவிலக்கப் பொருந்தி யுண்ணச்
சொக்கார் திரு வாளைபித்தஞ் சோம்பு (15)

(இ - ள்)

| | |
|---|---|
| சீரகம் | நெல்லிமுள்ளி |
| சுக்கு | |

இவைகளின் தூள் சரியெடை யெடுத்து ஒன்று கலந்துச் சர்க்கரையும் தேனும் விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

பித்த ரோகங்கள் தீரும்.

### குன்மத்திற்குச் "செந்நாயுருவிப் பற்பம்."

சோம்புகின்ற செந்தூரம் சுத்திபொடி நாயுருவிச்
சாம்பல் மிளகுபொடி தற்சரியாய் — தேம்பிடவே
யொட்டி லொருக் காயமிட்டு விறக்கிக் கழஞ்சு கொள்ள
அட்ட குன்மமோடு மலைந்து (16)

(இ - ள்)

செந்நாயுருவிச் சாம்பல்
மிளகுத் தூள்



இவ்விரண்டையும் சமனெடுத்து இதற்கு எட்டி லொரு பங்கு பொரித்த பெருங்காயத்தைச் சேர்த்து வேளைக்கு ஒரு கழஞ்சளவு (40 குன்றி நிறை) உட்கொள்ளவும்.

8 வித குன்மங்களும் தீரும்.

### அண்டவாதத்திற்கு "வளையலுப்புச் சூரணம்"

அலையுங் கருவளையி லாற்கப் பொடி செய்து
சிலையு மிளகு பொடி நேர்சரியாய் — மலையில்
பெருங்காயங் கூட்டில் பெருமண்ட வாதம்
வரும் பானை போல்வீங்கு வதுவாடும் (17)

(இ - ள்)

| | |
|---|---|
| வளையலுப்பு | சுத்திசெய்த மனோசிலை |
| மிளகு | |

இவைகளின் சூரணம் வகைக்குச் சமனெடை யெடுத்துப் பெருங்காயம் ($\frac{1}{8}$ பங்கு) சேர்த்து உட்கொள்ளவும்.

பானை போல் வீங்கிய அண்டவாதம் தீரும்

### குன்மத்திற்கு இந்துப்பு மருந்து

வாடுகின்ற இந்துவுக்குப் பாதியே ரண்டச்சாத்தில்
தேடுகின்ற காயமதிற்பாதி — நாடுபுகழ்



A siddhadreams ebook

கிராம்பு — அதிவிடயம்
வில்வப்பழச்சதை — வெள்ளிலோத்திரப் [பட்டை
செங்கழுநீர்க்கிழங்கு — செவ்வியம்
சித்திரமூலத்தோல் — வெட்பாலையரிசி
தேவதாரம் — மரமஞ்சள்
காட்டாத்திப்பூ — வெட்டிவேர்
ஆடுதீண்டாப்பாளை வேர்

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டு நன்றாக வரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு காசெடை வீதமெடுத்துத் தினம் 2 வேளை உட்கொண்டுவர

அதிஸாரம், ஜ்வரம் முதலானவை தீரும்.

## குக்கிலாதிக் கிருதம்

குக்கில்தான் வேப்பம்பட்டை தனிலே சுத்திகொண்டு
தான்மிக வெடுத்த பலமுமஞ்சு
மிக்கதொரு சிறுதேக்கு வட்டத்திருப்பி முத்தக்காசு மீறுமகில்
கடுகரோகிணி மிளகுகொத்தான்
சுக்குடனே யந்திரத்தாமரை திப்பிலிநறுந்தாளி சொல்லரிய
நீர்வஞ்சிக் கொடிவேலி செவ்வியமும்
தக்கதோர் நன்னாரி மறுக்காரை நறுந்தாளி தன்னுடனே
தகத்து நீ சிறுதூளி வாரே (55)

வார்த்த நீ ரெட்டொன்றுய்க் காய்ச்சிவத்தி வாங்கும் நீர்
கஷாயம் நாநாழியாக
எடுத்த குக்கிலதிலரைத்துக் கரைத்து நெய்யுமிதனுடனே
கூடவிளி விட்டுக் காய்ச்சிக்



கொடுத்துவரச் சூலையுடன் மேகந்திரும் கொண்ட நோர்
காமாலை பாண்டு
விடுத்திடுமே அபட்சாரகரம் உடம்புலர்தல் காசமிக்கபடி
கிருணி குக்கில் நெய்விட்டுப் போமே (56)

(தி - ள்)

வேப்பம்பட்டைக் கஷாயத்தில் சுத்திசெய்த குக்கில் 5 பலம் எடுத்துக் கொள்ளவும்.

சிறுதேக்கு — வட்டத்திருப்பி
கோரைக்கிழங்கு — அகில்கட்டை
கடுகரோகிணி — மிளகு
கொத்தான் — சுக்கு
அந்தரத்தாமரை — திப்பிலி
நறுந்தாளி — நீர்வஞ்சி
கொடிவேலிவேர் — செவ்வியம்
நன்னாரிவேர் — மறுக்காரை
தாளி

இவைகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக வற்ற வைத்து 4 படியாக்கிக் கொள்ளவும். இதனுடன் குக்கிலையிட்டுப் பசுவின் நெய் 1 படியும் சேர்த்துக் கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யை உட்கொண்டுவரச்

சூலை, மேகம், காமாலை, பாண்டு, அதிஸாரச்சுரம், உடம்பு உலர்தல், காசம், கிராணி முதலானவை நீங்கும்.

## கொடிவேலி நெய்

போமினிய கொடியவேலி வட்டத்திருப்பி
படோலமிரமி யாடாதோடை சீந்தில்தண்டு



A siddhadreams ebook

செப்புக் கரத்தில் செலுத்நீர் செலுத்தியபின்
வெப்புமேனி குன்மம்போம் விரைந்து (18)

(இ - ள்)

இத்துப்பு 1 பலம் எடுத்து ஆமணக்கிலைச் சாறு ½ பலத்துடன் சேர்த்துப் பெருங்காயம் ¼ பலமும் இட்டு, ஒரு செப்புப் பாத்திரத்தில் வைக்கவும். பின்னர் இதனை உட்கொள்ளவும்.

உடலில் எரிச்சல், வயிற்றுவலி முதலானவைகள் உடனே தீரும்.

---

## சலதோஷத்திற்கு "மிளகு கஷாயம்"

விரைந்த மிளகுரைத்து வெந்நீருடன் கலந்து
அருந்து வருந்துஞ் சலதோஷஞ் சூலை — கிருமிசீதம்
.......................................................
சீரணசுரம் பலனேடிப்போம் பேறு (19)

(இ - ள்)

மிளகை வெந்நீர் விட்டு அரைத்து உட்கொள்ளவும்.

சலதோஷம், சூலை, கிருமி, சீதம், அசீரண ஜ்வரம் முதலானவை தீரும்.

---

## சுவாசகாசத்திற்குப் "பிராய் மருந்து"

பெறுவீர் பிராய்சூரை பொங்க சங்குங்கூட்டி
மறுநீர் விட்டாவி தன்னைவாங்குவீர் — குறுகீர்



திப்பிலியும் வெங்காரம் தேனுமிகா மென்பொடியா
யொப்புடனே சுவாசகாச மோட (20)

(இ - ள்)

பிராய் சூரை
சங்கங்குப்பி

இம்மூன்றையுஞ் சமனெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி, எரித்து, எட்டிலொன்றாக்கி வடிக்கட்டித் திப்பிலி, கிராம்பு, இவற்றின் தூள் வகைக்கு குந்தளவு போட்டுத் தேனும் 1 ஸ்பூன் விட்டு உட்கொள்ளவும்.

சுவாசகாசங்கள் தீரும்.

---

## வாயு, கரப்பான் விக்கத்திற்குச் "சாறணைக் குடிநீர்"

ஓடுகின்ற சாரணைய முப்புமரிதகியும்
வாடுகின்ற சுக்கும் வகைக்குடிநீர் — நாடணிவீர்
மறுகமறுகக் குடியீர் வாயுகரப்பான் விக்கமிரு
பருகு பருகெனக் கழியும்பார் (21)

(இ - ள்)

சாறணை வேர் உப்பு
கடுக்காய்த்தோல் சுக்கு

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்துப் பருகவும்.

வாயு, கரப்பான், விக்கம் முதலான நோய்கள் தீரும்.

---

A siddhadreams ebook

நாமினிய வழுதலையுங் கண்டங்காலி
  தன்வேருஞ் சிறுகாஞ் சோறிவேரும்
ஆமினிய வகைக்கெட்டுப் பலங்கள்கூட்டி
  அதனுடனே தூணிநீர் கொண்டு நாநாழிவாட்டி
வேமினிய குக்கிலஞ்சு பலமதாக
  வேப்பம்பட்டை தனில்சுத்தி பண்ணுவீரே (57)

பண்பான திரிபலைகருஞ்சீரக மிந்துப்பு வசம்பு
  பகர்தேக்குக் கச்சோலம் வாலுளுவை யரிசிகோஷ்டம்
நண்பாகத் திரிகடுகு செவ்வியஞ் சிறுமூல
  மாஞ்சில் தற்கடுகு ரோகணி கழஞ்செடைகளரைத்து
வன்பான கஷாயமதில் குக்குல மரைத்துவரு
  பசுவின் நெய்யுட னெரித்து வடித்து நீ கொள்ளாய்
திண்பான சேத்துமம் சுவாசகாசம் தீரும்
  சயம்கிரந்தி வாதஞ் சூலைபிரமேகம் போமே (58)

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | வட்டத்திருப்பி |
| பேய்ப்புடல் | பிரமி |
| ஆடாதோடை வேர் | சிந்தில்தண்டு |
| சிறுகத்திரி வேர் | கண்டங்கத்திரி வேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | |

இவைகளை வகைக்கு 8 பலம் வீத மெடுத்து இடித்து 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாக வத்தக் காய்ச்சவும்.

குக்கில் 5 பலம் எடுத்து வேப்பம்பட்டைக் கஷாயத்தில் சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும்.

அதனுடன்

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | கருஞ்சீரகம் |



| | |
|---|---|
| இந்துப்பு | வசம்பு |
| சிறுதேக்கு | கச்சோலம் |
| வாலுளுவையரிசி | கோஷ்டம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | செவ்வியம் |
| யானைத்திப்பிலி | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து கஷாயம் விட்டரைத்துக் குக்கிலையும் சேர்த்துக் கலந்து,

பசுவின் நெய் 4 படி

சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

**தீரும் நோய்கள் :**

சிலேத்மம், சுவாசகாசம், சயம், கிரந்தி, வாதரோகங்கள், சூலை, பிரமேகம் முதலானவை.

## ஆடாதோடை நெய்

ஆடாதோடை சாறதுபதக்கு அதனுடனே
  முருங்கிலையுங் குருணிச்சாறு
கூடவே மணத்தக்காளிச் சாறுகுறுணி கொடியசத்திச்
  சாரணை கழல்கொடிச்சாறு மதுகுறுணி
தேடரிய சித்தமல்லி பேர்மல்லி நெருஞ்சில்
  சிறுவழுதலை தொடைகூவிளை வேர்சங்கு
நீடமுள்ள வழுக்கிராக் கீழாநெல்லி
  தோராகநாலு பலமதுவாய் கஷாயஞ் சேரே (59)

சேரேல மிலவங்க மதூரங் கோட்டஞ்
  செங்கழுநீர் வெந்தயஞ்சீ ரகத்தோடே

A siddhadreams ebook

## நீர்ரோகத்திற்குப் பேயன்பழ மருந்து

பாரீரோ நீர் பிணிகள்வந்தால் பேயன்பழத்தில்
சேரீரே சர்க்கரையுஞ் சீரகமும் — நாரீரோ
உண்டக்கால் போகாதோ உட்காய்ச்சலும் பிரமியமும்
கண்டக்கால் போகாதோ காண் (22)

(இ - ள்)

பேயன் பழத்துடன் சர்க்கரையும், சீரகமும் சேர்த்து உட்கொள்ளவும்.

பிரமியம், அஸ்திசுரங்கை முதலான நோய்கள் தீரும்.

## காசம், இருமலுக்கு ஆடாதோடைக் கஷாயம்

காணீராடா தோடை கண்டங்கத் தரிதுளசி
தோணீர் பிட்டிப்பிலியுந் தூளிடீர் காணிதியில்
கக்குக் கக்கென்னும் காசமீ ளையிரைப்புப்
பொக்குப் பொக்கென் றோடிப் போம் (23)

(இ - ள்)

ஆடாதோடை கண்டங்கத்திரி
துளசி

இவைகளை இடித்து ஒரு பாண்டத்திலிட்டு, அடுப்பின் மேலேற்றிக் கஷாயம் செய்து, திப்பிலிச் சூரணம் இட்டுப் பருகவும்.

காசம், ஈளை, இரைப்பு முதலானவை தீரும்.



## இரத்தபித்தத்திற்கு "ஆதண்டைக் கஷாயம்"

பொதியீர் தொண்டையிலை போத்தலொரு முந்திரிகை
செதியீர் நற்குடிநீர் செய்திடீர்—மாதிரியாய்
காயங்கூட்டி யருந்தீ ரருந்திய பின்
உட்காரு மிரத்தபித்த மோட (24)

(இ - ள்)

ஆதண்டயிலை திராக்ஷைப்பழம்

இவ்விரண்டையும் நசுக்கி எட்டுமடக்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாக வற்ற வைத்துப் பெருங்காயஞ் சேர்த்து உட்கொள்ளவும்.

இரத்தபித்தங்கள் தீரும்.

## தாளீசாதிச் சூரணம்

ஓடுகின்ற தாளீச பத்திரியு மொண்மிளகு
தேடுகின்ற நாகத் திப்பிலியுங் — கூடியிதில்
கூகைநீ றுடனே கூட்டுமிலவங்கம்
பாகமாய்ச் சூரணம் பண்ணு (25)

பண்ணிய பின்க்காரம் பாகமாய்க் கூட்டி
எண்ணி யிருகழஞ்சு ரக்கவிட்டு — நன்னெனவே
நாளுறு பாகத்தில் நாவிலிடப் பருகிப்
போறுலமையுமே போம் (26)

(இ - ள்)

தாளீசபத்திரி மிளகு
சிறுநாகப்பூ திப்பிலி

A siddhadreams ebook

பாரேநேர் கொத்தமல்லி சீரகமிரண்டு
　　பச்சிலை செவ்வியம் சிறுமூல மோமம்
ஏரேநேர் மஞ்சிட்டி மாஞ்சில் மாதளங்
　　கனிவிவை களதனி நாற்கழஞ் சாகவே யரைத்து
சாரவிது நெய்யும் நாநாழி வடித்துத் தானியப்
　　புடம்வைத்துண்ணு சயமுடன் மந்தாரகாச
　　　　முளமாந்தை சாராதே (60)

(செ - ம்)

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | 2 மரக்கால் |
| முருங்கையிலைச்சாறு | 1 ,, |
| மணித்தக்காளிச்சாறு | 1 ,, |
| சத்திச்சாறணைச்சாறு | 1 ,, |
| கழல்கொடிச்சாறு | 1 ,, |

இவைகளுடன்,

| | |
|---|---|
| சித்தாமல்லி | பேராமல்லி |
| செருஞ்சில் | சிறுவழுதலை |
| ஆடாதோடைவேர் | வில்வவேர் |
| சங்கம்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| கிழாநெல்லிவேர் | |

இவைகள் வகைக்கு ¼ பலம் எடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ⅛ ஆக வற்ற வைத்துக் கஷாயத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| கோஷ்டம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| வெந்தயம் | சீரகம் |
| கொத்தமல்லி | பெருஞ்சீரகம் |
| கருஞ்சீரகம் | பச்சிலை |
| செவ்வியம் | திப்பிலி |



| | |
|---|---|
| ஓமம் | மஞ்சிஷ்டா |
| சடாமாஞ்சில் | மாதளையோடு |

இவைகளை வகைக்குப் வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் விட்டு நன்றாக வரைத்துப் பசுவின் நெய் 4 படியும் சேர்த்து முன் கஷாயத்துடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு ஒரு ஜாடியிலிடுத் தானியபுடத்தில் 1 மாதம் வைக்கவும்.

பின்னர்

இதனை யெடுத்து உட்கொள்ளச்

சயம், மந்தாரக் காசம், உளமாந்தை முதலான நோய்கள் தீரும்.

## ஆடாதோடை நெய்

சார்ந்திடு மாடாதோடைச் சாறுபாலிரு நாழியாக
　　நேந்தநெய் நாளீராழி நிலவேம்பு வெட்பாலைமுத்தம்
வாய்ந்த சந்தன மிருவேலி லாமிச்க
　　மணமுள்ள விலுப்பை யரக்குமாக
தேர்ந்திரு கழஞ்செடை கரைத்து................
　　................ நெய்வடிக்க
சேர்பித்த ரத்தஞ் சோகைகாசம்
　　மெலும்புருக்கி மேகம் போமே　　　(61)

(செ - ம்)

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | 2 படி |
| பசுவின் பால் | ,, |
| ,, நெய் | ,, |

A siddhadreams ebook

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| மலைவேம்பு | வெட்பாலை |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |
| வெட்டிவேர் | இலாமிச்சம் வேர் |
| சொம்பரக்கு | இலுப்பைக்கொட்டை |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து பால் விட்டு நன்றாக வரைத்து, நெய்யுடன் குழப்பிப்பக்கு வமாக்கி இறக்கவும்.

இதனை உட்கொண்டுவர

இரத்த பித்தம், சோகை, காசம், எலும்புருக்கி, மேகம் முதலானவை தீரும்.

## தூதுவேளை பழநெய்

தூதுவளம் பழத்தில்சாறு மாடாதோடையிலை
யோரிதழ்தா மரையின் சாறு
மாதுநல்லாய் பூசினிக்காய் கற்பூர வல்லியிலை
பிரமியிலை குன்னிவகை நேர்னுழிச்சாறு
சூதுடனே யாவின் நெய் நாழிகை
ஆன சாறணைவேர் கீழாநெல்லிவேர் கூட்டி
வீதுடனே கடுகரோகணி கொத்தமல்லி மதுர
மிதனோடு பச்சிலை கோட்டமச மோதகமே (62)

தகையிலாத் திப்பிலியும் வகைக்குநேர் கழஞ்சாய்த்
தானரைத்துக் காசினிநெய் வடித்தே கொள்ளாய்
மிகைநல்லா யிருமலுடன் காசம்தீரும்
மிக்க வத்திச்சுரம் பொறுக்கும் விக்கல் தீரும்



வகையான தூதுவளம் பழத்தின் நெய்தான்
வாயூர லரோசகமு மாற்று மென்னத்
துகையான படியிருந்து முப்பதுநாள்
சுகமாகும் பித்தமுதல் துலைந்துபோமே (63)

(ஜீ - ண்)

| | |
|---|---|
| தூதுவளம்பழச்சாறு | 1 படி. |
| ஆடாதோடையிலைச்சாறு | ,, |
| ஓரிதழ்த்தாமரையிலைச்சாறு | ,, |
| பூசினிக்காய்ச்சாறு | ,, |
| கற்பூரவல்லியிலைச்சாறு | ,, |
| பிரமியிலைச்சாறு | ,, |
| பசுவின் நெய் | ,, |

இவைகளை ஒன்று கலந்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சாறணைவேர் | கீழாநெல்லிவேர் |
| கடுகரோகிணி | கொத்துமல்லிவிதை |
| அதிமதுரம் | பச்சிலை |
| கோஷ்டம் | ஓமம் |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து ஏதேனும் ஒரு சாறு விட்டரைத்து முன் நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

தீரும் நோய்கள்:

இருமல், காசம், அத்திச்சுரம், விக்கல், வாயூரல், அரோசகம் இவைகள் 30 நாட்களுள் தீரும். பித்த ரோகங்களும் தீரும்.

A siddhadreams ebook

| | |
|---|---|
| கூகைநீர் | கிராம்பு |

இவைகளைச் சமஎடை யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இவற்றிற்குச் சமஎடை சீனிசேர்த்து வைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தைத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

---

## குத்திருமலுக்குத் திரிபலா சூரணம்

போமே கடுநெல்லி பொற்றரிப்ப தான்றி சிங்கி
தாமே நற்கோட்டஞ் சடாமாஞ்சி — ஆமே
திரிகடுகிந்துப்புத் தேக்கு கண்டங் கத்திரியு
மறுகிடவே சூரண வகைசெய் (27)

செய்த மருந்து செலுத்த விரும்பக் கேள்
ளெய்த விஞ்சிச்சாறு தேனிட்டுண்ணி—லய்யமற
குத்திருத்தி விருமுங்கூடு முப்பிசஞ் சுவாசந்
தத்தித்தத்தி யோடுந் தான் (28)

(இ - ள்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | கற்கடசிங்கி |
| கோஷ்டம் | சடாமாஞ்சில் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| சிறுதேக்கு | கண்டங்கத்திரி |

இம்மருந்துகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதனை இஞ்சிச்சாறு, தேன் இவற்றில் குழைத்து



உட்கொள்ளவும். குத்திருமல், வயிறு உப்பிசம், சுவாசம் முதலானவை தீரும்.

---

## எழுநாயறு, கிரந்திகளுக்கு அடப்பை விரை மருந்து

நானே யடப்பவிரை தப்பாம லேகமுஞ்சு
மானே மருநீரில் வாங்கியுண்ண — நானே சொல்
லெழு நாயக் கிரந்தி வீனெ வெலிகடியும்
விழுமாறு சொன்னேன்கேள் வேண்டி (29)

(இ - ள்)

அடப்பம் விதை 1¼ வராகனெடை வீதமெடுத்து உட்கொள்ளவும்.

எழுநாயறு, கிராந்தி, சனி, "எலிகடி முதலான நோய்கள் தீரும்.

---

## பஞ்சகாசத்திற்கு "வேலிப்பருத்தியிலை எண்ணெய்"

வேண்டுமெனும் வேலியிலைச் சாறுங் காயமுட
னன்று சென்ற ஆமணக்கெண்ணெய் கூட்டிப்—பாண்டமதி
லிட்டே வடித்துண்ணீர் பஞ்சகாசமிதில்
விட்டேகிப் போமே வெருண்டு (30)

(இ - ள்)

| | |
|---|---|
| வேலிப்பருத்தியிலைச்சாறு | 2 சேர் |
| ஆமணக்கெண்ணெய் | 2 சேர் |

A siddhadreams ebook

## தண்ணீர்விட்டான் கிழங்கு நெய்

ஈரிகிழங்கு நீர்வள்ளி இனியகரும்பு பூசினிக்காய்
ஊறிக்கொள்ளும் நெல்லிக்கா யுள்ளசாறுவகை நாநாழி
மாறிப்பசுவின் நெய்நாழி மதுரங்கோஷ்டம் முந்திரிகை
வேருக்கொரு பலமரைத்துவடி மிருத்தாத்தம் பெரும்பாடு
மாறிப்போமே உள்சுரமும் பரவாயெலும் புருக்கியுமே (64)

(தி - ர்)

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| கருப்பஞ்சாறு | " |
| பூசினிக்காய்ச்சாறு | " |
| நெல்லிக்காய்ச்சாறு | " |
| பசுவின் நெய் | " |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| அதிமதுரம் | கோஷ்டம் |
| திராக்ஷை | |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து அரைத்து நெய்யுடனே குழப்பிக் காய்ச்சிப் பதத்தில் வடிக்கவும்.

இரத்தபித்தம், பெரும்பாடு, உட்சுரம், எலும்புருக்கி முதலான நோய்கள் தீரும்,

## முக்காவேளை நெய்

முக்காவேளைவேர் பொன்முசுட்டை
முதிருமாவிலிப் பட்டை கூவிளைவேர்
இக்கோர் வகைக்குப் பலமிருப தெண்ணை
இசைய நறுக்கித்தூணி நீரிட்டு



சிக்காது நாநாழியாக நீ வடித்து
சேர்ந்த காட்டாத்திப்பூ வெட்பாலையரிசி
மிக்கபொன் முசுட்டைவேர் வில்லக்காய்
சதையும் விழலரிசி திரிகடுகு கொடிவேலி
கொண்டே (65)

கொண்டாடு திப்பிலிமூலங் கருஞ்சீரகம்
கூறுபட வோரொன்று பலமிரண்டாகக்
கண்டபடிமுன் கஷாயத் தரைத்துக்
கான் வெள்ளாட் டுநெய்யீராழி விடுத்துப்
பண்டான திரிபாலை வகைக்கெண் கழஞ்சரைத்து
பாங்குபெறக் காய்ச்சி நெய்வாங்க வுடல்தனில்
அண்டாது கிராணி சூலைகுன்ம மதிசாரம்
கண்டு மெய்யது விட்டு நடந்து போமென்றே (66)

(தி - ர்)

| | |
|---|---|
| முக்காவேளை வேர் | 20 பலம் |
| பொன்முசுட்டைவேர் | " |
| ஆவிலிப்பட்டை | " |
| வில்வவேர் | " |

இவைகளைச் சிறு துண்டுகளாக்கி, ஒரு பாத்திரத்தி லிட்டு 4 மரக்கால் ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து 4 படியாக வற்ற வைக்கவும்.

| | |
|---|---|
| காட்டாத்திப்பூ | வெட்பாலையரிசி |
| பொன்முசுட்டைவேர் | வில்வக்காய்ச்சதை |
| விழலரிசி | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கொடிவேலிவேர் | திப்பிலிமூலம் |
| கருஞ்சீரகம் | |

41

A siddhadreams ebook

இவைகள் வகைக்கு 2 பலம் வீதமெடுத்து முன் சொல்லிய கஷாயம் விட்டு நன்றாக வரைத்து,

ஆட்டு நெய் 2 படியும்

சேர்த்து,

கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
தான்றித்தோல்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து நன்றாக வரைத்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளக்

கிராணிகள், சூலை, குன்மம், அதிஸாரம் முதலான நோய்கள் தீரும்.

## தேள்கொடி நெய்

தேள்கொடி பலம்நூறு சலமெட்டு மரக்கால்
செலுத்தியது காய்ச்சி பதக்காக வடித்து
வேள்க்கடுகு ரோகிணி கண்டங் கத்தரிவேர்
வசம்பு செவ்வியம் சிறுதேக்கி னுடனே
மீள்கவகு கொடிவேலித் திப்பிலிமூலம்
வகைக்கழஞ்சு மிகவரைத்து வெள்ளாட்டுப்பாலும்
நெய்யும்விட்டு
வாழ்க்கண்ணாய் நீ காய்ச்சி வடித்த நெய்கொள்ள
வருத்தும் விக்கலிருமல்சத்தி மாத்துமது கண்டாய்
(67)



(இ - ள்)

தேள்கொடுக்குப் பூண்டு 100 பலம் எடுத்து 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 2 மரக்காலாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இதனுடன்

கடுகரோகிணி கண்டங்கத்திரிவேர்
வசம்பு செவ்வியம்
சிறுதேக்கு கொடிவேலிவேர்
திப்பிலிமூலம்

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டரைத்து

வெள்ளாட்டுப் பால் 1 படியும்
வெள்ளாட்டு நெய் ,,

சேர்த்து,

அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

விக்கல், இருமல், வாந்தி முதலான நோய்கள் தீரும்.

## தேட்கொடி நெய்

தேள் கொடிதன் வேரும் தூதுவளை வேரும்
திருந்து கையாந் தகரை யாடாதோடை வேர்
நாட்கொண்டு வோரொன்று பலமாறு விடித்து
நற்றூணி நீர்விட்டு நாநாழியாக்கி
நாட்கிண்ட கடுதாணி நெல்லி திரிகடுகு
தன்னோடு சிறுதேக்குப் பலங்களு மிரண்டாய்

A siddhadreams ebook

இவ்விரண்டையும் கலந்து பெருங்காயம் 1 பலம் போட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து வடிக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ள 5 வித காச நோய்களும் தீரும்.

## 5-வித காச நோய்களுக்கும் "மரீசாதிச் சூரணம்"

வெருண்ட மிளகுமூன்று விரையழிஞ்சி லெட்டுத்
திரண்ட பொடிகுழைக தேனிலுண்ண—அரண்டுவிதில்
பட்டேன் பட்டேனென்னும் பஞ்சசுவாச காசம்
கெட்டேன் கெட்டே னென்னுங் கேள் (31)

(இ - ள்)

மிளகு பலம் 3
அழிஞ்சில் விதை „ 8

இவ்விரண்டையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து 40 குன்றியளவு எடுத்துத் தேன்விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

5 விதமான சுவாச நோய்களுந் தீரும்.

## கபத்திற்கு ஹரீதகீச் சூரணம்

கேளுங் கையாந்தகரைச் சாறுங் கினார் கடுக்காய்
மீளும்நல் லெண்ணெயுடன் வெந்திறக்கி—நாளுமென்றித்
தின்னப் பதினைந்து சேத்துமத்தில் வந்தபிணி
சொன்னேன் கேள் தேன் மொழியாய்த் தூது (32)



(இ - ள்)

கையாந்தகரைச் சாற்றில் கடுக்காயை நன்றாக 2 அல்லது 3 நாட்கள் ஊறவைத்துப் பின்னர் நல்லெண்ணெய் கூட்டி வறுத்து வைத்துக் கொண்டு தினம் 1 கடுக்காய் வீதம் உட்கொள்ளவும்.

15 கபரோகங்களும் தீரும்.

## காசம், இழுப்பு, ஈளைக்குத் "தூதுவேளைக் கிருதம்"

தூதுவளையின் பழத்தின் சாறுஞ் சுத்தாவின் நெய்பாலும்
தீதுதிரிகடுகு விரண்டு சீரகமு — மாதேகேள்
கரகரவெனப் பழுப்புங் காசம் ரசமீளை
பரபரவெனவேகும் பாரீர் (33)

(இ - ள்)

தூதுவளம் பழச்சாறு 1 சேர்
பசுவின் பால் „
„ நெய் „

இவைகளை யொன்று கலந்து,

சுக்கு திப்பிலி
மிளகு சீரகம்
கருஞ்சீரகம்

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து தூள் செய்து போட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

தொண்டைக் கரகரப்பு, காசம், ஈளை, இருமல் முதலானவை தீரும்.



A siddhadreams ebook

வாட்கவது வரைந்து நெய்யுடனெரித்து
வடித்துநெய் தேன்கலந்து கொடுமாறுவது
விக்கலிரைப் போட (68)

(இ - ள்)

தேன்கொடுக்குவேர் — நாருவேலிவேர்
கையாந்தகரை — ஆடாதோடைவேர்

இவைகளை வகைக்கு 6 பலம் வீதமெடுத்து இடித்து, 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாக வற்றவைத்து,

கடுக்காய்த்தோல் — தான்றித்தோல்
நெல்லிவற்றல் — சுக்கு
திப்பிலி — மிளகு
சிறுதேக்கு

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து அரைத்துப்

பசுவின் நெய் 2 படியுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனுடன்

தேன் விட்டுக் கலக்கு உட்கொள்ளவும்.

விக்கல், இரைப்புகள் தீரும்.

## தன்வந்திரி கிருதம்

பேர்முள்ளி சிறுமுள்ளி வில்வவேர் குமிழ்
பெரிய தழுதாழை கவுதும்பை பாதிரி
காரமுள்ள காட்டாமணக்கு புங்கு
செம் புளிச்சைக் கடுக்காய் கூத்தன்குதம்பை



சாரணை அடம்புநீர் முள்ளிதவசி முருங்கைவேர்
கொன்னை சித்திரமூல மிருசாரணை பிரண்டை
பாரமுள்ள கூவிளங்காய் கள்ளிவேர் பழுசேங்
கொட்டை திப்பிலி மூலங் கச்சோலம் (69)

கச்சணியு மானே வகைபத்துப் பலமாய்
காரென்னுந் திப்பிலி கொன்னு வேரொன்று
வைச்சபடி அளவாயிடித்து நீரென் குறுணி
வற்றியது குறுணியாய் வடிகொண்டு தானே
பச்சையாம் பாலிரு நாழிநெய்யு மீராழி
யாருமுப் புரசுவேர் கடம்புவேர் வசம்பு
மெச்சவரு திரிபாலை சிறுதேக்கு விளங்க
மீறுசந்தனமுடன் திப்பிலிவகைக் கிருகழஞ்சே (70)

இருகழஞ்சான மருந்தரைத் திட்டு
வேந்தவரு கஷாயம் பால்நெய்யுங் கூட்டி
மருவிடக் காய்ந்து வடித்தநெய் வாங்கி
வருமிருநேரங் கழஞ்செடைகள் கொள்ள
பொருமலுடன் சூலை உதரநோய் குஷ்டம்
புண்ணுடன் மேகம் சோதிகள் பலதினவு
அருகிடா நோயும் பலபிணியுந்
தீருமாம் தந்வந்தரி கிருத மென்றேமே (71)

(இ - ள்)

பேராமல்லி — சிறுமுள்ளி
வில்வவேர் — குமிழும் வேர்
தழுதாழைவேர் — கவுதும்பைவேர்
பாதிரி — காட்டாமணக்குவேர்
புங்கம்வேர் — செம்புளிச்சை
கடுக்காய்த்தூள் — கூத்தன்குதம்பை
சாறணைவேர் — அடம்புவேர்

A siddhadreams ebook

## சுவாசகாசத்திற்கு "நாரத்தை மருந்து"

பாரியதோர் நாரத்தம் பழச்சாறுந் திரிபலையுந்
தேரும் திப்பிலி மிளகுசேர்ந்த விந்தும்—வீறியதோர்
தேத்தாளதில் தைலம் சிங்கியரைத் திறக்கில்
வாத்தால் சுவாச காச மாறும் (34)

(செ - ள்)

நாரத்தம்பழச்சாறு 1 சேர்

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு. |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சாற்றுடன் கலக்கி, நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி முழுகவும்.

சுவாசகாசங்கள் தீரும்.

## ரத்தபித்தத்திற்கு "ஆடாதோடை நெய்"

மாசிடுந் தொடைச்சாறு வந்தாவி னெய் பாலும்
தேனுந்திப்பிலி யத்தித்திப்பிலியுங் — கூறுங்
கொடிவேலி தன்னுடனே கூடியவட் சாரம்
வடிவாக வேகவே வை (35)

வேகவைத்த நெய்யில் மெருளிச் சுவாசந் தானியப்
பாகம் வைக்கில் ரத்தபித்தம் பாரதையுந்—தேகத்தில்
வந்தாவிபமு மற்று மருசிசுரம்
பித்தாமல் போவார் பிரிந்து (36)



(செ - ள்)

| | |
|---|---|
| ஆடாதோடைச் சாறு | 1 சேர் |
| பசுவின் பால் | " |
| பசுவின் நெய் | " |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| திப்பிலி | யானைத்திப்பிலி |
| கொடிவேலிவேர் | யவட்சாரம் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை யெடுத்து இடித்து ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி, வடிக்கட்டி நெற்குவியலில் 40 நாட்கள் புதைத்து வைக்கவும்.

பின்னர் இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் (காய்ச்சிய பாலுடனே) உட்கொள்ளவும்.

தாபம், அருசி, ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

## ஜ்வரங்களுக்கு "முதியார் கூந்தல் சீதகஷாயம்"

பிறிந்தின வெந்நீரில் பின் மதியாய்க் கூந்தல்
லறிந்து அதன் வேரரைத்துப் —பறிந்து
விழுசுரம் போய்க் குளிரும் போய் மாமடவீர்
கிறு சுரம் போமிதனைக் கேட்டு (37)

(செ - ள்)

இளஞ்சூடான வெந்நீரில், முதியார்கூந்தல் வேரை யரைத்துக் கலந்து உட்கொள்ளவும்.

சாதாரண ஜ்வரம், குளிர் ஜ்வரம், பித்த ஜ்வரம் இவை தீரும்.

A siddhadreams ebook

| | |
|---|---|
| கீழ்முன்னி | தவசுமுருங்கை |
| கொன்னைவேர் | சித்திரமூலம் |
| சத்திச்சாறணை | பிரண்டைவேர் |
| வில்வக்காய் | கள்ளிவேர் |
| கச்சோலம் | திப்பிலிமூலம் |
| சுத்திசெய்த சேங்கொட்டை | |

இவைகள் வகைக்கு 10 பலம்

| | |
|---|---|
| காரெள்ளு | திப்பிலி |

இவைகளை வகைக்கு 1 படி விதமெடுத்து, 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்ற வைக்கவும்.

இக்கஷாயத்துடன்

| | |
|---|---|
| பசுவின் பால் | 2 படியும் |
| நெய் | ” |

| | |
|---|---|
| புரசுவேர் | கடம்புவேர் |
| வசம்பு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சிறுதேக்கு | வாயுவிடங்கம் |
| சந்தனத்தூள் | திப்பிலி |

இவைகளை 2¼ வராகனெடை விதமெடுத்துக் கஷாயம் விட்டு அரைத்து, நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில்

ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனுட்கொள்ளவும்.



பொருமல், சூலை, உதரரோகம், குஷ்டம், புண், மேகம், சொறிகள், அரிப்பு முதலான பற்பல ரோகங்களும் தீரும்.

இதன் பெயர் “ தன்வந்தரி கிருதம் ” ஆகும்.

## கதலிகந்தக் கிருதம்

கதலிக்கிழங்கு ஊறியநீர் கடுகத்தூளி வாங்கியதில்
விதநற்பூவும் நாலுபல மிடித்துக்கூட்டி யெரித்துவத்தி
முதலெட் டொன்றாய் வடிக்கட்டி முன்பால்படியும் நெய்படியும்
பதமிப்படியே கலந்துகந்தம் பருகிக்கரைக்கு மடவாமே (72)

அடத்தமுளரி செங்கழுநீர் அல்லிக்கொட்டி குளரியின்பாற்
துடர்ந்தகிழங்கு நரிநாவல் தோணு மருதுபெருநாவல்
கடத்தஇச்சி லொதி புரசுகமழ் சேர்மகிழம் பட்டையுடன்
படந்தவத்தி யேத்தி பாசிரசின் பட்டையதே (73)

பட்டையுளியின் பெருவேர்த்தோல் பருவேர் அமுக்கிரா
வேர்சங்கு
தொட்ட சிகப்பு நன்னாறி தும்பநந்தியாவட்டை வேரோடு
மட்டமுடனே வகையிரண்டு பலமேதகத்து நீரிபதக்கு
விட்ட நீர்தான தெட்டொன்றாய் வெந்தகிஷாயம் விளங்கீரே
(74)

வெத்தே விளாங்கனி விறுமோடிவேர் கவுதும்பை நற்சந்தந்
திந்திடு தேவதார மகிலஞ்சாருங் கோட்டஞ் சடாமாஞ்சி
சுத்தமான கிராம்பிருப்பை துய்யபூவு மதிமதுர
மித்தயேல மிலவங்கம் மினிவெள் கோட்டந் திரிபலையே
(75)

A siddhadreams ebook

பலபலசரக்கு விராகனெடை பாத்தோ ரொன்று படவரைந்து
நலமுடன் காஷயம் பால்நெய்யும் நறுந்தேகக் காய்ச்சி நெய்யாகக்
கலந்திரு தோம் கழுஞ்செடையாய் கண்டுகொள்வீர் பெரும்பாடு
சலங் கொடுமேகம் சிரிச்சமுதல் தாகத்தீர்க் கிருதமதே (76)

(ஆக கவி 1545)

(இ - ள்)

வாழைக் கிழங்குச் சாறு 4 மரக்கால் எடுத்து, வாழைப்பூ 100 பலம் எடுத்து இடித்துப் பிழிந்து சாற்றையும் கூடச் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்து வற்றவைத்து ½ ஆக வற்ற வைக்கவும்.

இதனுடன்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 படி |
| ,, நெய் | ,, யும் விட்டு, |

| | |
|---|---|
| செங்கழுநீர்க்கிழங்கு | அல்லிக்கொடி |
| தாமரைக்கிழங்கு | சிறுநாவல்பட்டை |
| மருது | பெருநாவல்பட்டை |
| இச்சிப்பட்டை | ஒதியம்பட்டை |
| புரசம்பட்டை | மகிழம்பட்டை |
| அத்திப்பட்டை | பேயத்திப்பட்டை |
| அரசம்பட்டை | புளியம்வேர்த்தோல் |
| அமுக்கிராக்கிழங்கு | சங்கம்வேர் |
| சிகப்பு நன்னாரி | நந்தியாவட்டைவேர் |

இவைகளை வகைக்கு 2 பலங்கள் விதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டி லொன்றாக வற்ற வைத்த கஷாயத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| விளாம்பழ ஓடு | கண்டத்திப்பிலி |
| கவுதும்பை வேர் | சந்தனத்தூள் |



| | |
|---|---|
| தேவதாரம் | கோஷ்டம் |
| சடாமாஞ்சில் | கிராம்பு |
| இலுப்பைப்பூ | அதிமதுரம் |
| ஏலக்காய் | கடுக்காய்த்தோல் |
| வெண்கோஷ்டம் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை விதமெடுத்து இடித்துக் கஷாயம் விட்டு ஒன்றுபட வரைத்துக் கஷாயங் கலந்த நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந்நெய்யில் வேளைக்கு 1¼ வராகனெடை யள வெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

பெரும்பாடு, மேகம், மூத்திரகிரிச்சிரம், தாகம் முதலானவை தீரும்.

## நயன விதி

### காப்பு

மாதுமை பாகன் சொன்ன மாமறை நூல்களாய்ந்து
நீதுகள் வாராவண்ணம் திருவுளத்து நித்தபோது
ஆதிமா முனிவன் சொன்ன வாயுருவேதத்துள்ளே
நாதனு ரருளிச்செய்த நயன நூல் விதியிதாமே (1)

(இ - ள்)

பரமேசுவரன் சொல்லிய பற்பல ஆயுர்வேத நூல்களையும், ஆராய்ந்து, ஜனங்களுக்குக் கெடுதல் சேரா வண்ணம் அகஸ்தியர் நயனவிதியாகிய இதனை அருளிச் செய்தார்.



A siddhadreams ebook

## சுத்த நேத்திரத்தின் லக்ஷணம்

இந்துவை யொத்தவெள்ளை யியலிது நயனங் கண்டாய்
உந்துயினொளி விளுள்ளே யுன்முகம் விளங்கத் தோன்றி
யந்தமா மொளிவாய் நிற்குமதனில் நோயில்லை யென்று
செந்திரு வுமையாள் கேழ்க்கச் சிவனுமுன் னருளிச்
செய்தார் (2)

(இ - ள்)

சந்திரனைப்போல வெண்ணிறமாக இருப்பதுடன், கண்களுள்ளிருக்கும் பாப்பாவிற்குள் பார்ப்பவரின் முகம் தெளிவாகத் தோன்றவேண்டும். ஒளியுடன்கூட விருக்கும். இப்படியாகவுள்ள கண்கள் நோயில்லாத சுத்தமான கண்களென்று தெரிந்து கொள்ளவும்.

## வியாதியின் குறிகள்

உயர்திரு நயனந்தன்னி லுறுபல வியாதி கேளாய்
மயக்கிடு மிருளால் மூடலந்திரு தோஷந்தன்னில்
வியன்பல வியாதி நிற்கும் மேவியமருந்து தானும்
தேய்ந்தினிக்கினிமே செய்யும் தானது கூறலுற்றேன் (3)

(இ - ள்)

கண்கள் இருளடைதல் முதலான திரிதோஷங்களினால் பல வியாதிகளும் உண்டாகும்.

## கண்ணோய் வரக்காரணங்கள்

தந்தலைக் சுமையினாலுந் தருமுடற் கடுப்பினாலும்
மென்பனி நனைகளாலு மீனின்முன் னருந்தலாலும்



வன்புவாக னத்திலேறி வருந்துட லலைவினாலு
முன்பயிலெண் ணெய்நெய் பால் முழுக்கவை விடுகை
யாலும் (4)

கண்ணிடை வறண்டு போகுங் காரணமேதோ வென்னில்
தண்ணியல் புனல்கள் தன்னை நசமிகப் பருகையாலுந்
திண்ணமாம் சிரசின்மீது சேர்ந்தெண்ணெய் போகாதாலும்
பெண்ணிடை மருவலாலும் பெருத்திடும் விழிக்குநோயே
(5).

(இ - ள்)

தலையில் சுமைகளை சுமப்பதாலும், உடலில் வலி அதிகமாயிருப்பதாலும், பனியில் நனைவதாலும், மீன் முள்ளைத் தின்பதனாலும், அசையும் வாகனத்தில் ஏறி சவாரிசெய்வதாலும், அதிகமாக உபயோகத்திலிருந்த நல்லெண்ணெய், நெய், பால் முதலியவைகளை விலக்குவதனாலும், கண்ணோய் உண்டாகும். குளிர்ந்த தண்ணீரை அதிகமாகப் பருகுவதனாலும், தலையில் தேய்த்துக் கொண்ட எண்ணெய் நன்றாகப் போகாமல் தங்கிவிடுவதனாலும், அதிகமான ஸ்திரீபோகத்தினாலும் விழி நோய்கள் உண்டாகிக் கண்கள் வறண்டு போகும்.

## இதுவுமது

உண்டபின் முழுகையாலும் ஓங்கிய வெப்பினாலும்
மண்டிய தண்ணீராலு மாதர்தங் கோஷ்டியாலும்
பண்டு பல்விளக்கா தாலும் பகலின்பா லுண்ணுதாலும்
கொண்டல்சேர் குழலினாளே! நயனம் கோபிக்கு
மென்றே (6)

விடுமும் பிரநெல்லின் வால்விழுங் கையாலன்ன
முடுகவே யருந்திப் பின்னும் முசிவறச் செரியாதாலும்
கடுகவுன் டோடினாலுங் காலடி கடுகையாலும்
மடுவுறு தண்ணீர் தன்னை வலியவுற் றுண்கையாலும் (6)

A siddhadreams ebook

## அசீரணத்திற்கு "வெள்ளை காக்கணம் கஷாயம்"

கெட்டவெள்ளைக் காக்கணத்தின் வேரும்கேள் மிளகுங்
கூட்டியின வெந்நீரில் கொண்டு விடில் — நாட்டைவிட்டுப்
போமே அசீரணமும் புருமே சமுத்திரத்தில்
நாமே யுரைக்கக் கேள் நன்று (38)

(செ - ன்)

வெள்ளைக் காக்கணத்தின் வேர்
மிளகு

இவ்விரண்டையும் சமனெடுத்து இளஞ்சூடுள்ள வெந்நீர்விட்டரைத்து உட்கொள்ளவும்.

அஜீர்ணம் நீங்கும்.

## மந்தத்திற்கு "வேர்க்கொம்புக் கஷாயம்"

நன்றாக வேர்க் கொம்பு நற்சாரடை வேரும்
மொன்றாய்க் கஷாயமிட்டு உண்டுவிடில்—அன்றேதா
னேடுமே மந்த மொளியாமல் நாடுவிட்டு
வாடுமே கெட்டு மனம் (39)

(செ - ன்)

சுக்கு சாறடைவேர்

இவ்விரண்டையும் வகைக்கு 1 பலம் விதமரைத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து வடிக்கட்டிப் பருகவும்.

வயிறு மந்தம் தீரும்.



## விஷங்களுக்கு வாந்தி செய்விக்க மருந்து

மனமேகையாந் தகரைச்சாறு மகிழந்தியம்பழ
கனமாம் விஷஞ் சிகரமாகும் — சினமேக
உப்புக் கரைத்து வெந்நீருண்டவுடன் வாந்திபண்ணி
தப்பற விஷஞ் சிசமிக்கும் (40)

(செ - ன்)

கையாந்தகரைச் சாறு
மகிழம்பழச்சாறு

இவைகளுடன் சிறிது உப்பு சேர்த்து வெந்நீர் விட்டுக் கரைத்து உட்கொள்ள வாந்தியாகும்.

விஷங்கள் சமனமாகும்.

## பிரமைக்குச் சூடு

சதிக்கு மிரும்பு தன்னைத் தப்பாமலிடக் குதியில்
கமுகம் பனையிலை மேல்க் காய்ச்சிவைக்க—பிரமைகள்விட்டு
சாருந் தோஷம் விஷஞ்சீதமறுந் தண்ணீர்
தாகம் தீருமவை யெல்லாம் (41)

(செ - ன்)

கோயாளியின் குதிகாலில் பாக்கின் இலை அல்லது பனை மட்டை இவற்றை வைத்து அதன் மேல் சூடாக்கிய இரும்புக் கோலை வைக்கவும்.

மயக்கம், விஷம், சீதளம், தண்ணீர்த் தாகம் முதலானவை நீங்கும்.

A siddhadreams ebook

(இ - ள்)

சாப்பிட்டவுடன் ஸ்நானம் செய்வதாலும், உஷ்ணமான பதார்த்தங்களைச் சாப்பிடுவதனாலும், அதிகமாகத் தண்ணீர் பருகுவதாலும், ஸ்திரீகளுடன் அதிகமாகச் சேருவதனாலும், பல்துலக்காததாலும், பசுவின் பாலைச் சாப்பிடாததாலும் கண்கள் கோபிக்கும்.

நெல்லின் வாலைத்(உமி) தவறிவிழுங்கிவிடுவதனாலும், சாப்பாடு செரிக்கு முன்னர் மறுபடியும் சாப்பிடுவதனாலும், சாப்பாடானவுடன் ஓடுவதாலும், கால் சுடும்படியாக வெயிலில் நடப்பதனாலும், அதிகமாகத் தண்ணீர் சாப்பிட்டாலும் கண்ணோய்க்குக் காரணமாகும்.

### இதுவுமது

கடுவெய்யில் தன்னிலுலுங் கனலடி கடுகையாலும்
முடுகவே யெண்ணெய் தன்னை முறைகெட விடுகையா
தடியடி படுகையாலுந் தலைதனில் சுமைகளாலும் [லும்
படியுறு கூர்மையாலு மனைத்திடும் விழிக்கு நோயே (8)

மனமிடி தனத்தினலு மாதர்களா சையாலுங்
கனமலச் சேர்க்கையாலுங் கவிழ்த்திடு பார்க்கை யாலுங்
தனமிகு கெடுகையாலுந் தனிலாவி நடைகளாலுஞ்
சினமிகு கோபத்தாலுஞ் சேர்ந்திடும் விழிக்கு நோயே
(9)

(இ - ள்)

கடுமையான வெய்யிலில் போவதனாலும், கால் சூடாகும்படி வெய்யிலில் நடப்பதனாலும். எண்ணெய் தேய்த்துக் கொள்வதை நிறுத்துவதாலும், தடியினால் அடிபடுவதனாலும், பாரமான வஸ்துக்களைத் தலையின்மேல் சுமப்



பதனாலும், உற்றுநோக்கிப் படிப்பதனாலும், விழிநோய்களுண்டாகும்.

மனது இடிக்துபோகும் அளவு வருத்தப்படுதனாலும் அதிகமான ஸ்திரீ போகத்தாலும், மலச்சிக்கல் ஏற்படுவதனாலும், திடீரெனப் பணம் பறிபோவதனாலும், நீண்டவழிப் பிரயாணத்தினாலும், கோபம் உண்டாவதாலும் கண் நோய்கள் ஏற்படுவதற்குக் காரணங்களாகும்.

### சுத்தமான கண்களின் லக்ஷணம்

வெள்ளையிற் சிவப்புத்தோன்றி விளங்குநற் படிகம்போலத்
தெள்ளிய சோதிதன்னில் சேர்ந்திடு வனமையாகி
வுற்றொளி விளங்கும் போதுவுன்முகம் விளங்கத் தோன்றும்
மொள்ளிய நயனமென்றே வொப்பது கண்டிடாயே (10)

(இ - ள்)

வெள்ளையில் சிவப்பு தோன்றி (செவ்வரி) வெள்விழியும் கருவிழியும் ஸ்படிகம் போல் இருக்கும் (நீரோட்டமாக) விழியை உற்று நோக்கினால் நமது பிரதிபிம்பம் நன்றாகச் சுத்தமாகத் தோன்றும். இவை சுத்தமான கண்களின் லக்ஷணம்.

### கண்ணொளி அதிகரிக்கச் செய்ய வேண்டிய முறை

பாதமே பத்தமாக பலகாலும் தேய்த்துத் தேய்த்து
போதவே ஆவின் நெய்யும் புகழ்சந்தனம் பூசமாகி

A siddhadreams ebook

## இதுவுமது

எல்லாக் கிரந்தியே மூவாறு பித்தம்
பொல்லாத சேத்துமத்தால் போகிவிடும்—வில்லாரும்
நிம்புருவத் தாளே! திறந்தய்யங் கரப்பானும்
மெம்புருவத் தாளே யியம்பு (42)

(இ - ள்)

முன் கூறியபடி சூட்டினால் கிரந்திகள், 18 வகை பித்த நோய்கள், சேத்தும ரோகங்கள் முதலானவை நீங்கும்.

## வாதக்கரப்பான் குறிகள்

இயம்புந் திமிர்க்காய்ச்சல் லெங்கும் வீங்கத்திரட்சி
தயக்குங் கணுக்கால் தோறுந்தான் கடுப்பாம்—பயன்படவே
வந்த மரைக்கணத்தில் வாதகரப்பான் வன்னஞ்
செந்தாமரை முகத்தாளே செப்பு (43)

(இ - ள்)

திமிர்க்காய்ச்சல், உடலில் வீக்கம், திறட்சி, கணுக்கால் கடுப்பு முதலான குறிகள் வாதக் கரப்பானில் உண்டாகும்.

## செங்கரப்பான் லக்ஷணம்

செப்பத்தலை நெறித்து சேருங் காய்ச்சல் தினவு
ஒப்பச்சிவந் தெரித்துடன் கடுப்பாம் — தப்பாமல்



வாந்திவரும் நீர்சிவக்கும் வந்தமலம் சிக்கிவிடுஞ்
சேந்தமதஞ் செங்கரப்பான் திண்ணம் (44)

(இ - ள்)

தலையை இக்குமக்கும் அசைப்பான், காய்ச்சல், அரிப்பு, சிவப்பு நிறம், எரிச்சல் வாந்தி முதலான குறிகள் காணும், நீர் சிவந்து இறங்கும். மலச்சிக்கல் உண்டாகும்.

இவை செங்கரப்பான் குறிகளாகும்.

## சேத்துமக்கரப்பான் குறிகள்

திண்ணஞ் சேத்துமக் கரப்பான் செய்யும் வகை நெஞ்சுகம்மல்
பண்ணும் வாயில் கிரந்தி பத்திவிடும் — மெண்ணரிய
மண்டை வலிக்கும் புடைக்கும் வளர்காதில் சீயொடுக்கும்
கெண்டை விழியீர்! உரைக்கக் கேள் (45)

(இ - ள்)

நெஞ்சுக் கம்மல், வாயில் கிரந்தி, மண்டைவலி முதலான குறிகள் காணும்.

கண்புடைக்கும், காதிலிருந்து சீழ் வெளியாகும். இக்குணங்கள் சிலேத்மக் கரப்பானின் லக்ஷணங்களாகும்.

## தோஷக்கரப்பான் குறிகள்

தோஷய் குளிர்காய்ச்சல் கிளரும் கண்டுகழலே
மினாவினைபோல் விளைந்து வரும் — தாளகப்

A siddhadreams ebook

லாதமேதி ளியிலுற்று அவ்வொளி விளங்குமென்று
வேதமே யுரைக்குங் கண்டாய் மெய்யுரு பாகனாரே (11)

(இ - ள்)

உள்ளங்காலில் இருக்கும் மாசுகள் நீங்குமளவு நன்றாகக் கழுவித்துடைத்துச் சுத்தமான பசுவின் நெய்யை அங்கு நன்றாகத் தேய்க்கவும். பின்னர் சந்தனம் பூசி உலரவிடவும். கண்களின் ஒளி சுத்தமாகும்.

## அமிர்தயோக முறை

உண்டு கைகழுவிப் பின்னை யுண்மையாய் மூன்றுதுள்ளி
வண்டணி குழலாய் வார்த்து வளமிகு மின்மை தேய்த்துக்
கொண்டொரு கடிகைநேரங் குணமிகு கதிரைப் பார்த்துப்
பண்டுபோலி ருக்கும்போது பரிவுகண்ணமுத யோகம் (12)

(இ - ள்)

சாப்பிட்டவுடன் கைகளைச் சுத்தமாகக் கழுவிச் சுத்தமான பசுவின் நெய் 3 சொட்டுக்கள் விட்டுக் கைகளைச் சுத்தமாகத் தேய்க்கவும். பின்னர் க்ஷணநேரம் சூரியனைப் பார்க்கவும். கண்கள் சுத்தமாகும்.

## கண்ணோய்க்குக் காரணங்கள் (வேறு)

கற்பத்தில் வளரும்போது கிருமிகள் மருந்தினாலும்
செப்பிரு மானேகோளாய் திங்களில் துலங்குஞ் செங்கண்
புற்பத விழிக்காகாத பதார்த்தமே புசிக்கையிலும்
கற்பிணியாகக் கண்ணில் வியாதிவந் தணுகுந்தானே (13)



(இ - ள்)

கர்பத்தில் சிசு இருக்கும்போது தாயாரின் குடலில் கிருமிகள் சேர்ந்தால், குழந்தையின் கண்களுக்குத் தோஷமுண்டாகும். கர்ப்பிணிகள் அதிகமாக மருந்துகளை உட்கொள்வதனாலும் கண்களுக்கு ஆகாத பதார்த்தங்களை (பிண்ணாக்கு, பாக்கு போன்றவை) விரும்பிச் சாப்பிடுவதனாலும், கண்களில் வியாதி அணுகும்.

## கண்ணோய் வகைகள்

கருமணி நோய்கள் தன்னில் கலந்திடும் நாற்பத்தைந்து
மருவிய வெள்ளை தன்னில் மருண்டிடு மிருபதென்னப்
பெருகிய நிமையிலங்கே பெருத்திடு மொருபத்தாறு
பருவமாங் கடையில் நிற்கும் பதினைந்து தோஷந்தானே (14)

(இ - ள்)

கருவிழியில் 45 நோய்களும், வெள் விழியில் 20 நோய்களும், இமைகளில் 16 வகை வகை வியாதிகளும், கடைக்கண்களில் 15 நோய்களும் உண்டாகும்.

## பார்வை நோயின் லக்ஷணம்

தெளிவுறு வொளிய நிற்குந் தினவில்லை முப்பத்தைந்தி
லொளியற சிதத்துசத்தே யொதுங்கிடும் நாற்பத்தைந்தில்
வெளியற விருண்டுசத்தே மேவிடு மைம்பத் தைந்தில்
யளியுறப் புகையுங் கண்ணே யாண்டொரு நூறதாமே (15)

A siddhadreams ebook

(இ - ள்)

35 வயது வரைப் பார்வை சுத்தமாக இருக்கும் பின்னர் 45 வயதுவரை புகைச்சலான பார்வை ஏற்படும். 85 வயதில் பார்வை முக்காலும் போய்விடும். 100 வயதானல் மறுபடியும் பார்வை புகைச்சலாக உண்டாகும்.

## கருவிழியிலுண்டாகும் நோய்களாவன

கருவிழி நாற்பத்தைந்து பொதுகாச மெட்டுப் படலமேழாம்
மிரதவிழி தன்னிரண்டு நெரிசல் மூன்று
மருவு வரிமூன்று குத்தமேழு வளர்ந்த சுக்கிரப்
படுவனைந்து வகைதன் பேராம்
புருவ வேதிகளுடன் வாயுநீரும்
பொருதுமனல் பூனையுடன் காந்தல் சேரும்
குருகு கண்ணோ டொட்டுக்கண் ஒடுக்கண்
குலாலக்கண் கூறியது வகைவகைகள் குணங்கள்
தானே (16)

(இ - ள்)

**கருவிழியில் தோன்றும் நோய்களாவன :**

| | |
|---|---|
| காசம் 8 | படலம் 7 |
| மிரத்தவிழி 2 | நெரிசல் 3 |
| வரி 3 | குத்தம் 7 |
| சுக்கிரப்படுவன் 5 | |

இவைகளுடன்

| | |
|---|---|
| புருவவேதி | வாயு |
| நீர் | அனல்பூனை |
| குருகுகண் | ஒட்டுக்கண் |
| குலாலக்கண் | ஒடுக்கண் |



## வாத. பித்தக் கோளாறினுல் ஏற்படும் குறிகள்

பொன்னிறங் கருமை வெண்மை
பொருந்திடு சிவப்பே போல
மன்னிய பச்சைப் போல
மணிதனில் தோன்று மாகில்
சென்னிற வாத பித்த
சிலேத்தும மூவருக்கும்
பன்னிற மறிந்து பாரும்
பகவனுர் நூலையாய்ந்தே (17)

(இ - ள்)

கண்விழியில் பொன்னிறம், கருமை நிறம், சிவப்பு, பச்சை நிறமாகவும் கண்களில் தோன்றினுல் வாத, பித்த, கபம், ஸந்நிபாதக் கோளாறினுல் ஏற்பட்டதாகத் தெரிந்து கொள்ளவும்.

## திரிதோஷ கோபந்தாலேற்படும் குறிகள்

நீலமே பச்சைவாதம் நீண்டிடு பித்தங் கேளுங்-
கோலமாம் பொன்மை மஞ்சள் கொடும்பதம் போலதாக
சாலவே கருமை வெண்மை சாற்றிய சிலேத்துமங்க
ளானநோய் விழியினல்லாய்! யாய்ந்து நூல் வேதம்
பாரே (18)

(இ - ள்)

கண்களில் வாதம் மேலிட்டால் நீலம், பச்சை முதலான நிறங்கள் காணும். பித்தம் மேலிட்டால் பொன்னிறமாகவோ அல்லது மஞ்சள் நிறமாகக் கண்விழி காணும். கருநிறமாகவோ அல்லது வெண்ணிறமாக



A siddhadreams ebook

பூதம் போல்வீங்கி வற்றும் புண்போலெங்கும் திமிர்க்கும்
ஓதுந் தோஷகரப்பானுற்று (46)

(இ - ள்)

குளிர்க்காய்ச்சல், கழலே, நாட்கள் செல்லச் செல்ல உடம்பில் வீக்கம் முதலானவை உண்டாகும். புண் போல் வலியேற்படும், உடலில் திமிர் ஏற்படும்.

இவை தோஷக்கரப்பான் லஷணங்களாகும்.

## அரிகரப்பான் லஷணங்கள்

உற்றவரி கரப்பான் ஓதக்கேளொண்டொடியீர்
மற்றும் வீக்கம் யோனி சுற்றும் வந்திடும் புண்—சற்றன்னி
யாருமல் புண்களைக்கு மான கருவழிக்கு
மாறுது மிக்குணத்தின் வாறு (47)

(இ - ள்)

ஆண்குறி, பெண்குறி முதலான விடங்களில் புண் களேற்படும். புண்கள் லேசில் ஆறாது. ஸ்திரீகளுக் கெனில் கருத்தரியாது.

## கரப்பானுக்குக் "கொடிவேலிச் சூரணம்

வாறு கொடிவேலி குறிஞ்சா வக்கணை யருகு
கூறு கருவேம்பு குடசப்பாலை — சீறு
சிவனார் பெருமருந்து செங்கத்தாரி மிளகு
மிவையே கொள் பலகரப்பானேகும் (48)



(இ - ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | குறிஞ்சா இலை |
| அருகு | கருவேப்பிலை |
| குடசப்பாலைவிதை | சிவனார்வேம்பு |
| பெருமருந்து | செங்கத்தாரிப்பட்டை |
| மிளகு | |

இவைகளைக் காயவைத்து இடித்துச் சூரணஞ் செய்து வைத்துக் கொள்ளவும்.

வேண்டுபோது முவிரல் கொள்ளுமள வெடுத்து தண்ணீருடன் உட்கொள்ளவும்.

பலகரப்பான்கள் தீரும்.

## சீழ் கரப்பானுக்கு "நொச்சி யெண்ணெய்"

ஏருங் கருநொச்சி யேழிஞ்சில் சாணக்கி
யாருங் கரந்தைச் சின்னி யாமணக்கு — பாகம்
வடியீர் வசம்புன்னி வாழ்கடுகு நோசனையும்
குடிவீ ரழுசீழ் கரப்பான் கூறு (48)

(இ - ள்)

| | |
|---|---|
| கருநொச்சி | ஏரழிஞ்சில் |
| சாணக்கி | கரந்தை |
| சின்னி | |

இவை களை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதம் எடுத்து, தசுக்கி ஆமணக்கெண்ணெய் 5 சேர் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனுடன்



A siddhadreams ebook

கண்களில் நிறவேறுபாடு உண்டானல் அது கபத்தினு லேற்பட்டதாகத் தெரிந்து கொள்ளவும்.

## காசத்தின் குறிகள்

கூறிய வாலகாசங் கொழும்புகை யாத்தபோல
மாறிடு நீலகாச மருளுமத்தின் பூ வண்ணம்
சீறுமந் தாரகாசம் செய்பஞ்சு மேகம் போலாம்
வேறிடு விரணகாசம் வெண்டான மொப்புமாமே (19)

(இ - ள்)

வாலகாசம் புகையைப் போன்ற நிறமுடைய தாயி ருக்கும். நீலகாசம் ஊமத்தம்பூவை யொத்த வண்ண மாகக்காணும். மந்தாரகாசத்தில் கண்விழி செம்பஞ் சைப்போன்ற நிறமாகும். விரணகாசமெனிலோ வெண்ணிறமாகும்.

## மணி நீலகாசத்தின் குறிகள்

கூசிடு குணமு நீருங் கூசாமல் பற்பரோகம்
வீசிடு படலம் பத்தி விம்மியே வலிக்கு மாகில்
பேசிடு தெரியலன்று பெருவிழி கருப்பிலுற்று
மாசிடு கறுப்புமாகில் மணிநீல காசமாமே (20)

(இ - ள்)

கண்ணீர் பெருகும் கண்களிலுள்ள படலத்தைப் பற்றி (4 வகைப் படலங்கள் உள்ளன) (Layers) வலியை



யும், விக்கத்தையும் கொடுக்கும். விழியும் கருநிறமடை யும். இவை நீலகாசக் குறிகள்.

## கண்ணெரிதலின் குணம்

கண்ணினில் தடிப்புண்டாகிக் கடுவலில் விழிக்கொணாது
திண்ணியக் குத்தம்பற்பம் ரோகமே சிவந்து காட்டும்
கண்ணிமைச் சூழ்ப்புண்ணாய் காரழி பாயுமாகில்
பண்ணிய கமலம்போலப் பரியகண்ணெரிதல் தானே (21)

(இ - ள்)

கண்கள் வீங்கும் கண்களைச் சீக்கிரத்தில் விழிக்க இயலாது. குத்தம், பற்பம் முதலான ரோகங்களில் கண் கள் சிவக்கும். கண்ணிமையைச் சுற்றிலும் புண் களுண்டாகும். பீளையும் சாரும். இவை கண்ணெரிதல் என்ற நோயாகும்.

## பற்பரோகத்தின் அசாத்தியக் குறிகள்

கண்டிடு பூவும்வெள்ளை கருவிழி தப்புத்தோன்றிக்
கொண்டிடு பற்பரோகம் கூறிடு விழிக்கொணாது
தன்றினில் கணங்கள் போலநடுமுழி தன்னில் தோன்றில்
மன்றிடு புகைச்சல்தானு மாறியுமீளா வென்றே (22)

(இ - ள்)

கருவிழியில் வெள்ளை நிறப்பூ உண்டானல் பற்ப ரோகமாகும். கண்களை நன்றாக விழிக்க முடியாது.

A siddhadreams ebook

கருமுழியில் சிறுசிறு புள்ளிகள் ஏற்பட்டுப் பார்வைப் புகைச்சல் ஏற்பட்டால், தீராது என்று தெரிந்து கொள்ளவும்.

### விழிநோயின் அஸாத்தியக் குறிகள்

சனிய நீரோடி நொந்து சதைமுழி தன்னைமூடி
அழியவே சூழப்புண்ணாய மியலாய்ப் பாயுமாகில்
விழியினை யாருதாகும் வேண்டியே மருந்து செய்தால்
பழியுடன் படுவாய் கண்டாய் பார்வையிற் றெரியா
ரென்றே (23)

(இ - ள்)

கண்களிலிருந்து பூளையும் நீரும் வடியும். இமை யோரங்களில் புண்ணாகும். சீழும் வடியும். இவ்வாறான விழி நோய்க்கு மருந்துகளிட்டாலும் குணப்படாது. பார்வையும் போம்.

### படிகுந்தத்தின் குறிகள்

உள்ளமே நொந்து கண்களுறுத்தியே வலிக்குமாகில்
மெள்ளவே சந்திரோ தயமுறைய மேவிய சிறுகை காணும்
கள்ளமே அல்லநோய்கள் கருவிழி கறுத்துக் கண்ணில்
பள்ளமாம் பார்வை தன்னில் படிகுந்த மென்று சொல்லே
(24)

(இ - ள்)

மனது வாட்டத்துடன், கண்களில் உறுத்தலுண்டாகி வலி கொடுக்கும். கண்களில் சந்திர உதயத்தைப் போன்ற பற்பல வெண்மையான வட்டங்களும் தென்படும். கருவிழி ரொம்பவும் கருநிறமடையும். கருவிழி



சிறிது பள்ளமாக உண்டாகும். இவை படிகுந்தத்தின் இலக்ஷணங்களாகும்.

### எழுச்சியின் குறிகள்

தெரிந்திடுங் கருப்பில்வெள்ளைச் சிதறியே உள்ளே தோன்றில்
பரிந்திடு செயநீரூறும் பத்தியால் வலிக்கப் பின்னு
மெரிந்திடு நயனமெல்லா மெழுச்சியாம் செம்மிகாட்டி
மருந்திடு நயனந்தன்னில் மாறிடுமென்று கூறே (25)

(இ - ள்)

கருவிழியில் வெள்ளைப் புள்ளிகள் தோன்றும். கண்ணிலிருந்து நீர் வடியும். வலியும் உண்டாகும். கண்கள் பூராவும் எரிச்சலுண்டாகிச் சிவக்கும். மருந்து போட்டால் குணமுண்டாகும்.

### கண்ணோவுக்குப் பத்து

சோற்றுப்பத்தும் திருநீரும் தோகையனையாள் முலைப்பாலும்
வேற்றுப் புறத்தைத் துடைத்துப்போட்டு வேறுகலத்தின்
புறந்தேய்த்து
காற்றுப் படாமலகத்திருந்துக் கண்ணைச்சூழப் பூசினக்கால்
தோற்றுப் போமே கண்ணோவு சொன்னார் முனிவர்
சொன்னாரே (26)

(இ - ள்)

வெண்கலக் கல்வத்தின் அடிப்புறத்தைக் கழுவித் துடைத்து அதன்மேல் ஒரு எலுமிச்சங்காயளவு சாதமும், மூவிரல் கொள்ளுமளவு விபூதியும் சேர்த்து மற்றொரு வெண்கலக்கல்வத்தின் அடிப்புறத்தால் முலைப்பால் விட்டு

A siddhadreams ebook

வசம்பு பூண்டு
கடுகுரோகிணி

இவற்றின் கஷாயம் ஒரு ஸ்பூனளவெடுத்து முன் எண்ணெயை விட்டுப் பருகவும்.

சிழ்க் கரப்பான் தீரும்.

## கரப்பானுக்குச் "செங்கத்தாரி எண்ணெய்"

கூறுசெங்கத் தாரிப்பட்டைச் சின்னி கூர்மிளகு
வீறுஞ்சிறு குறிஞ்சா வேர்கூட்டி — காசினியி
லெண்ணெய்விட வேகுடி நீ ரேற்கும் பலகரப்பான்
தின்னு விடவே போம் தினம் (49)

(தி - ள்)

செங்கத்தாரி பட்டை சின்னியிலை
மிளகு சிறுகுறிஞ்சாவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணித்து, நல்லெண்ணெய் 5 சேர்விட்டுக் குழப்பி அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

கரப்பான் ரோகந்தீரும்.



## வீக்கத்திற்கு தாளிசங்குக் குடிநீர்

தினந் தாளிசங்கு சுரைசிறு நெருஞ்சி யிஞ்சி
மனந்தால் நீர்முள்ளி மாமலையும் —கனத்துவரில்
வெங்காரமென் பொடியாய் மேவுங் குடிநீரிலிடும்
பொங்கான வீக்கம் பொங்காச் (50)

(தி - ள்)

தாளி சங்கம் வேர்
நெருஞ்சில் இஞ்சி
நீர்முள்ளி விதை

இவைகளை இடித்து 8 மடங்கு தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து வடிக்கட்டி,

பொரித்த வெங்காரச் சூரணம் இட்டுப் பருகவும்.

வீக்கம் போம்

## வீக்கத்திற்கு மருந்து

கார மவட்சாரம் கனத்த பித்துமென் பொடியா
யிருள்ளி யிஞ்சிரசமுழுங்கில் — பாரமுற்ற
வீக்கவத்தித் தூக்கமுண்டாய் மேலுப்பிசம் நெகிழ்ந்துமே
யக்கிநீர் சாய்க்கு மலநீர் (51)

(தி - ள்)

காரம் எவட்சாரம்
இந்துப்பு பூண்டு
இஞ்சிரஸம்

A siddhadreams ebook

நன்றாக அரைக்கவும். ரோகாளி காற்றுப்படாமல் வீட்டிற்குள்ளிருந்து இந்தமருந்தை யெடுத்து நோயுள்ள கண்களைச் சூழவும் புறவளையமாக இடவும். கண்ணோய்கள் தீரும்,

## கண்ணோய்க்குச் சூத மாத்திரை

சூதத்திரட்டி காரீயஞ் சேரியார் நற்றமதற்கு ரெட்டிச்
சாதிச்சங்கு மதற்குரெட்டித் தாம்பிராதி யதற்குரெட்டி
ஏதிட்ட ரைப்பமெனில் நிம்பஞ்சாற்றில் தாமரைந்து
சோதிச் சொன்னேன் கண்ணோய்கள் ஒன்றும் நில்லா
தோடிடுமே (27)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| பாதரஸம் | 1 | பங்கு |
| காரீயம் | 2 | ,, |
| துத்தம் | 4 | ,, |
| சங்குத்தூள் | 8 | ,, |
| தாமிரத்தூள் | 16 | ,, |

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு, எலுமிச் சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும்.

பின்னர் இதனை

நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். 1 வருடஞ் சென்ற பின்னர் இதனை உபயோகிக்கவும். கண்ணோய்கள் தீரும்.



## இரத்தின மாத்திரை

முத்தும்பவழம் பொன்வெள்ளி முழுங்கும் பொன்னுஞ் சிறுசீரை
சுத்தாங்க வெங்கலத்தார் செம்புதூராய் துய்ய நவரத்தினம்
ஏதிட்டரைப் பத்திரிபலை வினித்தகஷாய மிதுகரைத்தால்
சுத்தவெள்ளி வட்டிலிட துய்யநாவற் பழம் போலாமே (28)

எண்ணெய்த் துளியிற்றவிர் பந்நீரிவையோ டெரும்பு நாயுருவி
மண்ணைக் கழுவித்துத்தியின் வேர்வளர் வெங்கலஞ்செம்
பொடியரைத்தும்
கண்ணைச் சூழ்ந்த ரோகங்கள் கடுகில்தீரும் நிச்சயமே
குண்ணைப்பழித்த குளிமுலையீர் கூறும் பெரியோர் மொழியாமே
(29)

(இ - ள்)

| | |
|---|---|
| முத்து | பவழம் |
| பொன் (ராவியது) | வெள்ளிப்பொடி (ராவியது) |
| பொன்னுங்காணிக்கீரை | |
| சிறுகீரை | வெங்கலத்தூள் |
| செம்புத்தூள் | நவரத்னங்கள் |
| தராய்த்தூள் | |

இவைகளை சரியளவெடுத்து ஒரு கல்வத்திலிட்டுத் திரிபலா கஷாயம் (கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், தான்றித் தோல் இவைகளை இடித்து வைத்த கஷாயம்) விட்டு 40 நாட்கள் நன்றாக அரைக்கவும்.

இதனை

வெள்ளிப் பாத்திரத்தில் வைத்திருக்கவும். நல்ல கருநிறமாகும்.

பின்னர்

இதனை நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். 1 வருடஞ் சென்ற பின்னர் இம் மாத்

A siddhadreams ebook

திரையிலொன்றை யெடுத்து நல்லெண்ணெயிலோ, தயிர்த் தெளிவிலோ அல்லது பக்கீரிலோ இழைத்து ஒரு பயிற்றம் பருப்பின் அளவு கண்களுக்குள் இடவும். கண்ணோய்கள் தீரும். காயுருவி வேரின் மேலுள்ள மண்ணைக் கழுவித்துடைத்து, அதனுடன் தந்தியின் வேரையும் கழுவி வைத்து, வெங்கலச்செம்பிலிழைத்து உண்டான விழுதைக் கண்களைச் சுற்றிலும் பிரலேபய மாக இடவும். பற்பல கண்ணோய்களும் தீரும்.

**குறிப்பு :**

நவரத்னங்களாவன: வைரம், வைடூரியம், கோமேதகம், பவழம், முத்து, புஷ்பராகம், பச்சை, நீலம், சிகப்பு என்பன.

## அந்திமாலைக்கு "மை"

இந்துப்புக் கெடைக் கொத்தசரடுக் கடுக்காய் யாவெண்ணெ
யில்பேத்தரைத்தே வழித்து
பத்தித்தசெம்பின் புறத்தப்பிவைத்தால் பச்சைப்பசுங்கிளிக்
கொக்கப் பசுக்கும்
கொந்திக் கொதிட்டளித் திட்டகண் ணில்கொள்ளிலப்
பருப்பதனை யொக்கவிட்டா
லந்திக்கு முள்வந்த சேலைப்பழுத்த காத்தை வென்றித்
திரநீலத்தாரமே (30)

(இ - ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | 1 பலம் |
| கடுக்காய்த் தோல் | " |

இவ்விரண்டையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு செம்புப் பாத்திரத்தில் வைத்துப் பசுவின் வெண்ணெய் சேர்த்து, நன்றாக வரைத்து அப்பாத்திரத்தி



லேயே அப்பிவைக்கவும். பச்சைக் கிளியைப் போன்ற நிறமாகும். கொதறிய கண்களில் இந்த மையில் கொள்ளுப் பருப்பளவு போட்டுவரவும்.

அந்தி மாலை நீங்கும்.

## நயன காசந்நீற்குச் "சங்காதி மாத்திரை"

சங்கு திப்பிலி மிளகு சுக்கொடு தாரமோடதி மதுரமும்
புங்கம் வித்தொடு பீதரோகிணி அரிய துத்தம் மனோசிலை
அங்கரைப்பது தந்திபத்திரிச் சாறுதேனொ டளாவியே
சங்குலோற்றிடு விழிதனக்கிடு காசமென்றது நாசமே
(31)

(இ - ள்)

| | |
|---|---|
| சங்கு | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| தேவதாரம் | அதிமதுரம் |
| புங்கம்வித்து | பீதரோகிணி |
| துத்தம் | மனோசிலை |

இவைகளைச் சரியளவெடுத்து தந்தியாவட்டைப்பூச் சாறுவிட்டு நன்றாக வரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். இதனைக் காயவைத்து 2 மாதஞ் சென்றபின் உபயோகிக்கவும். இதனைத் தேனில் இழைத்து பயற்றம் பருப்பளவெடுத்துக் கண்களிலிடவும்.

கண்களிலுண்டாகும் காசநோய்கள் தீரும்.



A siddhadreams ebook

இவைகளை உட்கொள்ளவும்.

வீக்கம், உடல் உப்பிசம், மலச்சிக்கல், நீர் கடுப்பு முதலான நோய்கள் நீங்கும்.

தூக்கம் உண்டாகும்

---

### வாயு, கரப்பான் முதலியவைகளுக்கு
### "அரிதகிப் பிட்டு"

மலநீரிரைத்து விம்மல் வாயுகரப்பான் வீக்கம்
பிலன் போக ரிதகியைப் பிட்டு — பலமொன்
றிருகழஞ்சு கோமியத்திலிட்டு விறக்கிச் சீலைவடிச்
சீருனக் கொண்டாம் நெய்தின் (52)

(இ-ள்)

முற்றிய கடுக்காயின் விதைகளை நீக்கி, ஒரு பாத்திரத்திலிட்டுப் பசு மாட்டு மூத்திரம் விட்டு வேகவைத்துக் கொண்டு, உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பின்னர் இதனை இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு

2½ வராகனெடை தூள் எடுத்து, நெய்யில் குழைத்து உட்கொள்ளவும்.

---

### வீக்கம், மலச்சிக்கலுக்குச்
### "சிறுகுறட்டை யெண்ணெய்"

நின்னூர் சிறுகுறட்டை தேங்காய் சங்குள்ளி
தன்னந் தனித்தனியே தானுழக்காய் — பின்னேகேள்



ஆமணக்க நெய்க்கடுகு ரோசனையில் காய்ச்சியுண்ணச்
சாமமதில் வீக்கமலஞ் சாய்க்கும் (52)

(இ-ள்)

சிறுகுறட்டை தேங்காய்
சங்கு பூண்டு

இவைகளின் சாறு ஒரு உழக்கு

சித்தாமணக்கெண்ணெய் 5 சேர்

இவைகளையொன்று கலந்து, ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி, கடுகுரோகிணிச் சூரணம் கலந்து எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

வீக்கம், மலச்சிக்கல் முதலானவை நீங்கிப் பேதியாகும்.

---

### கிரந்தி, புண், சூலைக்குப் "பட்டைச் சூரணம்"

சாய்க்கும் படிகேளாய் தான்கிரந்தி புண்சூலை
மாய்க்கும் வயத்துவலி வாதகுஷ்டம் — வாய்க்கு மருந்
துன்னருலகத் துய்யாமல் மானிடர்க்குப்
பண்ணீர் பட்டைச் சூரணம் (53)

(இ-ள்)

பறங்கிப்பட்டைச் சூரணத்தை உட்கொள்ளவும்.

கிரந்தி, புண், சூலை, வயிற்றுவலி, வாதகுஷ்டம் முதலானவை தீரும்.

---

A siddhadreams ebook

## பீதரோகிணி உருண்டை

பீதரோகிணி மூனுசங்கு மூனு பலமான
வராகியின் கொம் பொன்னுங் கூட்டிச்
சீதளமா மோரிலைத் தாமரைவேர் மூனு
சிரசொடுதான் சிறக்கக்கூட்டி
மாதளையாய் துரிசிரண்டு பச்சவளை யிரண்டுமரு
வுவெள்ளைக் காக்கணம் வேரொன்று சேர்த்து
போதநிம்பச் சாத்தரைத்து மூனுநாளாய்
பொருந்து மருந்துண்ட பீதரோகிணி யென்பீரே (32)

என்னவே சிறுபூளை யலிமைத் தடிப்புந் தீருமினிய
மாக்கண்ணதற்குச் சாறனையிற் றீரும்
மன்னவர் கொண்டாடு கரிசாலந் தன்னிற்
வருத்தியிடக் கண்ணோவு பலவுந்தீரும்
தின்னவரு முசுமுசுக்கைத் தன்னிலுரைத்
திடசெவ்வேர் படலமுடன் புகைச்சல் தீரும்
சொன்னபடி அஞ்சனம்பீத ரோகணிக்கு விழிகள்
துலங்கு மௌனமுனி வுரைத்த சொல்லைமறவேனே (33)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| பீதரோகிணி | 3 | பங்கு |
| சங்கு | | ,, |
| பன்றியின் பல் | 1 | ,, |
| ஓரிலைத்தாமரை வேர் | 3 | ,, |
| துரிசு | 2 | ,, |
| வளையலுப்பு | 2 | ,, |
| வெள்ளைக்காக்கணம் வேர் | 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு இடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக வரைத்து, கிண்டமாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.



6 மாதஞ் சென்ற பின்னர் இதை சிறுபூளைச் சாற்றில் இழைத்துக் கண்களிலிட

இமைத் தடிப்பு தீரும்.

சாறணைச்சாற்றில் விட்டால் மாக்கண்கள் தீரும்.

கரிசாலைச் சாற்றில் குழைத்துக் கண்களிட கண் நோய்கள் தீரும்

முசுமுசுக்கைச் சாற்றில் உரைத்துக் கண்களிட செவ்வேர், படலம், புகைச்சல் முதலான கண்ணோய்கள் தீரும்.

பீதரோகிணி மாத்திரைக்கு பார்வையும் சுத்தமாகும்.

## கண்களின் பார்வை அதிகரிக்க

அஞ்சன மெழுதுக உண்ட கைநீர்விழி
செஞ்சிறு காலையே சீதமரைந்திடு
மஞ்சுறுமதியம் பார்மாக வற்கினே
அஞ்சவே கண்ணுக்கமுத மாகுமே (34)

(இ - ள்)

கண்களுக்குத் தினம் மை போடுவதும், உண்டபின் கைகளைத் தேய்த்து கண்களின் விழியில் ஒத்துதல், அதிகாலையில் துயிலெழுதல், சந்திரதர்சனம் செய்தல் இவைகளினால் கண்களிலேற்படும் மாசு நீங்கிப் பார்வை தெளிவாகும்.

A siddhadreams ebook

## பறங்கிப்பட்டைச் சூரணம்

பாத்துக்கடை மருந்து பஞ்சலவணம் விளங்கம்
சாய்க்குஞ் கருஞ்சீரகந் தனமோதகம் — யேத்தபடி
இட்டுப்பட்டைச் சூரண மிரண்டுபங்கு முன்கலந்து
தட்டிக்கொட்டி யுண்ணுந்தான் (55)

தின்னும் தேனேமரு நீ சேர்ந்தபொடி முக்கழஞ்சு
பண்ணுந்தான் காலம் பருகிவிடு — வன்னங்கேள்
பத்தியந்தான் நெய்கீரைத் தன்று பிலாத்துவரை
உற்றவுள்ளி நெய்த் தோலி கருவுண் (56)

(இ - ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | வளையலுப்பு |
| கரியுப்பு | சோத்துப்பு |
| உழமண்உப்பு | வாயுவிடங்கம் |
| கருஞ்சீரகம் | ஓமம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதற்கு இரு மடங்கு பறங்கிப்பட்டைச் சூரணம் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதில் 3½ வராகனெடையளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

பத்தியம் :—

நெய், கீரைத்தண்டு, பிலாக்கொட்டை, துவரம் பருப்பு, பூண்டு, சுராக்கறி முதலானவைகளைச் சேர்க் கலாம்.



## பித்தத்திற்கு "ஏலாதிச் சூரணம்"

உண்ணுமேல மிலவங்க மோதுந் திரிகடுகு திரிபலை
திண்ணறிய நாகப்பூச் சேற்ற மூத்தம் — பண்ணும்பொடி
மாதுடனே நற்சிவதைப் பாகமுடன் சுற்றிபொடி
நாதுடனே முன்பொடியுஞ் சேர்நன்று (57)

நண்ணும்பொடி முக்கழஞ்சு நாழிந்தேன் சர்க்கரையில்
தின்றிவிடு லாமலஞ் சிதறிவிடு — மெண்ணெறிய
விழா மலக்கட்டு மிக்கபித்தம் வாய்வெப்புக்
கீழாக நோக்கும் கிரந்தி (58)

(இ - ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சிறுநாகப்பூ | கோரைக்கிழங்கு |

சுத்திசெய்த சிவதைவேர் இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு முன் கூறிய பறங்கிப்பட்டைச் சூரணத்தையும் சரியளவு கலந்து உட்கொள்ளவும்.

இதில் 3½ வராகனெடை வீதமெடுத்துத் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ உட்கொள்ளவும்.

பித்தம், மலச்சிக்கல், அஸ்திகாங்கை, கிரந்தி முதலான நோய்கள் தீரும்.

A siddhadreams ebook

## கண்ணோவுக்கு மருந்து

துவிர்முருங்கை யாவின்பால் கத்தமாய் வெந்தே
ஒளி நறுநெய் கூட்டியரைத்து — துளிவினவே
நொந்தகண் ணிலேபிழிந்தால் நோவுதீர்க்கும் பொழுதே
கந்தன் பதமறியக் காண். (35)

(கு - ம்)

முருங்கைத்துளிரைப் பசுவின்பாலில் வேகவைத்து பிறிது பசுவின் நெய்விட்டு நன்றாக வரைத்து ஒரு வெள்ளைத் துணியில் முடிந்துக் கண்களில் பிழியவும். நொந்த கண்களில் ஏற்படும் நோய் தீரும்.

## கண் பூவிற்கு மருந்து

கூனன் முதுகுங் கூழங்கையயன் வெள்ளுகிரும்
ஏனத்தின் கொம்பு மிராவறிவான் நெஞ்செலும்பு
மானத்தின் மீனும்வழிப் போவான் வெள்ளெலும்புங்
கானக்குறத்தி முலைப்பாலுங் கண்ணில்பூவுங்
காத்திடுமே (36)

(கு - ம்)

ஆமையோடு, யானைத்தந்தம், பன்றிப்பல், கோழியின் நெஞ்செலும்பு, கற்பூரம், குதிரை எலும்பு இவைகளைப் பொடியாக்கி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ளவும். கண்களிலுண்டாகும் பூவிற்கு இதனைத் தேனில் இழைத்துப் போடவும். பூ விழுதல் தீரும்.



## படலத்திற்கு மருந்து

புண்ணில் புளியிலை பூவில் மாதளை
நின்னாரு ளிலைக்கள்ளி நீர்தானுகில்
தண்ணியப் படலமும் நயந்த நேரனே
குன்னிலம் மருவு கொத்தளங் காயதே (37)

(கு - ம்)

புளியிலைச்சாறு மாதளம்பூச்சாறு
இலைக்கள்ளி

இவைகளின் சாறு வகைகளை ஒரு சிறு குச்சியில் தோய்த்துக் கண்களில் போடவும். படலநோய் தீரும்.

## பலவகை கண்ணோய்களுக்கும் மருந்து

நெய்யாணி தேன்படலம் நீலதினளிற்கு
கையாந்தகரை யுருள்கடியும் — பொய்யாப்
பொரும்பில் முடமயிர்க்குப் புண்ணிற்குக்காவி
விரும்பி விடுவெள் ளெழுத்தின் வேர் (38)

(கு - ம்)

கண்களில் ஏற்படும் ஆணிப்பூ, படலம், நீலகாசம், அரிப்பு முதலானவைகளுக்குக் கையாந்தகரைச் சாறு ஒரு துளியெடுத்துக் கண்களில் பிழியவும். பார்வையும் சுத்தமாகும். முடமயிர், புண்கள் முதலானவைகளுக்கு வெள்ளெழுத்தின் வேரை யுரைத்துக் கண்களிலிடவும்.

A siddhadreams ebook

## கண்பார்வைக்கு பீதரோகிணி மாத்திரை

மந்தித்த கண்ணுக்கு மருந்துண்டு மாதேகே
விந்துப்புத் திப்பிலி யியல்பீத ரோகிணி
நந்திப் பூச்சாற்ருல் நயம்பெற வரைத்திட
அந்திக்கு முன்னே அருந்ததி தோன்றுமே (39)

(இ - ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | திப்பிலி |
| பீதரோகிணி | |

இம்மூன்றையும் சமனெடை யெடுத்து நந்தியா வட்டைப் பூச் சாறு விட்டு நன்ருக (3 நாட்கள்) வரைத்து கிண்டமாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொண்டு, 6 மாதங்கள் சென்ற பின்னர் நந்தியாவட்டைப் பூச் சாற்றிலேயே இழைத்துக் கண்களில் இடப் பார்வை மந்தமான கண்கள் துலக்கும்.

## சந்தனாதி அஞ்சனம்

சந்தன மிரண்டு பிச்சி தக்கநீர் பூலாவின்
வந்தன மதுரமேல மருவுற்ற தாமரைவேர்
புந்தி பொன்மெழுகு காவிபுகழ் சாதிலிங்க மெல்லா
மிந்தவை சமீபங்களி வையெல்லாம் வார்த்
தரைத்தே (40)

அரைத்திடு நாலுசாம மழுகுற வரைத்துப் பின்னே
வரைத்திட ஜுருட்டிக் கொண்டு வளமையாய் நிழலு
[லர்த்தாய்
யுரைத்திடப் படலம்பில்ல முவந்தசுக்கிலங் குந்த
மிரைத்தெழும் பார்பாரியல் சந்தனாதியீயே (41)



(இ - ள்)

| | |
|---|---|
| சந்தனம் | செஞ்சந்தனம் |
| பிச்சிப்பூ | நீர்ப்பூலாவேர் |
| அதிமதுரம் | ஏலக்காய் |
| தாமரைக்கிழங்கு | பொன்மெழுகு |
| காவி | சுத்திசெய்த சாதிலிங்கம் |

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூளாக்கிச் சுத்த ஜலம் விட்டு 4 சாமங்கள் நன்ருக வரைக்கவும். நன்கு மையானபின் இதனை நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்து நிழலில் காயவைக்கவும்.

4 அல்லது 6 மாதங்கள் சென்றபின் இம்மருந்தைத் தண்ணீர் விட்டிழைத்துப் பயற்றம் பருப்பளவு எடுத்துக் கண்களிலிடவும்.

படலம், பில்லம், சுக்கிரரோகம், குத்தம் முதலான நோய்கள் குணமாகும்.

## கர்ப்பூராதி அஞ்சனம்

சீராகுங் கற்பூரம் முத்தக்காசு
திரிபலா தியுடனே துத்தந்தானும்
பேராகுங் கடல்நுரை யஞ்சனக்கல்
நிமிளைபீத ரோகிணி மஞ்சள் கந்திக்கல்லு
ஏராகுமதுரம் வெள்ளி லோத்திர மக
ளிரும்பூரல்பொடி களிவைக ளெல்லாஞ் சரிநீ
காராகுங் கரிசாலச் சாறுதனி லாறுசாமங் [கொண்டு
கலந்தரைத்து நிழலுலர்த்தி கையில் கொள்ளே
(42)

A siddhadreams ebook

## கிரந்திக்குப் "நவச்சார மாத்திரை"

கிரந்தி கட்டுஞ்சூலைக் கேற்க நவச்சாரம்
பொருந்து மிந்துபோற்தரிய பேரம் — மருந்து
நாபியடப்பம் விதை நற்கோட் டம்வாளமிரு
விமேவும் திம்பச்சாற்றிலிட மீளும் (59)

(செ - ம்)

| | |
|---|---|
| நவச்சாரம் | இந்துப்பு |
| நாபி | அடப்பவிதை |
| கோஷ்டம் | சுத்திசெய்தநேர் |
| சுத்திசெய்த இருவி | [வாளம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றிநிகர் குளிகை செய்து வைத்துக் கொள்ளவும்.

இதனைத் தினம் காலையிலும் மாலையிலும் ஒரு மாத்திரை யுட்கொள்ளவும்.

நன்கு பேதியாகிக் கிரந்திகள், சூலை முதலானவை தீரும்.

## தேமலுக்குக் கள்ளிச் சூரணம்

மீளுமலைக் கள்ளிதன்னில் வேரிலைத் தோல்த் தானுலர்த்தி
சூளுமென வேயிடித்துத் துய்யபொடி — கேளிரண்டு
காசத்தனைப் பொடியைக் காலமே தேனிலுண்ணத்
தேச்சாற்றுத் தாம் போந்தேறு (60)

(செ - ம்)

மலைக்கள்ளியின் வேர், இலை, பட்டைத்தோல் இவைகளையும் நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.



இதனை இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு வேளைக்கு 2 வராகனெடை தூளெடுத்துக் காலையில் தேனில் குழப்பிச் சாப்பிடவும்.

தேமல் தீரும்.

## மகோதரத்திற்குப் "பேய்ப்பீர்க்கம் கடுகு"

தேறுபேய்ப் பீர்க்கங்காய் சிதற நறுக்கித் துவைத்து
சாறு பரிவுடனே தான் பதக்காய் — கூறுகின்ற
நற்பெருங் காயங் கழஞ்சு நான்மூன்றி வாங்கடுகுணை
சொற்பெரு மகோதரம் போம் சொல் (61)

(செ - ம்)

பேய்ப்பீர்க்கங்காயை இடித்துச்சாறு 1 மரக்கால் பிழிந்தெடுத்து, அதனுடன் பெருங்காயம் $1\frac{1}{2}$ பலம் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைக்கவும்.

இந்தக் கடுகை உட்கொள்ளவும்.

மகோதரங்கள் தீரும்.

## கிராணிக்குக் "கருங்கோழிச் சூரணம்"

சொல்லாய் கருங்கோழித் தோல்போக்கி யுட்சதையில்
நில்லாய் திரிகடுகுஞ்சமம் நேர்காயம் — எல்லாம்
பஞ்சலவணத் தயிரில் பண்ணுமென் னெயில் கடுக்ககொள்
ளுங்க மிரிசக் கிராணியறும் (62)



A siddhadreams ebook

உலர்த்தி மருந் திதனை நிறை யோடுரைத்தே
    யிட்டா லுயர் தாறுஞ் சுக்கிலபூ கந்தீருஞ்
சலத்துரைத் திடமுட மயிர்கள் தீரும்
    சிகப்பலரிப் பற்பரோக முலைப்பாலில் தீரும்
நலத்துடனே சீதேவிச் சாற்றிலிட்டால்
    நடுமுநியிற் காசம்வெள்ளைப் பூவுந்தீரும்
அலைகடலில் விடமருந்து மாத்தானன்று
    அருளிய கர்ப்பூராதி யாமிதென்னே (43)

(இ - ள்)

| | |
|---|---|
| கர்ப்பூரம் | கோரைக்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | நெல்லிமுள்ளி |
| தான்றித்தோல் | துத்தம் |
| கடல்நுரை | அஞ்சனக்கல் |
| கிமிலை | பீதரோகிணி |
| மஞ்சள் | சாலைக்கல் |
| அதிமதுரம் | வெள்ளிலோத்திரம் |
| இரும்புத்தூள் | |

இவைகளைச் சரிநிறை எடுத்துத் தூள்செய்துக் கரிசாலைக்கண்ணிச்சாறு விட்டு நன்றாக 6 சாமங்கள் வரை அரைத்து, நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி, நிழலில் உலர்த்தவும்.

இந்த மாத்திரையிலொன்றை யெடுத்துத் தண்ணீர் விட்டிழைத்து, ஒரு பயறளவெடுத்துக் கண்களி லிடவும்.

முடமயிர் தீரும்.

சிகப்பாளிப் பூச்சாற்றிலிழைத்துக் கண்களில் போடப் பற்பரோகந்தீரும். முலைப்பாலில் இழைத்தும் போடலாம்.



சீதேவிச்செங்கழுநீர்ச் சாற்றில் இழைத்துக் கண்களிலிடக் காசம், பூ முதலான ரோகங்கள் தீரும்.

## கொத்தாதி அஞ்சனம்

பகவின்பல் குதிரைப்பல் லானைப்பல்
    பண்பான முட்டைத் தோடாமையோடு
வகவன்றிச் சந்தனம் சங்குபடிகந் துத்தம்
    மனோசிலை மிளகு தாம்பிராதி மஞ்சள்
முகவன்றிச் பூதாகமிதுவெல்லாந் தான்முருகு
    பழச் சாறிதனில் மூவிரட்டதாங்
கசிவின்றி யரைத்துருட்டி எடுத்துநிழ லுலர்த்தி
    கைக்கனாக் காய்த்தேனி லுரைத்திடுக
வென்றுயே (44)

ஈயன்ற வகையே செய்யச் சதைப்படலத்
    தீருமேத் திழைகள் முலைப்பாலிற் பற்பரோகந் தீரும்
அயன்ற தனைத்தறுக தன்னீரி லுரைத்திட்டால்
    வலியுட னேள்பட்டு மலறியோடு
மயன்றியரும் பற்பரோகங் களெல்லாம்
    வளமைமிகு கருவியொப்பா யறுத்தேதீக்குங்
குயன்றுதலாய் வருங்காச குணமுந் தீர்க்குங்
    கொத்தாகிக் குளிகை வகை கூறலாமே (45)

(இ - ள்)

| | |
|---|---|
| பகவின் பல் | குதிரைப் பல் |
| யானைப் பல் | முட்டையோடு |
| ஆமையோடு | சந்தனம் |
| சங்கு | ஸ்படிகம் |



A siddhadreams ebook

| | |
|---|---|
| துத்தம் | மனோசிலை |
| மிளகு | தாம்பிரத்தூள் |
| மஞ்சள் | பூகாகம் |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக எட்டு சாமங்கள் வரையரைத்து, நீண்டமாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். 6 மாதங்கள் சென்ற பின்னர், இம்மாத்திரையிலொன்றை யெடுத்துத் தேனிலிழைத்துக் கண்களுள் ஒரு சிறு பயற்றம் பருப்பளவெடுத்து இடவும்.

சதைப்படலம் தீரும்.

முலைப்பாலில் இழைத்துப் போடப் பற்பரோகம் தீரும்.

சுத்த ஜலத்தில் இழைத்துப்போடக்கண் வலிகள் தீரும்.

அரளிப் பூச் சாற்றிலரைத்துப் போடப்

பற்பநோய்கள் நீங்கும். கருவியினல் சதையை சதையை அறுப்பதைப் போலச் சுத்தமாகத் தீரும். நேத்திரகாச ரோகங்களும் குணமாகும். இதன் பெயர் "**கோந்நாதி குளிகை**" யாகும்.

## கனகரேத்நாதி அஞ்சனம்

செய்யகரி யின்தந்த முதலத்தி கனுஞ்சுவான பல்லீராய்
அய்யகரியின் தெந்தமுதல் லளவாம் பண்ணிக் கொள்வீராய்
மெய்யாந் திரிகடுகு சங்குடனே விளங்குமதுரம சிதாரம்
பொய்யாங் காவி பீதரோகிணிபுங்கம் வித்தும் புகழ்வீரே (46)



வித்துதேத்தாம் பால்பளிங்கு குங்குமப்பூ வேலந்துத்த
முத்தெருத்தின் செவிசொல்லுங் கோரோசினை நிமிளை
சித்தகர்ப்பூரம் ஞவிச்சட்டந் திகழஞ்சனக் கல்லு
நித்தந்திகளார் பஞ்சலோக நிறுப்பீரொன்று வரைக்
கழஞ்சே (47)

ஓரார்முத்துப் பவழமெனும் முடனேவைரம் வைடூர்யம்
மோரார் புஷ்பத்தார் புட்பராக மித்திர மணிநீலங் கோமேதகம்
சீரார்சிகப்புந் தானேனவே சிறப்பாங் கல்லோன் பதுந்தானே
நேரோரொன் றரைக்காலாய் நிறையாய் நிறுத்துக் கொள்
வீரே (48)

கொள்ளுகவுமுது புங்கோடு கொடுப்பைதன் ஞரிதுளசி
பள்ளமாம் பச்சைமஞ்சள் பரிந்தமாதளம் பழத்தினீர்
மெள்ளவோர் நாளாகத்தான் விளங்கவே யரைத்துதானே
வள்ளலேங் கவுறதாக்கி வளர் நிழலுலர்த்திக் கொள்ளே (49)

வளமிகு நரையிற்பூப்போல் மாதனே நீர் வெள்ளெழுத்து நீக்குக்
தனமிகு புழுநோய் கதலிதன் பழச்சாற்றில் தீரும்
முளமிகு காயங்கையாந் தகரையுள்ளநோய் தொண்ணூற்ருறு
கழலறத் தீருந்தப்பாக் கனகரெத் ஞதிவீதே (50)

(இ - ள்)

| | |
|---|---|
| யானைத்தந்தம் | யானைப்பல் |
| காய்ப்பல் | சக்கு |
| திப்பிலி | மிளகு |
| சங்கு | அதிமதுரம் |
| தாளகம் | காவி |
| பீதரோகிணி | புங்கம்வித்து |
| தேத்தாங்கொட்டை | பால்சாம்பிராணி |
| குங்குமப்பூ | ஏலக்காய் |
| துத்தம் | முத்தெருக்கன்செவி |
| கோரோசனை | நிமிளை |

A siddhadreams ebook

கருங்கோழியைக் கொண்டுவந்து தோலை உரித்து விட்டு அதன் சதையுடன்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஓமம் |
| பெருங்காயம் | இந்துப்பு |
| விளையலுப்பு | அட்டுப்பு |
| கரியுப்பு | சோற்றுப்பு |

இவைகளைச் சேர்த்து, எண்ணெயில் வதக்கி உட்கொள்ளவும். தயிர் சேர்க்கவும்.

கிராணிகள் தீரும்.

### கிராணிக்கு மோர் எண்ணெய்

பாருமுடம்பு சதையான வுடனே திரிகடுகும்
கூறுங் கொடிவேலி கூர்மிளகும் — வீறுடைய
உள்ளி வசம்பு சீரகமொக்கரைத்து மோரிலெண்ணெய்
கொள்ளும் கடுகிருணி குணம் (63)

(இ - ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கொடிவேலிவேர் |
| பூண்டு | வசம்பு |
| சீரகம் | |

இவைகளைச் சரியளவு (வகைக்கு 1 வராகனெடை) எடுத்து நன்றாக வரைத்துப் பசுவின் மோர் 1 படியும், நல்லெண்ணெய் 1 படியும் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.



இந்த எண்ணெயைத் தினம் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

கிராணிகள் மாறும்.

### வாயுக்கிராணிக்கு திரிகடு எண்ணெய்

குணமா மந்தமை சதையில் கூர் திரிகடுகு மோதங்
களமாந் திரிபலை கருஞ்சீரம் — மிணமாங்
காயங் கடுகிந்து காணுமெண்ணெயாங் கடுகக்
கொள் வாயுக்கிராணி போம் வண்ணம் (64)

(இ - ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஓமம் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | கருஞ்சீரகம் |
| பெருங்காயம் | கடுகு |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை யளவெடுத்து இடித்துத் தண்ணீர் விட்டரைத்து நல்லெண்ணெய் 5 சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி ஒரு ஸ்பூன் உட்கொள்ளவும்.

வாயுக் கிராணிகள் தீரும்.

A siddhadreams ebook

| | |
|---|---|
| பச்சைக்கற்பூரம் | காவி |
| புனுகுசட்டம் | அஞ்சனக்கல் |
| ராவிய பொன் | ராவிய வெள்ளி |
| ,, தாமிரம் | ,, அரப்பொடி |
| ,, வெங்கலம் | |

இம்மருந்துகள் வகைக்கு 20 குன்றி நிறை

| | |
|---|---|
| முத்து | பவழம் |
| வைரம் | வைடூர்யம் |
| புஷ்பராகம் | நீலம் |
| கோமேதகம் | சிகப்பு |
| பச்சை | |

இவைகள் வகைக்கு 5 குன்றிநிறை

இச்சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாகத் தூள் செய்து,

புங்கம்பட்டைச்சாறு
கரிசாலங்கண்ணிச்சாறு
நன்னாரிவேர்ச்சாறு
துளசிச்சாறு
பசுமஞ்சள்சாறு
மாதளம்பழச்சாறு

இவைகளை முறையே ஒவ்வொருநாள் வீதம் அரைத்து நீண்ட மாத்திரையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். 3 ஆண்டுகள் சென்ற பின் இதனை

மாதுளைப்பூச் சாற்றிலுரைத்துக் கண்களிலிட

வெள்ளெழுத்துக்கள் தீரும்.

புழுவெட்டற்கு வாழைப்பழச் சாற்றிலிடவும்.



கையாந்தகரைச் சாற்றிலிழைத்துக் கண்களிலிட

தொண்ணூற்றாறு நோய்களும் நீங்கும்.

**குறிப்பு :**

வாழைப்பழத்துடன் உமி, அல்லது துவர்ப்பண்டங் களைச் சேர்த்து வைத்தால், அதிலிருந்து சாற்றை எடுக் கலாம்.

---

## பஞ்சலோக அஞ்சனம்

எல்லோர் புகழுமிரத்தின மித்துப்பு மதுரஞ்சங்கு
பல்லோர் படிகங்கர்ப்பூரம் பஞ்சலோகம் காவிமண்
கல்லாந்து குதுத்தமுடன் கையின் கொம்புங் கடல்நுரையும்
வல்லோர் குங்குமங் கோரோசனையு மருவுங்கொடுப்பை
வார்த்தரையே (51)

அரைத்த வுண்டைதனைச் சேர்த்து அழகாந் தேனிலுரைத்
திடவே
பெருத்த படலம் பில்லம்போம் பெருகுங்காயம் குத்தம்போம்
தரித்தநீலிச் சாத்திடத் தடிக்குங் கண்ணுந் தடியாது
பிடித்த............வினதிவான் பஞ்சலோகப் பரிசிதுவே (52)

(இ - ள்)

| | |
|---|---|
| நவரத்னங்கள் | இந்துப்பு |
| அதிமதுரம் | சங்கு |
| ஸ்படிகம் | கர்ப்பூரம் |
| பஞ்சலோகம் | காவிமண் |
| துருசு | துத்தம் |
| மான்கொம்பு | கடல்நுரை |
| குங்குமப்பூ | கோரோசனை |

A siddhadreams ebook

## கிராணிக்குக் "குடிநீரும், நெய்யும்"

வண்ணங்காயம் கடுகு நற்பாளவாறு பித்து நாற்பலமுந்
திண்ணந் தயிர்நீரில் செய்குடிநீர் — தண்ணி நீர்
சுக்குடனே மூன்றுபலந் தொல்புங்கஞ் சாறடையுந்
தக்க வட்டத் திருப்பிவேர் தான் (65)

வேருங் கிராம்பும் வெண் சாதிப்பத்திரிக் காய்
சேருங் கச்சோர மோமந் திரிபலை — சாறுங்
கருவேப்பிலைக் கடுகு காயமவட் சாரமென்னெய்
யரியநெய்யில் கிராணி யகலும் (66)

(இ - ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | கடுகு |
| இவைகள் வகைக்கு | 1 பலம் |
| கடுக்காய்த்தோல் | 4 பலம் |

இவைகள் தயிர் நீரை (தயிரை ஒரு துணியில் பிழிந்து அதிலிருந்து எடுத்தத் தெளிவு நீர்) 2 படிவிட்டு ¼ ஆக வற்றக் காய்ச்சிப் பருகவும்.

| | | |
|---|---|---|
| 2. | சுக்கு | புங்கம்பட்டை |
| | சாறடைவேர் | வட்டத்திருப்பிவேர் |
| | கிராம்பு | சாதிப்பத்திரி |
| | சாதிக்காய் | பூலாங்கிழங்கு |
| | ஓமம் | கடுக்காய்த்தோல் |
| | நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| | கருவேப்பிலை | கடுகு |
| | எவச்சாரம் | |



இவைகளை வகைக்கு 3 பலங்கள் விதமெடுத்து இடித்துத் தூள்செய்து,

| | |
|---|---|
| பசுவின் நெய் | 5 சேரும் |
| நல்லெண்ணெய் | 5 சேரும் |

விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனை யுட்கொண்டுவர

கிராணிகள் தீரும்.

## வாயுக்கிராணிக்கு "நுணா எண்ணெய்"

அகலும் நுணாச்சாற்றி லான தயிர் நீர் சரியாய்
புகலுந் திரிகடுகித்துப் போடு விடையம்—திகலும்
வடிவுடைய சாதிக்காய் வாருமெண்ணெயாங் கடுகக் கொள்
பொடிபடும் வாயுவுக் கிராணி போற்று (67)

(இ - ள்)

| | |
|---|---|
| நுணாவிலைச்சாறு | 1 படி |
| தயிரின் தெளிவு நீர் | 1 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| அதிவிடயம் | சாதிக்காய் |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து இடித்துக் எரித்துப் பதத்தில் இறக்கவும்.

A siddhadreams ebook

கடுருடனே இத்த எண்ணெயை உட்கொள்ள.

வாயுக்கிராணிகள் தீரும்.

### கிராணிக்குப் " பிரண்டை யெண்ணெய் "

போத்தும் பிரண்டை சுக்குபொடி மிளகு திப்பிலியு
மேத்து பவட்சார மிங்கு சீரகம் — வீத்திருந்த
விடையந் தயிருமெண்ணெய் வேக வைச்சிலாங் கடுகக்கொள்
பொடியாங் கிராணி விழும் போம் (68)

(இ - ள்)

| | |
|---|---|
| பிரண்டை | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| யவச்சாரம் | பெருங்காயம் |
| சீரகம் | அதிவிடையம் |

இவைகள் வகைக்கு ½ பலம் வீதமெடுத்துப் இடித்து

| | |
|---|---|
| தயிர் | 1 படியுடனும் |
| நல்லெண்ணெய் | 1 படியுடனும் |

சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தி லிறக்கிக் கடுருடனே உட்கொள்ளவும்.

கிராணிகள் தீரும்.



### வாயுகுன்மத்திற்குப் "பேய்க்கொமட்டி எண்ணெய்"

விடும் பேயின் கொமட்டிக்காய் வேகவைக்கும் போதிரிகடுகு
மிடும் போதிரிபலையுடனிங் கிந்தும் —படும்போது
சிற்றாமணக் கெண்ணெய் சேர்த்துவிடில் வாயுகுன்மம்
பெற்றார் மலங் கழிக்கும் பின் (69)

)இ - ள்)

பேய்க்கொம்மட்டிக்காயை வெதுப்பிச் சாறு பிழிந்து கொண்டு அதில் 5 சேர் எடுத்து, அதனுடன்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு ½ பலம் எடுத்துத் தூள்செய்து சுத்தமான ஆமணக்கெண்ணெய் 5 சேர் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இதில் ஒரு ஸ்பூன் எடுத்துப் பாலுடன் உட்கொள்ளவும்.

வாயுகுன்மம் தீரும். மலச்சிக்கலும் போகும்.

### பட்சிதோஷம், தேரைதோஷம், காமாலைக்குத் " தண்ணீர் விட்டான் நெய் "

பின்னிதறு மீட்டான் சாற்றிபெய் தாவினெய் சேர்த்து
பன்னுங் கிழங்கரைத்துப் பால்கூட்டி — சொன்னபடி

A siddhadreams ebook

பாகமிடத் தின்றுவிட பட்சிதோஷம் தேரை
யேகுமிது மாகாமிலை (70)

(கி - ள்)

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| பசுவின் நெய் | 1 படி |

தண்ணீர்விட்டான்கிழங்கு 1 பலம்எடுத்து அரைத்து அதனுடன் கலக்கி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து உட்கொண்டுவரக் குழந்தைகளுக்கு ஏற்படும்

பட்சிதோஷம், தேரை தோஷம், காமாலை முதலான நோய்கள் அகலும்.

### காமாலைக்குக் "கடுக்காய் நெய்"

காமாலைப்போம் கடுக்காய் காய்ச்சியின்னீர் நெய்விட்டுப்
போமா மெய்க் கடுக்காய் போதரைத்து — வேமாகில்
பக்குவம் பார்த்தே வடித்துண் பாண்டுபித்தங் கிருணியறுங்
திக்கெனப் போமூலம் திசை (71)

(கி - ள்)

| | |
|---|---|
| கடுக்காய்க் கஷாயம் | 1 படி |
| பசுவின் நெய் | 1 படி |

இவைகளை யொன்று கலந்து, பிஞ்சுக் கடுக்காய் 1 பலம் எடுத்து அரைத்து ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொண்டுவேளைக்கு 1 ஸ்பூன் எடுத்துப் பாலுடன் கொடுக்கவும்.



பாண்டு, பித்தம், கிராணி, காமாலை, மூலம் முதலான ரோகங்கள் நீங்கும்.

### காங்கைக்கு "முலைப்பாலெண்ணெய்"

திசையா முலைப்பாலில் சேருமெண்ணெய் பாதி
பசையாம் பஞ்சத்திரவியம் பாரிங்கேல் — விசையாக்
குப்பை மரமஞ்சள் கடுகுரோகணியில் காய்ச்சிவிட
ஒப்புடனே வெட்கை விடு மோது (72)

(கி - ள்)

| | |
|---|---|
| முலைப்பால் | 1 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

இவற்றுடன்,

| | |
|---|---|
| லவங்கப்பட்டை | லவங்கப்பத்திரி |
| ஏலக்காய் | சிறுநாகப்பூ |
| கிராம்பு | சதகுப்பை |
| மரமஞ்சள் | கடுகரோகிணி |

இவற்றை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துப் பொடித்துப் போட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடனே உட்கொள்ளவும்.

அஸ்திகாங்கை தீரும்.



A siddhadreams ebook

### வெள்ளைக்கு "வெண்குன்றி மருந்து"

ஓதும் வெண்குன்றி விதைத்தோல் போக்கி யுட்பருப்பு
மாது புளியம்விதைத் தோலத்திப்பால் — மேதையென்னும்
வெண்ணெய் தனிலோர் கழஞ்சுண் வெள்ளை விடுநீர் கழிச்சல்
நின்றுவிடும் தேன் மொழியாய் நேர் (73)

(தி - ள்)

வெள்ளைக் குன்றி மணியை ஊறவைத்து, மேல் தோலைப்போக்கி விட்டு உள்ளிருக்கும் பருப்புடன், புளியங் கொட்டைத் தோலும் சேர்த்து, அத்திப்பாலும் சேர்த்து வெண்ணெயுடன் சேர்த்து உட்கொள்ளவும்.

வெள்ளை விற்கும், நீர் சுருத்தல், கழிச்சல் முதலான நோய்களும் தீரும்.

### பெரும்பாட்டிற்கு "நாவல் மருந்து"

நேராகும் நாவல்தோல் நின்ற வொதியந்தோல்
சுபராகவே குடிநீர் செய்து விட்டுச் — சீராக
ஆவினெய் பால் மதுரங் கரைத்துப் பாகமிட்டுண்
தேவி பெரும்பாடு விட்டுச் செல் (74)

(தி - ள்)

நாகப்பட்டை ஒதியம்பட்டை

இவ்விரண்டையும் வகைக்கு 1 பலம் எடுத்து, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ⅛ ஆக வற்றக் காய்ச்சி வடிக்கட்டி,



| | |
|---|---|
| பசுவின் பால் | 1 படியும் |
| பசுவின் நெய் | 1 ,, |

இவைகளையும் சேர்த்து, அதிமதுரம் 1 பலம் எடுத்து தூள் செய்து போட்டு அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும்.

ஸ்திரீகளுக்கு உண்டாகும் பெரும்பாடுகள் தீர்கும்.

### விப்புருதிக்குத் "திரிபலாதிக் கிருதம்"

செல்லாத விப்புருதி சேர் திரிபலை
சொல்லு மெனக்காய்ச்சி வடித்துப் பிழிந்து—நில்லுமென்க
முன்சொன்ன பூ வரைத்து முந்துநறு நெய் பாலின்
யன்புடனே காய்ச்சி யருந்து (75)

(தி - ள்)

கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
தான்றித்தோல்

இம் மூன்று மருந்தையும் வகைக்கு 1 பலம் வீத மெடுத்து இடித்துத் தண்ணீர் விட்டு அரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் நெய் | 5 சேர் |
| பசுவின் பால் | 5 சேர் |

விட்டுக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சியபாலுடனே உட்கொள்ளவும்.

விப்புருதிகள் (கட்டிகள்) தீரும்.

A siddhadreams ebook

## கெர்ப்பவிப்புருதிக்குக் "கள்ளிப்பால் நெய்"

அருந்தும் பொழுதே கெர்ப்பவிப்புருதி யாறுமாம்
திருந்து நறுநெய் நாழி சேர்த்திடவாம் — வருந்து
கள்ளிப்பாலுழக்குச் சற்றே பழம்புளியும் வார்த்திடவாம்
சேலையொத்த கண்ணும்! பதஞ்செற்று (76)

(இ - ள்)

| | |
|---|---|
| பசுவின் நெய் | 5 சேர் |
| கள்ளிப்பால் | 1 உழக்கு |

இவ்விரண்டையும் ஒன்று கலக்து, பழம்புளி 1 பலம் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் 1 ஸ்பூன் அளவெடுத்துப் பாலுடன் உட்கொள்ளவும்.

ஸ்திரீகளுக்கு உண்டாகும் கெர்ப்ப விப்புருதிகள் நீங்கும்.

பேதி அதிகமானால் மருந்தின் அளவைக் குறைத்து விடவும்.

## வாதத்திற்குக் "கள்ளியெண்ணெய்"

செற்றிருந்த வாதஞ் சிதற மருந்துரைக்கில்
லெற்றுமிலைக் கள்ளியெருக் கஞ்சாற்றில் — வீற்றிருந்
தாண்டு துடவேரரைத்து நேருமெண்ணெய் காய்ச்சி
லாண்டு விடுமென்றே யறி (77)



(இ - ள்)

| | |
|---|---|
| இலைக்கள்ளிச்சாறு | 1 படி |
| எருக்கஞ்சாறு | 1 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

இவைகளை யொன்று கலக்து, துடரி வேர் ஒரு பாக்களவெடுத்து அரைத்து குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயை உள்ளுக்குங் கொடுத்து மேலும் பூசவும்.

எப்பேர்ப்பட்ட வாதநோய்களும் தீரும்.

## மூலத்திற்குப் "பிரண்டைச் சூரணம்"

அறியும் பிரண்டை மகிழ் ஆனைமணத்தாளுஞ்
செறியும் புளியாரை சேர் கொடிவேல் — குறுகும்
பொடியா மக்கரம் போற்றுமென்னெய் நெய்தேன்
திடாமா மூலமெருஞ் சேர் (78)

(இ - ள்)

| | |
|---|---|
| பிரண்டை | மகிழம்பட்டை |
| மணித்தக்காளி | புளியாரை |
| கொடிவேலி வேர் | |

இவைகளைச் சரியளவெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதற்குச் சரியளவு சீனி சேர்த்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

நெய், எண்ணெய், தேன் இவைகளில் ஏதேனும் ஒன்றுடன் சேர்த்துக் குழப்பி உட்கொள்ளவும்.

மூலச்சூடுகள் தீரும்.

## காது எழுச்சிக்கு " எருக்கிலை எண்ணெய் "

சோர வெருக்கிலைச்சாறு சேர்ந்தெண்ணெய் சுக்குள்ளி
கூறும் வசம்பு முத்துங் கோஷ்டம் — நேராக
விந்துவுடன் திப்பிலியும் ஏற்க வடிகாதிலிடு
உந்திவிடு மெழுச்சிக் குரை (79)

(தி - ள்)

| | |
|---|---|
| எருக்கிலைச்சாறு | 1 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

இவைகளைச் சரியளவு சேர்த்துக் கலந்து,

| | |
|---|---|
| சுக்கு | பூண்டு |
| வசம்பு | கொட்டைமுத்து |
| கோஷ்டம் | இந்துப்பு |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துப் பொடி செய்து போட்டுக் காய்ச்சி வடிக்கவும்.

இந்த எண்ணெயைக் காதுகளில் விட்டு வரவும். எழுச்சிகள் தீரும்.



## சந்நி, பூதத்திற்கு " வசம்பு எண்ணெய் "

உரையுங் வசம்புள்ளி யுற்ற கடுகுங் காயம்
திரையும் பாம்புகண்டம் பூணகம் — கரையும்
மரைத்துவடி வேப்பெண்ணெ யானசந்நி பூதந்
தூரத்தி விடும் பூசவுட் கொள்தானும் (80)

(தி - ள்)

| | |
|---|---|
| வசம்பு | பூண்டு |
| கடுகு | பெருங்காயம் |
| பாம்புக்கண்டம் | மண்ணுண்ணிப்பாம்பு |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்,

வேப்பெண்ணெய் 1 சேருடன் கலக்கி யடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தை உள்ளுக்கு 1 ஸ்பூன் கொடுத்து, மேலேயும் பூசவும்.

சந்நிகள், பூதம் முதலானவைகளும் தீரும்.

## அதிஸாரத்திற்கு " மாதளைவித்து மருந்து "

தூறுமா முழுகங் கெட்டோ மருந்துரைக்கில்
லாறுமா மாதளையின் வித்தரைத்து — கூறுமா
மான்பாலில் கொள்ள வகலும் பதினெட்டுந்
தேன்பாகுஞ் சேர்மொழியாய்த் தேர்ந்து (81)

A siddhadreams ebook

(கு - ள்)

மாதுளை வித்தைப் பசுவின் பாலுடன் அரைத்து (1 பலம்) உட்கொள்ளவும்.

18 வகை அதிசாரங்களும் தீரும்.

(ஆக கவி 1844)

## பதார்த்த குண வர்க்கம்

### கடுக்காய் உத்பத்தி

ஓதங்கடைந் தமிர்த மும்பர்க்குண வளித்துப்
பேதமற்றுகரும் பேர்முதலாய் — நீதியாய்த்
தேதித் தெரித்ததுளி ஆமேழ் கடுக்காய் மட்
டத்ததோய் தணிக்கும் வந்து (1)

(கு - ள்)

பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து எழுந்த அமிர்தத்தைத் தேவர்களுக்கு இடும்போது, வெளியே தெரித்து விழுந்த அமிர்தத் துளிகளிருந்து எழுவகைக் கடுக்காய் மரங்கள் உண்டாயின.

உலகத்தில் ஏற்படும் எல்லா நோய்களுக்கும் மருந்தாகும்.

### 7 வகை கடுக்காயின் பெயர்

விசையரோகிணி மேலாம் பிரதமை
அசையா வமுதஞ் சிவந்தி — விசையுந்



திரியபயன் சிறந்த பேரேழாய்
வசையின்றி நின்ற வந்து (2)

(கு - ள்)

விசையன், அரோகணி, பிரதமை, (பிசிநிவி) அமுதம், சிவந்தி, திரிவிருத்தி, அபயன் என்று எழுவகைப் படும்.

### விசயன் கடுக்காயின் குணம்

விசைய னெனும் கடுக்காய் மேவுங் குணந்தா
னசையாத வாத மகற்று — மிசையாத
பேய்ச்சுரைக்காய் போன்றிருக்கும் பெய்வளைமீர் கண்டக்கா
லாய்சுரைக்காய் வேண்டாமது (3)

(கு - ள்)

விசையன் என்ற வகைக் கடுக்காய் பேய்ச்சுரையின் வடிவத்தைப் பெற்றிருக்கும்.

வாத நோயைத் தீர்க்கும்.

### அரோகிணிக் கடுக்காய்க்குணம்

ஓது மரோகிணிதான் ஒன்றாக நால்வரியாய்
காதிவரும் சீதமதும் காணலாம் — நீதியினும்
சித்தமொருமாஞ்சீவ னிலைநிறுத்தும் தேன்மொழியாய்!
உத்தமமாய் கண்டமுரை (4)



A siddhadreams ebook

(கு - ரை)

அரோகிணி என்ற வகைக் கடுக்காய் 4 பிளவு களுள்ளதாக இருக்கும்.

சேதனத்தை மாற்றும். உயிரையும் நிலைநிறுத்தக் கூடியது. மிகவும் குணமுடையது.

---

### பிரதமைக் கடுக்காயின் குணம்

தோற்றும் பிரதமை தான்தோல் சிறுகி புள்சதையாய்
மாற்றும் வயதளிக்கும் மானனையீர் ! — போற்றுங்கால்
சிக்கிலம் வந்துதிக்குந் துடியிடையீர்க் கொண்டக்கால்
நீக்கும் மலம்போமே நிகழ்ந்து (5)

(கு - ரை)

பிரதமை என்ற வகைக்கடுக்காயின் தோல் மெல்லி யதாகவும், சதைப்பற்றுள்ளதாகவும் இருக்கும்.

இதனை யுட்கொண்டால் வயது அதிகரிக்கும். தாது புஷ்டியையும் கொடுக்கும். மலச்சிக்கலும் நீங்கும்.

---

### அமுதம் என்னும் கடுக்காயின் குணங்கள்

அமுதமெனும் கடுக்காய் அதனின் குணந்தான்
குமுதமெனு மானனையீர் கூறக் — கமுதமாய்த்
தோற்றுஞ் சதைபெரிதாய்த் தொல்புவியோர் கொண்டக்கால்
சேற்றுமங்கள் போமே தெளிந்து (6)



சதைப் பற்றுள்ளதாக இருக்கும்.

இதனை உபயோகித்தால் கபங்கள் நீங்கும்.

---

### சீவந்திக் கடுக்காயின் குணம்

சீவந்தி யென்னும் கடுக்காய் நிறமுரைக்கில்
பாவகநூல் வல்லோர் பகருங்கால் — ஆயவந்த
பொன்னிறமே மாயிருக்கும் போகாத மூலத்தைப்
பன்னியமே யாக்குமது (7)

(கு - ரை)

இதன் நிறம் பொன்னைப் போன்றிருக்கும்.

மூலத்தைப் போக்கக் கூடிய சக்தி வாய்ந்தது.

---

### திரிபாதை (த்ரிவ்ருத்) என்ற கடுக்காயின் குணம்

முந்துந் திரிபதைதான் மூணுவரியாயிருக்கும்
கொந்தலரும் பூங்குழலாய்க் கொள்ளைக்கால் — வந்த
விரணங்களெல்லாம் விடுவிக்கும் மேலே
மரணந் தவிர்க்குமே வந்து (8)

(கு - ரை)

இதன் மேல் 3 வரிகள் இருக்கும்.

இதனை உட்கொண்டால் விரணங்கள் நீங்கும். மற்றும் ஆயுளையும் விருத்தி செய்து மரணத்தைப் போக்கும்.

---

A siddhadreams ebook

## அபயன் கடுக்காயின் குணம்

கண்டாலபயன் கடுக்காய் கறுத்திருக்கும்
கொண்டாலதன் குணத்தைக் கூறுங்கால் — பண்டாருஞ்
சாற்றுகின்ற நோய்கள் பல தப்பாம
லாற்றி விடுந் தண்டாயது (9)

(இ - ள்)

இது கறுநிறமாயிருக்கும்.

தேகத்திலேற்படும் பற்பல நோய்களுக்கும் குண முண்டாகும்.

அடுத்த செய்யுளைப் பார்க்கவும்

## கடுக்காயின் பொதுக் குணம்

கடுக்காய் துவரச் சுவாசமுடன் காச
மடுக்காகும் பீலிகை மாறுக — மிடுக்காம்
பெருந்துடையில் வாதம் பெருகுங்குணம் வாய் நீ
ரருந்து மரோசிகம் போமாங்கு (10)

(இ - ள்)

சுவாசம், காசம், பீலிகை, பெருந்துடையில் சேரும் வாதம், வாயிலிருந்து நீர் வடிதல், அரோசகம் முதலா னவை நீங்கும்.

## கடுக்காய்க்கும், தாயாருக்கும் உள்ள பேதம்

கடுக்காயுந் தாயுங் கணக் கொக்கும் கண்டீர்
கடுக்காயோ வன்றதிகம் — மடுக்காயோ



வன்பிணியைத் தீர்க்குமருந்தாகு மாதாவோ
வென் செய் வேனென்றி ரங்குவாள் (11)

(இ - ள்)

கடுக்காயும், தாயாரும் சரிசமானமாகவே இருந்தா லும் கடுக்காய் கொஞ்சம் சிறப்புடையது. கடுக்காயோ வெனில் உட்கொண்டவனின் நோயைத் தானாக தீர்க் கும் சக்தி உள்ளது. தாயாரோ, நோயைப் பார்த்து நான் என் செய்வேன் ? என்று வருந்துவாள்.

குறிப்பு :

அகஸ்தியர் குண வாகடத்தில்

கடுக்காயுந் தாயுங்கருதி லொன்றேன்றாலும்
கடுக்காய்த் தாய்க்கதிகங் காண் நீ — கடுக்காய் நோய்
ஓட்டியுடற் றேற்றும் உற்றவன்னையோ சுவைகள்
ஊட்டியுடற் றேற்று முவந்து

என்று காணப்படுகிறது.

## பாகலின் குணம்

கார வல்லியின் கொடிதான் கண்டமட்டில் தோஷம்
போம் பன்றிக் காய்முறிப் பாஷாணந் — தூரத்
தூரத்தி விடுமே பழந்தான் சொல்லரிய மேகம்
விரத்தரைப்போ லாசை விடும் (12)

(இ - ள்)

திரிதோஷங்களை நீக்கும். பாகல்கொடி, காயோ பாஷாணங்களை முறிக்கும் சக்தி வாய்ந்தது.

பழம் — கிரிமி (மேகம்) யைப் போக்கும்.

A siddhadreams ebook

## கத்தரிக்காயின் குணம்

கத்தரிக்காய் பித்தங் காக்கும் கனிந்தபழம்
முற்றிவரு மய்யமுறிந்து போம் — முற்றுமுன்னே
பிஞ்சான கத்தரிக்காய் பேசுந் திரிதோஷ
மஞ்சியே போகு மகன்று (13)

(கு - ரை)

கத்திரிக்காய் — பித்தத்தை யதிகரிக்கும்.

கத்திரிப்பழம்— கபத்தைக் குறைக்கும்.

கத்திரிப்பிஞ்சு – திரிதோஷ சமனம் அளிக்கும்.

## இதுவுமது

பண்டு மாண்டக் கிரந்திகள் வந்திடு
முண்ட விட்டகை தினவுமுண் டாக்கிடும்
தண்டு கட்டுங் குரங்கது வாய்விடும்
கண்டு விட்டது கத்திரிக் காயதே (14)

(கு - ரை)

கத்திரிக்காயை யதிகமாக உபயோகித்தால் கிரந்தி, அரிப்பு முதலானவைகளை யுண்டாக்கும்.

## திராக்ஷையின் குணங்கள்

முந்திரிகைக் கனிமுந்தாது மந்தமாம்
கந்தமலர் குழலாய்க் கண்ணுக்காம் — வந்து



காக்கு மிகுதாப சோபமகன்று காக்கும்
பிரமேகம் போகுங் காண் (15)

(கு – ரை)

திரிதோஷ சமனம் செய்யும் – கண்களைச் சுற்றிய வீக்கம், காங்கை, உடல் வீக்கம் முதலானவைகளை நீக்கும். பிரமேகமும் தீரும்.

## அதிமதுரம், பேரிச்சம்பழம் இவைகளின் குணம்

அதிமதுரம் பேரிச்சக் கனி குணந்தான்
கோதி மருவாய்ப் பித்தங் குறுகாத்—துதி மருவாய்
நீரது வுண்டாம் நிலையாகத் தாபம் போம்
பாரறியச் சொன்னேம் பகர் (16)

(கு - ரை)

பித்தத்தைச் சமனப்படுத்தும் – தேகத்திலுள்ள காங்கையைத் தணிக்கும்.

## மாங்காய், நெல்லிக்காய் இவைகளின் குணம்

மாங்காய்க்கு வாடென வன்கிரந்தி யுண்டாகும்
தாங்காது தீபனமுந் தான்போக்கும் — நீங்காதே
நெல்லியின் காய்க்கு நேரறியச் சீதளமாய்ச்
சொல்லும் பிரமேகம் போஞ்சொல் (17)

(கு - ரை)

மாங்காய் பொதுவாகக் கிரந்தியை யுண்டாக்கும்.

A siddhadreams ebook

பசியை மந்திக்கும்.

நெல்லிக்காயினால் சீதளம் அதிகரிக்கும். பிரமேக ரோகங்கள் தீரும்

## பசுவின் பாலின் குணம்

சிறுகாலைக் கறந்த பாலினைப்புத் தீர்க்கு
முறுகாலைத் தீபனமுண்டாகும் — மிறுகாலை
தாதெழும்பு மென்றேன் தப்பாதுலகறியப்
போதருந்து மாமாலைப் போது (18)

(இ - ள்)

காலையில் கறந்த பாலையுட் கொண்டால் இளைப்புத் தீரும். சாயங்காலத்தில் கறந்தபால் பசியைத்தரும். சாயங்காலத்திலும் பாலை அருந்தலாம்.

## கறந்த பாலின் குணம்

பகல் கறந்தபால் பலமும் பாலனுக்கும் விருத்தன்
விகற்பற அயர்போக்கும் விட்டே — சகத்தில்
மிகுசீதளமா மெய்யினுக்குச் சேராதுட் காய்ச்ச
லனல் தாதவிழும் பூங்குழாய்ச் சாற்று (19)

(இ - ள்)

உடலுக்குப் பலத்தையளிக்கும். கிழவரும் வாலிபராவர். அயர்ச்சியை நீக்கும். குடலில் சீதளம் சேராது உட்காய்ச்சல் நீக்கும்.



## இரவில் பால் சாப்பிடுவதன் குணம்

இரவில் பால் கண்ணிலெழு நோயகற்றும்
பஃறீமுமாய் நோய்தணியப் பார்க்கும் — காதல் மே
லத்திலும் பன்னவிழி யாயிழையே! மாந்தர்க்குப்
பத்தியமா மென்றே பகர் (20)

(இ - ள்)

இரவில் பால் சாப்பிடுவதனால் கண்ணோய்கள் அகலும். பற்பல தேக நோய்களையுஞ் சமனஞ்செய்யும். பத்தியமான ஆகாரம்.

## பாலாடை (ஏடு) யின் குணம்

பாலாடை பித்தமொடு சத்திபோம் பண்பாக
மாலாடை மூர்ச்சை போமாம் பலனுறும் — மேலாடை
தாதுமிகு தீபனமா மென்றே தனித்தவர்க்கு
போதமையா மாதே புகல் (21)

(இ - ள்)

இதனை உட்கொண்டால் பித்தம், வாந்தி, மூர்ச்சை முதலான ரோகங்கள் தீரும். பசியை விருத்தி செய்யும்.

## ஆடைத் தயிரின் குணம்

ஆடையது வாங்குந் தயிர்பின் விளையுறுக்கு
தாடிவரும் கிரிச்சம் தாட்டாது — தேடிமிகு



A siddhadreams ebook

மீண்டுங் கிரானியே மிலமேகந்தான் போக்கும்
தாண்டுங் கயற்கண்ணாய்! சாற்று (22)

(கு - ள்)

காளாவட்டத்தில் சிரமத்தை யுண்டாக்கும் கிரிச்ரம் (மூத்ர கிரிச்ரம்) நீக்கும். கிராணிக் கழிச்சலுக்கும், பிரமேகத்திற்கும் இதமளிக்கும்.

## பசுவின் பாலின் குணங்கள்

நெய்யருகிற் கண்குளிரும் நீழ்சுக்கில முண்டாம்
வெய்யபசி யுண்டாய் விடும் பித்தம் — மொய் குழலா
யுன்வெக்கைப் போக்கு முயிரை நிலை நிறுத்துங்
கொள் வித்தன் பால்குணம் (23)

(கு - ள்)

கண்கள் குளிர்ச்சியாகும். சுக்கிலத்தை அதிகரிக்கும். பசி யுண்டாகும். பித்த ரோகங்களைச் சமனம் செய்யும். தேககாங்கையை நீக்கி, உயிரை நிலைநிறுத்தும். இவைகளும் பசுவின் பாலின் குணங்களாகும்.

## நெய்யின் குணம்

நெய்யதனிற் குணமேதன்னில் நைப்பொடு குளிர்ச்சியுண்டாம்
செய்யகண் புருவம்நெற்றி சிற்கதீழ் வலிப்பும் போகு
மெய்யெல்லாங் கழையுண்டாகும் விழிதனிலொளி யுண்டாகும்
மைய பொத்திறமே யாகும்பத்திய நோய்கள் போமே (24)



(கு - ள்)

உடலில் மினுமினுப்பைத் தரும். குளிர்ச்சியுண்டாக்கும். கண், புருவங்கள், நெற்றி முதலான உறுப்புக்களுக்கு வலுவைத்தரும். வலிப்பை நீக்கும். சரீரத்தில் வனப்பு மிகும். விழிகளின் பிரகாசம் அதிகரிக்கும். சரீர காந்தியும் பொன்னிறமாகும். மற்றும் பல நோய்களும் அகலும்.

## இதுவுமது

புத்திதரும் மெய்யழகு போதந்தரு நயனம்
மெத்த வெளியுண்டாய் விடும்பித்தம் — சத்தியமே
வாதமுட னய்யம் வறட்சியும் போம் மாதுநல்லாய்!
கோதில்லா நெய்யின் குணம் (25)

(கு - ள்)

புத்தி கூர்மையைத் தரும். மேனியின் அழகும் அதிகரிக்கும். கண்கள் பிரகாசிக்கும். பித்தமும் குறையும். வாதமுடன், கபமும் நீக்கும். வறட்சியும் தீரும்.

இவைகள் சுத்தமான நெய்யின் குணங்களாகும்.

## தேத்தான் வித்தின் குணம்

தேத்தான் வித்தின் குணந்தனைத் தெளிந்து நான்
சாற்றிடும்படி கேட்டிடுத் தையலே! — ஆற்று மித்த

A siddhadreams ebook

பிரமேக மடங்கலும் போந்துவர் கண்ணின்
திரிதோஷம் போக்குமே தான் (26)

(இ - ள்)

பிரமேகம் நீங்கும் கண்களிலேற்படும் திரிதோஷங்களும் தீரும்

## கிராம்பின் குணம்

தேவதாள புட்பகிராம் பைத்தினங் கொள்ளில்
தேவதாள வந்து தெரிசிப்பார் — தேவதாதி
எங்கே தரனென்றே மாந்திருப்பனே
பங்கே தகைமுத்தைப் பார்த்து (27)

(இ - ள்)

கிராம்பைத் தினம் உட்கொண்டாலும் தேவர்களும் அநுகூலம் செய்வார்கள்.

## சீரகத்தின் குணம்

வாயுவடையாது வந்தபிணி சேராது
காயம் நெகிழாது கண்குளிருமே — ஓயாமல்
காரளகப் பெண்மயிலே! கைகண்ட நித்தனையுஞ்
சீரகத்தைத் தின்னத் தினம் (28)

(இ - ள்)

தேகத்தில் வாயு நீரும். நோய்கள் வாராது - உடல் தளராது. கண்களில் குளிர்ச்சியுண்டாகும் - இவைகள் சீரகத்தைச் சாப்பிடுவதாலேற்படும் குறிகளாகும்.



## சுக்கின் குணம்

சுக்குமிகத் தாதுவாம் சொல்லரிய தீபனமா
மிக்கவரு மாமம்போ மெல்லி நல்லீர் — தக்கதொரு
மூக்குநீர்ப் பாய்ச்சல் போம் மூலரோகத் திரெடு
தாக்குந் தாதோஷம் போகுந்தான் (29)

(இ - ள்)

தாது புஷ்டியளிக்கும் தீபனம் உண்டாகும். ஆமம் போகும். மூக்கு ஒழுகுதல், நீர்ப்பாய்ச்சல், மூல ரோகம் தீரும்.

## இஞ்சியின் குணங்கள்

இஞ்சிக்கு வாத மிருமலது தோற்றது
வஞ்சிக்கு சோபமது மாந்திவிக்கு — மிஞ்சவரு
சூலைசய ரோகமது தோற்றது சொல்லுங்கால்
வேலனையக் கண்ணாய்! விதி (30)

(இ - ள்)

வாதம், இருமல் இவை நீங்கும் - உடல் வீக்கம் மாறும். சூலை, க்ஷயம் முதலான ரோய்கள் தீரும்.

## பொன்னாங்காணிக் குணம்

பொன்னாங்காணிக் குணந்தான் போம் பீலிகை தீபனமாங்
கண்ணாகங் காந்திதரும் காணுங்கால் — முன்னாக.

A siddhadreams ebook

மூலரோகந்தான் முயலாது கண்ணிறே
காலில் வாழ் வாதமும் போங்காண் (31)

(இ - ள்)

பீலிகை, (வயிற்றுக் கட்டி) நீரும். பசிகொடுக்கும், கண்களில் பார்வை யதிகரிக்கும். மூல நோயும் குண மாகும். காலிலேற்படும் வாயுவும் தீரும்.

### மாங்கனியின் குணம்

வேதசத்திய மாக விளம்பிறேந்
தாதுவத்திக்குந் தம்பனமாங் கனி
போகும் வத்திக்கும் புண்காயம் வாடு
வாதபித்தச் சிலேற்றும மாற்றுமே (32)

(இ - ள்)

தாது புஷ்டியளிக்கும். போகம் அதிகரிக்கும். புண் காயம் முதலானவைகளும் தீரும். வாத பித்த கபங்களும் சமனமடையும்.

### சாறணை வேரின் குணம்

காதமங்கை மடவீர்! கண்டங்கா லெழுந்து
பாதங்கழுவிச் சாறணைவேர் பச்சை தின்னச்—சீதங்
காசம் சிறிதேமல் சிரங்கு குஷ்டம் தழுதளை நோய்
வாதங் காதங் காதமரைப் போமற்றும் பிணிகள் வாராதே (33)

(இ - ள்)

அதிகாலையில் எழுந்து காலை நன்றாகக் கழுவிச் சாறணை வேரைப் பிடுங்கிப் பச்சையாகத் தின்னவும்,



சீதம், காசம், தேமல், சிரங்கு, குஷ்டம், தழுதாளை நோய், வாதம் முதலான வியாதிகள் தீரும்.

### மோரின் குணம்

உண்டியருப்பனவும் முன்பது நோய் தீர்ப்பனவுந்
தண்டு போல நின்றுடலைத் தாங்குவதுந்
துண்ட மறவார் கொடவார் கொடவார் வென்றும்
வன்முலையீர்
மோர் கொள்வார் மோர்கொள்வார் மோர் (34)

(இ - ள்)

சாப்பாட்டைச் சீரணிக்கும். பற்பல நோய்களையும் தீர்க்கும். உடலையும் தாங்கும் சக்தியை யளிக்கும். இவை மோர் சாப்பிடுவதனுலேற்படும் குணங்களாகும்.

### தேக ஆரோக்யத்தைப் பேணும் நெறிகள்

தின்னவிரண்டுமடக்காமற் சிக்காமற்
பெண்ணின்பா லாசை பெருக்காமல்—உண்ணுங்கால்
நீருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பார்தம்
பேருரைக்கப் போமே பிணி (35)

(இ - ள்)

மல மூத்திரங்களை அடக்காமலும், ஸ்திரீகளிடம் அதிகமான ஆசையை வைக்காமலும், சாப்பிடும் போது நீரைக் கொதிக்க வைத்தும், மோரை விளாவியும், நெய்யை உருக்கியும் உண்டு வந்தால், தேகத்தை வருத் தும் பற்பல பிணிகள் போம்.

A siddhadreams ebook

## கொள்ளின் குணம்

சொல்லுங் கொள்ளருசி களிருமல் தோளுது
மல்லிய வஞ்சி மருதமாந் — தொல்லுலகி
லய்யமிகு தாப மகத்திவிக்கு மப்பொழுதே
தைய நல்லாய்! மாந்தர்க்கிது தான் (36)

(இ - ள்)

கொள்ளை உட்கொள்ளுவதனுல் அருசி, இருமல் இவை தீரும். தேககாங்கையை நீக்கும்.

## நெல்லிக்காய், அருநெல்லிக்காய் இவைகளின் குணம்

நெல்லிக்காய்தான் குளுர்ச்சி நீள்புளிப்பு வாதம்போம்
சொல்லில் துவர்தான் துரிசறுக்கும் — நல்லாய்
யருநெல்லிதாக மகற்றுமது மல்லாமற்
றரியா திருமலென்று சாற்று (37)

(இ - ள்)

நெல்லிக்காய் குளிர்ச்சியைத் தரும். புளிக்கும். வாத நோய்கள் நீக்கும். துவர்ப்பு சுவையும் உண்டு.

அருநெல்லிக்காய் தாகத்தைத் தீர்க்கும். இருமலும் போம்.

## ஊர்க்குருவி மாம்ஸத்தின் குணம்

மருவிய அய்யம்பித்தம் வாதமுஞ் சமமுந்தீரு
பெருகிய போகமுண்டாம் பிறகிடு பிளவை மீளும்



கருகிய மேனிநீங்கிக் காயமு மொளிவுண்டாகு
முருவமுந் திறமேயாகு மூர்க்குருவிச் சாறுண்ணே (38)

(இ - ள்)

கபம், பித்தம், வாதம் முதலான திரிதோஷங்களும் சமனமடையும். ஜ்வரம் நீங்கும். தாதுபுஷ்டியைத்தரும். பிளவைக்கும் நல்லது. கருநிறமான தேகத்திற்குக் காந்தி உண்டாகும். உருவமும் வனப்புள்ளதாக ஆகும்.

இவை ஊர்க்குருவியின் குணங்களாகும்.

## காடை மாம்சத்தின் குணம்

வற்றிய உடம்புண் டென்றும் வாதபித்தந் தான்தீருஞ்
சுத்திய கிராணிகுன்மஞ் சூழ்பல சுவாசகாசம்
முற்றிடுங் கண்ணும் புண்ணு முறுபிணியோடிப் போகும்
போற்றிடுங் காடைச்சாறு பிராணனுக் கழகா மென்னே (39)

(இ - ள்)

இளைத்த உடம்பு பெருக்கும். வாத பித்தங்கள் நீங்கும். கிராணி, குன்மம், சுவாசகாசம், கண்நோய், புண்கள் முதலானவை நீங்கும். பிராணனுக்கும் ஹிதமானது.

## சிவலிறைச்சி அதாவது கவுதாரி யிறைச்சியின் குணம்

சிவலிறைச்சிப் பித்தமது சேத்துமத்தை மாற்றும்
அவமத்த பத்தியமு மாகும் — புவியுள் நல்லீர்
ள

A siddhadreams ebook

வீங்கு பலனென்னு விதிப்படியே வித்தனேயு
மொங்கு கவுதாரிக் குரை (40)

(ூ - ள்)

சிவலின் இறைச்சி, பித்தம், கபம் முதலான தோஷங்களைச் சமனம் செய்யும். பத்தியத்திற்கு நல்லது.

கவுதாரி மாம்ஸம் பலத்தைத் தரும்.

## கரும்புச்சாறு, சர்க்கரை, வெல்லம் இவைகளின் குணம்

கரும்பினில் ரசத்தைக் கொள்ளில் கபமறுங் காய்ச்சு வெல்லம்
விரும்பியே கொள்வீராகில் மேகத்திற்காகா தென்னுங்
கரும்பு சர்க்கரையைக் கொண்டால் சாந்தமாய் பசிகள்தானுங்
கரும்பெனும் விழியினளே! சோதினைக் கண்டதாமே (41)

(ூ - ள்)

கருப்பஞ் சாற்றை யுட்கொண்டால் கபம் நீங்கும்.

வெல்லத்தை விரும்பிச் சாப்பிட்டால் மேகரோகம் அதிகமாகும், கருப்பஞ் சர்க்கரைப் பசியை மந்திக்கும்.

## கரும்பின் குணம்

செங்கரும் பதனிற்சாறு சேர்ந்திடும் பித்தரோக
மங்கில்ரஸ் தாளிதானு மகன்றிடும் தாபமெல்லா



மிங்கிவை புல்லக்கண்ட னேகிடும் வாதங்கண்டாய்
கங்குல் நேர் விழியினளே! கரும்பினிற் குணங்கள்
தாமே (42)

(ூ - ள்)

செங்கரும்புச்சாறு பித்தரோகத்தை யுண்டாக்கும், ரஸ்தாளிக் கரும்புச்சாறு தேககாங்கையை நீக்கும். புல்லக்கண்டன் என்ற வகைக் கரும்பின் சாறு வாத ரோகங்களை நீக்கும்.

## நல்லெண்ணெயின் குணம்

எண்ணெயிற் குணமேதென்னி னிளமையுமொளி வுண்டாகும்
கண்ணினிற் விழியும் நோயுங் காசமுங் கனிவுமற்றும்
புண்ணினிற் நோவுபோக்கும் புனித்தடற் பொறிவுமாறுந்
திண்ணிய கயமுங் காத்துஞ் சிரசினில் ரத்தம் போமே (43)

(ூ - ள்)

தேகத்தில் இளமையும், ஒளியும் கொடுக்கும். கண்களில் ஏற்படும் நோய்களும், விழி நோய்களும், காச ரோகங்களும் மாறும். புண்ணில் இருக்கும் வலியைத் தவிர்க்கும். புண்களில் ஏற்படும் சதை வளர்ச்சியையும் குறைக்கும். கபத்தை நீக்கி, சிரசினிலிருந்து (மூக்கிலிருந்து) வெளியாகும் ரத்தம் நீங்கும்.

## ஆமணக்கெண்ணெயின் குணம்

ஆமணக்கெண் ணெய்தன்னை யாதலமறியக் கேள்பின்
பூமணச்சந்து தோறும் பொருந்திய வாதம் போக்கும்

A siddhadreams ebook

சீமணத் தாளும் வாராதிகழ்வுடன் விரைய முண்டாத்
நீமணக் குடலில் வாதஞ் சேர்குடல் ரத்தம் போமே (44)

(இ - ள்)

மூட்டுகளில் தங்கும் வாதம் தீரும். குடல் வாதம், குடலிலிருந்து ரத்தம் வெளியாதலும் நிற்கும்.

## அபத்திய, பத்திய பதார்த்தங்கள்

மானே! கேளாய் வயரொழுகி மருந்து தின்வாராமாகில்
கானே திரியுமூர்க்குருவி காடையுடும்பி சிவலாமை
தானே யாருமு யவில்தரித்த குளத்திற் கருவாடா
மீனே தின்பா ராமாகில் மீண்டநோயும் வெகுவாமே (45)

(இ - ள்)

ஊர்க்குருவி இறைச்சி, காடை, உடும்பு, சிவல், ஆமை, முயல் முதலானவைகள் இறைச்சி பத்தியமாகும்.

மீன், கருவாடு இவைகள் அபத்திய பதார்த்தங்களாகும்.

## கிராணிக்கு மருந்துகள்

அத்திப் பிஞ்சுங் கருவாழை யதனின் பிஞ்சும் பூவாகும்
கத்திரிப்பிஞ்சு மூர்க்குருவி காடையுடும்பு சிவலாமை
சுத்தி கிராணிபோங் கழிஞ்சு சொன்னார் மருந்தருந்தில்
புத்தி யுடனே யிவையருந்தப் பொல்லாப் பெல்லாம்
போந்தானே (46)



(இ - ள்)

அத்திப்பிஞ்சு, கருவாழைப் பிஞ்சு, கருவாழைப் பூ, கத்தரிப் பிஞ்சு, ஊர்க்குருவி, காடை, உடும்பு, சிவல், ஆமை இவைகளின் இறைச்சி முதலானவைகள் கிராணிக்கு ஹிதமானது.

## பத்திய பதார்த்தங்கள்

வேண்டிய மருந்துண்போர்க்கு விராலொடு குறவை தேளி
மாண்டிடு மயிரைசன்னே யவற்றெடுகருவு மாகு
மீண்டிடு மிருநெய் தோலி இவையின்மீ னருந்தல்சாகு
மீண்டிவை யுலர்ந்த தாகும் விரைமலர்க் குழலினளே! (47)

(இ - ள்)

விரால் மீன், குறவை, மயிரசன்னே, சுறு இவைகளின் கருவாடு பத்தியபதார்த்தங்களாகும். செய்யும் சேர்த்துக் கொள்ளவும்.

## நீராகாரத்தின் குணம்

வாதபித்தச் லேத்துமத்தை மாற்றிவறட்சிக் கெடுந்தாது
தாதுமெத்த வர்த்திக்குந் தாகமும் போம் — மாதுநல்லாய்
வாராகாரம் பெருகும் வாய்மதுர முண்டாகும்
நீராகாரச் சோற்று நீர் (48)

(இ - ள்)

வாத, பித்த, கபம் என்ற திரிதோஷங்களையும் சமனம் செய்யும் வறட்சியை நீக்கும். தாதுபுஷ்டியுண்டாகும். தாகம் தீரும். பசியைத் தூண்டும். வாய்

A siddhadreams ebook

இனிக்கும். இவை பழைய அமுதின் நீராகாரத்தின் குணங்களாகும்.

---

## தாம்பூலத்தின் குணம்

ஒதுகின்ற கஷாயத்தில் நல்லதாமுதா சுத்தி
   தருங் கிருமி நாசமாம்
வாதபித்தத் தம்பனத்துக்கு நல்லாதா மதனக்
   கொட்டியும் மலத்தை யறுத்திடுந்
தாதுவர்த்திக்குந் தாகமுந் தீர்ந்திடு தாவியேவரு
   சோபந்த விர்த்திடு
வாதுசெய்திடும் தாம்பூலச் சேர்வையை
   நத்ததன் முனி மட்டினில் தின்னவே (49)

(இ - ள்)

கஷாயரஸம் தாம்பூலத்தில் மேலிட்டிருப்பதால் வயிற்றைச் சுத்திசெய்யும். வாய்க்கிருமி, உதரக்கிருமி முதலானவைகளை நாசம் செய்யும். வாதம், பித்தம் இவைகளை யதிகரிக்கச் செய்யும். தம்பனத்தைத்தரும். மலச்சிக்கல் போம். தாதுவ்ருத்தி யுண்டாகும். தாகம் தீரும். வீக்கம் குறையும். இக்குணங்கள் தாம்பூலம் தரிப்பதின் குறிகளாகும்.

---

## தாம்பூலம் அதிகமாக தரிப்பதன் குறிகள்

சாத்திரப்படியே மீறத் தாம்பூல மிகவே கொண்டால்
சேர்த்திடு பித்தரோகம் செய்யகண் புகைந்து காட்டும்



ஆற்றுமம் வத்திப் போகுமந்தமும் வேரேயாகு
மாற்றிட மருந்துமில்லை மதுவுண்பார் வசமா வாரே (50)

(இ - ள்)

சாஸ்திரத்தை மீறி (தினம் 3 தடவைக்கு மேல்) தாம்பூலத்தை அதிகமாக உபயோகித்தால். பித்தம் அதிகரிக்கும். கண்பார்வை குறையும். உடல் மெலியும் பசியும் மந்தமாகும். இதற்கு யாதொரு மருந்தும் கிடையாது. மதுபானம் செய்தவரைப் போலாவர்.

---

## நாரத்தம் பிஞ்சின் குணம்

விளையாது திரன் தீபனமுண்டாம் போதவயத்தில்
பொருமலும் போம் — மாதேகேள்
எச்ச வயித்தில் எரிபுழுச் சாம
நாரத்தங் கச்சலதனை யருந்தீர் காண் (51)

(இ - ள்)

பசியைத் தூண்டும். வயிற்றுப் பொருமல் குறையும். வயிற்றிலுண்டாகும் எரிப்புழுக்கள் சாகும்.

---

## வெங்காயத்தின் குணம்

ஈரவெங் காயந்தன்னை யிகல்பெற வுரித்துட்கொண்டால்
பாரெல்லாம் புகழாம் சொன்னேம் — பருகியதாகம் போக்கும்
தேரிய மாந்தர் மர்க்காம் நிகரில்லா வீசிப்போகு
மூரைவிட் டோடுமென்று உரைத்தனர் முனிவர் தாமே (52)

A siddhadreams ebook

(கு - ம்)

வெங்காயத்தை உரித்துச் சாப்பிட்டுவரத் தாகம் தீரும். மற்றும் பற்பல பிணிகளுந் தீரும்.

---

## வாழைக் காயின் குணம்

சாலவுட லந்தான் பருக்குந் தக்கவுதர மிகவுங்கண்
டாதேயவுடன் கூடுங்காசங் கண்டக் கிரந்தியதும்
வாலவயத்தில் கடுப்பகலும் வாய்நீர் வாயுதான் நீருங்
கோல வாழைக் காயினுட குணத்தைச் செப்பகுறிப்
பிதுவே (53)

(கு - ம்)

உடம்பு பருக்கும். உதர நோய்களும் அகலும். இருமல், தொண்டையிலேற்படும் கிரந்தி, வயிற்றுக் கடுப்பு, வாய் நீரூறல், வாயு முதலான பற்பல வியாதி களும் தீரும்.

---

## மாதளம் பழத்தின் குணம்

சீதள மூலையினுளே! சிறந்த விப் பழத்தை வாங்கிக்
கோதறப் பிழிந்துகொண்டு கற்கண்டுச் சீனிகூட்டி
நாதவிற் நாத்தன்னில் நாசமாம் தந்தாபம் போம்
மாதளம் பழத்தின் சாறுமருவிட வல்லார் தானே (54)

(கு - ம்).

மாதளம் பழச்சாற்றைப் பிழிந்து, கற்கண்டு, சீனி இவைகளைச் சேர்த்து உட்கொண்டால்



நாக்கில் உண்டாகும் அரோசகம் நீங்கும். தாபம் தீரும்.

---

## முருங்கையின் குணம்

வாதமறுந் தாதுமிகுமத்த மிகவுண்டாகும்
காதலுடற்குச் சுகமாங் கண்குளிரு — மீதுநிறை
வேருங்காயு மிலையும் வெந்தநீரும் பூவு
மாகுங் காணுமுருங்கைக் காம் (55)

(கு - ம்)

வாதரோகம் தீரும். தாது புஷ்டியும் உண்டாகும். உடம்பிற்கு இதமளிக்கும். கண்கள் குளிர்ச்சியடையும்.

இவைகள் பொதுவாக முருங்கையின் வேர், காய், இலை, பூ இவைகளின் குறிகளாகும்.

---

## அத்திக்காயின் குணம்

பாதம்பணி யோரஞ்சீர மென்றிவை
சாதஞ்சாஞ் குணஞ்சாரிக வல்லீராய்
வாதபித்தச் லேற்றும மென்றிவை காதங்
காதரை யோடிக் காக்குமே (56)

(கு - ம்)

திரிதோஷங்களையும் சமனம் செய்யும்.

(அஞ்சீரம் = அத்தி)



A siddhadreams ebook

## வெள்ளாட்டுப் பாலின் குணம்

வெள்ளாட்டுப் பாலுக்கு வியாதியறும் மெய்குளிரும்
தள்ளாட்டு ரத்தபித்தஞ் சாந்தமாம் — உள்ளாடு
தாதரும்பு தீபனமா மென்றே தனித்த வர்க்குப்
போதரும்பு மாமயிலே போற்று (57)

(கு - ள்)

வெள்ளாட்டுப் பால் பலவியாதிகளையும் நீக்கும். உடலுக்கும் குளிர்ச்சி தரும். ரத்த பித்தம் சாந்தமாகும். பசியைக் கொடுக்கும்.

## பலநிறமுள்ள பசுவின் பாலின், தனித்தனி குணம்

வெண் பசுவின் பால் போக்கும் பித்தத்தை மெய்சிவந்த
வன்பசுவின் பால்போக்கும் வாதத்தை — தின்புவியில்
காராவின் பால்போக்கு மய்யைக் கபிலையின்பா
லாராவிம் மூன்று மறும் (58)

(கு - ள்)

வெண்மை நிறப் பசுவின் பால் பித்தத்தைப் போக்கும். சிவப்புநிறப் பசுவின் பால் வாதத்தைச் சமனம் செய்யும். காராம் பசுவின் பால் கபத்தைக் குறைக்கும். கபிலை நிறமாட்டின் பால் திரிதோஷங்களையும் சமனம் செய்யும்.

**குறிப்பு :**

காராம் பசுவின் மடி கறுத்திருக்கும். கருப்பு, வெளுப்பும் சேர்ந்த பசு கபிலையாகும்.



## எருமைப் பால், வெள்ளாட்டுப் பால், செம்மறி ஆட்டுப் பாலின் குணம்

மேதிப்பால் பித்தை விளைப்பிக்கும் வெள்ளாட்டின்
சாதிப்பால் முப்பிணியைத் தான்சாடு — மோதிலே
ஆவின்பால் வல்லி பித்தமாற்றிவிக்கும் செம்மறியின்
றன் பால வளிதூக்குஞ் செப்பு (59)

(கு - ள்)

எருமைப் பால் பித்தத்தை அதிகரிக்கும். வெள்ளாட்டுப் பால் திரிதோஷத்தையும் சமனம் செய்யும். பசுவின் பால் பித்தத்தைக் குறைக்கும். செம்மறியாட்டுப்பால் வாதத்தைக் குறைக்கும்.

## செம்மறியாட்டு நெய்யின் குணமும், பிள்ளைப் பாலின் குணமும்

செம்மறியி நெய்யிற் சேர் மதுரமாகும்
கொப்பை யெனும் நன்முலையாய் கூறக்கேள்—விள்ளுகின்ற
பிள்ளைப்பால் பித்தமறும் பாருலகில் வெல்லோர்க்கும்
கொள்ளத் தான்மந்த மென்று கூறு (60)

(கு - ள்)

1. செம்மறியாட்டு நெய் தித்திப்புச் சுவையுள்ளது.

2. தாய்ப்பால் பித்தத்தைக் குறைக்கும். மந்தத்துண்டாக்கும்.

A siddhadreams ebook

## எருமைத் தயிரின் குணம்

எருமைத்தயிரைக் கொள்ள வேகிடுமேக பத்தி
பருமா முடம்பு தானும்பற்றி யங்குருதியுண்டா
முரம்வரு மெரிப்புப் போக்குமுயர் கண்ணிற் குளுத்தியுண்டாம்
திறமான மளிதற் கெல்லாஞ் செப்பினர் முனிவர்தாமே (61)

(தி - ள்)

எருமைத் தயிரை உட்கொண்டால் மேகரோகங்கள் தீரும். உடம்பு பருக்கும். இரத்தத்தையும் விருத்தி செய்யும். பலம் வரும். தேகளரிச்சல் குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

## தூதுவேளையின் குணங்கள்

தூதுபத்தி ரியுண்டு நூலக்கும் பூ
தாது மெத்த விருத்திடு தழைத்திடுங் காய்
கூறுகின்ற இருமலை மாத்திடும் வேர்
வாதபித்தசிலேத்தும மாற்றுமே (62)

(தி - ள்)

தூதுவளம்பூ – தாதுபுஷ்டியைக் கொடுக்கும். காய் இருமலை மாற்றும். தூதுவளை வேர் வாத பித்த கப ரோய்களை யகற்றும்.

## சிறுவழுதலை (கத்திரி) யின் குணம்

சிறுவழுதலைக் குணந்தான் சேர்க்கும் கயமறுக்கு
முறுதிமளைப் பூதத்தையோட்டு — மிறுதியெனத்



தாக்கு முயலகனுந் தாங்காது தையலாய்!
போக்கி விடுமென்றே புகல் (63)

(தி - ள்)

சயரோகத்தைப் போக்கும். பூதசேஷ்டைகளையும் நிவர்த்திக்கும். முயலக வலிப்பையும் போக்கிவிடும். இவை சிறுகத்திரியின் குணங்களாகும்.

## தூதுவளையின் குணம்

வெண்குட்டம் குட்டம் விரிகுட்டம் மாறு
கண்கெட்டிருப் பாற்குங் — கண் வெளியாந்
தனங் கட்டுந்தூதுவளை தன்குணம தாகும்
திண்பட்ட குழாயிப்படிவிதாண்டுபார் (64)

(தி - ள்)

வெள்ளைக்குஷ்டம், சாதாரண குட்டம், விரிகுட்டம் இவைகளை தூதுவளை வேர் நீக்கும். கண் பார்வையையும் சுத்தம்செய்யும்.

## கத்தாழையின் குறிகள்

குட்டம் பலவும்போம் குன்மமனைத்தும் போம்
கட்டமகோதரம் போம் காசம்போம் — வட்டமுலை
மானே வலுவுண்டாம் வன்னியெழு மெய்குழலீர்
பூனேர் குமரி கொள்ளும் போது (65)

A siddhadreams ebook

(கு - ரை)

குட்டம் தீரும். வயிற்றுவலி நீங்கும். மகோதரமும் தீரும். இருமல் நிற்கும். உடலுக்கும் வலுவைக் கொடுக்கும். பசியைத் தூண்டும். இவை கத்தாழையின் குணங்களாகும்.

## தேனின் குணம்

புதுத்தேன் பருப்பிக்கும் பூண்டிடுமெய் தானே
மதுத்தான் பழயதுகேள் மானே — கதித்த
வுடல் மெலிவு முன்திணமு மோடியுருகும் காண்
திடமுடனே தீயெனவே செப்பு (66)

(கு - ரை)

புதுத்தேன், உடலைப் பருக்கச் செய்யும். பழைய தேனை, உட்கொண்டால் உடல் இளைக்கும். கொழுப்பும் குறையும்.

## இளநீரின் குணம்

காயந்தாற் வந்தஇளநீர் கயந்தீர்க்கும்
மாய்ந்துவரு தாபச்சுர மாத்துமே—ஆய்ந்த தொரு
செவ்விளநீர் பித்தமது சோரது கேளி கொண்டா
லவ்வளவும் தாபமறும் (67)



(கு - ரை)

இளநீர் உட்கொள்வதனால் கபரோகம் தீரும். தாபஜ்வரமும் குறைவடையும்.

செவ்விளநீர் பித்தத்தைச் சமனம் செய்யும். காங்கையைக் குறைக்கும்.

## வெந்நீரின் பொதுக் குணம்

நெஞ்செரிப்பு நெற்றிவலி நீங்காப் புளித்தேக்கு
வஞ்சமிகு வாயு வயற்றினோய் — விஞ்சவே
வீழாமற் கூட்டுவெட்போர் மலர்கட்ட நீ
ராழாக்குக் கொள்ளவரும் (68)

(கு - ரை)

நெஞ்சுக்கரிப்பு, நெற்றிவலி, அதிகமான புளித்த ஏப்பம், வாயு, வயற்றிலுண்டாகும் நோய்கள் முதலானவைகள் வெந்நீர் ஒரு ஆழாக்கு உட்கொண்டால் தீரும்.

## பலவகையாகக் காய்ச்சிய வெந்நீரின் குணம்

மூன்றிலே யொன்றதாகில் முடுகியவாதம் போக்கும்
தோன்றிய பித்தமாற்றி கவறுநீர் பாகமாகும்
நான்றதோல் செல்வமாகில் நாவிரண் டொன்றதாகு
மான்றதோர் விழியினளே! மருவிடு தண்ணீர்தாமே (69)

A siddhadreams ebook

(கு - ம்)

மூன்றிலொன்றாக வற்றவைத்துக் காய்ச்சிய வெந்நீர் வாதத்தைப் போக்கும். சரிபாதியாகக் காய்ச்சினால் பித்தரோகங்கள் தீரும். நான்கிலொன்றாக வற்றக் காய்ச்சிய நீர் எல்லாவற்றிற்கும் ஹிதமானது.

## கஞ்சியின் குணம்

வாய்வுசுர நீரேற்றம் வன்னிதரும் தீபனமா
மேவு பலபிணியை விண்ணோத்தும் — சேயிழையீர்
குண்டியருக்கு முடம்பிளைக்கும் நோய்தாக்குங்
கண்டியிடுக் கஞ்சிச்சுகம் (70)

(கு - ம்)

சுக்குச் சேர்த்த கஞ்சியுட்கொண்டால் வாயுசுரம், நீரேற்றம், பசி மந்தம் முதலான பிணிகளைத் தீர்க்கும். உடலும் வற்றும்.

## வெள்ளரிக்காய்க் குணம்

பிஞ்சான வெள்ளரிக்காய் பித்தம்வன் தீபனமாம்
முஞ்சான முற்றின்காய் மொய்குழற் கேள் —பஞ்சா
வருகாலி லூர்வாத மாகாதபித்தம்
பொருத்தாகக் கூறுமறும் போந்து (71)



(கு - ம்)

வெள்ளரிப் பிஞ்சு பித்தத்தை அதிகரிக்கும். பசியைத் தூண்டும். முற்றிய வெள்ளரிக் காயோ காலில் ஏற்படும் வாதம், பித்தம் இவைகளைக் குறைக்கும்,

## பத்தியப் பதார்த்தங்கள்

பொன்னாங்காணிக் சிறுக்கீரை புதியநறுநெய் வரால்குறவை
நன்னுதத்தம் சிறுபயறு நல்லகோவை யவரைக்காய்
புகலும் பொருளும் நெய் தோலி
தின்னீர் பன்னீர் புண்ணாக்கின் செய்த மருந்து
வாய்த்திடவே (72)

(கு - ம்)

பொன்னாங்காணிக் கீரை, சிறுகீரை, புத்துருக்கு நெய், வரால் மீன், குறவை மீன், சிறு பயறு, நல்ல கோவை, அவரைக்காய் முதலானவைகளை மருந்து சாப்பிடும் போது உட்கொள்ளலாம்.

## கண்ணேயனுகாக் நெறிகள்

தின்னார் பன்னைச் சிறுகீரைத் தின்னமறந்தார் சீர்கேடாய்
பொன்னாங்காணிக் கறிகூட்டார் பூசார்பாதம் நெய்யுண்ணார்
பண்ணார் மதியந் தனைப்பாரார் பால்வார்த்துண்ணார்
பல்தேயார்
கண்ணேவதனால் கவல்வ ரதைநாமும் சொல்லக்கூடாவோமே
(73)



A siddhadreams ebook

(இ - ள்)

பண்ணைக்கீரை, சிறுகீரை முதலியவைகளை தின்னாமலிருப்பதாலும், பொன்னாங்காணிக் கீரைக்கறி சாப்பிடாததாலும் கண்ணோய் ஏற்படுகின்றது. இரவில் படுக்கைக்குப் போகும்போது உள்ளங்காலில் நறுநெய்யைச் சூடுண்டாகும்படி தேய்த்துக் கொள்ளவேண்டும். ஆகாரத்தில் நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். சந்திரதரிசனமும் கண்ணுக்கு நல்லது. பால் வார்த்துச் சாதம் சாப்பிடவும். தினந்தோறும் பற்களை விளக்க வேண்டும். இவைகளைச் செய்யாவிடில் கண்ணோய்களினால் சிரமப்படும் நிலைமையுண்டாகும்.

## இலைக்கறி வகைகள்

பண்டிலைக் கறிதின்னப் பகர்ந்திலோ
மீண்டிலைக் கறிதின்ன விரும்பினும்—வண்டிலைக்
கொள்வல்லாரைக் கொள்ளாரைக் கொள்கண்டிலை
கொள்கரைக் கொழுந்தைக் கொள்ளே (74)

(இ - ள்)

இண்டம் இலை, வல்லாரையிலை, ஆரையிலை, கண்டையிலை, ஆரைக் கொழுந்து முதலானவைகளை உட்கொள்ளலாம்.

## சீந்தில் கொடியின் குணம்

சீந்திலுக்கு மிருத்திடு தீபனம்
சாந்தமாகச் சுரமுந் தணிந்திடுஞ்



சேர்ந்திடாத ரத்தபித்தங் களைந்திடும்
போந்திலங்க வதிசாரமும் போக்குமே (75)

(இ - ள்)

பசியைத் தூண்டும். சுரத்தைத் தணிக்கும். ரத்த பித்தம் நீக்கும். அதிஸாரங்கள் தீரும்.

## ஆற்று நீரின் குணம்

ஆற்றுநீர் வாதமகற்றிவிக்குமப்பொழுதே
சோற்றுப் பலந்தாகஞ் சொல்ல வொண்ணா
போற்றுங்கால் கொம் பேருடையாய்! குணாகுணங்க
ளித்தனையும் நம்பேருலகறிய நாட்டு (76)

(இ - ள்)

ஆற்று ஜலம் வாதத்தை நீக்கும். தாகத்தை நீக்கிப் பலத்தைத் தரும்.

## யானை முதலானவைகளின் மேல் ஏறிவருவதன் குணம்

யானைமேலேறி வந்தாலதன் குணமது போகிக்கும்
பானுவாம் பரிமேல் வந்தால் பருகியநீரே கொள்ளச்
சோனை தண்டிகையில் வந்தா சுகத்தினால் நித்திரையே பண்ண
மானனை விழியினாளே! வருத்தனன் முனிவன்றானே (77)

A siddhadreams ebook

(கு - ரை)

யானைமேலேறினால் ராஜயோகம் ஏற்படும். குதிரையின் மேலேறிச் சவாரிசெய்தால் தாகமெடுக்கும். பல்லக்கிலேறிவந்தால் ஆக்கம் உண்டாகும்.

## சுரையின் குணம்

அலைகடல் விழியின் மாதே' ஆனதோர் சுரையின் வர்க்க
மிலையது சோபந்தீரு பீதியில் தண்டுபித்தந் தீர்க்குந்
துலைபெருக்காயின் வாதம் சத்தியக் கொழுந்துதானும்
நிலைபெற மூன்று தோஷம் நினைத்திடில் வராதென்றே (78)

(கு - ரை)

சுரையிலையை உட்கொண்டால் சோபத்தை நீக்கும். சுரைத்தண்டு பித்தத்திற்கு இதமாகும். காய் வாதத்தைக் குறைக்கும். சுரைக்கொழுந்து மூன்று தோஷங்களையும் சமனம் செய்யும்.

## வாழைப் பூவின் குணம்

மாந்தம் விளைவிக்கும் வாதபித்தஞ் சேற்றுமமுஞ்
சேர்ந்த கரப்பான் தினவுண்டாம் — பூந்தடக்கை
யாழ் பழித்தமொழி யாரணங்கே! பூதலத்தில்
வாழைப்பூத் தின்னவகை (79)



(கு - ரை)

மாந்தம் உண்டாகும். வாத பித்தம் கபத்தை இவைகளை யதிகரிக்கும். கரப்பான், அரிப்பு இவைகளை யுண்டாக்கும்.

## மாம்பழத்தின் குணம்

தின்னார் தினவெடுக்கும் தீவலம்போம் நெஞ்செரிப்பாம்
மன்னுடாகப் நோயடருமே நன்னுதன்னு
வாதகரப்பனுடன் வன்பித்த முண்டாக்கும்
சூதக்கனியின் சுவை (80)

(கு - ரை)

உடம்பில் அரிப்பைத்தரும். பசிமந்திக்கும். நெஞ்செரிப்புத் தரும். வாதக்கரப்பான் பித்தம் முதலான ரோகங்களையுண்டாக்கும்.

## பலாப்பழத்தின் குணம்

தித்திக்கும் வாதபித்தம் சேற்றுமங்களுண் டாக்கும்
மொத்த கரப்பான் விளைவிக்கும் — சத்தியமே
சோரப் பலபிணிகள் சேருவிக்கு மானிடர்க்குப்
பாரப் பலாவின் பழம் (81)

A siddhadreams ebook

(கு - ள்)

பலாச்சுளை தித்திப்புச் சுவையுள்ளது. திரிதோஷங்களையும் பிரகோபிக்கச் செய்யும். கரப்பானை உண்டாக்கும். பற்பல பிணிகளும் உண்டாகும்.

## விளாங்கனியின் குணம்

எப்போதுந் தேகத்திதங் கொடுக்குந் தீபனமாந்
தப்பாமல் நோய்தணிக்குந் தாகமறுஞ் — செப்பமுடன்
னென்றுதி லுங்கனி களக்கிரசித்த மாளிடரே!
தின்றால் விளாங்கனியே தின் (82)

(கு - ள்)

தேகத்திற்கு நன்மைபயக்கும். பசியைத் தூண்டும். பற்பல நோய்களையும் தீர்க்கும். தாகத்தை நீக்கும் இவை விளாங்கனியின் குணங்களாம்.

## கொமட்டிமாதளையின் குணங்கள்

அருகிவிடும் பித்தமகலுங் கபந்தீர்ந்து ரிசை
பெருஞ் சேத்துமத்தை யோட்டும் — வரிசைமொழி
நாமாது வாழுமிசை புற்புலவீர்! கொம்மட்டியின்
மாமாதளங் கனியின் வாறு (83)



(கு - ள்)

பித்த நோய்கள் தீரும். கபம் குறைவடையும். ச்வாஸத்தையும் தீர்க்கும். இவை கொமட்டி மாதளையின் குணங்களாம்.

## வழுதலைக் காயின் குணம்

எல்லாற்குந் தானே பிதமியமாஞ் சேற்றுமம் புண்
எல்லாற்குந் தானே யருந்தலாம் — முல்லை
கடி கமழுந் தார்புனையுங் கார்குழலீர்! சொன்னோம்
கொடிவழு தலையின் காய்குணம் (84)

(கு - ள்)

பிறுகத்திரிக்காய் உடலுக்கு நல்லது. கபம், புண் முதலானவைகள் நீங்கும்.

## கத்திரிக்காயின் குணம்

அனிலமுடன் பித்தமகலும் வலம்போக்கும்
தொனி கொடுக்கும் சேத்துமமே துன்னும்—மினியமொழி
முத்திருக்கு மென்னகையீர்! மூடுமுகிழ் விரியாகக்
கத்திரிக்காய் தின்பவர்க்கே காண் (85)

(கு - ள்)

வாதம், பித்தம் முதலான நோய் தீரும். மலத்தை இளக்கும். சரீரம் சுத்தமாகும். கபமும் குறையும். இவைகள் கத்திரிக்காய் உண்பதன் பயன்களாகும்.

A siddhadreams ebook

## கண்டங்கத்திரிப் பழத்தின் குணம்

சேற்றுமத்தைப் போக்குமதின் வடக்கும்
போற்றுங் கயரோகம் போக்குமே — நீத்துவரி
வண்டடங் கார்கூந்தல் வஞ்சியரே ! முட்பெரிய
கண்டங்காலிப் பழகே காண் (86)

(இ - ள்)

கபத்தைக் குறைக்கும். க்ஷய ரோகம் நீக்கும். இவை கண்டங்கத்திரிப் பழத்தின் குணங்கள்.

## முள்ளிக்காயின் குணம்

எல்லாப் பிணிக்கு மேத்ததொரு பத்தியமாஞ்
சொல்லாத வேதனைத்தைச் செல்லிவிக்கும் — நல்லதுகாண்
துள்ளிக்கா தன்னந்துயலுங் கயல்விழியீர் !
முள்ளிக்காய்ச் செய்யுமுறை (87)

(இ - ள்)

எவ்வித வியாதிகளுக்கும் பத்திய பதார்த்தமாகும், பசியில்லாதவனுக்குப் பசியைக் கொடுக்கும். ஆகாரத்தை வரக்கும்.

## மலசந்திக்காயின் குணம்

அய்யினுடன் வாதபித்த மாந்து மருசிகெடு
மைபூர் வாயுப் பருக்குமே — துய்ய



சலையிந்துக்கே நேர்வதன ஏந்திழை கேளு
மலசந்திக் காய் செய்யுமதாம் (88)

(இ - ள்)

கபம், வாதம், பித்தம் முதலான தோஷங்களைக் குறைக்கும். அருசி இவைகளை நீக்கும்.

குறிப்பு :—

மலசந்திக்காய் என்பது என்னவென்று விளங்கவில்லை.

## அவரைக்காயின் குணம்

சொறிசிறங்கு மாந்தந்தொடரு மருசிகெடும்
விறுபிணி யாளருக்கு வேண்டியதாம் — கூறும்
புவரைப்பூ மாதே புவிதனுள் ளோர்க்கெல்லாம்
அவரைக் காய் செய்யுமடவு (89)

(இ - ள்)

அதிகம் சாப்பிட்டால் சொறி, சிறங்கு, மாந்தம் முதலானவை யுண்டாகும். அருசி நீக்கும். பிணியாளருக்கு பத்திய பதார்த்தமாகும். இவை அவரைக்காயின் குணம்.

## மொச்சைக் காயின் குணம்

அனிபித்த சேத்துமங்க ளத்தனையு முண்டாந்
தொனி யடுத்த வாயுந் தொடரும் — பசிபுலயிற்



A siddhadreams ebook

கச்சை போர்வென்ற முலைக்கன்னியரே! கேளு
மொச்சைக் காய் செய்யுமுறை (90)

(கு - ரை)

பித்தம், கபம் இவைகளை அதிகரிக்கச் செய்வது டன், வாயுவைப் பிரகோபமடையச் செய்யும். இவை கள் மொச்சைக் கொட்டையின் குணங்களாகும்.

---

## புடலங்காயின் குணம்

விரதமாகும் நலமில்லாப் பித்தமில்லை
மேவுகின்ற சேற்றுமத்தை வேரறுக்கும் — பாவியுடல்
தங்கும் வேல்விழியீ ராகிய தோசிந்தப்
புடலங்காய்க் குண்டாம் புகழ் (91)

(கு - ரை)

விரதங்களுக்கும் ஏற்றது. பித்தத்தைக் குறைக் கும். கபத்தையும் குறைக்கும். பத்தியபதார்த்த மாகும்.

---

## பீர்க்கங்காயின் குணம்

சேற்றும மாம்வாதம் சிறந்து சமனுருந்
தோற்றிவிடும் பித்தஞ் சூடர்ந்தேத்தும் — ஏற்றமுடன்
நித்திப்பாருங் கறியின் நின்றமருந்தைக் கொடுக்குங்
கத்திப்பாரும் பீர்க்கங்காய் (92)



(கு - ரை)

கபம், வாதம் இவைகளைச் சமனப்படுத்தும். பித் தம் குறையும். கறி செய்து சாப்பிட்டால் நித்திப்பாரும் மருந்தின் குணத்தை அதிகரிக்கும்.

---

## பழுபாகலின் குணம்

போசனத்திற் கேற்கப் பொருந்துமது தீபனமாம்
காசபித்த வாதங்கதியாது — நேசமுற்ற
கொட்டுப் பனைமுலையீர் கோமளமே கூறுதற்குக்
காட்டுப் பழுபாகற் காய் (93)

(கு - ரை)

சாப்பாட்டிற்கு ஏற்றது. பசியைத் தூண்டும். காச ரோகங்கள் தீரும். பித்தம், வாதம் இவற்றைக் குறைக் கும். இவை பழுபாகலின் குணங்களாகும்.

---

## கொம்புப் பாகலின் குணம்

மன்னும் மருந்துள்ள தெல்லா மாற்றுமது பத்தியமாஞ்
செந்நெல் விளைச்சோறு மிகத் தின்னுவிக்கும்—வன்னியெழும்
நிம்பக்காய் கொங்கைநிகர் நீண்டமுலைக் கன்னியரே!
கொம்பன் பாகற்காய் குணம் (94)

(கு - ரை)

மருந்துகளை முறிக்கும். பத்தியத்திற்கு இதமானது சாப்பாட்டை அதிகமாக வாங்கும். இவை கொம்புப் பாகலின் குணம்.

A siddhadreams ebook

## பாகைக்காயின் பொதுக் குணம்

பித்தவகை வாதம் பெருக்கும் பலமருந்து
எத்தனை யுண்டத்தனைக்கு மேருதே — கொத்திமிக
வாகாய்த்தான் கேவி யடிக்கடிநீர் வார்த்தாலும்
பாகைக் காய்ச் செய்யும்படி (94)

(இ-ள்)

பித்தம், வாயுமுதலானவைகளை அதிகரிக்கச் செய்யும், எந்த மருந்தை உட்கொண்டாலும் பாகக்காய் சாப்பிட்டால் வேலைசெய்யாது. அதாவது மருந்துகளை முறிக்கும் சக்தியுள்ளது.

## வெள்ளரிக்காயின் குணம்

உண்டிருந்த தீபனமாமுன் மருந்தைத் தான்முடுக்குங்
கண்டங் கபவாதங் கடுக்குமே — பண்டிதரே
உள்ளெரியு நீர்கடுப்பு ஊரைவிட்டுவது தூரத்தும்
வெள்ளெரிக்காய்ச் செய்யும் விதம் (95)

(இ-ள்)

பசியைக் கொடுக்கும். மருந்தின் வீரியத்தை அதிகப்படுத்தும். தொண்டையில் சளி, வாயு இவைகளை நீக்கும். தேக எரிச்சல், நீர்கடுப்பு முதலான நோய்களும் நீக்கும்.



## பூசினிக்காயின் குணம்

பித்தம்போம் வாதம்மறும் பேருலகில் மானிடற்குச்
சித்தமிரு முட்காய்ச்சல் தீருமே — முத்துநகை
வாசமொய்க்கும் பூங்குழலே வந்தமருந் தீடகலும்
பூசினிக்காய்ச் செய்யும் பொருள் (96)

(இ-ள்)

பித்தம் குறையும். வாதத்தைக் குறைக்கும். தேககாங்கையும் கீற்கும். மருந்தீடுகளும் நீக்கும். இவை பூசணிக்காயின் குணங்கள்.

## புளியங்காயின் குணம்

வாதமுடன் பித்தமருவுங் கிரந்தி
சீதமுடன்னோய் பலவுஞ் சேருமே —போத
அளியங் கருங்கூந்த லன்னநடை மாதே
புளியங்காய்ச் செய்யும் பொருள் (97)

(இ-ள்)

வாதபித்த, பித்தமுதலியவைகளை அதிகரிக்கச் செய்யும். கிரந்திகளை யுண்டாக்கும். சீதனத்தை யதிகப்படுத்தும். இவைகள் புளியங்காயின் குணங்கள்.

## எலிமிச்சம்பழத்தின் குணம்

பித்தமுடன் வாதம்போம் பேரிருமற் சூழவருஞ்
சித்திலிய பித்த சிலேத்மம் போம் — உத்தமமாம்

A siddhadreams ebook

மன்னர் கதிசயமா மாஷிஷ்ய முண்டாகும்
பண்ணு மெலுமிச்சம் பழம் (98)

(கு - ள்)

பித்தம், வாதம், இவைகளைப் போக்கும். இருமலை அதிகப்படுத்தும். பைத்தியத்திற்கு நல்லது. மன்னருக்கு உகந்தது.

### இதுவுமது

கண்ணுக் கினியதாங் காட்சிக்கு நல்லதாம்
பெண்ணுக் கெழுமதங்கள் பேசுவிக்கும் — நண்ணுதலாய் !
யார்க்கும் பிரியமா மார்கையிலே கொண்டிருக்கும்
பார்க்கு மெலுமிச்சம் பழம் (99)

(கு - ள்)

கண்ணுக்கு நல்லது. பார்வைக்கு இதமானது. பெண்களின் மதத்தை யதிகரிக்கச் செய்யும். எல்லாரும் விரும்பக் கூடிய பழமாகும்.

### போஜன கஸ்தூரியின் குணம்

அன்னமிறங்கு மருசிகெடுந் தீபனமாம்
வன்னமிருந் தாதுவளருமே — பொன்னல்முடி
வசனமேற்றுங் குழலீர் ! வன்பிணிகளத்தனையும்
போசன கஸ்தூரியெனப் போம் (100)



(கு - ள்)

சாப்பாடு இறங்கும்.ருசியைத்தரும். பசியையும் அதிகரிக்கும். தாதுபுஷ்டி கொடுக்கும். பற்பல பிணிகளையும் போக்கும்.

குறிப்பு :

போஜன கஸ்தூரி என்பது காரத்தங்காய்.

### பழம் புளியின் குணம்

ஆண்டு மறுத்த புளியாலுந் தோஷ பிணிக்காம்
வேண்டும் படியே விரும்புதற்கு — பூண்டவினை
பித்தத் திற்றமாகப் பேசிர்பழம் புளியைத்
தித்தித்த மாகத்தின் (101)

(கு - ள்)

ஒரு ஆண்டு சென்ற பழம் புளி தோஷங்களை நீக்கும். பித்தத்துக்கும் நல்லது.

### அரைக்கீரையின் குணம்

காய்ச்சற் குளிர்சந்நி கயநோய் பலபிணிக்குங்
வாச்ச கறித்தாளுய் வழங்குமே — கூச்சமில்லா
தெல்லா வற்கும் நல்லவித மியமுமா மென்றே
சொல்லுமரைக் கீரைக் கவை (102)

(இ - ள்)

சுரம், குளிர்ச்சுரம், சந்நி, க்ஷயம் முதலான பற்பல ரோகங்களுக்கும் இதனைக் கறியாக வழங்கலாம்.

## பலக்கல் இலைக்கறியின் குணம்

சோறிழியும் வாதமறும் தொல்புவியில் மாவிடற்கு
விறுபித்த சேற்றுமங்கள் விட்டோடும் — கூறுங்கால்
விழிக்குயிலின் கன்னியரே ! நல்ல
பலக்கலிலைக் கறியின் பண்பு (103)

(இ - ள்)

சாப்பாட்டைத் தள்ளும். வாதம் தீரும். பித்த சிலேஷ்மங்களும் குறையும்.

குறிப்பு :

பலக்கல் என்பது பலவின்கீரையாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

## பறட்டை இலையின் குறிகள்

வாதபித்த சிலேத்துமத்தை மாத்துவிக்கும் நீர்ச்சுவறும்
நீதமுற்ற வாய்க்குறிகை நிச்சயமே — சீதமுடன்
பண்ணுறும் பாகாம் மொழிப் பாவையரே !
பாருலகோ ரென்றும் பரட்டையிலை (104)



(இ - ள்)

வாதம் பித்தம் கபம் இவைகளைச் சமனப்படுத்தும். உடலிலுள்ள நீரை வற்றவைக்கும். இவை பரட்டை இலையின் குணங்கள்.

## நல்லவேளையின் குணம்

குன்மம் செவிநோய் குடல்வாத மாமைவலி
நன்மங்கை விப்புருதி நாடாதே — வன்னஞ்
செவியில் வேற்கணை போலும் வேல்போலும் கண்ணுளே !
நல்வேளைச் செய்யும் நலம் (105)

(இ - ள்)

வயிற்றுவலி, காது நோய், குடல்வாதம், மாந்த வலி முதலான நோய்கள் தீரும். விப்புருதிக்கும் நலம்தரும் (கட்டி). இவை நல்லவேளையின் குணங்கள்.

## முசுட்டையிலையின் குணம்

மாதே முசுட்டையிலை வாதமொடு பித்தமறும்
நீதேயடுத்த சலந்தீருமே — போதேதா
னேத்த கரியாமுன் னெரிப்படங்கு மிப்புவியில்
நாத்திசையிலுள்ளோர்க்கு நன்று (106)

A siddhadreams ebook

(இ - ள்)

வாதம், பித்தம் இவைகள் குறையும். சலதோஷத்தைத் தீர்க்கும். சாப்பாட்டிற்கு இதமானது. உள்ளெரிச்சலும் அடங்கும்.

## குறிஞ்சாவிலையின் குணம்

சொல்லுங் கிராணி துடங்காது தான்செரியா
தல்லும் பகலுமருந்துதற்கு — மெல்ல
அறிஞ்சு மொழிபேசுமிய லாரணங்கே! நல்ல
குறிஞ்சிலை செய்யுங் குணம் (107)

(இ - ள்)

கிராணிகள் தீரும். எப்போது வேண்டுமானாலும் இதை உபயோகிக்கலாம்.

## ஆரைக்கீரைக் குணம்

நன்று புசிசைபெரும் நாடாது நீரிழிவு
தின்றால் பயித்தியமுஞ் சேராதே — வென்றிபுனை
சீராருமேனித் தெரிவையரே! நாவிதட்சேர்
நீராரை செய்யும் நெறி (108)

(இ - ள்)

நீரிழிவுகளை நீக்கும். பசியைத் தரும். பித்தம் சேராது. இவை ஆரைக்கீரையின் குணங்களாகும்.

## சிறுக்கீரையின் குணம்

நலிகழத்தும் பித்தமுடன் தாழ்க்கு மெரிக்குஞ் செந்
நிலையெனவே நாவுமிழிக் கேற்கும் — கல
மறிக்கோ ரழியரணங்கே மாவிலத்தோர்க் கெல்லாஞ்
சிறுக்கீரை செய்யுஞ் செயல் (109)

(இ - ள்)

நில கழற்றல், பித்தம், உடலெரிச்சல், விழிநோய்கள் முதலான வியாதிகளை நீக்கும்.

## முள்ளங்கியின் குணங்கள்

சொல்லுங் கரப்பான் துடிநோவு நீர்க்கோர்வை
கல்லுடனே சூலக் கபாலநோய் — வல்லதொருக்
கள்ளங் கமாஞ்சூலை கண்டமிகு வாதம்போம்
முள்ளங்கிச் செய்யும் முறை (110)

(இ - ள்)

முள்ளங்கியைத் தவறாமல் உட்கொண்டால், கரப்பான், நீர் கோர்வை, நீரில் உண்டாகும் கற்கள், சூலை, தலை நோய், சூலை நோய், தொண்டையைப் பற்றிய வாதம் முதலான ரோகங்களைத் தீர்க்கும்.

## நாயுருவியின் குணம்

போயுவரிவாயு புறமூல முன்மூல
நோயதிஞ்சி நீரும்பினி யுண்மையே — ஆயிழையீர்

A siddhadreams ebook

வேயுருவின் தோளீர் மிருத்த வசியமுமாம்
நாயுருவிச்செய்யும் நலம் (111)

(கு - ம்)

வளிவாயு, வெளி மூலம், உள்மூலம், நீர்ப்பாய்ச்சல் முதலானவைகள் நீங்கும். வசியத்துக்கும் நல்லது. இவைகள் நாயுருவியின் குணங்களாகும்.

## பூண்டின் குணம்

பாலகர்க்குமுற்ற பரிவாகும் போடகத்தை
மேலகற்றுங் காமாலை வீக்கம் போம் —சீலமுடன்
வாருள்ளிக்கும் வன்முலையீர்! பூதலத்தில்
நீருள்ளிச் செய்யும் நிதம் (112)

(கு - ம்)

குழந்தைகளுக்கு நன்மை தரும். கட்டிகளை உடைக்கும். காமாலை, வீக்கம் முதலானவைகளை நீக்கும். இவைகள் பூண்டின் குணங்களாம்.

## வெள்ளைப்பூண்டின் குணம்

சந்தியுடன் வாதந் தலைநோவுந் தாள்வலியு
மன்னுவளை நீர்க்கோர்வை மாறுமே — சொன்ன
உள்ளிக்கு மூலமுடனே யகலுமே
வெள்ளுள்ளிக் குண்டாம் விதம் (113)



(கு - ம்)

சந்திகள், வாதநோய், தலைவலி, தாள்வலி, நீர்க்கோர்வை, மூலரோகம் முதலான ரோகங்கள் வெள்ளைப் பூண்டின் உபயோகத்தால் தீரும்.

## சுண்டைக்காய் வற்றலின் குணம்

பொல்லாக் கிராணிதனைப் போக்குஞ் சுரமுதலாய்
எல்லாப் பிணிக்கு மிதமியமாம் — தொல்லுலகில்
கொண்டைக்கே நேர்விழியின் கிள்ளைமொழிமாதே!
சுண்டைக்காய் வற்றலையே சொல் (114)

(கு - ம்)

கிராணி ரோகத்தைப் போக்கும். சுரரோகிகளுக்குப் பத்தியமான பதார்த்தம்.

## நோய் அணுகா விதிகள்

நடக்கில் மெத்தென நடப்போ
　　நாளுறு மனவரித் துண்போ
முடக்கறு வெந்நீர் குளித்தல்ல நுண்றே
　　மீறிய மிகப் பகலுறங் கோம்
சடக்கென மலமிரண்டையும் கழிப்போ
　　தையலார் புணர்ச்சியில் சந்தே
மிடக்கைக் கீழ்படக் கிடப்பினுங் கிடப்போம்
　　எமனுர் தமக்கெனக் கிடவாரே (115)

A siddhadreams ebook

(இ - ள்)

நடக்கும்போது மெதுவாக சப்தம் வராமல் நடப்போம். தினந்தோறும் பசிதீபனத்தை அனுசரித்து அளவுடன் சாப்பிடுவோம். குடிப்பதற்கும் குளிப்பதற்கும் வெந்நீரையே உட்கொள்வோம். பகலில் அதிகமாக உறங்கமாட்டோம். மலமூத்திரங்களை உணர்ச்சி வரும்போது கழித்துவிடுவோம். ஸ்திரீபோகத்திலும் மிதமாக இருப்போம். இடக்கைக் கீழே இருக்கும் வண்ணம் படுத்துக்கொள்வோம். (இடதுபக்கம் கீழ் வைத்துப் படுப்போம்). இவ்வாறு இருப்பதால் யமன் நம்மிடம் வரமாட்டான்.

## இதுவுமது

பாலுண் போமெண்ணெய் பெற்றல் வெந்நீர்தானே
பரிகாரி யிவனெனினுமப் போர்தாங்கள் மூத்தால்
ஏலஞ்சேர் குழலியையு மிளவெயிலும் வேண்டோ
மிரண்டடக்கோ மொன்றடரோ மருசியாளுது
மூலஞ்சேர் கரியுகவோமூத்த மயிருகப்போம்
முதனாளில் வெந்தகறி யமுதெனினும் வேண்டோம்
ஞாலமெலாந் தந்திடினும் நாம்பசியா துண்ணோம்
நமனுக்கங் கிடமேது நாமிருக்கவூரே (116)

(இ - ள்)

பால் சோறு வேண்டியளவு சாப்பிடுவோம். வெந்நீரிலேயே எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வோம் நம்மிலும் வயதில் மூத்த ஸ்திரீகளையுஞ் சேரமாட்டோம். இளவெயிலில் இருக்கமாட்டோம். மலமூத்திரங்களை அடக்க மாட்டோம். நாகத்தை அடக்கமாட்டோம்.



வாயுபதார்த்தங்களைக் கூட்ட மாட்டோம். தயிர் சாப்பிடுவோம். முதல் நாளே தயார் செய்த கறிபதார்த்தங்களை யுண்ணமாட்டோம். பசி எடுக்காமல் உலகத்தையே தருகிறேன் என்றாலும் சாப்பிடமாட்டோம். இவ்விதமாக இருக்கும் நமது ஊரில் யமனுக்கு இடமில்லை.

## அறுவகைச் சுவைகள்

ஓதுங் கசப்புப் புழுவர்ப்பு துழல்ப்புத் தித்திப்புத்
தாது பெருபுளிப்புத் தானேயா — மாதுநல்லாய்
மட்டமருங் கூந்தலாய்! மாநிலத்தோர் தங்களுக்குச்
சட்டரச மீதெனவே சாற்று (117)

(இ - ள்)

கசப்பு, உப்பு, துவர்ப்பு, உறைப்பு, தித்திப்பு, புளிப்பு, என்பன.

சட்டரஸம் = சட்ரஸம்

## முலைப்பாலின் குணம்

சீதளந் தன்னைப் போக்குஞ் சிலேத்துமம் வாதபித்தம்
மீதுள சந்நிசத்தி விக்கலோடிலை களாறு
காதில்நோய் கண்ணோய் புண்ணோய் கடுகிய வெப்புமாறு
மாதுநன் முலைப்பாலாலே வளர்பிணி யனைத்தும்
போமே (118)

A siddhadreams ebook

குளிர்ச்சியை நீக்கும். கபம், வாதம், பித்தம், சத்திகள், வாந்தி, விக்கல் முதலானவைகளும், நாத ரோய்கள், புண்கள், தேகதாக்கை முதலான பிணிகளும் தீரும்.

## ஸ்திரீகளின் நிறத்திற்கேற்பப் பாலின் குணம்

சிவந்திடு மாதுதன்பால் சீதளந்தன்னைப் போக்கும்
நயந்திடு கருப்பிதன்பால் நயனநோ யனைத்து மாறும்
குவிந்திடு கொங்கை தன்பால் கொடுஞ்சன்னி சுரத்துக்
கேற்கும்
புவிந்திடு நிறத்தி தன்பால் போக்கும் நோயனைத்துந்
தானே (119)

(கு-ரை)

சிவப்புநிறமுள்ள ஸ்திரீகளின் தாய்ப்பால் சீதளத்தை நீக்கும். கருப்பு நிறமுள்ள ஸ்திரீகளின் பால் நேத்ர ரோகத்தை நீக்க வல்லது. மாநிறமாக உள்ள ஸ்திரீயின் பால் சந்நி சுரத்திற்கும் ஏற்றது.

## சரீரத்திற்கேற்றபடி முலைப்பாலின் குணம்

வாதசரீர மதுதன்பால் வளரும்பித்தந்தான் போக்கும்
வாதசரீரம் பித்தமெனில் வாதமுடனே வாயுவரும்
மோது சரீரமய்ய மெனிலுண்மை நயனநோய் தீரும்
சீதை யனையாள் தன்முலைப்பால் தீராநோவுந்
தீர்ந்திடுமே (120)



வாதசரீரமுள்ளவளின் பால் பித்தத்தைப் போக்கும். வாத பித்தப் பிரக்ருதியானால் வாதத்தையும் வாயுவையும் அதிகரிக்கும். கபப்பிரகிருதியின் பாலை உபயோகித்தால் கண்ணோய்கள் நீங்கும். சீதையை யொத்த பதிவிருதா ஸ்திரீகளின் முலைப்பால் தீராத நோய்களையும் தீர்க்கும்.

## பேரீச்சம்பழத்தின் குணம்

காய்ச்சலுடனே நெஞ்செரிவு காசமிவை யணுகாது
மூச்செழும்ப வாயுவிது முனியாது — பாச்சகேள்
அருந்துங்கால் பேரீச்சம் பழத்தை
யருந்திடவே நோய் பலவும்போம் (121)

(கு-ரை)

காய்ச்சல், நெஞ்செரிச்சல், இருமல் முதலானவை தீரும். மூச்சைக் கொடுக்கும் வாயு, பிரகோபிக்காது பற்பல வியாதிகளையும் நீக்கும்.

## பஞ்சதாரையின் குணம்

பஞ்சதாரை குணங்கேளீர் பயித்திய வாதமுழுமைப்போம்
கஞ்சமலர்ப் போல்காந்தி யுண்டாம் காசசுவாசம் சுரமகலும்
மிஞ்சுமந்தி சுரம்வாயு மீரும்பிரமேக மிருபதுவுந்
துஞ்சும் வேர்வை கிறுகிறுப்புத் துலையுஞ்சந்தி வாந்தியுமே
(122



A siddhadreams ebook

பித்தம்,வாதம்,உள்ளெரிச்சல் முதலானவை தீரும். தாமரைப் புஷ்பத்தை யொத்த தேககாந்தி யுண்டாகும். காசம், சுவாசகாசம், ஜ்வரம் முதலான நோய்கள் தீரும். அஸ்திகாங்கை, வாயு, 20 வகைப் பிரமேகங்கள், இறு இறுப்பு, வாந்தி, தாங்க முடியாத வியர்வை முதலான நோய்களும் நீங்கும்.

பஞ்சதாரை=பூராச் சர்க்கரை

## பூண்டின் குணம்

உள்ளியின் குணமேதென்றால் உட்சுரம் காந்தல்வெப்பு
விண்ணுமோர் கரப்பான் புண்கள் விதனமோ டிவைகள்மாறும்
தன்னுமோர் மந்தம்வாயுத் தான்மிகவுண்ட பூவைப்
கொன்னவே பொருமல்நோவு கொடியதோர் வாயுவாமே (123)

(இ-ள்)

உட்சுரம், எரிச்சல், கரப்பான் புண், வலி முதலான நோய்கள் தணிவடையும். வாயு வைக் குறைக்கும். மந்தத்தை யுண்டாக்கும். பொருமலும் போகும்.

## இதுவுமது

பெருமலுட நெஞ்செரிப்புப் புளித்தேப்புச் சத்தியுடன்
விருவிருப்பு அயர்வாதமுஞ் சோகை — திருவேகேள்
விட்டகலும் சந்திசுரம் வெள்ளுள்ளி தின்பார்க்குத்
திட்டெனவே வாய்வுவிடுஞ் சிறந்து (124)



(இ-ள்)

பொருமல், நெஞ்செரிச்சல், புளித்தேப்பம், வாந்தி, விருவிருப்புள்ள வாதம், சோகை முதலான நோய்கள் நீங்கும். சந்நிசுரங்களும், வாயு நோயும் தீரும்.

## பத்தியா பத்திய பதார்த்தங்கள்

அகத்தியுடன் பூசினிக்காய் புடலங்காயும்
மன்பான வாழைக் காயுண்ணுர்கள்
நிகழ்த்திய மீன் கடுகுடன்வெங் காயங்கூட்டி
நித்தியமே தின்னதுண்டால் நெடியோனுகான்
செகத்தில் நின்ற வரைக்கீரை வறுக்கை மாங்காய்
திகட்டாத கத்திரிக்காய் தீனபாக்க காய்
மகத்துவமாங் கும்பமுனி யருளிச்செய்த
மாறுத சொறி பறங்கிவனரு மென்றே (125)

(இ-ள்)

அகத்திக்கீரை, பூசினிக்காய், புடலங்காய், வாழைக் காய் இவைகளை உட்கொள்ளவும். மீன், கடுகு, வெங் காயம் இவைகளைத் தினந்தோறும் உட்கொள்ளக் கூடாது. அரைக்கீரை, மாங்காய், கத்திரிக்காய் பாகற் காய் இவைகளை யதிகம் சாப்பிட்டால், சொறி சிரங் குகள் அதிகமாகும்.

## சந்திகுன்மம், வயிற்றுவலியுள்ளவர்களுக்கு ஆகாத பதார்த்தங்கள்

அயிரையோடு சிறுகயலி குறவை வாளை
அடுத்தகுணக் கருவாடு ஆறல்மீனும்

A siddhadreams ebook

பயிராக வுண்டான பாகற்காயும்
பழுபாகல் காயும்நந்தி பருத்தகாயுந்
தயிர்மோர் பாலுடனே அதளைக்காயும்
தக்கசிவலுடும்பு பன்னிந் தாராவோடு
செயல்மா தேசத்திருன்மம் பசலைஆம்பல்
தீராத வயிற்றிர்க்குந் தீராதென்றே (126)

(இ-ள்)

அயரை, சிறுகயலி, குறவை, வாளை, குளக்கருவாடு, ஆரல் முதலான மீன் வகைகளும், பாகற்காயுந், பழுபாகல், பூசினிக்காய், அதளைக்காய், தயிர், மோர், பால் முதலியவைகளும், கவுதாரி, உடும்பு இறைச்சி, பன்றியின் இறைச்சி முதலானவைகளையும்.

சத்திருன்மம், பசளைகோய், சிராம்பல் கோய், குடலிறக்கம் முதலான கோய்களுள்ளவர்கள் உபயோகிக்கக் கூடாது.

## வயிறுகழிச்சலுக்குப் பத்திய பதார்த்தங்கள்

மானே வயிறு கழித்தவர்கள்
வளருங் குறிஞ்சி புளியாரை
தேனே கதலிக் கச்சல்முதல்
செய்ய வுடும்பு வத்திக்காய்
உள்ளே பெருத்த வெள்ளாட்டி
லுப்புக்கண்ட மதன் தயிருங்
கானே குருவி கவுதாரி
காடையருந்த வினையாரே (127)



(இ-ள்)

குறிஞ்சிக்கீரை, புளியாரைக்கீரை, வாழைக்கச்சல், தேன், உடும்புமாமிஸம், அத்திக்காய், வெள்ளாட்டு உப்புக்கண்டம், தயிர், சிட்டுக்குருவி மாம்ஸம், கௌதாரி மாம்ஸம். காடையின் மாமிஸம் இவைகள் வயிற்றுக் கழிச்சல் உள்ளவர்களுக்கு நல்லது.

## தேனின் குணம்

கண்ணும் புண்ணுங் கடுகத்தீருங் கடியநோய்கள் பலதும்போம்
பண்ணு மிசையும் பாடவரும் பருத்தவுடம்பு நோய் தீரும்
எண்ணுந் தீபனமுண்டாக்கு மிட்டமருந்துக் கனுபானம்
வன்னக்கிளி மொழிமானே கேள்! வளியாய்ந் தேனின் வகை யிதுவே (128)

(இ-ள்)

கண்ணுக்கு நல்லது. புண்களைவிட அவைசீக்கிரம் ஆறிப்போம். மற்றுபல ரோகங்களைத் தரும். பாடகர்களின் சாரீரம் சுத்தமாகிப் பாட்டும் நன்றாக வரும். பருத்தவுடல் இளைக்கும். பசியைக் கொடுக்கும். இதர மருந்துகளுக்கும் தேன் ஒரு முக்கியமான அனுபானமாகும்.

## பசுவின் பால் சாதத்தின் குணம்

தேனே ஆவின்பால் தனக்குத் தின்னும் பத்தியமுடன் சோறு மீ
தானேமேனி தடித்தேறுந் தாதுவளருந் தளராது

A siddhadreams ebook

கைனேசெறி முத்தோஷமும்போ முதிரநோய் கண்ணோய்போம்
மானே பழயதாகமும்போம் வடிவுமுண்டாய் மதமும்முண்டே
(129)

(கு - ள்)

உடம்பு புஷ்டியாகும். தாதுவும் வலுவடையும், கொழுப்பையும் அதிகரிக்கச் செய்து திரிதோஷங்களையும் போக்கும். கண்ணோய்கள் தீரும். தாகம் நீங்கும் சரீரத்திற்கும் அழகைத் தரும்.

## எருமைப் பால். எருமை நெய் இவற்றின் குணம்

புத்திகெடுமே வழுகுபோத வெளிபோம் மறைந்து
மெத்த வயதிறக்கம் வேண்டுமே — சத்தியமே
வாதபித்தம் பொல்லாம் வறட்சி தனையும் கொடுக்கும்
போதெருமை நெய்பால் குணம் (130)

(கு - ள்)

புத்தியை மந்தமாக்கும். அழகையும் குறைக்கும் தேககாந்தியும் போகும். திரிதோஷங்களையும் பிரகோபமடையச் செய்யும். வறட்சியைத் தரும்.

## தேங்காய்ப் பாலின் குணம்

வாதம்போம் பித்தமதும் வாழ்மலரான் நோக்குண்டாம்
போதப் பசியுண்டாம் போகமுண்டாம் — மாதே கே
ளன்னநடை காட்டு மம்புவியில் முந்திநிற்குந்
தென்னங்காய்ப் பாலின்செயல் (131)



(கு - ள்)

வாதம், பித்தம் இவ்விரு தோஷங்களையும் குறைக்கும். கைஷிமிகடாக்ஷத்தை யுண்டாக்கும். பசியைத் தரும். தாதுபுஷ்டியைக் கொடுக்கும்.

## பனங்காய், நொங்கு இவற்றின் குணம்

பித்தமோடய்ய வாதம் பெருத்திடு மிகவேயாகும்
முற்றநோர் பனங்காய்கொள்ள வுகந்திடு வாயுவுண்டாம்
மற்றதன் நொங்கைத் தின்ன வறட்சிபோடத்திநாக
முத்துமே கடுப்புந் தீரும் முடுகிய வெப்பும் போமே (131)

(கு - ள்)

பித்தம், கபம், வாதம் முதலான திரிதோஷங்கள் விருத்தியாகும். பொதுவாக வாயு அதிகரிக்கும். நுங்கைத் தனியாக உட்கொள்ள, வறட்சி, கடுப்பு காங்கை முதலான ரோகங்கள் சாந்தமாகும்.

## மினகின் குணம்

மண்டைதனில் நீர்தோஷம் வாராது தேய்த்தக்கால்
உண்டாக்கால் நோய்பலவு மோடிப்போ — மண்டலத்தில்
தீராத நோய்களெல்லாந் தீருமினகாலே
ஆராய்ந்து பார்த்திலது (133)

(கு - ள்)

மண்டையிலுள்ள நீரேற்றம், தேய்த்தால் குன்றும். உடம்பிலும் தலையிலும் தண்ணீர் விட்டு அரைத்துத்

A siddhadreams ebook

தேய்த்துக் குளிக்கலாம். உள்ளுக்கும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். நீராதநோய்கள் பலவும் தீரும்.

## நோய் அதிகரிக்கக் காரணம்

சோற்றுடனுப்புப் போட்டுச் சுவையுடன் சமைக்கையாலும்
மாற்றியே பழயச் சுண்ணும்பதனையே யருந்தலாலும்
வெற்றநீர் மாறுமுன்னே விரைந்துமுன் குளிக்கையாலும்
சாற்றினர் தின்னமென்று தனக்குநோய் தானிதாமே (134)

(இ - ள்)

சாப்பாட்டில் உப்பை அதிகமாகப் போட்டுச் சாப்பிடுவதனாலும், பழய சுண்ணும்புடை வெற்றிலையுடன் உபயோகப் படுத்து வதாலுைம், வெந்நீர் ஆறிப்போகு முன் உடனே குளிப்பதனாலும், வியாதிகள் சம்பவிக்கக் காரணங்களாம்.

## தண்ணீர் கெடுவதற்குக் காரணங்கள்

நீர்க்கரை யிடிகரை நீசர் சேரினும்
காற்கரை கடற்கரை பெருந்த காளக
மாற்றிலும் சுற்றத் தன்னிலுந்
தொத்திய நீ ரெல்லாம் தோஷமாகுமே (135)

(இ - ள்)

கரையோரமாயுள்ள நீர், இடிந்த கரையிலிருந்து எடுத்த தண்ணீர், நீசர் குளித்த இடத்து நீர், கடற்கரையிலிருந்து எடுத்த நீர், அடர்ந்த காடுகளின் நடுவிலுள்ள சுனை நீர் முதலானவைகள் தோஷமுள்ளவைகளாகும்.



## அட்டை விதி

மண்ணில் பிறந்த வட்டைக்கு வருத்தநாலு குணங்கேளீர்
அன்னிதான் வேதியற்கு வடைந்த வட்டையனல் நிறமாம்
தின்னிதான் மன்னவற்குச் செய்யக் கழுநீராம்பல் நிறமாம்
எண்ணிச் சொன்னேம் வைசியர்க்கு விசைந்தவட்டை
வரிசைதானே (1)

சொல்லக்கேளாய் சூத்திரர்க்குச் சொன்னேம் பச்சை
நிறமாகும்
நல்லதிந்த வகைதன்னை நாட்டில் செய்யதலம் பிறக்கு
மல்லல்பழுத்த குழலானே! அறியச் சொன்னேம் மனிதற்கு
எல்லச் சொன்ன விதிப்படியே ஏறக்குறைய வென்றேதே (2)

(இ - ள்)

அட்டையிலும் நாலு ஜாதி பேதங்களுண்டு. பிராமண ஜாதி அட்டை, அனலைப்போல் சிவந்து காணும். க்ஷத்திரிய ஜாதியோ செங்கழுநீர்ப் பூவையொத்த நிறமாக இருக்கும். வைசிய ஜாதியோ ஆம்பல் நிறமாகும். சூத்திர ஜாதியோவெனில் பச்சை நிறமாகக் காணப்படும்.

## அட்டையில் ஆண், பெண் பேதம் அறியும் விதம்

அட்டையிலாணும் பெண்ணு மறிந்திட வேண்டுமாகில்
கொட்டியும் பதுமந்தானுங் கூடவே தண்ணீர்விட்டு
அட்டையை விட்டவாறே ஆண்பதுமத்திற் செல்லுங்
கொட்டியிற் பெறுசெல்லுங் குறித்தவை யறிந்து
கொள்ளே (3)



A siddhadreams ebook

(இ - ள்)

கொட்டியையும் தாமரையையும் ஒரு பாத்திரத்தி லிட்டுத் தண்ணீர் விட்டு அதில் அட்டைகளை விட்டால், ஆண் அட்டை தாமரைக்கும், பெண் அட்டைக் கொட் டிக்கும் செல்லும்.

### அட்டைப் பிரயோகம் செய்யும் முறை

சத்தியில் மாந்தருக்குத் தையல் பிள்ளைகள் தனக்கு
மொத்துநின் றூட்டிவித்து உறக்கமுந்த விரப்பண்ணி
மத்தியானத்து மேலாய் மண்கொண்டு சுத்திபண்ணி
பத்திநே ரளிதன்னைப் பார்த்து நீ யட்டை கட்டே (4)

(இ - ள்)

பலகுறைவுள்ள மனிதர்களுக்கும். ஸ்திரீகளுக்கும், பிள்ளைகளுக்கும் முதலில் ஆகாரத்தை உட்கொள்ளச் சொல்லவும். பின்னர் தூக்கமிருந்து மத்தியானத் திற்குமேல், அட்டையை மண்ணிட்டுச் சுத்தமாகிப் பிர யோகிக்கவும்.

### அட்டையை வளர்க்கும் விதம்

அட்டைதேத்தும் வகைதன்னை யறிந்தேகேளா யரக்காம்பல்
கொட்டிக் கிழங்கு பசமஞ்சள் கோலக்கழுநீர் தாமரையும்
மட்டுப் பெரிய கலத்தினிடை யைத்தன்னில் வளரவைத்துத்
தட்டிக் கட்டியெடுத் தேபோய்த் தானேவிடுவார் தப்பாதே
(5)



(இ - ள்)

ஒரு பாத்திரத்தில் அரக்காம்பல், கொட்டிக்கிழங்கு, பசமஞ்சள், செங்கழுநீர்க் கிழங்கு, தாமரைக்கிழங்கு இவைகளை வளர்க்கவும். அதில் அட்டைகளை விட்டு வளர்க்கவும்.

### ஆண், பெண் அட்டைகளை விடும் விதம்

அமுதபாக மிடப்பாக மறிந்தே யட்டை விடுவதற்கு
யமுதபாகந் தன்னிலே ஆணட்டைதன்னைப் பொருந்தவிடக்
குமுதமான விடப்பாகங் குயில்வாயாளப் பேடுதன்னைச்
சமனேயான விடத்திற்குத் தானே யறிந்துவிடு மென்றே (6)

(இ - ள்)

அமுதபாகத்தில் (வலது) பாகத்தில் ஆண் அட்டை யையும் இடது பாகத்தில் ரத்தமோக்ஷனம் செய்ய வேண்டுமெனில், பெண் அட்டையையும் விடவும். சமமான இடம் என்றால் சமயோஜிதம் போல் விடவும்.

### அட்டைப் பிரயோகத்தின் போது ஏற்படும் குறிகளும் பரிகாரமும்

கட்டிய வட்டைதானுங் கடுகவின்று விழுந்துவிட்டால்
விட்டவாயு திரமாறில் வேதனையில்லை யென்ன
முட்டங் கடுத்துதொத்து முகஞ்சுழுக் காட்டுமாகில்
விட்டவாய் வீங்குமென்று மெய்ப்படக் கூறினரே (7)

A siddhadreams ebook

போந்த வுதிரந்தன்னைப் பொருட்பட வறிந்துபின்பு
சேர்ந்த நெய்யெண்ணெய் யொக்கத் திகழவே கொண்டு நாளுங்
காய்ந்த தூண்டில்லை யென்று கலந்திடு தாரையாகப்
பாய்ந்திடு முதிரமாறும் படிவரைத் தரைத்துப் பூசே (8)

(கு - ரை)

அட்டைப் பிரயோகம் ஆனபின் நாளுவே விழுந்து அங்கிருந்து ரத்தம் வெளியானல் வலியாராது. அப்படிக் கில்லாமல், ரத்தம் கட்டி, கடிவாய் வீங்கிக் கருநிறமாகில் அதற்குச் சிகித்ஸையாவது.

எண்ணெய், நெய் இவ்விரண்டையும் கலந்து, தாரை யாக ரக்தம் நிற்கும் வரை அந்த இடத்தில் விடவும்.

## சுத்த அட்டையின் லக்ஷணங்கள்

மட்டுப் பொதியுந் தோளாய் கேள்! வருத்த நாலு வரைவுக்குங்
கட்டிப் புகட்டுமட்டைக்கும் கருதும் பிறப்புங் குலமுங்கேள்
மெட்டிப் பார்க்கு மெழுந்திருக்கு மியல்பும் பிறவு மீதிருந்து
விட்ட நாலுகுலத்துக்கும் விடுவாயென்று விளம்பாயே (9)

(கு - ரை)

பொதுவாக அட்டை சுறுசுறுப்பாக இங்குமங்கும் எட்டிப் பார்க்கும். மேலுகிழும் வேகமாகப் போகும் இயல்புள்ளது. குலத்தையும் அதன் சேஷ்டைகளி லிருந்து தெரிந்து கொள்ளவும்.



## துஷ்ட அட்டையின் லக்ஷணம்

ஆகாவட்டை யதுகேளா யலவன்தவளை நீர்ப்பாம்பு
மேகா சலத்திற் பிறந்தனவும் வேண்டாம் சருகிற் பிறந் தனவும்
போகாச் சுனையிற் பிறந்தனவும் பொல்லாவட்டை யிது வென்று
யாகாசத்தைப் படைத்தவனே! யறிவாய் மன்றி லட்டை யென்றே (10)

(கு - ரை)

சுண்டு. தவளை, நீர்ப்பாம்பு முதலான ஜந்துக்கள் இருக்கும் சுனையில் பிறந்தவைகளும், சேற்றில் பிறந் தவையும், ஒரே இடத்திலேயே தேங்கி நிற்கும் தண் ணீரில் பிறந்தவைகளும் பிரயோகத்திற்கு லாயக்கான வைகள் அல்ல.

## சஸ்திர விதி

கத்திசத்தி ரமொரு குரும்பிதனை வாங்கியுங்
கருமுக்கு வாதனுடன்கடு முள்ளுவாங்கியும்
கொடு மாமுகோலுங் கதித்திடு மடுத்த
புரையுந் தத்துகத் திரிகை பற்கறை வாங்கி
மூக்குச் சலாகையு மொழிப் பொட்டுடன் தகு
மட்டக் கோலூசி மிகுசெப்புக் குழையொடு
சலாகை வட்டகையு மிகவேகுத்து மொருபஞ்ச
முகஞ்செப்புச் சலாகையு கூறுகாயக் கோலுமேற்
குலவுமொருதண்டு சலாகை நயனக்கத்தி
கூடுமிவ் வகையானதே பத்துடன் பதினறு
வகை யானதாயுதம் பார்மீது பண்டிதற்குப்

A siddhadreams ebook

பரமசிவ னருளா லுண்டான திவ்வகை
பகுந்த நந்தியுரை செய்வாரே (1)

(இ - ள்)

| | |
|---|---|
| கத்தி | சஸ்திரம் |
| குறும்பிவாங்கி | முகவாதனன் |
| முள்ளுவாங்கி | ஆழுக்கோல் |
| கத்திரிகை | பற்கறைவாங்கி |
| மூக்குச்சலாகை | மொழிப்பொட்டு |
| அட்டக்கோல் | ஊசி |
| செப்புக்குழை | சலாகை |
| வட்டக்கைச்சலாகை | பஞ்சமுக செப்புச் சலாகை |
| ஆயக்கோல் | தண்டுச் சலாகை |
| நயனக்கத்தி | செப்புச் சலாகை |

குறிப்பு :

செய்யுளில் குறிப்பிட்டப்படி 26 வகை சஸ்திரங் களும் விளக்கவில்லை.

---

## கத்தியின் லக்ஷணம்

கதித்த மூவிரலங்குல மூன்றரை
மெத்துக் கூறுமோ ரதற்குமோ ரங்குலஞ்
சித்தமா யிவை செப்பிடும் போதுதான்
வைத்தவட்ட மயிர்க்கத்தி காணுமே (2)

(இ - ள்)

மூன்று விரற்கெடை அகலமுள்ள தாகவும் 3½ அங் குல நீளமுள்ளதாகவும் அதன் நுனி வட்டமாக இருத் தல் வேண்டும். இதற்கே மயிர்க்கத்தி என்றும் பெயர்.

---



## சஸ்திரத்தின் லக்ஷணம்

அன்று மங்குல மாறிமளவு வேப்பிலை தன்காம்பு
உண்டென வுருக்கும்போது உகந்தநற் பிளவைதன்னை
கண்டமாய் வட்டமொக்க வறுத்து அச்சத்திரத்தா
லுண்டெனக் கட்டிர் பாளமுறுவினை யறுமதென்றே (3)

(இ - ள்)

6 அங்குல நீளமுள்ளதும், வேப்பிலையின் ஓரத்தில் காணும் பற்களைப் போன்று, சிறுசிறுபற்களுள்ளதாக வும் இருக்கும் பிளவைகளைத் துண்டம் துண்டாக அறுக் கலாம். இதனால் வேண்டாத மாம்சங்களையும் வட்டம் வட்டமாக அறுக்கலாம்.

---

## குறும்பிவாங்கியின் லக்ஷணம்

அங்குலமே மழுதாகு மதனிறை யரைக்கழஞ்சு
பொங்கிய குறும்பிவாங்கி யதிமூலை குதிர்ந்து மெய்யிற்
செங்கைதா னசைவில்லாமற் செப்பமா யாகத்தானே
பங்கமில்லாமற் றானேபழுதற வாங்கதன்றே (4)

(இ - ள்)

7 அங்குலத்தில் 1½ வராகனெடை எடையில் ஒரு பக்கநுனியில் கரண்டியைப்போல் குழிவு ஏற்படுத்தி வழவழப்பாகச் செய்து கொள்ளவும். அதற்கு அசை யாதபடி ஒருபிடியையும் தயார் செய்து போட்டுக் கொள்ளவும்.

---

A siddhadreams ebook

## முகவாதனன் லக்ஷணம்

நிறையது முக்கழஞ்சு தெரியகவுறு மூன்று
வுளையுமா வளவுநீள மங்குலம் பத்திரெண்டே
அறையுமிவ் வகையினாலே ஆகியவிதி தப்பாமல்
பொறையிலா நோய்தனக்குப் போத நீரட்டை போடே (5)

(இ - ள்)

இக்கருவியின் நிறை 3¾ வராகனெடையாகும். 12 அங்குல நீளம் உடையதாகவும், 3 சலாகைகளையுடையதாகவும் இருக்க வேண்டும். (ஒவ்வொரு சலாகையும் ¾ கழஞ்செடையுடையதாக இருக்க வேண்டும்).

## முள்ளுவாங்கியின் ரூபம்

இருமுனை நடுவேதானே யேற்றமா முறுவலெள்ப
தொருகழஞ் சொக்கக் கொண்டு மந்தது வளமையாக
வருவினை யறுக்கக்கீற வளர்நகம் வாங்கச்சிவக்
குருமொழி முள்ளுவாங்கிக் குணமிது கூறுவோமே (6)

(இ - ள்)

இரண்டு முனைகளுக்கு இடையே ஒரு முள்ளுப்போல் தட்டையாகச் செய்த அலகை வைத்து ஒரு பக்கத்தில் ஆணிபோட்டுக் கொண்டு பத்திரப்படுத்தவும். இதனால் கட்டிகளின் வாயை அறுக்கவும். இறவும் உபயோகப் படுத்தலாம். சேதிக்கலாம். இதன் எடை 1¾ வராகனெடையாகும்.



## ஆழிக்கோலின் ரூபம்

பருமமா மாழிக்கோலே பலமது மரையதாகும்
பொருமிய வளையம்பாதி பொருந்திய காத்தில்பாதி
விரிவுள வங்குலந்தான் விளம்பவே பத்துமாகும்
மருவிய நோய்தனக்கு மகிழ்ந்து நீ ரெட்சைபோடே (7)

(இ - ள்)

இதன் நிறை ½ பலம், இதன் நீளம் பத்து அங்குலங்களாகும். இதில் வளையும் உள்ளபாகம் 5 அங்குலமும் கைப்பிடியுடன் கூடியதும் கைக்குள் அடங்கக் கூடியதுமான பாகம் 5 அங்குலமும் இருத்தல் வேண்டும்.

## பிறைக்கோலின் குறிகள்

ஈன்ற மூன்றங்குலங் காம்பெழுத்தாணி போல
நீண்ட தன்பிறைக் கோலங்குல மொன்பதாய்க்
கண்டிடு மிதனுடன் காம்பின் பருமையால்
தூண்டிடும் வியாதியின் துன்ப மறுக்குமே (8)

(இ - ள்)

இதன் நீளம் 9 அங்குலம். அதன் கூருள்ள பாகம் மாத்திரம் எழுத்தாணியைப் போல் 3 அங்குல நீளம் இருத்தல் வேண்டும். அதன் கனமான தலைப் பாகத்தை அர்த்த சந்திரன் வடிவமாகச் செய்து கொள்ளவும்.



A siddhadreams ebook

## கத்திரிகையின் ரூபம்

மன்னிய வங்குல மெட்டரை யதனிறை
பன்னிய காற்பலம் பித்தியகால் கரி
பின்னிய கன்னிரு வாய்திறம் வியாதியைக்
கன்னிய மயிர்களைக் கத்தரிக் கோலதே (9)

(இ-ள்)

¼ பலம் நிறையில் 8½ அங்குல நீளத்தில் அலகுகள் தயார் செய்து குறுக்காகப் பிணித்துக் கொள்ளவும். இது மயிரைக் கத்தரிக்க உதவும்.

## பற்கரைவாங்கி

எட்டரங்குல மிசைந்த பற்கரை (பலமரை)
வெட்டி யாதாய்முனை யொருகோன் பருப்பாகவே
தட்ட மாயித்திலே தெத்தத் தன்னிலே
குட்டமாய் வருபிணி விளக்கிக் கூறவே (10)

(இ-ள்)

16 அங்குல நீளமுள்ளதாகச் செய்து, அதன் முனையில் ஒரு பருப்பு உட்புகும்படியான குழிசெய்து கொள்ளவும். இதனைக் கொண்டு பற்களில் உண்டாகும் நோய்களையும் கரைகளையும், குட்டம் போன்ற மற்ற பிணிகளையும் நீக்குவதற்கு உபயோகிக்கலாம். இதன் நிறை ½ பலமாகும்.



## முச்சலாகையின் ரூபம்

பொருமுனை தடித்தவாயாக் கொடுபுடைப்பதா
மருவிய சத்தமும் வகுப்புமுன்னதாம்
அருவிய நாற்கழஞ் சங்குலமேழதாம்
வருவினை புன்னதை வாங்கு தண்டாயுதம் (11)

(இ-ள்)

5 வராகனெடை யெடையில் 3 அலகுகளையும் 7 அங்குல நீளத்தில் பருத்து வைத்துக் கொள்ளவும். அதாவது அதன் நுனி 3 பிளவுள்ளதாக இருக்க வேண்டும். இது முச்சலாகை எனப்படும் கருவியாகும்.

ஆக கவி. 3000

## ஜீவர கண்டிகை

### * அச்வனி நக்ஷத்திரம்

குதிரை தன்னைச் சேர்முதற்கால்
குறித்த ஒன்பது நாட்செல்லும்
முதிரவிரண்டாம் பக்கத்தில்
முதவாய்ப் பத்தா ஞனரும்
பதிசேர் மூன்றுங் காலுக்கே
பகரும் பதினைந்தாலுனே
நிதிசேர் நாலாங் காலுக்கு
நில்லா துயிரும் நில்லாதே. (க)

* ஒரு நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகையை 4 பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாதமாகக் கணக்கிடு கிறார்கள். நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகை 60 என்று வைத்துக்கொண்டால் ஒவ்வொரு பாதமும் 15 நாழிகை அதாவது 6 மணி நேரங்களாகும்.

A siddhadreams ebook

(இ - ள்)

அச்வனி நக்ஷத்திரம் ஒன்றும் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால், ஒன்பது நாட்கள் கழித்தே குணமாகும். இரண்டாம் பாதத்தில் ஆரம்பித்தால் பத்து நாட்களில் தீரும். மூன்றும்பாதமாகில் பதினைந்து நாட்களில் சொஸ்தமாகும். நாலாம் பாதத்தில் ஜ்வரம் ஆரம்பித் தால் ரோயாளி இறப்பான்.

### பரணி நக்ஷத்திரம்

சாத்தார் பரணி நாளுக்குத்
    தோன்றுங்காலே மூன்றுநாள்
உரைத்த விரண்டாங் காலுக்கே
    முனேதேழு நாள்செல்லும்
நிரைத்த மூன்றுங் காலுக்கு
    நேராம் பக்கம் பதினைந்தாம்
சாற்றீர் நாலாங் கால்மாதந்
    தனிலுவிரண்டுஞ் சுகமாமே. (2)

(இ - ள்)

பரணி நக்ஷத்திரத்தில் முதற் பாதத்திலேற்பட்ட ஜ்வரம் மூன்றும் நாள் தீரும். இரண்டாம் பாதமாகில் ஏழாவது நாளில்தான் குணமாகும். மூன்றும் பாதத் திலுண்டான ஜ்வரம் 15 நா ளி ல் விடும். நான்காம் பாதத்திலேற்படில் 32 நாட்களில் குணமாகும்.

### கார்த்திகை நக்ஷத்திரம்

கார்த்திகை முதற்கா லொன்பதுநாட்
    காட்டுமீழுக்கு மிரண்டாங்கால்



மாற்று மூன்றுங் கால்தானே
    மருவு பதினைந் தாய்நலமே
பார்த்து நாலா வதுகாலே
    பதித்ததிங்கள் பதினெட்டாம்
போற்று மிதுநற் குணமாகும்
    பொருந்துமிதுவே பொருந்தீரே. (3)

(இ - ள்)

கார்த்திகை நக்ஷத்திரம் முதற்பாதத்தில் உண் டான ஜ்வரமாகில் 9 நாட்களில் தீரும். இரண்டாவது பாதத்திலும் அப்படியேதான். மூன்றும் பாதத்தில் ஏற்படும் ஜ்வரம் 15 நாட்களில் விடும். நான்காம் பாத மாகில் 18 நாளில் குணமாகும்.

### ரோகிணி நக்ஷத்திரம்

ரோகிணி மரிக்கு முதற்காலே
    தம்மிவிரண்டா வதுவென்னில்
ரோகம் பதினெட்டாம் சுகமே
    லொருவா மூன்று காலுக்கு
மாதமிருபது ரெண்டுகுண
    மாமே நாலாங் காலுக்கு
போக விரண்டு திங்களு நாள்
    பொருந்திருபத்தஞ் சாய்விடுமே. (4)

(இ - ள்)

ரோகிணி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் ஆயுளைப் போக்கும், 2-ம் பாதத்தில் ஆரம்ப மானல் 18 நாள் கழித்துத்தான் காய்ச்சல் விடும். மூன் றும் பாதத்தில் ஜ்வரம் உண்டாகில் இருபத்திரண்டு

A siddhadreams ebook

நாட்கள் கழிந்தந்தான் குணமுண்டாகும். நான்காம் பாதமாகில் 2 மாதத்தில் தீரும்.

## மிருகசீர்ஷ நக்ஷத்திரம்

மிருகந்தீர் முதற் காலே
　　விடுமோ திங்க ளொன்றுனல்
மறகு மிரண்டாங் காலாகில்
　　மாறவெட்டு நாளாமே
குறுகு மூன்றுங் காலுக்கே
　　குறித்து மிருபது மாகிவிடு
தருகா நாலா வதுதானே
　　தானேயிருபத் தஞ்சென்றே. (5)

(இ-ள்)

மிருகசீர்ஷ நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால் ஒரு மாதத்தில் தீரும். இரண்டாம் பாதத்தில் உண்டான ஜ்வரம் எட்டு நாட்களில் குணமாகும். மூன்றும் பாதத்திலேற்பட்ட காய்ச்சல், இருபது நாட்களில் தீரும். நான்காம் பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் இருபத்தைந்தாம் நாள் தீரும்.

## புனர்பூச நக்ஷத்திரம்

* புனரி பூச முதலதுவே
　　பொருத்த காம்நா ளேழாகும்
மரணா ரண்டாவது தனக்கு
　　மாறல் பதினஞ் சாகுமெனா

* திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஏற்படும் ஜ்வரத்தின் கால அளவு காணப்படாமலிருப்பதைக் காண்க. விசாகம் இல்லை.



குணமிக் கதுமூன் றுளதுவே
　　குறித்த பத்து மொன்பதும்
துணவே கொடுத்த நாலாங்கா
　　லுனமே மரிக்குங் கண்டீரே. (6)

(இ-ள்)

புனர்பூச நக்ஷத்திரம் ஒன்றும் பாதத்தில் ஆரம்பமாகிய ஜ்வரம் 7-வது நாள் தீரும். இரண்டாம் பாதத்தில் ஜ்வரம் வந்தால் 15 நாட்களில் குணமாகும், மூன்றும் பாதமாகில் 19 நாட்களில் தீரும். நாலாம் பாதமெனில் நோயாளி பிழைக்கமாட்டான்.

## பூச நக்ஷத்திரம்

பூசநாட்கா மேழுநாட் முதற்
　　பொருக்குமே மிருகாவினில்
நேசநாளீராறு நாள்விடு
　　நீதியாமிகில் மூன்றுமே
பாசமாய்விடும் பத்துமொன்பது
　　பகா நாலுஞ் சொல்லுகவே
தொகைகேளி ருபத்தேழு
　　சுத்தமாய் வரு தேகமே. (7)

(இ-ள்)

பூச நக்ஷத்திரம் முதல் பாதத்திலுண்டான காய்ச்சல் ஏழாவது நாள்தீரும். இரண்டாம் பாதத்தில் ஆரம்பமானல் 12 நாட்களில் குணமாகும். மூன்றும் பாதத்திலேற்படின் 19-வது நாள் தீரும். நான்காம் பாதமெனில் 27-வது நாளில் தான் ஜ்வரம் இறங்கும்.

A siddhadreams ebook

## ஆயில்ய நக்ஷத்திரம்

ஆயில்ய முதற்கரமே யொன்பதாறு
　　எடுத்திரண்டு மிருபதுநா ளாருமென்ப
மேகியமுன் றருபதுநாள் சுத்தமாகும்
　　மேவுகால் நாலுக்கு மெய்யே சொன்னோம்
தோகையே சொல் மாதமொன்று நாளுமாறு
　　சொல்லுநா ளிதுசுகமே சுத்தமென்க
ஆகமுடன் சொல்லியது சாத்திரம்மாலை
　　யடவிதனை யறிந்தறிந்து ஆய்ந்துகொள்ளே. (8)

(இ-ள்)

ஆயில்ய நக்ஷத்திரம் முதல் பாதத்திலுண்டான ஜ்வரம் ஒன்பதாவது நாள் தீரும். இரண்டாவது பாதத்திலேற்பட்ட ஜ்வரமெனில் இருபது நாட்கள் அடிக்கும். மூன்றுவது பாதத்தில் ஆரம்பமானல் இருபது நாட்கள் சென்றே குணமடையும். நாலாவது பாதமெனில் ஒரு மாதமும், 6 நாட்களும் சென்ற பின்புதான் சொஸ்தமாகும்.

## மக நக்ஷத்திரம்

மகத்திடைவீர் முதற்காலே மரிக்குமிரண்டா
　　வதுநாளே யிருபதுநாள் வாறுமென்க
இகத்துடைவீர் கால்மூன்றுக் கெண்பத்தஞ்சு
　　தினமானல் விடுக்கும் நாலுதானே
சுகத்துடனே அஞ்சானுள் சுத்தமாகும்
　　சொல்லுமென முந்நூலின் தொகுதிகாண்க
முகத்துடைவீர் வதனமலர் மாதேகண்ட
　　முறையில்வரு மறையிதிது முயன்றநாளே. (9)



மக நக்ஷத்திரம் முதல் பாதத்திலுண்டானல் ஆயுளைப் போக்கும் இரண்டாம் பாதத்திலேற்பட்ட காய்ச்சல் தணிய இருபது நாட்களாகும். மூன்றுவது பாதத்தில் ஆரம்பமானல் எண்பத்தைந்து தினஞ் சென்றபின் குணமாகும். நாலாவது பாதத்திலுண்டான ஜ்வரம் ஐந்தாவது நாள் தீரும்.

## பூர நக்ஷத்திரம்

பூரமதில் வெப்புதிக்கில் முத்தக்கால்சாவாம்
　　பொறுத்திரண்டு மிருபத்தஞ்சநாளே செல்லுந்
தீரமுள்ள மூன்றேகால் முப்பத்தாறு
　　தினமாகிவிடுமிதனைத் தேர்ந்துகொள்க
பாரமுட னுலாங்கா லெண்பத்தொன்று
　　பத்தியதோ யதுதீரும் படியே சொன்னோம்
நாரணியாள்கேட்டருள அரனே சொல்ல
　　நட்செத்தி ரமாலை நாடுங்காலே. (10)

(இ-ள்)

பூர நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஆரம்பமான காய்ச்சல் கோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில் ஏற்பட்டால் இருபத்தைந்தாம் நாள் தீரும். மூன்றுவது பாதமாகில் முப்பத்தாறுவது நாளில் குணமாகும். நான்காவது பாதத்தில் ஆரம்பமானல் 81 நாட்கள் சென்றுதான் குணமாகும்.



A siddhadreams ebook

## உத்திர நக்ஷத்திரம்

உத்திரநாள் முதற்பாதம் நாளெட்டாகும்
முடனிரண்டு இருபதுநாள் செல்லுமென்க
அத்திரமே மூன்றேகா லன்பதாகு
மதனொடு நாளிரண்டு மானதேகாண்
குத்திரமா நாலாங்கால் குணமேயில்லை
சொல்லுமிது சுரமீதில்கோதையேகே
ளத்தனுரை செய்திடவே உமையாள்கேட்ட
வாயுள்மறை யின்பயனை யறிவதாமே. (11)

(இ-ள்)

உத்திர நக்ஷத்திரம் முதற்பாதத்தில் பற்றிய ஜ்வரம் எட்டு நாட்களில் தீரும். இரண்டாவது பாதமெனில் இருபதாவது நாளில் குணமாகும். மூன்றாவது பாதத்திலேற்பட்ட ஜ்வரம் 52-வது நாள் தீரும். நாலாவது பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் நோயாளியைக் கொல்லும்.

## ஹஸ்த நக்ஷத்திரம்

அத்தத்தில்த் தோன்றுசுர முதற்காலெட்டு
மாசசெல்லு மிருபதாமஞ் சேனாருஞ்
சுத்தமுள்ள மூன்றுங்கா லிருபத்தெட்டு
செல்லுகுண மாமீது சுரமேநல்ல
நற்றநிழல் நாலாங்கா லன்பத்திரண்டு
நாட்சென்று விட்டுவிடும் நாரிகேளாய்
சுத்தமு டனுரைத்த சுர நூல்மாலை
சொல்லியநாள் முறைமீறுத் தொருதியாமே. (12)



(இ-ள்)

ஹஸ்த நக்ஷத்திரம் முதல் பாதத்திலேற்பட்ட ஜ்வரம் தீர எட்டு மாதங்களாகும். இரண்டாவது பாதமாகில் இருபத்தைந்தாம் நாள் தீரும். மூன்றாவது பாதத்திலேற்பட்ட ஜ்வரம் இருபத்தெட்டு நாட்கள் சென்ற பின்தான் தீரும். நான்காவது பாதத்தில் ஆரம்பித்த ஜ்வரம் தீருவதற்கு ஐம்பத்திரண்டு நாட்களாகும்.

## சித்திரை நக்ஷத்திரம்

சித்திரைசேர் பாதமுத லொன்பதேநாட்
சொல்லுமிரு காலுக்குப் பதினைந்தாகும்
புத்தியுடன் மூன்றேநாற் பத்திரண்டு
பண்புடனே சொல்லுநாள் பார்த்துச் செல்வி
மெத்தநலம் நாலாங்கால் நாற்பத்தொன்
பதுமீ றுறுகுண முண்டாய்விடு
மெய்யெனவேற் கனமாதே கேளாயென்று
விமலருரை சுரநூலின் வேதமாமே. (13)

(இ-ள்)

சித்திரை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் காய்ச்சலுண்டானால் அது ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதமானால் 15 நாட்களாகும். மூன்றாம் பாதத்தில் பிடித்த ஜ்வரம் 42-வது நாள் தான் குணமாகும். நான்காம் பாதத்திலேற்படில் 49-வது நாள் தான் தீரும்.

A siddhadreams ebook

## சுவாதி நக்ஷத்திரம்

சோதிநாட் முதற்பாதம் பனிரண்டே
 நாட்செல்லு மிருகால்ம சிக்குமென்க
மேதினியில் முப்பதாம் பதினெட்டே நாள்
 விடுசாமே தப்பாது விளம்பினேன்கண்
ஆதியே நாலாங்கால் பனிரெண்டேநா
 ளாறிவிடு வெப்பகலு மாதலால் நீ
நீதிசே குணமதானே உரைத்தநானே
 நெறியுடனே சேர்ந்தறிந்த நீதிதானே. (14)

(இ - ள்)

சுவாதி நக்ஷத்திரத்தில் பிடித்த ஜ்வரம் 12-வது நாள் தீரும். இரண்டாம் பாதமாகில் அது பிணியாளியைக் கொன்று விடும். மூன்றும் பாதத்திலேற்பட்ட காய்ச்சல் 48 நாட்கள் சென்று குணமாகும். நான்காம் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் 12-வது நாள் தீரும்.

## அநுஷம், கேட்டை நக்ஷத்திரம்

அனுஷமுதற் கால்மரிக்கு மிரண்டிருமதாகு
 மன்புடனே மூன்றுங்கால் தொண்ணூறாகு
மனுவுடையீர் சதுர்பாத மிருபத்திரண்டு
 மறுமே காமதுவு மானேகேளாய்
தனுவான கேட்டைமு தற்கால்சாவாம்
 தனித்திரண்டு மிருபதுநாட் சாந்தமாகும்
பனுவலாய மூன்றுங்கால் முப்பத்தொன்று
 பார்நாலு காலெண்பத் திரண்டுமென்பதாமே. (15)



(இ - ள்)

அநுஷ நக்ஷத்திரத்தில் முதல் பாதத்தில் ஜ்வரம் உண்டானால் நோயாளி இறப்பான். இரண்டாம் பாதத்தில் ஆரம்பமாகில் இரண்டாவது மாதந்தீரும். மூன்றாவது பாதத்தில் உண்டான காய்ச்சல் 90 நாட்களில் குணமாகும். நான்காவது பாதமாகில் இருபத்திரண்டாவது நாள் தீரும்.

கேட்டை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் காய்ச்சல் ஆரம்பமானால் ரோகி மரிப்பான். இரண்டாவது பாதமானால் காய்ச்சல் 20-வது நாள் தீரும். மூன்றாவது பாதத்தில் உண்டான ஜ்வரம் முப்பத்தொன்றாவது நாள் குணமாகும். நாலாவது பாதத்திலேற்பட்ட காய்ச்சல் எண்பத்திரண்டாவது நாள் தீரும்.

## மூலம், பூராட நக்ஷத்திரம்

மூலமுதற் கால்மரிக்கு மிரண்டாம் பாத
 மூன்றுநா ளில்விடு மூன்றுங்காலே
னானுட்பத் துசெல்லு நாலாம்பாதம்
 சத்தகமா னுட்சென்று சாந்தமாகு
மால்விழியாய்ப் பூராட மாகியநாள்
 முற்பக்கம் மொன்பதாகும்
கால்மரிக்கு கொல்லிரண்டாங் மூன்று கூறியநாள்
 பத்தில்விடும் நாலாங்கா லஞ்சுசென்றே. (16)

(இ - ள்)

மூல நக்ஷத்திரம் முதல் பாதத்திலேற்பட்ட ஜ்வரம் நோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில்

A siddhadreams ebook

ஆரம்பமானால் மூன்று நாட்களில் குணமாகும். மூன்றாவது பாதத்தில் ஜ்வரம் தொடர்ந்தால் பத்தாவது நாள் தீரும். நாலாவது பாதமானால் ஏழாவது நாள் குறையும்.

பூராட நக்ஷத்திரம் முதல் பாதத்தில் உண்டான ஜ்வரம் தீருவதற்கு ஒன்பது நாளாகும். இரண்டாவது பாதமானால் அது நோயாளியை மரிக்கச் செய்யும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பித்தால் பத்தாவது நாள் தீரும். நான்காவது பாதமாகில் ஐந்தாவது நாள் குணமாகும்.

## உத்திராடம், திருவோண நக்ஷத்திரம்

உத்திராட முதற்கால்சந் தனான முதிந்திரண்டு
 மிருபதுநாள் மூன்றுமுப்பதே சொல்லும்
பத்திமிராம் நாலுக்கு நாற்பத்தி ரண்டுபாங்
 காகுந்திரு வோணம்முதற் கால்பதி னோர்நாள்
சுந்திமிரா மிருகாலில் பத்தே செல்லும்
 சொல்மூன்றுங் காலுக்கு எட்டேசொன்றும்
மெத்தீராய் நாலாங்கால் மரிப்பதாகும்
 மெய்நூலின் படியிதனை விளம்புவோமே. (17)

(இ - ள்)

உத்திராட நக்ஷத்திரம் முதற்பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் தீருமதற்கு ஏழு நாட்களாகும். இரண்டாவது பாதத்திலேற்படின் இருபதாவது நாள் தீரும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் முப்பதாம் நாள்



அநுகூலமாகும். நான்காவது பாதத்தில் காய்ச்சல் உண்டானால் நாற்பத்திரண்டாவது நாள் தீரும்.

திருவோண நக்ஷத்திரம் முதற் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால் பதினோராம் நாள் தீரும். இரண்டாவது பாதத்தில் ஆரம்பமான காய்ச்சல் பத்தாவது நாள் குணமாகும். மூன்றாம் பாதத்தில் தொடர்ந்த காய்ச்சல் அநுகூலமாக எட்டு நாட்கள் ஆகும். நான்காவது பாதமானால் ஆயுளைப் போக்கும்.

## அவிட்ட, சதய நக்ஷத்திரம்

நிலமவிட்ட முதற்கால நா ளொன்பதாகும்
 நேரிருகால் பதினைந்த மூன்றுங்காலே
விதப்படியே யிருபதுவு மிரண்டுநாளே
 மீறுதே நாலாங்கா லிருபத்தொன்பதேகேள்
பதத்துடைய சதையமுதற் பதினொன்றேசொல்
 பலமிரண்டிற் பதினொன்று நாளதாகும்
மிதப்படியே மூன்றுமூவே ழெட்டேசெல்லு
 மீறுது நாலுங்காலிருபத்து ரெண்டுமாமே. (18)

(இ - ள்)

அவிட்ட நக்ஷத்திரத்தில் முதல் பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் குணமாக ஒன்பது நாள் பிடிக்கும். இரண்டாம் பாதமானால் 15 நாளில் தீரும். மூன்றாம் பாதமாகில் 22-வது நாள் குணமாகும். நான்காம் பாதத்தில் தொடர்ந்த காய்ச்சல் 29-வது நாள் விட்டு விடும்.

A siddhadreams ebook

சதைய நக்ஷத்திரம் முதல் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் பதினொன்றாம் நாள் தீரும். இரண்டாம் பாதமானாலும் பதினொன்றாவது நாள் தான் குணமடையும். மூன்றாம் பாதத்திலேற்படில் 15 நாட்களிலும், நான்காம் பாதமாயில் 22 நாட்களிலும் குணமாகும்.

## பூரட்டாதி, உத்திரட்டாதி நக்ஷத்திரம்

பூரட்டா திமுதற்கால் மரிப்பதாகும்
    பொருந்திருகால் பதினாறில் தீரும்
தெரிட்ட மூன்றுக்கெழு பத்தோர் நாளாகிற்
    செயமே நாற்கால் நமற்பத்தொன் றேதீருஞ்
சீரிட்ட உத்திரட்டாதி முதற்காலேழில்
    செல்லுமிரு கால்பதினெட் டில்த்தானும்
சேரிட்ட திரிவிதக்கா லேழில்த் தீர்ந்து
    செல்லும்நாற் கால்மரிப்ப தென்றுநூலே (19)

(இ - ள்)

பூரட்டாதி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்த ஜ்வரம் 'நோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில் ஆரம்பமானால் பதினாறு நாட்களில் தீரும். மூன்றாவது பாதத்தில் காய்ச்சல் வந்தால் எழுபத்தொன்றாவது நாள் குணமாகும். நான்காவது பாதமாயில் நாற்பத்தொன்றாநாள் விடும்.

உத்திரட்டாதி நக்ஷத்திரம் முதற்பாதத்தில் ஜ்வரம் உண்டானால் எழு நாட்களில் தீரும். இரண்டாவது பாதமெனில் பதினெட்டாவது நாளன்றுதான் ஜ்வரம் விடும். மூன்றாவது பாதத்திலாரம்பித்த ஜ்வரம் எழாவது நாளில் குணமடையும். நான்காவது பாதத்தில்



ஜ்வரம் ஏற்பட்டால் நோயாளி பிழைக்கமாட்டானென்று அறியவும்.

## ரேவதி நக்ஷத்திரம்

ரேபதியின் காமுதற்கால் மரிப்பதாகும்
    மிரண்டாங்கால் பதினோரா நாளேதீரு
மாதியேமுன் றுங்கால்பதி னெட்டில்தானும்
    வருகாம்நாற் காலதுவே இருபத்தாறில்
பூபதிசே ரனுகூல மடையுங்கண்டீர்
    புகல்கர நூல் கண்டிகை புகலக்கேள்மின்
நாபதிசே ருமைகேட்க வானே சொன்ன
    சாஸ்திரந்தை யுரைப்பவர்கேள் தப்பாதென்றே
(20)

(இ - ள்)

ரேவதி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் பீடித்த ஜ்வரம் ரோகியைக் கொல்லும். இரண்டாம் பாதமாயில் பதினொன்றாம் நாளன்று குறைவடையும். மூன்றாவது பாதத்திலேற்பட்ட ஜ்வரம் பதினெட்டாம் நாள் தான் சௌக்கியமாகும். நான்காவது பாதத்தில் ஆரம்பமான காய்ச்சல் இருபத்தாறாவது நாள் குணமாகும் என்றும் தெரிந்து கொள்ளவும்.

குறிப்பு :

இங்கு கூறப்பட்ட விபரங்கள் யாவும் ஜ்வரத்திற்கு மருந்துகள் கொடுக்கப் படாமலிருந்தால், அது தானாக சௌக்கியமாகும் தினங்களாகும்.



A siddhadreams ebook

## ஔஷதம் பண்ணுகிற லெட்சணம்

பூவந்த வாதிபரை புன்சடையோன் வஞ்சியுடை
மாவுந்தி பூத்த மதகளிறே — தேவுந்தன்
வாகட நூலின் பயனுல் மானிடர்வஞ் சனைதீர்க்க
வாருடனென் முன்னிற்க வா (1)

(இ - ள்)

சிவபெருமானின் பத்னி பார்வதி தேவியின் வயிற்றில் ஜனித்த விநாயகப்பெருமானே! மானிடர்களுக்கேற்படும் நோய்களைத் தீர்க்கும் மருந்து முறைகளின் பயனைக்கூற வந்தருள வேண்டும்.

---

## மருந்து தயாரிப்பதற்கு முன் செய்ய வேண்டிய கிரமங்கள்

சதுரப்பட மெழுகிச் சாணகத்தன்னி
லதிரக்கரி முகனுக்கி — மதுரமாங்
காயும் கனித்தனித்து காரிகையாய்! எப்போதும்
மாயும் மருந்தன் பாலாடு (1)

செந்நெல்லரிசிமேற் செம்பொற் கலம்பதித்து
முன்னிற் பலவாக்கியம் முழங்க — வண்ணமுடன்
பாக்கு மிலையும் பழமும் பரிந்தளித்தே
யார்க்கு மருந்தன் பாலாடு (3)

(இ - ள்)

மருந்து தயாரிப்பதற்கு முன், அந்த இடத்தைச் சாணத்தால் நான்கு மூலையாக மெழுகி, சாணத்தாலேயே பிள்ளையார் பிடித்து வைத்து, பூஜித்து, வெல்லம்,



தேங்காய் முதலானவைகளை வைத்து நிவேதனம் செய்யவும். பின்னர் ஒரு வாழையிலையில் செந்நெல்லரிசியைப் பரப்பி, அதன்மேல் (தங்கம்) செப்புக் கலசத்தை வைத்து, மந்திரஜபம் செய்து வெற்றிலை பாக்கு, பழமும் வைத்து நிவேதனம் செய்து விட்டு மருந்துகளைப் பிரயோகஞ் செய்யவும்.

---

## மருந்துகளை அரைக்கக் கூடியவர்கள்

ஓடொரு வாயன்றி ஒரு போதரித்திட்டுத்
தேடரிய மாமருந்தைச் செப்புங்கால் — வாடு
மங்கிலி யானர்க்காம் வரைக் கத்துழாவச்
சுமங்கலியானா மென்றே சொல் (4)

விழுவேற் கண்ணும்! மிருதுபாகஞ் சீந்
தரளைகர பாகநாளுரு — வாரி
மருந்துண்டார்க் கெல்லாம் வாக்கிதுவே யாரு
மருந்துங் காற்சிக் கென்றதாம் (5)

(இ - ள்)

மருந்துகளை அரைக்கவும், அடுப்பின் மேல் வைத்துத் தயார் செய்யும் மருந்துகளைத் துழாவவும் சுமங்கிலிப் பெண்களையே செய்யச் சொல்லவும்.

---

## தைலத்தின் பாகபேதங்கள்

சாற்றிக் கலத்தை வைத்துத் தான்கடுகை விட்டெறிந்தால்
வாய்ந்த கரபாக மணியோசை — சேர்ந்த பின்

A siddhadreams ebook

மிருது பாகஞ் சிக்கென வாந் தேனின்
தன் மெழுகு பாகமெனச் சாற்று (6)

(இ - ள்)

தைலத்தின் சக்கையை எடுத்து ஒரு சுத்தமான தரையில் விட்டெறியவும். அது மணியோசைப்போலக் கிணீரென விழும். இது "க ர பா க ம்" எனப்படும். அதன் சக்கை மிருதுவாகவும் பிசின் போலவும் இருந்தால் "மிருது பாகம்" ஆகும். அதன் கல்கத்தில் தேன் மெழுகைப் உருட்டும் போது உண்டாகும் இரேகைகள் போல் விழுமானால் அது "மெழுகு பாகம்" எனப்படும்.

## மருந்தை வடிக்கட்டி, உபயோகிக்கும் முறை

பாத்திரத்திற் காப்புத் தரித்துப் பலமருந்தால்
சேத்துாக்க நெய்யெண்ணெய்ச் செய்வித்து — காத்திரமாந்
தொடிப் பிடவைதனிற் கொள்ளும் புதத்தேத்தும்
சாடிப் பிடவைக் கேசரம் (7)

சாய்ந்து வடித்துப் பிடித்து தட்டாமலே கடுகைச்
சேர்த்து தெரித்துப் பிடித்துத் தேற்றியபின் — மூத்தபெரும்
கன்றுனே யாற்றும் கதிரவர்க்கு மக்னிக்கும்
தன்றுய முதலிக்கும் தாடு (8)

இ - ள்)

மருந்து காய்ச்சும் பாத்திரத்திற்குக் காப்பு கட்டி, அதாவது, சந்தனம், குங்குமம், மஞ்சள், பிரிநூல் இவைகளினால் அலங்காரம் செய்துப் பின்னர் அதில் நெய்யோ



எண்ணெயோ விட்டு எரித்துப் பதமாக்கவும். முன் கூறியது போல், மற்றொரு பாத்திரத்திற்கும் காப்புத் தரித்து, அதன் வாயில் ஒரு புதுப்புடவையைக் கட்டி அதன் மேல் வடிக்கட்ட வேண்டிய மருந்தை (நெய்யோ அல்லது எண்ணெயோ) கீழே கொட்டாமல் சக்கிரதையாகச் சுருடனே சாய்ந்து முட்டையாகக் கட்டி தெரித்துப் பிழியவும்.

பின்னர் இந்த மருந்தை, விநாயகர், சூரியன், அக்கினி முதலான தேவர்களுக்கு நிவேதனம் செய்யவும்.

## மருந்துகளைப் பருகும் விதம்

ஓமமொரு பாலொருபால் வைத்தியர்க்குச்
சேமமெனுந் தர்மங்கள் செய்யொரு பா—லாமாந்
தனக்கொரு பாலாகத் தான்மருந்து கொண்டால்
கனக்கவரும் நோய் தீர்க்கும் காண் (9)

(இ - ள்)

ஒரு பங்கு ஹோமத்திற்கு (அக்கினிக்கு), ஒரு பங்கு மருந்து தயார் செய்த வைத்தியருக்கு, தர்மத்திற்கு ஒரு பங்கும், தனக்கு அதாவது பிணியாளருக்கு ஒரு பாகம் இவ்வாறு மருந்தை 4 பங்குகளாகச் செய்து உட்கொண்டால் நோய்கள் தீரும்,

## மருந்து உட்கொள்ளு முன் நினைக்க வேண்டியவை

தன்வந்திரி கருடன் தக்கமணிராசன்
வன்னக் கவுத்துவ மாமைத் துனனும் —முந்நீர்

A siddhadreams ebook

வளாமுதந் தானினைந்தே வாங்கி மருந்துண்டாற்
தளாவரும் நோய்ப் பிணியுந்தான் (10)

(இ - ள்)

தன்வந்தரி, கருடன், ஆதிசேஷன், கௌஸ்துபம், முருகன், அம்ருதம் இவர்களை மனத்தில் எண்ணி, மருந்துகளை உட்கொள்ள வேண்டும். பிணிகள் அனைத்தும் போம்.

## மருந்துகளின் அளவுப் பிரமாணம்

கற்கமது கழஞ்சே கொள்ளுமது காதிறுக்கு
மிக்க துளிவீறுறு மேவுங்காற் — தக்கபடி
நாடிவிடு நசியம் மோராறு நன்றுதுளி
யோடிவிடு மென்றே புரை (11)

(இ - ள்)

கற்கம் சாப்பிட வேண்டுமெனில் $1\frac{1}{4}$ வராகனெடை நிறையுட்கொள்ளவும். காது மருந்துகளெனில் 12 துளிகள் விடவும். நஸ்யமருந்துகளோ 6 துளிகள் மூக்கில் விடவும்.

## கஷாயம் உட்கொள்ளும் விதி

என்றுங் கஷாயமற வெட்டு நாழிகையே
லன்றுவிடந் தானுதிற்பாதி — பொன்றிற்
சிறுகாலே தான்கொள்ளில் சேரணியாதன்ன
மறுகாலம் பார்த்தே விருந்து (12)



(இ - ள்)

கஷாயங்களை அது தயார் செய்து 8 நாழிகைக்குள் உட்கொள்ளவும். அதிகாலையிலே உட்கொண்டால் சாதம் சேரணியாது. ஆகவே காலம் நோக்கி உட்கொள்ளவும்.

## கஷாயம் தயாரிக்க வேண்டிய முறை

நிற்ற முதயத்தில் நீரிரெண்டு நாழிதன்னி
லற்ற மருந்தே பன்னிரு கழஞ்சாய்ப் — பற்றக்
கழுவி யிடித்திட்டு வெய்யில் காய்ப்பிட்டு நன்றும்
விழு பொழுதில் காய்ந்துழக்காய் மேலருந்து (13)

(இ - ள்)

தினமும் அதிகாலையில் கஷாய சூரணம் 15 வராகனெடை ($1\frac{1}{4}$ பலம்) எடுத்து 2 படி (பட்டணம் படி $\frac{1}{2}$) சுத்த ஜலத்தில் ஊறப் போட்டு இடித்து வெய்யிலில் வைத்திருந்து, சாயங்கால நேரத்தில் அதை யடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி உட்கொள்ளவும்.

## மருந்துகளின் வீரியம் குறையும் காரணங்கள்

மருந்து தனைக்குடித்துக் கொளுத்தி வருந்தும்
பொரிபினவு மறப்பருந்து — வெறு விலைபு
மறபம் வேறென்று மாசா
துறமருந்து கொண்டாற் குறை (14)

A siddhadreams ebook

நீர்க்கரை மிடிகரை நீசனஞ் சேரியுங்
காற்கரை கடற்கரை பெருத்த கான(க)மும்
ஆற்றினில் குளத்தினில் அருகு சேர்மலம்
தோற்றிவை மருந்தெலாந் தோஷமாகுமே (15)

(இ - ள்)

குட்டைகுளம் இவைகளின் கரையிலுள்ளதும், இடிந்த படிக்கட்டு முதலான இடங்களில் உண்டானதும், நீசர்வாழும் சேரியில் ஏற்பட்டது, கடற்கரையில் விளைவதும், அடர்ந்த காட்டில் விளைந்ததும், ஆறு, குளம், அசுத்தமான இடம் முதலான இடங்களில் உண்டான மருந்துச் சரக்குகளும் உதவாது

குறிப்பு :

முதல் செய்யுளுக்குப் பொருள் விளங்கவில்லை.

## சரக்குகளுக்கேற்ற கஷாயத்தின் பக்குவம்

வேருந்தோலு மேழுநாள் வெந்துவிடு மிருந்து
பார்வயிர மதுபன்னிரண்டில் —சீரக்
கொடி மூன்றுநாள் மிலைபூக் கூறுங்கனியிம் மூன்று
கடியொரு நாளில் வேகுங் காண் (16)

(இ - ள்)

வேர், வேர்ப்பட்டை (வில்வம், நெத்தாமுட்டி முதலானவை) இவைகளை யிடித்து 7 நாட்கள் ஊறவைத்துப் பின்னர் கஷாயம் தயார் செய்யவும். வைரமான (அகில், கருங்காலி) சரக்குகளை 12 நாள் ஊற வைத்துக் கஷாயம் தயாரிக்கவும். கொடி (சீந்தில், உத்தாமணி) முதலான சரக்குகளை 3 நாட்களிலும், இலை, பூ, கனி இவைகளை ஒரே நாளில் வேகவைத்துக் கஷாயமிடவும்.



## மருந்துகள் கெடுவதற்குக் காரணங்கள்

ஓதத்தி லோதம் உறைதங் குணர்த்தி கெட்டு
போதப்பழகிப் பொடியாகி — பேதமறப்
போகாமணங்குறைதல் போதவரைக் காதல்
அகா மருந்திவையே யாம் (17)

(இ - ள்)

ஓதங்காத்தல் [நீர் கிற்றல்), நன்றாக உலராமை, வெகு நாட்பட்டது, பொடியாகுதல், மணம் குறைவடைதல், சரியாக அரைக்காமலிருத்தல் முதலானவைகளினால் மருந்துகள் சரியாக அமையாமல் போம்.

## நெய் காய்ச்சும் அளவுக்கிரமம்

எல்லாமருந்து மொருகுறுணி நெல்லிடைக்கு
நல்லாய் கேள் நீர் தூணி நாலொன்றாய்ச் சொல்லாமல்
நெய்யிரண்டு பாலிரண்டு நாழிநிறை கற்க
மய்யிரண்ட நாமென்றறி (18)

(இ - ள்)

எல்லா மருந்துகளும் 6 பலமானால், தண்ணீர் 4 மரக்கால் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சவும். அதற்கு நெய் 2 படியும் பசுவின்பால் 2 படியும், கற்கம் 2 பலமும் போட்டுக் காய்ச்சி இறக்கவும்.



A siddhadreams ebook

## எண்ணெய்க் காய்ச்சச் சரக்குகளின் அளவுகள்

நீடுமருந் தொன்று நெய்யெண்ணெய் நாலாகக்
கூடுமதற்கு மேற்கூடும்பால் — பாடு
பச்சிலைச்சாறு பலவுமெபன்றுக்கு நாலு
நிச்சயமே யாகும் நிறை (19)

(கு - ம்)

மருந்துச் சரக்குகள் 1 பலமானால் நெய்யோ, எண்ணெயோ 4 மடங்காகும். பச்சிலைச்சாறு இதனைவிட 4 மடங்கு (அ த ா வ து 16 பலம்) ஆகும். இவைகள் பொதுவான விதியாகும்.

## எண்ணெயின் மந்தபாகத்தின் குணம்

மந்தமாம் பாகமாகில் வழுவழுத்திருக்கும் காணும்
வெந்திடு மத்தியாக விண்டிருண் டிடந்து தூளாம்
மந்தமாம் பதங்களாகில் மையக்குளம் புணரத்தீர்க்கு
முந்திய முன்னோர் பேசும் முறைமையை யறிவதாமே (20)

திருவைப்போல் மேனியர்க்குந் நீதுறு புண்ணையாற்றும்
வருமொத்த வாதபித்த கபத்தையும் விரோசிப்பாக்கும்
முருமிக்க குட்டம்விக்க லூரத்திடும் சத்தி மந்தம்
ஒருமித்து வெளிரச் செய்யும் உறுதியாங் குணங்
கண்டாயே (21)

(கு - ம்)

மிருதுபாகமான எண்ணெயின் கல்கம் வழவழப்பாக இருக்கும். மத்திமான பாகத்தில் அந்தக் கல்கம் தூள் தூளாக ஆகும். மிருதுபாகமான எண்ணெய், புண்களை



ஆற்ற உதவும். மேலும் வாத, பித்த, கபம் என்ற திரி தோஷங்களையும் வெளியாக்கும். குட்டம், விக்கல், வாந்தி, மந்தம், முதலானவைகளும் தீரும்.

ஆக கவி. 2021

## சந்நி ரோக சிகித்சை

### தந்திரிகச் சந்நிக்கு பூதபைரவ ரசம்

இயல்பான பூதபைர வரசஞ் சொல்ல
பிரதமுட னேகந்தகம்
ஏற்ற தாமிரபற்ப முஞ்சரி யாகயென்னு
கொடிவேலி வேரில்மாங்க
ஷாயத்தரைத் தினியவச் சிரமுறை தன்னில்
வைத்து வாலுகா யவத்திடு
மியந்தி ரத்தொரு நாளெரித்தபின்
வரு பூனையின் பிச்சிலே
நயமான பாவனைகள் பண்ணியே குண்டுமணி
நற்பிரமாணத்திலே
நல்ல வனுபான விசேஷத்திலே யிடு
நாடியது பற்றிய முகமாகு
சயமான தந்திரிக சந்நியும் தீருமே
தம்பிரான் தானறியவே
தாரணியில் மானிடவர் தாமும் பிழைக்கவே
தன்வந்தரியார் சொன்னதே (1)

(கு - ம்)

சுத்திசெய்த பாதரசம்
,, கெந்தகம்
தாமிரபற்பம்

A siddhadreams ebook

இவைகளைச் சரியெடை யெடுத்துக் கொடிவேலி வேர்க் கஷாயம் விட்டு நன்றாக 4 ஜாமங்கள் அரைத்து, ஒரு வஜ்ர மூஷையிலிட்டு, வாலுகா எந்திரத்தில் 1 நாள் முழுவதும் எரிக்கவும். மறுநாள் இம்மருந்தை யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பூனையின் பித்தத்தை விட்டு நன்றாக வரைத்துக் குண்டுமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

தக்க அனுபானங்களில் உட்கொள்ளத் தந்திரிக சந்நிகள் தீரும்.

குறிப்பு :—

வஜ்ரமூஷை = தட்டான் வைத்திருக்கும் குகை.

வாலுகா யந்திரம் = ஒரு வாயகன்ற வாணலியில் மணலை விட்டு முன்சொன்ன மருந்தை குகையிலிட்டுப் புதைத்து அடுப்பின் மேலேற்றி ஒரே சீரான அக்கினியினால் எரிக்கவும். அவ்வப்போது மருந்தையும் கிண்டிக் கொடுக்க வேண்டும்.

## அந்தகச் சந்நிக்கு விஜய வைரவ ரசம்

பண்பான விஜயபை ரவஞ்சொல்லப்
பாதரசம் வங்கபற்பம்
பச்சை நாகமப்பிரக பற்பமும் சரிகொண்டு
பகர்திரு கடுகுச் சாற்றிலே
நன்பாக வொரு நாளரைத்து மண் சீலைசெய்
வாலுகா யந்திரமுடன்
நாடியொரு சாமமெரித் தாறியே பின்பு
நற்சாவ லின்பித்திலே



கண்காணவே யிளிய பாவனைகள் செய்தபின்
கடலைபோ லேயுண்டை தான்
கனத பிணதீரிவிட வோடுமே யந்தகன்
காலனை வெல்லும் வகையே (2)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, நாகம்
வங்கபற்பம் அப்பிரகபற்பம்

இவைகளை சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டுத் திரிகடுகுக் கஷாயம் விட்டு 1 நாள் முழுவதும் அரைத்து ஒரு காசிக்குப்பியிலிட்டு, 7 தடவை சீலைமண் செய்து, வாலுகாயந்திரத்தில் வைத்து 1 சாமம் எரித்து இறக்கவும். தானாகவாறிய பின் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டுச் சேவல் பித்தம் விட்டு அரைத்துக் கடலைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையிலொன்றெடுத்து இளநீருடன் உட்கொள்ள அந்தகச் சந்நிகள் தீரும்.

## ருத்திராங்க சந்நிக்குச் சங்கார பைரவ ரசம்

என்றரிய சங்கார பைரவ ரசந்தனைக்
கேற்றிடு மூலோக பற்ப
மிரதமுட னேசெம்பு பற்பமுஞ் சற்றியெவச்
சாரம் நவச்சாரமும்
நன்றிபெற வேசீனக் காரமு மிவைசரி
கொண்டுநற் பஞ்சகோல

A siddhadreams ebook

சலத்திலே நாடிக் கஷாயத்தி லொருநா
　　ளரைத்து நீ நல்லடோலா யந்திரம்
பண்ணியொரு சாமம் மெரித்தபின் னூற்றியே
　　பருத்த கோழிப் பிச்சிலே
பாவனை கள்பண்ணி யொருப் பயறளவு திப்பிலி
　　தேனுமனு பானத்திலே
மற்றுலகில் மானிடர் பிழைக்கவே தந்வந்திரி
　　மாமுனிவர் கற்பித்ததே (3)

(தி - ச்)

சுத்திசெய்த பாதரஸம்

| | |
|---|---|
| செம்புபற்பம் | லோகபற்பம் |
| எவச்சாரம் | சத்திச்சாரம் |
| சீனக்காரம் | நவச்சாரம் |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டுப் பஞ்ச கோலக் கஷாயம் விட்டு (திப்பிலி, கண்டத்திப்பிலி, செவ்வியம், சித்திரமூலம், சுக்கு இவைகளின் கஷாயம்) 1 நாள் முழுவதும் அரைக்கவும். பின்னர் இம்மருந்தை ஒரு முடிச்சாகக் கட்டி, முன் சொன்ன கஷாயத்தை யொருபானையிலிட்டு அதில் முடிச்சைத் தொங்கவிட்டு டோலாயந்திரமாக அதன் ஆவி படும்படி ஒரு ஜாமம் எரிக்கவும். மருந்துகள் சிறிது உலர்ந்த பின் கல்வத்தி லிட்டுக் கோழிப் பித்தத்தைச் சேர்த்து நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ள ருத்திராங்க சக்கிகள் தீரும்.



## சித்த பிரமை சந்நிக்கு "மதன பைரவ ரஸம்"

சுத்தமுட னேமதன பைரவம் சொல்ல
　　மிரதமுட னேகந்தக
மித்துவுடனே செம்புபற்ப மனோசிலை
　　யிடைகள் சரியாகவே தான்
சாற்றிவிடு முன்னிப் பழச்சாற்றிலே யரை
　　தரு வச்சிர முஷையிட்டே
தனிவாலுகாயந் திரமாகவே புட
　　மதாய் சாமமும் மூனான பின்
நாற்றியே பாங்கிளிற் பசுவினுட பிச்சிலே
　　யரைத் துண்டை கடலைபோல
ஆக்கிய யொருவுண் டையினைநீரிலே
　　யலதான நற்சீரக முடன்
போற்றியே கொள்ளவே சித்தப்பிரமையாம்
　　பொல்லாத சந்நிதீரும்
புவனிதனில் யாவற்கு மாகவே மீசனுர்
　　பொய்யாத மொழி யாகுமே (4)

(தி - ச்)

சுத்திசெய்த பாதரஸம்
　　" கெந்தகம்
　　" மனோசிலை
இந்துப்பு　　செம்புபற்பம்

இவைகளை யொரு கல்வத்திலிட்டு முன்னிப் பழச் சாறு விட்டு நன்றாக வரைத்து (1 நாள்) வஜ்ர மூஷை யிலிட்டு வாலுகா யந்திரத்தில் வைத்து 3 சாமங்கள் எரிக்கவும்.

பின்னர் மருந்தைத் தனியாக ஒரு கல்வத்தில் வைத்துப் பசு மாட்டுப் பித்தம் சேர்த்து ஒரு நாள் முழு

A siddhadreams ebook

வதும் அரைத்துக் கடலைப்பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம் மாத்திரையில் ஒன்றை எடுத்து இளநீரிலோ அல்லது சீரக கஷாயத்திலோ உட்கொள்ளவும்.

சித்த விப்ரமச் சந்திகள் தீரும்.

---

### சீதாங்க சந்நிக்கு "ஆனந்த பைரவ ரஸம்"

அரிவான ஆனந்த பைரவஞ் சொல்
லரிதார லோகபற்பம்
மானவெங்காரமுங் காரீயம் வெள்ளீய
மானதிற் பற்பமுடனே
சூரியான மிருதமுஞ் சாதிலிங் கஞ்செம்பு
கூறுகிற பற்பமேதான்
கூடவே சரிகொண்டு திரிபாலை சாற்றிலே
கூசாமலே யரைத்து
உறவாகமுன் சாற்றில் டோலாயந் திரமாக
ஒருநா ளெரித் தாறிதா
லுலகனுட பிச்சிலே யரைத்துண்டை குன்றிபோ
லுருட்டியே ரெண்டு நீதான்
செரிவாக வநுபான விசேஷத்திலேயிடு
தினைச்சோறு பத்தியமுமாஞ்
சீதாங்க சந்நியுந் தீருமே யிப்போது
சிவனார் மொழிந்த படியே (5)

(இ - ள்)

சுத்திசெய்த தாளகம்
,, காரீயம்



சுத்திசெய்த வெள்ளிய பற்பம்
,, லிங்கம்
,, பாதரஸம்
செம்பு பற்பம் லோகபற்பம்
பொரித்த வெங்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டு, திரிபலாக் கஷாயம் விட்டு நன்றாக வரைத்து முடிச்சாகக் கட்டி, திரிபலா கஷாயத்தின் ஆவியில் டோலாயந்திரமாக 1 நாள் எரித்து உலரவைக்கவும்.

பின்னர், மாட்டுப் பிச்சு விட்டு நன்றாக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

தக்க அநுபானத்தில் உட்கொள்ளவும். தினைச் சோறு சாப்பிடவும்

சீதாங்க சந்திகள் தீரும்.

---

### தாந்திரிக சந்நிக்குப் "பைரவ ரஸம்"

பாரமாம் நேரான பைரவர் சற்றுறப்
பாரான பஞ்ச லவண
பற்பமாந் தாமிரஞ் சத்தியவட் சாரமும்
பகரேவச் சாரமுடனே
கூரமாய்ச் சரிகொண்டு எருக்கம் வேர்கஷாயத்தில்
கூற்கரை மூணுநாளுங்
குகைதனில் வைத்ததைச் சீலைமண் செய்தபின்
குலவு காயாந்திர முடன்



A siddhadreams ebook

நீரவே யாறுசா மமெரித் தாறியே
சீதள மாதான பின்பு

சிந்தாமலே யிடு கழுதையின் பிச்சிலே
சிக்கென வரைத் ததனையே

தாராயு ளுந்தளவு தேனிலே கொள்ளவே
தாந்திரிகச் சந்தி தீரும்

தப்பாத பத்தியம் பஞ்சமுட்டிக் கஞ்சி
தன்னையெ வார்த்திடுவதே (6)

(தி - ம்)

| | |
|---|---|
| இந்துப்பு | சோத்துப்பு |
| கரியுப்பு | அட்டுப்பு |
| விளையலுப்பு | தாமிரபற்பம் |
| சத்திச்சாரம் | யவச்சாரம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு (சரியளவு எடுத்து) எருக்கம் வேர்க் கஷாயம் விட்டு 3 நாட்கள் விடாமல் அரைக்கவும். பின்னர் இம்மருந்தை யொரு குகைசி விட்டுச் சீலமண் செய்து வாலுகாயந்திரத்தில் வைத்து எரிக்கவும். நன்றாக ஆறியபின் ஒரு கல்வத்திலிட்டுக் கழுதையின் பித்தம் விட்டு நன்றாக வரைத்து உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம் மாத்திரையைத் தேனில் குழைத்து உட் கொள்ளத் தாந்திரிக சந்திகள் தீரும்.

பத்தியம் :—

கஞ்சி உட்கொள்ளவும்.



## கண்டகுச்ச சந்நிக்கு ஆனந்த பைரவ ரஸம் (வேறு)

சொக்கமா யானந்த பைரவஞ் சொல்லச்
சூதமுடனே கெந்தகம்

துய்ய வெங்காரமும் வெள்ளிய பற்பத்
துடனிடும் பச்சை நாகம்

மச்சமாய் நிறைதனைச் சரியாக வேகொண்டு
ஆனதிரி பலைச் சாற்றிலே

அரைத்ததை ரெண்டுநாள் டோலாயந்திரமாக
வரைத்திடுஞ் சாறுதனிலே

எச்சக வொருசாம மந்தாக்கி னியினு
லெரித்து நீ யாறவைத்தே

என்முறு பிச்சிலே பாவனைகள் பண்ணியே
எடுகுன்றி யளவாகவே

கச்சாறு முலையினு விஞ்சியிற் சாற்றிடு
கண்டகுச்சந் தீருமே

கருதிடும் பத்தியந் தயிருடன் சோறுமே
களந்த யினநீ ராகுமே (7)

(தி - ம்)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
பொரித்த வெங்காரம் வெள்ளிய பற்பம்
ராவிய துத்தநாகம்

இவைகளைச் சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டுத் திரி பலா கஷாயம் விட்டு நன்றாக வரைக்கவும், பின்னர் இதனை யொரு துணியில் முடிந்து திரிபலா கஷாயத்தின் ஆவியில் படும்படி 2 நாட்கள் டோலாயந்திரமாக எரிக் கவும். பிறகு இதை வாலுகா யந்திரத்தில் வைத்து மந்தாக்கினியாலெரித்து, நன்றாக ஆறியபின், எருமை

A siddhadreams ebook

பித்தத்தை விட்டு நன்றாக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

முலைப்பால் அல்லது இஞ்சிச்சாறு இவைகளில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்கவும்.

கண்டகுச்ச சந்நிகள் தீரும்.

**பத்தியம் :—**

தயிர் சாதம், இளநீர் முதலானவைகளை உட்கொள்ளவும்.

---

### கர்ணிக சந்நிக்குக் கல்யாண பைரவ ரஸம்

கல்யாண பைரவ ரசத்துற நெல்லியின்
காய் கெந்தகஞ் சூதமுங்
காரீயபற்பமும் பச்சை நாகப்பாம்பு
க்குபிச்சி னுடன் திப்பிலி
செல்லவே கொடிவேலி வேர்க்கஷாயத் திலோர்
தினமரைத் துண்டையாக்கி
செப்பமாய் வச்சிர மூஷையி லிட்டே வா
லுகாயந்தி ரத்திலேதான்
வல்லதா யொருநா ளெரித்தாறி மீன்பிச்சு
வார்த்தரை கடலையாக
மருவாதி யனுபான விசேஷத்தி லேயிட
மருவுகர் ணிகசந்நி போம்
சொல்லிலாம் வென்றமொழி பத்தியம் பாற்சோறு
துய்யசர்க் கரையினுடனே
தோன்றியே தாகந் தணியக் கரும்புதின்
சுகத்தைக் கொடுத்திடுமே



(இ - ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம்
பச்சை நாகப்பாம்பின் பித்தம்
காரீய பற்பம் திப்பிலி

இவைகளைக் கல்வத்திலிட்டு, கொடிவேலி வேர்க் கஷாயம் விட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்து, வஜ்ர மூசைக்குள்ளடைத்துச் சீலை செய்து, வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் முழுவதும் எரிக்கவும். தானாகவே ஆறிய பின் இதனை யொரு கல்வத்திலிட்டு, மீனின் பித்தத்தை விட்டு நன்றாக வரைத்துக் கடலைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

தகுந்த அனுபானங்களில் உட்கொள்ளக் கர்ணிக சந்நிபாதம் தீரும்.

**பத்தியம் :—**

பால் சாதம் மாத்திரமே சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவும். தாகம் உண்டானால் கரும்பின் சாற்றைப் பருகவும் சுகமுண்டாகும்.

முற்றும்

A siddhadreams ebook

## மருந்துகளின் அகராதி அட்டவணை.


| | பக்கம் |
|---|---|
| அகஸ்தியர் ராஜபேதி (தாபஜ்வரத்திற்கு) | 435 |
| அக்கினி குமாரன் | 378 |
| அசமோதாதிச் சூரணம் | 163 |
| அச்வகந்தாதிக் கிருதம் | 284 |
| அச்வகந்தி சூரணம் | 113 |
| அச்வகந்தீ சூரணம் | 172 |
| அச்வகந்தி பாலராக்ஷைத் தைலம் | 263 |
| அசுவினி நக்ஷத்திரம் | 587 |
| அஞ்செண்ணெய் தைலம் (சந்நிக்கு) | 458 |
| அடப்பையிலை மருந்து (எழுதாயறு, கிரந்திக்கு) | 479 |
| அட்டாதிச் சூரணம் | 126 |
| அட்டைவிதி | 577 |
| அட்டையில் ஆண், பெண் அறியும் விதம் | 577 |
| அட்டைப் பிரயோகம் செய்யும் முறை | 578 |
| அட்டையை வளர்க்கும் விதம் | 578 |
| அட்டை களில் ஆண், பெண் பார்த்து விடும் விதம் | 579 |
| அட்டைப் பிரயோகத்தின் போது ஏற்படும் குறிகளும் பரிகாரமும் | 579 |
| அட்டையின் லக்ஷணங்கள் (சுத்த) | 580 |
| அட்டையின் லக்ஷணங்கள் (துஷ்ட) | 581 |
| அஷ்ட பைரவ மாத்திரை | 433 |
| அஷ்ட பைரவக் குளிகை | 390 |
| அண்ட பவுத்திரக் குறிகள் | 34 |
| அதிமதுரச் சூரணம் (நடுக்கல், வாந்தி, சுழற்றல், வாய்நீரூறல் முதலியவைகளுக்கு) | 439 |
| அதிமதுரம், பேரீச்சம்பழம் இவற்றின் குணம் | 519 |





| | பக்கம் |
|---|---|
| அதிவிடயச் சூரணம் | 158 |
| அதிஸாரக் குளிகை | 418 |
| அதிஸார கேசரி | 419 |
| அதிஸாரக் குடாரம் | 424 |
| அத்திக்காயின் குணம் | 537 |
| அத்திப்பட்டையாதிக் கஷாயம் (நீரிழிவிற்கு) | 4 |
| அநுஷை நக்ஷத்திரம் | 596 |
| அந்தகச் சந்நிக்கு | 616 |
| அந்திமாலைக்கு மை | 344 |
| அபன் கடுக்காயின் குணம் | 516 |
| அபத்திய, பத்திய பதார்த்தங்கள் | 532 |
| அமுக்கிராச் சூரணம் | 1!2 |
| அமுதக் கடுக்காய் குணம் | 514 |
| அமுதவல்லித் தைலம் | 8 |
| அம்ருதாதி கிருதம் | 210 |
| அம்ருதவல்லித் தைலம் | 246 |
| அம்ருதவல்லி எண்ணெய் | 248 |
| அம்ருதவல்லித் தைலத்தால் தீரும் நோய்கள் | 250 |
| அம்ருதயோக முறை | 334 |
| அயக்காந்தாதிக் குளிகை (வாதுகாமாலைக்கு) | 86 |
| ஆரத்தைக் கஷாயம் (சுரத்திற்கு) | 466 |
| அரிகரப்பான் லக்ஷணங்கள் | 486 |
| அரிதகிச் சூரணம் | 159, 18 |
| அரிதாரக் குளிகை (சீதஜ்வரத்திற்கு) | 396 |
| அரிதகீ வடகம் | 184 |
| அரிதாரச் செந்தூரம் | 368 |
| அரீதகிப் பிட்டு (வாயு, கரப்பான் முதலியவைகளுக்கு) | 492 |
| அருநெல்லிக்காய் குணம் | 528 |
| அரோகிணிக் கடுக்காய் குணம் | 513 |
| அரைக்கீரையின் குணம் | 559 |


A siddhadreams ebook

பக்கம்

அவரைக்காயின் குணம் 553
அவிட்ட நக்ஷத்திரம் 599
அறுவகைச்சுவைகள் 567
அழல் காமாக்ஷிக்குக் கிருதம் 84
அஸனவில்வாதித் தைலம் 235
ஆகாத பதார்த்தங்கள் (சந்நி குன்மம், வயிற்றுவலி
யுள்ளவர்களுக்கு) 571
ஆடாதோடைக் கஷாயம் (காசம், இருமலுக்கு) 476
ஆடாதோடை நெய் (ரத்த பித்தத்திற்கு) 482
ஆடாதோடை நெய் 315, 317
ஆடைத்தயிரின் குணம் 521
ஆமணக்கு எண்ணெய் குணம் 531
ஆதண்டைக் கஷாயம் (ரத்த பித்தத்திற்கு) 477
ஆயில்யபட்டை நெய் 310
ஆயில்ய நக்ஷத்திரம் 592
ஆரைக்கீரைக் குணம் 562
ஆரோக்யத்தைப் பேணும் நெறிகள் 527
ஆவாரை எண்ணெய் 446, 11
ஆவாரைச்சீத கஷாயம் (தாகத்திற்கு) 1
ஆவாரை எண்ணெய் (புண்ணுக்கு) 41
ஆவாரைப் பூச்சு (வீக்கம், எரிச்சலுக்கு) 43
ஆவாரைச் சூரணம் (மேகக்காங்கைக்கு) 118
ஆழிக்கோலின் ரூபம் 585
ஆற்று நீரின் குணம் 547
ஆனந்த பைரவன் (சீதாங்க ஜன்னிக்கு) 616
ஆனந்த பைரவ ரஸம் (கண்ட குச்ச ஜன்னிக்கு) 619
ஆனந்த பைரவ மாத்திரை 417, 389
இங்குவாதிச் சூரணம் 137
இஞ்சியின் குணங்கள் 525
இஞ்சி நெய் 308, 441



பக்கம்

இந்துப்பு மருந்து (குன்மத்துக்கு) 473
இராசாதி குளிகை (ஜ்வரத்துக்கு) 399
இரத்னாதி மாத்திரை 343
இரச்செந்தூரம் 364
இரஸ தாமிர பஸ்பம் 365
இரஸ பற்பத்தினால் தீரும் நோய்கள் 371
இரஸ பற்பம் 374
இரஸ பதங்கம் செய்யும் முறை 372
இராமபாணம் 382
இராமபாண மாத்திரை 389
இரவில் பால் சாப்பிடுவதின் குணம் 529
இருவி மாத்திரை (ஜ்வர ஜன்னிக்கு) 457
இருவி மாத்திரை (ஜன்னிக்கு) 395
இலந்தைக் கஷாயம் (எரி வாதத்திற்கு) 467
இலவம்பட்டை எண்ணெய் (விரணத்துக்கு) 60
இலவங்கப்பத்திரி வட்கம் 188
இலாமிச்சைத் தைலம் 240
இலாமிச்சை வேர்த் தைலம் 241
இலாமிச்சைச் சூரணம் (உஷ்மாந்தை, மேகத்திற்கு) 28
இலாமிச்சைக் கஷாயம் (ஜுரத்திற்கு) 456
இலைக்கறி வகைகள் 546
இளநீரின் குணம் 542
ஈச்வரமூலிச் சூரணம் (கரப்பான் வீக்கத்திற்கு) 149
ஈரவெங்காய நெய் 302
உசீராதிக் கிருதம் 275
உடும்புச் சூரணம் 444, 162
உழலை எரிச்சலுக்குக் கிருதம் 97
உள்ளியாமணக்கெண்ணெய்
(மண்டைக் கரப்பானுக்கு) 68



A siddhadreams ebook

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறு விட்டு நன்றாக அரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும்.

2 வருடங்கள் சென்ற பின்னர் இதனை யெடுத்துத் தேன் விட்டு நன்றாக உரைத்து ½ பயறளவெடுத்துக் கண்களிடவும்.

படலம், பில்லம், ரத்தம் முதலான கண்ணோய்கள் தீரும். அவுரியிலைச்சாற்றிலிடக் கண்தடிப்புகள் தீரும்.

**குறிப்பு :**

**நவரத்னங்களாவன :**

முத்து, பவழம், வைரம், வைடூர்யம், கோமேதகம், புஷ்பராகம், சிவப்பு, பச்சை, நீலம் என்பன.

**பஞ்சலோகம் :**

பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, வெங்கலம்

## சூதரத்னாதி மாத்திரை

சுத்தமே துரிசுநெல்லி தூய்யகடுக் காயுங்கூட்டி
வித்தமப் புளியம்பூவும் வெண்டலையோடுங் கூட்டிச்
சுத்தமாம் பொன்னுங்காணி வெள்ளிபொன் செம்பிருப்பு பித்தளை
பித்தமாங்காசம் படலம் பற்பரோகம் பில்லந்திரன் மாங்கிஷம் போம்
மித்தனை யநேகந்தீரும் சூதரெத் னாதியாமே (53)

(இ - ள்)

சுத்தம் துரிசு



| | |
|---|---|
| நெல்லிப்பருப்பு | கடுக்காய்த்தோல் |
| புளியம்பூ | மண்டையோட்டுத்தூள் |
| ராவிய பொன் | ராவிய வெள்ளி |
| ,, அரத்தூள் | ,, செம்பு |
| ,, பித்தளை | |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொன்னாங்காணிச் சாறு விட்டு 4 நாட்கள் விடாமல் அரைத்து, நீண்டமாத் திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும்.

2 வருடங்கள் சென்ற பின்னர் இதனைத் தண்ணீரி லிழைத்துக் கண்களிடவும்.

காசம், படலம், பற்பரோகம், பில்லம், திரன்மாங் ஷம் முதலான நோய்கள் தீரும்.

## சிரகவத்தி அஞ்சனம்

சிரந்திரிகடு கிந்துப்பு திரிபலை மநூரமேலம்
வரந்தரு கரிமாதெந்த மருவுசாறடை பனிங்கு
விறந்தரு முத்தேதந்த முயர்குறிஞ் சிரிப்பான் தந்தம்
நாந்தரு மானைமேதி புகழ்தலையிபத்தின் கொம்பே (54)

இவந்திட முத்தோத்தின் செவ்வியிதம் கழஞ்சஞ் சுராவினுக்கு
நவத்தில் கருங்குமயிருப்பு தாம்பிரங் குடகம்பீங்கா
னவற்ற மொன்றில் லாதநுத்தத் துரிசுநிற் சமனிரண்டுத்
தவத்திறைவது வெவ்வேறேதான் கழஞ்சியல் பாங்கூட்டே (55)

கூட்டரைக் கழஞ்சுவெள்ளிக் கூறிடுங் கனகங்காது
மீட்டமாம் புங்குகையாந் தகரையும் தின்பச்சாறு

A siddhadreams ebook

இதில்

ஒரு மாத்திரை எடுத்துத் தேனிலோ அல்லது இஞ்சிச்சாற்றிலோ கொடுக்கச்

சந்நிகள் முதலானவை தீரும்.

---

## பாஷாணச் சூரணம்

வெள்ளை பாஷாணந் தன்னை விரைந்திடு பாகல் சாற்றில்
மெள்ளவே சுத்திசெய்து சூர் திரிகடுகு கூட்டிக்
கொள்ளப்பால் தயிர்மோர் தன்னில் கொண்டி டச்சுரங்க ளெல்லாம்
தள்ளிப்போம் சந்நிகுன்மம் தளர்ந்துவிட் டோடுமென்றே (32)

(இ - ள்)

வெள்ளைப் பாஷாணத்தைப் பாகல் இலைச்சாற்றில் சுத்திசெய்து கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு, இம் மூன்றையும் சமனெடை எடுத்து நன்றாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இச்சூரணத்தில் ஒரு அரிசியிடை யெடுத்துத் தயிர், மோர் இவைகளுடன் உட்கொள்ளவும்.

ஜ்வரம், சந்நி, குன்மம் முதலான ரோகங்கள் நீங்கும்.

---

**குறிப்பு :**

33 வது செய்யுளிலிருந்து 40 செய்யுள் வரையிலுள்ள ஏடுகள் மிகவும் சிதில மாகப் போய்விட்டபடியால் விடப் பட்டன.



## குளிர்காய்ச்சலுக்கு வைரவ உருண்டை

தாரமப் பிரகஞ்சுதம் தாவிய கெந்தகந் தான்
காரம் வெண்ணபிப் பாதிக்குத் திப்பிலி மிளகுங் கூட்டி
தேறவே யிஞ்சிச்சாற்றில் திகைப்பற வரைத்துக் கூட்டில்
கூறவே வைரவன்றுன் கொடுசந்தி சுரங்கள் போமே (41)

(இ - ள்)

சுத்திசெய்த தாளகம்
,, பாதரஸம்
,, அப்ரகம்
,, கெந்தகம்
,, வெண்ணபி
பொரித்த வெங்காரம்
திப்பிலி மிளகு

இவைகளைச் சரிசமனெடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக வரைத்துக் கஜ்ஜலி செய்து

பின்னர்

மற்ற சரக்குகளைச் சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் குன்றி கிகருள்ள குளிகைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

ஒரு மாத்திரை யெடுத்து வெந்நீருடன் கொடுக்கவும்.

சந்நி ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

---

A siddhadreams ebook

## சந்நிக்குச் சீரகாதி மாத்திரை

சீரகமிரண்டு ஏலம் சிறந்திடு மிரண் டிலவங்கம்
மீரவு மிரண்டுருத மிகவுமொன்ருக விங்கம்
தீரவு மொன்று கெந்தம் சிறந்துடனென்று வங்கம்
தேறது பற்பமாண்டு நிறையுட னெரிவுக்காமே (42)

ஆவின்சாறு சாணகச்சாறு மதனுடன் குமரிச்சாறு
மேவிய பகவின் பாலு மின்னுடன் கொங்கைப்பாலுந்
தாவியங் கரைத்துநாலு சாமமே குன்றியுண்டை
தேவிடை கால்கைவாத யெரிவுக்கு நெரிஞ்சிச்சாறே (43)

சாறுடனேமு நாளுஞ் சந்தியும் முடிவுங்கொள்ள
வீறுள குத்துவாய்கல் மிருகசோணி தமும் வாதம்
தீறியே பாதத்துத்த மூலது திற்கும் மத்
தாறிடும் சந்நிகுலை அழலுப்பும் புளியும் மாத்தே (44)

(இ - ள்)

| | |
|---|---|
| சீரகம் | 2 |
| ஏலக்காய் | 2 |
| கிராம்பு | 2 |
| பாதரஸ பற்பம் | 2 பங்கு |
| லிங்கச் செந்தூரம் | 1 ,, |
| கெந்தகபற்பம் | 1 ,, |
| வங்கப்பற்பம் | 1 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, பசுவின் பால், பசுஞ் சாணிப்பால், சோற்றுக்கற்றாழைச்சாறு, தாய்ப்பால்

இவைகளை வகைக்கு 4 ஜாமங்கள் விதம் தனித் தனியே அரைத்துக் குன்றிமணி பிரமாணமுள்ள மாத்திரை களாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.



கை, கால் எரிச்சலுக்கு இம்மாத்திரையிலொன்றை யெடுத்து 3 நாட்கள் காலையிலும் மாலையிலும் நெரிஞ்சிச் சாற்றுடன் உட்கொள்ளவும்.

இதையன்றி.

உடம்புவலி. சோணிதவாதம், பாதஎரிச்சல், சந்நி கள், சூலை முதலான ரோகங்களும் குணமாகும்.

பத்தியம் :

உப்பு, புளி உதவாது.

## குளிர்காய்ச்சலுக்கு உருண்டை

மூலத்துடனே மரமஞ்சள் முதுசூரணத்தின் வாயுவிடு
காலத்திரதங் கெந்தகமுங் கடியதுத்தம் வெங்காரம்
சீலகோரைக் கிழங்குமுதல் செய்யுமத்தைச் சாறரைத்துக்
கோலத்துடன் மாத்திரையாக்கிக் குளிர் காய்ச்சலுக்
கிடுவாயே (45)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, துத்தம்
,, கெந்தகம்
,, வெங்காரம்
கோரைக்கிழங்கு

இவைகளைக் கல்வத்திலிட்டு முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலியாக்கிப்

பின்னர்

A siddhadreams ebook

வாட்டமில் லொருநாற்சாமம் வகையுமிப் படியேயாக
நாட்டமா யுரைத்துக் கூட்டி நலமுடனுருட்டிக் கொள்ளே
(56)

உருட்டியே யிழலுலர்த்தா யுலர்த்தியே நிறையோரிட்டால்
மருட்டியல் புகைச்சல் தீரும் வாதைகைய்யா நீரி
லிருட்டலா மாலைதிம்ப மியந்தெழு பற்பரோகம்
திருட்டது வெல்லாம் தீரும் சிரகவத்திதன்பேரென்றே (57)

(ஆக கவி 1604)

(நி - ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| இந்துப்பு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| அதிமதுரம் | ஏலக்காய் |
| யானைத்தந்தம் | சாறடைவேர் |
| பளிங்கு | முத்து |
| யானைப்பல் | குறிஞ்சிவேர் |
| முற்தெருக்கன்செவி | எருமைப்பல் |
| எருமைகாக்குப் பூண்டு | |

இவைகள் வகைக்கு 6¼ வராகனெடை

| | |
|---|---|
| இரும்புத்தூள் | தாம்பிரத்தூள் |
| பித்தளைத்தூள் | பீங்கான் |
| துத்தம் | துரிசு |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை

| | |
|---|---|
| வெள்ளித்தூள் | 20 குன்றி நிறை |
| ஸ்வர்ணத்தூள் | 10 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, புங்கம்பட்டைச் சாறு, கையாந்தகரைச்சாறு, முதலான சாறுவகைகளைத்



தனித்தனியே ஒவ்வோர் சாமம் விட்டு நன்றாக வரைத்துக் கொள்ளவும்.

பின்னர்

இவைகளை நீண்ட மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

1 வருடஞ் சென்ற பின் இம்மாத்திரையைத் தண்ணீர் விட்டு இழைத்து ஒரு பயற்றம் பருப்பளவு எடுத்துக் கண்களிடல் இடவும்.

புகைச்சல் தீரும்.

கையாந்தகரைச் சாற்றிலுரைத்துக் கண்களுக்கிட

மாலைக் கண் நீங்கும்.

எலுமிச்சம்பழச் சாற்றில் தேய்த்துக் கண்களில் எழுதப்

பற்பரோகம், பார்வைக்குறைவு முதலான நோய்கள் தீரும்.

## இரஸௌஷத முறைகள்.

### லோகச் செந்தூரம்

வாரார்முலையாய் லோகத்தை வைக்கும் வகைதான்
சொல்லக்கேள்
சீரார் காந்த மரப்பொடியுஞ் சிறக்குந்தேவி லிங்கமுடன்
ஏராரிவைகள் இடைசமன் கொண்டிதின மூன்றொன்று
வெங்காரம்
கூரார்குமரிச் சாற்றுடனே குழம்பா யரைத்துச் சட்டியிடே
(1)



A siddhadreams ebook

மற்ற சரக்குகளைச் சேர்த்து, ஊமத்தையிலைச் சாறு விட்டு, 1 நாள் முழுவதுமரைத்துக் குன்றி நிகர் மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில்

1 மாத்திரை யெடுத்துக் குளிர்காய்ச்சலுக்கு வெந்நீருடன் கொடுக்கவும்.

## கோடாசூரி மாத்திரை

விதமுள கோடாசூரி உண்டைதான் விளம்பக்கேளா
விதமுடன் சுத்திசெய்த யிரதம் வெங்காரம் நாபி
அதனில் முற்கடுகு முட்காயரிதாரங் கழஞ்சோரொன்று
பதமுள நேர்வாளத்தைப் பன்னிரு கழஞ்சுகூட்டி
விதமுருக் கிலைச்சாற்றில் விழுதாக வரைத்துக் குன்றித்
திதனிதன் உண்டைகூட்டித் நீரவே நிழலுலர்த்தி
மதமுள யிஞ்சிச்சாற்றில் வாய்த்தவுண்டை யிலொன்
நிட்டால்
குதமெனக் குன்மச்சூலை கொடியதோர் பீலிசோகை
கதமெனு முதிரவாதங் காசமுற்று முலுங் காய்ச்சல்
உதையிரு மல்சீத சுரமிவையுடனே தீரும்
மதிகத் தேகமூல நீரிகிடுஞ் சந்நிபாதந் தீரும்
இதைதாப சுரங்கள் வந்தா லிடுமுலைப் பாலினோடே
கதைபேறக் கழியக்கஞ்சாக் கஷாயத்தி லிடலாங்காணே
(46)

(செ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, கருநாபி
,, தாளகம்
பொரித்த வெங்காரம்
கடுகு



இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துக் கொள்ளவும்.

சுத்திசெய்த நேர்வாளம் 15 வராகனெடை

இவைகளைக் கல்வத்திலிட்டு முருங்கையிலைச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

நன்றாக நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

இம்மாத்திரையிலொன்றை யெடுத்து இஞ்சிச்சாற்றுடன் கொடுக்கவும்.

குன்மம், சூலை, பீலிகை, சோகை, உதிரவாதம், காசம், உட்காய்ச்சல், இருமல், சீதஜ்வரம் முதலான நோய்கள் தீரும்.

எலுமிச்சம்பழச் சாற்றிலிடச் சந்நிகள் தீரும்.

தாய்ப்பாலில் கொடுக்கலாம்

கழிச்சலுக்குக் கஞ்சாச்சாற்றில் கொடுக்கவும்.

## ஆனந்தபைரவம்

சாதிலிங்க வெங்கார மோடு பெருமிளகு சிறுதிப்பிலி பரிவுடன்
சுத்திசெய் தெலும்பிச்சம்பழச் சாறுதன்னை
வற்று விச்சையாலேழுநாழி கைசெல்லவே யரைதொன்று
சிறுபயறுபோலே
எடுத்துண்டை யிரண்டிடு முலைப்பாலிலே
எந்த சுரத்துக்குமா மெச்சவே சுக்குநீர்கொள் வீறியகழிச்சல்
மாந்தம்விசூழி செரியாமல் வலிகுன்மங் கிராணிகளி



A siddhadreams ebook

இடுமோர் சட்டிமேல்மூடி விதமாய்ச்சீலை மண்செய்தங்
கடுமே யடுப்பின் மீதிருத்தி யனலால் சாமமிரண்டு சென்றால்
தொடுமே யனல்மே லாறியபின் திறந்தேசிவந்தபதம்பார்த்து
எடுமே லோகச் செந்தூர மிதமாய் பரணிதனிலடையே (2)

அடையார் சுக்கு திப்பிலியு மசமோதகம் நற்சீரகமு
மிடையாரித்துப் புடன்மிளகு மிவைதான் சமன்கொண்
டிளவறுப்பாய்
பொடியே செய்து வெருகடிதான் பொருந்தத் தேனில்
கொள்ளுமதை
கொடியாரிடையார் லோகத்தைக் கூட்டாய் ரெண்டு
பணவெடையே (3)

கூட்டிக் கொண்டு வருநாளில் குணமாய் நோய்கள்தனைக்
கேளாய்
வாட்டுப்பித்தப் பாண்டுரோகம் வாயுத்திரட்சி விஷபாகம்
மீட்டுஞ் சோகைக் கரப்பான்முதல் மினிமேல் கிராணி
குன்மத்தை
யோட்டுங் கண்டாய் குன்மத்தை யுற்றுவின் நெய் கூட்டே
(4)

(தி - ள்)

சுத்திசெய்த காந்தம்
" அரப்பொடி
" கெந்தகம்
" லிங்கம்

இவைகளைச் சரியெடை யெடுத்து இதில் மூன்றி லொருபங்கு பொரித்த வெங்காரத்தைச் சேர்த்து, கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துச் சேர்த்துக் கற்றாழைச் சாறுவிட்டு 1 நாள் முழுவதும் அரைத்துக் கொள்ளவும். இது குழம்பாகிய பின் இதனை ஒரு ஒட்டில் வைத்து மேலேயோர் ஓடுபோட்டு நன்றாக மூடிச்சீலைமண் செய்யவும். நன்றாகக் காய்ந்த பின், இதனை அடுப்பின்



மேலேவைத்து, 2 ஜாமங்கள் ஒரே சீராக எரிக்கவும். அனல் ஆறியபின் சீலைமண்ணைப் பிரித்து மருந்து சிவந்திருப்பதைப் பார்த்துப் பத்திரப்படுத்தவும்.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| ஓமம் | சீரகம் |
| இந்துப்பு | மிளகு |

இவைகளை ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்து வைத்துக் கொண்டு, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். அதில் மூவிரல் கொள்ளுமளவு அளெடுத்து புன் கூடிய செந்தூரம் 6 குன்றி நிறை எடுத்துத் தேன் விட்டு, ஒன்றாகக் குழைத்து உட்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :**

பித்தம், பாண்டுரோகம், வாயுத்திரட்சி, விஷபாகம், சோகை, கரப்பான், கிராணி, குன்மம் முதலான நோய்கள் நீங்கும்

வேண்டிய அளவு பசுவின் நெய் கூட்டவும்.

**குறிப்பு :—**

காந்தச்சுத்தி : எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்துக் கொள்ளவும்.

அரப்பொடி சுத்தி : நல்லெண்ணெய்விட்டு, இளவறுப்பாய் வறுத்துக் கொள்ளவும்.

கந்தக சுத்தி : உருக்கிப் பாலிலும், நெய்யிலும் விடவும்.

லிங்கசுத்தி : முலைப்பாலில் ஊறவைத்துக் கழுவவும்.

A siddhadreams ebook

மெய்நோவு தலைநோவு போம் மச்சமற நீர்க்கடுப்பு
பாம்புதேள் சந்நியிவை யறிவத்த பேய்ப்பூதம்
அன்னேரமே தீரும்நயனத்தி லஞ்சனமானந்த வயிரவனிதே (47)

(இ - ள்)

சுத்திசெய்த லிங்கம்
பொரித்த வெங்காரம்
மிளகு திறுதிப்பிலி

இவைகளைக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு 7 நாழிகை நன்றாக வரைத்துச் சிறு பயறளவுள்ள மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். இதில் 2 மாத்திரை யெடுத்து முலைப்பாலுடன் உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

சுக்கு கஷாயத்தில் உட்கொள்ளக்

கழிச்சல், மாந்தம், விழுசி, வலிகுன்மம், கிராணி, தலைவலி முதலானவை நீங்கும்.

நீர்க்கடுப்பு, பாம்புவிஷம், தேள்விஷம், சந்நி, பூதம் இவைகளுக்கு இம்மாத்திரையிலொன்றெடுத்து முலைப் பாலில் இழைத்துக் கண்களிடவும். அக்கணமே குணமுண்டாகும்.

குறிப்பு : இச்செய்யுளின் சீர் சரியாக இல்லை.

## அதிஸாரக் குளிகை

மஞ்சள் சாதிலிங்க கஞ்சாதிக் காய்மதித்
திடுபச்சைநாகம் நூமத்தைவித்துடன் சுக்குமிந்துப்பு
மருவுதிப்பிலி கிராம்பு கஞ்சாவிலைச் சாத்திலே தன்னி லொக்கவே



கடிகை பதின்மரை நீ கடினமிளகு குன்றியளவாகவே
வுண்டைசெய் கட்டித்தயிரிலிடலா
மஞ்சான மிஞ்சியின் சாற்றிலுங் கொள்ளலா
மதிசாரமுங் கிராணியுங்
மாருதமூலமுங் குன்மமுளதுந்தீரு
மதிசாரக்குளிகையிதுவே (48)

(இ - ள்)

சுத்திசெய்த சாதிலிங்கம்
„ நாகம்
„ ஊமத்தைவிதை
சாதிக்காய் சுக்கு
இந்துப்பு திப்பிலி
கிராம்பு

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கஞ்சாயிலைச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் (10 நாழிகை) குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இம் மாத்திரையிலொன்றைக் கட்டித்தயிருடன் உட்கொண்டாலும் அல்லது இஞ்சிச் சாற்றிலுட்கொண்டாலும்,

அதிஸாரம், கிராணி, மூலம், குன்மம் முதலான ரோகங்கள் தீரும்.

குறிப்பு : இத்தச் செய்யுளிலும் சீர் சரியாக இல்லை.

## அதிஸார கேசரி

வெங்காரமும் பச்சை நாகமுடன் மாங்கொட்டை
விளவமுத்தக் காக மேதை
பொருகக்கு மதிவிடையம் பெருங்காய மிருதி
யற நிறை யொக்கவே தான்

A siddhadreams ebook

## லோகச்செந்தூரம்

திறமிகு லோகந்தன்னை செய்தரப் பொடியதாக்கி
வறமிகு நாவல் சாற்றில் வளம்பெற வரைத்து வாங்கி
அறமிகு வரளிதன்னில் அலர்ந்த நூற்புடச் செந்தூரம்
உறமிகு பாண்டு சூலை யுட்கொள்ளச் சுவாசம் போமே (5)

(இ - ள்)

அரப்பொடியைச் சுத்திசெய்து ஒரு கல்வத்திலிட்டு காகப்பட்டைச் சாறுவிட்டு நன்றாக வரைத்துச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும். இவைகளை ஒரு ஓட்டில் வைத்து மேலே மற்றொரு ஓட்டை நன்றாகப் பொருந்தும்படி வைத்துச் சீலைமண் செய்து புடம் போடவும். இவ்வாறு 100 தடவை போடவும். இந்தச் செந்தூரத்தை யுட்கொள்ளப் பாண்டு, சூலை, சுவாசம் முதலான நோய்கள் நீங்கும்.

## இரஸச் செந்தூரம்

செப்பிய கெந்தக மிரதம் சேரொரு
குப்பியி லடைத் தெழு கூறு சீலைமண்
ஒப்பிட மணலிலிட் டொருபக லெரித்து
தப்புறு சந்திபோம் ரசசெந் தூரமே (6)

(இ - ள்).

சுத்திசெய்த கெந்தகம்
,, ரஸம்

இவ்விரண்டையும் சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டு நன்றாகக் கருமை நிறமாகும் வரை அரைக்கவும். இதனை யொரு பாட்டிலிலிட்டுப் பாட்டிலுக்கு 7 சீலைமண்



செய்யவும். இதனை ஒரு வாயகன்ற சட்டியில் மணலை நிரப்பி, அதன் நடுவில் இந்தப் பாட்டிலின் கழுத்து வெளியே இருக்கும்படி புதைக்கவும்.

பின்னர்

இச்சட்டியை அடுப்பின் மேலேற்றி. 1 பகல் முழுவதும் எரிக்கவும். ரசச்செந்தூரம் பாட்டிலின் கழுத்துப் பக்கத்தில் கட்டும் இதனையெடுத்து பத்திரப்படுத்தவும். இதல் ½ குன்றி யளவெடுத்துத் தேனில் உட்கொள்ளவும்

சந்திகள் தீரும்.

## ரஸதாமிரபற்பம்

இந்துசெ[illegible]தகம் பெருங்காயம் மிரதமோரொன் றிருகழஞ்சு
அந்தி தாமிரமறு கழஞ்சு யரைத்துத் தூதனைச் சாறுதன்னில்
செந்தீ தன்னில் புடமிட்டுத் தேனில் பற்பங் கொள்ளி ரசய்
வந்து அடுத்த குன்மங்கள் வாரா தெட்டிப் பாராதே (7)

(இ - ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | கெந்தகம் |
| பெருங்காயம் | சுத்திசெய்த பாதரஸம் |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்துக் கொள்ளவும்.

சுத்திசெய்த தாமிரத்தூள் 13½ வராகனெடை

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாகவரைத்துக் கஜ்ஜலி செய்து,

A siddhadreams ebook

நங்காதசேசிப் பழச்சாறு வார்த்தரை
தான் தேத்தான் கொட்டை போற்

தானேழு நாழிகை அரைத்துண்டை தயிரிலிடு
சர்வவதி சாரமும் போம்

மங்கள மிஞ்சியின் சாத்திலிடுமுல
மற்றருக் கிருணிக்குமே

அதிசார கேசரி பேரிதற் கென்று
அகவமுனி கற்பித்ததே (49)

(இ - ள்)

பொரித்த வெங்காரம்
மாங்கொட்டைப் பருப்பு
சுத்திசெய்த நாகம்
கோரைக் கிழங்கு
மேதை — சுக்கு
அதிவிடயம் — பெருங்காயம்

இவைகளை எலிமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக 7 நாழிகைவரை யரைத்துத் தேற்றாங் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும். இதனைத் தயிருடன் உட்கொள்ளவும்.

எல்லா அதிஸாரங்களும் தீரும்.

இஞ்சிச்சாற்றில் கொடுத்தால், மூலக்கிராணிகள் தீரும் இதற்கு அதிஸார கேசரி என்ற பெயராகும்.

## திரைலோக்ய சிந்தாமணி

இரதமுங் கெந்தகமு மரைப்பொடியு மேலமும்
என்று செம்பின் பற்பமும்

மிடுபச்சைநாகமும் திரிகடுகு திரிபலை
ஏற்றகொடி வேலி சிவதை



கருதும் விழலரிசி நாகமலர் பச்சிலை
களத்தநேர் வாளமுடனே

நிறை களிவை யொருகூறு பழவெல்ல மிருகூறு
நீர்பெற வரைத்ததனையே

விரதமே கொண்டுண்டை கடலைபோலேசெய்து
வெந்நீரி லேகொள்ளவே

விஷகர மக்கினியி லாமலே மந்திக்கும்
வீறுகுன் மஞ்சுலையுந்

திரமுள சயரோக மகாச்சுவாச முந்
தீருங் கிராணி சோகை

திரை லோக்ய சிந்தாமணி பேரிற்கென்று
செப்பினர் செகத்தி லிறைவர் (60)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" அரப்பொடி
" கெந்தகம்
" நாகம்
" சிவதைவேர்
" நேர்வாளம்
உரித்த ஏலக்காய்
செம்புபற்பம் — திப்பிலி
சுக்கு — கடுக்காய்த்தோல்
மிளகு — தான்றித்தோல்
நெல்லிவற்றல் — நாகப்பூ
கொடிவேலிவேர் — விழலரிசி
பச்சிலை

இவைகள் வகைக்கு — 1 வராகனெடை

பழயவெல்லம் — 2 வராகனெடை

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துக் கஜ்ஜலி செய்துப் பின்னர்

A siddhadreams ebook

பின்னர்

இந்துப்பு, பெருங்காயம், தாமிரத்தூளையும் சேர்த்துத் தூதுவளைச்சாறு விட்டு நன்றாகவரைத்து ஒரு ஓட்டிவிட்டுக் கவசம் செய்து புடம் இடவும். பற்பமாகும்.

இதனைத் தேனில் 1 குன்றியளவெடுத்து உட்கொள்ளவும்.

குன்மங்கள் தீரும்.

---

## நாவாக்கிளி பற்பம்

நாலுகாந்த மரப்பொடி மூன்று நல்ல கெந்தகமிரு கழஞ்சு
காலங்காரம் சூத மொடுகள்ளிச்சாறு தனைவார்த்தீது
ஏலங்குழலாயம் பிதன்னில் நேக வரைத்து அடையாகத்
தாலத்தின் பின் தப்பிவித்தால் தழலாயெரியுங் கண்டீரே (8)

கண்டபீலிகை மகாகுன்மங் கதித்த பித்த பாண்டுருவு
முத்தியெரிந்த புளித்தேக்கும் முள்ளவெக்கையஷ்ட
பீலிகையும்
தந்தாவிரண்டு பணவெடையுத் தானே தேனிற்
கொள்வீராய்
வந்தே வருந்தும் நோய்களாதும் அருந்திற் குணமா
மானவையே (9)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கந்தகம் | 4 | கழஞ்சு |
| ,, அரப்பொடி | 3 | ,, |
| ,, கெந்தகம் | 2 | ,, |
| ,, இரஸம் | 2 | ,, |
| பொரித்த வெங்காரம் | 2 | ,, |



முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துப் பின்பு மற்ற சரக்குகளைச் சேர்த்துக் கற்றாழைச்சாறு விட்டு நன்றாக வரைத்து மெல்லிய அடையாகத் தட்டி ஒரு தாலத்தின் பின்பக்கத்தில் அப்பி வெய்யிலில் வைக்கவும்.

நன்றாகக் காய்ந்த பின்னர் இதனை நுணுக்கிச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

இதில் 3½ குன்றி யளவெடுத்துத் தேனில் தினம் 2 வேளை உட்கொண்டுவரப் பீலிகை, குன்மம், பித்த பாண்டு, புளித்தேப்பம், வெட்கை, முதலான பலவித நோய்களுந் தீரும்.

---

## பஞ்ச சிந்தூரம்

பஞ்சசிந்தூரம் பண்ண பாரிய வீரதம் லிங்கம்
கஞ்சமாம் காந்தம் வெள்ளைச் சவுரிய்யங் கௌரியஞ்சு
விஞ்சாறு பதமென்காணி மேவிய சாற்றரைத்து
மஞ்சிறு சட்டிதன்னில் வைத்து செந்தூரம் பண்ணே
(10)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, லிங்கம்
,, காந்தம்
,, வெள்ளியம்
,, கௌரிபாஷாணம்

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொன்னாங்காணிச் சாறு விட்டு நன்றாகவரைத்துச் (2 நாட்கள்) சிறுசிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும்.

A siddhadreams ebook

மற்ற சரக்குகளையும் சுத்தி செய்து போட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்றாக அரைத்துக் கடலையளவுருண்டை செய்து காயவைத்துக் கொள்ளவும். இதில் ஒரு மாத்திரை யெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

விஷஜ்வரங்கள், அக்கினிமாந்தம், கிராணி, சோகை முதலான நோய்கள் தீரும்.

### சூசிகாபரண ரஸம்

அரிதாரமுஞ்சாதி லிங்கம்வெண் காரமுடன்
அப்பிரக மனோசிலையுடன்
ஆனதுத்தம் துரிசுபச் சைநாகம் மீதி
லடுத்த சங்கே லவணமுஞ்
சரியாக வொருகூறு இரதமொரு கூறுமே
தானெல்லாஞ் சுத்திசெய்தே
தன்னிலுப்பைத் தைலம் வார்த்துமூணு நாளரைச்
சாமமே நூக்கி வெந்தால்
பரிதாக அரவினில் பிச்சிலே பாவகம்
பண்ணியொரு குன்றியளவாய்
பண்பாக உச்சியில் கொற்றியே மற்ற நீ
பலசந்நியும் தீருமே
சொரிவாத மும்அற்புத வாதமுங் கற்பம்
சூதிகா வாதமுடனே
சேர்விடு மையுஞ் சந்நிகளும் பல
தீருமே சூசிகா பரணமிதுவே (51)

(இ - ள்)

சுத்திசெய்த அரிதாரம்
" வெங்காரம்



சுத்திசெய்த மனோசிலை
" துரிசு
" சங்கு
" பாதரஸம்
" லிங்கம்
" அப்ரகம்
" துத்தம்
" நாகம்
இந்துப்பு

இவைகளைக் கல்வத்திலிட்டு இலுப்பை யெண்ணெய் வார்த்து 3 நாட்கள் விடாமல் அரைக்கவும், பின்னர் பாம்புப்பித்தம் விட்டு அரைத்து, மெழுகாகச் செய்து கொள்ளவும்.

சங்கிக்கு தலையில் சிறிது கீறி இம்மருந்தில் ஒரு குன்றி யளவெடுத்துத் தேய்க்கவும். சொறி வாதம், அர்ப்புதவாதம், சூதிகாவாதம் முதலான நோய்கள்ளும் தீரும். இதன்பெயர் "சூசிகாபரண ரஸம்" ஆகும்.

### அதிஸாரத்திற்குப பூனைக்காலி மாத்திரை

இதமுள்ள பூனைக்காலி வித்துடனீய்ய பற்பம்
மதிவிடைய மத்திப்பூவு மான்கழற் கோடிமொக்க
மதமுளச் சாத்தால் மத்தித்துண்டையும் கழஞ்சே போலக்
குதமதி சாரத்திற்குக் கொள்ளுவீர் தேனிலாமே (52)

(இ - ள்)

பூனைக்காலிவிதை ஈயபற்பம்
அதிவிடையம் ஆத்திப்பூ
கழற்சிக்கொட்டைப்பருப்பு

A siddhadreams ebook

பின்னர்

இவைகளை ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து தக்க புடம் புடமிடவும். செந்தூரமாகும்.

## வங்கச் செந்தூரம்

வங்கத்தைக் கள்ளிப்பாலில் வரிசையா யுருக்கிச்சாய்த்து
பொங்குத்தப் புளியங்கொட்டைத் தோல்தனைப் பொடியதாக்கி
தங்கவீழ் மேலுமிட்டுச் சட்டியில் நாலுசாமம்
செங்கல் போலெரிக்க நல்ல செந்தூரமாகுந்தானே (11)

(இ - ள்)

வெள்ளீயத்தை யுருக்கிக் கள்ளிப்பாலில் (6 தடவை) சாய்க்கவும். வெட்டையாகும். ஒரு சட்டியில் புளியங் கொட்டைத் தோலைப் பொடியாக்கிப் போட்டு அதன் மேல் ஈயவெட்டையை வைத்து மறுபடியும் புளியங் கொட்டைத் தோலையிடவும். அந்தச் சட்டியை மூடி 4 ஜாமங்கள் ஒரே சீராக எரிக்கவும்;

பற்பம்கிடைக்கும்.

## அரிதாரச்செந்தூரம்

அரிதாரம் பலமோரஞ்சு ஆவின்மோர் கோமியம் பின்
உரிய சுண்ணாம்பு நீரால் ஊறவோவ் வொருநாள் நீங்கிப்
பெரிய காய்வேளைச் சாற்றால் பலப்பட வரைத்துத் தட்டித்
தெரிய காய்வேளைச்சாம்பல் செய்யபானையில் நீ போட்ட (12)



போட்ட பின்னரிதாரத்தைப் பொருந்தவே சாம்பல் தன்னை
வாட்டமாய் நீக்கிமூடி மறையவே சீலைமண் செய்
தாட்டமாய் மூன்றுநாளுஞ் செந்தழவிடு செந்தூரம்
நாட்டமாய்க் கொள்ளச் சூலை நடுக்கல் குன்மம்போ மென்றே (13)

(இ - ள்)

அரிதாரம் 5 பலம் எடுத்துப் பசுவின் மோர், பசு மூத்திரம், சுண்ணாம்பு நீர் இவைகளில் முறையே யொவ் வொரு நாள் ஊறவைத்துக் கழுவிக் கொள்ளவும்.

அதன்பின், சுத்தியான அரிதாரத்தைக் கல்வத் திலிட்டுக் காய்வேளைச் சாறுவிட்டு நன்றாக வரைத்துச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டி உலரவைக்கவும். ஒரு பானையில் காய்வேளையைச் சுட்டசாம்பலை 1 படி இட்டு அதன் மேல் இந்த வில்லைகளை வைத்து மறுபடியும் 1 படி சாம்பலை யிட்டு 7 தடவைச் சீலைமண் செய்யவும். 3 நாட்களுக்கு மும்முறை புடமிடவும். சுத்தமான செந்தூரம் கிடைக்கும்.

இதில் குன்றியளவு எடுத்துத் தேனுடன் உட் கொள்ள

நடுக்கல், குன்மம் முதலானவை தீரும்.

## வங்கரஸ பாத்திரை

வங்கமோ டிரதஞ் சேர்த்து வளர்ந்த தாமிரமுஞ் சேர்த்து
அங்கமாம் நூரிகநுத்தம் மக்கராக்காரம் காரம்
பொங்கிய சீனக்காரம் புகழும் வெந்நகந்தான் கூட்டி
சங்கைமாத் திரைதான் கொள்ளச் சகலகுன் மங்கள் போமே (14)

47

A siddhadreams ebook

இவைகளைக் கல்வத்திலிட்டு கழற்சிக்கொடிச் சாறு விட்டு நன்றாக வரைத்துக் கழஞ்சளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம் மாத்திரையிலொன்றை யெடுத்துத் தேனுடன் உட்கொள்ளவும்.

அதிசாரம் நிற்கும்.

## அதிஸார குடாரம்

சாதிக்காய் மத்தைவித்து தனிற்சுக்கு விடைய நாகஞ்
சூதத்தின் விதைப்பருப்புச் சொல்லபின் கஞ்சாவித்துத்
தாதுத்தசீந்தித் தண்டிற் சாத்திறு லரைத்த வுண்டை
சாதித் தேதேனிற் கொள்ளத் தானதிசாரம் பண்ணே
(53)

(இ - ள்)

| | |
|---|---|
| சாதிக்காய் | ஊமத்தைவிதை |
| சுக்கு | அதிவிடையம் |
| நாகபற்பம் | மாக்கொட்டைப் |
| கஞ்சாவித்து | அபின் [பருப்பு |

இவைகளைச் சிந்திற்கொடிச் சாறு விட்டு நன்றாக வரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். இதனைத் தேனில் கொடுக்கவும்.

அதிஸாரங்கள் நிற்கும்.



## மதனகாமேஸ்வரம்

கஞ்சா வித்தபின்சாதிக் காயுடன் வெங்காரம்
பூவுமுருங்கைவிரை சாதிலிங்கம் சூதம்
மிஞ்சாமற் பொடியாக்கித் தேங்காயுள்ளடைத்து
மென்கிலின் கன்றாக மேலுறவே பூசி
அஞ்சாமற் கன்னடைத்து வராகபுடம் போட்டு
அதையுடைத்து உள்மருந்தை யெடுத்துலர்த்திக்
மிஞ்சாமல் மருந்துப்பட்ட தேங்காயும் துருவி [கொண்டு
மேல்மருந்தைக் கூட்டியரை மெழுகுபோலாமே (54)

மெழுகுபோலரைத்த வுண்டை ஒன்று பொடியாக்கிச்
சர்க்கரையிற் பொசிக்கத் தானும்
விழுபொழுதே யெழுமளவுத் தன்பனமாய் நின்று
மெல்லியரை வலதழிக்கு மிதனைமாத்திக்
கழிவு செயில் லெலும்பிச்சங் காயைத்தின்னக்
கசப்புடன் புளிப்பை யொழிகா மஞ்சளாமே (55)

(இ - ள்)

| | |
|---|---|
| கஞ்சாவிதை | சுத்திசெய்த அபின் |
| சாதிக்காய் | பொரித்த வெங்காரம் |
| முருங்கைப்பூ | முருங்கைவிதை |
| சுத்திசெய்த லிங்கம் | சுத்திசெய்தபாதரஸம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துத் தூளாக்கி, ஒரு முற்றிய தேங்காயை கொண்டுவந்து கண்களைத் திறந்து அதனுள்ளே முன் அரைத்த சூரணத்தை இட்டு ஒரு மூடியில் தக்கையினும் அடைத்துச் சாணிப்பூசிக் கவசித்து, ஒரு முழ கீள அகலமுள்ள புடமிடவும். தேங்காய் வெடித்த பின் புடத்தைக் கலைத்து உள்மருந்துகளை எடுத்து உலத்தி வைத்துக் கொள்ளவும்



A siddhadreams ebook

(செ - ள்)

சுத்திசெய்த வெள்ளியம்
,, பாதரஸம்
,, தாமிரம்
,, துரிசு
,, துத்தம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
அக்கிராக்காரம் வெங்காரம்
சீனக்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்றாக 4 நாட்கள் அரைக்கவும்.

பின்னர்

குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

ஒவ்வொரு மாத்திரை விதம் தினம் 2 வேளை உட்கொள்ளக்

குன்மம் தீரும்.

---

## சுயமக்கினிச் சூரணம்

சூதந்தா னொன்று நாபி துலங்கிய ரெண்டு காந்தம்
வேதந்த னாறுதானே விரைந்து கெந் தகந்தாவெட்டு
போதந்தா ளயமோர் பத்துப் பொங்கிய குமரிச்சாத்தால்
நாதந்தான் கலத்தில் வைக்க நற்சுய மக்கினியாமே (15)

(செ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 | பலம் |
| ,, நாபி | 2 | ,, |



| | | |
|---|---|---|
| ,, காந்தம் | 6 | பலம் |
| ,, கெந்தகம் | 8 | ,, |
| ,, அரப்பொடி | 10 | ,, |

இவைகளுள் முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாகக் கருகிறமாகுமளவு அரைத்துக் கஜ்ஜளி செய்து கொள்ளவும்

பின்னர்

மற்றசரக்குகளைப் போட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாறு விட்டு நன்றாக அரைத்து உலரவைக்கவும்.

இதன் பெயர் "சுயமக்கினிச் சூரண" மாகும்.

---

## ரஸபற்பத்தினால் தீரும் நோய்கள்

பீதம்பிரமம் பீசலிக்கரு சூலைபெரிய வாதபித்தச்
சேத்துமஞ் செய்யும் குன்மமெட்டும் நீராவாயு சலக்கழிச்சல்
பித்தம் பத்தும் பெருவாதம் பரந்தவீக்கம் பறங்கிவிடைச்
சீதமுடனே வெற்போடச் செய்யுமிரதப் பற்பமதே (16)

(செ - ள்)

மயக்கம், விரைவீக்கம், சூலை, வாத, பித்த, கபக் கோளாறினாலுண்டாகும் 8 வித குன்ம வகைகளும், நீராத வாதநோயும், தண்ணீர் போலக்கழிச்சலும், 10 வகை பித்தங்களும், வீக்கம், பறங்கிப் புண்கள், சீதம். வெப்பு முதலான நோய்கள் தீரும்.

---

A siddhadreams ebook

தேங்காயைத் துருவி எடுத்துக் கொண்டு கல்வத்தி லிட்டு முன் சூரணத்தையும் சேர்த்து மெழுகுபோல் அரைக்கவும். சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக திரட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்துச் சர்க்கரையுடன் உட்கொள்ளவும். ஸ்தம்பனமாகும். தாதுபுஷ்டி புண் டாகும்.

**பத்தியம் :—**

எலுமிச்சங்காய், கசப்புப்பதார்த்தங்கள், புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள், மஞ்சள் முதலானவைகள் நீக்கி விடவும்.

---

## சந்நிபாத பைரவன்

சந்நிபாத பைரவன் தன்னைப் பண்ணுவேன்
தமியென ரிதாரமுடனே
தாங்கரிய கெந்தகம்டங்கண மனோசிலை
தானொரு கழஞ்சுக்குப் பச்சைநாக முக்கழஞ்சுகூட்டி
இன்னிவைகளொடு பாதிசாதிலிங் கம்பாதி
இவையெலும்பிச் சைகனில்
இளசாரு மிஞ்சி நீ ரொருசாமங் கொடுவேர்
கஷாய மொருசாமம்
பின்னியரைத் துவரையள வுண்டையிடு சுக்கு நீ
ருடன் கொளத்திரிதோஷம்
வாய்நீரு றல்சுரம் அதிசார மய்யமொடு
பித்தப்பாண்டு காமாலை சோகை யின்னல்
பன்னிய குளுபச்சை வயிறுவலி தனுர்வாதம்
பதினறு சந்நிபாதம்



பரமகுரு நாதாருளாலிவைகள் தீர்ந்திடும்
பகர் சந்தி வைரவனிதே (26)

(தே - ச)

சுத்திசெய்த அரிதாரம்
„ கெந்தகம்
„ மனோசிலை
பொரித்தவெங்காரம்

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை

சுத்திசெய்த நாகம் 3¾ வராகனெடை
„ லிங்கம் 4½ „

இவைகளுள் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல் வத்திலிட்டு நன்றாகவரைத்துக் கஜ்ஜலியாக்கி, பின்னர் மற்றசரக்குகளைச் சேர்த்து

எலிமிச்சம்பழச் சாறு
இளசான குறுந்து இஞ்சிச்சாறு
கொடிவேலி வேர் கஷாயம்

இவைகளைத் தனித்தனியே விட்டு ஒவ்வொரு ஜாமம் விதமரைத்துத் துவரையளவுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும்.

சுக்குக் கஷாயத்துடன் ஒரு மாத்திரை உட்கொள் ளவும்.

திரிதோஷம், வாய்நீரூறல், ஜ்வரம், அதிசாரம், கபம், பித்தம், பாண்டு, காமாலை, சோகை, வயிற்றுவலி, தனுர்வாதம், 16 வகை சந்நிவாதம் முதலான ரோகங் கள் தீரும்.

---

A siddhadreams ebook

## இரதப் பற்பம் (பதங்கம்) செய்யும் வகை

செங்கல் பாலுப்புச் சிறங்கை களுடனிரத
மிங்கிது கலந்து மேல்சட்டி யிசையமூடி மண்ணேழு
பங்கப்படாமல் அடுப்பில்வைத்துப் பகல்நாலுசாம
மெரித்திறக்கி
அங்கது மேல்சட்டிக் குள்பத்து மதுவேயிரத பற்பமிதே
(17)

(கு - ரை)

செங்கல் தூள், இந்துப்பு இவ்விரண்டையும் ஒரு சிறங்கை எடுத்துச் சுத்தி செய்த இரஸத்தை விட்டு நன்றாகக் கலந்து ஒரு சட்டியிலிட்டு அதன் வாய்க்குத் தக்கபடி வேறொரு குழிவான சட்டியை மூடி அதன் வாய்க்கு 7 சீலைமண்கட்டவும்.

பின்னர்

இந்த சட்டியை அடுப்பின் மேலேற்றி பகல் 4 ஜாமங்கள் எரித்து இறக்கவும். நாளுக ஆறியபின் மேல்சட்டியைச் சாக்கிரதையாகப் பிரித்துப்பார்த்தால் அதனுள் ரஸப்பதங்கம் காணும். அதனைச் சுரண்டி வைத்துப் பத்திரப்படுத்தவும். இதற்கே "இரஸபற்பம்" என்றும் வேறு பெயர்.

## தாமிர பற்பத்தின் குறிகள்

தாமிரபற்பந் தன்னை தருகிடா தருந்து வீரால்
ஆம்பல வாயுச்சூலை அதனுடன் திரண்டவாயு
மென்படு சத்திவிக்கல் மீளுவதுண்மை யென்னத்
தேன்பல பற்பமேத்துந் தெய்வமா முனிவர் சொன்னர்
(18)



(கு - ரை)

வாயுரோகம், சூலை, வாந்தி, விக்கல், முதலான நோய்கள் தாமிரபற்பத்தின் உபயோகத்தால் தீரும்.

## வங்க பற்பத்தின் குணம்

வங்கங்கடிது காரீய மிதித்தசிந்தூ ரப்படுத்தி
அங்கவமே மிக்கழிபி லதற்குச் சர்க்கரை கற்கண்டா
மங்கவயறு கழிச்சலெனில் ஆமணக்கும்பசு நெய்தேனும்
தெங்கனி ளநீர்தன்னிலிடத் தீரும் சலம்பத்துப்
பிரமியமே (19)

வாதமாகில் சுக்கிலநீர் மஞ்சாடி யிரண்டு வருந்துமெரி
பித்த குன்மம் கருப்புக் கட்டித் தானிடுகத் தேத்தா
முடனே வலிகுன்மந் தேனில் நொச்சிச்சா
றிடுக வேதனையாம் சத்திக் குன்மமிஞ்சிச் சாத்திலது
விடுகபோத முடன்உதிர வலிபோக்கு முன்னிச்
சாற்றிலிடே (20)

(கு - ரை)

வெள்ளீயம் அல்லது காரீயச் செந்தூரத்தை யுட்கொள்வதனுல் உண்டாகும் பயன்களாவன. சர்க்கரை கற்கண்டுத்தூள் இவைகளில் சாப்பிட்டால் சாதாரணமான வயிற்றுப் போக்கு நிற்கும். அதிகமான கழிச்சலுண்டானுல், பசு நெய், தேன் இவைகளில் உட்கொள்ளவும். 10 வகை மேகங்களும் நீர இளநீருடன் இச்செந்தூரத்தை சாப்பிடவும், வாதநோய்களுக்குத் தண்ணீருடன் 2 குன்றிமிளைச் செந்தூரம் உட்கொள்ளவும். எரிகுன்மம் நீரத் தேன், நொச்சிச்சாறு இவைகளில் உட்கொள்ளவும். வாந்தியுடன், கூடிய குன்மத்திற்கு

A siddhadreams ebook

## சித்தானந்த ரஸம்

இரதமொரு காசெடை நாகமொரு காசெடை
டங்கணமு மிருகாசெடை
யிங்குள மூநாலு காசெடைகொள் நேர்வாள
மெண்கழஞ்சான நிறைகொள்
விரதவிஞ் சிச்சாற்றி லொருசாம மற்றித்து
வீருமுருந்துபோல
மிஞ்சாமலுண் டைசெய் திஞ்சியின் சாற்றிலும்
வெண்கக்கு நீரிலுமிட
பாரவிஷ ஜ்வரஞ்சூலை குடல்வாதமும்
பாண்டு ரோகம்குன்மமும்
பார்விரை வாதமும் பீலிகையும் வாயுவும்
பலமூலமுந் தீருமே
விரதமுன் பத்தியம் தயிர்மோரசனமும்
வெந்நீர் குடிக் கலாகு
மேதினியில் மானிடர்க் கெல்லா வியாதிக்கும்
வீறுசித் தானந்த ரஸமே (27)

(இ - ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | | 1 | வராகனெடை |
| ,, | நாகம் | 1 | ,, |
| ,, | லிங்கம் | 4 | ,, |
| ,, | நேர்வாளம் | 10 | ,, |
| பொரித்தவெங்காரம் | | 2 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு முதலில் ரஸத்தையும், கெந்தகத்தையும் நன்றாக வரைத்துக் கஜ்ஜலி செய்து பின்னர் மற்ற சரக்குகளையும் சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு 1 ஜாமம் அரைத்து, உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்



இதிலொரு மாத்திரை யெடுத்து இஞ்சிச் சாற்றிலோ சுக்கு கஷாயத்திலோ உட்கொள்ளவும்.

விஷஜ்வரம், சூலை, குடல்வாதம், பாண்டுரோகம், குன்மம், விரைவாதம், பீலிகை, வாயு, மூலம் முதலான ரோகங்கள் தீரும்.

**பத்தியம்:—**

தயிர், மோர் இவைகள் சேர்த்துச் சாப்பிடலாம். வெந்நீர் சேர்க்கவும்.

இதன் பெயர் சித்தானந்த ரஸமாகும்.

## மண்டூர வடகம்

சொல்லும்தற் சிவதைவேர் கோசலந்தன்னிலே
சுத்திசெய்து பன்னிருபலஞ்
சுவருமுன் கிட்டமோ டரப்படி கோசலம்
தன்னிலே வேகவைத்து
வல்லபடி யிருபத்துரெண்டு பலமும்வேலி
வட்டத்திருப்பி வேரு
மஞ்சளொடு திரிபலை யுத்திரி கடுகு
விழாலமதி மத்தை திப்பிலிமூலமும்
கல்லையறவே கருஞ்சீரக மோரொன்று
கண்டநிறை யொருகழஞ்சே
கடினமறயிரு சாமமரை கோசலத்திலே
நாளொன்றி லேகுளிகை கொள்ள
நாடாது பாண்டுவுஞ் சோகையுந் தீருமே
நம்புமண் டூரமிதுவே (58)

A siddhadreams ebook

இச்சாற்றில் கல்கவும். முள்ளிச்சாற்றுடன் கொடுக்க ஸ்திரீகளுக்கு உதிரச் சிக்கலால் உண்டாகும் வலி நிற்கும்.

## காந்தச் செந்தூரத்தின் குணங்கள்

வீக்கம் கழிச்சல் வெருசலங்கள் மிருத்த வினைகாமாலை
போக்கும் வாயுவு வாதத்தைப் பொல்லாப் பித்த
பாண்டுரும்
காச்சுக் கிரிகை பெருவயிறு காணுமூலம் வாய்வு
வய்யத்
தாக்குக் காந்தச் செந்தூரந் தன்னுலினம் போங்
கண்டீரே (21)

(கு-ரை)

உடல் வீக்கம், கழிச்சல், சலப்பிரமியம், சோகை காமாலை, வாத நோய், பித்த பாண்டு, பெருவயிறு, உள் மூலம், வாய்வு, கபம் முதலான நோய்கள் காந்தபற்பத்தின் உபயோகத்தால் தீரும்.

## இரசபற்பம்

இரதமப் புரகமீரஞ்சு கழஞ்சு கொண்டு
சரசமாற் றுல்பாலில் தன்னெல்லால் துடைத்துக்கூட்டி
புரவியதாகச் சுக்கு வாத்திடு பரணிசினி
தரவிது கொள்ள வெள்ளில் தானதுவடைத்துக்
கொள்ளே (22)

கொள்ளு மண்சீலையேழு கொண்டுதான் பார்த்தடுதாக்க
வெள்ளிடை சார்த்துவெய்யி லிடைதன்னில் மேவுதப்பால்



மெள்ளவே யகலில் வைத்து மௌவலி மெய்யுரு
துள்ள தீயான பானை யொறுதாஞ் சாமமொன்றே (23)

தன்றனைப் பானைப்பாதி நயந்து மண்ணிட்டுச் செம்மிச்
சென்றதிற் பரணிதென்னைச் சிறக்கவே யதனுள் வைத்து
ஒன்றவே நிரமப்பானை யுற்றிடமணலை விட்டுச்
சென்றிட மூடிப்போட்டுச் சீலைமண் செய்து கொள்ளே
(24)

கொள்ளவே யடுப்பில்வேகக் குறைந்திடத் தழலேயிட்டுத்
துள்ளுள மூன்றுசாமம் துடக்கற வெத்திட்டாத்தி
மெள்ளவே மருந்தெடுத்து மீளவும் பொடித் தகத்துக்
கொள்ளவே யிடாமற்காட்டிக் கொண்டுதான் வைப்ப
தாமே (25)

வைத்ததோர் பற்பத்தன்னை வரைந்திடா தொரு
மாவிட்டால்
ஒற்றத்தோர் வாதபித்த முறுதியாந் தபனம் தீரும்
மெத்தவச் சுரவாதமிடர் பித்தம் சுவாசகாசம்
சுத்தசேத்தும சுரவாதம் சுகப்பட மருந்துசெய்யே (26)

(கு-ரை)

இந்த செய்யுட்கள் சரியாக இல்லாததால் பொருள் தரப் படவில்லை.

## குமரி பற்பம்

அரப்பொடி யைங்கழஞ்சு வவ்விடை காந்தங் கூட்டி
தருவறப்பொடி செய்தொக்க நன்றதாய்த் தட்டியிட்டு
மருவிய கெந்தமஞ்சு மருவவே யிரண்டுங் கட்டி
வெருவிடச் சட்டியிட்டு வெத்திட நாலுசாமம் (27)

A siddhadreams ebook

வெந்தவ மருந்துதன்னில் மென்பனைத் தெடையெடுத்து
வந்தபின்மிள கித்துப்பு மருவுதிப் பிலியே சுக்கு
முத்திய வோமம் நற்சீரகம் முதுதிரிகடுகு கூட்டி
வெந்தவ மருந்திளுேடெ ஆடையுள் கட்டிக்கொள்ளே
(28)

கொள்ளே குமரிப் பற்பத்தைக் குலவுவெருகின் டியளவு
உள்ளே நின்ற வயற்றுவலி நிரத்தெரியு மெரிகுன்மம்
பின்னைப் பீலிகைப் பெருவயறு பெரிய யிருமல்
பாண்டுருவு
முள்ளக் கிராணி யித்தனேமு டைந்து கழல்
போன்றதுவாமே (29)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த | அரப்பொடி | 6½ வராகனெடை |
| ,, | கெந்தகம் | |

இவ்விரண்டையும் நன்றாகச் சூரணமாகச் செய்து சோற்றுக் கற்றாழைச்சாறு விட்டு, நன்றாக அரைத்து அடையாகத் தட்டி ஒரு சட்டியில் அப்பி அடுப்பின் மேலேற்றி 4 சாமங்கள் ஒரே சீரான விறகினுல் எரிக்கவும்.

இந்த மருந்தில் 3½ குன்றி நிறை எடுத்து, இந்துப்பு திப்பிலி, சுக்கு, ஓமம், சீரகம், திரிகடுகு (சுக்கு, திப்பிலி, மிளகு,) முதலியவைகளைச் சரியெடுத்து இடித்த சூரணத்தில் ஒரு குத்தளவெடுத்துக் கலந்து உட்கொள்ளவும்.

வயிற்றுவலி, எரிகுன்மம், பீலிகை, பெருவயிறு, இருமல், பாண்டு, கிராணிகள் முதலான ரோகங்களை நீக்கும்.



## சுயமக்கினி

நாலுசூதம் சிலையிரண்டு நல்லகெந்தக மதற்குரெட்டிக்
காலக்கந்த மதுக்குரெட்டி கடியலோகத் துக்குரெட்டி
ஏலங் குழலார் குமரிச்சாற்று லரைத்து இளக்கமுடன்
தாலத்தின் பின்னே தப்பத் தனலா யெரியுங் கண்டாயே
(30)

கண்டு கொள்ளீரிது தனக்கு களைத்தவாயுவு குன்மமுடன்
கிண்டு செய்யும் பாண்டுவகும் விஷப்பாக வீக்கமுடன்
அண்டவாதம் விரைவாதம் அலற்றுஞ்சந்நி யதிசாரம்
விண்டேயேகும் பணவெடைதான் விரையவிஞ்சிச்
சாற்றிலிடே (31)

(இ - ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | பாதரஸம் | 4 | பங்கு |
| ,, | மனேசிலே | 2 | ,, |
| ,, | கெந்தகம் | 4 | ,, |
| ,, | காந்தம் | 8 | ,, |
| ,, | அயத்தூள் | 16 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, முதலில் ரஸத்தையும், கெந்தகத்தையும் நன்றாக வரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து,

பின்னர்

மற்ற சரக்குகளை யிட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துப் பித்தளைத் தாளத்தின் பின்பக்கம் வடையாக தட்டிக்கொள்ளவும். காய்ந்த பின் எரியும்.

பின்னர்

இதனைப் பத்திரப்படுத்தவும்.

48

A siddhadreams ebook

(செ - ம்)

பசுவின் மூத்திரத்தில் வேகவைத்து எடுத்த சிவதை வேர் — 12 பலம் எடுத்துக் கொள்ளவும். வல்லத்துக் கிட்டாளையும் பொடியாக்கிப் பசுமூத்திரத்தில் போட்டு வேகவைத்து எடுத்துக் கொண்டத் தூள் — 22 பலம் எடுத்துக் கொள்ளவும். இதனுடன்

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | வட்டத்திருப்பி |
| மஞ்சள் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | விழலரிசி |
| அதிமதுரம் | சித்தரத்தை |
| கண்டத்திப்பிலி | கருஞ்சீரகம் |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடையள வெடுத்து தூள்செய்து, எல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பசுமாட்டு மூத்திரம் விட்டு 2 ஜாமங்கள் அரைக்கவும். பின்னர் கழற்சிக்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்துப் பசுவின் மூத்திரத்தில் உட்கொள்ளக் கொடுக்கவும்.

பாண்டு, சோகை முதலான நோய்கள் தீரும்.

இது "மண்டூர வடகம்" ஆகும்.

### சீதாங்கர் சுயமக்கினிச் செந்தூரம்

நாலுருதஞ் சிலையிரண்டு நல்லகாந்தம் நாலுரெட்டி
காலக்காந்த மதற்கு ரெட்டிக் கரைசேர்லோக மதற்குரெட்டி



ஏலங்குழலாய்! அம்மிதனிலிழைத்துக் குமரிச்சாறதனால்
நாலத்துக்குள்ளே வைத்தாக்கால் தணலா யெரியுங்
கண்டீரே (59)

கண்டாருவை பீலிகைகுன்ம களத்தபித்த பாண்டுருவம்
உண்டாலருசி புளித்தேப்ப முளைப்பொ டிருமலுடன் வெதுப்புக்
கொண்டா லிஞ்சிச் சாறதனால் குணமாங்கண்டீர் குருவறியக்
கண்டே தன்வந் தரிபகவான் கருதியுரைத்த பற்பமிதே (60)

(செ - ம்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 4 | பலம் |
| " மனோசிலை | 2 | " |
| " கெந்தகம் | 8 | " |
| " காந்தம் | 16 | " |
| " அயம் | 32 | " |

இவைகளை அம்மியில் வைத்துக் கற்றாழைச் சாறு விட்டு நன்றாக அரைத்து ஒரு நாலத்தில் வடையாகத் தட்டி உலரவைத்தால், தணல் போல்பற்றி எரியும். எரிந்து அடங்கிய பின் இதனைப் பத்திரப் படுத்தவும்.

அருவை, பீலிகை, குன்மம், பித்தம், பாண்டு, தீராத ஏப்பம், மேல்மூச்சு, இருமல், உளைச்சல், காங்கை முதலானவைகளுக்கு இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளவும்.

### நவலோகாக்கினிச் செந்தூரம்

சுத்தரஸம் வெள்ளி சொர்ணங் காந்தபற்ப
முஞ்சொல்லு மிருவகை சுயமுத்துன்
மெக்கினரப் பொடிசெம் பிரும்பரப் பொடித்து
கைவிடத் தன்னிலொத்தே

A siddhadreams ebook

இதில் 3½ குன்றியெடை அளவு எடுத்து இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளவும்.

வாயு, குன்மம், பாண்டு, விஷப்பாகம், வீக்கம் அண்டவாதம், விரைவாதம், ஜன்னி, அதிஸாரம் முதலான ரோகங்கள் தீரும்.

---

## அக்கினி குமாரன்

---

நாபிசூதம் மனோசிலை கெந்தகம் நல்லலிங்க மரிதாரம க்கிருத்
லேவிபான மிருவிவெண் காரமுஞ் செம்புலோக முருக்கு
மிலவங்கம்
தாவியோர்சோன் றிடைசரியாகவே தக்ககத்திதனைச் செய்து
கொள்
கோபமில்லை குமரிப்பால் தன்னிலே குளிர நாலு சாமமரைத்
திடே (32)

(இ-ள்)

சுத்திசெய்த நாபி
,, பாதரஸம்
,, மனோசிலை
,, கெந்தகம்
,, லிங்கம்
,, தாளகம்
,, இருவி
,, செம்புத்தூள்
,, அரப்பொடி
,, உருக்குத்தூள்

அக்கிராக்காரம் பொரித்தவெங்காரம்
கிராம்பு



இவைகளைக்கல்வத்திலிட்டுத்தூள்செய்து,சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டு நன்றாக (4 ஜாமங்கள்) வரைத்துத் தாளத்தின் பின்பக்கம் அப்பி உலரவைக்கவும்.

இதனையும் சயமாக்கினி மருந்தைப்போல் உபயோகிக்கவும்.

---

## ஏலாதியுருண்டை

---

ஏலாதியுண்டைக்கு நல்லேல மிலவங்கம்
அதிமதூர மிருவேலி
வேரிடு சுக்குநன் னரிமுந் திரிகை
பேரீஞ்சி லாமிச்சை
கோரோசனை தாளீசபத்திரி திலப்பனை சடாமாஞ்சி
சந்தனந் தேவதாரு
தன்னுடன் திப்பிலியிலுப்பையின் பூவிவை
தனித்தனி கழஞ்சாகவே
மேலான கடுகுரோகிணி கழஞ்சொரு
பதையும் வீறுமின நீர் வார்த்து
விழுதாயரைத் துண்டை குன்றியளவாக
வெய்யில் படாத வகைசெய்
பாலான மொழிமங்கை யிளநீர்தனிற் கொடு
பற்றிய சுரந்தீரவே
பண்பான கூத்தற் கிஷாயத்தி லிட்டிட
பலசந்நியும் தீருமே (33)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| அதிமதுரம் | வெட்டிவேர் |
| சுக்கு | நன்னாரிவேர் |

A siddhadreams ebook

கத்தெருக்கம் வேர்கஷாயத் திலத்த நாள்
நாள்கா காப்பற வரைந்தேகாசிக்
தேகாசிக் குப்பியிலடைத் தேசீலே
மண்செய்து காணவாலுகத்தில் வெந்தே
மற்றெனை வெடுத்தாற்றி தேகவே பொடிசெய்து
மீராமல் பணவெடை வெந்ததேனிற் கொள்ள
மிருசோகை குன்மமறும் வெண்சுக்கு நீரிலு
மிடகுத்து வாதஞ்சூலே
சீதசுரமூலமுங் கூசுமே விஷசுரமுங்
கூறரிய சன்னியற நெச்சிக்கஷாய
மாங்குலவு நவலோகாக் கினியே (61)

(தி - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
சுத்தமான வெள்ளிபற்பம்
" சொர்ணபற்பம்
காந்தபற்பம்
சுத்திசெய்த காரீயம்
" வெள்ளீயம்
" எஃகுப்பொடி.
" செம்புத்தூள்
" இரும்பு அரப்பொடி.

இவைகளைச் சமனெடுத்துக்கல்வத்திலிட்டு, எருக்கம் வேர்க் கஷாயம் விட்டு 5 நாட்கள் கன்றாகவரைக்கவும். பின்னர் இவைகளைக் காசிக் குப்பிக்குள்ளிட்டு, 7 சீலே மண்செய்து காயவைத்து. வாலுகா எந்திரத்தில் (மணலுக்குள் கழுத்துவரை புதைத்து) ஒரே சீரான தீயினல் எரித்து, ஆறிய பின்னர் கன்றாகப் பொடி செய்து கொண்டு பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு பணவெடை (3½ குன்றியளவு) எடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளக் கொடுக்கவும்.



சோகை, குன்மம் இவை தீரும்.

சுக்குக் கஷாயத்தில் கொடுத்தால்

குத்துவாதம், சூலே, சீதஜ்வரம், விஷஜ்வரம், முதலானவை தீரும்.

சந்நிகளுக்கு நொச்சிக் கஷாயத்தில் உட்கொள்ளவும்.

## அஷ்டபைரவ மாத்திரை

கருதரியசூதம் வெங்காரமும் நெல்லிக்காய்
கெந்தகம் சுக்கு மிளகுதிப்பிலி
சுத்திநேர் வாளமிவை கழஞ்சுநிறை கொண்டுவந்
தேபருவ ரையின் குமரியாற்
சாற்றரை மிளகெனப் பரிவுட னுண்டைசெய்
தேபகர் தாபவெப் பினிற்
குடிநீரி னிற்கொடு பன்னுமையிற் றந்தேனில்
கொடுமி ஞ்சியிற் சந்நிசுரம்
வருசிலுசிலுப் புமாறு மறு சந்நிவாத மெனில்
வளர் முருங்கப்பட்டை வளமிட்டு நீரிலிட
பெருவயிறிவை யெனிற் பிரண்டையின் பெருவேரைப்
பிடிங்கிவெந் தேவெதுப்பி
பின்சாறுநாலு காசளவினிற் கொள்
பேரட்ட வயிரவன்னென்றே (62)

(தி - ள்)

சுத்திசெய்த ரஸம்
" நெல்லிக்காய்கெந்தகம்
" நேர்வாளம்



A siddhadreams ebook

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | பொரித்தவெங்காரம் |

இவைகளை வகைக்கு 1½ வராகனெடை வீதமெடுத்து, முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாகவரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து, மற்றசரக்குகளையும் பொடித்துப் போட்டுச் சோற்றுக்கற்றாழைச் சாறுவிட்டு நன்றாக வரைத்து, மிளகளவுள்ள மாத்திரையாகஉருட்டிவைத்து கொள்ளவும்.

உட்காங்கை, காய்ச்சல் முதலானவைகளுக்குத்தக்க கஷாயத்தில் கொடுக்கவும்.

பித்தத்திற்குத் தேனில் கொடுக்கவும்.

சந்நி, ஜ்வரம், சிலுசிலுப்பு (குளிர்காய்ச்சல்), முதலானவைகளுக்கு இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்

சந்நிவாதத்திற்கு முருங்கைப்பட்டைக் கஷாயத்துடன் கொடுக்கவும்.

மகோதரம், பெருவயிறு முதலானவைகளுக்குப் பிரண்டையை வெதுப்பிச் சாறுபிழிந்து 4 காசெடையள வெடுத்து அதனுடன் கொடுக்கவும்.

இதன் பெயர் அஷ்டபைரவமாகும்.

## மிருத்வாதி உருண்டை

முத்தமொடு திப்பிலியோ டரத்தைமரி சுக்கு
முற்கடுகு ரோகிணி கொள் சீரகமோடேல
மொத்த விருவேலி மிருமொத்த விராமிச்சி
மோதுதவு கோலமுட னேறுமிலவங்கம்



கொத்தமலி யொத்தமது ரோசனைகொள் கோட்டங்
கொண்டுவிள நீரிலிவை மண்டிடவ ரைத்தே
யொத்தமிள களவிதுவ் டைசெய்து ருட்டி
யுகந்துகொள மிருத்தியது வாதியெனலாமே (63)

(தி - ள்)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | திப்பிலி |
| சிற்றரத்தை | மிளகு |
| சுக்கு | கடுகரோகிணி |
| சீரகம் | ஏலக்காய் |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| தக்கோலம் | கிராம்பு |
| கொத்தமல்லிவிதை | கோரோசனை |
| கோஷ்டம் | |

இவைகளைப்பொடித்துக் கல்வத்திலிட்டு, இளநீர் விட்டு நன்றாக வரைத்து, மிளகளவுள்ள மாத்திரைகளாக, உருட்டி வைத்துக் கொள்ளவும்.

## தாப ஜ்வரத்திற்கு அகஸ்தியர் ராஜபேதி

தாபசுரத்துக் ககத்தியனுர் ராசபேதி
வகைதக்க விரதங் கழஞ்சு
சாலவெங் காரங் கழஞ்சு
சொல்மிள கதுதானுங் கழஞ்சினுடனே
சீவுமுக்கி ராக்கழஞ்சுங் கெந்தகங்
கழஞ்சுதிப் பிலியுமிரு கழஞ்சாய்
சீராய் மருந்துகள் பால்கத்தி
ஆவலுடன் குளிர்ந்த தண்ணீர்
செய்ததேர் வாளமுடனே
விட்டொரு சாமமடவாகவே யரைத்து

A siddhadreams ebook

| | |
|---|---|
| திராக்ஷை | பேரீச்சை |
| இலாமிச்சைவேர் | கோரோசனை |
| தாளிசபத்திரி | விலப்பனங்கிழங்கு |
| சடாமாஞ்சில் | சந்தனத்தூள் |
| தேவதாரம் | திப்பிலி |
| இலுப்பைப்பூ | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை விதமெடுத்து இடித்துத் தூளாக்கி இளநீர்விட்டு நன்றாக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாகத் உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை நிழலில் உலர்த்தவும்.

ஜ்வரத்திற்கு இளநீரில் அல்லது தாய்ப்பாலில் கொடுக்கவும். சந்திகளுக்கு கூந்தல்பனைக் கஷாயத்தில் சாப்பிடவும்.

---

## கண்டவுழதம்

குங்குமங் கோட்டங் கஸ்தூரி கோரோசனையோ டதிமதுரம்
பொங்கு கிராம்பு முந்திரிகை புகல் பேரீச்சம் நன்னாரி
வேங் கனிலுப்பைப்பூ வெட்டிவேரி லாமிச்சங் கிராம்பு
அங்கித சாத்திர வேதியுத் திராட்சம் சீரகமிவை யோரி
வையாமே (34)

ஆமேமுத்துப் பவழம் பொன் னதிகச்சன்ன லவங்கப்பட்டை
தாமேகலன் கொம் புடன்வெள்ளி சாளதேவ தாரமுடன்
பூமேவிய புத்திரிசீவி புகல்பன்னீரும் நன்னுலே
தாமே யரைத்த வுண்டைதன்னை நலமாங் கண்டவிழ்
ச(ச)தமென்றேன் (35)



(இ - ள்)

| | |
|---|---|
| குங்குமப்பூ | கோஷ்டம் |
| கஸ்தூரி | கோரோசனை |
| அதிமதுரம் | கிராம்பு |
| திராக்ஷை | பேரீச்சம்பழம் |
| நன்னாரிவேர் | வேங்கை |
| இலுப்பைப்பூ | வெட்டிவேர் |
| இலாமிச்சைவேர் | கிராம்பு |
| சாஸ்திரவேதி | உத்திராட்சம் |
| சீரகம் | சுத்தமானமுத்து |
| பவழம் | ஸ்வர்ணரேக் |
| சின்னலவங்கப்பட்டை | |
| வெள்ளிரேக் | மான்கொம்பு |
| புத்திரசீவி விதை | சாளதேவதாரம் |

இவைகளைச் சமனெடை யெடுத்து ஒரு கல்வத்திலிட்டுச் சுத்தமான பன்னீர் விட்டு நன்றாக 2 நாட்கள் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதற்குப் பெயர் கண்டவிழ்சதம் (கண்டௌஷதம்) ஆகும்.

சந்திகளுக்குக் கொடுக்கலாம்.

---

## கண்டதோஷக் குளிகை

மதுரமித்துப்புக் கோட்டம் மான்கொம்பு ருத்திராட்சம்
சதிர்பெறு பொன்னுமுத்துஞ் சார்விலைப் பழங்கிராம்பு
முதிர்வெள்ளிக் காமப்பூமுந்து திப்பிலி யக்கிராக்காரம்
கதிர்பெறு பவள மீன்பால் (ருல்) கண்ட தோஷங்கள்
போமே (36)

A siddhadreams ebook

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | இந்துப்பு |
| கோஷ்டம் | மான்கொம்பு |
| ருத்திராக்ஷம் | பொன்ரேக் |
| முத்து | இலவங்கப்பத்திரி |
| கிராம்பு | வெள்ளிரேக் |
| மதனகாமப்பூ | திப்பிலி |
| அக்கிராக்காரம் | பவழம் |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து, முன்போல பன்னீர் விட்டரைத்துக் குன்றியளவுள்ள உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை கல்கத் தொண்டையைப் பற்றிய தோஷங் கள் நீங்கும்.

---

## ராமபாணம்

மஞ்சளுஞ் சாதிக்காயும் வளர்திரிகடுகு கிராம்பு
மிஞ்சிய கடுகுரோகிணி மிளகு மரமஞ்சள் நாபி
அஞ்சியோர் நாள்நிம்மச் சாறுவார்த் தரைத்துக்கூட்டிக்
கொஞ்சிய ராமபாணங் கொடுசந்தி சுரங்கள் போமே (37)

(இ-ள்)

| | |
|---|---|
| மஞ்சள் | சாதிக்காய் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கிராம்பு |
| கடுகுரோகிணி | மரமஞ்சள் |
| சுத்திசெய்த நாபி | |



இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து எலுமிச் சம்பழச் சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணி யளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

சந்திச் சுரங்களுக்கு இம்மாத்திரையில் ஒன்றை (வெந்நீருடன்) கொடுக்கவும்.

---

## கலிக்க உருண்டை

கொத்தாருங் குழல்மடவீர் கோர்தாழங்காய்.
திரிகடுகு உள்ளி வசம்புயிவை யோடொக்க
மங்காமலேழு நாள் காடிவார்த்து
மடகடலில் கடைந்தமுது பூண்டுத்
தொங்காது சில்விஷங்கள் சன்னிச்சூலை
துலையா வெதுப்புத் தலைநோவு
சங்கார மென்னும் பிசாசுதானுங் கண்ணிலிடத்
தரியாது வெந்நீர் கொண்டே (38)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பூண்டு |
| வசம்பு | கொத்தளங்காய் |

இவைகளைக் காடிவிட்டு 7 நாட்கள் விடாமல் அரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை வெந்நீரில் இழைத்துக் கண்களிடவும் (பயற்றம் பயறளவு).

A siddhadreams ebook

ஆங்கடலை போலுண்டை பண்ணியே
நிழலுலர்த் தாகவே தானுலர்த்தி
சோபமற வொருண்டையிற் பாதிக்குத் துளசிச் சாற்றிலிடவே
சுரமொரு புறத்துள்ளதும் தீரும் பாதிதுய்ய விஞ்சிச் சாற்றி
விடவே
மேவியிடு மொருபுறத்திற் சுரமாறும் விரோசனஞ் சுக்குநீர்
விருண்டை தானுமிட வயறுவலி தீர்ந்தும் மிளகுசாறும்
சோறுமே (64)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்
பொரித்த வெங்காரம்
அமுக்கிராக்கிழங்கு
மிளகு

| | | |
|---|---|---|
| இவைகள் வகைக்கு | 1¼ | வராகனெடை |
| திப்பிலி | 2½ | ,, |
| பாலில் சுத்திசெய்த சேர்வாளம் | 2½ | ,, |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தி லிட்டு நன்றாகவரைத்துப் பின்னர் மற்றசரக்குகளைப் போட்டுச் சுத்தஜலம் விட்டு நன்றாக வரைத்துக் கடலை யளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

துளசிச் சாற்றில் உரைத்துக் கொடுக்க

ஒரு புறத்திலுண்டாகும் ஜ்வரம் நிற்கும்.

இஞ்சிச் சாற்றில் கொடுத்தால்

இருபுறச் சுரங்கள் தீரும்.

பேதிக்குச்

சுக்கு கஷாயத்தில் உட்கொள்ளவும். வயிறுவலி நிற்கும்.



## சிவநாமரஸம்

இருவியொரு நாவியு மிதமான விரதமு
மிசைந்த வெண் காரமுடனே
மருவி கெந்தகம் மனோசிலைக் கொடு
மகிழ்ந்த திப்பிலி சரியதாய்
பருகியிடு மிளகு மேசனதாய்
மர்த்தனம் பண்ணிநீ யீரைந்து நாள்
கருதியிடு பணவெடை யிருபோது மேகொளக்
களமான ரோகமேகும்
கண்டு சிவநாமரஸ மீதென்ன வேயரன்
கற்பித்த மொழியாகுமே (65)

(ஆக கவி 1713)

(இ - ள்)

சுத்திசெய்த இருவி
,, பாதரஸம்
,, கெந்தகம்
,, நாபி
,, மனோசிலை
சுக்கு மிளகு
திப்பிலி

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சூரணமாக்கிவைத்துக் கொள்ளவும். 10 நாட்கள் விடாமல் அரைக்கவும். கருநிறமான சூரணம் கிடைக்கும்.

இதில் 3½ குன்றி நிறை யெடுத்துத் தக்க அனுபா னத்தில் கொடுத்துவரப் பற்பல ரோகங்களும் தீரும். இதன் பெயர் "சிவநாமரஸம்" ஆகும்.

A siddhadreams ebook

வாதந் தானென்பதாகும் வருகின்ற பக்கவாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திடு முடக்குவாதஞ்
சூதமெய்யசந்த வாதந் தோன்றிய முகத்தில் வாதங்
பேதமாம் வாதந்தீரப் பெருந்திடு மருந்து கேளே (1)

மருந்துதான் சித்திரமூலம் வளருமாவிலங்கை கொன்றை
திருந்திய முருங்கைசங்கு சேர்ந்தவெள்ளெருக்கு வேம்பும்
பொருந்திய வேருஞ் சுக்கும் புகழுந்திப் பிலிமரிசங்
கருந்திற லவணமஞ்சுங் கால்மண்ட லந்தான்
கொள்ளே (2)

கொள்ளவே வெண்ணெயஞ்சு குலவுதில் லம்பாற்கற்கம்
மெள்ளவே முருங்கை வாகை மிருந்தமா விலங்கைமூலம்
தள்ளவிழ் காயமிந்து கடிய வெள்ளுள்ளி வசம்பு
முன்னமா யெரித்துப்பின்னை யுடம்பிலே தொக்கடஞ்
செய்வாயே (3)

அறிவிலா விறுமை சுத்தும் நய்யவே நடுக்கல்வாந்தி
நலத்திடு சுழுத்தல் வாநீர் நையவே விதற்கெல்லாந்தான் (4)

(இ - ள்)

80 வகை வாதரோகங்கள், பக்கவாதம், சீதனத்தி னுலேற்படும் நடுக்கு வாதம், முடக்கு வாதம், மெய்யசந்த வாதம், முகவாதம் முதலான வாதரோகங்கள் தீர மருந்தாவது.

| | |
|---|---|
| சித்திரமூல வேர் | மாவலிங்கைப்பட்டை |
| கொன்றைவேர் | முருங்கைவேர் |
| சங்கு | வெள்ளெருக்குவேர் |
| வேப்பம்வேர் | சுக்கு |



| | |
|---|---|
| திப்பிலி | மிளகு |
| இந்துப்பு | சோற்றுப்பு |
| கறியுப்பு | வளையலுப்பு |
| அட்டுப்பு | |

இவைகளைச் சரியெடையெடுத்து, இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளும் அளவெடுத்துத் தண்ணீருடன் உட்கொள்ளவும்.

ஆமணக்கெண்ணெய்
புங்கெண்ணெய்
கல்லெண்ணெய்
இலுப்பெண்ணெய்
தேங்காயெண்ணெய் வகைக்கு 1 சேர்

இவ்வகளை ஒன்று கலந்து,

| | |
|---|---|
| தில்லம்பால் | முருங்கை |
| வாகை | மாவலிங்கை சமூலம் |
| பெருங்காயம் | இந்துப்பு |
| பூண்டு | வசம்பு |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீத மெடுத்துத் தண்ணீர்விட்டு நன்றாக வரைத்து, ஒன்றாகக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனைத் தேகத்தில் தேய்த்துக்கொண்டு ஒத்தடம் இடவும்.

## நடுக்கல், வாந்தி, சுழற்றல், வாய் நீரூறல், முதலிய வைகளுக்கு அதிமதுரச் சூரணம்

சாற்றிய மதுரங்கோட்டந் தருந்திரிகடுகுமூலம்
போற்றிய நெல்லிமாஞ்சில் பூரஞ்சந்தனங்கிராம்பு

A siddhadreams ebook

மாற்றிய தாளிசந்தான் மருவிசீரகமுமேலம்
பரத்தசர்க் கரையுங்கூட்டிப் பரிந்துமண்டலந்தான்
கொள்ளே (5)

(இ - ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | கோஷ்டம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | நெல்லி வற்றல் |
| சடாமஞ்சில் | கற்பூரம் |
| சந்தனத்தூள் | கிராம்பு |
| தாளிசபத்திரி | சீரகம் |
| ஏலக்காய் | |

இவைகளைச் சமனெடுத்துக் காயவைத்திடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு இவற்றிற்குச் சமனளவு சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

## தலைக்குப் பிருங்காமலகத் தைலம்

பரிந்தநல்லெண்ணெய் பாலுபரிந்திடு நெல்லிச்சாறுந்
தெரிந்திடுமுசு முசுக்கைச்சீந்திலும் பொன்னுங்காணி
வருந்தியமுத்தஞ் சந்தமதுமோடேலம் மாஞ்சில்
பொருந்துசெண்பகப்பூ வங்கப்பூண்டேரி தலைக்குவாரே
(6)

(இ - ள்)

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 5 சேர் |
| பசுவின் பால் | ,, |
| நெல்லிக்காய்ச் சாறு | ,, |
| முசுமுசுக்கைச் சாறு | ,, |
| சீந்தில்கொடிச் சாறு | ,, |
| பொன்னுங்காணிச் சாறு | ,, |

இவைகளை யொன்று கலந்து



| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |
| ஏலக்காய் | சடாமாஞ்சில் |
| செண்பகப்பூ | கிராம்பு |
| பூண்டு | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஏதேனும் ஒரு சாறுவிட்டு நன்றாக வரைத்துச் சாறு கலந்து எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கவும். பின்னர் வடிக்கட்டி வைத்துக் கொண்டு, தலையில் தேய்த்துக் கொண்டு ஸ்கானம் செய்யவும்.

## கபத்தினுலுண்டாகும் ரோகக்குறிகள்

வார்பெரு தனத்தாயய்யம் வளர்ந்திடும் மிருபதாகச்
சீர்பெரு மாத்தைநயீளை திக்கடி விக்கல்சத்தி
பேர்பெரு சுவாசகாசம் பெருத்திடு மிருமல்வாந்தி
தார்பெரு சுரமுண்டாகுந் தனக்கெல்லா மருந்துகேளே
(7)

(இ - ள்)

கபம் 20-ல் உண்டாகும் ரோகங்களான :—

ஈளை, திக்குதல், விக்கல், வாந்தி, சுவாசகாசம், இருமல், வாந்தி, ஜ்வரம் முதலானவைகளுக்கு மருந்தாவது.

## இஞ்சிநெய்

தனது நல்லிஞ்சிச்சாறு தளர்நிரி கடுகோடேல
மனதுநற் கோட்ட மாஞ்சில் வாலுழுமரிச சிங்கி



A siddhadreams ebook

சில் விஷங்கள், சந்தி, சூலை, வெதுப்பு, தலைவலி, சங்காரப் பிசாசுகள் முதலானவை தீரும்.

## பத்தியவிதி (விரேசனம்)

நாதன்றிருவருளால் நானெடுத்து விரித்துரைத்தப்
பாரிலுள்ள மானிடற்குப் பத்தியநோய் பரிகரிக்கச்
சீரியகுணத் தோன்றானுந் தேவரு மருளிச்செய்த
ஆரியந் தானுரைத்த வாய்மை யகத்திய னுரைக்கலுற்றார் (39)

உற்றுள்ள வுதரந்தன்னி லூறுபல வியாதிக் கெல்லா
மற்றுள்ள கிருமிதானும் வாடியே வறுமாகில்
லத்ததோ லுடைத்துவான மதுநீரி லூறப்போட்டு
செத்தமாய்ச் சீலைகட்டிச் செய்திடு கிரிகை கேளீர் (40)

ஒப்பிட லுளுந்து சாணியுகந்துடன் பால்கடுக்காய்
செப்பமாங் குமரிதன்னில் சீரிய சாணிச் சாற்றில்
லப்படித் தகரைச் சாற்றி லவித்துன்டை அரைத்துச்
சேரே (41)

கொண்டபின் பாக்குத்தின்று குணமுட லுலாவினின்றால்
பண்டையில் மலங்கள் வெப்புப் பழகிய சீதம்போக்கு
மிண்டிய நோவும்வாரா மேனியுங் குற்றமில்லை
அன்புடன் மிளகுநீர்மோ ரடைவுடன் கொள்ளுமன்றே (42)

(இ - ள்)

வயிற்றிலேற்படும் பற்பல வியாதிகளுக்கும், கிருமி சேர்க்கு, அதனல் உடம்பு வீங்கிப் போவதற்கு மருந்து.



நேர்வாளம் 2 பலம் எடுத்துத் தோலையெடுத்துவிட்டுத் தண்ணீரில் ஊறவைத்து முளைகளை நீக்கிவிட்டு, ஒரு சீலையில் முடிச்சாகக் கட்டவும். உளுந்துக் கஷாயம் கடுக்காய் கஷாயம், சோற்றுக்கற்றாழைச் சாறு, சாணிப் பால், தகரையிலைச்சாறு இவைகளில் தனித்தனியே அவித்துக் கழுவிவைத்துக் கொள்ளவும்.

இதனைத் தண்ணீர் விட்டரைத்து உளுந்தளவு உருண்டை செய்து வைத்துக் கொண்டு; வேண்டும் போது ஒரு மாத்திரையை விழுங்கி, வாயில் பாக்குத் தூள் போட்டுக் கொள்ளவும். சிறிது நேரம் உலாவவும்.

மலச்சிக்கல், காங்கை, சீதக்கட்டுகள் முதலானவை தீரும். உடம்பில் நோய்கள் வராது. உடம்பிற்கும் நல்லது. மிளகு ரஸம், மோர் இவைகளைக் கூட்டவும்.

## விரேசனம்

திருக்கள்ளி வேர்ப்பட்டைப் பசுவின்பாலி லவித்துலர்த்திப்
பரிவுடனே கால்கழஞ்சு பாக்குடன் தான்தின்ன
வெருவியது தான்கழியு மீறுமேயாகில்
மருவு பால்சோறு மணங்கெந்தம் பூசுவதே (43)

(இ - ள்)

திருக்கள்ளி வேர்ப்பட்டையை யெடுத்துப் பசுவின் பாலில் வேகவைத்துக் காயவைத்துக் கொள்ளவும்.

இதனைப் பாக்குடன், 10 குன்றியளவெடுத்து உட்கொள்ளவும். நன்றாகக் கழியும். அதிகமாகப் போனால் பால் சாதம் சாப்பிட்டுச் சந்தனம் பூசவும்.



A siddhadreams ebook

## விரேசன சிந்தாமணி

சுத்திசெய்யும் நேர்வாள மெட்டு துலங்கு லிங்கமூன்று
நாபியொன்று
மற்றுடனே வெங்காரம் பொரித்த தொன்று வளமாகக்
கத்தாழைச் சாற்றிலரைத்து
பத்தியுடன் குன்றியளவாக வுண்டைபண்ணி நிழல்காய
வைத்துப் பாங்காய்
சித்தியுடன் கதலிப்பழம் பஞ்சதாரை வெந்நீர் சேர்ந்தருந்த
விரேசன சிந்தாமணி யதாமே (44)

(ஆக கவி 1648)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நேர்வாளம் | 8 | பங்கு |
| ,, லிங்கம் | 3 | ,, |
| ,, நாபி | 1 | ,, |
| பொரித்த வெங்காரம் | 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டு 1 நாள் முழுவதும் அரைத்துக் குன்றியள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும் நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது இம்மாத்திரையில் ஒன்றை யெடுத்து வாழைப்பழத்திலோ, சர்க்கரையிலோ, வெந்நீரிலோ உட்கொள்ளவும். நன்கு பேதியாகும்.

## கோடாசூரிக் குளிகை

சாதிலிங்கம் வெங்கார மிரண்டு பங்கு
தக்காமணக் கம்வித்து நாலுபங்கு



ஓதியதோர் நேர்வாள மெட்டுப்பங்கு
உடன்கலந்திட் டரைத்து வுண்டை குன்றிபோலாம்
போதிற் குளிர் தண்ணீர்தாம் வயிறுப்போக்கும்
போதவெந்நீர் தனையருந்த வயிறுகட்டும்
ஓதியதோர் வாதமெண்பத் துநாலு
மோட்டிவிடு குன்மமுடன் கரப்பான் போமே (1)

(இ - ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த லிங்கம் | 1 | பங்கு |
| பொரித்த வெங்காரம் | 2 | ,, |
| ஆமணக்கம் வித்து | 4 | ,, |
| நேர்வாளம் (சுத்திசெய்தது) | 8 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்றாக 2 நாட்கள் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். குளிர்ந்த தண்ணீருடன் 1 மாத்திரை கொடுக்கவும். நன்கு பேதியாகும். அதிகமாகில் வெந்நீர் சாப்பிடவும். பேதி நிற்கும்.

**தீரும் நோய்கள்:**

84 வாதநோய்கள், குன்மம், கரப்பான் நோய்கள் முதலானவை தீரும்.

## சிறுகாஞ்சோறி மாத்திரை

சிறுகாஞ்சோறி நன்னாரி தெய்வப் பெண்மர் தன்னோடு
குறுகாதரைத்திட்டு குண்டைபண்ணிக் கொடியகரத்திற்
கிடுவீராய்
மறுகால் வாராது வாதமோடு வயிற்றுநோவு குன்மமுதல்
தறுகாதகறும் தார்குழலீர்! நாரணியோருக் குரைவீரே (2)

A siddhadreams ebook

களதுறுநாகங் கண்டங் கத்தரியரத்தை பித்து
நிளவறுத் தீயில்மெத்த நெய் யெரித்துள்ளுங்கொள்ளே
(8)

(இ - ள்)

| | |
|---|---|
| இஞ்சிச்சாறு | 1 சேர் |
| பசுவின் நெய் | 1 சேர் |

இவற்றை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஏலக்காய் |
| கோஷ்டம் | சடாமாஞ்சில் |
| வாலுளுவை | சிறுநாகப்பூ |
| கற்கடசிரிங்கி | சிற்றரத்தை |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு 1¾ வராகனெடை வீதமெடுத்துச் சாறு விட்டரைத்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் எரித்து இறக்கவும். இதனை உள்ளுக்குப் பாலில் கலக்கிக் கொடுக்கவும்.

முன் கூறப்பட்டப் பற்பல நோய்களுக் தீரும்

---

## மூலத்திற்குத் தைலமும், பஞ்சாக்கினிச் சூரணமும்

எரித்த நல்லெண்ணெய் பாலுமிசைந்த லாமிச்சம்வேலி
தரித்திடுஞ் சீந்தில் முத்தஞ் சந்தனம் தேவதாரம்
முரித்திடு தண்ணீர் விட்டான் றுயர் நிலப் பனைநன்னாரி
பரித்த மஞ்சள் மஞ்சி லொடு பகர்தலைதனக்கு வாரே (9)

தனக்குறு ரெத்தமூலந் தாங்குமுன் மூலஞ்சியுஞ்
சினக்குறு முளையாமூலந் தீமலக் குதமுமத்த



மனக்குறு வாதபித்த வளர்ப்ப மூலத்தோடு
தனக்குறு மருந்து மசைப்பலக் கன்னியே கேட்டிடாயே
(10)

கன்னியிற் சருகுமுத்தங் கறணையும் வெருகும் சுக்கும்
வன்னியாஞ் சித்திரமூல மருள்கிழங் குடன்கடுக்காய்
பன்னிய பிரண்டை கொன்றை பகர்புளி நறணைக்காட்டில்
துன்னிய கறணைப் பாலில் சூரணஞ் செய்துகொள்ளே
(11)

(இ - ள்)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 3 சேர் |
| பசுவின் பால் | 3 சேர் |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து

| | |
|---|---|
| இலாமிச்சம் வேர் | வெட்டிவேர் |
| சீந்தில்கொடி | கோரைக்கிழங்கு |
| சந்தனத்தூள் | தேவதாரம் |
| தண்ணீர் விட்டான் கிழங்கு | |
| நிலப்பனைக்கிழங்கு | நன்னாரிவேர் |
| மஞ்சள் | சடாமாஞ்சில் |

இவைகளைச் சூரணம்செய்து எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனைத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

| | |
|---|---|
| சுற்றுமுஞ்சருகு | கோரைக்கிழங்கு |
| கருணைக்கிழங்கு (காயவைத்தது) | |
| சுக்கு | வெருகங்கிழங்கு |
| மருளங்கிழங்கு | சித்திரமூலம் |
| பிரண்டை | கடுக்காய்த்தோல் |
| புளியரணைக்கிழங்கு | கொன்றைத்தோல் |
| காட்டுக் கருணைக் கிழங்கு | |

A siddhadreams ebook

(இ-ள்)

செறுகாஞ்சோறி    நன்னாரிவேர்

இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துக் குன்றியள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். ஜ்வரம், வாதம், வயிற்றுவலி, குன்மம் முதலான நோய் கள் தீரும்.

## கோடாசூழி மாத்திரை

கெந்தகமிருவி நாபி கேடிலா வாளந்தாரம்
வந்தவெண் காரஞ்சுக்கு மருவிய மிளகுதான்றி
தந்தருளிதமா நெல்லி தருகடு திப்பிலியோ
டிந்தமா முருக்கிலைச்சா றிதுகோடா சூழியென்னே (3)

(இ-ள்)

சுத்திசெய்த கெந்தகம்
" இருவி
" நாபி
" நேர்வாளம்
" தாளகம்
பொரித்த வெண்காரம்

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| தான்றிக்காய் | நெல்லிவற்றல் |
| கடுக்காய்த்தோல் | திப்பிலி |

இவைகளைக் கல்வத்திலிட்டு முருக்கிலைச்சாறு விட்டு நன்றாக 1 நாள் முழுவதும் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

ஜ்வரத்திற்கு நல்லது.



## ராமபாண மாத்திரை

இரதம்நாபி கெந்தகமு மியல்சாதிக்காய் லவணமஞ்சுந்துதி
சோசினக்காரமுடன் சுவாபீசம் வெண்கார மதிகசீரக
மிரண்டுடனே அப்பிரகந் தான்சமன் கூட்டிக்குதி கொள் ளிஞ்சிச்
சாறுதன்னில் கூட்டியரைத் துண்டை செய்யே (4)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" நாபி
" கெந்தகம்

| | |
|---|---|
| சாதிக்காய் | இந்துப்பு |
| சோத்துப்பு | வளையலுப்பு |
| உவர்மண் உப்பு | கறியுப்பு |
| சீனக்காரம் | பொரித்த வெங்காரம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சவர்க்காரம் | சுத்திசெய்த அப்பிரகம் |

இவைகளுள் முதலில் ரஸத்தையும் கெந்தகத்தை யும் கல்வத்திலிட்டு நன்றாக கருப்பாகும் வரையரைத்து, இஞ்சிச்சாறு விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை வெந்நீருடன் உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

## ஆனந்தபைரவ மாத்திரை

சூதம்நாபி மனோசிலை கெந்தகம்
சாதிலிங்கம் வெங்காரம் சமனெடு

A siddhadreams ebook

இவைகளைப் பசுவின் பால்விட்டு ஊறவைத்து நன்றாக உலர்த்தவும். பின்னர் இதனைச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில் ஒரு குத்தளவெடுத்துப் பாலுடனே உட்கொள்ளவும்.

மூலம், சீழ்மூலம், மூலமுளை, மலச்சிக்கல், வாதபித்த கபமூலங்கள் முதலான நோய்கள் தீரும்.

## உடும்புச் சூரணம்

செய்திடு வாதபித்தச் சேத்துமக் கிருணி மூலங்
கொய்திடு கிராணி வாயுவுக் கூட்டிய கிருணியன்ன
நைந்திடுஞ் சங்கரக் கிராணி நலத்த சூசிகாக்கிராணி
எய்திடுங் கிராணிக்கெல்லா மினியநல் மருந்து கேளே (12)

இனிய தோருடும்பு காயமிந்துப்பு வளையலுப்புக்
கனிய வெள்ளுள்ளி சுக்குக் கடியதிப் பிலிமரிசந்
தனியது சவுட்டுமண்ணும் தளர்சித்திர மூலமோமம்
பனியது பிரமிச் சாத்தால் பண்ணியிப் பொடியுங்
கொள்ளே (13)

(தி - ள்)

உடும்புச் சதையை காயவைத்தது

| | |
|---|---|
| இந்துப்பு | பெருங்காயம் |
| வளையலுப்பு | பூண்டு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சவுட்டுமண் |
| சித்திரமூலம் | ஓமம் |

இவைகளைச் சமனெடுத்து இடித்துச் சூரணம் செய்து, பிரமிச்சாறு விட்டுப் பிசறி உலர்த்தவும்.



இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொண்டு வர வாத, பித்த, கபம் இவற்றாலேற்படும் கிராணிகள், மூலம், கிராணி[illegible], சங்கரக்கிராணி, பிரஸவித்தவர்களுக் கேற்படும் சூதிகாக்கிராணி முதலானவை தீரும்.

## குன்மத்திற்குச் "சிவனுமரஸம்"

பண்ணிய வாதபித்தம் பகரய்ய குன்மமல்லால்
நண்ணிய சத்திகுன்மம் நயந்திடு வாளீர்குன்மம்
கண்ணியே யெரித்தகுன்மம் களத்திடுப் பிரட்டுங்குன்மம்
குண்ணியே வலிக்குங்குன்மங் கூறுவேன் மருந்துதானே (14)

கூறிய நாபிரூதல் கொடிய வெங்காரந் தாரந்
தெரிய இருவிசிங்கி திகழ்மனோசிலை யக்காரங்
காரிய கெந்தகந் தாள் களந்திரி கடுகூட்டி
ஆறிய பொடியாய் செய்து யதனில்தே னருந்துவாயே (15)

(தி - ள்)

சுத்திசெய்த நாபி
,, இருவி
,, மனோசிலை
,, காரீயம்
,, பாதரஸம்
,, தாளகம்
,, மான்கொம்பு
,, கெந்தகம்
பொரித்த வெங்காரம்

| | |
|---|---|
| அக்கிராக்காரம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

இவைகளுள் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, மற்ற மருந்துகளையும் அரைத்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

நீர்நிம்பச் சாற்றினி லேர்கரை
ஆதியானந்த பைரவ னருமே (5)

(தி - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" நாபி
" மனோசிலை
" கெந்தகம்
" லிங்கம்
பொரித்த வெங்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றில் 1 நாள் முழுவதும் அரைத்துக் குன்றி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையில் ஒன்றை வெந்நீருடன் உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

## அஷ்டபைரவக் குளிகை

தாரங் கெந்தகம் சமநாவி ரசந்தருந் திரிகடு திரிபலையும்
காரமிருவி சமன்கூட்டிக் கடலாமணக்கம் திரிபாதி
சேர்நிம்பச் சாற்றிலரைத்துச் சிறுக உருண்டை பண்ணி
கூர் அனுப்பானத்திலிடக் கொடிய சுரங்கள் குடிப்போமே (6)

(தி - ள்)

சுத்திசெய்த அரிதாரம்
" கெந்தகம்
" நாபி
" பாதரஸம்
" இருவி



| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| கடலாமணக்கம் வேர் | |

இவைகளுள் முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக வரைத்துக் கற்ஜலி செய்து, மற்றசரக்குகளைச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக 1 நாள் முழுவதும் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக வுருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையிலொன்றை யெடுத்துத் தக்க அனுபானத்திலிட ஜ்வரங்கள் தீரும்.

## காசக்குடாரம்

அக்கிராக்காரம் நாபி அரன்வித்து அபின் சாதிக்காய்
மிக்கதோர் இலவங்கம் லிங்கம் வியன்தார மத்தைவித்து
ஒக்க தாம்பூரஞ் கன்னச்சாறுட னரைத்துக் கொள்ளக்
கக்குவான் கழிச்சல் காய்ச்சல் காசம் மெய்ச்சுவாசம்
போமே (7)

(தி - ள்)

| | |
|---|---|
| அக்கிராக்காரம் | சாதிக்காய் |
| தாம்பிரபஸ்பம் | சேரம்பு |

சுத்திசெய்த நாபி
" பாதரஸம்
" அபின்
" லிங்கம்
" தாளகம்
" ஊமத்தைவித்து

A siddhadreams ebook

தீரும் நோய்கள் :

வாத பித்த கபக்குன்மங்கள், சத்திகுன்மம், எரி குன்மம், பிரட்டு குன்மம், வலிகுன்மம் முதலானவை.

---

## ஆவாரை யெண்ணெய்

அருந்திய வாதபித்தம் மய்யமோ டிருபதாக
வருந்திய வாதம் நாலுவரை சலம்பித்தமாறு
பெருந்திய வய்யம்பத்து பூண்டிடு மருந்துகோர
திருந்திய வாதபித்தம் செய்திடு மருந்துக் காமே (16)

ஆமிது மருந்தாவாரை அலீகட லமுதங் கொன்றை
தாமிது மருந்துநாவல் தளர்கோட்டைக் கரந்தைப்பூலா
நாமிது இலந்தைக் காட்டு மல்லிகை நல்விளாவும்
போமிது காய்ச்சிக் காந்தம் புகழ்மதுரந் தான்கூட்டே (17)

மதுரஞ் சந்தனங் கர்ப்பூரம் மகிழ்பச்சை மகரப்பூவுஞ்
சதிர்பேறு மேலம் வங்கம் தாளீசம் மாஞ்சில் மஞ்சள்
கதிரிலா மிச்சந் சீந்தில் கடுமுத்தம் வேரிசட்ட
மெதிரில்லா வெண்ணெய் பாலுமெரித்து நீ முழுகிடாயே (18)

(ரு - ம்)

| | |
|---|---|
| ஆவாரைவேர் | கடல்நுரை |
| கொன்றை | நாவல்பட்டை |
| கொட்டைக்கரந்தை | பூலாவேர் |
| இலந்தை | காந்தம் |
| விளாவேர் | காட்டுமல்லிகை |
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| பச்சைக்கர்ப்பூரம் | மகிழம்பூ |
| ஜண்பகமொட்டு | ஏலக்காய் |



| | |
|---|---|
| கிராம்பு | தாளிசபத்திரி |
| சடாமாஞ்சில் | மஞ்சள் |
| விளாமிச்சம் | சீந்தில்கொடி |
| கடுக்காய்த்தோல் | கோரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்துத் தூள் செய்து, பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 10 சேரும் |
| நல்லெண்ணெய் | ,, |

சேர்த்து, அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்தில் வடிக்கட்டிக் கொண்டு உபயோகிக்க

வாதரோகங்கள், பித்தநோய்கள், கபநோய்கள் இவைகளுள் 4 வகை வாதநோய்கள் 6 வகை பித்த ரோகங்களும், 10 வகை கபநோய்களும் தீரும்

---

## பரங்கிப்பட்டைச்சூரணம்

எரித்திடு இரத்தமேகம் மிசைந்த மேகந் தானிரண்டு
மரித்திடு மேகம் புண்ணும் வந்திடு கிரிச்சம் பாலை
தரித்திடு துள்ளிமேகம் சலக்கட்டு மேகந்தங்கா
விரித்திடு மேகம்போக விளம்புவன் மருந்துதானே (19)

விளம்புதீ பறங்கிப்பட்டை மேவுகெந் தகஞ்சாதிக்காய்
களம்புகு கிராம்பு நாகங் கற்பூரஞ் சாதிப்பத்திரி
தளம்புகு மகவகெந்தி தளர்கொடி வேலிமாஞ்சி
யிளம்புசர்க் கரைநெய்கூட்டி யிதமுடனுட் கொள்வாயே (20)

A siddhadreams ebook

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

கக்குவான், கழிச்சல், காய்ச்சல், காசம், சுவாசம் முதலான ரோகங்கள் தீரும்.

## சன்னிபாத பைரவ மாத்திரை

இச்சையுடன் திரிகடுகு லிங்கமெழு காரத்தோ டியல்நாபி
வச்சமறத் தானேர் கழஞ்சாகிய வானந்தான் மூன்று
நொச்சியிலைச் சாத்தரைத் துண்டை நுகரப்பாலில் கொள்ள வதுவே
மெச்சிய வைரவமிது வென்று விரிசடை யோனும் விளம்பியதே (8)

(இ-ள்):

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | சுத்திசெய்த லிங்கம் |
| பொரித்த வெங்காரம் | ,, நாபி |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை

சுத்திசெய்த நேர்வாளம் 3¼ வராகனெடை

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து, நொச்சிச் சாறுவிட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்துக் குன்றியள வுள்ள உருண்டை செய்து பத்திரப்படுத்தவும்.



சன்னிகளுக்கு 1 மாத்திரை யெடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ளவும். நன்றாகப் பேதியாகிச் சன்னிகள் தீரும்.

## பாஷாண மாத்திரை

சுத்தந் துருசுவெளிப் பாஷாணம்
மெத்திய கெந்தக மிருரஸ மிவையும்
பத்திய பாகற் சாற்றிலரைத்து
முத்திய மிளகள வுண்டைகள் செய்யே

(இ-ள்)

சுத்திசெய்த துத்தம்
,, துருசு
,, பாதரஸம்
,, எலிப்பாஷாணம்
,, நெல்லிக்காய்க் கெந்தகம்

இவைகளைக் கல்வத்திலிட்டு முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாகக் கருநிறமாகும் வரை அரைத்து பின்னர் மற்றசரக்குகளைச் சேர்த்துப் பாகலிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும்.

இதில்

1 மாத்திரை எடுத்து உட்கொள்ள ஜ்வரம் தீரும்.



A siddhadreams ebook

(இ - ள்)

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை | சுத்திசெய்த கெந்தகம் |
| சாதிக்காய் | கிராம்பு |
| சிறுநாகப்பூ | பச்சைக்கற்பூரம் |
| சாதிப்பத்திரி | அமுக்கிராக்கிழங்கு |
| கொடிவேலி | சடாமாஞ்சில் |

இவைகளைச் சமனெடுத்து இடித்துத் தூள்செய்து சர்க்கரை சமன்கூட்டி வைத்துக் கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு தூளெடுத்து நெய்யில் குழைத்து உட்கொள்ளவும்.

இரத்தமேகம், எரிச்சலுடன், நீர் இறங்கல், சொட்டு சொட்டாய் நீர் இறங்கல், சலக்கட்டு முதலானவை நீங்கும்.

## "பண்டுராதிச் சூரணம்"

இதமுறு வாதபித்த மிசைந்த சேற்றுமங் காமாலை
பதமுறு மழற்காமாலை பாண்டு வீங் கியகாமாலை
நிதமுறு வாதபித்த நீடுகாமாலை யைய்யத்
திதமுறு பித்தத்தோடு சேர்ந்தகா மாலையென்றே (21)

சேர்ந்தகா மாலைக்கெல்லாஞ் சிறந்தாரப் பொடியுங்கிட்டஞ்
சார்ந்திடு கடுக்காய் நெல்லிதானிசீ ரகமிரண்டும்
போர்த்த வெள்ளுள்ளி காந்தம் புகனிந்து காயஞ்சுக்கு
தார்ந்ததிப் பிலிமரீசந் தோன்றவப் பற்பம் பதமுறிஞ்சிச் சாதியே (22)

(இ - ள்)

சுத்திசெய்த அரப்பொடி
,, கடுக்காய்
,, தான்றித்தோல்



சுத்திசெய்த கருஞ்சீரகம்
,, காந்தம்
,, கிட்டம்
,, நெல்லிவற்றல்

| | |
|---|---|
| சீரகம் | பூண்டு |
| காயம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து இஞ்சிச் சாற்றுடன் உட்கொள்ளவும்,

வாத, பித்த, கபம் இவற்றாலேற்பட்ட காமாலை, அழற்காமாலை, பாண்டு, வீக்கத்துடன் சேர்ந்த காமாலை வாதபித்தக் காமாலை, கபக்காமாலை, பித்தக்காமாலை முதலானவைகளும் தீரும்.

## குஷ்டத்திற்கு "நீரடிமுத்துச் சூரணம்"

பதமுறு சூலைபுண்கள் பகர்ந்திடு கடிவிகார
மிதமுறு பெருவியாதி இசைநற் குட்ட ரோகஞ்
சதமுறு தேமல் மேனி தளருந்தா மரைகைவேலை
நிதமுறு சொறி சிறங்கு நீக்கிட மருந்து கேளே (23)

நிகர்ந்த நீ ரெட்டிவித்து நேர்படு லிங்கஞ்சூதந்
தகர்ந்த கெந் தகமல்லாமல் தாரமுந்துருசு துத்தம்
புகர்ந்த நெய் வார்த்தரைத்துப் பொறுத்துநாற் பதுநாள் தின்னச்
சுகர்ந்தநற் சாம்புராணித் தைலஞ் செய்துடம்பில் பூசே (24)



A siddhadreams ebook

### சந்நிக்குப் " பைரவ மாத்திரை "

சூதகெந்தக மரிதாரம் துலங்கும் நாபி நவட்சாரம்
சாதிலிங்கமும் வெங்காரம் நரித்ததுத்தம் மனோசிலையு
நீதித்திரிகடுகு நேர்வாளம் நிறைந் தூமத்தை விரையுடனே
போகச் சரியாய் மீன்பிச்சில் புகழிஞ்சிச்சாற்றி லுண்டை
செய்யே (10)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, தாளகம்
,, நாபி
,, லிங்கம்
,, துத்தம்
,, மனோசிலை
,, நேர்வாளம்
,, ஊமத்தை விதை

நவச்சாரம் பொரித்தவெங்காரம்
சுக்கு திப்பிலி
மிளகு

இவைகளைக் கல்வத்திலிட்டு மீன் பித்தம் விட்டு நன்றாக 1 நாள் அரைக்கவும். மறுநாள் இஞ்சிச்சாறு விட்டு மறுபடியும் 1 நாள் அரைக்கவும்.

இதனைப்

பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு வெந்நீரில் கொடுத்துவரச்

சந்நிகள் தீரும்.



### சந்நிக்கு " இருவி மாத்திரை "

இருவியுடனே கெந்தகமு மிசைந்த நாபி மிரதமுடன்
மருவு தாரத்தொடு காரம்வளர் திரிபலையுஞ் சுக்கினையுங்
கருதுங் கையாந் தகரையிலை கதித்தசாற்றி லுண்டைபண்ணி
மருவியுண்ணச் சுரந்தீரு மற்றும்சந்நி வாங்கிடுமே (11)

(இ - ள்)

சுத்திசெய்த இருவி
,, நாபி
,, தாளகம்
,, கெந்தகம்
,, பாதரஸம்

கடுக்காய்த்தோல் பொரித்தவெங்காரம்
தான்றித்தோல் நெல்லிவற்றல்
சுக்கு

இவைகளைச் சமனெடுத்து, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலியாக்கி, மற்ற சரக்குகளையும் சேர்த்துக் கையாந் தகரையிலைச் சாறு விட்டு நன்றாக 2 நாட்கள் அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை வெந்நீருடன் உட்கொள்ள

ஜ்வரம், சந்நி முதலானவைகள் தீரும்

### ஜ்வரத்திற்குத் " தாளக மாத்திரை "

அரிதாரம் லிங்கம்காரம் அப்பிரகந் துத்தம் நாபி
பரிவான துரிசுயோடு பார்மனோசிலை நீண்டிந்து

A siddhadreams ebook

பெரிதான விரதம் பாம்பின் பித்தினி லிஞ்சிச்சாறு
உரித்தக்க வுரைத்த மாத்திரை யுடனேகேள் சுரங்கள்
பேரமே (12)

(செ - ள்)

சுத்திசெய்த தாளகம்
" அப்ரகம்
" லிங்கம்
" துரிசு
" துத்தம்
" காசி
" மனோசிலே
" பாதரஸம்
பொரித்த இக்துப்பு பொரித்த வெங்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பாம்பின் பித்தம் விட்டு ஒரு நாள் முழுவதும் நன்ருக வரைத்து, மறுநாள் இஞ்சிச்சாறு விட்டு மறுபடியும் நன்கு அரைக்கவும்.

இதனை

பய்றளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

வெக்நீருடன் உட்கொண்டால்

ஜ்வரங்கள் தீரும்.

---

## சீதஜ்வரத்திற்கு "அரிதாரக் குளிகை"

கன்ன மரிதாரஞ்சுவகை கலந்தரைத்து
வன்னமுடனே செய்த மாத்திரையை



என்னரியே காதலுடன் உட்கொள்ளக் கார்குழலே
அக்கணமே சீதசர மாறுமெனச் செப்பு (13)

(செ - ள்)

தாளகத்தைச் சுண்ணும்பு நீரில் 2 நாட்கள் ஊற வைத்துச் சுண்ணும்பு நீர் விட்டு அரைத்துப் பயறள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள் ளவும்.

இதனை

வெக்நீருடன் உட்கொள்ளச்

சீதஜ்வரங்கள் தீரும்.

---

## பேதிக்குச் "செண்பகாதி மாத்திரை"

எந்து செண்பகத்தோ டேலமிலவங்க மதுரங்கோஷ்டம்
சூழ்ந்திவை யெல்லாம் பாதிகத்தி நேர்வாளம் பாதி
காய்ந்தநீர் விட்டரைத்துக் கால்கழஞ்சுண்டை கொள்ள
சேர்ந்திவை கழியவேண்டித் தேன்சுக்கு நீரிற்கொள்ளே (14)

(செ - ள்)

| | |
|---|---|
| செண்பக மொட்டு | ஏலக்காய் |
| கிராம்பு | அதிமதுரம் |
| கோஷ்டம் | |

இவைகள் வகைக்கு ஒரு பலம்

சுத்திசெய்த நேர்வாளம் 5 பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டு வெக்நீர் விட்டு நன் ருக வரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரை களாக உருட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

A siddhadreams ebook

வயிறு கழியத்தேன், சுக்குக் கஷாயம் இவைகளில் சாப்பிடவும்.

### ஜ்வரத்திற்நத் "துரிசு மாத்திரை"

துரிசுதுத்தம் சாதிலிங்கம் சொல்லெலிப் பாஷாணம்
வரிசைமற்றைச் சாறனை வார்த்தரைத்துப்
பரிசுடனே குன்றிமணி மாத்திரமே கூட்டி
வுலர்த்தியுந்த உருண்டைத்தின்னத் தீரும் சுரமேது (15)

(இ - ள்)

சுத்திசெய்த துரிசு
" துத்தம்
" லிங்கம்
" எலிப்பாஷணம்

இவைகளைச் சமனெடுத்துச் சாறனைச் சாறு விட்டு நன்ருக வரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை

வெந்நீருடன் உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.

### லிங்கமாத்திரை

சாதிலிங்கம் மிந்துப்புச் சாதிக்காய் திப்பிலியும்
ஒதுகிராம் பூவும்பொன்னூ மத்தை — மீதிவை



யெல்லாஞ் சமன்கெஞ்சா விலைச்சாறு வார்த்தரைத்து
நல்லாய் கொள்ளில்லை நால் (16)

(இ - ள்)

சுத்திசெய்த லிங்கம் திப்பிலி
பொரித்த இந்துப்பு கிராம்பு
சாதிக்காய் ஊமத்தை விதை

இவைகளைச் சமனெடுத்துக் கஞ்சாயிலைச் சாறு விட்டு நன்ருக வரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

எல்லா வியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

### சுரத்திற்கு இரதாதிக் குளிகை

இரதமுட நாபியியல் காரங் கெந்தகமுஞ்
சதிர் கடுவானந் தானுந் துதிசெய்
திரிபலையுங் கையாந்தகரை சேர் சாற்றாத்தை
வரிசையுடன் தின்னச் சுரமேகும் (17)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" நாபி
" கெந்தகம்
" நேர்வாளம்
பொரித்த வெங்காரம்
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல் தான்றித்தோல்

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்ருகக் கருநிறமாகும் வரையரைத்துப்

A siddhadreams ebook

பின்னர்

மற்ற சரக்குகளை இட்டுக் கரிசாலைக் கண்ணிச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் குன்றிமணி யளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு 1 மாத்திரை வெந்நீருடன் உட்கொள்ளவும்.

## வாதத்திற்குச் சூதமாத்திரை

சூதகெந்தகம் தாழிரும் மிளகு நேர்வாளம்
போதம் பூசினி விதையிற் பூதியாய்—மாதேகேள்
உண்டை பண்ணித் தின்னவொடுங்கும் வாசுரங்
கண்ட மட்டில் வாதமில்லை காண் (18)

(இ - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, நேர்வாளம்
,, கெல்லிக்காய் கெந்தகம்
பூசினிவிதை மிளகு

இவைகளுள் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக வரைத்துக் கொண்டு, சுத்த ஜலம் விட்டு நன்றாக வரைத்துக் குன்றி யளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு வெந்நீருடன் உட்கொள்ள

வாதஜ்வரங்கள் தீரும்.

## கிராணிக்கு நாபிமாத்திரை

நாபியுடனே திரிகடுகு கெல்லிலிங்க மதிவிடையம்
வேலியிதனைச் சமன்கூட்டி விளங்கிதிம்மச் சாற்றரைத்து



நாவுமிஞ்சிச்சாறு தன்னிற்றானே கொள்ளவல்லாற்
பூவிலுள்ள கிராணி யெல்லாம் போம்போம் உண்மை
புகலிதுவே (19)

(இ - ள்)

சுத்திசெய்த நாபி
,, லிங்கம்
திப்பிலி சுக்கு
அதிவிடயம் மிளகு
நெல்லிவற்றல்

இவைகளைச் சமனெடுத்து இடித்துக் கல்வத்தி லிட்டு, எலுமிச்சம்பழச் சாறு விட்டு 1 நாள் முழுவதும் அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையிலொன்றெடுத்து இஞ்சிச் சாற்றுட னுட்கொள்ளக்

கிராணிகள் அனைத்தும் தீரும்.

## சந்நிபாத பைரவன்

மிளகிரதம் சாதிலிங்கம் பச்சை நாபி
வெங்காரம் சுக்குவெள்ளைப் பாஷாணம்
பனிதமுறு கௌரிநேர் வாளந் துத்தம்
பரவியதிப் பிலி விருவி கடுக்காய் தானி
அளவு மனோசிலை முன்னி சீராம்பொன்
னரிதாரம் சமனிம்பச் சாற்றிற்சேர்த்து
ஒளிவுடனே மிளகளவு கொள்ளத் தானே
உண்டான சுரங்கள்சந்நி ஓடிப்போமே (20)



A siddhadreams ebook

(இ - ள்)

சுத்திசெய்த பாதரசம்
,, காரி
,, லிங்கம்
,, வெள்ளைப் பாஷாணம்
,, கௌரி பாஷாணம்
,, நேர்வாளம்
,, துத்தம்
,, இருவி
,, மனோசிலை
,, தாளகம்

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| திப்பிலி | முள்ளி |
| சீரகம் | பொரித்த வெங்காரம் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |

முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தி விட்டு நன்றாகக் கறுநிறமாகும் வரை அரைத்துக் கஜ்ஜ லியாகச் செய்து

பின்னர்

மற்ற சரக்குகளைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக வரைத்து மிளகளவுள்ள மாத்திரை களாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை

வெந்நீருடன் உட்கொள்ளவும்.

சந்திகள் நீங்கும்.



## சந்நிபாதபைரவ மாத்திரை

காரங் கெந்தகந் தன்னோடு கருநிய நாவிருதஞ்
சேரவே செம்புபற்பந் திரிகடு முதலாய்க் கூட்டிச்
சாறவே யிஞ்சிச்சாறு தானரைத் துண்டையாக்கி
கூறவே சந்நிவாத வைரவன் கூறலாமே (21)

(இ - ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, காரி
,, பாதரஸம்
பொரித்த வெங்காரம்

| | |
|---|---|
| செம்புபற்பம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவை தனைக் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்து, இஞ் சிச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் குன்றியள வுள்ளவுருண்டை செய்து வெந்நீருடன் உட்கொள்ளவும்

சந்திகள் தீரும்.

## சுராங்குசம்

சாறுத்தாளக முருகுதம் கொடியகெந்தக மாலிங்கம்
வீறுவெங்காரம் நாபிமிகு மனோசிலையுங் கூட்டித்
தேறுமாவிஞ் சிச்சாறு சித்திர மூலச்சாறு
நாறுதிம் பத்தாறுண்டை நற்சுராங்கிஷ மகாமே (22)

(இ - ள்)

சுத்திசெய்த தாளகம்
,, கெந்தகம்
,, காரி

A siddhadreams ebook

சுத்திசெய்த பாதரஸம்
,, லிங்கம்
,, மனோசிலை
பொரித்த வெங்காரம்

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருக அரைத்துக் கஜ்ஜலி செய்து

**பின்னர்**

மற்றசரக்குகளை யிட்டு இஞ்சிச்சாறு விட்டு 1 நாளும், சித்திரமூலச் சாறுவிட்டு 1 நாளும் நன்ருகவரைத்துக் கொள்ளவும்.

**பின்னர்**

எலிமிச்சம்பழச்சாறு விட்டு 1 நாள் முழுவதும் அரைத்துக் குன்றி நிகர் மாத்திரைகளாகச் செய்து பத்திரப்படுத்தவும்.

**இதனை**

வெந்நீருடன் கொடுத்தால்

ஜ்வரங்கள் அனைத்துந் தீரும்.

## குன்மத்திற்குப் பிப்பிலியாதிக் குளிகை

திப்பிலி சாதிக்காயும் சீர்பச்சை நாபிகூதம்
மொப்பமாய் கெந்தகத்தோ டெருமித்துச் சமனுய்க்கூட்டித்
தப்பிலா திஞ்சிச்சாற்ருல் நாளரைத் துண்டையாக்கி
வெப்பில்மா சூலை குன்மம் விரைந்து போம் விளம்பினேமே
(23)



(இ - ள்)

திப்பிலி சாதிக்காய்
சுத்திசெய்த நாபி
,, பாதரஸம்
,, கெந்தகம்

முதலில் ரஸத்தையும் கந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலி செய்து

**பின்னர்**

மற்ற சரக்குகளைச் சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு நன்ருக வரைத்துக் குன்றி நிகர் மாத்திரை செய்து வைத்து பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது 1 மாத்திரை எடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

குன்மம், தேககாங்கை, சூலை முதலான நோய்கள் நீங்கும்.

## ஜ்வரங்களுக்கு 'ஜ்வராங்குசம்'

விளம்பிச் சராங்கிஷத் தான் மேவிய நாபிகூதம்
விளம்படு மிளகுதானும் வளருங் கெந்தகம் மீன்பிச்சு
களம்பற வரைத்துக் கூட்டிக் கலந்துசர்க் கரை நீராலே
தளம்பெற மோருஞ்சோறும் நாளது கொடுக்கலாமெ
(24)

(இ - ள்)

சுத்திசெய்த நாபி
,, பாதரஸம்
,, கெந்தகம்
மிளகு

A siddhadreams ebook

இவைகளைக் கல்வத்திலிட்டு மின்பிச்சுவிட்டு நன்றாக அரைத்துப் பயறளவுமாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும்.

இதில்

ஒரு மாத்திரை எடுத்துச் சர்க்கரை நீருடன் உட்கொள்ளவும்.

மோர் சாதம் சாப்பிடவும்.,

## ஜ்வராங்குசம் (வேறு)

கூட்டிய லிங்கம்நாபி கொடியதா ளகமொன்றுக்கி
வாட்டிய நிம்பச்சாற்றில் வளருண்டை தன்னைப்பண்ணி
காட்டிய வனுபானத்தில் கலந்துநீர் கொண்டபோதே
நீட்டியச் சுரங்களெல்லாம் திரண்டுதா னோடுமென்றே (25)

(இ - ள்)

சுத்திசெய்த நாபி
,, தாளகம்
,, லிங்கம்

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக அரைத்து, பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இதனை

வெந்நீருடன் உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள் தீரும்.



## கிராணிக் கபாடம்

கஞ்சாநாபி காந்தமலின் கருதூமத்தைச் சாத்தரைத்து
விஞ்சாவுண்டை பேதியெல்லாம் விட்டுப்போம் விளம்பக்கேள்
நஞ்சா விளாவின் பிசினபினும் நன்றாய்க்கஞ்சா விலைச்சாற்றில்
துஞ்சா தரைத்துக் கொடுப்பீராய் துய்யக்கிராணி யகன்றிடுமே (27)

(இ - ள்)

சுத்திசெய்த கஞ்சா
,, அபின்
,, நாபி

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கருவூமத்தஞ்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

2. விளாம்பிசின் அபின்

இவ்விரண்டையும் கஞ்சாவிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து குன்றிகர் மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

இம்மாத்திரைகளில் ஒன்றை எடுத்துத் தினம் 3 வேளை வெந்நீருடன் கொடுக்கக்

கிராணிகள் நிற்கும்.

## கிராணிக்கு மாத்திரை

ஆதஞ்சா திக்காய்சாதிப் பத்திரிதுலங்கு லிங்கம்
சீதஞ்சேர் காந்தமியம் சீரகமோமந் தேரடே

A siddhadreams ebook

நீதங்கெஞ்சாவின் சாற்றால் நிலைபெற வரைத்துக்கூட்டி
போதவே கொள்வீராகில் பொருந்திய கிராணிபோமே
(27)

(தி - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, காந்தம்
,, லிங்கம்
,, வெள்ளீயம்
சாதிபத்திரி சாதிக்காய்
சீரகம் ஓமம்

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து கஞ்சா இலைச்சாறு விட்டு நன்றாகவரைத்துக் குன்றிமணியளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இதனை உட்கொண்டால்

கிராணிகள் தீரும்.

## காளமேகச் செந்தூரம்

கெந்தகஞ் சாதிலிங்கம் கேடில்லா தாளகத்தான்
வந்தவப் பிரகங்கூட்டி வளருவல் லாரைச்சாற்றில்
தந்த மாபுடத்திற் போட்டுத் தானிது காளமேகம்
தொந்தமாம் கிரிச்சமேக மதுயாறப் போவதன்றே (28)

(தி - ள்)

சுத்திசெய்த கெந்தகம்
,, தாளகம்
,, லிங்கம்
,, அப்பிரகம்



இவைகளைக் கல்வத்திலிட்டு நுணிக்கி வல்லாரைச் சாறு விட்டு நன்றாக வரைத்துச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டி உலரவைக்கவும்.

பின்னர்

இவைகளை ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து புடம் போடவும்.

செந்தூரமாகும்

இதில் ஒரு அரிசி எடை எடுத்துத் தேனில் கொடுக்கவும்.

மூத்திரகிரிச்சம், மதுமேகம் முதலான நோய்கள் தீரும்

## குன்மந்தீர்க்குச் சூதாதி மாத்திரை

சூதமிரு நாவிகக்குத் திப்பிலி வெங்காரம்
போதவே கெந்தகந்தான் புகழ்மனோசிலை யக்காரம்
பேதமா மருந்தோர் பங்கு பெருத்திடு மிளகோர்பங்கு
போதவே குளிகை தின்னப் பொருந்திடும் குன்மந்தானே
(29)

(தி - ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, மனோசிலை
,, நாபி
,, கெந்தகம்
சுக்கு திப்பிலி
பொரித்த வெங்காரம் அக்கிராக்காரம்



A siddhadreams ebook

இவைகளைத் தனித்தனி 1 பலம் எடுத்து

மிளகு 8 பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டு நன்றாக வரைத்துக் குளிகைகளாகச் செய்யவும்.

இம்மாத்திரையில் ஒன்றை யெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளக்

குன்மங்கள் தீரும்.

## குன்மத்திற்குக் காந்தாதி மாத்திரை

காந்தமோடு நாபி கலந்தரஸ கெந்தகம்
போதிடுவெண் காரம் புகழ்சிலையும்
சேர்ந்த வரப்பொடி கற்றாழைச் சாற்றரைத்
துன்னக் குன்மம் போமென்றே மோடும்பகர் (30)

(தி - ள்)

சுத்திசெய்த கெந்தகம்
" காந்தம்
" நாபி
" மனோசிலை
" பாதரஸம்
" அரப்பொடி
பொரித்த வெங்காரம்

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து,

பின்னர்



மற்றசரக்குகளையும் சேர்த்துச் சோற்றுக் கற்றாழை சாறுவிட்டு நன்றாக ஒரு நாள் முழுவதும் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

இந்த மாத்திரையைத் தினம் 3 வேளைகள் உட்கொள்ளக்

குன்மரோகம் தீரும்.

## சந்நிக்குக் காளமேக ரஸம்

சயமும் ரஸமுங்காந்த மியலரிதாரம் லோகம்
தேயமாய் கெந்தகந்தான் நீ நிம்பச் சாற்றரைத்து
வாயமாய்த் தேனில் தெய்யில் வளரிஞ்சிச் சாற்றிலுண்ண
போய........................பொருந்திய சந்திபோமே (31)

(தி - ள்)

சுத்திசெய்த சயம்
" காந்தம்
" அயம்
" பாதரஸம்
" தாளகம்
" கெந்தகம்

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாகவரைத்து எலுமிச்சம்பழச் சாறு சேர்த்து 3 நாட்கள் விடாமல் அரைக்கவும்.

பின்னர்

குன்றிமணி கிகருள்ள மாத்திரைகளாக உருட்டி பத்திரப்படுத்தவும்.

A siddhadreams ebook

| | |
|---|---|
| நெருஞ்சிக்காய் | புளியம்பட்டைத்தோல் |
| பெருமரத்தோல் | வெள்வேலம்பட்டை |
| கடுக்காய்த்தோல் | அதிவிடயம் |
| தான்றித்தோல் | ஆலவிழுது |
| வெள்ளிலோத்திரப்பட்டை | |
| வெட்பாலை யரிசி | நெல்லிமுள்ளி |
| பொன்முசுட்டை | பேராத்திப்பூ |
| கழற்சிகொடிப்பருப்பு | ஓமம் |
| சாதிக்காய் | சாதிபத்திரி |
| சீரகம் | கடுகரோகிணி |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு, இதற்குச் சரியெடை மாதுளைவேர்ச் சூரணத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இதில்

மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன், தயிர், உட்கொண்டுவரவும்.

அதிஸாரம், கிராணி, இரத்தக்கடுப்பு, இரத்தமூலம் முதலானவை தீரும்.

## உடும்புச் சூரணம்

உடும்புச் சதையுடன் மிளகுதிப்பிலி மூலமோமம்
ஊறுதிப்பிலி சுக்கு காயம் வெள்ளுள்ளி
இடும்பெரிய வளையலுப்பிந்துப்பு மிகுசீரகம்
கொடிவேலி சரிகொள் பிரண்டைச்சாறதிலே



முடுகவது வெந்து தூளாக்கிக் கொள்
மூலமதிசாரம் சீழ்மூல முதலாய
கடுகவது கொள்ளுங் கிராணியுடன் வெப்பு
கலக்கிடுபேதி தியக்கியடைபடவே (84)

(இ - ள்)

| | |
|---|---|
| உடும்புச்சதை | மிளகு |
| திப்பிலிமூலம் | ஓமம் |
| திப்பிலி | சுக்கு |
| காயம் | பூண்டு |
| வளையலுப்பு | இந்துப்பு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கொடிவேலி வேர் | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து பிரண்டைச்சாற்றிலிட்டு அடுப்பின் மேலேற்றி வேகவைத்து, வெயிலில் நன்றாக உலரவைக்கவும்.

இதனை

இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு பத்திரப்படுத்தி மூவிரல் கொள்ளுமளவு எடுத்து உட்கொள்ளவும்.

அதிஸாரம், சீழ் மூலம், கிராணி, வெப்பு, பேதி முதலானவைகள் தீரும்.

## அசமோதாதிச் சூரணம்.

அசமோதகம் பலமிரண் டதிவிடையும்
வெந்தயமாகு மிலவம்பிசின் சாதிக்காய் கூட
திசமுடன் சாதிப்பத்திரி கருஞ்சீரகம் விளங்கும்
திறைக வரைப்பல மாதளங்கா யோடுபலம்

A siddhadreams ebook

உள்ளபடிதான் சுத்திசெய்து மருந்தெல்லாமுடன்
சேர்க்கச்செம்போளம் விராகனெடை யஞ்சு
வள்ளலே திரிகடுகு வகைகழஞ்சு விராகன் வளமாகக்
கூட்டுமருந்து சொல்வோமே (109)

சொல்லியதோர் கஸ்தூரிமஞ்சள் நால்வராகன் துலங்கு
சிறுதேக் கெட்டு அரத்தையெட்டு
வில்லவீர் சதருப்பை விராகனெடை யாறு மேவு
குராசனியஞ்சு யசமோதகம் பத்து
மல்லியது பத்து அறுஞ்சீரகமதாறு வருகிராம்பஞ்சு
கார்போக வித்தாறு
மெல்லிய தாளீசமஞ்சு சிறுமூலமெட்டு வெள்ளைகுங்கிலிய
மஞ்சு ஏலம் விராகனெடை யெட்டே (110)

எட்டான விராகனெடை செவ்வியமிரண்டு காசெடை
அக்கிராக்கார மரேணுகமஞ்சு
மட்டர்கு வெட்பாலை வராகனெடையாறு மருவுசீரகமஞ்சு
சத்திச் சாறடைவேரெட்டு
கட்டான கொடிவேலி வராகனெடையெட்டு சுத்தெல்லா
மிடித்து வச்சிர காயம்பண்ணி
திட்டமாய் சர்க்கரையி லிருநேரங் கொள்ளத் தீரும்
வியாதிதன்னைத் தீர்க்கமாய்க்கேளே (111)

தீரும்வகை குட்டமெட்டு பக்கசூலை செறிந்தபுண் குட்டம்
வாயு மேகம் பாரிசத்தில்
ஏருவாதம் விரணங்கள் கரப்பன் படர்சொறியும் குளமமுதல்
பவுத்திரமும் தினவும்
தீருருட்டுக் கடுப்பு விரைவாதம் கடியும் நெருங்கிவரு காசச்
சுவாசமுந்தலெல்லாம்
பொருமெனவோடு மிருபது நாளதுவே கொள்ளபத்திய
முருங்கைப்புளி கடுகொண்ணுதே (112)

**(இ - க்)**

கெல்லிகாய்க் கெந்தகம் 2 பலமெடுத்து ஒரு இரும்பு கரண்டியிலிட்டு, பசுவின் நெய் சேர்த்து எரிந்து போகாமல் உருக்கிப் பசுவின் பாலில் சாய்க்கவும்.



பின்பு இதனைக் கழுவியெடுத்துக் கொண்டு, முன் போல் நெய்யுடன் உருக்கிக் கற்றாழைச் சாற்றில் சாய்க்கவும்.

இவ்வாறு கெந்தகத்தைச் சுத்திசெய்து வைத்துக் கொள்ளவும்.

சாதிலிங்கம் 5 வராகனெடை யெடுத்து முலைப்பாலில் 3 நாட்கள் ஊறவைக்கவும்.

மிருதார்சிங்கி 5 வராகனெடை யெடுத்துக் குட்டித் தக்காளிச் சாற்றிலிட்டு 3 சாமம் எரிக்கவும்.

**தாளக சுத்தி**

தாளகத்தைச் சுண்ணாம்புத் தண்ணீரிலிட்டு 3 சாமங்கள் எரிக்கவும்.

பின்னர்

மறுபடியும் இதனையலம்பி, வெண்பூசினியின் குடலிற்குள்ளிட்டு மேலும் அதன் குடலையிட்டு ஒரு ஓட்டில் வைத்து மேலோடு போட்டு மூடிச் சீலைமண் செய்யவும்.

இதனையடுப்பின் மேல்வைத்து 3 ஜாமங்கள் எரிக்கவும்.

**துக்கில் சுத்தி**

| | |
|---|---|
| கண்டங்கத்தரி | பிரமி |
| ஆடாதோடை | உத்தாமணி |
| சீந்தில்கொடி | வேப்பம்பட்டை |

இவைகளை வகைக்கு ½ வீசை எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டு துக்கில் 3 பலம் எடுத்து டோலா யந்திரமாகக் கட்டித் தொங்க விடவும்.

A siddhadreams ebook

வேண்டும்போது இதனை நல்ல எண்ணெயில் பொரித்து உட்கொள்ளவும்.

வாயு, மூலம், வலிகுன்மம், 8 வகைகளும் நீங்கும்.

### நாகனுதி வடயம்

புளிமடலி கொடிவேலி பிரண்டை வேர் வெருகுபின்
  கருணைக்கிழங் கினுடன் வகைக்கொரு பலமாய்
அளிகின்ற பஞ்சலவண மெவட்சார
  மானநவச்சாரம் வசம்புதிரிகடுகு
வெளிகொண்ட பெருங்காயத் திப்பிலிமூலங் கடுகு
  போத்தித் திப்பிலி மஞ்சள் வகையரைப்பலமும்
நளிகின்ட கொம்மட்டி மாதளை கனியஞ்சி நற்
  சாந்திலரைதுண்டை கொள் நாடாது குன்மம்விட்டே
(82)

(இ - ள்)

புளிமடலி (புளியரணைக் கிழங்கு)

| | |
|---|---|
| பிரண்டை வேர் | கொடிவேலி |
| கருணைக்கிழங்கு | வெருகங்கிழங்கு |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| இந்துப்பு | சௌவர்சலம் (வளை |
| கறியுப்பு | சோத்துப்பு [ யலுப்பு) |
| உழமண்ணுப்பு | எவச்சாரம் |
| நவச்சாரம் | வசம்பு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| திப்பிலி மூலம் | கடுகு |
| யானைத்திப்பிலி | மஞ்சள் |



இவைகள் வகைக்கு ½ பலம்

இவைகளெல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்துக் கல்வத்திலிட்டுக் கொம்மட்டி மாதளைச்சாறு விட்டு நன்ருக வரைக்கவும்.

பின்னர்

இஞ்சிச் சாற்றில் மறுபடியும் அரைக்கவும்.

இதனைச்

சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். இதனையுட் கொண்டுவரக்

குன்மங்கள் தீரும்.

### வீரபத்திர வடகம்

வீரபத் திரவடைய மதுசொல்வோ மிருத்த கருந்துத்தம்
  தாமரை வளையமிந்துப்பு
பாரமுள்ள சங்குதேத்தாம் வித்துபரு மிளகுங் கடல்நுரையுஞ்
  சமனே கொண்டு
ஏரசக வெலுமிச்சம் படிச்சாற்றிலரைத்து யிலந்தை விரையள
  வாக விடையம் பண்ணி
சாரவே யிஞ்சிரசந் தனிற்கொள்ளத் தரியாது சிலேட்டுமமும்
  இருமல் போமே (83)

(இ - ள்)

| | |
|---|---|
| கருந்துத்தம் | தாமரையிலைச்சுருள் |
| இந்துப்பு | சங்கு |
| தேத்தாங்கொட்டை | மிளகு |
| கடல்நுரை | |



A siddhadreams ebook

## கபாலவறட்சியின் குணம்

தலையுங் கனத்து வலித்திறுகிச் சளிபோல் வயிற்றில்
திரண்டுவிழு
மலையுமோடுப் போலொருக்கசய மதிகப்பாண்டி நீர்மாறுது
நிலையுங் கெடவே பரிகாரம் நீதிப்படியே செய்துவரில்
துலையுஞ் சொன்னோம் பிணிஸமும் சொல்லும் கபால
வறட்சியுமே (2)

**(இ - ள்)**

தலை பாரம், தலைவலி முதலானவைகளுண்டாகும். மூக்கிலிருந்து சளி இறுகி விழும். வயிற்றிலும் வலியுண்டாகும். இருமலும் ஏற்படும். இதற்கு உடனே பரிகாரம் செய்யவேண்டும். அப்போதுதான் குணமுண்டாகும்.

## அம்ருதாதி கிருதம்

சீந்தில் வட்டுத் தூதுவேளை சிவனார்வேம்பு நிலவேம்பு
போந்த நல்ல குறும்பனையும் பொன்னாங்காணி நிலக்குமிழ்வேர்
சேந்ததேனி யாவிந்த சித்தமல்லி பேர்மல்லி
ஆய்ந்த முத்தக் காசுழக்கு வதன்மேல் பால்விட் டூறுவதே (3)

ஊறிக் காய்ந்து யைந்து ரெண்டா யுறவே வெந்து
பிழிந்துவடித்
தாறிப்போவ தன்முன்னே அளந்து நறுநெய் நாழியுரிக்
கூறிடடித்து வெந்துநக்கக் குணமாம் வருநீர்ப் பாய்ச்சலே
(4)

**(இ - ள்)**

சீந்தில்கொடி	தூதுவேளைவேர்
சிவனார்வேம்பு	நிலவேம்பு



நிலப்பனங்கிழங்கு	பொன்னாங்காணிவேர்
நிலக்குமிழ்வேர்	தாமரையிலைச்சுருள்
சித்தாமல்லி	பேராமல்லி
கோரைக்கிழங்கு

இவைகளின் அள் வகைக்கு ஒரு உழக்கு எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டுப் பசுவின் பால் (20 சேர்) விட்டு நன்றாக ஊறவைக்கவும்.

பின்னர்

அடுப்பின் மேலேற்றி 8 சேர் ஆகுமளவு வற்ற வைத்துக் கஷாயத்தை இறுத்துச் சூடாக இருக்கையிலேயே பசுவின் நெய் 6 சேர் விட்டுக் காய்ச்சவும்.

இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவு எடுத்து உட்கொள்ளச் சளி, ஜலதோஷம், மூக்குநீர்ப்பாய்ச்சல் முதலானவை நீங்கும்.

## சந்தனாதித் தைலம்

நீர்வல்லிக் கிழங்கிநோடு சீந்திற்தண்டு
நீர்ப்பூமிச் சர்க்கரையின் கிழங்குமிக்க
பார்வரைப் பொன்னாங்காணி கீழ்க்காய் நெல்லி
பகர்கண்டங் கத்திரிவேர் பரிவட்டத்துத்தி
சீருலவு சிறுகீரைவேர் ஒவ்வொன்று
திகழ்மூன்று பலமாகச் செங்கையுட னிடித்து
யேர்பெறு தண்ணீர் தனுடன்காய்ச்சி
யிடுமருந்து கடைச்சரகுமியம்பும் வகைகேளே (5)

A siddhadreams ebook

களரு மிளகோ டிவையெல்லாங் காண்முக்கழஞ்சு கூட்டியபின்
மிளகு மெண்ணெய் முன்னாழி மிளநீரிரு மூன்றெனச்
சொல்லே (19)

சொல்லாவின் பால் முக்குறுணி தோகாயெரித்துப் பதத்தனிலே
வல்லார் தலைதான் முழுகுடனே வளரும் பித்தம்
நாற்பத்தஞ்சும்
நில்லா தெரிவுடமுள் வறட்சி நீங்கா வெறுமைச் சுரங்கள்முதல்
மல்லார் காசஞ்சுவாசமுடன் மற்றும் வியாதி தீர்ந்திடுமே (20)

(இ - ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | 10 வராகனெடை |
| சித்தில்கொடி | ” |
| பேய்ப்புடல் | ” |

இவைகளைப் பசுவின்பால் விட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| பசுவின்பால் | 32 சேர் |
| கையாந்தகரைச் சாறு | 4 மரக்கால் |
| முசுமுசுக்கைச் சாறு | ” |
| சோத்துக்கத்தாழைச்சாறு | ” |
| முலைப்பால் | ” |
| பச்சைநெல்லிக்காய்ச்சாறு | 1 மரக்கால் |
| தாழைவிழுதுச்சாறு | ” |

இவைகளை யொன்று கலந்து கொண்டு,

தேத்தாங்கொட்டை சித்தாமுட்டிவேர்
சித்தில்கொடி

இவைகளை வகைக்கு 16 பலம் கூட்டி, 8 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 2 மரக்காலாகும் வரை வற்ற வைக்கவும்.



இதனை வடிக்கட்டி,

| | |
|---|---|
| கோஷ்டம் | இலாமிச்சம்வேர் |
| தக்கோலம் | கிரந்திதகரை |
| வெட்டிவேர் | விழாலரிசி |
| மஞ்சிஷ்டா | செவ்வியம் |
| திப்பிலி | தான்றித்தோல் |
| சிற்றத்தை | லவங்கப்பத்திரி |
| பச்சிலை | ஏலக்காய் |
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| சிறுநாகப்பூ | கொத்தமல்லி விதை |
| நன்னாரிவேர் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | கச்சோலம் (பூலாங் |
| மிளகு | [ கிழங்கு) |

முதலான சரக்குகள் வகைக்கு 3¼ வராகனெடை விதமெடுத்து ஏதேனும் ஒரு சாறுவிட்டுறவைத்து அரைத்துச் சுத்தமான நல்லெண்ணெய் 15 சேரும், இளநீர் 6 சேரும் சேர்த்து ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றிப்

பசுவின் பால் 3 மரக்காலும் விட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தால் தலைமுழுகிவர

45 வகைப் பித்த ரோகங்களும், எரிச்சல், உள் வறட்சி, சுரம், காசம், சுவாசம் முதலான நோய்களும் தீரும்.

## சகதேவித் தைலம்

ஏலமிலவங்கம் தேவதாரம் இலமிச்சமிருவேலி சண்பகப்பூ
சிலமுடன் கோஷ்டஞ் சந்தனமும் கூட்டிதேவிச் சாற்றி
லரைத்துச் சித்தாமட்டிக்

A siddhadreams ebook

கன்றுகொள் ளாவின்பாலும் நாநாழி
காய்கின்ற மாதளம் பழச்சாறுகூட்டி
நன்றாகக் கல்யாண கிருதம் நீ வடிக்கில்
நலமாகும் வியாதிகள் வகைகள் சொல்வோமே (4)

சொல்லவே நெய்யது இருநேரங் கொள்ளச்
சோபமுடனுன் மாதங் காமாலைதீரும்
வல்லபெறு பாண்டுவும் மச்சரமுந்தீரும்
அத்திச்சுரங் கனுடனுட்ட ணமுந்தீரும்
நல்லநீற மாகிவிடும் பிரமேகந் தீரும்
நாடாது மூத்திரக் கிருச்சும் விடுமென்றே
வல்லவினை தீர்க்கின்ற நெய்யுட குணங்கள்
தன்னைவாகடத் தினுள்ளபடி வழுத்துவமுமக்கே (5)

(இ - ள்)

| | |
|---|---|
| கக்கரிச்சாறு | 4 படி |
| கரும்புச்சாறு | ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | ,, |
| பூஷணிக்காய்ச்சாறு | ,, |
| நெருஞ்சிச்சாறு | ,, |
| புளியாரைச்சாறு | ,, |
| அறுகின்சாறு | ,, |
| தாழம்விழுதுச்சாறு | ,, |
| பசுவின்நெய் | 8 படி |

இவைகளை யொன்று சேர்த்துக் கக்கரிப்பழத்தையும் விரைபோக்கிச் சேர்த்து,

| | |
|---|---|
| நெய்தல்கிழங்கு | ஆம்பல் |
| செங்கழுநீர்க்கிழங்கு | தாமரைவளையம் |
| முசுமுசுக்கைவேர் | நன்னாரிவேர் |
| பேராமல்லி | சிற்றுமல்லிவேர் |
| வழுதலைவேர் | ஞாழல்வேர் |
| சந்தனத்தூள் | தேவதாரம் |



| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சீரகம் |
| கருஞ்சீரகம் | கோஷ்டம் |
| குருக்கத்திப்பூ | செண்பகப்பூ |
| மரமஞ்சள் | மாகாளிக்கிழங்கு |
| மஞ்சட்டி | நாககேசரம் |
| தகரம் | தாளிசபத்திரி |
| விழலரிசி | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக வரைத்து, அப்பின்மேலேற்றிக் கொதிக்கையில்

| | |
|---|---|
| பசுவின் பால் | 4 படியும் |
| மாளம்பழச்சாறு | ,, |

சேர்த்துப் பக்குவமாக எரித்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் 2 நேரங்கள் உட்கொள்ளச்

சோபம், உன்மாதம், காமாலை, பாண்டு, அச்சரம் (வாய்ப்புண்), அத்திச்சுரம், உஷ்ணம், பிரமேகம், மூத்திரகிருச்சரம் முதலான நோய்கள் நீங்கும். தேக காந்தியும் அதிகரிக்கும்.

## உசீராதிக் கிருதம்

வெட்டிவேர் நன்னாரி சித்தமல்லி வேரு
மிக்கதொரு பேர்மட்டி சித்தமட்டி வேருந்
தட்டியே பேயத்தி மட்டிசாரணையின் வேரும்
தன்னோடு மாடாதோடை யுடவேரும்

A siddhadreams ebook